உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

திருவுசாத்தானமாகிய

# சூதவனபுராணம்.

## ஷை வசனம்.

இவை

ஸ்ரீவன்றொண்டரவர்கள்

மாணாக்கருள் ஒருவரும்

காரைக்குடி

ராம. கு. ராமநாதச் செட்டியாரவர்கள்

குமாரருமாகிய

சொக்கலிங்கச்செட்டியாரவர்கள்

இயற்றியன.

ஷை திருவுசாத்தானமாகிய கோயிலூர்

ஸ்ரீமந்திரபுரீஸ்வரசுவாமிகோவில் தர்மகர்த்தராகிய

காரைக்குடி

தி.அரு.அ.வெ. அண்ணாமலைச்செட்டியாரவர்கள்

விருப்பத்தின்படி

ஷை கோயிலூரைச்சார்ந்த ஆலங்காடு

ராம. சித. சிதம்பரச்செட்டியாரால்

மதுரை:

தமிழ்ச்சங்கம் பவர்ப்பிரஸில்

அச்சிடப்பெற்றன.

---

1905.

## சருக்க அட்டவணை.



| பக்கம். | சருக்கப் பெயர். | பாடற் றொகை |
|---|---|---|
| ௧ | கடவுள் வாழ்த்து ... ... ... | ௩௩ |
| ௧0 | பாயிரம் ... ... ... ... | ௧௬ |
| ௧௩ | திருநாட்டுச் சிறப்பு ... ... ... ... | ௧௨௮ |
| ௨௬ | திருநகரச் சிறப்பு ... ... ... | ௧௫௬ |
| ௫0 | புராண வரலாறு ... ... ... | ௫0 |
| ௫௭ | தலவிசேடச் சருக்கம் ... ... ... | ௭௨ |
| ௬0 | தீர்த்தவிசேடச் சருக்கம் ... ... | ௧௭ |
| ௬௨ | மூர்த்திவிசேடச் சருக்கம் ... ... | ௩௫ |
| ௬௭ | சூதவன நாயகாரணைச் சருக்கம் ... ... | ௮௩ |
| ௭௮ | ஆதிசேடனுபதேசம்பெற்ற சருக்கம் ... | ௬௮ |
| ௮௬ | ஆதிசேடன் சிவலிங்கம்பெற்ற சருக்கம் ... | ௪௭ |
| ௯௫ | ஆதிசேடன் சூதவனஞ்சென்ற சருக்கம் ... | ௯௫ |
| ௧0௪ | ஆதிசேடன் திருப்பணிச் சருக்கம் ... | ௯௨ |
| ௧௨௧ | ஆதிசேடன் சிவார்ச்சனைச் சருக்கம் ... | ௯௫ |
| ௧௩௭ | வருணன் சாபமோசனச் சருக்கம் ... | ௮௨ |
| ௧௪௭ | மார்க்கண்டேயச் சருக்கம் ... ... | ௧௨௧ |
| ௧௬௩ | இராமன் மந்திரோபதேசம்பெற்ற சருக்கம் | ௧௬௬ |
| ௧௮௫ | அமுதநிவேதனச் சருக்கம் ... ... | ௨௮ |
| ௧௮௮ | இந்திரன் திருவிழாச் சருக்கம் ... ... | ௧௩௬ |



ஆக. திருவிருத்தம் ௲௫௨0

சாமி அய்யரவர்களிடமிருந்து எனக்குக் கிடைத்தன. வடமொழிப்புராணம் ஈற்றில் ஜீரணமாயிருந்தது. திருவுசாத்தானத்தில் முன் தலபுராணபடனஞ் செய்துவந்த பெருகவாழ்ந்தான் பிரம்மஸ்ரீ வனமாலி அய்யங்காரவர்கள் வீட்டிலிருந்த ஜீரணமில்லாத வடமொழிப் பிரதியொன்று கிடைத்தது. தஞ்சாவூர்ச் சரஸ்வதிமால் முதலிய பலவிடங்களில் தேடியும் தமிழிலாவது சமஸ்கிருதத்திலாவது வேறு பிரதிகள் கிடைக்கவில்லை. திருவுசாத்தானத்தில் பிரம்மஸ்ரீ வயித்தியநாதக்குருக்களவர்களிடத்தில் ஒரு வடமொழிப்பிரதியிருந்து முற்றும் ஜீரணமாய்ப்போய்விட்டதாகத் தெரிந்தது. இத்தலபுராணம் இங்ஙனம் அருமைநிலையடைந்துவருவதை நோக்கி இதை அச்சிட்டு வெளிப்படுத்தாதவரையில் இந்த உத்தமோத்தம சிவசரித்திரம் உலகோபகாரமாகாமல் மறைந்துவிடுமேயென்ற கவற்சியால் இதனையச்சிட்டு வெளிப்படுத்தவேண்டுமென்னும் பேராசை யென்னுள்ளங்கவர்ந்தெழுந்தது. அதன் வழிப்பட்டேனாதலால் இதுவும் எம்பிரான் றிருவருளேயாமெனக்கருதிப் பெருகவாழ்ந்தான் பிரம்மஸ்ரீ நாராயண சாஸ்திரியாரவர்களைக்கொண்டு வடமொழிப்பிரதியைக் கிடைத்த (கஅகக) செய்யுளுள்ள தமிழ்ப் புராணத்தோடு ஒத்துப்பார்த்ததில் தமிழில் மிகவுஞ் சுருக்கமாகவும் சில சரித்திரங்கள் விடுபட்டு மிருந்தமையால் வடமொழியிலுள்ள விரிவின்படியே சரித்திரங்களும் விடுபடாது தமிழில் ஒருபுராணஞ்செய்வித்து அச்சிடவேண்டுமென்று யோசித்துப், புறச்சமயங்களைகளைந்து, சுத்தாத்துவித சைவசித்தாந்த மென்னுந் தெய்வப் பயிர் தழைத்தோங்க, மதுரை ஜில்லா காரைக்குடியில் ஒன்பதுகோயில் வகுப்பினராகிய நகரத்தார்களுள்ளே, கல்லலைநாட்டில் இளையாற்றங்குடியான குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங்குடியான ராஜநாராயணபுரத்தில் பிள்ளைபட்டி திருவேட்டுருடையான் என்னுங்குடிப்பெயர் பெற்ற, ராா. ம. கு. ராமநாதச்செட்டியாரவர்கள் செய்த அருந்தவப்பயனாற் புதல்வராக அவதரித்தவர்களும், யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் திருவடிக் கன்பராய் அவர்கள் திருச்சந்நிதானத்தில் நீடித்தகாலந் தொண்டுபூண்டொழுகினவர்களும், தேவகோட்டை ஸ்ரீ வன்றொண்டரவர்கள், அனவரதமதுரபுர சிவாலயஸ்ரீ மெய்யப்பசுவாமிகள், மேற்கண்டநாவலர்பெருமான் மருகரும் முதன்மாணாக்கரும் வித்துவசிரோன்மணியுமாகிய ச. பொன்னம்பலபிள்ளையவர்கள், சாவகச்சேரி புலோலி யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டை ஸ்ரீ அம்பலவாண நாவலரவர்கள் முதலிய ஆன்றோர்களிடத்து இலக்கண இலக்கிய சாஸ்திரங்களை நன்கு கற்றுணர்ந்தவர்களும், மதுரைச்சித்தி விநாயகர் திருவிரட்டைமணிமாலை, மயின்மலைச்சந்தவிருத்தம், குன்றைச் சிலேடைவெண்பா, காழிச்சிலேடை வெண்பா, தில்லைச்சிலேடை வெண்பா

உ

சிவமயம்.

# முகவுரை.

சீர்திகழ்வளத்தி னேர்கெழுசோழ
நாட்டினிலிந்திரன் வேட்டிடவந்த
பூவிரிபொழில்சூழ் காவிரியாற்றி
னன்குரையளவுறுத் தென்கரைத்தலங்களு
ளவந்தனையகற்றுஞ் சிவஞ்சுயம்பிலிங்கத்
திருவுருக்கொண்டு மருவிவீற்றிருந்தருள்
சூதவனமெனு மாதவர்போற்றுங்
காழிவாழ்சேயி னேழிசைத்துதிபெறுந்
தன்னையடைந்தோர் மன்னுபிறப்பொடு
மருவுசாவகற்றுந் *திருவுசாத்தானம்

என்னுந் திவ்விய க்ஷேத்திரத்திற்கு நூற்றறுபத்தொன்பது பாடலுள்ள தமிழ்ப்புராணமொன்று சாம்புவனோடை ஸ்ரீ அம்பலவாண சுவாமிகள் சேர்த்துவைத்திருந்த அநேக நூல்களோடிருந்தது. ஆலங்காட்டுச் சிவபுண்ணியச் செட்டியார் அதைப்பார்த்தெழுதிய பிரதியொன்று எனக்குக் கிடைத்தது. இப்புராணம் இயற்றினாரின்னாரென்று தெரியவில்லை. பின்பு ஸ்ரீ அம்பலவாணசுவாமிகள் மரபில்வந்த வேலாயுத பண்டாரமவர்களிடமிருந்த மேற்படி மூலப்பிரதியும் சித்தமல்லி ப்ரஹ்மஸ்ரீ அப்பாசாமி சாஸ்திரியாரவர்களிடமிருந்த வடமொழிப்புராணமொன்றும் பின்னத்தூர் ப்ரஹ்மஸ்ரீ அ நாராயண

---

* இந்தத் திருவுசாத்தானமானது தஞ்சாவூர் ஜில்லா திருத்துறைப்பூண்டித்தாலூகா முத்துப்பேட்டை ரெயில்வே ஸ்டேஷனுக்கு அடுத்த வடதிசையில் ஒரு மைல்தூரத்திலுள்ளது. இது கோயிலூரென்னு நாமம் வழங்கப்பெற்றுவருகிறது. இத்தலத்திலுள்ள ஸ்ரீமந்திரபுரீசுர சுவாமி திருக்கோயிலில் ராசகோபுரமும் ஸ்ரீசோமாஸ்கந்தசுவாமி முன்மண்டபமுதலான பலவிடங்களு மிகவுஞ் சீரணப்பட்டு அதிசீக்கிரத்தில் சீரணோத்தாரணஞ் செய்யவேண்டிய நிலைமையிலிருக்கின்றது. இது ஸ்தலம் தீர்த்தம் மூர்த்தி மூன்றாலும் அளவில்லாத அத்தியற்புத அதிமகத்துவமுள்ளதென்பது ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள் தேவாரத்தாலும் இப்புராணத்தாலும் இனிது விளங்கும். தனவந்தர்களாயுஞ் சிவபுண்ணிய சீலர்களாயுமுள்ள சிவநேசச்செல்வர்கள் இதனைச் சீரணோத்தாரணஞ்செய்து கும்பாபிஷேகஞ்செய்வது அத்தியாவசிய மகாசிவபுண்ணியமாகும்.

திருவாரூர்த் திரிபந்தாதி, திருவாலவாயமகவந்தாதி, திருப்புத்தூர்த் தலபுராணம்,வீரசேகரமாமணிமாலை, சௌந்தரேசதயாநிதிமாலை, பசுவந்தனை வெண்பாவந்தாதி, ஷ திருவூசல் காரைக்குடி மீனாட்சிசுந்தரேசர் திருவூசல், திருக்கழுக்குன்ற மகிமாசங்கிரகஸ்தவம், மெய்யப்பசுவாமிகள் பதிற்றுப்பத்தந்தாதி, கற்பகவிநாயகர் பதிற்றுப்பத்தாதி சித்தவடமான்மிய முதலிய பலநூல்களை யியற்றியவர்களும், தம்மிடத்திற் கற்குமாணாக்கர்கள் மிகவிரும்பிக்கேட்ப மிகவிருப்பத்தோடு சிரமநோக்காது அரியபொருள்களு மெளிதில் விளங்க உதாரணாதிகளோடு நன்குபோதிப்பவர்களும் பெரியபுராணாதி சைவசாஸ்திரங்களைக் கேட்போர் ஆனந்தபரவசர்களாகும்படி விரித்துப் பிரசங்கிப்பவர்களும் தங்கள் குலவிருத்தியாகிய வியாபாராதிகளிற் சிறிதும் காலஞ்செலுத்தாது உள்ளபடியே மெய்யன்போடு சிவபூசாதி சிவபுண்ணியங்களையே தமக்கு இயற்றொழிலாகக்கொண்டு ஒழுகுபவர்களுமான மகா-௱-௱-ஸ்ரீ சொக்கலிங்கச் செட்டியாரவர்களிடத்தில் அடியேன் கருத்தை வெளியிட்டேன். அவ்வேண்டுகோளுக்கிசைந்து வடமொழியிலுள்ளபடி சரித்திரங்களை மொழிபெயர்த்துச் சிவாலயத்திருப்பணி மகாகும்பாபிஷேகம் சிவபூஜாவிதி முதலியவைகளை பத்ததி முதலிய நூல்களைக்கொண்டும் விரிவாகச்சேர்த்து (௲௱௨௰) திருவிருத்தங்களாற் செய்துதந்தார்கள். "செய்யாமற் செய்தவுதவிக்கு வையகமும் வானகமுமாற்றலரிது" "பயன்றூக்கார் செய்தவுதவி நயன்றூக்கி னன்மை கடலிற் பெரிது" என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் அருளியபடி அவர்கள் செய்தபேருதவிக்கு அவர்கள் பெரும்புகழை யெடுத்துப்பேசுதலன்றி வேறியாது கைம்மாறுடையேன். இப்பெருஞ் சிறப்பினதாகிய சூதவனபுராணம் அத்தலத்தில் ஸ்ரீபிரகந்நாயகி சமேத ஸ்ரீமந்திரபுரீசுவரசுவாமி சந்நிதியில் சாலியவாகனசகாப்தம் ௲௮௱௨௰௬ சோபகிருது௵ ஆனி௴ ௨௰ சுக்கிரவாரம் உத்திரநக்ஷத்திரம் கடகலக்கினங்கூடிய சுபமுகூர்த்தத்தில் தொடங்கிச் சிங்கவனம் ப்ரம்மஸ்ரீ சுந்தரேசபாரதிகள் முதலியோர் கூடிய வித்துவசங்கத்தில் அரங்கேற்றப்பெற்றது. இப்புராணம் கற்றோர்க்குமாத்திரமன்றி மற்றோர்க்கும் பயனாகும்வண்ணம் என்வேண்டுகோளின்படி இந்நூலாசிரியராலேயே சரித்திரமாத்திரம் விளங்கச் சுருக்கமாய்க் கத்தியரூபமாகவுஞ் செய்யப்பெற்றுப் பின் சேர்க்கப்பெற்றது.

இங்ஙனம்,
ராம. சித. சிதம்பரச்செட்டியார்,
ஆலங்காடு.

௳

சிவமயம்.

# சிறப்புப் பாயிரம்.

சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதர் மகாவித்வான்
ப்ரஹ்மஸ்ரீ உ, வே. சாமிநாதையரவர்கள்
இயற்றியது.

பூமேவுகடுக்கைமுடிப்பரன்றிருவுசாத்தானபுராணந்தன்னைத்
தேமேவுதமிழ்மொழியிற்காரைநகர்ச்சொக்கலிங்கச்செல்வன்றன்னு
ளுமேவுபத்தியமாநடையாகவியற்றுவித்தானல்கினுனற்
பாமேவுபழம்பதியாமாலங்காட்டிலங்குசிதம்பரவேண்மன்னே. (௧)

அப்பணியுஞ்செவ்வேணிக்கருமிடற்றுமாதேவர்க்கன்பினேடெந்
துப்பணியுந்திருப்பணியாங்கற்பணியும்பொற்பணியுந்தொண்டர்க்காய
வெப்பணியுநிதம்புரியுஞ்சிதம்பரவேள்சொற்பணியென்றெவரும்போற்று
மிப்பணியினியற்றுவித்தவியல்பன்றேவிறும்புதென்றிசைப்பார்யாவே. ()

---

சிங்கவனம் வித்துவான் ப்ரஹ்மஸ்ரீ சுப்பபாரதியவர்கள்
குமாரரும் திருவாரூர் போர்ட்டு ஸ்கூல் உபாத்தியாயருமாகிய
சந்தரேசபாரதிகள்
இயற்றியது.

திருமருவும்பெருமருமத்தொருவனொருவன்றியுருச்செறிந்துமுன்னு
ளருமருவும்பூதலத்தையுருவவிடந்துபன்னூறுபுனுங்காணு
மருமருவுதிருவடிகளேவவிருகாணயாமத்தோர்மாதின்
றருமருவுமாளிகைக்குச்சந்தூடந்தருள்புகழ்வாய்தல்முன்னுக. (௧)

மாணுட்டுமூவர்திருப்பாடல்பெறுவனதலங்கள்வரம்பிலாத
நாணுட்டுய்த்திடவடைந்தோர்தமக்கிருமைநலமளிக்கநாகத்தோங்கும் ௨ஞ்
கோணுட்டுப்பிணமணியின்குவால்கொழிக்கும்பொன்னிநதிகுறையின்பாட்
சோணுட்டுப்பலதலத்துளொருதலமீதென்றறிஞர்சொல்லப்பெற்று. (௨.)

சீதவனக்குளிர்காவில்வடாதுதிசைபோய்வெம்மைசெறிந்துவந்த
வாதவனபரியேழுமவனுமவன்றேர்ப்பாகாமருணன்றானு
மாதவனமாற்றுபுபின்றெருந்துதிசைக்கேகுபெருவளப்பம்வாய்ந்த
சூதவனமான்மியத்தைத்தென்மொழியிற்புகல்கவெனத்தாயசீலன். (௩.)

ஈகையன் புபொறையுடைமைதன்மனையையேவிழைதலேற்றகல்வி
யோகையுடன்விருந்தோம்பன்முகமலர்ச்சியெதுவரினுமுண்மைபேச
லாகவுளவுடன்பாட்டுக்குணங்களும்வெஃகாமைவெகுளாமையாதி [ன்.
வாகவெதிர்மறைக்குணனுமிறைந்தொருங்குதன்னிடத்துவளரப்பெற்றோ

ஆலங்காட்டினில்வாழ்வோனிராமசாமிக்குரிசிலருளுமைந்தன்
பாலங்காட்டியவிழியார்பூதிசாதனவழியேபடர்வோன்கங்கைக்
கூலங்காட்டியகாசிமுற்றலங்கடாசித்தகுணவான்வேணி
வாலங்காட்டியவரவாபரணரடிமறவாதவணிகர்கோமான். (௬)

பூபாலர்தமைப்போற்றுமுழுதுதொழிலுடன்முன்னம்பூமன்றந்த
காபாலியிருதலைத்துவொழுந்தருளுமீழத்துக்கலைகளுய்த்தே
தாபாலுள்ளனபொருளெனநீட்டுதிருவான்கல்வித்தகைமைசான்ற
கோபாலனிடத்துமுனைத்தமிழ்விராம்பப்பயின்றுகடைக்குடிக்கோதானனன்றோன் (௭)

சிதம்பரவுமறைஞானநாதனுக்குக்கோயிலொன்றுமிருமித்துப்பல்
விதம்பாவத்தாபித்துக்கும்பாபிடேகமுதலியற்றிவெள்ளை
விதம்பரவமணிசடையார்தமக்குவிலை விலம்பல்ல விடுத்த சீர்த்திச்
சிதம்பரமெய்த்திருநாமமுமையப்புனைகுணவான்செப்பவன்றோன். (௮)

தன்னையே நிகர்குணத்தோன்வணிகருலதிலகனருடழைத்தவன்ன
னன்னையேயிடங்கலந்தவப்பனையே பூசைபுரிந்தவிக்கால
மின்னையே புடைமதியாத பெருவாழ்க்கை யவனவன்றெண்டேமேலான்
றன்னையே யாசானுக்கொண்டு தமிழ்நூல் பயின்றதவத்தினரிக்கான். (௯)

இலக்கணமே யிலக்கியமே முதலாயவாழி யடங்கிலைற்றிஞன்மா
லலக்கணவைடயதுதியாறுதன்னை வருத்திக்காத்தவம்புரி
மலக்கணகன்றிடவுண்டியேபவரம்பரனைமெனமுமையுமெய்மேகத்
சொலக்கணமும்பிரிதுக்காக் கானைகர்ச் சொக்கலிங்கக்குணவீமன்.

சொன்னயமும் பொருணயமு மெடுத்தவிட மொழிந்துவைதயத்துமெசான்
மன்னுவமவுருவகமே முதலாயவணியியல்வகையுஞ்செய்ய [மின்றி
பன்னரியமடக்கியமகந்திரிபாடெதுமும்பாவைப்பத்தி
யின்னரியவேதன்றுவிக்கக்கல்லி விளைபுலவர்தலையெடுத்துமெச்ச, (௰)

நாடுகோத்திணைவிபெருகவிரும்பாயிரத்தினைமுன்றோன்றப்
பீடுபெறு பாமனுக்குக் கோவிலமைத்திடு முறைமை பெருமான்றன்னை
வீடுபெறவல்லவிடத்துத்தாபித்துவிநியவற்கு விழாகற்பூசை
யோடுபுரிந்திடன்முதலவிரித்துலகோர் பேறெய்தவுரைத்திட்டானே. (௧௧)

## கும்பகோணம்டவுண் ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
### பின்னத்தூர்ப்ரமஸ்ரீ அ. நாராயணசாமியையரவர்கள்
### இயற்றியது.

பொன்பூத்தபுவிவரைப்பிற்புகழ்பூத்தபுனனாட்டிற் பொலிவுமிக்கோன்
மன்பூத்தவுசாத்தானமாத்தளியிலேத்தெடுத்துவானோர்போற்ற
மின்பூத்தமெல்லிடைபால்விளங்கவுறைவிடைப்பாகவிமலமூர்த்தி
தென்பூத்த சேவடிக்கேசெழுந்தொண்டு செறிந்திலங்கு சிந்தைமேயான்.

வேறு

மதியகடுரிஞ்சுமாட மல்கியவாலங்கானப்
பதிவயிற்போந்தோனுளும்பாவலர் பயிலுஞ்செந்நாத்
துதியமையிராமசாமித்தூயவன்றவத்தின்றோன்ற
னிதியமை வணிகர்கோமானிறைகலைபலவும்வல்லோன். (

தானுறைபதியாவீசன் றளியதொன்றாக்கியன்பின்
வானுறுவாரணாசிவாநதிமண்ணியாண்டேய்
மானுறுசெங்கையீசன்வடிவமொன்றேந்திப்போதந்
* ஈனுறுகோயிலேற்றியியைபுறப்பதிட்டித்திட்டோன். (

போதமேபொலியும்புந்திப்புண்ணியப்புனிதன்பூந்தார்ச்
சீதமேய்குவளைமார்பன்சிதம்பரவள்ளல்கற்றோர்
மோதமேபெருகநல்குமுதல்வன்முக்கண்ணன்பேருன்
சூதமாவனபுராணந்தமிழினிற்றொகுத்தியென்ன. (

கருத்தகத்திருத்திச்செல்வங்கவினியகாவைமூதூர்த்
திருத்தகுபதியின்வைகுஞ்சிவமலிபதினாறேற்று
மருத்தியன்சொக்கலிங்கப்பெயர்பெருமண்ணலென்பான்
விருத்தநல்யாப்பினாக்கிவிரித்தனனொருங்குமன்றே. (

* ஈன் - இவ்விடம்.

---

## முத்துப்பேட்டை ப்ரஹ்மஸ்ரீ செகநாதையயரவர்கள் குமாரர்
## சுப்பிரமணிய அய்யரவர்கள்
### இயற்றியது.

திருவாழும் வலக்கணுமை திருமுலைப்பான் மணங்கமழ்தே வாரமேய்ந்த
பொருவாத சூதவன புராணமதைத் தமிழ்க்கவியாற் புனைதல்செய்தான்
தெருள்காரைக் குடிராம நாதனருள் சொக்கலிங்கச் செம்மலன்பே
தருமாலங் காட்டினில்வாழ் சிதம்பரவேண் மனுவின்வணங்கரணியோற்

## செம்படவன்காடு ப்ரஹ்மஸ்ரீ
## ரா. இராமாநுஜையங்காரவர்கள்
### இயற்றியது.

பூமேவுசோலைதிகழ்பொன்னூர்காரைக்குடியிற்
றேமேவுராமநாதன்சேயா—மாமேவு
நாமணக்குஞ்சொக்கலிங்கநாவலன்செய்குதவனப்
பாமணக்கும்பார்விசும்பப்பால்.

---

## சேற்றூர் ஸமஸ்தான வித்துவான்
## மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள் இயற்றியது.

ஓர்ந்தறிஞர்தலமுதன்மூன்றினுஞ்சிறந்ததானமெனவுசாவலாலே
சேர்ந்தவுசாத்தானமெனும்பெயர்படைத்ததலப்பெருமைநிகழ்பேரன்பு
கூர்ந்தறிவாற்கண்டுமகிழ்ந்தாலங்காட்டினில்வைசியகுலதீபம்போ
லார்ந்தபுகழுறுமராமசாமியருள்சிதம்பரவேளவனிதன்னில். (௧)

இனையதலமான்மியங்கண்முழுதுமோர்ந்தெதிரிறைஞ்சியாருமுய்ய
நினைவுகொடுசெந்தமிழாற்புராணமொன்றியபாடுகென்றுநிகழ்த்தக்கேட்டுத்
தனைநிகர்காரைக்குடிவாழ்சொக்கலிங்கக்கலைவல்லோன்றனேசொற்றான்
அனையவனுக்கிதுவழக்கந்திருப்புத்தூர்ப்புராணமுதலறைந்தான்மன்னே. ( )

---

## மதுரை விவேகபாநு பத்திராதிபர்
## எம். ஆர். கந்தசாமிக்கவிராயரவர்கள்
### இயற்றியது.

கங்கையினுமிகச்சிறந்தகாவிரித்தண்புனனூட்டித்தனகநாட்டிற்
றங்குமவர்முனிவர்பிறர்சார்ந்திறைஞ்சிப்போற்றுபெருந்தலமாமேன்மை
பொங்குதிருவுசாத்தானமெனுஞ்சூதவனமகிமைபூவில்யாருஞ்
சங்கையிலாதறியவொருபுராணமுயர்தண்டமிழிற்றருவாயென்ன. (௧)

பாலங்காட்டியநீறுங்கண்மணியுநால்வரருட்பாடல்பாடுந்
தாலங்காட்டியவொலியுங்கொடுவருவார்ச்சிவமெனவேதனதுட்கொண்டு
சீலங்காட்டியசுகுணன்சிவபூசாதுரந்தரபூசிதனீர்சூழு
மாலங்காட்டினில்வாசன்பலகலைதேர்சிதம்பரமாலன்பாற்கூற. (௨)

தருவாய்வந்திவ்வுலகிலிரப்பவர்க்குநிதிவாரித்தருவானமைப்
பெருவாய்மைச்சிதம்பரமால்வேண்டியாங்குறுற்றல்பெரும்பேறுமென்று
வொருவாதமனத்துவகையுவட்டெடுப்பவுடன்பாடியுதவினன்செந்
திருவாரும்வளக்காரைக்குடிநகர்வாழ்வணிகர்குலதிலகமானோன்.

பலகலையுஞ்செவிமடுத்துமனத்தகத்துச்செறித்துவைத்தபண்பன்முன்னோ
மிலகலையுண்டவன்பொதிகையெய்தவெகுநூலிசைத்தோனெனநூனெருந்
விலகலையுறுதுதன்பானுறப்பிணித்தோன்சிவநேசமெய்ம்மையாள
னுலகலையும்படியடையும்பவப்பிணிக்குமருந்தெனவேயுரைக்கும்வாக்கான்

இன்னபெருந்தகையாகுஞ்சொக்கலிங்கவள்ளலிவணீந்ததொன்றே
யன்னதனையெழுதாதவெழுத்திலிட்டுப்பலவாக்கியளித்தான்முன்னரு
சொன்னபுகழ்ச்சிதம்பரமாவிவ்விருவர்பெருமைமுற்றுஞ்சொல்வார்யாரே
பன்னுதமிழ்வரைப்பினுக்கிப்புராணமரும்பேறுதவும்பண்பிற்றுமே.

---

ஸ்ரீ வன்றொண்டரவர்கள் மாணுக்கருளொருவராகிய
காரைக்குடி
## ராம. கு. மெ. மெய்யப்பசெட்டியாரவர்கள்
இயற்றியது.

பொன்னிருக்கும்பூவிருக்கும்பொழிலிருக்கும்புகழிருக்கும்பொன்னிருந்
தென்னிருக்கும்பஃறலங்கள்செறிந்திருக்குஞ்செம்பியர்கோன்றெய்வநா
ற், கொன்னிருக்கும்வலனிருக்குங்கோதண்டச்சிலையிருக்குங்கொற்றச்செ
ரோண், மின்னிருக்குஞ்செங்கண்ணவெண்ணகையகருநிறத்தவீராமன்

காப்பூத்தகரதலத்தானருள்பூத்ததிருவுளத்தான்கவிஞர்தெய்வப்
பூப்பூத்தபொலன்கொடியைப்புலைபூத்தபோரக்கன்புரிந்துவவ்வி
ஙாப்பூத்தவிலங்கைபுகலெம்பூத்தவிளவலொடுநண்ணரஞ்சுங்
கோப்பூத்தசுக்ரீவன்குணம்பூத்தகவிவீரக்குழுக்களோடும்.

பொன்னிலங்கைபுகுமாறும்புண்ணியிடத்தனையாறுபுரியுமாறு
மன்னிலங்கவுசாவியானருள்பெறலினுசாத்தானமாண்பேர்பூண்டு
மின்னிலங்குநிறைக்கனுழைமிர்தகடங்கவர்ந்தேகும்விசையிற்சிந்து
தென்னிலங்குதிவலைமுளைத்தெழுகுதமாவிருக்கச்செறிவிற்றுகி.

மாலருளாற்பன்னூற்றுப்பஃறலையபணிக்கரசுமருவியாங்கட்
கோலமலிதிருக்கோயினிருமித்துப்பெருஞ்சாந்திகுலாவச்செய்தாங்
கேலவருச்சனைபுரிந்துபரமனருட்பேறடையுமியல்பிற்றுகி
ஞாலமெலாமுய்யவருள்பொழிபெரியநாயகியாநங்கையோடு.

மாமந்திரோசனருளமுமேதசனுயர்குதவனேசனன்பர்க்
கேமஞ்செய்வானென்றுமினிதுவீற்றிருந்தருளுமியல்பிற்றுகித்
தாமஞ்சார்குழற்றிருவுஞ்சொற்கொடியும்விற்கொடியுந்துணைதவதாகி
நாமஞ்சால்குதவனசரிதவாரியந்தமிழினக்காயென்று. (௫)

அச்சுதவனக்குயர்பூருவதிசையிற்குரோசமொன்றிலளப்பிற்சீர்த்தி
வைச்சுதையிளந்தென்றலாய்ப்பாவிநறுஞ்சோலைமலர்த்தேன்வாரி
யுச்சுதக்காரவியும்பொன்னவியுமிசைபாடவலைம்பொற்குன்
றைறச்சுதைப்பொருமுமலையாரம்மனையாடாரியத்தினழகுவாய்ந்தே. (௬)

வெருவாலங்காட்டிப்பின்விழையமுதங்காட்டாழிவிழியார்விஞ்சுந்
திருவாலங்காட்டியனும்பாட்டியனுமிகழாங்கின்சிறப்பாற்சோதி
யுருவாலங்காட்டியெழுபணிமணியின்பேரொளியானுயர்வானேய்க்கு
மருவாலங்காட்டினுறைபூவசியர்குலசிகாமணியாய்வந்தோன். (௭)

வாரமாசாம்புரிபெருந்தவங்களுருந்திரண்டுவந்தாலொத்தோன்
காவாதபெருங்கொடையாற்கன்னன்முகில்கற்பகப்பூங்காவைவென்றோ
னாவாரும்பெருங்குணத்தாலொழுக்கத்தானிட்டிரனையொப்பான்மூலக்
குராவாருஞ்சேவடிக்கேழுக்கமணமொன்றியன்புருயிற்றுயகீரான். (௮)

இதம்பாவுதிரிசங்குதனிக்குமானிவனேயாமென்னவாயற்
புதம்பாவப்புரந்துசிவபூசனையாதியபுரிந்துதொண்டர்
பதம்பாவிப்பகட்டொருமைப்பாகனுளம்போர்சம்பதித்தோன்சீர்த்திச்
சிதம்பரவேள்சைவசிகாமணியுளத்திற்போன்புசெறிந்தவேண்டா. (௯)

சொன்னலனும்பொருணலனுஞ்சுவைநலனுமிசைநலனுந்தானுணோலொது
மென்னலனுரியாண்டுமுறுமிதனாலேனோர்ந்தினிதருந்தியின்பமீக்கூர்
பொன்னலமுயர்வெள்ளியுஞ்செம்புங்கவரும்வாணருதிற்புந்திவேறாய்
முன்னாலைகடைந்தினிடைத்ததுவேம்பின்காவென்றேமொழியாநிற்ப. (௧௦)

சித்தாந்தக்கோளுமுயர்சைவபரிபாடைகளுந்திகழுமுண்மைச்
சித்தாந்தற்பானடியார்பெருமிதமுமன்னரடிசிரங்கொண்டாங்கர்ச்
சித்தாந்தாங்கபத்திசெய்திறனுஞ்சிவபூசைச்சிறப்புந்தெய்வச்
சித்தாந்தமிழ்துபூர்வபக்கமெனகளிவினக்குந்தெளிவுமக்க. (௧௧)

வன்னனையுங்கற்பனையுமடக்கும்யமகமுந்திரிபுமருவத்தேருஞ்
சொன்னயஞ்சேர்புலவரொளிந்தஞ்சேமமிகியிதெனச்சொல்லொண்
மன்னுநவரசமுமொருபான்வனப்புந்தொழுமிந்நூலயங்கமுந்நூல்
பண்ணுசிவார்ச்சனைகும்பாபிடேகவிதிமுதல்வாய்மைபாவித்தோன்ற. (௧௨)

சருக்கமிரண்டேழாகத்தொகுத்துவகுத்தருளருமைவிரித்துச்சாற்றும்
பெருக்கமுறுவிருத்தயாப்பாயிரத்தைந்நூற்றிருபான்பிறங்கச்செய்து
மருக்கமழ்பூங்கலைமகளுமலைமகளாயாராய்ந்துமதிக்கநாமந்
திருக்கிளருஞ்சூதவனபுராணமெனப்புனைந்தொருநூல்செய்தான்மன்னோ.

இத்தகுநூலினிதியற்றியிசைபடைத்தான்யாவனெனினியம்புகிற்பாம்
பைத்தகடற்பாருலகிற்பன்மூட்டுந்தமிழ்ச்சங்கம்பல்குநாடாய்ச்
சத்தொடுசித்தானந்தவுருவினர்மூவரும்புரக்குந்தகைமைத்தாகி
முத்தமிழுநான்மறையுமைந்தெழுத்துமறுதொழிலோர்முறையுமோங்கி. ()

கண்டிகழுமலங்கலினூர்காரிகழும்பூங்குழலார்கவினூர்நீலக்
கண்டிகழுமலர்முகத்தார்கனியிகழுஞ்செவ்வாயார்காமர்பூஞ்சி
கண்டிகழுமலங்கடையுஞ்சாயலினூர்நெடுமாறர்காதற்றேவி
கண்டிகழுமலமுனிவன்சொற்பெறுநீற்றொளிபரப்புகலின்சேர்நாட்டில். ()

பன்னகர்க்குந்தலைநகராய்ப்பணிநகர்க்குமணிகுலவுபாகசாதன்
பொன்னகர்க்கும்புடைநகர்க்குங்களிபயக்கும்பொற்பினதாய்ப்பொலிந்தெதஞ்
ஞான்று, மன்னுமறமுதனூன்குபேறுமலிமாண்பினதாய்வளத்தான்மிக்க
துன்னுபுகழ்க்காரைநகர்டன்னெடுநாளியற்றுதவத்தோற்றம்போல்வான். ()

வேறு.

மதியோங்குமகுடதனவசியர்சிகாமணிசமையத்
ததியோங்குசித்தாந்தசைவசிகாமணிசெஞ்சொற்
பொதியோங்குசீர்படைத்தபுலவர்சிகாமணிதொழும்பின்
றுதியோங்குசிவபெருமான்றொண்டர்சிகாமணியென்பான். (௧௭)

தவத்தையொருவாதியற்றித்தனதுளத்தினமர்பரம
னவத்தையகற்றிடுமலர்த்தாளருச்சிக்குநெறிமறவான்
பவத்தையொழிப்பதுநீறும்பரித்திடுகண்மணித்தொடையுஞ்
சிவத்தையருளெழுத்தஞ்சுமெனத்துணிந்தசெம்மையினான். (௧௮)

அவமலியும்புன்சமயநெறிபழுதென்றறவிடுத்தோன்
றவமலியும்புகழ்ராமநாதனருந்தவப்புதல்வன்
சிவமலியுந்திருவேட்பூருடையான்சென்னெறிப்படர்வான்
பவமலியுமெனக்குமுசாத்துணையாயபண்புடையான். (௧௯)

பாவலர்நாயகன்மேலைப்பண்ணவர்நாயகன்மதிக்குங்
காவலர்நாயகன்றமியேன்கருத்தமர்நாயகன்சைவத்
தாவலர்நாயகனல்லையமர்ந்தருணாயகனகில
நாவலர்நாயகன்கருணைநாட்டநிறைநலம்படைத்தோன். (௨௰)

மருணிலையிற்றலையனெனமதித்திரங்கியெனையாண்ட
தெருணிலைதேர்வன்றொண்டதேசிகன்பாற்றென்கூடற்
பொருணிலைதேர்மெய்யப்பமுனிதமுனிவான்றிருமுன்
னருணிலைதேர்நல்லையிற்பொன்னம்பலப்பேராண்டகையால். (௨௧)

ஒழிவில்பதிசிவமெனக்கொண்டொழுகுயப்பிரசங்கம்
பொழிதருமம்பலவாணநாவலனும்புங்கவன்பாற்
பழிதபுநல்லிலக்கியமுமிலக்கணமும்பரிந்தாய்ந்து
மொழிதருவள்ளுவர்கற்கசடறவென்மொழிக்கிசைந்தோன். (௨௨)

காவொருமைநெய்யரிசாகம்பொள்ளற்றரும்பமனை
சோறுமிளமதியமையும்போதிக்குந்தொல்லைத்தாற்
போதிலினென்னமாவெனவாக்கும்பெற்றியினுன்
வீரமலிதவவலியான்றிருகண்டெதன்போல்வான். (௨௩)

பூமனுக்குமினவனுக்கும்போரொருமைப்பாகனுக்கு
மாமனுக்குந்தன்னளவிலயர்வுயிர்க்குமாண்பளித்தோன்
சேருமனுக்குவெபுரியான்றியமுதனூல்பலதொடுத்தோன்
சோமனுக்குமிகுதண்மைச்சொக்கலிங்கதேசிகனே. (௨௪)

---

திருப்புத்தூர்க்கு அடுத்த மகிபாலன்பட்டி.

## குமா. மு. கதிரேசச்செட்டியார்

இயற்றியது.

பொன்னிவளம்பொலிசோழநன்னாட்டின்றிலகமெனப்புகழுஞ்சீர்த்தித்
தொன்னியமம்வழாதொன்றுநற்றவனைபுராணமுறைசொல்லுந்தூய
முன்னைவடமொழியோர்க்குமெக்காலிற்றேசர் புலவரொருமுவந்துகொள்வான்
உன்றுமணிபொதியமீழ்க்கிற்றனவுமைத்தான்றமிழ்க்கவியானுவன் யாரோ
வென்னின். (௧)

பல்கலையம்பரவறிஞருளங்கொளுத்திமகிழ்விப்போன்பவிமென்றுது
பல்கலையம்பாடனைவிபாற்றிறேன்கானவனைப்பதிபோனற்பா
னல்கலையம்பரிகருணைவுமைபாகனையேயத்துமுத்த
நல்கலையம்பாமகியிலிசைவிதுவுசொக்கலிங்கநாவலோனே. (௨)

---

## சிறப்புப்பாயிரம்.

தில்லைவளாகம்
ஸ்ரீ சண்முகசரணாலயசுவாமிகள்
இயற்றியது.

திருவளர்கமலச்செம்மனான்முகத்
தொருவனளித்தவுலகிற்சிறந்த
வாலவாய்ச்சங்கத்தமர்சொக்கலிங்கக்
கோலமேகாளைக்குடியுளோர்பன்னா
ளாற்றியதவத்தாலப்பெயரேகொண்
டேற்றமேதாவன்றெனவாங்குதித்தோன்
பொய்ச்சமயங்களைப்போக்கியாகம
மெய்ச்சைவசமயவிதிகைக்கொண்டே
பிறைக்கொழுந்தணிசடைப்பிஞ்ஞகன்றாளி
னறைக்கொழுங்கூவிளநன்னீராதிய
தேடியருச்சனைசெய்தருளிரந்து
பாடிப்பணியும்புத்திமாபாற்கரன்
பதிபசுபாசவிதிமுறைதெரிந்த
சதுருடைச்சைவசித்தாந்தசாகரம்
விதிவழியொழுகும்வித்தகர்தமக்குக்
கதிவழியிதுவெனக்காட்டுமாமேரு
வெனப்புவியுள்ளோரிசைத்திடவடங்கா
மனப்புலனடக்குமாதவம்புனான்
குதவனத்தின்கோதின்மான்மியத்தைப்
பேதமிறமிழிற்பிறங்கிடச்செய்து
கோலங்காட்டியகொண்டல்சூழ்தண்டலை
யாலங்காட்டில்வாழருமருந்தன்ன
சீலச்சிதம்பரச்செம்மல்வேண்டுகோள்
சாலமுற்றுவித்துத்தந்தமாகீர்த்தியைச்
சொற்றிடச்சேடனுந்துளங்குவானுளமெனின்
மற்றொருநாவால்வழங்குவதெளிதோ.

இராமநாதபுரம்
சமஸ்தானவித்துவான்
சர்க்கரைப்புலவர்வம்ஸ்தராகிய
## கோட்டகுடி மு. சேதுப்புலவர்குமாரரும்
## ஆலங்காடு மகா-ள-ள-ஸ்ரீ ரா. ம. சி. த. சிதம்பரச்செட்டியார்
## மாணாக்கருளொருவரும்
## மன்னார்குடி பிண்டலேகாலேஜ் தமிழ்ப் பண்டிதருமாகிய
## சர்க்கரை இராமசாமிப்புலவர்
இயற்றியது.

சீர்பூத்த திரையுடுத்த நிலமகளுக்கணிமுகமாஞ்சென்னிநாட்டி
லேர்பூத்த திலகமெனவிலகாலங்காட்டில்வருமெவர்க்குமென்றும்
பேர்பூத்தபலனுதவுந்தருவானோனரவிதழிபிறைநீர்ச்சென்னிக்
கார்பூத்தகண்டன்மலர்க்கழல்போற்றுந்தவஞானங்கதிக்குமேலோன். (க)

தெருண்மணக்குந்தமிழ்மகளுக்கணியாங்காய்ப்பரசமயச்சிங்கமாகி
யருண்மணக்குஞ்சைவமெனுமரும்பயிர்க்கோர்முகிலாகியடியேன்போலு
மிருண்மணக்குமுளத்தவருக்கிருஞ்சுடராய்த்தவமிகுமிராமசாமிப்
பொருண்மணக்கும்வணிகபதிபுத்திரரத்தினமாகிப்பொருந்துஞ்செல்வன் ( )

அற்றூர்க்குஞ்சிவபெருமானடியார்க்குநால்வேதமறிந்துளார்க்கு
மற்றூர்க்குமங்கமெல்லாம்வந்தார்க்குமிசைநால்வாணருக்குமெய்ந்நூல்
கற்றூர்க்குங்கவிராசகணத்தார்க்குந்தமிழ்வேதங்கரைகண்டார்க்கும்
வற்றூமலெப்பொருளும்வழங்குதலானவநிதியேமானும்வள்ளல். (௩)

மனக்கவலையுடையார்க்குமகிழ்வாய்வீட்டற்றவர்க்குவாழும்வீடா
யுணற்கரியவழியவருக்குணவமுதாயுறவிலர்க்கவ்வுறவாய்த்தந்தை
யனைக்கரியார்க்கவராகியரும்பிணியாளருக்குமருந்தாகிச்செம்பொ
னினைக்குவியலில்லார்க்கவ்வினைக்குவியலாய்வாழுமிசையார்பூபன். (௪)

தாதாருமிதழிமதிச்சடையாடக்குழையாடத்தாளிற்சேர்த்த
வாதாருமரி கடலைமலைந்தாடக்குலைந்துகங்கைமங்கையாடப்
போதாரும்பொன்னரங்கம்பொலிந்தாடுமீசனடம்புரியச்சீர்சான்
மாதாருஞ்சிவஞானமடாலயமுனிவரியற்றிவைத்ததோன்றல். (ரு)

மன்னியசீகாழியர்கோவாக்கரசுதொண்டர்தொகைவழங்குமவ்வள
லுன்னியமாதவவாதவூரடிகண்முதலாயதூய்மையோர்கண்
முன்னியருண்மழைபொழியமுறைபிறழாதடியர்களமுகிழ்த்தன்னோர்கள்
பன்னியசீர்த்தமிழ்வேதம்பகரவருட்குருபூசைபண்ணுமண்ணல். (அ)

நலத்திலுயர்காசிநகர்தனக்கேகித்திரிபதகைதன்னிற்றோய்ந்து
பலத்திலுயர்பலன்றருமோர்பாணலிங்கங்கொணர்ந்துபரிவாரமோடு
வலத்திலுயரங்கயற்கண்மாதயன்மேவுறக்கோவில்வகுத்துச்சைவர்
குலத்திலுயாந்தணாாற்குறைவில்பிரதிட்டைசெய்துகுலவுமன்பன். (௯)

இன்றுவென்றெனேயறியாதிருந்துமினியவைகூறியிருக்கவீடு
மன்றுதிபலபொருளுமருந்தமிழ்விற்பனமுமுயரறிஞர்நட்புஞ்
சொன்றுதியெப்பொருளுந்தொல்லுலகும்புகழமகிழ்துளும்பநல்கி
யென்றுளுமெமைப்புரக்கவென்றுபெருந்தவப்பேருயிருக்குஞ்சீமான். (௰)

தொன்றுதிகழ்வடவனமுந்தொல்லுலகுஞ்செய்ததவத்தொகுதியாவு
நன்றுருக்கொண்டுற்றதெனநாவலருங்காவலருநவிலகின்றோன் [ ௌ
லுன்றுபுகழ்கொடைவாய்மைபொறையடக்கந்தூய்மையெனுஞ்சுடர் வாய்ஞரு
வென்றுதனமழைபொழியுமெழிலிசிதம்பரநாமமியைந்தவேந்தல். (௧௧)

எந்நாட்டுமுயர்வளவனன்னாட்டுண்முன்னாட்டுமேற்றமேய
தென்னாட்டுமிசைச்சூதச்செழுங்காட்டுமான்மியத்தைச்செவிக்கின்பாக்குஞ்
சொன்னாட்டுந்தென்னாட்டுத்தூமொழியாற்றருகெனலுஞ்சுகுணம்வாய்ந்த
பன்னாட்டுப்பாவலருமுண்ணாட்டும்படிபுனைந்துபகர்ந்தான்மன்னோ. (௧௨)

அன்னவனியாமொளிற்றிருவுமருந்தமிழும்பெரும்புகழுமமைந்தநல்லோன்
பன்னுமறைத்தெளிவெனவிற்பனர்புகல்சித்தாந்த மெய்ந்நூற் பரவையுண்
டோன், கன்னலெனத்தமிழிசைக்குங்கவியினுக்கும்புவியினுக்குங் கண்ணாயு
ள்ளோன், சொன்னயமும்பொருணயமுந்துலங்கு பலநூலியற்றுந் தூய்மை
யாளன். (௧௩)

கடியிருக்குந்தளவமணிகவினிருக்கும்புயமுடையான்கலையார்காரைக்
குடியிருக்குந்தனவணிகர்குலத்திருக்கும் புகழ்கொடையான்குறித்து நாடோர்
வடியிருக்குந்திரிசூலிமகிழ்ந்திருக்குமனமுதவிமலர்கொண்டந்தத்
துடியிருக்குங்காத்தமலன்சுடரிருக்கும்பதம்பணியுந்தூய்மையாளன். (௧௪)

குணத்தானுந்தனதுருவின்வணத்தானுந்துறைகடொறுங்குறையாநீட்டும்
பணத்தானுந்திருவருளின்மணத்தானும்பலகலையும்பயின்மாணுக்கர்
கணத்தானுந்திருப்பணிசெய்யினத்தார்க்குப்பொருளுதவிக்களிக்கச்செய்யு
மெணத்தானுந்திரையுலவுவணத்தார்க்குங்கடலுலகிலிணைவேறில்லான். ( )

கண்டெனப்பாலெனப்பிரசங்கம்மழைபெய்துளமுருகிக்கனியக்கான
கண்டனையேதினம்பரவம்பலவாணநாவலர்கோன்கண்ணேயன்னோன் [ன்
றொண்டர்தமைச்சிவமெனவேதொழும்பியற்றிச்சிவபூசைதுலங்கச் செய்வ
ரெண்டரிடந்தண்டமிழ்தேர்சொக்கலிங்கனெனும்வாய்மைத் தூய்மையோ
னே. (கஎ)

---

இந்நூலாசிரியர்மாணாக்கரு ளொருவரும் திருப்புத்தூரைச்

சார்ந்த தம்பிபட்டி சொர்ணச்சாமிக்கவிராயர்

குமாரருமாகிய

## வேலுச்சாமிக்கவிராயர்

இயற்றியது

பொன்னாலுமணியாலும்புவியாலுங்கவியாலும்போகத்தாலு
மின்னாலும்மதமுதனால்விதத்தாலுமிதத்தாலும்வேதத்தாலுஞ்
சொன்னாலுமமைமுந்நூற்றொடையாலுங்கொடையாலுந்தோற்றத்தாலு
மென்னாலுநிறைசெழியரிறைமாண்பின்முறைவாய்மையினாட்டில். (க)

விற்றிகழுந்தன்மடவார்மிளிருமாதமாடமிசைவாழ்தோற்றங்
கற்றிகழுங்குடைமாலைகலமாக்கள்பலரோவென்காட்சித்தாய்ப்பொய்ப்
பற்றிகழுமாணடியார்குழாம்பெருகுசீர்க்காரைப்பதியில்வாழு
மெற்றிகழுகவிதிக்கோவெனப்பொலியும்வசியர்குலத்திலங்குந்தூயோன் ()

இராமனாதக்குரிசிலியற்றுதவமேயுருவாயினையந்தகன்மோ
னிராமனாதன்புநிறைமனத்தன்பரினத்தன்பேயியற்றுவான்
விராமனாசம்புரிந்துமிளிர்கங்கைகுளிர்திங்கள்வேணியாண்டும்
விராமனாதன்பகர்ந்தசிவாகமசன்மார்க்கவிதிவித்தாயுள்ளோன். (ங)

எவ்வுயிருமேகனேயெனநின்றுமநேகனுமிலங்குமீசன்
செவ்வுருவமுளக்கமலத்தினிதொளிரவிணைதொழுதுமெய்சிலிர்ப்பக்கண்ணீ
ரவ்வகலைசலமிசையருவியெனப்பெருகியெழவமையாவன்பிற்
றிவ்வியநீறக்கமணிபுனைந்தெழுத்தைந்துமாயிற்செபிக்குஞ்சீலன். (ச)

பலத்தானைத்தோலுரித்தவனைத்தானையருளொழுகுபாதத்தானைச்
சலத்தானைச்சூர்ப்பகையைத்தந்தானைவான்சூரிற்றக்கமுன்னாங்
குலத்தானைக்கூடுவார்க்கூறதனைநீப்பானைக்கோலநீற்றி
னலத்தானைச்சனகர்முனோர்க்கருண்ஞானபோதகமாமினத்தானை. (ரு)

ஒருபோதுமறவாமலிருபோதும்முப்போதுமோங்குநான்காய்
வருபோதுமுதலியசொண்டைம்போதுமதற்கடந்துமாசில்பூரணமாக்
கருபோதரிட்டாமத்தியற்றுவோன்சித்தாந்தக்கலைமுன்னூலிற்
றருபோதவந்தாங்கப்பொருள்விளங்கவிரித்துரைக்குந்தகுதியாளன். (௬)

நண்ணியபொச்சாப்பொவஞ்சனைகோபமுதலாயநவைகட்கெல்லாம்
பண்ணியகொள்கலனையதமியேனுக்கொருவருநூல்பகரவென்றுந்
தண்ணியபேரருள்கூர்ந்து தகுதியுறநூல்கள்பலதள்ளாதீந்தோ
னெண்ணியதொல்புகழமைந்தசொக்கலிங்கதேசிகனென்றியம்பற்பாலான்.

இத்தகையதோன்றறனையெந்நாளும்பெருஞ்செல்வவியல்பிற்றுலங்குங்
கத்துதிரைக்கடலுடுத்தபுடவியெலாம்புகழாலங்காட்டில்வாழ்சீலமா
னுத்தமமெய்யன்பறிவுகொடைவாய்மைபொறைநீதியோங்குசீராத்தி
வித்தகமேம்பாடுதலமுதற்சிறந்தசிதம்பரப்பேர்மேதக்கோன்றான். (௮)

தலமுதலமூவகையமேன்மையமைகுதவனசரிதமான
பலமுதவுவடமொழியைத்தென்மொழியிற்பகருநாப்பாயபெரியனை
நலமுதவுதமிழ்வளர்க்குநாட்டகத்தாராயினுநலங்கவெல்லாம்
புலமுதவப்பொலியுமெனப்புந்திகொளீஇக்கருத்துரைத்துப்புரிந்துவேண்ட.

இப்பிறவியினுக்குறுதியீதன்றேயெனத்துணிந்தாங்கின்பமீக்கூர்ந்
தொப்புறலிலாவிருத்தயாப்பதனிற்பொருண்மாண்புமோசைமாண்பும்
வைப்புறுசொன்மாண்புமணிமாண்புமெழுவகைமதமும்வனப்பெட்டொடுந்
செப்புறுமுப்பானிரண்டுத்தியுநான்குபயனுடனேதிகழச்செய்தான். (௰)

முத்தமிழாசிரியனெனவுலகுபுகழகத்தியமாமுனிவனிந்நா
லுய்த்துணர்ந்திட்டினையவன்றனுயர்கல்விவலிமையினையுன்னிச்சோர்ந்துஞ்
சித்தமுடன்மலையுற்றான்சேடனெனும்பெயர்திகழ்விசேடன்றானிப் [தோ
வித்தகன்வாழ்தலைமதித்தேமேதினியைத்தலைக்கொண்டான் வழிமைந்துமா

---

ஆலங்காடு ராம. சித. சிதம்பரச்செட்டியார்
மாணாக்கருளொருவராகிய
தி. குப்புச்சாமி ஐயர் இயற்றியது.

மாமேவுமியற்றமிழாங்கடல்பருகுமஞ்செனுமோர்மாண்புவாய்ந்தோனான்
றாமேவுமதியரவம்விளையாடும்வேணியரன்றுகளிலாத
தேமேவுநளினமலர்த்திருவடியேநித்தேத்துஞ்சீர்த்தியாளன்
கூமேவுமிந்திரனென்றுணாசெல்வன்கன்னனெனவெல்கொடைமையாளன். ()

நாவலூரிறைதொண்டத்தொகையடியார்குருபூசைநயந்துநாளு
மாவலாயுதற்றன்பனுலவனகர்க்கிறைவனறிவான்மிக்கோன்
சேவலூர்கொடியானைத்தந்தான்றன்பதியனந்தந்தெரிசித்தேத்திக்
காவலார்காசிமணிகண்ணிகைதோய்ந்தருளிலிங்கங்கையிற்கொண்டு. (உ)

வந்துதனதெழினகரிலாலயங்கண்டிரியபரிவாரத்தோடு
செந்துவர்வாய்மீனாட்சிசுந்தரேசுரர்பதிட்டைசெயுஞ்சீராளன்
முந்துமியனூல்களையென்மடமைகெடவுணர்த்திட்டோன்மோதுநீரார்
சிந்துநிகர்கருணையினுன்சிதம்பரப்பேரொண்டிசையுந்திகழுஞ்செல்வன். (ங)

விண்டுமுதத்தேவர்களுமுனிவர்முதலியாவர்களும்விரும்பிப்போற்றக்
கண்டுமொழியுமைபாகனிலிங்கவடிவாயமர்ந்தகலின்மிக்கோங்கும்
வண்டுமலிகுழலுமைமாண்மியத்தைப்புலவரெலாமகிழ்ந்துகொள்ளத்
தண்டமிழிற்பாடுகெனவப்பரிசேபாடினனத்தவன்யாரென்னில். (ச)

தருநிகருங்கொடையுடையான்றனதுனிகர்தனமுடையான்றவமிக்குள்ளான்
பொருவரியதிருநீறுங்கண்மணியுமுடையவனாய்ப்பொலியுநேசர்
இருவருவேயாவெனன்னத்துதித்திடுமெய்யன்புடையான்சிறந்தசீலன்
பெருமைதருங்கானைநகர்ச்சொக்கலிங்கத்திருநாமம்பெறுநாவல்லோன்.

---

ஆலங்காடு ராம. சிதம்பரச்செட்டியார் மாணாக்கருள்
ஒருவராகிய தேவூர்

## வைத்தியலிங்கச்செட்டியார்

இயற்றியது.

பொன்பூத்தசெழுங்கொன்றைபுனைசடிலதிருக்கூவிளமாவுபொதுவிகானின்
மின்பூத்ததிருமேனிச்சிவபெருமான்றனிவளம்பதியிடைத்தலாலுங்
கொன்பூத்தகுலபுருடனுக்குமுப்பாய்ப்பனைமரங்குலைத்தாலே
தென்பூத்தசிவயோகங்காணத்தானும்பலர்புகழுஞ்சென்னிகாட்டில். (க)

செல்லாரும்பொழில்வாவிசாலாயுபலவளமுஞ்செழிப்புற்றோங்கி
பல்லாருங்குழன்மடவார்விழிக்கயல்கள்குழைதாவுமாலங்காட்டில்
வில்லாரும்பாணியிராகவனேதானென்றிலனென்னுமேதக்கோர்கள்
சொல்லாருமிராமசாமிக்குரிசிறவத்தினில்வந்துதித்ததோன்றல். (உ)

அன்னையானவள்சேய்க்குப்பாலருத்தல்போலெனதியாமைநீங்கப்
பன்னுதமிழினையெனக்குமிகுநேயத்தொடுபொழிந்தோன்பரமன்சீர்த்தி
துன்னுசைவப்பிரசங்கங்கேட்போர்களுளங்களிப்பச்சொல்லுமாண்போன்
மன்னுசைவகுரவருண்மைநாயன்மார்குருபூசைவழாதுசெய்வோன். (ங)

நிறைவாய்மைமிகுசெல்வப்புகழ்வாய்ந்தோன்சிவபூசைநேயனேற்றோர் [ குன்
குறைதீரப்பொருள்பொழியுங்கொண்டல்சிவாலயப்பதிட்டைபுரிந்தகோமா
பொறைநேயமருவுசிதம்பரவள்ளல்சிவஞானம்பொலிந்தசீலன்
பிறைசூடும்பிஞ்ஞகன்வாழ்சூதவனமான்மியத்தின்பெருமைநோக்கி. (௬)

அத்தகையமான்மியத்தையாவருமோர்ந்தருளின்பமடையவெண்ணிச்
சுத்தமுறுசெந்தமிழ்ப்பாவாலியற்றித்தருகவெனச்சொற்கான
சித்தனடிமனத்திருத்திச்சொற்சுவையும்பொருட்சுவையுமமைவாரேன்
புத்தமுதமெனப்புலவோர்சிரந்தூக்கிமகிழ்வெய்தப்புராணஞ்செய்தான். (௭)

அன்னவன்யாரெனிற்பாண்டிநாட்டொருசார்தனவணிகரெனப்பேசா
ஒன்னியகானைக்குடியோன்புகழ்மலிந்தவன்றொண்டர்தொன்மாணாக்கன்
மன்னுபெருங்கல்வியினிற்குறுமுனிநேர்வோன்பரமன்வழிபாடோடும்
பொன்னடியேபூசனைசெய்சிவநேசன்சொக்கலிங்கப்புலவோனே. (௮)

---

இந்நூலாசிரியர்மாணாக்கருளொருவராகிய

## வே. நடேசபிள்ளை

இயற்றியது.

திருவளர்தெய்வக்கன்னிநாடதனிற்சீர்வளர்பல்வளஞ்செறியுந்
தருவளர்பொழில்சூழ்கானையம்பதியிற்றனம்வளர்வணிகர்குலத்தி
லருள்வளர்கல்விநிறைபொறைவாய்மையன்புமற்றுணைமென்மையுந்தோய்
பொருள்வளரிராமநாதன்முன்பன்றேட்புரிதவப்பயனாயுதித்தோன். (௧)

நாகர்கள்போற்றுமாலவாய்ச்சங்கநாயகமாயமர்ந்தவனேறு
நாகமூடுருவவேல்விடுத்தவனேநளினநீறணையுநான்முகனே
நாகநீள்பொதியவெற்பின்மாதவஞ்செய்தற்றமிழ்முனிவனேநாதி
நாகனேஞானமெய்ந்திடப்புவிமேனண்ணினனெனத்தருதற்கேதான். (௨)

தீதில்வெண்ணீறுங்கண்டிகையும்பூணமேவுமன்றிருவெழுத்தைந்துமைப்பயிற்றி
னேதுவென்றெனையுமருளினன்னூல்களுணர்த்தியுட்கொண்டமொழி
போன், கோதிலாகியமசிவார்ச்சனைமுதலாக்கடவுண்மாக்களினேசி
னேதமில்பெரியோனின்னவன்சீர்த்திபெண்ணறற்றரவல்லமொழிகத்தோ. (௩)

அப்பெருந்தவனையாலங்காட்டமருமன்புருசிதம்பரமா
வொப்பிலான்கொடையேதன்பெருந்தொழிலோனேதுமாவனத்தின் மான்
மியத்தை, யிப்புவியுய்யத்தமிழ்மொழிபெயர்த்திங்கீகெனக்கூறுதலுமடைந்
த, செப்பரும்பொருளைச்செவ்விதாராய்ந்துசெந்தமிழ்விருத்தயாப்பாக. (௪)

பாசமுமனைத்தவெல்பாதமோர்நான்கும்பசுபதியிலக்கணவளவு
மாசிலாமதுராநாற்கவிஞனுமரும்பொருணவாசகனு
மீசனாருளுந்திருவருணலனுமினியமெய்யன்பியனலனுந்
தேசுறப்புகன்றனனையசொக்கலிங்கதேசிகனுவலவேறே. (௫)

---

இந்நூலாசிரியர் மாணாக்கருளொருவரும் தாமரங்கோட்டையைச்
சேர்ந்த செங்கப்படுத்தான்காடு கிராமமுன்சீப்
கோபாலபிள்ளையவர்கள் குமாரருமாகிய

## திருச்சிற்றம்பலபிள்ளை

இயற்றியது.

சீர்மேவுதில்லைநடஞ்செயுமிறைவன்றிருவருளேதேசமுய்ய
நார்மேவுயாழ்ப்பாணநல்லூரிற்றிருவுருவாய்நயப்பப்போந்த
தேர்மேவுதிருவருள்கூராறுமுகநாவலர்கோன்றிருத்தாட்கன்பன்
பார்மேவுபாண்டியனாட்டெழிற்காரைக்குடியென்னும்பதியில்வாழ்வோன். ( )

முல்லையிளங்கோக்குலத்தின்மொழிராமநாதன்கான்முளையாய்வந்தோ [ன்
னெல்லையிலாப்பாம்பொருளையெப்போதுந்தன்மனத்தேயிருத்திவைப்போ
வல்லைபிரமனைப்பிரிந்தகலைமகடன்னைத்துவதியப்பெற்றோன்
குல்லையணிமாளிறத்திற்குலவுதிருமகள்குடியாக்கொள்ளப்பெற்றோன், (௨)

திங்களணிசடையண்ணல்சிறந்துவாழ்தலங்கடொறுஞ்சென்றுசென்றே
யங்கவனையருட்பாவாலெத்திறைஞ்சும்பெருமக்களமைதிபோலத்
தங்குல்பகலொழியாமற்கறைக்கண்டன்றிருவடிக்கேகவிகள்சொல்வோ
னங்கமொளித்திருநீற்றணத்தியன்போலைக்கலையுமருளவல்லான், (௩)

பந்தமுறுமலவிருளைப்புறவிருளைப்பாற்றுபாற்கரனேயென்னச்
சிந்தியருள்வழிகாட்டியருணாலையெனக்கருளுஞ்சிறப்பான்மிக்க
சுந்தரமாமருட்குரவன்றூயதயாநிதிமதியஞ்சூடும்வேணிச்
சுந்தரநாயகன்றிருப்பேர்சொலப்பெறுசீர்ச்சொக்கலிங்கத்தூயநாமன், (௪)

தேனெழுகுபொழிலாலங்காட்டினில்வாழ்சிவநியமச்செல்வநேயன்
வானெழுகுமழைசமழ்ப்பவளர்கொடைஞன்சிதம்பரப்பேவணிகர்கோமான்
மீனெழுகுமலர்விரிகாவிரிநாட்டிலுசாத்தானமென்னுமேன்மைக்
கானெழுகுதவனக்காதையினையீதியெனக்கழறல்கேளா. (௫)

இந்தணிசெஞ்சடையானையிருங்கயிலைமலையானையிமையமானைச்
சுந்தரவாமத்தானைச்சுயம்பெழுந்தருதவனநாதன்றன்னைச்
சிந்தனைசெய்தந்நூலைத்தென்னூலாயுலகுவப்பச்செய்துதந்தான்
றந்தருணூணுமகளுந்தமிழ்முனியுஞ்சிரமேற்கொடைகையதம்மா. (௯)

ஸ்ரீவிஞ்ஞாநபுரஸ்தலஆராக்கியகரநிவாச

திராவிடபாஷாஞாநி

சுத்தாத்துவிதசித்தாந்தசைவவியவஸ்தாபக

ஸ்ரீமந்நாவலர்பெருமான்பாததூளி

சிரமேற்கொண்ட

யாழ்ப்பாணத்துவட்டுக்கோட்டை

**ஆ. அம்பலவாணநாவலரவர்கள்**

இயற்றியது.

---

திருவுசாத்தானமெனவுலகுசாத்தானமாண்பியத்தைச்செம்மை
மருவுசாத்தானதமிழாற்றருகவென்றுலங்காட்டின்வாழ்வி
னிருவுசாத்தானகவிமாலையான்சிதம்பரமேவெரிசைப்பத்தந்தான்
கரு*வுசாத்தானயந்தாற்கன்பாளன்சொக்கலிங்கக்கவிஞரேறே.

பாடுவதிற்பாடெனைப்பாடுவதேபாடுபுகழ்பயக்குமாமென்
றுகழன்மன்றுடையார்பாடுகொற்றங்குடியடிகளறிவித்தாரார்
பீடுபெறுசேக்கிழார்புராணமிசைத்தெனப்பாதுபேணியாமு
நாடுமிருபாவிசைத்தவ்விருவர்செழுந்தகைமையுமன்னயந்தாமன்றே

---

* உ-விஷ்ணு.

# பெரியபுராணம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் புராணம். [illegible]-ம் பாடல்.

திருவுசாத்தானத்துத்தேவர்பிரான்கழல்பணிந்து
மருவியசெந்தமிழ்ப்பதிகமால்போற்றும்படிபாடி
யிருவினையும்பற்றறுப்பாரெண்ணிறந்ததொண்டருடன்
பெருகுவிருப்பினராகிப்பிறபதியும்பணிந்தணைவார்.

---

## திருவுசாத்தானம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருவாய்மலர்ந்தருளிய

## தேவாரம் பண் கொல்லி.

நீரிடைத்துயின்றவன்றம்பிநீள்சாம்புவான்
பேருடைச்சுக்கிரீவனனுமன்றொழக்
காருடைநஞ்சுண்டுகாத்தருள்செய்தவெஞ்
சீருடைச்சேடர்வாழ்திருவுசாத்தானமே. (௧

கொல்லையேறுடையவன்கோவணவாடையன்
பல்லையார்படுதலைப்பலிகொளும்பரமனார்
முல்லையார்புறவணிமுதுபதிநறைகமழ்
தில்லையானுறைவிடந்திருவுசாத்தானமே. (௨

தாமலார்போலவேதக்கனார்வேள்வியை
யூமனார்தங்களூராக்கினானொருநொடிக்
காமனாருடல்கெடக்காய்ந்தவெங்கண்ணுதல்
சேமமாவுறைவிடந்திருவுசாத்தானமே. (௩

மறிதருகரத்தினன்மால்விடையேறியான்
குறிதருகோலநற்குணத்தினாரடிதொழ
நெறிதருவேதியர்நித்தலுநியமஞ்செய்
செறிதருபொழிலணிதிருவுசாத்தானமே. (௪

பண்டிரைத்தயனுமாலும்பலபத்தர்க
டொண்டிரைத்தும்மலர்தூவித்தோத்திரஞ்சொலக்
கொண்டிரைக்கொடியொடுங்குருகிளினல்லினந்
தெண்டிரைக்கழனிசூழ்திருவுசாத்தானமே. (௫

மடவரல்பங்கினன்மலைதனைமதியாது
சடசடவெடுத்தவன்றலைபத்துநெரிதர
வடர்தரவூன்றியங்கேயவற்கருள்செய்தான்
றிடமெனவுறைவிடந்திருவுசாத்தானமே (௮)

ஆணலார்பெண்ணலாரயனொடுமாலுக்குங்
காணொணாவண்ணத்தான்கருதுவார்மனத்துளான்
பேணுவார்பிணியொடும்பிறப்பறுப்பானிடஞ்
சேணுலாமாளிகைத்திருவுசாத்தானமே. (௯)

கானமார்வாழ்க்கையான்காரமண்டேரர்சொல்
ஞானமாக்கொண்டுநீருரைபிணுய்யவெனில்
வானமார்மதிலணிமாளிகைவளர்பொழிற்
றேனமாமதியந்தோய்திருவுசாத்தானமே. (௧௦)

வரைதிரிந்திழியுநீர்வளவயற்புகலிமன்
றிரைதிரிந்தெறிகடற்றிருவுசாத்தானமை
யுரைசெய்தஞானசம்பந்தனொண்டமிழ்வல்லார்
நரைதிரையின்றியேநன்னெறிசேர்வரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# சூதவனபுராணம்.

காப்பு.

பூவரு மயன்மா லாதி புனிதரு முனிவ ராதி
யேவருஞ் சூழ்ந்து போற்ற வின்னரு ளெளிதி னல்கு
மாவரும் பொழிற்பைஞ் சூத வனப்பெரு மகிமை கூற
மூவரும் பரவு மானை முகத்தனை யகத்துள் வைப்பாம். (௧)

இதுவுமது. வேறு.

சீத மாவண மார்பினன் றெவ்வலற்
கேத மாவன தீர்த்தரு ளீசன்வாழ்
சூத மாவனத் தோன்முகத் தோனம்பு
சாத மாவனத் தாணமந் தேத்துவாம்.

முதலடியில் மா - இலக்குமி. வனம் - துளபம். மூன்றாமடியில் மா - வண்டு. நான்காமடியில் வனம் - அழகு. நமந்து - சுபந்தமாகிய வடமொழிப் பெயரடியாற் பிறந்த வினையெச்சம். இதனை உமாபதிசிவம் திருத்தொண்டர் புராணசாரம் (௩௧) செய்யுளில் "வன்றொண்டனை நமந்தோ" என்றருளிய வாற்றானுமுணர்க. நமஸ்கரித்து என்னும் பொருட்டு. (௨)

நூற்பயன். வேறு.

பூத நாதன் சூதவன புராண மீதன் புறக்கேட்போ
ரோது மவரப் படைநடத் துநர்முன் னுழுத் தமவொரு
மேத மொழிந்து போதமுணர்ந் திம்பர் வாழின் பெல்லாம்பெற்
றுதி யமலன் றிருவடிக்கீ ழமர்பே ரின்புற் றுடன்வாழ்வார். (௩)

வாழ்த்து.

வேத வேள்வி மழைவளங்கள் வீற்று வீற்று ருயிர்க்கின்ப
மாதி யறங்க ளனிவளர்க வைந்தக் கரங்கண் டிகைநீறன்
பேருஞ் சிவசா தனம்பொலிக வுயர்சைவ நிகமை வந்தழைக
நீதி வேந்தர் மனுச்செங்கோ னிலவி வாழ்க வுலகெல்லாம். (௪)

## கடவுள் வாழ்த்து.

மந்திரேசர்.

பூமா தமரு மணிமார்பன் புவனம் புரக்கும் புகழ்நிலைத்,
காமா தரவிற் றசாதன்கா லாங்கா லோர்கா லருள்வலிே
டேமாண் புறப்போற் றியவளித்த வெந்தை மந்தி ரேச
நாமாற் சுழிப்பட் டலையாமே நடலைக் கடலைக் கடத்திடு

திருவு சாத்தா னந்தனயந் திகழ்த்த வமர்வோ னெமது
வெருவு சாத்தா னந்தனய விளிப்போன் முகுந்த னீபின்
மருவு சாத்தா னந்தனயன் வருமென் றருள்வோன் வெ
திருவு சாத்தா னந்தனய னொளிர்பொற் கமலத் தாள்ப

திருவுசாத்தானமானது தன் நயத்தை விளக்கும்படி அம
வும், எமதுபவம் நந்த வெருவுசா னைய விளிப்போன் எனவும்,
தனயனாய் வருவான் எனவும், இந்து உருவத்தைச் சாந்து ஆன
எனவும் பிரித்துப் பொருள் கொள்க.

பெரியநாயகியம்மை. வேறு.

புரிய னாயகி லம்பா வருளொளிற் புரக்குந்
துரிய னாயகின் னந்தவிர்த் தெமக்கருள் சுரக்கும்
பிரிய னாயகி புனைபா னிடம்பிரி யாத
பெரிய நாயகி திருவடிப் பிரசமென் மலரே.

ஆய கின்னம் - எம்மைப்பந்தித்ததாகிய துக்கம். ஆய் அ
ஆராய்ந்த சர்ப்பம்; ஆதிசேடனென்க. அன்னாய் அகிலம்பா
எனில், அப்பெரிய நாயகி திருவடிமலர் புரக்கும் எனமுடிக்கு
பிரியனுமாகியபரன் என்க. புரத்தல் கொடுத்தலுமாம்.

நடேசர்.

மடன குஞ்சித பாதவந் தனைக்கொண்மா வனத்தெ
மடன குஞ்சித பாதவந் தனைமுறை வருத்து
நடன குஞ்சித பாதவந் தனைதெற நமோர்
நடன குஞ்சித பாதவந் தனைதின நயப்பாம்.

எம் மடன் நகும் சிதம் பா தவம் தனை முறை வருத்து
மையைக் கெடுக்கின்ற ஞானத்தையும் பாந்த தவத்தையு

முறையையும் வகுத்துக்காட்டி, அவம் தனை தெற - அவகுணங்களையும் சிவபோதத்தையும் தெறும் பொருட்டும், நகுஞ்சி தயாது நட - சிறந்த முடியின் கண்ணே நீங்காது (தன்னை) நம்பொருட்டும், மடல் நகும் சிதம் பாத வந்தனைக் கொள் மாவனத்து - இதழ்விரிகின்ற (மலர்செறிந்த) விண்மீன் அளவுயர்ந்த விருட்சங்களைக் கொண்டகுதவனத்தில் வீற்றிருந்தருளுகின்ற (நடேசப்பெருமானுடைய) நடன குஞ்சித பாத வந்தனை - நடனகுஞ்சித பாதத்திற் செய்யும் வழிபாட்டை, தினம் நயப்பாம் - தினந்தோறும் விரும்புவாம். நகுதல்-இகழ்தல்; அது கெடுத்தலைக் குறிப்பாலுணர்த்தியது. தனை - சிவனை யென்னும் பொருட்டாய்ச் சிவபோதத்தைக் குறிப்பாலுணர்த்தியது. காட்டித் தெறும்பொருட்டும், நம்பொருட்டும் வந்தனை தினம் நயப்பாம் எனமுடிக்குக. மலர் செறிந்த விருட்சமென்றியையும். (அ)

சிவகாமியம்மை.

பணகந் தயக்கிரு பாற்செழுஞ் சிற்சபை பயிலுங்
கனகந் தரனடங் காண்சிவ காமி தாட்கமல
மனகந் தாவிருள் வெளியுற மலப்பகை மடிக்கு
மனகந் தாகித மன்புசெய் தின்புற வடுப்பாம்.

பன்னகம் என்பது இடைக்குறையாயிற்று. மூன்றும் அடியிற் கந்தரம் குகை. (௯)

தெட்சணாமூர்த்தி.

சிரவ ணம்புயங் கம்மதி யிதழியஞ் சிவனும்
பிரவ ணம்புய லனமுகல் மானிழற் பிரியா
வரவ ணம்புயர் நால்வர்க்கு முறவமர் பரம
குரவ ணம்புய நாண்மலர்ச் சேவடி குறிப்பாம்.

ஆம்பிரவணம் ஈது உருபும் பயனும் தொக்கது. வணம்புயல் எனுதை நோக்கி இயல்பாயிற்று. (௰)

விநாயகர்.

தவள வாரணம் புகரிரு நீர்செறி தழைக்கும்
பவள வாரணன் மேனிய னெங்கரன் பரமன்
றிவள வாரண வுந்தசை வேறியன் சிறுவன்
கவள வாரண முகத்தனை யகத்தினிற் கலப்பாம்.

தவளநீறென்றியையும். நீற்றொளிதழைக்கும் பவளமேனி எனக்கூட்டுக. ஆர் - அருமை. அணல் இடைக்குறை. மூன்றுமடியில் ஆர் - ஆத்தி. வார் எனப்பிரித்துக் கங்கை எனக்கொள்ளினும் அமையும். (கக)

## சுப்பிரமணியர்.

செங்க டம்பணி புயந்தழீஇத் தேவகுஞ் சரியோ
டங்க டம்பணி கொங்கையங் குறமின்வேட் டமர்கோ
னெங்க டம்பணி துணிமயி லூரிறை யெமக்கோர்
சங்க டம்பணி யாதசேய் தாடொழு தெழுவாம்.

எங்கள் தம் இறை என்றியையும். சங்கடம் உம்மை தொக்கு நின்றது. (கஉ)

## வீரபத்திரர்.

தீர பத்திர விச்சுடர் வாளினாற் செகன்மால்
சார பத்திரங் காதிருண் மலப்பகை தடிவா
னீர பத்திர நாண்மல ராதிகொண் டிறைஞ்சி
வீர பத்திர னடிமுடி கொண்டுநாம் விழைவாம்.

தீரம் - தளராமை. ரவிபோலும் சுடரையுடைய பத்தியாகிய வாளினால் எனமாற்றிப் பொருள்கொள்க. சார் அபத்து எனப்பிரிக்குக. (கங)

## வைரவர்.

காரி யேற்றகங் கைக்கொணு கண்ணுத னிருவி
காரி யேற்றகங் கைக்கொணு திவர்கழ னிரகங்
காரி யேற்றகங் கைக்கொணு தன்கரத் தளித்த
காரி யேற்றகங் கைக்கொணுண் மலரடி கலப்பாம்.

(அரிபிரமேந்திராதி தேவர்களைத் துரத்திக்கொண்டுவந்த) விஷத்தை எதிர்த்துச் (சென்று) உள்ளங்கையிற் (கவர்ந்து) கொண்டுவந்து, கண்ணுதலும், திருவிகாரியும், இடபத்தின்மேல் மனம் களிக்க வொண்ணுது இவருகின்ற கழலையுடைய நிரகங்காரியும், தாங்கிய கங்கையைக்கொண்ட நாதனுமாகிய சூதவனேசர் கரத்து அளித்த காரியாகிய வைரவமூர்த்தியினுடைய, மிக்க பாவத்தை வெறுக்கின்ற ஒள்ளிய நாண்மலரடியை (நம்முள்ளத்திற்) கலப்பாம். ஏறு - அகம் - ஏற்றகமென எதுகை நோக்கிப்பிறவினைபோல் நின்றது. விஷத்தைக்கொண்டுவந்து நாதன் கரத்தளித்த காரி எனக் கூட்டுக. (கச)

திருநந்திதேவர்.

துள்ளி மால்வரை வேணிமுச் சுடர்விழித் தூயோன்
வெள்ளி மால்வரை காத்தருள் விமலன்மெய்த் தவத்தோ
ருள்ளி மால்வரைந் துணர்சிவ ஞானபோ தந்நூல்
வள்ளி மால்வரை நந்திதாண் மலர்முடி வனைவாம்.

மால்வரைந்து - ஆசையால் எழுதி. (௧௫)

இலக்குமி. வேறு.

அமலை யாதியெண் செல்வ மருளுமை
யமலை தன்வலக் கண்ணம ரன்னைபாற்
கமலை மேற்றுயில் கண்ணனி றத்திசெங்
கமலை பாதங் கருத்து ளிருத்துவாம்.

பாற் கம் அலை - வெள்ளிய பாற்கடல். (௧௬)

சரசுவதி.

முற்று மாவியம் மூகத் துவமொரீஇச்
செற்று மாவிய வின்பரு ளூறெறீஇ
யுற்று மாவிய ஞுதவெனுண் பாதமே
பற்று மாவியக் கன்னியைப் பாடுவாம்.

ஆவிமுற்றும் எனவும், மாஇயல் செற்று எனவு மாற்றுக. மாஇயல் - ஆணவமல சத்தி. மா - கருமை; அது ஆணவமலத்தை யுணர்த்திற்று. உ.மா வியன் நாதன் எனப்பிரிக்குக. (௧௭)

தமிழாசிரியர்.

குலைய மாதவ னேருகு கென்றுகை
தலைய மாதவ வைத்தான் றன்னுரு
நிலைய மாதவன் டந்த நிறைதமிழ்
மலைய மாதவன் சேவடி வாழ்த்துவாம்.

குல்லையையுடைய அழகிய மாதவனே நீ குறுகு என்று தன்கையை அவர்தலையில் அம்மா மிகவும் வைத்தழுத்தி அவனுரு நிலைக்கும்படி அவன் அழகு தந்த மலைய மாதவ னென்க. மாதவனே நீகுலைக, குறுகுக எனவியங் கோளாக்கினும், முன்னிலைமை குலையும்படி என எச்சமாக்கினும் அமை

சண்டேசுர நாயனார்.

ஓத கம்பா கதிநெறி யுற்றிடா துய்வான்
சீத கம்பா கதிர்வயற் சேய்ஞலூ ரடிகண்
மேத கம்பா கதிர்பிலை யானருள் விளைவாற்
பாத கம்பா கதிசெய்சண் டேசர்தாள் பணிவாம்.

பாகதி - அந்நியமார்க்கம். பாகதிர் - பாரமான நெற்கதிர். மேதகு அம்பரம் - ஞானகாசம். கதிர்பிலை - விளைத்தொகை. (௨-௩.)

அறுபத்துமூவர். வேறு.

சேயன் மாண்கம லைதன் றில்லையடி
வாயன் மாசற வந்தரு ணாவலூர்த்
தாயன் மாதிருத் தொண்டத் தொகையுளார்
நாயன் மார்பத நாம்பணிந் தேத்துவாம்.

தில்லை அடி வாயன் - "தில்லைவாழந்தணர்தமடியார்க்குமடியேன்" என்கின்ற அடியை முதலாகக்கொண்டு பாடியருளிய வாயினன். (௨-௪)

நம்பியாண்டார் நம்பி.

விளங்கொ ளுறவருண் மேவுபே ரின்பமா
பலங்கொ ளுறவெம்மைப் பார்த்தரு ணிர்த்தன்வாழ்
நலங்கொ ணாரையூர் நம்பியாண் டார்நம்பி
யிலங்கொ ளுண்மலர்ப் பாத மிறைஞ்சுவாம்.

பேரின்பமாகிய பலனைக்கொண்டுவந்து எம்மைப்பார்த்து அருளுகின்ற நிர்த்தன் என்க. (௨௫)

சேக்கிழார்.

உலகெ லாமென வோங்கொரு பொன்மொழி
யிலகெ லாமென வீற்றிடை காட்டிமால்
விலகெ லாநூல் விரித்தருள் சேக்கிழார்
திலகெ லாமலர்ச் சேவடி போற்றுவாம்.

மால் விலகு எல் ஆம் நூல் - மயக்கம் நீங்குகின்ற ஞானப்பிரகாச முண்டாகின்ற நூல் என்க. திலகம் என்பது கடைக்குறையாய்த் திலகு எனநின்றது. எல் ஆம் மலர் - சூரியனால் மலர்கின்ற நீர்மலர். (௨௬)

### மெய்கண்டசிவாசாரியார்.

மைகண் டாவருண் மேனி யாவருள்
செய்கண் டாவென வெண்ணெய்நல் லூர்த்திகழ்
மெய்கண் டானடி மேவி யிறைஞ்சினின்
றுய்கண் டாயுப தேசமி துள்ளமே.

மைக்கண்டா என்பது எதுகை நோக்கி இயல்பாயிற்று. அருள் செய்கண் தா - கிருபாநோக்கம் தந்தருளுக. (௧௭)

### அருணந்திசிவாசாரியார்.

இகல வாகமர் வீழ்த்துமென் னெஞ்சகே
ளகல வாகமன் வாதை யருணந்தி
சகல வாகம பண்டிதர் தாட்டுதி
புகல வாகம வாழ்வில் புகுத்துமே.

இகல் அவா எனவும், ஆகமன் வாதை அகல எனவும், புகல வா எனவும் பிரிக்குக. (௧௮)

### மறைஞானசம்பந்தசிவாசாரியார்.

வரவு மாமண வாளன் மலர்க்கழல்
விரவு மாமனம் வேட்டுமெய்ம் மாதவர்
பரவு மாமறை ஞானசம் பந்தர்தாட்
புரவு மாமலர் நாடொறும் போற்றுவாம்.

வர உமா மணவாளன் எனப்பிரிக்குக. (௧௯)

### உமாபதிசிவாசாரியார்.

கனக வம்பல நாதன் கவிபெறீஇ
யனக வம்பல னுக்கு முமாபதி
யெனக வம்ப லழிக்கு மிணையடி
மனக வம்பலர் தாய்த்தம் வாழ்த்துவாம்.

என் அகம் வம்பு அல் அழிக்கும் எனப்பிரிக்குக. மன் - மிகவும். நக - விளங்கும்படி. (௨௰)

### அரதத்தசிவாசாரியார்.

சீரத வேதவ ரன்சிவ னேபதி
பாத வேத நமவிற் பகர்மெனச்
சாத வேதங் குரையா தத்தர்தம்
வாத வேதனை மாற்றடி போற்றுவாம்.

சிரம் எதம் தவு அரன் சிவனே பதி - மேலாகிய ஏதம் நீங்கிய அரனாகிய சிவனே பரமபதி; (இது நிச்சயமே; இதனை இதற்குரிய வேதசிவாகமாதிசிவசாத்திரங்களால் நிர்ணயம் செய்வதொன்றோ? எந்தச் சமயிகளும் தாம் ஆசங்கையின்றி யங்கீகரிக்கத்தக்க பொதுநூலாய் நடனவேறுபாடுகள் மாத்திரமே விளக்கவந்ததாயுள்ள) பரதவேதம்-பரதசாஸ்திரமும், நமவில் பகர்ம் என-நமஸ்காரமுத்திராபிநயத்தால் விளங்கக் கூறுமென்று சாதமாகிய ஏதுவை அங்கே யுரைத்தருளிய அரதத்த சிவாசாரிய சுவாமிகளுடைய வேதனையை மாற்றுகின்ற வரதபாதங்களைப் போற்றுவாம் (௰௧)

பரதநூலிற் கூறிய விதிப்படி நடிக்கின்ற நடனியானவள் கணேசாதி தேவ சமூகங்களின்வரவை அவரவர்களுடையஆயுதாதிகளைக் குறிப்பிக்கின்ற அதிசாதுரிய அநேக அபிநயங்களாற் காட்டி, அதே போலப் பரமசிவனுடைய வரவையும் அவர்க்குரிய திரிசூலாதிகளைக் குறிப்பிக்கத்தக்க அபிநயங்களாற் காட்டுவதொழிந்து, நமசேஷியன் சிவனே என்று சுருதிகூறிய உறுதி வாசகம் இனிதுவிளங்க, நமஸ்கார முத்திரையாற் காட்டுதலால், அரதத்த சிவாசாரிய சுவாமிகள் சிவனேபதியென்பதைப் பரதவேதம் நமஸ்கார முத்திரையாற் பகருமென்று சாத ஏது உரைத்தருளினரென்க. (௰௧)

பட்டினத்தடிகள்.

சாம்பு கார்மலம் வீட்டிமெய் சார்ந்துய
வோம்பு கார்கோ ளுடுக்கும் வளந்திகழ்
பூம்பு காரின்வெண் காடர்தம் பொற்கழு
லேரும்பு காமலர் தூய்ப்பணிந் தேத்துவாம்.

கார்மலம் - ஆணவமலம்; சாம்புகார்மலம் வினைத்தொகை. தோம் புகாமலர் - எனப்பிரிக்குக. (௰௨)

குருவணக்கம்.

மூங்கைகளைப்பே சுவித்தவிலுமு முதுசெயலீ தெனச்சடமா மூட னேற்குந்
தாங்கருளாலு ணர்த்தியவன் றெண்டகுரு மணிஞானத் துறவுக் காணி
யாங்குருவெமெய் யப்பகுரு வருமணிநா வலநாம மகில மெங்குந்
தேங்கியொளிர் பரமகுரு சிகாமணிக டிருவடிகள் சென்னி சேர்ப்பாம் ()

கடவுள் வாழ்த்து முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௰௩:

# பாயிரம்.

உலகெலாமு மறைப்பொருளொன் றென்று ணர்ந்து வேதிகளோர்
திலகு வாய்மை யுபசார மிலையென் னுள்ள படிதெளிந்து
மலையில் பொருளொன் றேயிலையுண் மறைகாய் போதுவர் வயங்குபதி
நிலவு முடியு மாபதியே நிசமென் றோர்த ருண்மையினால். (௧)

அன்ன மறையுட் பொருண்முடிவை யகில முணர்ந்தாங் குய்யும்வகை
சொன்ன முறைமூ வாறென்ப தோற்று புராணஞ் சாற்றவற்றின்
வன்னி புராண மொன்றிரவி மாண்சொல் புராண மொன்றயன்சீர்
பன்னு புராண மிரண்டரிசீர் பகரும் புராண மொருநான்கே. (௨)

ஈச னெமையா ளுமைநேச னெல்லா மாகி யல்லனுமாய்த்
தேசு விரியத் துவிதநிலை தேற்றும் பரம சிவன்மகிமை
பேசு புராண மைந்திரண்டப் பெரிய புராணத் தொன்றென்ப
பூசு பௌடி யோத்தரமா புராண மதிற்கேத் திரகண்டம். (௩)

இனிது விளங்கு மிதில்விளங்கு மெந்தை பெருமான் குருகலை
புனிதன் பெரிய நாயகிவாழ் புரத்தன் வைத்தன் பெருஞ்சீர்த்தி
வினைமுற் றொழித்தின் பருளிந்த வியன்கா தையையோர் காத்தமலன்
நனியன் புளங்கூர் நந்தீச னயந்து கேட்ப நவின்றனனால். (௪)

ஈச னுமைக்கோ துறமடிமீ திருந்து கேட்ட விளங்குழலித்
தேச னுரைகேட் டெந்தருளுந் திருநந் தீசன் றனைவினவு
நேசன் சனற்கு மாரமுனிக் குரைப்ப வனைய நிறைதவத்தோன்
பேசி னனல் வியாதனுக்கப் பெரியோ னுரைத்தா னெனக்கென்று.( )

சூத முனிசொல் வடமொழியைச் சுவைத்தண் டமிழ்மா நிலமாந்த
ரோதி யுணர்ந்து திருவருள்பெற் றுய்வான் றமிழின் மொழிபெயர்த்தின்
னீதி யெனமெய் யன்புருவா யிலங்கும் பெரிய னியம்பாவை
தீது நெறிக டானிருக்குந் திசையும் புகுதப் பெறுச்சிலன். (௬)

சிவனே பதியென் னுள்ளபடி தேர்ந்து தெளிந்த சிந்தையினு
னவனு ருட்புத் திரமார்க்க மாயசிவபூ சனைநாளுந்
தவறு தகத்தும் புறத்திலுஞ்செய் சகசன் மார்க்க நியமநிலைக்
கிவனே யொருவ னென்றுலக மிசைப்பச் சிறந்த விசைப்புனிதன்.(௭)

அறங்க ளவற்றும் பரசுவப்பே தருள்பே ரறமில் லறமெனுநாற்
றிறங்கொள் சீலன் வித்துமிடல் வேண்டு மெனுமாண் டிருக்குறளோ
பிறங்க நாளுந் தன்மனையெம் பிரான்மெய் யடியார் தம்மனையா
மறங்க வளர்ப்போ னமுதளிக்கும் வகையிங் கெவர்க்கும் வகுப்பரிதே.( )

சூத வனத்தின் கீழ்பாலோர் குரோச அளவுத் தாலங்காட்
டோடும் பூவை சியர்குலத்தா ளுலப்பில் சீர்த்தி செறிபாம
நாதன் குமர னுயர்கங்கா நதிசூழ் காசி போய்க்கொணர்ந்து
சோதி லிங்க மீனுட்சி சுந்த ரேச னெனும்பெயரால். (சு)

மன்னு மணிப்பொற் கோயில்புரீஇ வாநற் றினத்தி லவ்விலிங்கந்
தன்னை யுமையோ டளிமுதற் சண்டீ சாந்தம் பதிட்டைபுரிந்
தென்ன பொருளு நிறைதாழூன் றங்கத் தியல்பூ சனையென்று
முன்னு சிவாக மந்நெறியி னுஞற்றி வருமா முதலாக. (எ)

விளைதண் கழனி முதற்பொருள்கண் மிகுத்து நிலைப்ப வகுத்தமைத்
பளகொன் றினொங்கலறத்தாற்றுற் பல்கும்பொருள்க ளுடோது[ தோன்
மனவொன் றிலாத சிவதரும மாதி யறங்கட் களித்துவப்போன்
களவொன் றிலாவித் யாவிருத்தி கண்ணு வளர்க்குங் கடமையினுன். ()

அன்பே யுருவன் குறிகுணமொன் றறியா தடியார்ப் பணிசீல
னின்பே தருபா லாம்பதன்பே ரிளையப் பெருசீர்க் கோபால
னென்போ னிவனை யருந்தவஞ்செய் தீன்ற மகவின் வாஞ்சையிகத்
தன்பாற் கல்வி நலன்முழுதுந் தாவில் குணமுந் தரப்பெற்றேன். (கூ)

இன்ன பெருஞ்சீர்ச் சிதம்பரனை யிசைத்தா னிவன்சொற் படியிந்தப்
பன்னு சூத வனக்கதைத பகர்தற் கறிவோர் சிறிதுமிலே
னுன்னி யிதனைச் செயமொழிந்தா னுவன்சொன் மறுத்த னன்றாகு
முன்னி முடித்து மெனநினைந்தா னமுடியாச் செயன்மேற்கொளலாகும். (கஎ)

என்றுறன் புரிசே ரியண்டிவடடின் றெண்ணித் துணிந்தே னெனையாரு
முன்றே னடியா ரெண்ணமெலா முடிக்கும் பரம னன்புரிறி
தின்றுன் றொடங்கு செயற்கருளா விடுறு மிசைத்த விப்பெரியோன்
றன்று னடப்ப தாலருளாற் றுனே யுமைகோன் முடிக்குமெனு. (கரு)

துணிந்தாங் கனைய வடமொழியைத் தூய பெரிய நாயகியைத்
தணிந்தார் முடிமன் திரநாதன் சபைத் துனைச்சே வடிமலரை
புணர்ந்தார் பெரியர் தமைபெரியோர் குணர்த்தா சிரியர் தாட்டுணையைப்
பணிந்தா ரருளி னடங்கிமதம் பாவித் தமிழிற் பகர்கின்றேன். (கரு)

பகரும் புராண சருக்கமொரு பதினேன் கொவொய்த் தெழினுடு
நகர்பா யிரமே யவையடக்க நண்ண முதல்வைத் திவைவிரிபாத்
தொகைய யிரத்தைந் தூற்றிருபான் சொற்றேனளித்தே னவரத்து
ளைகைகூ டிரதச் சுவையுண்டு நாவ லோர்க ளனியுவப்ப. (கசு)

## அவையடக்கம்.

சத்தம் யாவுஞ்சிற் சத்தி யுருவமே
யத்தம் யாவுஞ் சிவனுரு வாமென்ப
வித்த கைச்சொற் பொருள்க ளிடைவழு
வுய்த்து ணர்பவர்க் கியாமென் னுரைப்பதே.

யாவர் கூற்றுகின் னேவலி னல்லதை
மேவு றுவென் றியம்பினர் மேலையோ
ராவ தாலறி யாச்சிறி யேன் புகல்
பாவெ னுவழுப் பார்ப்பர்கொல் பண்பினோர்.

வழுவி றைத்திறை வைத்த களஞ்சியக்
குழுங் கர்த்தவென் கூற்றெனக் கொள்ளினும்
பழுது பார்த்தல் பழிப்பென்க பாவலோர்க்
கொழிவி லொன்றின்மற் றொன்றுற லின்றரோ.

பாயிரம் அவையடக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ருஉ.

———(o)———

## தற்சிறப்புப்பாயிரம். வேறு.

தேவை நகர்வாழ் வன்றொண்ட தேசி கேசன் மா
றவில் வளங்கூர் காரைநகர்த் தனமா வணிகர் ...
சேவில் வருவா ரடிக்கன்பன் றிகழ்சொக் கலிங்க தே...
பூவின் மிருசீர்ச் சூதவன புராணம் புகன்றான் ...

---

சிவமயம்.

# திருநாட்டுச்சிறப்பு.

---

பொது.

பொன்னாலு மணியாலும் பூவாலுங் காவேரி பொலிநீர் நாடு
பன்னாலு மறையாலும் பாணாலும் வானோரும் பயில்சீர் நாடு
வங்காலு முகத்தாலு மயனாலு மியலாத வருள்கூர் நாடு
வென்னாலுஞ் சொலத்தகுமோ வெண்ணரிய திருச்சோழ வெழிற்பேர்நாடு

உலகமொருங் குதவியநீ ரோதநதி யுவணைகே துன்னத் தேவா
நூலவிறவத் துணர்வினிடை யுதித்தருளி யுவணையர சுருகி யோதப்
பலர்புகழ்பொற் பதியமர்ந்தும் பாராசன் பால்வலியப் பகர்ந்து பற்றி
யிலகுதியா கேசனுநீ டிருப்பதிந்நாட் டின்னசையே யிசைப்ப தென்னே

திருநெறிய தமிழ்மூவர் தேவாரச் சிறப்புயர்கேத் திரங்க ளிந்நா
ளிருபிலமெங் கணுமிருநாற் றெழுபதின்மே லொருநான்கா மிவற்று ளே
பாவுறுபற் பன்னாட்டும் பயில்பதியெண் பதினான்கே பண்புநீடுஞ் [ணைப்
சுரர்பரவு மொருநூற்றுத் தொண்ணூறு திருத்தலமிச் சோழ நாடு. (௩)

வைதிகசை வம்பொலிய வந்தருண்மூ வருந்தருதே வார மந்நா
ளெய்துமிரா யிரமுடிக்கொ ளிலக்கமிவற் றிறையருளா லிறந்த நீக்கி [காய
புய்த்தருமுன் றெழுபதெண்ணூ றுளவவற்று ளைஞ்ஞூற் றைம்பத் தொருநான்
கெய்விமான் டிருப்பதிகத் திடனாக்கே திகழ்தருமிச் சென்னி நாடு. ()

முந்நாடு தம்மிலுஞ்சீர் முன்னாடு மிந்நாடு மொழியென்ற வேதக்
சொன்னாடு முயர்தலத்தாற் சொன்னாடு மயனைத்தகற் றொகைநீ டின்ப
மன்னாடு பலவனத்தான் மற்றுபொருட் குலவனத்தால் வளர்சீர்க் கென்று
மெந்நாடு மெய்யுறு மிணையாகா வென்பதுவ கெல்லாஞ் சொல்லும். ()

வேறு.

அரிய னீதிக் காவிரி யாதிமா மனுவினீதி
யுருவமான் றுயர்க்குத் தன்சே யுரும்பன்மீ தூரு *ரேய்த் தாரூர்
வானருட் கருளு மஞ்சீர் மனுநீதி கண்ட சோழப்
பூமலை னருட்செங் கோலிற் பொலிவுறுஞ் சோழ நாடு. (௬)

உலகெலாம் பரவு சான்றோர் குடைத்தெனு நாட்டி லுந்து
மலைமலை நிலைன்வி ளேயோர்க் கழைத்தன பாய நாமக்
கிலவவான் றலைமை செய்யச் சேக்கிழார் குரிசி லாற்றும்
வலைநுய நலமைச்ச நீதி மாண்பதிச் சோழ நாடு. (௭)

---

* உய்த்தலென்னும் பெயரெச்சத் தகரந்தொக்கது.

அருண்மொழித் தேவ ராய வருளினீர்த் தனைய வாய்மைக்
குருபரன் வாக்கின் றீக்கை கொள்கெனுங் கொடுப்பித் தெம்மான்
றிருவரு ணிறைந்த சோழர் சிகாமணி யனபா யப்பேர்ப்
புரவலர் பெருமான் செங்கோல் பொலிவதிச் சோழ நாடு. (அ)

மணிகளி லமல னங்கண் மணியணி யங்க ராகக்
குணிகளிற் றிருவெண் ணீறு கூறுமத் திராங்க டம்முட்
கணிதிரு வைந்தெ ழுத்தே கவினுறீஇ வயங்கு மாபோற்
றுணிபுயர் மேன்மைத் தான்றோர் துதிபிருஞ் சோழ நாடு. (கூ)

மன்னுமே தக்க சோழ வளநாடு சோறு டைத்தென்
றன்னையா ரவ்வையாரோ தருண்மொழிப் பொருண்மை நோக்கி
னென்னநன் னாட்டு மேலா யிகபர யோக்க வாழ்க்கைத்
தொன்னிதி தானே மீத லுலக்குமிச் சோழ நாடு. (க0)

நாதக்க மடந்தை யென்றே நாவலர் பரவி யேத்து
மூதக்க வாய்மை ஞான முதல்வியா மவ்வை மாதா
மேதக்க வளநா டென்ன விசேடண முன்பின் கோத்திட்
டோதக்க வின்கொண் மேன்மை யுற்றதிச் சோழ நாடு. (கக)

ஆருநீர் நாடென் றோதி லனையது தனையே யன்றி
யோருதல் பிறிதொன் றின்பா லுறுதிடு குறியே யாரும்
பேருறீஇப் பலமாண் செல்வப் பெருவளப் பெருக்க மென்றுஞ்
சேருபு திகழும் வாய்மை தேற்றுமிச் சோழ நாடு. (கஉ)

அங்கண்மா ஞாலத் தாவிக் கருளிய கோயில் கொண்டா
னெங்கணு மென்ப தேனை யிடங்கட்கு முகம தென்ன
வொங்குதன் பாலவ் வாய்மை யொளிர்தர விடம்வே றின்றிச்
சங்கர னமர்பொற் கோயி றழைப்பதிச் சோழ நாடு. (கங)

செங்கம லத்தின் மேவுந் திருமகள் பொதுமை நீக்கி
மங்கல வகைக ளெல்லா மலிதர வழங்கு மாண்பாற்
பொங்குறு சிறப்பி னென்றும் பொலிதலாற் பொன்னி நாடென்
றெங்கணுந் திகழ்பேர் கொண்ட திசையிரு சோழ நாடு. (கச)

அரியயன் முகுந்த ருதி யமரர்நா டவனி யேனை
றிருபர்நா டொருத்தி ராதி நேசர்நா டெல்லா மென்று
மருவுதங் குறைக ணீங்க வரம்பெறச் சிரமேற் கொள்ளும்
பெருமையாற் சென்னி நாடென் பேருடைத் திங்நீர் நாடு. (கரு)

நாடெலாம் விளைவி னீட்ட நகரெலாம் பொருளின் கூட்டங்
காடெலா மலர்ப்பூஞ் சோலை களனெலாம் பிறங்கு நெற்போர்
மாடெலாந் தரும சாலை மறுகெலா மணிக்கு வால்கள்
பாடெலா நாடும் போற்றிப் பணிதிருச் சோழ நாடு. (கசா)

கற்பகப் பொங்க ரெங்குங் கற்பக வல்லி யெங்குங்
கற்பகல் லூரி யெங்குங் கற்பக மாத ரெங்கு
மற்பக மாந்த ரெங்கு மற்பக றறங்க ளெங்கும்
பொற்பக மாட மெங்கும் பொற்பகன் மணிக ளெங்கும். (கஎ)

காத்திர நீழ லெங்குங் காத்திர வளங்க ளெங்குங்
காத்திர சுகங்க ளெங்குங் காத்திர வாமை யெங்குங்
கோத்திர குலங்க ளெங்குங் கோத்திர நலங்க ளெங்குங்
கோத்திர மேன்மை யெங்குங் கோத்திரன் பொழிபா லெங்கும். (கஅ)

பார்ப்பவர் கண்கட் கென்றும் பசுமையே தோன்றும் யாண்டும்
பார்ப்பயில் பயிர்முன் றுவை பலெருடே பல்கும் யாண்டும்
பார்ப்பணி யாதி தாமும் பல்றுறை நுகர்வ யாண்டும்
பார்ப்பனச் சாதி யாதி பகர்நெறி தவறு யாண்டும். (ககூ)

திரவிட வேதம் போற்று திருத்தகு மூர்த்தி யீட்டந்
திரவிட வேதம் போற்று திருத்தங்க டிருத்த லங்கள்
பரவிட மிடங்க டோறும் பல்குவ சோறுட் டென்று
பரவிடல் யாரு நேரே பார்க்கலா மின்று மென்றும். (உ0)

பரவுறு சரியை யாதி பக்குவர்க் கருண்மெய் ஞான
குரவர்தம் மிலங்கள் வாய்மைச் சங்கம குலங்க ளாதி
வயாரிகுங் கூட்டங் கூட்ட மார்தொகு வகையிற் கன்றிப்
பரவுமெம் நாட்டி லின்றுற் பார்க்கலா மின்று மென்றும். (உக)

இன்னநாட் டியற்கை யாமே யிசைக்குநர் தொகுத்தி யாவு
மென்னநாட் டிறமே றுட்டி னிலுறுபே ரின்ப நல்கிப்
பொன்னிநாட் டடங்க டோறும் பொய்யறு முனிவர் வாக்கின்
மன்றுவகார் வளமுன் னோர்ந்த வகையொரு சிறிது ரைப்பாம். (உஉ)

மலைவளம்.

உருவகா ருருவ காவென் றோதிய வுபய காய
வளிருமையும் பொதுமை யாகி யிலங்கெழித் சதாசி வன்றன்
பெருகொளிப் பளிங்கின் றோற்றம் பிறங்கிவின் ஞேக் கீசானத்
தெருண்முகப் பிர்தி விம்ப மென்னவான் சேணிற் சென்ற. (உங)

நமதன்ப னுசை மித்த நாலையவ் வானை நீக்குக்
கமையம்பு கொண்டு பின்னுங் களிப்பது காண்டு மென்று
வுமையன்ப னீற்றுக் கோதைத் துற்றெருழித் திடனேர் சென்றுங்
கிமையம்பு தஞ்சே ணின்று மெறிதிரைக் கடல்புக் கன்றே. (௰.௩)

கருங்கட றரங்கக் கையாற் காமரு தாளமாதி
யிருங்கழ லிறைஞ்சித் தாவி யிரத்தலி னாற்றல் சேனா
வொருங்குறு திரங்கி யெம்மா னெழிற்றெனை வெழுந்து வானின்
வருங்கனம் வேண்டிங் காறு மாந்திமே லெழுந்த மாதோ. (௰.௪)

வாரிதி குழியப் புக்கு வாரிவாய் மடுத்த வானந்
தேரிய விறைய கோரத் திருமுக காந்தி யேந்திக்
காரிய லுருவாய் வாமக் கதிர்முகச் செம்மை வாய்ந்தாங்
கேரியல் சம்பை யீட்ட மெங்கணும் பாப்பிற் றன்றே. (௰.௫)

மதிநதி யிதழி வேணி வானவன் காத்தெதுந் ஞான்றும்
பொதுமையி னிருமை யாய புற்கல வர்க்க மெல்லா
மதிர்தரு தமரு கத்தி னழைத்தரு ளொலியே யென்னக்
கதிர்விசும் பெழுசீ மூதங் கனையொலி பெருக்கிற் றன்றே. (௰.௬)

கறைமிடற் றிறைவன் மத்த கயத்துரி யெடுத்துப் போர்க்கு
முறையென நிமிருஞ் சைய முதுவலை யெங்கு மூடி.
நிறையொளி நீல்வி தான நிந்திலத் தொடைநி ரைத்தாங்
குறைமலி தாரை யாண்டு மொய்யெனப் பெய்யா நின்ற. (௰.௭)

இறையமர்ந் தினிது வாழ்வெற் பிருஞ்சிற கரிந்தோ னிந்த
மிறையொழிந் துய்து மென்று விண்ணிறை மணிக்குடத்தி
னறைகடற் கூவத் தானை யாங்கயி றமைத்தெ டுத்துக்
குறைதப வாட்ட லேப்பக் கொண்டனீர் விண்ட மாதோ. (௰.௮)

போற்றிய சதாசி வன்றற் புருடவா சியம்போற் பொன்னின்
றேற்றமிக் கிலங்கு சாபந் துலக்குவான் பெய்ந்நீ ரன்றேனுன்
பாற்றிகழ் சத்தி யோசா தம்முக நிறப்ப ரப்பின்
வீற்றுவீற் றருவி சைய வெற்பிட மெங்குங் காட்டும். (௨௰.௧)

விண்ணுயர் சைய நாம வெற்பிருஞ் சிங்கரா மெத்துத்
தண்ணிய சாரல் காறுஞ் சதமக னிதம தாகக்
கண்ணறுந் தளவு மல்லி கைத்தொடை சாத்தி யேத்தும்
பண்ணிசை யென்னச் சூழ்ந்த பரவுநீ ரருவி யோதை. (௨௰.௨)

தனையுறு வலியில் சீவர் தமையுமாற் சார மென்ன
வினிதெடுத் தழுக்க கற்றி யின்பரு ளாசான் போலக்
கனைகுயி லுவமொ ழித்துக் கான்றநீ ருலக மெல்லா
நனியுணு மமுத மாகி நானிலத் தொழுகிற் றன்றே. (கஉ)

நிலையிலா வுடலங் கையி னேர்ந்தவக் கணமே நீக்கோர்
நிலையிலா வுடைங் கையி னெறியினுய்த் துய்து மென்று
நிலையிலார்க் களித்தல் போல நீள்பயோ தரநீர் * பெற்றந்
நிலையிலாங் கெஞ்சா நீக்க நீத்தமா வளித்த மன்றே. (கங)

கணைக்கொடு மாறி மாறிக் கருதுமுள் ளத்தின் † மாலை
‡ புணர்ந்திரு நிதிசெல் வப்பே ருற்றதை யுதவுவோரை
மணந்தரு சீர்த்தி போர்த்தன் மானநீர் முழுதும் வானந்
தணந்துற வளித்துமேனி தவளம்போர்த் தாங்கு நின்ற. (கச)

பொருள்படைத் தருளா பெய்தும் புன்மையு மளித்தார் தூய்மை
மருவுறுங் காட்டி யாங்கு வாரியுண் டேருங் காறு
யிருளுறீஇச் சைய மால்வெற் பெய்திநீர் பெய்த மாரி
தெருள்பெறு தூய்மைத் தாகித் திகழ்ந்துவான் சென்ற வன்றே. (கரு)

உடம்பெறுங் கணத்த றந்தி றுதவுறா வெறியென் றியாமிவ்
விடைபெயி னியாச் செல்வர்க் கீந்தநா யறனு மின்றுய்க்
கடப்புரு முறைய மெல்லாங் கலிக்கநீ பளிக்கும் வெற்பென்
றடையகன் கொடைசெய் கொண்மூ வமலைமா யகல்வான் சென்ற. ( )

உருவுடைச் சீவர் யார்க்கு முதவிய வுருக்கொண் § டெய்தும்
பரமன்யா மவனி லன்றேற் பயன்பெற வுருவு கொண்டு
வருவதே முறையென் றெம்மான் மலியருள் பிரவ கித்தாங்
கொருவுறுச் சைய வெற்பி லொழுகுமா லருவி நீத்தம். (கஎ)

சமன்மாட் டினித மர்ந்தே யிலையினின் மலைய வெற்பின்
வாசனுர் கமண்ட லத்தின் மந்திர நீர தாகித்
தேசமார் கவேர னீன்டே செல்கெனத் திருவு ளங்கொண்
டாசில்பூ முதல்வ னர்ப்பா னளித்ததித் தெளித்த நீத்தம். (கஅ)

---

* பெற்றவென்றும் பெயரெச்சத்தகரந்தொக்கது.
† மாலை - தன்மையுமாம்.
‡ உணர்தல் இரண்டிடத்தும் பொருடந்துநின்றது.
§ எய்தும்வினைமுற்று.

இந்நதி சைய வெற்பி னிடையமர்ந் தருவி யாக
மன்னியே குறுமா லீது மந்திர தோய * மாகுற்
பன்னுமைந் தொழிலுந் தானே பண்ணுமென் றியம்ப லென்றும்
பொன்னிகா விரிமுன் னாமம் புகல்பவிப் பொருவி லீர்க்கு. (௨௯)

நதியெலாந் துதிசெய் கங்கா நதியுமிக் கதிசெய் பொன்னி
நதியினோர் கூற்றுக் கொப்பா கவில்வதும் பழுதா மென்னே
நதியிவை யிரண்டும் பூவி னடக்குங்கா ரணத்தை நோக்கி
நதிவரன் றலையன் னோர்மெய்ந் நாவெடுத் தியம்பு முண்மை. (௩௰)

பிறந்திறந் துழலுந் தேவர் பேறுமூ ரமர்ந்த கங்கை
விறந்துபா ரகஞ் வேண்ட மென்சடை நுதிக்குட் டெற்றிப்
பிறங்கொரு முனிவன் மிச்சி லாகிப்பின் காதிற் போந்தே
யிறந்தவர் சாம்ப ரென்பி னெய்திய திசைத்த கங்கை. (௩௧)

பொன்னிமா நதியிப் பாரிற் போந்தருள் புனித மேன்மை
முன்னொரு வாறி சைத்தா முமனொழுகித் தோர்ந்திப் பொன்னி
தன்னிலை யுணர்க வானீர் தானுமோர் சிறிதொல் வாவிக்
நன்னதி மேன்மை யோரா ராயினே னவிலவ தொங்கனர். (௩௨)

வானிடைத் தாரை யாகி மலையிடை யருவி யாகி
மானிலத் திடையே யாறு வாவியாழ் கூவ லோடை
கானிலைத் தடமுன் னாமங் கடற்புன லென்றே யொன்ற
தானிடைப் பரமன் சீவர்க் கருடரப் பெறும்பேர் போல. (௩௩)

கருமுகி லாய மத்த கயமிவர்ந் தப்பு மாரி
பெருகவில் வாங்கி மின்வாள் பிறக்குகா லெறும்பொன் மோலி
யசுறக் கண்ட வேனி லாங்குறும் படங்கித் தேய்ந்து
சுரகிலத் தோர்காற் சென்னி தூக்கிநீர் நோக்கி மாயும். (௩௪)

பெரியவர் முனியி னும்பின் பேறினி தடைதர் நின்னைக்
தெரியுறப் பொன்னி யீர்த்துச் செல்பிணை பிரிந்த தன்னே
ளரிணநேர் புகுந்தோர் பாங்கின் படைந்ததால் வாதனுடைம்
புரவல ரொறுத்தா லொன்றும் போதுமென் றருளிற் சேர்ந்தாம். ( )

கனிமலர் காசா கொன்றை கவின்பலா சலர்பூ முல்லை
யணியணி பரவப் போர்த்தாங் கைவருந் தாறே யைந்து
பணிகளுந் தானே செய்யும் பான்மைநேர் காட்டி யேறு
மணிகொழித் திலகும் பொன்னி மந்திரக் கரக தீர்த்தம். (௩௬)

*ஆனல் என்பது ஈண்டுதேற்றப் பொருட்டது.

ஆக்கமு மறையு முண்டா மானரு ளொன்றிற் றாழ்ந்தோர்
நீக்கொளு நிலையர்க் கென்றன் மெய்ம்மையே தருப்பை யாதி
தாக்குநீர்ப் பொன்னி முன்னந் தாழ்ந்தநி விருத்தி யாய
மேக்குற நிமிர்த ருக்கள் விளிந்தன வேர்கீண் டம்ம. (சஎ)

கடிகமழ் மாதர் மேனி காட்டெழின் மலர்ச்சு ராவி
நெடிவின்மஞ் சரிகள் புன்னை யொண்டுணை ருடன்கொண் டேகும்
படியினீள் பொன்னி காட்டும் பசும்பொன்முத் தாதி பூண்டு
நெடியதண் புனற்ச ரிக்கு நீரா மகளிர் தோற்றம். (சஅ)

வேறு.

மூவரு முறையே யொருதொழி லியண்டு முத்தொழிற் குரியராய்த் தூரிய
தேவினி னொடுங்கக்காட்டிடுங்குறிஞ்சித் திணையிலக்கொருலைப்பொருளே
காவகத் தியண்டு பனையின்முப் பொருளே கவருபு காட்டியீர்த் தேகி
யோவற வலைமுற் றுதரியிற் புகுமா றுய்த்தறும் பைந்தநீர்ப் பொன்னி.

வேறு. குறிஞ்சி.

ஐந்திணையின் முதற்றிணையீ தாலமான் டிணைபேரின் பமைதி தேற்று
னைந்தாயிணை விழைச்செனிறை நலத்திணையென்றைறவுரின் முன்றுதனெற்றிச்
செந்தமிழாய்ச் சந்தமலி சிந்தைடயா னந்தமயத் திட்சி யாய
சந்தாவே வாமாந்தருமே சாந்தளிக்கப் பெறுங்குறிஞ்சித் தாயவைப்பு. (ருய)

வேறு.

பூந்துணர் பொதுளுங் வேலைப் புடைசூழ மெழுபுரி யீட்டஞ்
சார்ந்திற வளர்கு யூமக் காமிகா விலைறஞ்சல் காட்டு
வேந்திணை யொழுக்கு செங்கே தின்னகு வொழுக்க மெய்க்கு
மாந்துமா முதைக்க னாடன் மற்றவர் வெறியாட் டேய்க்கும். (ருக)

வெயிலொளி தருமேல வொளிபடுஞ் சிலியுற வென்டி. சைப்ப
மயல்வளை வெடிப்ப வீழ்முத் தாங்குச்சென் றுறைதக்குந் தோற்ற
மியலினுக்கு வேலை வேலை மெனக்குமங் கவர்புள் ளோடக்
கயல்விழிக் குறமான் முன்றுாட் கவணெறிந் தமர்ந்த காட்டும். (ருஉ)

அருகமர் பாரவோ வேய்ந்தை யடியுரு வொடுக்கிச் சியங்
கரியுறல் கண்டு வல்லே காந்தறை பான்மை செல்லே
வரிவேய மகன்முன் போந்தாங் கொக்கிற வளர்வே னம்பி
வயதெறிந்துக் கனிமொயான் குல் மறைந் தொளிர் வாய்மை தேற்றும்.

காமுறு பிணையொன் றேர்பாற் கதுவிய வொருபால் வேழ
நாமுற மருப்பு நீட்ட நாப்பணின் றவா சோக
மோமுதல் வேழ முன்ன ருன்றல்கண் டெயினர் கல்லை
யேமுற வலித ணைப்ப விங்கெச் சேனை யேயும்.

புதுமலர் கணியிற் றோன்றப் புலிந்தர்கூர்ங் குயத்தி னோனே
கதுமென நிலத்திற் சாய்வ கடம்பணி கடம்பு யக்தோ
னெதிர்பொரத் தொடர்கி ராதர் யாவருஞ் சேவ றோன்ற
விதிர்விதிர்த் தாவிசோர்ந்து மேதினி வீழ்ந்த தேய்ப்ப.

அரிகுர லருவி யாவு மாங்கெயிற் றியரி னோர்பு
குருமலர் வேங்கை நீழற் குவாலுற வீழ்வ வள்ளி
யருளினு ருயிர்பெற் றன்றோ ரறுமுகன் றிருவ டித்தா
மரைநிழ லுறமுன் வீழ்ந்து வணங்கிய வாய்மை காட்டும்.

கறிக்கொடி யிணர்த்துச் சூழ கருத்தரு விளர்த்த செம்மல்
வெறித்தசெங் காந்தண் மீது வீழ்த்திடின் வெருளிருந் தோற்ற
மறித்தகண் ணெறித்த வோதி வள்ளியோ டெள்ளி யெம்மான்
பொறித்தழ லிடையி லாசம் போகட்டு மணந்த தேய்க்கும்.

தோற்றட மருப்பு கொங்கைத் துணைக்குடைந் தருவி ளர்த்து
தோற்றவை யனைத்து மாங்குத் தணித்திட வமைத்து மீது
தோற்றமன் கொடிச்சி மார்கைத் தொடிச்சியார் வீற்றிருப்ப
தோற்றவர் வென்று ளாலைச் சுமப்பது மாபே வென்ன.

மருங்குலைக் கொம்ப ரென்பர் வளர்பசுங் கொடியே யென்பர்
பெருங்கவி வாண ராரு போவை யேனை மாதர்க்
கிருங்கழ லெயினர் மாதர்க் கியற்பெய ரென்ன வென்னாத்
தருங்குளிர் தழைதொ டுத்துத் தாமரைக் குடுத்து வாரால்.

துயர்தரு கணைவேட் டீந்து சோகஞ்செய் தினக்க சோகப்
பெயர்கொலென் றெயின மாதர் பெரிதுளங் கழுத்து மெதப்ப
மயர்வுறச் சிவந்து மேன்மேல் வாளிதாய் வருத்தும் தெம்மோ
செயலைசெய் செயலை யோதுஞ் செயலெவன் செயலை யேயோ.

அழலெரி மடுப்பித் தாங்க ணகருமுன் னகழ்ந்தெ திர்ந்து
பழகுமை வனமுன் வித்திப் பயனளி பல்சு வாழ்வார்
தொழின்முய லெயினர் யாவுஞ் சுடுநெருப் பிருந்த காடு
தழையுமென் றேதுந் தன்மைத் தனிமொழி யமிர்த மாமோ.

எனைநூன் கிழங்கொ டைய வின்னற வாதி யாவ
கானவ ருருந்தி யொன்றே கருத்தினா ருந்தி வள்ளி
கோனையுண் வெப்பர் யாவுங் கோதறச் சிவமாக் கண்ட
ஞானியர் வந்த வெல்லாஞ் சிவார்ப்பண மாக்கு மாபோல். (௯௨)

வேலெனு முதனி லைப்பேர் வேடனோன் றிறுதி யாதி
கோளுறீஇ யமைய வாய்ந்த குலமுதற் குமர வேடன்
கேளிரா யரிய சம்பந் திகளெனக் கிளைத்துப் பெற்ற
மீளியர் மேன்மை யம்ம விளம்புதற் கெளிய தேயோ. (௯௩)

கண்ணப்ப னெனப்ப தோரான் பின்னெனக் கமைந்த மெய்யன்
புண்ணெனக்க மணிவாய் கெக்கை யுமைக்கிலைக் காய தூய
திண்ணப்பெ யான்றமை வாழ்வின் றிருவலா தார மேன்மை
நண்ணப்பெற் றுளார்கு றிஞ்சி நாயினே னிசைக்கற் பாற்றே. (௯௪)

வேறு. பாலை.

புரரி யேமுதற் கரவெனைம் பூருவ மகிட
சுரரி யாற்கொளுஞ் சினைத்தழன் முழுமையுஞ் சூழ்ந்த
பரரி யோருரு வாயவம் பனைத்தியென் றனைக்கும்
வரரி யூர்தியங் கமர்ந்தருள் வழுத்துதுபாலை. (௯௫)

கணைமுந் தாங்கருஞ் சினைத்தழ லுருவினன் காக்கு
மிணையில் பாலையு நன்பதற் பான்முரம் பிடத்தைப்
புணர்பொ ரோர்பொழு தூடற்புமெலங் கதிரினற் புலனைப்
துணைவு மாலைய தல்லதை யுமெனவன் றூங்கும். (௯௬)

இன்ன பாலையி னிறையமுங் கமர்வுறி யேகி
யன்ன பாதவ முழுதுமாய்ந் தபெதி யனைத்தன்
சென்னி மீதுமின் றெரிவதை மணிபொன்பர் தெரியா
பென்னை நாயினி யிசைப்பதவ் வெறிதமுவ் விதிலை. (௯௭)

உடலி னேறுமுழு தொழிக்குய ராற்றன்முற் றுதவுங்
கடமை பாலையஞ் சிறுத்திக்கென் றேதமோர் கட்டுந்
தொடர்ச முலமு னைபொர் தொலைத்துடற் பனைசெய்
திடனை வாமுதிர் வேப்பினைக் களிப்புறுஞ் செறிந்து. (௯௮)

வாகை யாங்கனுக் கருந்திரு விந்தைதமா மகனே
யாகை யாலிவி லமுமடைத் தருள்பெறு கெனைத்தகு
சாகை யாற்றிகழ் தங்கண்மு லத்திற்பா தலம்வின்
போகை யானனைத் தழைப்பது போல்வது வாகை. (௯௯)

பிரிந்து செல்லுநர் தனிமைதீர்ந் தின்பமுட் பெருகப்
பரிந்து மல்குபூம் பாவையர் பஃறொகை காட்டும்
புரிந்த நாயகி சேடியர் குழாமெனப் புருடர்
தெரிந்து மாதரார் தம்மின மெனத்திகழ் குரவம். (எ0)

சுரர்கி லத்தமு தரிதுபல் காவலுட் டுறுமிச்
சுரகி லஞ்சுதைத் திரளைபல் கோடிமேற் றொருத்தச்
சுரரு முண்கெளி தென்பபோற் றத்திரி தருமஞ்
சுரர்ம ருத்தினுஞ் சுவைப்பலப் பலம்பல சொரிவ. (எக)

பொன்னி ளுட்டினைந் தருமலர் பொன்னெனு மொன்றே
யன்ன தென்பெறு மலர்மலை ராடக மரும்பு
பன்னு மாண்கிளிச் சிறைப்பொனுஞ் சுகந்தமும் பாப்புங்
கன்னி காரங்கொப் பணியிள முலையெழில் காட்டும். (எஉ)

மதுர வொண்கனி தாத்திரி யீந்துமுன் வலிய
வதிர நல்கவும் பாலுண வருந்துவ கபோத
மதமு டற்குறு மெவ்வுறு வழங்கினு மறுத்து
சிதமென் றுங்கட காதியுண் மாதவர் சிவண. (எங)

வேறு. முல்லை.

முன்னம் பதினு றுயிரமேன் முல்லை யலைத்துந் றுவரையினி
லென்னும் புவனப் பழிசுமப்ப தெற்றுக் கினித்தாச் சோமுகற்
பன்னுந் தேத்து முல்லையெலாம் பல்கப் புரந்தப் பழிதுரந்தங்
குன்றும் பயன்மிக் குறுதுமென வவண கேதோம் புறுமுல்லை. (எச)

இர வீரை பிரிவாற்றுக் கிளர்பே ரன்பி னுடையானைச்
சார வடுத்தாங் கானிரைக டாமே பொழிபால் குடத்தியர்கை
யார நிறைபல் குடத்தியரா யடுத்து மடுத்தெங் கனும்பாம்பி
யேர வளர்க்கு முல்லைமுத லிறையுட் குறிப்போர்ந் தொழுகுநர்போல்.

கடியோர் சிறிதில் பொற்பூக்கள் கஞல்கற் பகமுந் தலைவணங்கும்
படியோங் கார விதசகித பஞ்சாக் கார்காட் டிதழியெனும்
வடிவோங் கியகற் பகங்கள்பல மல்குந் துத்தோ தநியிதற்கந்
நெடியோ னுழி கிகர்கொலென நிறைபால் வெள்ளம் பாங்கொழுகும்.()

ஆயர் மதிக்கு மண்டர்பல ரங்க லாரிந் திரைப்பல்லோர்
பாய விதழி செருந்திபல்கற் பகமான் றேனு மத்தொவிகண்
மேய பூவைக் குலமரிகள் வெண்ணெய்க் குடம்பால் வெள்ளமடுத்
தேயும் புறவைப் பாற்கடலொன் றென்னு மிறுவோ விதன்பெருமை.

வேலி கடவாப் பிறர்தொட்ட விளைப்பூங் குளத்து நீருண்ணாச்
சீல முடனா யாசகமாச் செறிபுல் லுண்டு குறுமுயலுஞ்
சால விரத நெறியுறுமேற் சாற்றும் புறவந் தனிபுரக்கு
ஞால மகிண னருளினல நவிற்ற லெவனோ மினிப்பிறநாம். (௭௮)

வழிபா டருமான் கன்றினமு மான்கன் றினமு முடன்விளையாட்
டொழியா துகைப்ப மகாரினுமிக் குறமார் பணைத்து மடியிருந்திக்
கழியா வுவகைக் கடறிளைப்பர் கனிவாய்ச் சியரல் வாய்ச்சியர்க
ளிழியா நீத்தோர் களும்வாஞ்சித் திடுப வெனிற்பி னிசைப்பானேன்.

எவனு மின்சொ னிகராவ தென்றுட் கறுத்தாய்ச் சியரான்பா
லுவரா ரழலிற் காய்ச்சியுமேற் றேயா மத்திட் டதுதிரளு
நவநீ தங்கண் டிச்சார நலத்தா லன்றே நினைப்பு கழ்த
லிவணோர் குதமப் பெருமையுமென் றெரியிட் டுருக்கி யின்புறுவார்.

அடரு மிடரார் புரிந்தாலு மாசூழ் வலத்தார்க் கபிவிருத்தித்
தொடர்பே யாமென் றிடலோர்ந்தாந் தொறுவி மார்காய்ச்சான்கீர [யா
முடனே ததியாய்நனிசுவையுற்றுடைமத்தினில்வெண் ணெய்ச்சுவை
யிடா வுருக்க நெய்ச்சுவையா யின்றி யமையாச் சிறப்பமைந்த.

அர்க்க னுதவித் திதுகைம்மா றென்கொன் றண்ட ரவண்விளக்கு
மூர்க்க மாட மாடகமுன் முதிர்பச் சைகணீ லம்பொன்முதல்
வர்க்க மிரவி யிளைப்பாற வதிபல் விரவி யெனக்குவிப்பார்
சொர்க்க மிணையோ பொன்னென்றே சோப்பே திகட்சேயிடமாமால்.

உலகம் புரப்போன் றனைப்பொதுநீத் தொருதன் றனக்கே சிறப்பாக
நிலவ வகுத்துக் கொண்டொளிருநிலனென்றேவைந்திணைத் துறையுட்
குலவு மிருத்த லகப்பொருணூல் கூறிற் றிதனுக் கென்றுபெரும்
புலவ ரிரைக்கும் பெருஞ்சிறப்பிற் பொலிவ தனைய பூம்புறவம். (௮௩)

மலரும் புறவத் தண்டர்குடம் மாயி லுதிப்ப வானுய
ரலகின் றரிய தவம்புரிந்தோ ரனைய புறவின் றவமெளிதோ
குலவும் பெருஞ்சீ ரானுயர் குழவி னோசை கேட்டருளி
நிலவொண் சடையோன் விடையிவர்ந்து நேரே வரும்பேற் றினதம்ம.

வேறு. மருதம்.

பொன்னுலகைத் தருச்சுதன்மை புரியமர ரமகளிர் போற்றுஞ் சீர்த்தி
மன்னமுலைச் சசிசிந்தாமணிமுதற்பன்னிதிபோக வகையில்வாழ்க்கை
தன்னினுமிக் கார்வமுறத் தடமலர்க்கண் குளிர்காட்சி தாவா தென்று
மன்னுவளத் தெனச்சுரர்கோ வதிதேவாய் வழாநிலைத்தும்மருதமாதோ.

ஊடுதல்கா மக்கின்ப மெனுஞ்சுருதி யிலக்கணமீ தாண்மையேயென்
றீடுபெற நிதரிசன விலக்கியத்தாற் றேற்றுநலி ஷிருவே றூட
னீடுதிணை யாய்வளஞ்செய் நிலையினுல கயிவிருந்தி நியமாய் நின்று
கூடுதிணையிம்மருதக்குளிர்திணையே லிதன்பெருமை கூறற்பாற்றே.

பொன்னிநதி யெனும்பெருஞ்சீர்ப் பூங்கொடியொன் றரிசொனதி முதலா ப்போதும், பன்னதிய பெருங்கிளைகள் பற்பலவாற் சிறுகிளைகள் பரம்ப நீட்டித், தன்னிகர்பல் வயறழைத்துத் தருபைங்கூழ் நிறைபூத்துக் காலி யாதி, மன்னியபற் பலவகைய வளம்பழுத்தே யெஞ்ஞான்று மல்காநிற்கும்.

இன்னமுதம் பருக்கிவளர்த் தெடுத்தினிது பாராட்டி யினிய ஹூட்டித் தென்னருணற் றாயெனவே சென்னிறைகாவிரிமுலைத்தாய் செவிலிமைத் தாய், மன்னியபாராட்டுறுதாயூட்டுறுதா யைவருந்தாய் வழிச்சென் றாபோற் றன்னிடையை யாறுகடாந்தனித்தனியேகிளைத்தொழுகத்தாவாதோங்கும்.

வேறு.

உலகெலா மளித்திடற் குரிய பேரரு
ணிலவுமா வெள்ளமே நிகர்செல் காவிரி
வலனிமிர் தருபிர வாகந் தாயினை
யிலகநேர் கண்டசே யெனக்கண் டார்ப்பபால். (அகூ)

கண்டிடு முழவரக் கவேரன் மாமக
ளொண்டொடி நிறைபய முணர்ச்செல் வேயென
மண்டொலிக் கிணையெழ மருவிச் சூழ்ந்துசென்
றெண்டரு கால்களி னினிதி யக்குவார். (கூ0)

அருள்புக நெகிழுமெ யன்ப ருள்ளொளைத்
தருபுனன் மடுத்தனு மள்ளர் தண்வயல்
வருகமர் விரணந்நீர் மருந்தொ ழுக்கறு
மொருவியாங் கொழிந்துசா னுறக்கு ழைந்தனர். (கூக)

பாவனை யுறைப்பவுட் பயினு மைந்தெழுத்
தாவபன் முறையெழு தன்பர் போன்மெனக்
காவுபல் பகடல நுகத்தின் காற்பிணைத்
தோவறு களமராங் குழுவர் பன்முறை. (கூஉ)

ஐந்தெழுத் திடையறு தமையும் ஆமனத்
துந்தொளி யெழுதலி னுழுத சால்வழி
வந்தெழு மணிகளும் வயம்பின் மாறையு
மிந்துறழ் வளைகளு மிமைக்கு மெங்கணும். (கூங)

கமமொழித் திதம்புரி காலு மேலலத்
தமாகி தத்தினு மபேத நெஞ்செனக்
கமையென வோர்தரக் காட்டு மாண்பினைப்
புமைசெயன் முறையெனப் பரம்பு கைப்பரால். (கூச)

இளகியைத் தெழுத்தமைந் திலங்கு நெஞ்சினிற்
பளகிலன் பசைவற நிறுவும் பான்மையின்
வளாநிறை பற்பல சாலி வாலிய
முளையெழ விதைத்தனர் மூசு மள்ளர்கள். (கூரு)

அன்பினில் வேறலா தவிரு மொண்சிவ
மின்புற வெழுதலி னெழுந்த வெண்முளை
பின்புருத் திரன்முனோர் பிறக்க மேவலின்
முன்பித ழொன்றிரண் டாக மொய்த்தன. (கூசு)

பருவமுற் றன்பெடுத் தமல பாதம்வைத்
தருமையின் வளர்த்தலி னனைய நாற்றினை
வருபுனற் கழனியின் மள்ளர் மாதர்கள்
பெருகிய வாழ்த்தொலி பிறங்க ஊன்றுவார். (கூஎ)

அருட்புன லிடைவள ரன்பின் றேற்றம்போற்
றெருட்புன லிடைவளர் திகழ்பைங் கூழினை
யிருட்பழ வாதனை யேய்ப்பச் சூழ்ந்தன
பொருட்படா திரிதரப் புணரும் பல்களை. (கூஅ)

அருண்முறை நவிலுமைந் தெழுத்தென் வாளினா
லிருண்மல வாதனை யரித்தல் போன்மென
மருண்மது நுகர்தரு மள்ளர் மாதரத்
தெருண்மலர் வயற்களை சிதைத்த லாற்றுவார். (கூகூ)

ஈசனா ரருள்வசத் தியைந்திட் டேபழ
வாசனா மலந்தெறு வாரின் மாந்திய
நேசநா டியமனு வசத்தி னின்றெழு
தேசநாண் மலர்க்களை சிதைப்பர் யாங்கணும். (க00)

பளகொருங் கொழிதலும் பரவு மொண்சிவ
விளையனு பவமுளே விரவி நிற்றல்போல்
வளர்பசுஞ் சாலிகண் மள்ள ரோம்புறக்
கிளரும்வெண் கருவகங் கிடைத்தெ ழுந்தன. (க0க)

## சூதவனபுராணம்.

கருமுதிர்ந் தெழுந்தநெற் கதிர்கள் வெண்மைமுன்
மருவியொண் பசுமைபின் செம்மை வாய்த்தெழு
தருமொளிர் சத்துவந் தமசு ராசதந்
தரனரி யயன்முறை யவிருந் தோற்றம்போல்.

தனிநுக ரனுபவந் தாவில் யாவர்க்கு
மினிதுற விரிந்தரு ளியல்பி னுட்கரு
நனியெழீஇ நெற்கதிர் நலக்க முற்றிய
பின ரரிந் தரிக்குவால் பிறங்கு போர்செய்வார்.

அரிதனக் கரியெனு மசலஞ் சாய்த்திட்டோர்
கருமுகிற் படைஞர்புக் குழக்குங் காட்சிபோல்
விரவுநெற் போர்கள்பார் வீழ்த்த மள்ளர்சூழ்
நிரைசெறிந் துழக்குவ மேதி நீள்குலம்.

அழுக்கினை யழுக்கினு லகற்றல் போன்மல
வழுக்கினை மாயையா லகற்றல் காட்டுவ
வொழுக்கிய மேதிக ளுழக்கி யோய்ந்தபின்
குழுக்கொளும் பலாலமுற் கோது நீக்குதல்.

தொழில்பல கருவிக ளோடு தோய்ந்தினைத்
தொழிபினைப் பாரியா ருயிர்க ளுற்றெனக்
கழிபலா லம்முதற் கடிந்த கற்றிய
வழியொளிர் நெற்குவால் வயங்கும் யாங்கணும்.

ஈடிலா ருடனுறை யிரியுந் தம்பெரும்
பீடெனச் சிற்றினம் பிரிந்து நல்வினைக்
கூடுநர் போற்பதர் நீத்துக் கோடொரீஇ
நீடுநெற் குவால்கள்பன் னிலையிற் சார்வன.

ஆறிலொன் றரசர்கொள் ளீதி யான்மறை
யாறிலொன் றறனிறைந் தனைத்து மோம்புநல்
வாறிலொன் றியநன்றி யயர்ந்தி டாமன்மு
றாறிலொன் றரசருக் களப்ப ராங்குளார்.

ஐம்பெரும் பாகநெல் லினைத்துங் கொண்டுசென்
றைம்பெரும் பாகமா யவைமுற் றுய்ப்பராற்
றம்பொருள் பாத்துணத் தகுமெ னூற்பொரு
டம்பொரு ளாகவே தலைக்கொள் வாழ்வினோர்.

கன்னல்கண் மஞ்சள்பல் கதலி யாதிய
துன்னுமே னிலமுதற் றொருகுபஃ றுனிய
பின்னிலம் விளைவன வெல்லை யில்லன
வன்னமுற் றுறவிரித் துரைத லாவதோ. (கக0)

அனைத்துல குயிர்நிலை யாக மல்கியே
யினைத்துயர்ந் தொளிருமிவ் விளைய தண்பணை
யுனற்கருந் திணையெனி லோர்த லெங்ஙன
மனக்கொள நிறைபெரு வளனெ னாமரோ. (ககக)

வேறு. நெய்தல்.

உததி வேந்தனென் றுரைமையுல குரைப்பமுற் றுலகுக்
குததி மீவதிவ் வுததியே யாதலி னுறைதற்கா
முததி மோம்பினைப் பெயர்நிலைத் தாறுமென வருண
னுதக நோக்கிவீற் றிருப்பது நெய்தலி னுதகம். (ககஉ)

பூதி கண்டிகை முதற்சிவ சம்பந்தப் பொருளி
னோதி பூசையாற் றன்பர்போற் பாதரவ் வருண
னாதி முட்புனை நிழற்றனி யூன்றியவ் வம்பற்
கோது சேர்விழா வெடுத்துவேண் டினபெற் றுவப்பார். (ககங)

இரங்கு தன்பத்தி னிறுதியே யின்பெனப் பிரிந்தா
ரிரங்கு மித்திணை யெய்தினா ரோற்றிருந் திரங்கி
னிரங்கி மேற்கொளு மீசனென் றெண்ணிமுன் டங்க
ளிரங்கு வண்டெடுபிற் கண்டிகை நீறுபூத் திலங்கும். (ககச)

புன்னை நீழலிற் கெடைாற் சிறுமியர் புணரி
மன்னு சிற்றிலைச் சிதைப்பவள் வருந்திக்கம் மார
மன்ன வேலைமேல் வீசலுங் கொடுசெலு மன்ற
தன்ன தொண்பொரு ளறிற்கொளத் தாழ்க்குமோ சலதி. (ககரு)

பசி யாமுறு முயிர்க்கரு ளிறைவனே வலைஞ
ரூசி மீன்கவர்ந் திடுமெனக் கடாகொடுன் றலைமேற்
போகின் மீதுநீஇப் பாதவர் தாதையுமீன் சால
* மாசி வீன்பல சாலங்கள் வீசுபு வலிப்பார். (ககசு)

விழுவிலைய பொய்ப்பொனாப் படுகட லுடன்விரா யாற்றல்
கெழுமி நற்றிரூற் காண்டுமென் றலைஞர்மேற் கிளர்ந்து
முழுத கன்கரைக் குவித்தபஸ் பீனெலா முதங்கூடர்ந்
தெழுதலைச்சிய குணக்குவர் மேலுமவ் விலைய. (ககஎ)

* மாசு - வலைமணி.

துறைக டோறும்பன் மரக்கலத் தொகையினுட் டுதைய
நிறைபொ ருட்குவால் கொணர்ந்துகைத் தோணிக ணிகழ
வறைக டற்கரை யளிப்பமா ணவர்குலக் காழ்ந்த
பொறைக விப்பொரு ளெடுத்தரு ளாரியர் போல. (௧௧௮)

உருவ நிட்களத் திற்கய லன்றென வுணர்த்துங்
கிருத காடினி யத்துட னெண்ணிய கிளையாய்
மருவு கென்றுகொ லுமணீரங் குவரிநீர் வாக்கிப்
பெருக வாற்றுமுப் போங்கலைப் பாங்கரும் பிறங்கும். (௧௧௯)

என்ன தேத்தரும் பொருளொரி யியலும்பல் கலைத்தாற்
றுன்ன கன்கரைக் குவித்தெலா நிலங்களுந் துதைந்து
முன்னி யேற்பநா டொறுங்குறை வறத்தரு முதன்மைத்
தின்னி லத்தியல் பென்னிலா ரிதற்கிணை யிசைப்பார். (௧௨௦)

எம்மை யாளரு ணம்பிபோற் றநிபத்த ரொறுஞ்சீர்ச்
செம்மை மாமணி யுலகெலா மொளியுறத் திகழ்ந்து
தம்மி யற்குலத் தவதரித் திட்டமா தவஞ்சார்
நன்மை யாளரிந் நிலத்தவர் பெருமையார் நவில்வார். (௧௨௧)

திணைமயக்கம்.

குன்றி ளந்திணைக் கதிர்நுகர் குரங்கங்கொற் றலைதன்
மன்ற ளிக்கலை யூர்தியை யினமென மருவுந்
துன்று திண்பர லுண்புற வமையினஞ் சொரியா
நின்ற வெண்மணி பரலெனச் சென்றுறு நிற்கும். (௧௨௨)

வரையி ளஞ்சிறு மறியுகைத் தான்முலை மடுக்கும்
வரையு ழைப்பொலி முலையுறும் வனநிரை மழவு
வரைமி சைந்துசென் றும்பல்கண் டெயில்வன மருதம்
வரைய கின்னிழ லுறங்குபிக் குஞ்சுவரு மும்பல். (௧௨௩)

அமைவெ டித்தெறி மணிவிரைந் துணாங்குமீ றுருங்
கமைகொ டிக்குலத் துதைப்பவின் பறந்தாறுங் கழைமே
லிமிர்பொற் கோங்கிடைச் சியர்க்கொளிர் காதணி யீவ
நிமிர்பொற் கொன்றையம் பணத்தியர்ச்சனைத்தொழிலிகழ்த்தும்.

உழும்ப கட்டினை யோட்டெ நெல்லியொண் கனிகள்
வழங்கும் பூகதந் துவர்க்கனி மறவருண் மகிழ
வொழுங்கு மீந்திருங் கனிதரும் பாத்திய ருவப்ப
முழங்கு வாரிமீ னெறிவன மறத்தியர் முகப்ப. (௧௨௫)

முல்லை யான்பொழி பால்புகு முளரியந் தடத்து
ளொல்லை வாளைதாய்ச் செருந்திவீ யுகுப்பவவ் வுறுபால்
வல்லை யத்தட மிரப்பிவா ரிதிப்புலான் மாற்ற
வில்லை மாலெனக் காசைமே லலைவளை வீசும். (கசு)

தாழை யின்கனி தகர்ப்பவீழ் மாங்கனிச் சாறு
வாழை யின்கனிச் சாறுமுன் னுழுற வளர்முட்
டாழை தாறுகுத் தாங்குநோக் குநரொலாந் தவள
வாழை யாதியென் றோதிய விம்பிதம் வழங்கும். (கஎ)

வேறு.

எண்ணுறாப் பொன்கொடுத்தா ளிசைபழிக்கப் புகும்புகை ளியம்பு வாக்கிற்
றண்ணளிசேருங் காவிரியே தார்வேந்த னுஞ்சோழன் றனே யென்று, மண்ணுறை
யுஞ்சோழ மண்டலமே யென்றுமுறை வருமே லெந்த, விண்ணுறும் பாவு
பிந்த மேனாட்டின் பெருமையெம்மால் விளம்ப லாமோ. (கஅ)

திருநாட்டுச் சிறப்பு முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் (கஅ.)

---

# திருநகரச்சிறப்பு.

வேத மூன்றிடை விளங்கெமர் வேதமூ வேந்தர்
சோதி நாட்டினுட் சோழநா டதனிடைத் துலங்கும்
சூத கானன மதனிடைக் காண்டமே துணையு
மோது சூத்திரஞ் சிவாலய மைந்தெழுத் தமைகோன். (க)

உலகெ லாநிறைத் தொளிர்முனி வாரொரா பொருங்கே
நலனெ லாமெனி தருள்வதின் நகரென நணுகி
நிலவ லனை வாதசா குலமுனி நிவாசத்
தலமென்றுமெழும் பெறத்தகுந் திருவுசாத் தானம். (உ)

அகில லோகத்து மகிர்சில தீர்த்தங்க ளனைத்து
மகில மாமுனி வரும்புகுந் தமைப்பவந் தாங்கே
சகல போகமோக் கங்களுந் தந்துவாழ் தலினூற்
சகல தீர்த்தவா சியபதித் திருவுசாத் தானம். (ங.)

வேறு.

வார்கொண் டருமை காட்டியவா வளர்க்குஞ் சுபயோ தரக்குடைந்து
வார்கொண் டிடாமுப் புடையிளநீர் மல்கப் பொறையாற் றிலாங்கலிகள்
வார்கொண் டோடி நெடுவானின் மலிநா ணச்ச முடனொங்க
வார்கொண் டளிக்கும்பயோ தரநீல்வார்கொண் டெனச்சூழ்ந்துடனுதவும்

மண்ணின் மடவார் முலைக்கொவ்வா மரபினெமைத் தாழ்த்துநரெவரோ
பெண்ணின் மடவார் தமுட்டேவ வியல்பிற் பெருமை யெழின்மாதர்
விண்ணின்மடவார்முலையொத்தேய்விழுப்பமுடையேமெனக்களித்தா
குண்ணின் மடவா ரிளநீர்த்தெங் குவணை முழுதுஞ் செறிந்தாமம். [ங

தேவ வழிபா டாதியபல் செயல்கட் கெமையின் றமையாமை
மேவு மெமக்கோர் சிறிதொவ்வா விண்கற் பகங்க ளெமக்குமே
லாவ தறிது மெனமேற்சென் றதனைத் தாழ்த்தி மடல்சிறிதாங்
கோவு பாளை நிரையினகு மூவணை மேலு மிலாங்கலிகள். (௧௫)

மும்மைப் பயனுந் தருநிசமிம் மூதூர் செறியு மிலாங்கலிக
ளம்மைப் பயன்வீ டறத்தளிக்கு மதனுற் றெருட்டு தூலளவை
யும்மைப் பயனி னளப்பிலகாய்த் தோம்பு வார்க்குப் பெரும்பொருடந்
திம்மைப் பயன்கூட் டுதெருட்டு மென்றுங் காட்சி யளவையரோ.

இனத்தா லேந்தென் றுரைக்குமள வெய்தும் வான்கற் பகமென்றுங்
கனத்தா லுயிர்க்கு யதிமதுராக் கனிவீர்ச் சூல்பெற் றிலமென்று
மனத்தா லச்சுற் றறல்பெயர்செய் வளஞ்சால் புவிக்கற் பகநிரையின்
வனத்தா ளவோ தரீதெனுமா மல்கிப் பொலியு மிலாங்கலிகள். (௧௬)

ஆற்று நீரை யும்முவராக் காழி நீருண் டதைமாற்றிப்
போற்று நீராக் கெம்பின்மிகும் புனிதச் சுவைத்தாக் கிளாங்கலிபெய்
தேற்று நீர் * மை யப்பொழிற்சூழ்ந் திலங்கு மெவர்தீ யினைமூவர்த்தாற்
றேற்று நீர்மை நல்வினைத்தைச் சேர்ந்து வயங்குந் திறம்புரியார். (௧௭)

அறன்மிக் களிப்போ னெமக்குவமை யாசனவரு ளுதவிபெரு
நிறைபொற் றருக்க ளவற்கோவா நீழல் பரப்ப வானாநாந்
துறையுற் றெழுமன் றலைவன்றுத் தாழை நிரைகண் மேலோடிப்
பொறையுற் றலர்பூந் தருமேனும் பொலியப் பரப்பு நறுநீழல். (௧௮)

ஆய அணைத்தாங் கலர்பூக மாம்பை கரும்பு முதலாவ
பாய விழியா ரித்தவன்வான் பதியம் பகங்கட் கிதஞ்செய்வ
வாய பசிய தன்மையவே மற்றவ் வுடையேம் யாமென்ன
மேயத் திமுற்றிழ் வெளியெல்லா மிடைந்து நிரைந்தாங் கணிசெய்வ. (௧௯)

* மை-மேகம்.

மருதத் தலைவி தனைப்புரக்கும் வானிற் றலைவற் குண்கலத்தி
னருமைத் தவள நறுஞ்சாலி யன்னம் படைத்தாங் ககல்வானின்
விரவிப் பொலிபைங் கதலியின விரிமெல் லிளமெட் டிலையினிடை
யுருமுற்றியவெண் முழுத்திங்க ளொளிகான் றமர்ந்து திகழ்தருமால்.

அனைய மதிமேற் செந்தாதிட் டலராம் பிரங்கே னுருத்தமுதிர்
கனியும் வருகைச் சுளைகதலிக் கனியோ டெருப்பத் திகழ்காட்சி
பினையத் தலைவி பருப்பொடுநெய் பேணுஞ் சுவைய முக்கனிக
ளினிதத் தலைவற் கன்னமுட னிலங்கப் படைத்தா லெனப்பொலியும்.

குளிர்பூ கதமேற் றிரையனறுங் கொடிகள் படர்ந்து தாவன்றியினங்
தளிர்க ளடுக்கி யெனத்துதையத் தாவில் பழுக்காய்க் குலையெப்ப
மிளிர்பூ முகையோர் மெல்லிலையின் மீது பொருந்து நிலைநோக்கி
னொளிர்தாம் பூலம்வெண்சுண்ணத் துடனேங்குதவிற் றெனவொளிரும்.

வேறு.

சுரர்முழு தாண்புக் கீண்டுத் துதைதலால் வெறிதா மன்னோர்
புரமுழு தவற்றை யெல்லாம் புரப்படுதங் கடனென் றேகொள்
ளுரமுழு தருளிக் கோயி லூர்முழு தடுத்து மேற்சென்
மரமுழு தீண்டு சோலை வான்முழு தரணிற் சூழும். (௨௩)

சந்திர காந்த மாடந் தருசுவை யமுத ரூப
மந்திர நாத னீற்று வயங்கொளி மேனி மானு
மிந்திர நீல மாட மிடையின்மா ணிக்க மாடந்
தந்திர மயமா தேவி சாமிமா மேனி மானும். (௨௪)

பொன்மணி மாடம் வானிற் பொலிபவம் புதங்கீழ்ச் சார்த
லன்மணி கிறத்தன் றன்மாட் டயனெழு தோற்றங் காட்டும்
பின்மணி முகின்மே லாகப் பிறங்குமம் மாட மன்ன
மன்மணி மலரோன் றன்பான் மாலெழு தோற்றங் காட்டும். (௨௫)

நாகமீப் பொலிவி லோத னங்களாஞ் செங்கை நீட்டி
மாகமீப் பொலிவா னோரை வருகென வழைப்ப வன்னோர்
தாகமீப் பொலிய வேள்விச் சாலைபுக் கீண்டி நாளும்
யாகமீப் பொலியு ணக்கொண் டின்பமீப் பொலிவர் யாண்டும். (௨௬)

அரிவைய ரல்கு லாக மரைக்குடைப் பதும்பொன் னாகந்
தெரிவையர் மருங்கு லாகந் திதலைமென் முலையு நாகம்
வரிவிழி களுமை நாக மறைந்துறை கடலி னாகம்
புரிகுழன் மிசைப்புன் னாகம் போதுமென் னடைபெண் ணாகம். (௨௭)

கதிர்கிரி மைந்தர் வாகங் கரிபரி முதல வாகங்
கதிர்மிகு மணிய வாகங் காமனுஞ் சமழ்ப்ப வாக
மதில்கண்மே * லெழுவ வேக மறைமுழு துணர்வி வேக
மதிமனத் தொளிரு மேக மாளிகை யிவரு மேகம். (௨௮)

மாடமும் வாவி தாமும் வயங்கர விந்த நேரு
மாடவிர் முகங்கா ரோதி வயங்கர விந்த நேரு
மாடவர் கற்பாய் மார்ப மணிநறுஞ் சாந்த நேரு
மாடவர் கற்பாய் † மார்ப மணிநறுஞ் சாந்த நேரும். (௨௯)

மாதர்வா ளரம்பை யென்ப வண்கவா ளரம்பை யென்ப
மாதர்கூ ரியலுந் தோகை மனங்கவ ரியலுந் தோகை
மாதர்செய் விழியுந் தேனே வளங்கனி மொழியுந் தேனே
மாதரம் பொருவ கொங்கை மலர்க்குழ றருவ கொங்கை. (௩௦)

இளைதழூஉங் குடியெ லாங்கைக் கிளைவழூஉம் யாண்டு மாதர்க்
கிளைதழூஉங் கரம்பு யங்கள் இளைதழூஉம் ‡ வராம்பு யங்கள்
வளைதழூஉ மடவார் கண்டம் வளைதழூஉஞ் சொலிக ளொண்காள்
முளைதழூஉ மனையெ லாஞ்சொன் முளையெழூஉங் கழனி யெல்லாம்.

கள்ளளிப் பனைவாங் கென்றுங் கடிமல ரினங்க ளோயக்
கள்ளக றெப்பெ ருக்கிக் களிமயக் குழல வண்டே
§ கள்ளகம் பயில்வ ரின்றோர் கள்களே யனைக ளாற்றுங்
கள்ளகப் பயில வன்றோர் காளையர் மனங்க ளோயாம். (௩௨)

நிறைமலர்ப் பொழில்க ளோகண் ணீர்பொழி மிலையவென் றுஞ்
சிறையளி யியங்க ளாதி திறங்களே யிரங்கு நீர
நறைமலர்த் தருக்கண் மாட மிலைகளே கொடிய நன்றும்
பொறையின்வாய்த் தலர்க ளேற்றிப் பொலிவுறு முகில்க ளோயாம். (௩௩)

வெறியன மலர்க ளோயாம் விளியிய லருவி றென்றே
யறிவில கடங்க ளோயா மமர்த்தலை யடர்க டாவே
முறிதரல் விருக்க மாதி மூடஞ்சோ திடமாற் கூற்றே
பிறிவறு வினைக்கு மாமே பிணிமுக மஞ்ஞை யோயாம். (௩௪)

---

* எழுவவே கம் எனப்பிரிக்க.
† மார்பம்—ஆகுபெயர். ஆள் தவர் கற்பு ஆய் மார்பம் எனப்பிரிக்குக.
‡ வராம்புயம்—வடமொழிச் சந்தி போல்வதொன்று. முருகேசனென்பதுபோல.
§ கள்—முதனிலைத்தொழிற்பெயர்.

செல்வமிக் குடையார் மாடச் சிறப்பெலா நோக்கி யென்று
மொல்வது புரிது மென்பா ருருத்துமெய் மணிமா டங்கள்
செல்வமே யுலகே ழுப்பாற் சென்றவோ வின்ற வோமற்
றுெல்வமெதங் கெம்மா லம்மா வுரைப்பதொன் பொருட்டெ ருக்கம்

இன்னன வலகி லாத வியல்வளந் துவன்று மிந்த
நன்னகர்ப் பொதுமை யாய நலன்முழு திசைப்பர் யாரே
மன்னகத் திடைப்பு றத்த வலைக்சிறப் பாம்வ ளத்தாட்
கொன்னுமென் னறிவோ விவ்விக் குட * மெனிற் கூற லென்றும்.

வேறு. புறநகர்.

விண்ணி யங்கிளுஞ் சிறையிரு ளரிந்தனன் வேந்த
னெண்ணி யங்கவை † நோற்றெறனுங் காங்கள்பெற் றிவிமாம்
மண்ணி யங்குது மெனக்குல மலையெலா மொருங்கே
யண்ணி யங்குறல் போன்றன வலிர்மணி யிபங்கள். (௩௭)

உலக மெட்டினீற் றும்பல்க ளும்பர்செ லும்பன்
மலமு ளவன தாங்குமா நிலத்தைமென் மலர்த்தார்
மலைய வோர்புயத் தாற்றுமன் னவனாமேல் வகித்தாங்
குலவி யெப்பகை யுந்தெறு மும்பர்வா ‡ மும்பர். (௩௮)

கண்ணி னேர்குவ திகந்தமே முடிவிடங் காணு
விண்ணி னேக்கினு மன்னதே யென்னிலார் விரிப்பா
ரெண்ணி னேக்கியந் நீட்சியு முயர்ச்சியு மென்ப
மண்ணி னேக்குகா ரெனத்தகு மிபக்கள மாண்பு. (௩௯)

முத்தி றத்திப நிலைக்கள மிசைக்கொண்டிவ் முநிவோ
டத்த வெற்புத யாசனத் திருகட ரவிர்கான்
மத்தி நிற்றல்சங் காழிகை மருமமொண் டிருவை
வைத்த மால்கரிக் கருளமுன் வந்தமை வயக்கும். (௪௰)

உவமை யாருமே ரென்பரிங் கூராத வொழுகுற்
றவிர்ம ருப்புவிற் றிகைமின் னறிர்முழக் கசனி
திவள்க டாமழை யாதிய வியனுல திறத்தா
லெவன தாகுமன் ணியங்குகா ரெனுந்திற லிபங்கள். (௪௧)

---

* எனில் என்பது தேற்றப்பொருட்டு; ஆலவாய் சிவனுலகாகு லென்ற
திற்போல.

† அவை அரிந்தனனென்றியையும்.

‡ உம்பரீறு போலி.

இருமருப்பிரு பால்வளைந் திடைக்கர மூலந்
தெரியி பங்கறை மதிமிசைத் திகழ்முகி லெனப்பார்
மருவு காரினைப் பிடியெனப் பிடித்தனர் வாய்விட்
டொருவி லூட்டயத் தோடுமூட் பயமெலா முருப்ப. (௮௨)

வளைந்தி யைந்தவெண் மருப்பினைக் கீழுற மண்மேற்
றுளைந்த சுண்டனேர் கண்டவர் சேய்மையிற் றூய்மை
படைந்த சீருப ராகரா வின்றென்ப வயிர்ப்பார்
விளைந்த வங்கமைந் துணர்த்தில தென்னென வியப்பார். (௮௩)

சண்ட மேனியிற் றாகியிர் மதமழை சொரியுங்
கொண்டல் பற்பல வம்மத வெள்ளத்துக் குழுமுத்
தெண்ட ராதுநின் டகன்றன விபதிலைக் களங்கண்
மண்டு பற்பல சிறைக்கல வாரிதி மானும். (௮௪)

வேறு.

ஆரங்கமல் கரிவலி யடர்க்கு மாற்றல
*குரங்கம துளைசிது பிதப்பிற் கொண்டன
தரங்கமன் னிரையெனச் சாற்று சால்பின
துரங்கமந் துறைவிசை துலைதவ பற்பல. (௮௫)

குலமகண் முகமெனக் கவிழ்ந்த கொள்கைய
நிலையுற வகன்றெழி னிமிர்ந்த நெற்றிய
வலைவினைப் படைப்பவ னமைந்த வச்சென
விலகுறு நாசிய வெண்ணிலக் கந்துகம். (௮௬)

பனிக்கிளிற் கருமணி பதித்த வைத்தென
விளங்கிரு விழிகரு செய்தல் வீழ்வன
வளங்கனி யாம்பைய மலரி னீண்டம
வளங்கனி செவியின வப்பிற் கோடகம். (௮௭)

மாந்தளிர் காலின மார்புங் கண்டமும்
பாந்தளொண் படமெனப் பகரும் பண்பின
போந்தெதிர் பகையுறங் குருதி போகப்பாய்ந்
தேந்தெழிற் குறத்தின வெண்ணிற் பாடலம். (௮௮)

வீதிமண் டலமுதல் விரிய தீவொன்பா
னேதரு சாரிமுற் றியைந்த வைங்கதி
யாதிய கதிகள்பற் பலவு மார்ந்தன
கோதறு குணத்தன வெண்ணிற் குந்தமே. (௮௯)

* குரங்கு முதனிலைத் தொழிற்பெயர்.

எட்டிடம் வெளுத்துமுற் றிலக்க ணம்பெறு
மட்டமங் கலமிட மைந்தில் வெண்மைவாய்ந்
திட்டஎ பஞ்சகல் யாண மென்பன
கட்டழு கமைந்தன கந்து கம்பல. (௫௦)

வெரிந்மிர் பல்லண மிதவை யும்விழி
யிருகடை மறையத ளெனுஞ்சிற் றுமையும்
புரையில்வால் வாால்களும் புரோத ளெண்டுமப்
பரிகளா தரங்கமென் பான்மை தேற்றுமால். (௫௧)

தெய்வத மணிமுத லாகச் செப்பிரண்
டைவிதச் சுழிகளு மவ்வவ் வெல்லையுற்
றெவ்வகை நலங்களு மினித ளிப்பன
வவ்வகைப் பரித்திற னறைவ தென்னினி. (௫௨)

ஒருருட் டேரினை யோட்டி யும்பரி
னேனொனும் பிறர்சொலி னிழுத்தி மேருவை
யோரியற் புலமையோ ரொப்பின் றென்னுமா
சிரிய தேரினஞ் சிவனு மெண்ணில. (௫௩)

மிசையுலா வமரரும் வேறு ளார்களு
நசையுலாந் தம்பதி ரதங்க ளேயெனத்
திசையெலாம் பரந்துமேற் கடந்து சேணொளா
மிசையெலாம் விரிந்ததே ரெல்லை யில்லன. (௫௪)

ஒத்தன மெனக்களித் துலாய வெற்பெனாங்
கொத்துழு சிறையரிஇ வீழ்ந்த கோனகர்க்
கொத்தெழுந் தணிசெய்வ நன்றி யோர்ந்தபோற்
கொத்துறு மணிநிரை குலாய தேரொலாம். (௫௫)

ஒய்வற மறுகெலா முருளிற் செம்பொனே
தோய்வுறப் புரிந்திம்பர்ச் சுவர்க்க மாக்குமான்
மீயெழு தூளிபொன் னுலக மேவுவித்
தாயதை வையமே யாக்கும் வையமே. (௫௬)

இந்நக ரிரதநோக் கினர்மற் றேனைய
வென்னவு மருவருந் திதயத் தோர்பொரு
ளென்னமுன் வையமென் றிசைப்ப வப்பெய
ரன்னவைக் காகிப்பின் பொதுமை யாய்த்தென்ப. (௫௭)

விதிரத மரிரத மாதி வெட்குறு
மதிரத மாரத வகைக ளோயவண்
வதிரதஞ் சமரத மருத்த மன்பெயர்
பொதிரத மாங்கணைப் புறத்து மின்றரோ. (௫௮)

வளையுறு நேமியங் கையின் வாய்ப்பத்த
லுளையொரு நிறத்தின்மா வுவந்து மேற்கொளக்
கிளர்தர வானமீக் கெழுவு தேரினை
மளவிலர் நெடியவ ரென்ன வாங்குறும். (௫௯)

பொன்னினு மணியினும் புனைந்த தேரினை
மின்னினுங் கதிரினு மமைத்த மெய்யினை
வென்னினு மியைவதன் றென்ம ருளெனின்
முன்னினு மொழியினு முற்று நீரவோ. (௬௰)

வீரமே யுருவினர் மேற்கொள் போர்க்கலி
ஞரமே புயத்தின ரசைவற் றென்றும்வாழ்
நீரமே யளத்தர்செல் வினைத்தை வீட்டுகெம்
பீரமே யுரையினர் பெருக்க மேயவே. (௬௧)

எத்திசை வீரோ யெனினும் போர்க்குறி
னத்திசை தமதிசை யாக்கி யன்னவ
ரித்திசை யெமதிசை யெனத்தெ ருளுறா
தத்திசை யுறுத்திசை காண்ப ரங்குளார். (௬௨)

தைத்திட விடுகணை தவறிற் றம்முடி
தத்திமன் வீழ்ந்தெனத் தரிப்பின் மானத்த
குய்த்திடு கணைகளே முகை முடுகு
வைத்தநெஞ் சன்னுமுன் கடக்கு மற்றவை. (௬௩)

விடுத்திடு மநுவுமக் கணைகள் மீண்டுகை
படுத்திடு மநுவுமுன் னும்பல் பேதமுந்
தொடுத்திடு மொய்வொரு தொடைப்பல் கோடிக
ளெடுத்திடு விகற்பமு மெளிதி னேர்ந்துளார். (௬௪)

முன்னருய்ப் பனவிரு பான்மு டிக்குவ
பின்னருய்ப் பனமநு வெருவும் பெற்றிவா
னன்னருய்ப் பனமுத னன்கு ணர்ந்துளா
வென்னருய்ப் பனவுமே யின்றென் சீர்த்தியார். (௬௫)

வாளமர் வில்லமர் மருவு மல்லமர்
தோளமர் வலியினிற் றொடங்கும் பற்பல
கோளமர் வகையெலாங் குறிக்கு மாணியென்
றாளமர் வீரர்முற் றடுக்கு மாற்றலார். (௬௬)

இயற்கையே யிமைத்திடா ருயர்ச்சி யென்னவா
முயற்கருஞ் சமரிலவ் வும்ப ரும்புகழ்
செயற்கையி னிமைத்திடாத் தீர மேபுரிந்
தயற்கரி தாயதென் றதைவி ளக்குவார். (௬௭)

தெவ்வுரத் திருவுகோல் செலுத்தல் போலநட்
பொவ்வுரச் சந்தனத் தாங்கு ணர்த்துசொல்
கைவிலிற் கோல்விடுத் தெழுதிக் காட்டிமீண்
டவ்வுரை கொடுவர விஞ்சை யாற்றுவார். (௬௮)

மறுவிழுப் புண்படா வைக ருமெலாம்
வெறுவிய வென்னவே துணியு மேன்மையாற்
றெறுபகை யின்மையிற் றம்முட் டெவ்விணின்
றுறுசமர் விகற்பமுற் றுவப்பி னுற்றுவார். (௬௯)

வடவையா ரழலுமா மறலி யாற்றலுங்
கடல்வயி றழலமுன் கறித்த நஞ்சமு
முடனிரை யிடியுமோ ருருக்கொண் டென்னவே
மிடலுறப் பொலிவராங் கோடுரார் வீரரும். (௭௰)

மழுப்படை யுடம்பிடி நேமி வச்சிரங்
கழுப்படை குந்தம்வில் வாளி கப்பண
மெழுப்படை தோமர மேதி யாதிய
விழுப்படை நிறைபல சாலை வீறுவ. (௭௧)

விற்றொழி லிரதமா வேழ மூர்தொழின்
மற்றொழில் வாட்டொழி லாதி வான்றொழி
னிற்றலுங் கற்குநர்க் கியைந்த நீள்வெளி
நற்றலம் பற்பல நயப்ப மல்குமால். (௭௨)

கசைகுசை கல்லணை கச்ச மாதிபு
ரசையில கடிக ளங்க ளங்குச
நசைதரு கிம்புரி முதன விற்றியாங்
கிசைமிகு கைவலா ரிடங்கள் பற்பல. (௭௩)

அச்சுருள் பார்நுகங் கால்க ளாங்குய
ருச்சிமேற் கோப்பொடு மொளிர்வி தானங்கள்
குச்சமேற் போர்வைபல் கொடிக ளாதிசெய்
தச்சர்முற் றொழில்வலார் தகையி டம்பல. (எச)

மெய்ச்செறி தருபல விதருப் பாயம்வில்
கைச்செறி யாதிய கணைக ளாதிய
தைச்செறி படைக்கிடு தடறு முற்பர
விச்செறி தாப்புரி வியலி டம்பல. (எரு)

இன்னன பற்பல வெல்லை யில்லன
வென்னிலிப் புறநக ரிசைக்கற் பாலதோ
பன்னரு மிடைநகர்ப் பரப்பின் பல்வளந்
தன்னிலுஞ் சிறிதொரா மரபிற் சாற்றுதும். (எசு)

வேறு. இடை நகர்.

பன்மணிச் செய்குன்றம் பாசிள மாத்தண்கா
நன்மணித் திரைவாவி நறுவிரை மலரோடை
மின்மணித் திகழ்மேடை வியன்மணி நீண்மாட
மென்மணிக் கரங்கூம்ப வெல்லையில் லனமல்கும். (எஎ)

பளிங்கினிற் புரிகுன்றம் பைஞ்சிறை மயிலும்பர்
விளங்கிய வமர்தோற்றம் விரிநில முழுமதியங்
களங்கற வருள்கென்றுக் கண்ணுத றனையுன்னி
புளங்கனி யுறநோற்றுங் குற்றென வொளிர்தருமால். (எஅ)

அன்னதன் புடைவாவி யலையெறி தாளிணை
மன்னுதம் மிறைபாங்கர் மருவுடு நிரைமானுந்
துன்னுவெண் மணற்குன்றிற் றுதைமல ரிதழிவிடை
யின்னவற் கருளவுற தேசனுற் றெனத்தோன்றும். (எகூ)

மேனிலை யமர்மின்னார் விரிகுழல் புலர்த்துமகிற்
றூநறும் புகையவர்நாஞ் சுவணவண் பொடியோடும்
வானெழு தருதோற்றம் வார்குழற் குளநாணி
மானிமிர் மினலோடு வல்லிபைந் தோடுதல்போன்ம். (அ0)

மடவிய ராடவர்தா மாதுற வெதிர்வீசுஞ்
சுடர்கெழு பலவண்ணச் சுண்ணமங் கவாடிக்கீழ்ப்
புடவியின் வளைந்துறைப் புருவவிற் குடைவானத்
தடநெடுஞ் சிலையன்னார் தாள்பணிந் துறல்போலும். (அக)

நாற்புற மலர்ந்தொளிர்செந் நளினங்க ளிடையடையின்
மேற்படர் வளையொன்று மிளிர்வதம் மடநல்லா
ரேற்புறு முகத்தெழிலெய் தியமதி கனனுப்பட்
பாற்படு கமடம்மேற் பயிறவத் தியல்காட்டும். (௮௨)

மீயுயர் மாடமிசை மெல்லியர் மிகவூடி
நாயகர் பணிதோறும் நளினங்க ணணிசிவந்தார்
காயமுன் வருபணிக்கோள் சாண்டலுங் கடிதோடி
யாயவர் புயத்திறுக வணைத்தகை நெகிழார்பின். (௮௩)

பவனவா ளரியைவெரீஇப் படர்பிடி யனையார்தம்
மெவனவா ளரிமார்பத் திணைமருப் பால்வடுப்பப்
புவனமுற் றொருங்கீன்ற புனிதநா யகிகாஞ்சித்
தவனமார் பெமக்கருள்கே சரிநனி வாழ்கென்பார். (௮௪)

சிறிதுநம் முலையொவ்வாச் சிறியகின் றலையெடுப்பீன்
டறிதுமென் றடிப்பவெழுந் தம்முலை மிசைமோத
மறுவனு மடித்தடித்தே மடைந்தையர் பந்தாட
லெறுசம ரிளையாம லிருவர்செய் திறம்போலும். (௮௫)

கைம்மண மலரொன்றுக் கடுகுபன் னிறவண்ட
ரம்மல ரெறியவுமே லலமரு செயலனும்பா
லெம்மவர் செயல்போன்மென் றிளையவர் சொலமடவார்
தம்முக நகையாடத் தாங்கழங் காடுவாரல். (௮௬)

எம்மனை யூசனும தெழில்வளர் கயிறூர்த்திட்
டம்மவொர் கணநீங்கா தாட்ஸ்கண் கூடாக
வெம்மவர் தெரிதற்கோ விதுசெய லெனக்கொண்கர்
தம்முடி ஊனியாட வாடுவர் தடங்கண்ணார். (௮௭)

இளமரத் தண்காவுக் கீர்ம்புன றரும்வினைஞர்
விளைபுனல் பாய்ச்சிலயில் வீரமென் னெனவியப்ப
வளமதிச் சிலையால வாலங்கண் மதியெதிர்கால்
பளகறு புனல்பெருகிப் பாய்வன நாடோறும். (௮௮)

இனவளிக் குணநல்கா லிவற்றன்மை நனிநோக்கிச்
சினமிக நம்பொழிலைச் செறலிவண் வருகின்ற
தெனமக பதிதானூ ரெழிலியை யுய்த்திடவக்
கனமிசை தடுத்தாங்குக் கவிவன பொழிலெங்கும். (௮௯)

மலர்செறி வாவியினின் வாவிவிண் ணெழுவாளை
பலமுறை மோதமிசைப் படிந்தவம் புதங்கள்வெரீஇ
விலகுறு மப்பொழிலெவ் வியனலக் கெதிர்செய்தாங்
கலர்மது கனியாதி யட்டவை பட்டமெலாம். (௯0)

தம்முரு நிறங்கவருந் தபனியந் தனைவெருண்டாங்
கிம்மெனத் தகர்ப்பார்போன் றிடித்திடு பொற்சுண்ணத்
தட்மணி பொன்றுகை யவர்குழற் புகைசூழ்வான்
விம்மித முறவிருள்சூழ் வியலிட மெனத்தோன்றும். (௯௧)

வேறு

ஒண்டொடி மகளிர் மைந்த ரோடிநீ ராடு காலை
மண்டுபல் சேல்வ ரால்க மடக்குளிர் தடங்கம் பாதி
கண்டிரிந் தொளிப்ப வம்மா கதிர்த்தெழு பகைமே ராற்றல்
விண்டிடு மெளியர் செய்யும் விதமிதன் மேல்வே றென்றே (௯௨)

பங்கயம் வலயம் *வீசி பாசிலைபாங் குவளை யாம்பல்
செங்கிடை வனைய னைகஞ் செறிதல்கண் டிளையா ளென்னே
பொங்கலிற் சிவிரீன் டிற்றே மெண்ணிலர் செறிநின் றுமொன்
சங்கைகொண் மனத்தர் தத்தந் தலைவரோ டுடிருப்பார். (௯௩)

அங்கிளை வாகொற் குங்கா றைநிருநர்செய் செயமே போலப்
பங்கய முகம லர்ந்து பனிமலரின் முறுவல் காட்டித்
தங்கடை மாக தத்தா சனைமலிக் ஆடற்பொ டிப்பிற்
பொங்குபுற் புகந்தெ றிந்து பொலிவன குடைதடங்கள். (௯௪)

மயிருநர் கொங்கை கேசிங் குழுநிர்கொ ளென்ன மைந்த
ரயன்மிருநர் கொங்கை யம்பு யத்தரும் பென்று பற்றிக்
கயிலுரு மையின்மே லிர்ப்பக் கனன்றிரு வோருஞ் சீறச்
செயறைக் கவன்று நாணித் திருத்துவ ரிருவர் தம்மை. (௯௫)

நினைந்தருன் டுளிற் சேருன்ற மெய்ப்பெலா நாணி மீண்டெட்
கனைக்கெழு திரைதா மென்று நினைந்தனைக் கனைக்கிட் டந்தோ
வனைந்தது மலைகொண் டோட மடவியர் வாட மைந்தர்
புனைந்தகொன் றுடுத்தின் பாரப் புயந்தழீஇக் கரையிற் செல்வார்.

* வீசி---திசை.

தளரிடை வளர்மென் கொங்கைத் தையலார் தங்கட் கெல்லாம்
பளகறு தெய்வந் தத்தம் பதிகளே யென்ப தோர்ந்தே
யுளமுறப் பூசித் தாங்கவ் வுரியர்மேன் மடவார் தங்கை
யளகமொண் டிறைத்துப் பல்பூப் பறித்தெறிந் தாடு வார்கள். ()

வாவியின் மைந்த ரோடு மாதர்தோய்ந் ததன்மை மாறுந்
தூவிமை கமழ்சந் தாதி தொக்கன ளவித்து மீண்டு
மேவிய வுடைபூண் வேறு வேறணிந் தலர்கொய் வான்புங்
காவினி லுருவர் மாரன் கவின்படை யினஞ்சேர்ந் தென்ன (கூஅ)

புரிசன மிடையி னூர்தம் பூம்பட மொதுங்கத் தோன்றுங்
கரிசனக் கொங்கை காணுங் காளையர் பாவை யாகத்
தெரிசனப் பெரும்பி ணிப்புட் கெல்குவா ரன்று மன்னோர்
பரிசன முற்றுஞ் செய்யும் பரிவெனே வம்ம வம்ம. (கூகூ)

கொம்பரொன் பெயரொப் பாவிக் கொம்பர்யாங் கீன்ற டற்பாற் றன்
றெம்புயத் தமர்ந்து கொய்மி னென்றுகொ ளன்ப ரைக்கா
லம்புயங் கண்டன் றேனெவம் மகலெவற் புதைத்து மைந்தீக
செம்பத மாய்த்தென் றங்கை தீண்டியுட் குழைப்பர் மைந்தர்.

மைந்தரா வுட்கு ழைந்த மங்கையர் கொங்கை கீட்டி
யந்தினீள் வளார்கு ழைத்தாங் கலர்பலர் கிலைகொய் போது
சிந்துபோ லுடனக் கொம்பர் தெவ்வமேவம் விரியி னென்று
தந்திடு பாத காணிக் கையெனத் தயங்கு மெங்கும். (கoக)

தளவநம் முரு வோரத் தருங்கொடுமென் னெறிந்த கைப்ப
வளவறத் தழைத்த ரும்பி யலர்ந்தெதிர் நகைத்தல் கண்டு
தளவெழீஇப் படா சோகந் தனைவெருண் டிடைப்ப வன்ன
தளவில மதன்கோ லத்த வாயிழை யார்மேற் றூவும். (கoஉ)

மலர்செறி குழாநேர் நோக்கு மகளிர்தம் மினமென் றுள்ள
மலர்தர வணைப்ப வன்ன தலிரினை மகளிர் பூத்து
நலமிகு மடவா ருள்ள நயப்புற வணைக்குங் கூட்டத்
தலகில்சந் ததிவி ருத்தி யாமெனக் கண்கூ டாக்கும். (கoங)

நாசியை நேர்த ருக்கு நாயினிக் காண்டு மென்றே
மூசினர் கொய்யச் செல்லு மொய்யிழை யவர்க ணீழன்
மீசிவ னுறலு மிக்கு வீபல மிடையப் பூத்துக்
காய்சினந் தணியச் சண்ப கம்மல ரடியிற் றூவும். (கoச)

புலிதரு பிரம னூரிற் பொலிபுற நகரின் மேலு
மலிர்தரு முகுந்த னூரோ யாமெனு மிடைந கர்ச்சீர்
நலிவுதற் கெளிதோ விந்த நகரொரு விதங்க டந்தாஞ்
சிவநக ரதுவே யாமுண் ணகரினிச் செப்பு கின்றாம். (௧௦௫)

அகநகர். வேறு.

அண்டமெலாம் படைத்திடற்காங் கயனைமுனம் படைத்தருளு மமுத நாத
னண்டமதி லதுசூழ்பே ராழியைநீ யிவ்வளவிற் றுக நாளுங்
கண்டனைசெய் கென்றமைத்துக் காட்டிவைத்த மாதிரிகைக் கருவியென்றே
கண்டவர்சொல் வாரொளினிக் கவினகர்மா மதிலகழ்நாங் கழறற் பாற்றே. ()

உயர்வகலந் திண்மையெவ ருக்குமுறற் கருமைமுத லுடைய தாமிச்
செயலரிய தனிமதிலுற் றிசைவாயி றெறுங்களிறு திண்டோ ராதி
யியலுதல்போன் மேனிலைவா யில்களின்வெண் கரிபரிவா னிரவிதேர்முன்
வியன்மருகிற் செலுமனைய மிளிர்மணிக்கோ புரச்சீர்த்தி விளம்பற் பாற்றே.

வகைவகையா விரிந்துவளர் வளமெனுமித் தியவாயு வரனோர் நம்பி
யகனிலவிந் நகர்நங்கை யாம்வதுவை மணம்புணர்ந்த வாதி நாளின்
முகிலெனநீல் விதானமிசை முதுவான மணப்பந்தர் முழுதுந் தாங்குந்
தகையபல கால்களெனத் தகைதுரசங்க ளம்மதிலிற் றயங்கா நிற்கும். (௧௦௮)

எவராலு மென்றுமொன்று மெவ்வழியு மேற்றுறலின் றெனினு மிந்தச்
சிவராச தானியெனுந் திருநகர மயற்கிறைமா திரிகை யாச்செய்
புவிராச நகராகப் பொலிதலினம் மதின்மிசைப்பல் பொறிக்கு ழாங்க
டவிராது நிறைதருமித் தகைமுழுதும் பகர்வரிதெத் தரத்தி னோர்க்கும். ()

முடியிடைவெண் டிங்களும்வான் முதுநதியுங் கோளரவு முயங்கா நிற்ப
வடியினகழ்ப் புனலுமொரா தமைதலின்மா துமைகோனம் மானைக்காவெண்
பொடியணிதா னுவைப்போலும் பொன்மதிலின் றன்மையெவர் புகல்வ
ரம்மா, வடிவுசெயல் சொலினினோனர் * வபுபொனுயிர் கவர்மடவார் வளமை
சொல்வாம். (௧௧௦)

பரத்தையர் வீதி. வேறு

ஐயவென் சோறும் யாது மையமின் றுள்ளந் தேர்ந்த
மெய்யரு மோர்கா ணேக்கின் மெய்மறந் தவச மாகிச்
செய்யகால் விழவுள் ளாற்றுங் கலவியின் றிறங்க டட்டும்
பொய்யசித் திரம்பு றத்தே பொய்சொலார் போற்செ றிப்பார்.

---

* வபு—சரீரம்.

புருடராங் கரும்பின் மல்கும் பொருளுடற் சாறு முற்றும்
வருமள வுழுஞ்சிக் கோது மறுகவாய் மறுக யாரும்
பரிகசித் திடவே வீசும் பரத்தையர்க் கன்ன கன்ன
விரதம்வே றுக்க லொன்றே யியற்றுமெந் திரந்தா னொப்போ.

தம்பொரு டம்பா லாகத் தருணர்க்கு விலைசெய் தன்றோர்
தம்பொருண் முற்றும் வேண்டித் தாப்பெறு விலையின் றோர்க்குத்
தம்பொருள் கொடுத்து முன்னீ டவிலையின் விலைபோ மீட்டுந்
தம்பொரு ளோகொள் வாணி கனையுமோர் சாற்றற் பாற்றே.

அருத்திகூ ரிவர்ப ரத்தை யளிப்பபொன் பதுநி ரிக்கு
பரத்தைய ரொன்று நாமம் பரித்தவ ரொருவீட் டின்பிற்
குறைத்திடு மெடுத்துக் காட்டிங் குவர்ப்புணா ரின்பே யென்றுந்
தெரித்தநூல் வாய்மை யென்று சொல்லிய வறிப்பர் மைந்தர்.

வஞ்சகஞ் சூது பொய்மை மதுநுகர் வாதி யாவு
மெஞ்சலில் லனநா டோறு மினிதுகொள் கலைஞ ரின்றேர்
விஞ்சுகா ரிகைக்கு டைந்தோ வேறேனு கப்ப மேபோற்
கஞ்சமின் றிருவெ லாமிக் கணிகைய ருழைக்கு விக்கும். (௧௫)

சாதனம் வரைந்த ளித்துந் தருபொரு ளுளும் பெற்றும்
வேதனை மாந்த ரேவற் கிடையிடு மிகவுண் டந்தோ
சாதன மிலாது மைந்தர் பொருளெலாந் தீர்ந்துற் றேமல்
வேதனை யின்றி யாற்றி னிவர்செயல் விளம்பற் பாற்றே. (௧௬)

ஆவணவீதி.

இன்னது கொடுமின் கொண்மி னென்றுரை யோல மல்லா
லின்ன*துண் டெனுங்க டாவு மெதிர்தரு விடையு மென்றுந்
தன்னகத் தியாண்டு மில்லாத் தகையவா வணத்தி யம்பா
தன்னமோ வுரைப்ப வெம்மாற் றிற்சில சாற்று கிற்பாம். (௧௭)

விலைநனி விரிக்குஞ் சொன்ன விலைபகர் வோர்கள் சொன்ன
விலைநிலை யேகொள் வார்முன் மேவிநேர் செய்த பாதிற்
கலையொரு தட்டிட் டாட கம்மொரு தட்டிட் டேவார்
கலைதெளி ஞான மிக்கோர் சமாசங் காட்டு வார்போல். (௧௮)

* உண்டோ வென்பது வினவிடைச்சொலீறு தொக்கது.

செம்மணிப் பதக்கஞ் சங்கந் திகழ்கவுத் துவம்பொன் வாச
மம்மபல் கோடி கோடி யமரிட மண்ட கோடிக்
கெம்மிறை யேவுங் கோடி யிந்திரை கேள்வர்க் கீவான்
சொம்மணி யாழி யாதி தொகுத்தபண் டாரம் போலும். (௧௧௯)

மணிகொளோன் பானுஞ் சொன்ன மாபினோர் வைத்து வைகும்
வணிகர்முன் றலை வாயெம் வள்ளன்முன் வழுதி காத
லணியது போது மென்ன வாளிளங் குமரர் செல்லக்
குணிவிலை பகரா தள்ளிக் கொடுத்தினி துவப்பர் வாழ்த்தி (௧௨௦)

பவளைகத் துகில்வீற் போரிற் படர்ந்துளா ரொன்று காட்டிக்
குவையுரீ தளித்தி யென்னக் கோடியென் றளிப்ப வம்மா
விலையிதென் றளித்துக் கோடி யென்றசெட் டழகி தென்ன
வளைவிது பெயர்க்கு மேவன் முற்றுமா மமைக வென்பார். (௧௨௧)

வெண்மலை கொள்ளத் தாவி லேயினின் றுறுவோ ராங்குப்
பன்மலை செறிகு நிஞ்சிப் பாய்பெண மீள வேர்ந்தோர்
சொன்மலைக் குலமென் றேத்த சொன்மலை யுறநேர் கிட்டி
நன்மலை யிலைநாம் வேட்ட சாலியென் னுளை யப்பார். (௧௨௨)

ஒருவெரி துாரகம் வையை மந்திர சத்தி ரங்கண்
மிலைடிலை லியா மல்க விற்குநர் கொள்வோர் பல்கத்
தொடர்களம் பாடி வீட்டிற் சென்றுயா வணைத்தாற் போலும்
படர்பவை பல்லூர் மேற்செய் பயன்றுணிந் துறுமை யம்ம. (௧௨௩)

கைக்குடத் தொடுசென் றின்றூர் கடைமறு குறச்சென் றிந்தப்
பொற்குடம் விலையா தென்னப் பூங்கொடி தளாக் கொண்டவர்
முக்குட மேனுங் கொள்ளின் முழுகுட மென்றீ ரென்ன
நக்குடன் சென்று மன்னா லைக்குடன் முகிழ்த்தார் மைந்தர். ()

பூவிலை பகர்வார் முன்போய்ப் பூவையர் பொருளை நீட்டி
மாவினுஞ் செறிந்து தாங்கு மல்லிகைத் தார்நேர் காட்டி
மீவிரிந் நீலத் தாமை யென்னுநம் நீலத் தாமை
போலிரும் புண்ணிற் கோங்கொத் திடின்முழு தளித்துமென்பார்.

கலைனுலாம் வாரி வெற்பு கானமா டென்னு நான்கு
நிலைனுலாம் பொருள்க ளெல்லா நிறையக்கொண் டளிக்கு நீரா
லுலகெலா நுகர்பல் போக வொண்பொரு டன்பா னல்கும்
வலனுலா மாயை போலு மாவணம் வழுத்தற் பாற்றே. (௧௨௬)

வேளாளர் வீதி. வேறு.

தருமுகிலான் மணிமுதலை தாவிலெழு வோர்முதலா
மருள்கொடைமை தவாதமர்ந்து மடைவரிய தனிநாம
மொருதமக்கே யிருேதியா யுறப்பெறுவே ளாளர்குல
மருவிவளர் பெருமாட மணிமறுகி னணிபகர்வாம். (கஎ.எ)

எத்தொழில்செய் வார்க்குமுறு வினிதளித்து நிலைநிறுத்தி
யத்தொழில்கட் கருயிரா மருந்தொழிறந் தொழிலாக்கொண்
டெத்தொழில்க ளினுமுழவே தலையெனநூ லிசைவாய்மை
கைத்தலநெல் லியிற்றேற்றுங் காராள ரிவரம்மா. (கஎ.அ)

நிலமலைநீள் கடல்வினவு நேரியர்க்கிங் கமைச்சாகி
யுலகமுதல் கொடுபெருநூ லுலகமெலா முயவளித்த
மலர்புகழ்சேர் சேக்கிழார் மாமணியிம் முதலியார்
குலமணியே யெனிலினிநாங் கூறுதிறன் வேறெவனோ. (கஎ.கூ)

இன்னதிரு மணிவாயி னிடைநேச நடராசன்
றன்னருளால் விரிந்தெழுந்த தனிமணிக ளோரொன்பா
னன்னவற்று ளொருபதின்மூன் றருமணிக ளவதரிப்ப
முன்னமரும் தவம்புரிந்த முதகுசீர்க் குலமிதுவே. (கஅ.ய)

என்னினிநா முரைத்துநனி யிம்மட்டோ வீரண்டிற்
பொன்னகர்நாண் வெண்ணெயமர் பொல்லார்பே ரருட்கடலுண்
டங்கரில் சித்தாந்த வமுதுபொழி மெய்கண்ட
நன்னர்முகி லவதரித்த நற்குலமு மிதுவன்றே. (கஅ.க)

உழுதொழிலே தலையெனக்கொண் டறமொன்றே யொம்புநிதா
டழுவியமெய் யன்புழுபூ சனைத்தொழிலும் வழித்தொண்டர்
விழுமியபூ சனைத்தொழிலும் விருந்துபுறந் தான்முதலாஞ்
செழுதொழிலு மருவுபுரிந்திக் கிளர்திமேல் வளர்தருவார். ()

முத்தொழிலி னடுத்தொழிலா முழுதுலகை மளித்தருளு
மத்தொழிலோ னயிசத்த ராமபசர்க் காறினிலொன்
றுய்த்தவர்கோல் கோடாமை யுலகளித்தற் குயிர்த்துணையா
மித்தகையோர் பெருஞ்சீர்த்தி யிசைப்பரிதே யெவராலும். ()

வணிகர் வீதி.

குலத்தாலு நலத்தாலுங் கொடையாலு நடையாலும்
புலத்தாலுஞ் சிவநியமப் பொறையாலு நிறைகல்வி
வலத்தாலும் வளர்செல்வ மாண்பாலுஞ் சிறோட்டிகளென்
றலத்தாலு முற்றுளைபே ரணிவணிகர் மறுகுரைப்பாம். (கஅ.ச)

இருதிறத் தனதர்பல வென்பாலி னவர்க்கியையுமோ
வொருவருருவின் னுதவர்க் கடவனீ குவனிதியம்
பெருகுசுவை யூருணிபோற் பிறங்குவதில் கிவர்நிதிய
மிருநிலவேற் றுமையனுவு மண்டமுமென் னினுமேலா. (கந௫)

ஈட்டுமுகா லனுவெனும்பொன் னிரவியென வேயீட்டி
மீட்டதனுங் கெதிர்மறையா விழுமியபல் லறநெறியி
னீட்டவெரஞ் ஞான்றுமுகு நிலைதிறம்பா நிலைதலைக்கோல்
காட்டிவர் கையினுநீடு மென்னினியாங் கழறுவதே. (கநசு)

அம்மையே யெனவெல்லா மளித்தப்ப னழைத்தருளு
மம்மையா ரியற்பகையா ரமர்நீதி கலிக்கம்பர்
மும்மையா லுலகாண்ட மூர்த்தியா ரவர்செக
மும்மைவாழ்த் திவர்குலஞ்செய் முதுதவத்தா லவதரித்தோர். ()

பயன்மரமுன் னேர்ப்பழுத்த பான்மைத்தே பகர்செல்வ
நயனுடையான் கட்படிவென் னன்னுவலி னிலக்கணமில்
வியல்பினர்நீ னிதியுறத்தா ரேருகிலக் கியங்கண்டே
யுயவுகை முறைத்தெனி னுவர்மகிமை யொருவைப்பார். ()

அரசர் வீதி.

உலகமெலா மோம்புதொழிற் கொருமுதந்த னுருவினரோ
குலவாச னெனுமச்சொற் கூற்றுநேர் தேற்றுதற்போன்
மலர்தலைய நிலமகளை மணிப்புயத்து மணந்தளிக்கு
நிலைமன்னி முடியரசர் நியமமொரு சிறிதுரைப்பாம். (கநகூ)

அமைச்சுமுதல் றஞ்சாமை யாதியவே றியற்றன்முதற்
கமைத்தொழிற்றன் குணர்காட்சிக் கெளியர்கடுஞ் சொற்கடிந்தோர்
அமைத்தவுறன் சிறிதிறக்கா வளிகொடைகோல் குடியோம்ப
லிமைப்பளவுந் தவறுதல் லிலநீக்கி யினிதளிப்போர். (கசo)

திறைகொடோ மயலரசர் தீயொருபா லுலையந்தீப்
பொறையொருபான் முரசொருபாற் போற்றுமுயல் றலொருபா
லிறையொருபான் மறையொருபா லின்னனமுற் றெல்லொருபா
னிறைதருமக் குலவேந்தர் நியமிவளர் திருக்கோயில். (கசக)

புகழ்தருசெங் கட்சோழர் புகழ்ச்சோழ ரிடங்கழியார்
நிகரிலருண் மானியார் நெடுமாறர் சேரனெனத்
தருதிலவோ ரிருமூவர் தம்பிரான் றேமுர்தரு
தொகையினுளா ரவதரித்த வாயரசர் திவர்குலமே. (கசஉ)

### வேறு.

உலகெலா மரசர் குலமெலா மேற்கொண் டோர்ந்துசெய் நீதிநா லுரைத்த
குலமனு வேந்து திருமுறை கண்ட கோவொரு செம்பியைத் தேரூர்ந்
*தலகில்சீ ரரசு பொதுவெழு தனிச்சொ லருந்திறை யிவர்குலத் தவரான்
மலருமூ வேந்தர் தமிழுயர் சோழர் மகிமைநாம் வழுத்துதற் கெளிதோ.

### அந்தணர் வீதி.

முற்றுல கொருங்கு படைத்திடு பிரமன் முகோற்பன முனிவர்சந் ததியோர்
முற்றுல கொருங்கு வாழ்வுற வேள்வி முதுமறை முறைபுரீஇ முகில்கண்
முற்றுல கொருங்கு நிறைபயி ரோங்க மும்மழை பெய்ம்முறை முயல்வார்
முற்றுல கொருங்கு வாழ்த்துவே தியர்வாழ் முழுமணி மறுகிலி மொழிவாம்.

ஒருவரு மிருமை மும்மையு மின்பே யுறப்பெறு நிலையர்நா லொழுக்க
மருவுதற் குரிய ளாம்பெரு வேள்வி வயக்குநா றுதொழி லாளர்
பெருகுசீ ருலகே ழெட்டுறு மேனும் பின்னரு நவமுறப் புரிவார்
திருநிறை தருவார் ஞானசம் பத்தே தேடருஞ் செல்வமா வளர்ப்பார்.

ஒருபது புராண முழுவது மோர்ந்தோ ரொன்பதா மெண்குண முடைத்தா
யருமையேழ் பவந்தீர்த் தருள்பெரும் பொருளே யாறங்கத் தைந்தெழுத்
துண்மைப், பொருளென நான்கு மறையினுட் டெளிந்து பூசனை முப்பொ
ழுதுஞாற்றி, யிருபதத் தொன்று மன்பினு லின்பே யெய்துவார் திறனெவ
ரிசைப்பார். (கசசு)

திருவளர் வாத வூரர்சம் பந்தர் சிறுத்தொண்டர் நீலநக் கடிகள்
முருகர்சோ மாசி கலயரப் பூதி நமிநந்தி மொழிகண நாதர்
தெருள்பசு பதிசண் டேசர்வண் பூசல் சிறப்புலி தில்லையந் தணர்கள்
குருமறை ஞான சம்பந்தர் கொற்றங் குடியடி களுமிவர் குலத்தோர். (கசஎ)

### ஆதிசைவர் வீதி.

உலகெலா முய்யு முபாயமே செய்யு மொருபெருந் தொழிற்சநா சிவன்றற்
புலனுற முப்போ துந்திரு மேனி தீண்டிமா பார்த்தபூ சனைநா
னிலகுதன் சாதி வேதிய ரோசெய் திடன்மா பெனவிதித் தைந்து
மலர்முகத் துதிப்பித் திட்டவைந் திருடி மரபினர் மணிமறு குரைப்பாம். ()

நிலவரு வுருவ சதாசிவ சிருட்டி நிமலவே தியர்களா மிவரை
யலர்வரு பிரம சிருட்டிவே தியரே யாதிநாற் சாதிய ரொவர்க்கு
மலர்சிவ தீக்கை முதற்சமக் கார வகையெலாம் புரியதி கார
நலனிறு லன்றோ குருக்களென் றுலக நயந்திடு குறியென நவில்ப. (கசக)

* ஊர்ந்த வென்னும் பெயரெச்சத்தகரந்தொக்கது.

அரிபிர மாதி யருமிவர் பார்த்த மாப்புலி யதில்வழி பாடு
புரிசிவ லிங்க தெரிசனு திகளாற் புன்மைதீர்ந் துய்வரே யிலையில்
சாருலகொண் டேதரு மறைவேள்வி துணிவரோ சிவாக்கினித் தொகையே
வருசிவா கமஞ்சொன் மரபினெஞ் ஞான்று மல்குற வியற்றியின் வளர்ப்பார். ()

வேதவிக் கிரிய மாதியாற் றேவ லகத்துவ விளைவினர் முதலோர்
தீதற லாதிக் கியற்றுறு பிராயச் சித்தமே நித்திய மாதி
யோதுபூ சனைகள் பிறர்பொருட் டுஞ்செய் துலகெலா முய்விக்குங் கருணை
யேதரு முருக்கொண் டெற்றவ ரிவரென் றெவ்வுல குந்தொழு தியல்போர்.

நம்புகழ்த் துணையா ரூரர்சீர் சடைய னுரிசை ஞானியார் தாதை
நம்பியாண் டார்மன் னருணந்தி யிவரிந் நற்குலத் தவரென வொன்றோ [று
நம்பியொன் பதின்ம ராத்தொகை தொகுத்த நாயன்மார் தம்மின்முப் போ
நம்பிரான் மேனி தீண்டொவா ரிவரே ஞம்பிற ரவிறற வனவோ. (௩௰௨)

மறைமொழிப் படியே சைவியப் பிரமன் வதனத்திற் றோன்றியான் மாத்த
முறையால துலகு முயச்செயும் பார்த்த முறைக்குரித் துரோவர் புகழே
யறைவரி தெனிலம் மறைப்பிரா மணரென் றருள்சதா சிவன்முகத் துதித்து
நிறையினவ் விரண்டும் புரிசைவத் துவிசர் நீதிகா மொத்துதற் கெளிதோ. (௩௰௩)

இத்தகு சிறப்பிற் பெருந்தவத் துவிசர் திருந்துவாழ் பணிநெடு மாடப்
பத்திவான் சமைப்ப வொளிர்திரு வீதி பாங்கினி லண்பிமன் சூழ
மத்தியம் பெருமான் மந்திர நாதன் வாழ்மணிச் சினகர மன்று
மத்திருக் கோயி லனைத்தையும் வகுத்த லம்மவோ வெம்மனோர்க் காமோ.

பற்பல கோடி யண்டமும் விரிந்து பரந்துவாழ் பல்லுயிர்த் தொகைக்கும்
வெப்பறு கவிகை யாமலர்த் துணைத்தாள் விரிதிழ றருமமே சாற்
கொப்பிலா மாத தம்மணிக் குடையா வுலகெலாம் விரித்துயர்ந் தோங்கு
மற்புத குருத பூருக மம்மா வாங்கொரு பாங்குநின் றவிரும். (௩௰௪)

நத்தனை வனங்க டங்கள்பல் கமுக நன்மணி மேடையா டரங்க
முத்தனை சாலை யன்பர்வாழ் மடங்கண் முதற்பல வுறுப்பெலா நிறைபு
மித்தகன் னரசோ விராட்டெழிற் கோயி லேயித யாம்புய மென்றே
சத்தச மருத நாயகன் கருணை தங்குவீற் றிருந்தா யிற்றும். (௩௰௫)

தீயவல் விடமுண் டமுதருள் சிவனென் பொதுத்தனக் கேசிறப் பென்று
தூயமு தேச நாமமே தேற்ற துணிவுறக் காழிவாழ் மணியின்
மேயருள் பதிக முதலிலச் செயலில் விறைசெய லெனுஞ்சரித் திறஞ்சேர்த்
தாயகா ருடைநஞ் சண்டகாத் தருள்செய் தவனென வருளிய தம்மா.

செறிபொழி லணிசெய் திருவுசாத் தானந் தெண்டிரைக் கழனிசூழ் தான
மிறைதிட மெனவே யுறைவிடஞ் சேணி னெழுந்தலா மாளிகைத் தான
நிறைமதி யந்தோய் மதிலணி தான மென்பன வாதியா நிகழ்தென்
மறையருண் மொழியா லனையசேய் வழுத்து மாண்பதித் திருவுசாத் தானம்.

ஆயவிந் நகரத் தரும்பெருஞ் சிறப்பிவ் வறிவிலா வேழையே னுரைக்கு
ளாயதோ வம்மா வத்தனைக் காழி யருமணி குருமணி யயில்வேற்
சேய்மணி யமுத வாய்மணி கமலச் சேவடி சென்னிசேர்த் தெளியேன்
வாயில்வந் தனசிற் சில்பொறுத் தருள்வீர் மாசறத் தெளிந்தமாண் புலவீர்.

திருநகரச்சிறப்பு முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௩௩௧.

# புராணவரலாறு.

சித்தி யெட்டினின் றேவல் செயும்வனம்
பத்தி வேலி யருட்புனல் பாய்வன
முத்தி வான்பயி ரோங்கு முதல்வன
நத்தி மாதவர் வாழ்நை மிசவனம். (க)

வேறு.

இன்ன விப்பரு வத்தது மெனும்வரம் பின்றிப்
பன்னு மூவிரு பருவத்தும் பனிமல ராதி
யென்ன பற்பல பொருள்களுங் குறைவுறு தென்று
மன்னி மல்குபு விளைவது நைமிச வனமே. (உ)

காட்ட மாவன மேதருப் பாதிய கலப்பை
* யீட்ட மாவன மேதமி னியமங்கட் கிசையக்
கூட்ட மாவன மேதரு மெனமுனிக் குழாங்கள்
வேட்ட மாவன மேதரு நைமிச விபினம். (ங)

நேய மாதவ நேத்திர னியாசலை நிமிர்வேற்
சேய மாதவழ் கடக்களிற் றுணைவன் றிருத்தாட்
கேய † மாதவப் பொறிநெறி தொலைத்துமின் றிறைஞ்சுந்
தூய மாதவர் வாழ்வது நைமிசத் தடவை. (ச)

---

* ஈட்டம் ஆவ நம் எதம் இல் நியமங்கட்கு எனப்பிரிக்குக.

† மாதவ = ஆணவமலவிருள்கெட.

எங்கள் வாழுவ தென்பெறுந் துன்பமே யேற்கு
மிங்கு ளார்கள்பே ரின்பமே வேறறி யாரொன்
றங்கு மான்முதற் சுரரொரா மகியமு தாசை
பொங்க மேவலி னுலகபண் டாரமப் பொங்கர். (௫)

சரியை யாதிநாற் பாதமுஞ் சாற்றுநூ லையரம்
பரம தாமிரு கோடுமைம் முகனையோர் முகப்பண்
பொருவி லாதுணர் வாலொன்று முழுவபாங் குழுவர்
வான கோபுரம் போலுமவ் வில்லையார் வல்லை. (௬)

வன்னி வேதியின் வயக்குவ வன்னிமுன் னுவ
வன்னி யோதுநான் மறைமுழ தோதுவ வன்னி
யன்ன தாலயந் திர்ந்துய மயன்விடு மன்ன
மன்ன மாதியெண் டிருநிறை யங்கு மடவி. (௭)

அங்கி மூன்றவை யைந்தை யோம்புவா ரவர்த
மங்கை மாரவற் றேடுதம் வாயதற் பாய
துங்க வங்கியு மேற்கொடு நான்கெனத் துலங்கத்
தங்க ளுவளர்த் தொழுகுறத் திகழ்வதத் தவமே. (௮)

இன்ன பல்வளஞ் சொல்வளத் தியம்பொரு தென்று
மன்னு மப்பெருஞ் சகளூ வாசமு னிசர்
பன்னு மாசறு னகமுனி முகமெனப் படைத்தாங்
குன்னு மோர்வடி வமைந்தென வொன்றிவாழ் மனத்தோர் (௯)

இத்த வப்பெரும் பண்ணைவ ரித்தவத் தென்று
முத்த மப்பர ஞானநிட் காமியத் துடனும்
முத்த முற்பல வேள்விக டொடங்குபு முடிப்பார்
சுத்த மக்குள மாபுல குணருமா தாத்தால். (௰)

இனைய மாதவ ரிமாசல மாதம ரிடத்தான்
விளைக முற்றியற் கினைகழற் றிகழ்மனம் விழையும்
புனித தத்தம னித்திய நியமங்கள் போற்றி
யினிய சத்திர யாகமங் கியற்றின ரிருந்தார் (௧௧)

அன்ன காலையிற் சூதமா முனிவர்கோ னுங்கே
துன்னி னுனது காண்டலுந் துண்ணென வெழுதார்க்
சொன்னி கூட்டிரு காத்தினர் வாத்தெதிர் சென்றார்
முன்னி றைஞ்சின ரின்னுமை முகமன்முன் மொழிந்தார். (௧௨)

அழைத்து வந்தன ராதனத் திருத்தின ரன்பாற்
றழைத்த தூமலர் பாத்தியா சமனமர்க் கியமுன்
விழுத்த கக்கொடு வழுத்துபூ சனைமுறை விளைத்தார்
முழுத்த வன்பினு வின்புற முன்பிவை மொழிவார். (கங)

ஐய மெய்ச்சிவ புராணநூற் போதமுற் றளித்தே
யுய்ய வெம்மனோர்க் கருளிய மேனிகொண் டுற்ற
மெய்ய வேழையேங் குடிசைநீ விழைந்துபோந் தருளிச்
செய்ய முற்றவ நற்றவம் பெற்றவென் சிறியேம். (கச)

கருணை மாநிதே முற்றுணர் கற்றவ ரேறே
பொருணை யந்தநின் வாக்கட னுக்கடை புராணத்
தெருணை யந்தவா ரவியுறு வுண்டுண்டுந் தெவிட்டா
தருணை யந்தி லார்வமீக் கூர்வதா லண்ணல். (கரு)

முன்ன ரொண்சிவ க்ஷேத்திர விசிட்டமுற் றியற்சீர்
சொன்ன லம்பெற விரித்தனை சுருக்கினை சொலுங்கா
னன்ன ராம்பிர வணமது நாதநற் றலமொன்
றென்ன மாதலத் தினும்பெருஞ் சிறப்பின திதன்கண். (கசு)

இனிது வீற்றிருந் தருளுமா தேவனெம் மீசன்
புனித மான்மிய மளப்பரி தெனப்புகன் றுரைத்தா
யனைய மாண்விரி வுணர்விழை வதிவிரி வென்று
வினைய வாய்மையின் வேட்டனர் கேட்டனர் மேலோர். (கஎ)

அன்ன வாய்மையின் வாய்மைகேட் டருணிறை சூத
னென்னு மாதவன் னென்னுமா தவன்மறை யாவும்
பன்னு மந்திரேச் சுரன்பத பங்கயம் பரிவாற்
சென்னி வைத்தரு ணிலத்துலாய் நின்றிது செப்பும். (கஅ)

முனிவர் கேண்மினும் வினவுல கினுமொழி முதலா
மெனது நெஞ்சக முஞ்சக முஞ்சக மிரித்து
வனிதை பாகனு ரருள்பெறற் காகநார் மலிந்த
தினித லிக்குமிச் சிரவணம் பாவண மெவர்க்கும். (க௯)

நீவி ரிங்குரை தாவிரி மாவிரி கிழற்காத்
தேவி ளங்குமான் மியமபக் குவர்க்குரை செய்யாத்
தாவி ளங்கதி குய்யமித் துய்யமான் மியத்தை
நாவி ளங்குசீர் நந்திதே முந்திசை நவின்றான். (0உ.)

போதனேதரு புத்திர சிகாமணி பொருவின்
மாத போதனர் வழுத்துசிந் தாமணி வரந்த
வாத சிர்ச்சனற் குமரமா மணிமுனிக் கவ்வா
ரேறு வாரிணி துணர்பிவெனன் றுறுவர்சோ னுறைக்கும். (உக)

கண்ணை கன்புவ னங்களாங் காங்குயர் கருமங்
கண்ணை கன்புறச் செய்பயன் கைபெறீஇக் களித்தே
கண்ணை கன்புரிந் தமர்களோ கண்ணுறுதற் கண்ணாங்
கண்*ண கன்புடைத் தருடிருக் கைலையஞ் சைலம். (உஉ)

காள கண்டனை மொழியிமா சலையிடங் கவின்செய்
காள கண்டனை மண்டனை விண்டனைக் கலந்த
தாள கண்டனை யண்டருந் தொண்டருந் தழுவத்
† தாள கண்டனை யருள்வது கைலையஞ் சைலம். (உங)

சுருதி யானனப் பரி ‡ னெதனும் பாமனிற் றுயோர்
வருதி யானத்தி ஞற்பது கோடியோ சனைமாண்
சுருதி யானதிற் பாதிய கலமெனப் பாவித்
தருதி யானமெ வெனப்பெறுங் கைலைமா தரமே. (உச)

விண்டு வாதிய விபுதர்வாழ் பதமெலாம் விளிகாற்
கண்டு மேனுரும் காட்சியிற் கவின்செய்வெண் கதிர்தா
னண்ட மெங்கணு மகண்டமுந் தன்னகத் தான்போற்
றண்டு றுமெதாளி பயில்வது கைலையஞ் சைலம். (உரு)

ஆற்றல் சாலை மாதியர்க் கருமமா னாதி
சாற்று வானவர் சாருமா தாமமா தாமம்
போற்று மொண்கன கங்களெப் புவனத்துள் ளனவுந்
தேற்று மாண்புயர் திருக்கயி லாயநீள் சிலம்பு. (உசு)

பன்னு மூவுல கத்துள பதம்பெலா முகாந்தத்
தின்னை தீர்தரச் சாண்புரு பிளியசோ வென்ப
சொன்ன மேருவு மேருவந் தின்னும்பல் நதிகள்
சொன்னன் மாண்பியத் திருக்கயி லாயநீள் சுரும்பு. (உஎ)

* அகன் - பாவம்.
† தாளகண் - திருவடிஞானம்.
‡ எனும் - இடைக்குறை.

வேறு.

இன்னன பலவே றூய வியல்வளத் தொகுதி யார்க்கு
முன்னரும் பெருஞ்சி றப்பி னொளிர்திருக் கயிலா யத்திற்
பன்னருட் சோதி லிங்க பரமன்சீ கண்ட நாமத்
தென்னையா ளிறைவன் யாவு மீன்றரு ளன்னை யோடும். (௨௮)

வியனுல கெல்லா முய்வான் மேதகு குடிலை யாதி
வயநிறை தத்து வத்தின் மணியரித் தவிசின் மன்னிப்
பயனுற வமர்பொற் கோயிற் பான்றிருச் சந்நி தானத்
தியல்புருள் வெள்ள மாமீ தென்றுல கெல்லா மேத்த. (௨௯)

உடலிடர்க் கடலோ யாரு முட்கொள நீண்டல் காண்ட
லிடனுறின் மடனெ லாமு மிரித்துயி ரிடர்முற் றோட்டித்
திடனரு ளமுத தோயந் திகழ்சிவ தீர்த்த மொன்றெத்
தடமுமன் புடன்சென் றேத்துந் தனியர சாக மன்னும். (௩௦)

பேசுமித் தடாகஞ் செம்பொற் பித்திகை நாப்பட் டேனுந்
தேசுறு பரிசத் தன்றிச் சென்றுநேர் நின்றுங் காணார்
மாசறச் சென்றூர் சில்லோர் மதிலலான் மற்றொன் றில்லா
வாசறு தளியொன் றுண்டோ வண்ணறன் கைலைக் கென்பார். (௩௧)

வயிரத்தொண் சோபா னஞ்செம் மாணிக்க மிழைத்த சந்து
பயிலத்திண் பளிக்க கஞ்செய் பரவுமவ் வாவி நீரத்
துயர்பத்து நூறு பைம்பொ னொண்மணித் தம்பத் தும்பர்
நயனுற்ற விந்து காந்த நருமணிப் பரப்பு வாய்ந்த. (௩௨)

மண்டப மொன்றி லங்கும் வித்தியா மயமீ தென்றே
யெண்டரு முனிவ ரார்ந் யிறைசிவ ஞான வேட்கை
கொண்டெழு மன்பர் கூட்டங் குறைவற நிறைவ தாங்கே
பண்டரு மறைநான் காதி பலகலைத் துழனி மல்கும். (௩௩)

வழுத்துமம் மண்ட பத்தின் மத்தியிற் புண்ட ரீக
முழுச்சரு மாத னத்தின் முற்றுல கெல்லாம் வந்து
தொழத்தரு மம்பு சாதத் துணையடி சிவப்பப் போந்து
விழுத்தக வீற்றி ருந்தான் விழைதிரு நந்தி தேவன். (௩௪)

வேறு.

சிவமுணர்பன் முனிவர்குழாந் திவியர்பிர மதகணங்கள் செறிந்து சூழச்
சிவதரும மகாத்தியட்சன் சிவனந்தப் புரபாலன் சிவமெய்ஞ் ஞான
சிவகுரவ னருளபர சிவனுகும் பிரபுதிரு நந்தி தேவன்
சிவமுதவுந் திருவுளமே திகழ்தரவீற் றிருந்தருளுந் திருமுன் னங்கே.()

மலைமகன்ற குலவிரதன் மாதவர்தம் போதகத்தி மலர்ந்த செங்க
மலமகன்றன் மகன்சிவமே மருவுமக னொருவுமகன் மறைசொல் ஞ்சீர
மலமகன்றம் மனைவிழையும் வனமுனிவர் வணங்கிப்போற்று வானவன் பான
மலமகன்ற சனற்குமர மாமுனிவன் றேர்முனிவன் பயன்வந் தானால். ()

வந்தசனற் குமாமுனி மாமேரு வாமேனி வள்ள லைய
நந்திதிரு வடிமலர்க்கீழ் நணுறுதன் டெனவீழ்ந்து நமந்து போற்றிக்
*சந்தமலர் கமலமலர் காவின்மலர் கலப்பமலர் கருத்த ஞகிப்
பந்தமலர் படத்தெரும் பாதமலர் மீதமலம் படப்பூ சித்தான். (௬.௭)

பின்றுமடி பணிந்தெழுந்தெம் பெருமானே யருளாழ் பிறவொ வர்க்கும்
பன்னரிய வேதாந்த பாரகனே பரியாய சிவனே பன்னு
லின்றுரைமா சிவதரும மெல்லாமெம் மவர்க்குணர்த்து மினிய போதா
வென்றுரிய குருநாதா வெளியேன்வின் னைப்பமுள மிரங்கிக் கேண்மோ.

புத்திமுத்தி யருளிலை புனிதசிவ தலங்களினுட் பொருவி லிட்ட
சித்திமுத்தி தருமேரு சிசைல மாசைலத் தின்சென் றேத்தி
முத்தமப்பொற் றிருக்கைலை யொண்சைல் மந்தாமு னலைப்பின் சேர்த்தி
வித்தகப்பதி திருத்தலத்தின் விசிட்டமுறை தருள்காலே விளம்ப வற்றுள்.

ஒப்பரிதா வெப்பரிசு முளைப்பரிதாய் வனைப்பரிதா யுண்மைத் தாகித்
திப்பியமா யனவாக சிவராத்தி யியளிக்கச் சிறப்ப தாகித்
தப்பரிய காரணப்பேர் தான்பலவெய்த் துளதாகித் தரையின் சேம
வைப்பெனலாய்த் திகழ்ருத வணப்பெருமான் புகன்றுரைத்தாய் வள்ளான்
[முன்றுள். (௬௰)

சொன்னதனைத் தீர்த்தமருட் குயப்பிலிங்க மூர்த்திவான் சொல்லித் தாரத்
தின்னமியம் புறக்கேட்பா னிலைசயமிசைத் துசையார்வ மீர்ப்பப் போந்துமன்
பொன்னடிப்பூத் துமைபணிந்து பூசித்தே னைசித்தென் புந்தி வேட்கை
மன்னருளாற் கைகூட வழங்குகெனப் பணிந்தெழுந்து மலர்க்கை கூப்பி.()

திருமுனமப் பெருமுனிவர் சிகாமணியின் றேத்தவருள் செய்து நோக்கி
வருதியயன் பொருட்குமா மத்திறமக்கோ மருட்குமா வையமுய்யத் [போ
தருபதிநாற் றெருட்குமா சனற்குமா தினக்குரைப்பத் தடையொன் றுண்
வருதிருத்தி யெனவிருத்தி யம்முனியைத் தெம்முனியே மருணந் தீசன்.()

ஞ்சீர் அமல் அம் மகம் எனப்பிரிக்க. அதுமகன் எனப்போலியாயிற்று.
* காங்களின் மலர்கொண்டு பூசித்தானென்க.

னியருள்கூர்ந் தினிதருளு நங்குமர பாக்கியமே ஞான நேரா
மனியசிவ முகாம்புயநூன் மகரந்த பானமது கரமாய் வாய்ந்த
தனியயில்வேற் கரதார காரியருட் சண்முகன்மா தாம டிக்க
ணினிதமர்பு தாதையனைக் கியம்புதல்கேட் டெனக்கிசைத்தாங் கிசைத்து
[மென்றே. (௬௩)

அய்யனையு மன்னையையு மாதிருமா மலர்வதனத் தாதி ரண்டு
கையனையு மொருகோட்டுக் களிற்றினையு முளத்திருத்திக் கனிவா யோதும்
பையணிவெம் பணியணிகள் படர்ந்திவெண் சுடர்மதியம் பரவு சீர்த்திச்
செய்யமதி யிதழிமுடிச் சிவபாதாம் புயார்ச்சகமெய்ச் சீல கேண்மோ. (௬௪)

பாவியல்வ் வியாசகிரு பாகரமா தேவனருள் பவன மெல்லாம்
வாமுறால் கியவென்று மன்னுபுவீற் றிருந்தருளும் மாமன் கானப்
பாமதல மத்தியந்த பாவனமா யாமினிய பாரா வாரத்
திரமுறுமால் புரிராம சேதுவினீ சானதிசை திகழ மன்னும். (௬௫)

இப்பரம சிவதலமே யிப்புவிக்கா ரருட்டுணையா யிலங்கு முத்தி
கைப்பொருளாக் கிடுஞ்சகல காமியமுந் தரும்பாவங் கழிக்கு மிந்தத்
திப்பியமா தலப்பெருமை செப்பரிதெவ் வெவர்க்கெனினுஞ் சிறிது நீகொ
ளப்பெரிய நசைமறுக்க லாற்றுது சொலத்துணிந்தா மருமை மைந்த. (௬௬)

இன்ன திருத் தலந்தீர்த்த மிலங்கமுத சுயம்பிலிங்க மூர்த்தி யென்று [று
மன்னருளித் தலஞ்சூத வனமெனும்பேர் பெறுகிப்பஞ்சொல் வாய்மை யென்
பின்னகிசோன் பாற்கடலிற் பிறங்குபதே சம்மால்பாற் பெறுசீ ரென்று
பன்னனைய குரவனிடைச் சிவலிங்கம் பணிபதிகொள் பான்மை யென்று.

வானிறையவ் வகியரசம் மாவனத்திற் பாவனத்தின் வருசீ ரென்று
பரவுதிருப் பணியாங்கப் பணிவேந்த னணியாய்ந்து பயிற்ற லென்று
காவில்சிவ பூசனையக் கட்செவிவேந் தாங்கியற்று காட்சி யென்று
நாலையர சுறுசாப நடலையொழித் தாரருளே நண்ணிற் றென்று. (௬௮)

தாயறன்மார்க் கண்டமுனி தோய்ந்துடன்மா சிரித்தருள்சார் தூய்மை யெ
ன்று, சேயொரு குலபதிமந் திரப்பேற்றிற் பகைதொலைத்தின் புறுசீ ரெ
ன்று, மேயவமு தங்கொணர்ந்து விண்ணேர்வ நிவேதனஞ்செய் மேன்மை
யென்று, வாயதிரு விழாச்சிறப்பு வானவர்கோன் புரிந்தருள்சார் வாய்மை
யென்று. (௬௯)

இவ்வகையோர் மூன்றுதலை யிட்டபதி னோர்காதை யியல்பு முற்று
மவ்வகையே மைந்தனினக் கறிந்தவகை விரித்துரைத்து மறையக் கேளென்
றுய்வகைசெய் நந்தீச னுரைத்தனனென் றுடன்சூத வுறுவர் கோமான்
செய்வகைமா தவர்க்கனைய திருநந்தி மொழிப்படியே தேற்று கின்றான். ()

புராணவரலாறு முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௱௮௧.

# தலவிசேடச்சருக்கம்.

மலைமகன் மைந்த கேணின் மனம்விழை கின்ற வாறு
நிருமல மந்தி ரேச னிலவுத லங்கொண் மேன்மை
யுலையில டங்கி டாத தொருசிறி தன்பு நீட
வருளுது மென்று வாய்மை யறைதரு நந்தி நாதன். (௧)

வேறு.

மலரவன் றனையருள் வயங்கு மாதவர்
திலகனென் றுலகுரை செம்மல் கேண்மியா
நிலவுல கலைவற நிறுவு சந்திர
வலகிளை *யிரவியி னவாசி வம்பலில். (௨)

திருநிறை நாவலந் தீவின் மேவிய
பரவிய வரனுறு பரத கண்டத்திற்
பொருவறு திரவிட பூமி மங்கைதன்
றிருமுக மெனப்பொலி சென்னி நாட்டினில். (௩)

கண்ணெனத் திகழ்தரு சூத கானனம்
புண்ணிய மாநதிப் பொன்னி மாநதிக்
கண்ணிய தெனுமூன் றுய யோசனை
பண்ணிறை மறைவனக் குடாது பாங்கரின். (௪)

ஓரிரு யோசனை யோங்கு தென்கடற்
சேரியல் வடாதுமா திரங்கு ரோசனைந்
தேரிய வெல்லையி னிலங்கு மிவ்வனத்
தோரிய கைலமுக் குரோச மோதுப. (௫)

தெவ்வனத் தஞ்செய்மால் சென்று காவலாற்
செவ்வன சத்திரு வாதி சேர்தலா
லெவ்வன நித்திய வின்ப மீதரு
மிவ்வனந் திருவுசாத் தான மென்பவே. (௬)

புத்திகள் வேண்டினும் பொருவி லிரு
சித்திகள் வேண்டினுஞ் சித்த சுத்திமா
முத்திமுன் வேண்டினு முற்றும் பெற்றுளா
ரித்திருத் தலம்புகி னெண்ணி யாங்கரோ. (௭)

---

* இரவி—மலை.

இத்தல மெத்தலத் திருந்து மெத்தகு
சுத்தமா முனிவருஞ் சூழ்ந்து போந்துமை
யத்தனை வழிபடூஉ வமரும் பூதல
தத்துவ மெனத்தகுஞ் சனற்கு மாரனே. (௮)

ஆதரத் தடைந்தம ரகில சீவர்தம்
பாதகக் குழுத்துகட் பருப்ப தங்களைப்
பேதுறக் களைத்துயர் பேரின் பேதரு
சீததத் துவமெனச் சிறக்கு மித்தலம். (௯)

எத்துணை மூடரு மெய்தி னீண்டவர்
கத்திசெய் சூதவ னக்க ணக்கிலாக்
கொத்தெலாந் தகித்தருள் கூட்டு மாரமுற்
றத்துவஞ் சூதவ னத்தண் மாதலம். (௰)

சேகதி மனத்தவ ரெனினுஞ் சென்றவ
ணீகதி யெனப்புகி னிகரில் பாவநீண்
மாகதி ரட்குல மலைகள் சாடுஞ்ச
தாகதி தத்துவஞ் சாற்று மித்தலம். (௧௧)

அம்பர வான்புவி யாதி போற்றுதோ
லம்பர சிவனிரண் டற்ற வன்பருக்
கம்பர வின்பளித் தமருஞ் சிற்சன
வம்பர தத்துவ மாகு மித்தலம். (௧௨)

கண்டவ ரித்தல மாயங் கண்டிடார்
தொண்டெவ ராற்றுந ரனையர் சூழ்ந்துவா
னண்டர்தொண் டாற்றிய வமர்ந்து போயரு
ளெண்டகு புவனம்வீற் றிருப்பர் வேந்தராய். (௧௩)

இத்தலத் தூற்றவ ரினித்த லத்தினுற்
பத்தியற் றருட்சிவ பத்தி யுற்றுயர்
முத்திபெற் றுய்வரான் முனிசி காமணி
சத்தியஞ் சத்தியஞ் சத்தி யம்மிதே. (௧௪)

மன்றலெண் டிசைகம ழமிர்த மாவன
மென்றொரு முறைதிரு நாம மேவர்வாய்
நின்றெழ லுறினுமந் நிமல நாமமே
யன்றவர் தம்மையு மமிர்த ராக்குமே. (௧௫)

மாதரு திருவுசாத் தான மாண்பெய
யோதுநர் புகழ்த்திரு வுரைசெ யென்னிரு
மேதகு பாசிவ ஞான மெய்த்திரு
வாதிய திருவுசாத் தான மாவதே. (௧௬)

ஏனைய தலங்களி னியற்றும் வேள்விகள்
ஞானமா தவமது நவிற்றல் பல்லறந்
தானமா தியவெலாஞ் சாற்று மாம்பிர
கானனத் தியற்றிடி னொன் றனந்தங் காண்பரே. (௧௭)

ஏனைய தலங்களி லெண்ணில் கற்பகா
லீனமின் மாதவஞ் செய்யுறும் பேறெலா
மானதன் னேனியா ருறினு மக்கணந்
தானுவந் தருள்வது சூத மாதவம். (௧௮)

தன்னுழைப் போந்தறன் மூழ்கிச் சம்புவை
முன்னுநர்க் கன்னமா முளரி யீபவ
னென்னுழை யளவுகொ லெண்ணின் மேலையோ
ருன்னுழை யுட்கொளைச் சிகையு முட்படா. (௧௯)

இன்னினி யென்னிசைத் தின்ன மாவன
முன்னியன் னேயமனு முதலை யென்றும்போற்
றின்னிய தியர்முதோ வாய்தும் பேறெலா
முன்னுவை முதிகத்தா *வுறழ்வு முற்றிடா. (௨௦)

என்றரு ணந்திதா னிறைஞ்சி வேதன்சேய்
பின்றற னீருணர் பெற்றி வேண்டிமு
னின்றனை னென்னுடி னிகழ்த்து வான்றனை
முன்னெருமு முனிவர்க்குச் சூத மாமுனி. (௨௧)

வேறு.

ஆதர ரத்தினி மாவளை
மீ தலத்தினின் மேன்மையை
யோத லுற்றவர் கேள்வியர்
நீதொ புரித்தருள் சோர்வரோ. (௨௨)

தலவிசேடச் சருக்க முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் ௬௧௧.

* உறழ்வு ஈண்டு எண்ணின் பெருக்கல்

# தீர்த்தவிசேடச் சருக்கம்.

ஈர்த்த மாவனை யின்புற வோதினஞ்
சீர்த்த மாதவ சிந்தைய கேண்மியா
தீர்த்த மான்மிய சிங்கெனை வோதுமா
ஞேர்த்த மாவன நந்திபி ரானரோ. (௧)

வேறு.

இத்தல மூன்று குரோசவெல் லையினுளெண்ணிலாப் புவனங்க ளிடை நின்
றுத்தம தீர்த்த முற்றும்வந் திலகு முறைப்பசெங் கிளைவெளா முவற்றி
னத்தகு நாம நிகாமே யளவின் றுகலொ லாருயிர்க் கருண்மா
தித்தமே யனைய சிற்சில தீர்த்தஞ் சோலுமாற் றேயுமா தோன்றும். (௨)

ஆருயிர்க் கருளு மந்திர நாத னுவையத் தங்கியம் பரத்திற்
சாருமோர் சரசு திருமல மலிக்குந் தன்மையி னிருமல தடமென் [பெரிதாஞ்
பேருமெம் பெருமான் பிறைமுடிப் பிறங்கும் பெருட்புனற் பெருமையிற்
சீருடை மையினுன் மணிகரு ணிகையென் றிருப்பெய ரும்பெறீஇத்திக
[ழும். (௩)

அத்துணை நாமத் தால்வள ரேல்லை யாமுரு வாயினு மடைந்து
பத்தியிற் படியும் பண்புடை யவர்தம் பவப்பெருந் தவப்பெரும் பாம்பைத்
துய்த்திர ளாகத் துய்த்திடுங் காமர் தோயுருத் தீயெனத் துலங்கு
மித்திற மிதுசேர் மாதிரத்தானு மிலக்குமா லெனைவர்க்கு மின்றும். (௪)

இம்மணி கன்னி கைப்புன றினந்தோய்ந் திடக்கிடைப் பரிதருந் தவங்க
ளும்மையாற் றினர்க்கே வாய்ப்பதா மெனினு முதண்மதி மதிநிறைபருவத்
தம்மணி நீரி லாண்டொரு தினம்வந் தன்பினுன் மாயினி லாடுஞ்
செம்மையோர் முந்நாற் றறுபத்தைந் தினமுஞ் சென்றுதோய் பயன்பெற
[றின்னரைம். (௫)

இறைதிருத் தளிநேர் வெளியினிற் கீழ்பா லிலங்குமோ ரலந்தையங்கிதன் மே
ரறைருப வனுமகுண் டமென் றவன்மு னதிற்படிந் தெண்ணியாங் கடைந்தா
னிறையுமவ் வுறையிற் பௌமவா ரந்தா னிகழ்தி வாரதில் விரண்டிடன்
முறைபுரி நான முக்கிய மென்ப மூதுணர் மேதகு முனிவ. (௬)

சொன்னவா ரத்தின் வாரத்தின் மூழ்குந் தாயர்பன் றேடுலாந்தொலைத்து
வின்னிகழ் இடகாத் திரத்தி ரியமா வீரிய மாதியெவ் விழைவு
முன்னியாங் கொருங்கே யுறுவரோர் நலமு முதவியில் வுதகத்தின் கீழ்பாற்
பன்னருஞ் சிறப்பெண் டிகையினுந் தகையாப் பயிலுமோ ரியலெழிற்பதி
[கர். (௭)

இவ்வாறு மனைய வளக மாதி சேடன்மா தீர்த்தமென் றுமைத்
தவிருமல்வாழி யாழிய சூழி யன்புமிக் கின்புற வடுத்து
நவிலுறு மாக மதியினர் நாளி னனாநான் முறைமையின் மூழ்குந்
இவியரெண் போக மாதிபல் போகச் செறிவெலாம் பிறிவறச் சேர்வார். (அ)

இவைபோ லீச தீர்த்தமென் பெயரே யிச்சய மென்றதை யிறுத்து
மலகினைப் போக நுகர்ச்சியி தொன்றே வருமறை யாகம மாதி
கலைமெலாமுள்ள படியுணர் தெளிவுங் கைவர வுண்மைஞா னத்தாற்
செலவரும்வீடுங் கூடுப சேட தீர்த்தமாண் பெயரிது தேற்றும். (கூ)

வளர்திருக் கோயிற் புறம்பிர தீசி வம்பலி னும்பரும் வழுத்து
நளினியொன் றுளது மார்க்கண்ட தீர்த்த நாமமல் விலஞ்சியை நவில்ப
பளகெலாம் பாற்றும் பவமெலாம் படுக்கும் பாவனம் பவித்திரம் பரமம்
புளகிதக் கருளில் வளகம்பல் கோடி புவனமும் போற்றுமா புவனம். (க0)

சாதவெப் பாற்றிச் சீதள கண்டங் கைம்மதி தருகுரு பூசத்
தேதரு விதியின் மூழ்குநர் பேற்றை யார்கொலோ விசைப்பவர் பெரிய
மேதகையாளர் விழிசெறு *முலகின் மேவிய வாவியும் வெருவுங்
கோதற வுகை மெவற்றினு மாவிக் குவால்கவர் தவாத்திறற் கூற்றும். (கக)

இன்னினி யிதன்சீ ரிசைப்பதை யெற்றுக் கிவ்வொரு திறத்தினாலேனை
நன்னலந்தரு மென்னவு மின்ன நாமமே தோமே னவிற்று
முன்னிய வளிக்கும் வகையவிந் நீர் முதலிடாப் பலன்களொன் றில்லை
யென்னலாம் பொதுவாற் சிறப்புற வகுத்தல் யாவர்க்கு மரிதரிதம்ம. (கஉ)

யாரிய கருபத் திலங்குமோ ரன்னதை யிதன்பெயர் கௌதம தீர்த்த
மாமிதிற் றேரணி பவாம்புதி கடந்து மரும்பெறற் றேரணியா மனைய
தேரிரு பாணி யிணைப்பெற மளிக்குந் திறத்தினிற் பாணியா முதமாந்
தோமிலிக் கமல விமலரிக் கருளுந் தோயமாந் தோயவந் தவர்க்கே.

இன்னன வென்ன வின்னமா வனந்த லெண்ணிலா வெண்ணிலா வேல்லை
மன்னுமத் தொகையே பகர்வரி தெனிலவ் வாழிய சூழிகள் வழங்கு
நன்னலன் முழுது மாயிரத் திரட்டி நாவுளா னேவுளா னவிற்றற்
கெண்ணிலா நுரைப்பர் தாவிபு லாகத் திருமொழியொருவகை யிலக்கும். ( )

---

*. உலகு-திசை.

அறந்தரு மருத்த மாதிய திருத்த மருத்துமித் திருத்தங்க ளருத்தி
சிறந்துமூழ் கியமுன் னுரைத்தநா ளவைதத் தினமுமு குமிதுமர் செல்வர்
நிறைந்துள விட்ட காமிய சித்தி நிகரகோ டிகளொளா கினைவின்
விறந்தொளிர் தரப்பெற் றிம்பர்வாழ்ந் திற்றின் வீடுபே றடைகுவர் மெய்ம்
[மை. (௬௫)

என்றெமை யளிக்கு நந்திவாய் மலர்ந்த வின்னுரை தன்னுளத் திருத்தி,
முன்னெழு தெந்தாய் நின்றனி வாக்க முதந்தெவிட் டெவிலை யெனமுன்
னின்றுபே ரன்பு திமிர்சனற் குமா நிறைதவற் கறைதரு விமல
நன்றிசெய் நந்தி நாதன்மே லென்று நற்றவச் சூதன்பி னவிற்றும். (௬௬)

வேறு.

தீர்த்த மான்மிய மீதுரை சிரிஞெ
ஈர்த்தி தீரவி ளுவின மாதியோர்
கார்த்த மாமலை வாதனை காலூறீஇ
யேர்த்த பொருள் வாழ்வினி லேயுவார். (௬௭)

தீர்த்த விசேடச் சருக்க முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௬௨அ.

# மூர்த்திவிசேடச் சருக்கம்.

மலர்தலை யுலகருண் மறைமக னுதவிய மைந்த தீர்த்தமேல்
விலகரு மகிமையி னெளிர்சில வுணர நின்று மேற்சொல்லா
மலகிரி வானிறை மனுவிறை யருள்குறி யந்தண் மூர்த்தியின்
நலனிடை யொருசிறி துளமுற வினவென நந்தி சாற்றுமால். (௧)

வேறு.

நிருமலமாய் நிர்க்குணமாய் நிராலம்ப நிர்த்தொந்த நேய மாகி
நிருவிகற்ப நிராதார நிர்த்தோட நிட்களங்க நிருவி கார
யருண்மயமா யகண்டைக சுயம்பிரகா சப்பொருளா யனேக மாகி
யருவுருவா யருவுருவுக் கதீதமா யத்துவிதா னந்தமாகி. (௨)

நித்தியமாய் நிறைவதுவாய் நிராமயமாய் நிரஞ்சனமாய் நீளமாகிச்
சத்தியமாய்த் தத்துவமாய்த் தத்துவா தீதமாய்ச் சாந்த மாகிப்
பத்தியமா யத்தமுமாய்ப் பராபரமாய்ப் பாவனமாய்ப் பரம மாகித்
துத்தியமாய்ச் சோபனமாய்ச் சுமங்கலமாய்ச் சூக்குமமாய்த் தூலமாகி. (௩)

சேதனமாய்ச் சிற்பரமாய்ச் சிற்சுகமாய்த் திவ்வியமாய்த் திருத்த மாகிச்
சாதனமாய்ச் சாத்தியமாய்த் தாயகமாய்ச் சமயமுமாய்ச் சமயா தீத
மாதனமாய் வளரமுதாய் மலிசுவையாய் வருமணுவாய் மகத்து வாகி
நூதனமாய்ப் புராதனமாய் நுந்தாத வொண்சுடராய் நொதுமலாகி. (௪)

சமரசமாய்க் தனிமுதலாய்ச் சராசரமாய்த் தருமமுமாய்த் தருமி யாகித்
தமரசமாய்த் தமரமுமாய்ச் சதாகதியாய்த் தருபரிசந் தானாய் ரூப
திமிரனலா யிரதமுமாய் நீராகிக் கந்தமதாய் நிலனு மாகித்
திமிரமொழித் திடுமபரஞ் சிவம்பெருக்கும் பரஞானத் தெளிவு மாகி. (௫)

சகலமதாய்க் கேவலமாய்ச் சுத்தமுமா யவத்தையதீ தந்தா னாகி
யகலமதாய் விகலமுமா யாதிநடு வந்தமுமா யனாதி யாகி
யிகலரிதாய்ப் புகலரிதா யெண்ணரிதாய் நண்ணரிதா யெவ்வாற் றானும்
பகலரிதாய்ப் பின்முன்சூழ் பக்கமேல் கீழ்நாசோற் பவமின் றாகி. (௬)

எல்லாமா யல்லதுமா யெவ்வுயிர்க்கு முள்ளுயிரா யெவைக்கும் வித்தாய்ச்
சொல்லாரும் வித்தின்றித் தோன்றுவதாய்ச் சமீபமாய்த் தூரமாகி
வில்லாரு மணிமார்பன் விரிஞ்சனரி முதலாய விபுத ராதிப்
பல்லாரும் பல்புவனம் பல்கோடி யகிலாண்டப் பகுதியாவும். (௭)

அலரிமுனஞ் சலசமெனத் தன்முனஞ்சேட் டிக்கவம ரசல மாகிக்
குலமறைக டனித்தனியே கோடிகுழாங் கோடியெனக் கூறிக் கூறிப் [துச்
பலமுறையும் பலநெறியிற் படர்ந்துபடர்ந் தெட்டியெட்டிப் பார்த்துப் பார்த்
செலமுடியா திளைத்திளைத்துத் தியங்குறநீண் டொளித்தெங்குந் திகழ்வ
[தாகி. (௮)

ஒன்றாகிப் பலவாகி யொப்பிலதா யெப்பொழுது மொரோப டித்தாய்
நன்றாகி யெவராலு மெவ்விதமு மெவ்விடையு நவிற்றொ ணாதாய்
நின்றாரும் பிரமமென நிகழ்த்துபர சிவஞ்சீவ நிகாம் யாவுந்
தன்றாவி லருளொளியிற் சார்ந்துய்வான் றிருவுளத்திற் றதும்பி யோங்கி. ()

பெருகுதிரு வருளாலிப் பிறங்கமுத சூதவனப் பிரமதேசத்
தருண்மயமா யொளிப்பிழம்பா யமுதசுயம் பிலிங்கவடி வாகி வான்றோய்
தெருண்மலியாம் பிரவிருக்கத் திருவடியின் மூலத்தெழுந்து திகழ்ந்தெஞ்
[ஞான்று
மருமலிகூ விளமிதழி மாலதிமுன் புடைமலர்தூய் வழிப்ப மன்னும். (௧௦)

தன்னருளாற் சுவேச்சையினாற் றனிமுதலா யெவ்வுலகுந் தழைப்பப்போந்த
தொன்னிலைய வன்னவருட் சுயம்புலிங்க மூர்த்திபதஞ் சூழ்ந்துபோற்றி
யின்னருள்பெற் றவர்புயங்க விறைவருணன் மார்க்கண்ட னிந்திரேசன்
முன்னரிவர் தொகைதானு மொழிவரிதா லிவ்விலிங்க மூர்த்திநாமம். (கக)

வானிறைமார்க் கண்டேசன் வருணேச னனந்தேசன் மந்திரேசன்
மருமலர முதசூத வனநாத னுசாத்தான மாதலேசன்
முருகுமல ரமுதலிங்க மூர்த்தியிவை முதலனந்த மொழியுமிந்தத்
திருவருணை மங்கனிதேன் றெள்ளமுதா தியவெனத்தித் திப்பமாதோ. (கஉ)

இன்னவரு ளுமங்க ளெழுகோடி மகாமனுக்க ளொவற்று மேலாம் [றை
பன்னுமுறை பண்பினுரைப் பவர்முறையே பகிர்மதிவெண் பல்வாய்க் கூற்
வென்னலமே பலரோக வெப்பொழிந்து தட்பநிறை விழுத்தவின்ப
மன்னலமே சகலகலா வல்லபமா வித்தைநலம் வாழி மாதோ. (கங)

பூதமகா வேதாளம் பொல்லாத பேய்முதல புரிபல் கோடி
யேதமெலாந் தெறுநலமே யின்னருளாங் குளிர்நிழலா டிருந்து வாழு
மோதநலந் தனிப்பரம முத்திமுதற் றிருக்களெலா முன்னு சாலி
யாதரமீ தருநலமே யபிர்தநல முதல்யாவு மடைந்து வாழ்வார். (கச)

இத்தகுமந் திரநாதற் கின்னுமள வின்றும மிசைப்ப விந்தச்
சத்தியவா னமுதலிங்கத் தனிமுதலித் தலமொன்றிற் சமட்டி யாரும்
வித்துருவா யுலகமெலாம் விரிந்துமுளைத் தாங்காங்கு வியட்டி யாகு
முத்தமமா வருட்குறியா முதுபுலியீண் டேகினுமே பொலிந்து மின்னும். ()

திருவமுத லிங்கமெனுந் திறனடைந்தார்க் கருள்செயலாற் றேற்ற லன்றி
யுருவமும்வெண் ணிறனேயா யொருவாம லெஞ்ஞான்று முலகர் யாருந்
தெருளியதேற் றுறுமிந்தச் சிவலிங்க மூர்த்தியைப்போற் சிறந்த மூர்த்தி
யிருநிலத்துந் தருநிலத்து மெந்நிலத்து மில்லையென வெரிகை போற்பாம். ()

நவிலருமிச் சூதவன நாதனடிப் போதிதய நளினப் போதி
லவிர்தரமெய் யன்பொடுமெவ் வாயுநற் காலையினி லடைந்து சூழ்ந்து
பவியமுறத் திருமுன்பு பணிந்தேத்தும் பண்பினர்பாற் பதியான் முற்றுந்
திவளறம்பல் கோடிகளுஞ் செறிந்துளகுற் றேவலெலாஞ் செய்து சூழும். ()

பனகமணி மனுவிறைவன் பதப்போது பகற்போது பாவிப் போது
மெனவருமெய் யன்பொடுசென் றேத்துநரெத் தேத்துமுல கேழுஞ் சூழும்
வனதிதிசொன் னவதிதிபொன் மணிநிதிமுற் பொருள்கருணை வளநீ டாயுள்
புனைபொருள்கண் முதலாய பொருள்களெலாந் தமைச்சூழ்ந்து போற்ற வா
[ழ்வார்.

ரி மலருமுடி மனுவிறைபொன் மலரடிகண் மாலைக் காலை
் துதிப்பணிமெய் யன்பர்பல வின்பவகை யனைத்துஞ் சூழப்
பி சாரிறைபல் *போத்திருவா குவருத்த யாமப் போதில்
றபோற் றுநரமல மெய்வீட்டிற் பேரின்ப மேவி வாழ்வார். ()

குருபூச மதிநிறைநாள் வானுணர்ந்தம் மந்திரேசன்
பதமுறையிற் பணிந்தேத்தும் பண்பினரெப் பாவ தாவ
போய் நிகரரிய நின்மலராய் நினைத்தவெலா நீங்கா தோங்கச்
தீபமெனத் தேசமொளிரஞ் சீர்பாவச் சிறந்து வாழ்வார். (உ.௦)

வேறு.

மந்தி ரேச னிம்பரோ டும்பர்க் கின்பந்
ங் தருள்வி ழாக்கொள் சைத்திரோற் சவநாண் முற்றும்
திறைஞ்சு மன்பர் மண்மகார் செல்வ மாதி
விழாமுற் றெய்திச் சிவகதிச் செல்வ ராவார். (உக)

். சூத கானஞ் சென்றுநா மந்தி ரேசன்
ரம்பு சாத மலரடி பணிது மென்று
நெறிச்சென் றுரும் வந்தினி திறைஞ்சி னாய்க்
பௌவ நீந்திக் கதிக்கரை சேர்வர் திண்ணம். (உஉ

ாலக்கண் யாதுங் கண்டிலர் பணிந்தார் தம்மை
க ளெல்லாம் போற்ற வமர்வரா னினைந்து ளாரிம்
ி லின்று மோர்கால் வருநினை வடையார் வாய்மை
சூத கான மந்திர நாதன் பாதம். (உங)

ர்க் கெந்தை யீயு மின்னரு ளின்ன வென்னின்
னமுத சூத முளரிவாழ் மந்திரேசன்
யம்பு சாதந் தனிபுகுந் தனிமீ தார
ன் னியதி வாய்ப்ப வழிபடூஉ வழுத்துஞ் சீலர். (உச)

ர் மெழுகல் பூக்கொய் தலிடா வலங்க லாற்ற
ற காலந் தோறு நல்குத னல்கு வித்தன்
் தூப தீபம் வயக்கலப் பாச னம்பொற்
கலயின் றேசைக் கண்டைமுன் னுதவல் செய்வோர். (உரு)

---

திரு—போகநுகர் கர்த்தா.

மறைமுத லிறைசி வாக மம்முறை வழாகி பந்தங்
குறையற வளித்து நாளுங் குலவிய நடாத்து மேலோர்
நிறைமணிப் பொற்றே ரூர்ந்து நிமலனெவ் வுலகு முய்வான்
முறைபுரி திருவி ழாவம் முறைபுரி திறமை யாளர். (௧௬)

மந்திர நாத னென்று மகிழ்ந்துவீற் றிருந்து வாழு
மந்திரத் திடைக்கி லங்கண் மருவினுங் குடனுறர் வஞ்சு
மந்திரங் குளம்ப தைப்ப மணிபொனு திகளி னூலே
மந்திர மாக மூல மந்திர மெனவ யங்க. (௧௭)

புதுக்கியெவ் வுலகும் போற்றப் பொருவில்பே ரறத்தி னீண்டு
நிதிக்குவை மனைம கார்மு னிறையத்தா மொன்றை வேண்டா
மதிக்குளிர் நிட்கா மத்தான் மலர்திருப் பணிமெய் யன்பான்
முதுக்குறைந் தருணா லாற்றின் முதமிகப் புரிமே தக்கோர். (௧௮)

அணிமணிச் சாத கும்பத் தணிகள்பற் பலவ ளிப்போர்
தணிவிலா னிரைவ ளர்த்துத் தக்கபா றருவோர் நந்த
மணிவனம் பெருக வைத்து வளர்ப்பவ ரிளைமுன் னும்பல்
பணிபுரி பவர்தம் பேறு பகரவோ ரளவிற் றுமோ. (௧௯)

முரிவிலா வளியோ டேனை மூர்த்திகண் முன்னா ராற்றுஞ்
சரியையே கிரியை யாதி சாற்றுபஃ றிருத்தொண் டெல்லா
முரிமையிற் றருபல் பேறு மொப்பிலா வமுத லிங்க
தெரிசன மொன்றே நல்குஞ் செப்பிய துண்மை மன்றே. (௨௰)

மந்திர மெவையு நூலின் வருமுறை பகர்பே றெல்லா
மந்திர வேள்வி யாவு மரபினிற் புரிபே றெல்லா
மந்திர நிரைக ளேவன் மலியுமெண் சித்தி யெல்லா
மந்திர நாதன் பாத வணக்கமே யருளு மாதோ. (௨௧)

இம்பர்வாழ் வனைத்தும் வானத் திந்திர னயன்மா லோனை
யும்பர்வாழ் வனைத்து மேலை யுருத்திரா தியர்பு ரக்கு
மம்பர்வாழ் வனைத்து மப்பா லமலவாழ் வனைத்து மெல்லா
நம்பர்வாழ் மந்தி ரேசர் நியமபூ சனையே நல்கும். (௨௨)

இன்னருண் மந்தி ரேச னீண்டுசெ யருள்வி லாச
நன்னிலை யுள்ளத் தாலு நாடரி தற்ப மேனு
மென்னிலென் னளவோ முற்று மிசைப்பதிங் கிசைத்த வெல்லை
பன்னணு வொன்றிற் கோடி பங்கிலொன் றேனு மின்றால். (௨௩)

என்னவாய் மலர்ந்த நந்தி யெந்தைதாள் சனற்கு மாரன்
முன்னமங் கின்ப வாரி மூழ்கி நீடார்வங் கூர்வ
துன்னுபு பின்னு நந்தி யோதுமென் றேதில் சூத
மன்னருண் முனிவர் கோமான் மாதவர் கேட்ப வோதும். (கூச)

வேறு.

இந்தவருண் மூர்த்திவா னின்பினவி யாற்சொலுநர்
முந்துசெவி வாய்க்கொளுநர் முன்செய்வினை பாற்றிநிறை
யுந்துலக வாழ்க்கைமுழு துண்டருளி னீற்றினர
வந்தண்மலர் தாட்கமல வங்கணிழன் மேற்பொலிவர். (கூரு)

மூர்த்தி விசேடச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ஈகூங.

---

# சூதவனநாமகாரணச்சருக்கம்.

எந்தை தூயமு தங்கொண் மேனியி லிங்க மேன்மையி சைத்தனை
யிந்த மாதவ மந்தண் மாவன மென்ற நாமமி சைக்குமுன்
வந்த காரண முந்து காதைவ ழங்கு வாமனெ னத்திரு
நந்தி நாயக னன்பி னோடுக வந்த வாவின விற்றுமால். (க)

வேறு.

இனிது கேண்மதி முனிவர் மாதிரி யெனுஞ்சீர்ப்
புனித மாண்சனற் குமரனே பூருவத் தலைவோன்
றனைய ரேதிய காசிப முனிவரற் றழுவு
மனையர் கத்துரு வினதையென் வனிதைய ரிருவர். (உ)

மனைவ மர்ந்தன ரோர்வயி னிருந்துழி மகவான்
றனது வானிற வுச்சயிச் சிரவமென் றருபேர்
வினைது ரங்கமஞ் சேய்மைகண் டனையமங் கையருண்
முனைய ளாகிய கத்துரு வினதைநேர் மொழியும். (கூ)

எங்கை யொப்பரி யிப்பரி யினதிலாங் கூலம்
பொங்கு வான்மைகொ ளின்மைகொல் புகல்கென வவடன்
றங்கை வான்மைய தென்னவத் தமையின்மூத் தவடா
னங்கை மின்சொலொல் வாமணி நிறத்தென நவின்றாள். (ச)

இன்ன வாறவர் முரணுழி யெம்மிலார் தோற்று
ரன்னர் வென்றவர்க் கடிமையா குகவென வவண்சூள்
பன்னி னவர் தம்மிலக் கத்துரு பாந்து
துன்ன னந்தன்முற் பணிச்சிறுர்ப் பார்த்திது சொல்லும். (௬)

வருக நம்பணி மருப்பணி மைந்தர்காள் வானப்
புரவி வானிற வானிறங் கரிதெனப் புரிதற்
குரிய தெவ்வழி யவ்வழி புரிகென வுரைத்தா
ளரவ மைந்தராங் கடாதென மறுத்தன ரவருள். (௭)

அனைமு னிந்துவை சாபவெம் மொழியினை யஞ்சுந்
தனைய னயகார்க் கோடகன் றாயடி பணிந்து
முனிய லன்னைநின் கருத்தினை முடிப்பலென் றதன்வாற்
றுனைபு சென்றிது குறத்தழீஇக் கரிதெனச் சூழ்ந்தான். (௮)

பின்னை முன்னையள் பின்னைநேர் பின்னைய ளுடனே
யன்ன வான்பரி யுலவுமா லாழியின் புறம்போந்
தின்ன வாலதி யெங்கிறத் தெனத்தெரிந் திளையாள்
சொன்ன நீர்மைய தேயுனக் கடிமையான் றேருகாய். (௯)

என்று கூறிமுன் னவள்பணி பணிகடா னியற்று
நின்ற நாளவ டனையன்வான் கிளர்சிறைக் கலுழன்
றன்ற னிப்புறத் தருணனுந் தன்முனைத் தாங்கி
யொன்று மெய்ம்மொழிக் கனைதயாம் வினைதயாங் குற்றுன். (௧௦)

உடன்பி றந்தவச் சத்துரு கத்துரு வுறுகண்
டடங்க லாச்செருக் ககங்கொளீஇ யிளையளை யழைத்தே
தடம்ப ணித்தலம் புகுதநம் முளத்தவாத் தழைத்த
தொடர்ந்துன் மைந்தனுஞ் சிறுர்ச்சுமந் தேகுறத் துனையா. (௧௧)

நம்மை நீசுமந் தேகுதி யென்னலான் னணமே
யம்ம பின்னவ ளன்னிள மகற்பணித் தவளை
யிம்மெ னச்சுவன் மிசைச்சுமந் தாம்புகுந் திடுப்ப
வெம்மை மங்கையோ டக்கொடி யவள்விரைந் திழிந்தாள். (௧௨)

ஆங்க ணிச்சையி னுலாவுறு மப்பணிச் சிறுர்தம்
பாங்க ழைத்தனர் கலுழனை நாமிவண் பலவா
யோங்கு தீவங்கள் காண்விருப் புற்றன மெமைநீ
தாங்கி யேகுதி நம்பணித் தாதிதன் றனைய. (௧௩)

என்ன வோதின ளப்பணி யிழிபுரை யெனுந்தீக்
கன்ன பாகத்தைச் சுட்டிடப் பொருமையக் கலுழ
னன்னை பாலுற்றி யென்னையிவ் வறிவிலாப் பணிக
ணின்னை யீன்றெந் தாதியென் றேவிய நிமித்தம். (க௩)

உள்ள வாறருள் கென்றடி பணிந்துநின் றுரைப்பக்
கள்ள வாமதுப் பொழிமலர்க் கருங்குழற் கனைத
வள்ள வார்மணி மலைமுலை வழுக்கிலா மனைத
வெள்ள வான்மலர் மதிமிக மதிமுக வினதை. (க௪)

அருமை மைந்தகே ளென்முனே ளெனேமுனே னாகனேர்
திரிய வஞ்சகத் தடிமையாக் கொண்டவச் செயலா
லுரிய மைந்தனுந் தாயுமா மிருவரு மொருவர்
புரிய லாவிழி தொழில்புரிந் திப் புன்மையே பூண்டேம். (கரு)

என்ன வாய்மொழி தாய்மொழி கேட்டிகற் கலுழ
னன்னை முன்னையள் கத்துரு சத்துரு வாகி
நின்னை யேவல்கொள் கொடுமையா மடிமையி னீங்கற்
கென்னை செய்தொழில் சொல்லுதி வல்லையென் றிசைத்தான். ()

தனையன் வாசகந் தனைவினய்த் தனையிலா வுவகை
யினைய மைந்தனை மைந்தவப் பணிச்சிறு மிடையென்
னனைய மைந்தவில் வடிமைநீங் கியநமக் காற்றும்
வினைபு ரைத்திராற் றுவலென வினவென விடுத்தாள். (கஎ)

அன்ன பன்னக மைந்தரை வினவின னவ்வா
றன்னி யன்னயக் கலுழி முகமதித் துரைப்பா
ரின்ன லந்தரு வானமு தெமக்கிவ ணீதி
யென்னி னின்னனை யடிமையை நீக்குது மென்றார். (கஅ)

வியனு லாம்பொறைக் கனைதையார் மனைதயார் வினைத
வயந்தி லாவுசெய் வந்தவட் பணிந்தனுய் வானத்
தியலு மாமுத தங்கொணர் வான்வழி யிளைப்பின்
றுயவு றுவிலொன் றுதவுதி யாலென வுரைத்தான். (ககூ)

உதவி றுளவற் குரைக்குமென் னும்பலே யும்பர்
பதவி நீபுக வாற்றுறு விழைவுறிற் படுநீ
ருததி வைகுநர் வேட்டுவ ருண்டிநீ யுணுங்கான்
மதர்வெ ரிங்கண்வேட் டுவர்பினை வேட்டொரு மறையோன். (உ0)

ஆங்கு வைகுமா லவனேநீ யெடுத்துரை தைய
வோங்கு வான்புகுந் தமுதுகொண் டொருநியிங் குறுதி
தேங்கு நின்சிறை மூன்றுறுப் பியாவையுஞ் சிறப்பப்
பாங்கு வாயுமுற் சுரர்புரந் தருள்கெனப் பகர்ந்தாள். (உக

அன்னை பேசிய வாசிய ஞர்கலி யணுகித்
துன்னு *சில்லரை யுண்டனன் கண்டமீச் சுடுதீ
யென்ன வேதியன் கனன்றிடக் கான்றனை னெழுந்தம்
மன்னர் முன்னையெனன் பன்னியும் வழங்கருள் வள்ளால். (உஉ)

(வேறு).

என்னலுங் கிராத மாதை விகங்கவேந் தினிது கான்றிம்
மின்னெறிங் கிராத சேறி வேதிய வெனுவி டுத்துப்
பன்னுதன் றுதை காசி பன்னிடம் புகக்கண் டன்றே
னென்னிவட் சேறி மைந்த வென்னமுன் னிகழ்வி சைத்தான். ()

சொல்லுவான் மேலு மெந்தாய் சுடுபசிக் காற்ற தாற்றி
னெல்லையில் சில்லர் பல்ல ரென்வயிற் றெல்லை யிட்டும்
வில்லழல் கொளுத்த நொந்து விலிந்தனன் சிறைக ரிந்த
வொல்லைநல் லுணவொன் றைய வுதவென வுதவு தாதை. (உச)

பன்னுவான் விபாவ சுப்பேர்ப் பனவனு மிளவ லான
வுன்னுசுப் பிரதீ கன்று னும்பொருள் குறித்துப் பூச
லுன்னிய விளைத்துத் தம்மிற் சொற்றனர் சாப மற்றுன்
முன்னவன் கமட மானான் முரணிப மானான் பின்னோன். (உரு)

புகலுமிக் கமடம் வேழம் பூருவ வயிரந் தீரா
திசலியித் தடத்தி னுற்ற விக்கரி யுச்ச மாறு
தருமுடற் பரூஉவி ரட்டி யோசனை சாற்றுங் கூர்மத்
தகலமோர் பத்தா முச்சத் தளவையோ சனைமூன் றமால். (உசா)

எகியிங் கிவற்றை யுண்டாங் கெரியழற் பசிதீர்ந் தப்பாற்
போகிநீ போகில் வேந்த போகியூ ரமரி கொண்டு
வேகியாய் மீளு கென்றான் விரைந்தவண் விகங்க ராசன்
றாகியா யக்வி ரண்டுந் தாளுகி ரிடையே கவ்வி. (உஎ)

விசைகொடு கிளம்பி நூறி யோசனை மேக்கு யர்ந்த
பசையுரோ கிணிநா மத்தொண் பாதவ விடபத் துற்ற
னசையுமக் கோட ரந்தா னுற்றெறு திறவப் போதத்
திசைகொண்மா தவத்தின் வால கில்லிய விருடி கூட்டம். (உஅ)

* சில்லர் - வேடர்.

வாவலி னப்பணைக்கண் மன்னுபு தூங்கக் கண்டா
னவிவர் வீழ்வர் கீழென் றகநகைக் குற்றக் கோடு
மேவுற வுடன்ற பூஇவிண் மீச்செலக் காசி பன்கண்
டோவிலிவ் விடப மெல்லை யுத்*தரத் தமைய வைத்தி. (உகூ)

ஐயநீ யென்று னவ்வா றத்தரத் திளிது வைத்து
மையிகல் வேழ மாவுங் கமடமோ தகமும் வாய்ப்பெய்
தொய்யென வுவணை மேலவ் வுவணைவேந் துறுங்கா லன்ன
தெய்வநாட் டெற்பா தங்க டிகழுமுன் கண்டான் வேந்தன். (௩௦)

அச்சமிக் கண்ணே யென்னீ தவம்பல காட்டெற் பாத
நிச்சயித் தருள்கென் றுசா னோர்பணிந் தியம்ப வன்றேன்
முச்சகம் பரவு வேந்த முந்துகா சிபன்று ரைத்து
மெச்சநற் பண்டங் கொண்டாங் கெய்திய வேலைச் சென்றார். (௩௧)

வாலகில் லியர்க ளங்கைப் பெருவிரன் மானு மெய்யர்
சாலமன் சுமைசி ரத்திற் றாங்குபு சரிசெல் காலைன்
காலுழுங் குளநீர் மூழ்கு வாத்திரர் கலையே றிச்செல்
வேலைநீ யசித்தல் கண்டார் விழியெரி கதுவ நோக்கி. (௩௨)

இவற்கொரு விரோதி தோன்று கென்றவி சொரிந்து நோற்றார்
சிவத்தவர் கறுப்ப நீசெய் தீமையாற் காசி பன்பாற்
றவப்பெருங் குமரன் போந்தான் றன்சிறை யிரண்டி லொன்றாற்
புவிப்பரப் படங்க மூடும் புள்ளர சனைய மைந்தன். (௩௩)

அமரிகொண் டேகு மிங்கு னனையுமவ் விகங்க நாத
னிமிருமுற் பாத மிற்று னிகழ்ந்தவென் றுரைப்ப வேந்தன்
கமையொலி யழலோ னாதிக் கடவுளர்க் கூவிக் காசி
னமதால் கரோது புள்ளி றைதன்வேட் டெழுமிங் கென்றான். (௩௪)

அதுவினு யமரர் யாரு மமர்விழை யணிகஞ் சூழ
முதுகய வரவு நீப்பான் முயலுபு முயல்சூழ்ந் தாங்குக்
கதுமெனச் சுதையைச் சூழ்ந்து காத்தனர் வருப தங்க
பதிமுதிர் வரைகள் சாயப்† பங்கறே பலத்தின் வீழ. (௩௫)

---

* தரம் - மலை.

† பம் - விண்மீன்.

அண்டமுங் கிடுகி டென்ன வரிப்பிர ளயமே யென்ன
மண்டொலிச் சிறக ரீற்றின் வளரொலி கிளர வீசிக்
கொண்டெழல் கண்டா ரண்டர் கூறுமாத் திறையோன் றப்போர்க்
கண்டக ரத்திற் கூடக் கைகுலைத் தோடி யெய்த்தார். (௩௬)

நின்றவர் சிலரந் தோவெந் நீள்விழி முகிழ்ப்பி னாலும்
நன்றல முகிழ்க்கு மேலிந் நடுவற்கு நடுங்கா துள்ள
மென்றினி யோடினாலு மிவன்விடா னென்று நின்றார்
வென்றியி னமர்வா ரென்ன வெரிமுனும் விபுத ராங்கே. (௩௭)

ஆற்றல்சால் சகுன வேந்த னவர்க்கப சகுன மென்ன
வேற்றனன் செஞ்ச ரந்தாம் பஞ்சர மெனவி லேகர்
தூற்றின ரவைதன் பக்கத் துணையினு லுக்க பின்னர்ச்
சீற்றமேல் கொடிய தங்கச் செம்மறன் சிறகர் வீசி. (௩௮)

வலனுறக் குவிப்ப வோர்கான் மாதிரத் தளவும் போத
னலிவுற வருதல் பல்கா னண்ணின ரமர ரப்பேர்த்
தலையெழுத் திரித லன்னோர் தலையெழுத் தாக வப்போ
தலகுள துண்ட மொன்று லகிலாத் துண்டஞ் செய்தான். (௩௯)

உம்பர்கு ழும்ப ரெல்லா மொழிதலு மங்கி நாளுள்
வெம்புளந் தாப்பத் தாண்டி வெம்படை யேற்பப் புள்வேந்
தெம்பர்மா நதிந தங்கள் யாவுமுண் டுமிழ்ந்தா னங்கி
யம்பர்மெய் கரிந்தி ருந்தை யாய்ச்செய லற்று நின்றான். (௪௦)

துணிவினோரிமையில் வென்று னிமையிலவ் விமையோர்தோற் றார்
கணிதரு மிதற்கு நானே கர்யென்பான் போற்க ரிந்து
பிணிமுகத் திறையால் வன்னி பிணிமுக னேய பின்னர்த்
தணிவிலா ரமுத மன்னுந் தகுமிடம் புகுங்கா லாங்கே. (௪௧)

பன்னக நிரைக ளங்கி படுவிடங் காரி ரும்பா
லன்னவா ரமுதைச் சூழு மரணங்க டரண மாகத்
தன்னல காற்று ணித்துத் தனியுட லொடுக்கித் தீகோன்
றென்னலர்த் திசைத கிக்கு நேமிகண் டென்னு ழைந்தான். (௪௨)

தருப்பைசூ ழமுத பூரி தக்கன கடங்கைக் கொண்டு
பொருப்புவேர் பறியச் செல்காற் போந்துமா தவனே ரண்ணல்
விருப்பமீக் கூர்ந்தா மீண்டுன் விறலெறீஇ வேண்டிற் றென்கொ
லொருப்பட வளித்து மிற்றென் றுரைத்தியா னுவண னென்றான்.

மாதவரீ னமைச்சுமக்கும் வாந்தருகென் றதுபெற்றச்
சீதானை நினைக்களித்துஞ் செப்புதிநின் வேட்கையென
வோதினனக் ககபதிமா லுதுகேட்டாங் கூர்தியெனக்
காதியென வமுதிதுசென் றளித்தபின ராதுமென. (௪௪)

தருவரமால் கொண்டுறப்பொற் றருவரமால் வெருவரநெஞ்
சருவரவா னமுதிழந்தற் காற்றமைத் துணிந்தொருவா
னொருவரும்போர் னணிபுரிந்தங் கொருவகையு மய்வின்றி
வருவயிரப் படையாலி வாங்குகென வெறிந்தார்த்தான். (௪௫)

வருகுலிசந் தெரிகலுழன் மகபதிநீ தகவிதன்
மருவினை தயிர்க்குலிசம் வறிதாறன் மாண் பன்றெனது
பொருசிறையி னிறகொன்று தருதுமெனப் புகன்றுதிர்த்தான்
பெருகொளியெண்டிசைநிரம்பப் பிறங்கியதா லிறகாங்கே. (௪௬)

ஊழ்த்தவிற கொளிப்பெருமை யுள்ளபடி யுணர்ந்தெவரும்
வாழ்த்தினரார் சுபன்னனென மகபதியக் ககபதியைப்
போழ்த்தவல கிலகுபடைப் புள்ளரசே தெள்ளமுதங்
காழ்த்தமனத் தினர்க்களிப்பக் கைக்கொடுசெல் கின்றனையால். ()

அன்னவருண் டமையடர்ப்பா னதிகரித்தா லுனக்கந்தோ
வென்னவருஞ் சுதையிதையிங் கீதியென விரந்துரைத்தான்
பன்னவருந் திறற்கழலுன் பரிந்துரைக்கும் புரந்தரனே
நின்னவருந் தந்தனந்தி நிறையமுத கடமிதனை. (௪௮)

யாயடிமைத் தொழிலொழிய யான்கொடுபோய் வைக்குமிடத்
தேயுடனீ கோடியென விசைந்தரிபி னசைந்துவரப்
பாயவகன் காயநெறி படர்புதிற லடல்வயின
தேயன்மதி தலைமடுத்த தென்கடன்மீச் செல்கின்றான். (௪௯)

அப்பெரிய திறற்கலுழ னகல்வானத் தாழுகாலை
யொப்பருமந் திரநாத னுலவுதிரு வருள்பொழித
லிப்பரிசே யெனவுணர்த்த விருசிறைக்கால் விரைசெலவாற்
றுப்புறுமக் கடத்தமுதத் துளிசிதறி நிலம்வீழ்ந்த. (௫௦)

அத்திவலைக் குலவிரிவீழ்ந் தமரிடமக் குரோசமதா
மெத்திவலை யம்பெறுமவ் வியலிடந்தான் கீட்டிசையி
னத்திவலை யொத்தமுலை நகமகள்பா கன்றொண்டர்
பத்திவலைப் படுபரமன் பயிலுமிடம் பாவனமே. (௫௧)

ஆதியருள் கடிக்குளம்வே தாரணிய மமர்ந்திலங்க
வீதிகோத் திரகருப மிசைக்கோடிக் குழகர்தளி
யோதகத்தி யான்பள்ளி யுற்றிலங்க யாமினிய
மாதிரத்திற் றளநகர் மறிந்தொவா ரிதிதிகழ. (௧௨)

வருதிருத்தி யம்பாத்தின் மறைபரவுந் தனிச்சேனுத்
திருவிரா மேசதலந் திகழ்தாப்பச் சிமவுலகி
லருள்பொழியுங் கொடுங்குன்ற மமர்ந்திலங்க லரியரிதம்
பரிதிநிய மம்பூவ ணூர்பயிலக் குபேரதிசை. (௧௩)

பன்னரியபொன்னினதி பாதாளீச் சுரந்திகழ
மன்னுதிற லீசான வம்பலிடைச் சிற்றேமந்
தன்னிகர்சீ தளகந்த தாபாரி சாதவன
மென்னவளர் திருக்களரென் றியம்புதல மினிதிலங்க. (௧௪)

முத்திதரு திருவருட்பா மொழிதலமிவ் வெண்டிசைசூழ்
மத்தியநா யகமாகி வயங்கருண்மா தலமாமா
லத்தனரு ளெனவானின் றுங்குபாம் புறவீழ்ந்த
புத்தமுதத் துளிநின்றும் பொலிசூத முளைத்தெழுந்த. (௧௫)

வாகீசத் திருவடிகள் வாய்மலர்ந்த தமிழ்ச்சுருதி
மீகாண விச்சின்றி நாறுசெய்வா னெனவிதந்த
மாகாசின் மொழிப்பயனேர் வயக்கியவெம் பிரானருளா
லேகாணத் தோற்றினன்கொ லெனவெழுந்த சூதமொ. (௧௬)

அண்ணலுயிர்க் களிப்பதரு ளனுவெளினு மகண்டமதா
யெண்ணரும்பல் பயனளித்தாங் கிணையிரிய விரிந்திடம்போற்
றண்ணமுதச் சிறுதுளியிற் றழைத்தெழுமாம் பிரங்கரம்
விண்ணரித முற்றளந்து விரிந்தபலன் புரிந்தபல. (௧௭)

எண்ணியவா கலுழனடந் தின்சுவைதப்பொற் கடநாகர்
கண்ணெதிர்வைத் தனையடிமை கடிந்தளித்த கடனளித்தான்
விண்ணவர்கோ னன்னவன்சொல் விரகினு லக்கடங்கொண்
டெண்ணிறையு மகிழ்சிறப்ப வுவணைபுகுந் திவிதமர்ந்தான். (௧௮)

அணுவுதவி செயினுமலை யளவுதவி யவர்க்கருணற்
குணநிதிகள் செயல்காட்டுங் குளிரமுதத் துளியுதவிக்
கிணையிறல மிதுதிரட்டி யின்னமுதும் பருக்களித்தாங்
கணையுநிறை மதிகரத் தலிதருசே காநிகரம். (௧௯)

நமதமுதத் துளிபரந்த நறுந்தலமந் நிரநாதர்
தமதருளிங் கெளிதெமக்குச் சார்மெனவந் துடற்கண்ணர்
கமமுறல்போன்ம் விரவுசுவா சுதமாதி பாதிநுகர்ந்
திமைதருபல் வடிக்கணிறை யிரதமகீ ருகங்கரம். (௬௰)

வித்தின்றி முளைத்தெழுந்த வீறுயிர தாபமிறைந்
தெத்திசையும் பரந்ததென விளங்குளிர்கான் செழுழிர்மாழை
யத்தனலோ திமமுச்சி யலைவன்மறை யோதிமமே
யொத்தவடிக் குடாவடி *விண் ணேச்சுமடிக் கடாக்கிடியே. (௬௧)

திசைக்கரிய முகக்கவளந் திரள்கொடுக்கும் பாகரென
விசைக்கரிய சுவைக்கனிநாங் கிருந்தாகை திகையுரிஞ்சு
மிசைக்கரியன் சுதன்மைமுனம் விரவுகுளிர் நிழல்பரப்பு
நசைக்கரிய முசுக்கலைபன் னலனுகர்தே மாந்துருமம். (௬௨)

சேதார முகந்தெறிபசு நிரைத்தடநீர் பருகுபல
சேதார முகந்துதிர்பசு நீங்கனியா தியநுகர்வ
சேதார முகவடிவுஞ் சேராத தீர்க்காயுட்
சேதார முகந்துறுமிச் சீர்த்தருமஞ் செப்பரிதால். (௬௩)

புன்னைநற வங்குரபம் பூமிலாங் கலிகுடசம்
முன்னைவழை வில்வம்விளா முண்டகமா ரஞ்செருந்தி
வன்னிகளா விதழியலா வருணமரந் தஞ்சாளம்
பன்னிலகு சங்கோங்கு பாடலமுன் னீடலவன். (௬௪)

மாதவிதண் மெளவன்மனை மாலதிக மாலதிகள்
போதவிர்வண் சாதிமணம் பொலிமயிலை சண்பகமே
யாதியபைந் தாதவிழு மல்லிமலர் வல்லியெலாம்
பாதவமீப் பிரிவின்றிப் படர்ந்தொளிரு மடந்தையர்போல். (௬௫)

குறுகுலசோ கிலைகாளங் குயிற்றமிரு தங்கமரி
மதுகரம்யா ழிசைப்பமுசு மலர்கரதா ளம்மசைப்பச்
சதிமுறைறமை வழாமையயற் றடமஞ்ஞை நடம்புரிய
முதுகனிப்பொற் றிரளையருண் முதவமுத சேகரங்கள். (௬௬)

மாதவர்கை யிளநறும்புன் மடிநுகரு மானினங்கண்
மேருநடச மலதிடுவ வழுவைகிரி வாலதியாற்
போதகநீர் தெளிப்பவரி பூக்கொய்பணி தருஞ்சாபர்
நீதிவினைச் சிறைச்சிவிறித் திருத்தொண்டு செயுமாங்கே. (௬௭)

* விண்ணேச்சுமடிக் கடாக்கிடி விஷ்ணுவாகிய சூகரவராகம்.

கிளையமர்பைங் கிளைபுணர்தன் கிளைநுகரக் கிளைவானின்
விளைமலர்தூய் விளைதருவின் விளைக்கனிகொ ளுத்தரவக்
துளையெறிந்துள் ளுளைவுறவேம் புணக்கொடுத்தாங் கடன்றிரு
டளையினுமிக் களைதருமா விலைச்சுவையு ரிலையதுறும். (கஅ)

வேறு.

இன்னதனிச் சூதகிளை யின்சுவையா ரமுதமய மிருமைந் நேசன்
றன்னருளா தலின்வானந் தருமமுதி னுடற்குறுதி தருதலன்றி
மன்னுமுயிர்க் குறுதியையும் வளர்ப்பதெனு முளப்பொலிவு மருவுவாஞ்சை
துன்னுதபோ தனர்மலத்தின் றுகைமுனியுந் தகைமுனிவர் சூழ்ந்தாரங்
[கே. (ககூ)

காசிபர்மார்க் கண்டர்கௌ தமர்பிருகு கடயோனி கர்க்க ரேவி
யாசர்சுக ரத்திரிகுற் சகர்புலகர் யஞ்ஞபா லகர்பா ரத்து
வாசர்சனுர்த் தனர்சனகர் வருணர்சனந் தனர்சத்தி வாம தேவர்
கோசிகர்ப ராசரர்க கோளர்புலத் தியர்வசிட்டர் குற்ச ராதி. (உo)

சிவமுணர்மா தவமுனிவர் திருவமுத சூதவனந் திகழச் சேர்ந்தே
புவமனிலா வுவகையரா யொருபோது மொருவாத வுளத்த ராகி
யவணுறைபல் லாச்சிரம மாமுடச மாக்கியினி தமர்ந்தா ரந்தத்
திவியமுனி சிகாமணிகள் சீலகுணச் சிறப்பெவர்வாய் திறக்க வல்லார். (உக)

அன்னவர்தா முன்னமர்சீ ரருட்கைலை மந்தரமே ருவைமுன் னுமு
மென்னசிவ தலங்களினு மிலங்குசிவ தீர்த்தமெலா மிவண்வந் தென்று
மன்னுகவென் றுன்னினரம் மாண்புணர்ந்தாங் கனைத்துமொரும் வையந் மந்
தப், பன்னரிய தீர்த்தமெலாம் படர்ந்தவண்பஃ றடங்களெனப் பாய்ப்பி
[ன்ற. (உஉ)

களியளியுண் டுவட்டெடுப்பக் கமழ்பிரசப் பெருவெள்ளங் காலு நாளும்
வளர்கமலத் துணைகுமுத மலர்த்துணைகு வளைத்துணைமை வளத்தை யுள்
ளிட், டுளபொருள்கட் குறையுளென வொளிர்தருமவ் வயர்தடங்க ளுவமை
தென்றும், புளகநவிப் படியிலெவர் படியினுஞ்சூழ் பாவமறப் பண்ணுவ
[தும். (உங)

மாதர்வன சம்மனையின் மாளமணம் புரியவன மலிவெண் சங்க
நாதமிசைப் பனகுமுத நற்கடரேந் துவகித நறுந்தேன் பாடும்
சீதமா கதக்கலசித் திலநீராஞ் சனந்துளிகள் செறியு மம்பு
சாததமா லம்வளைப்பத் தக்கமுய சொலிப்பனபோ தகங்க ளாங்கே. (உச)

வாளைகள்*வான் றவரெனவவ் வாவியினும் வாவியெழில் வளர்சூ தத்தின்
ரோளிர மோதுதலுந் தருஞ்சுவைமாண் கனிகள்பல தருவ தாமே
கோளுறுநெஞ் சினர்தீமை குயிற்றிடினும் பொறுத்ததனை குணமாக் கொ
ண்டு, மீளவுநற் பலனுடனே மிக்களிக்குந் தக்கவர்செய் மேன்மை காட்டும்.

வாவிதட மாநிரைசெவ் வனசநிரை மீதயல்வெண் மலர்தண் பூகந்
தூவியதம் மடைநுதியாற் சுரும்பயற்றக் கனிகனிதேன் றூவா நிற்றன்
மேவியவம் முனிவரர்நூல் விதிமறுவோ டொண்பொரிதூய் விளங்கு செம்
பொற், றூவிரிவட் டகைநறுநெய் தகச்சொரிந்தா குதிசெய்மகத் தகுதி காட்
[டும். (எசு)

இத்தகைய பற்பலமா ணெழிற்றடங்க ளிடையுலகமெனைத்து முள்ள
வுத்தமமா தீர்த்தமெலா முவந்தினிய பாவனமா யுற்றெஞ் ஞான்றுஞ்
சித்திபுத்தி பத்திமுத்திச் சிறப்பெவையு மொருங்கருளுந் திறத்தி னாலு
மெய்த்தகைய புண்ணியமா விருக்கமெலாம் பெருக்கநிலாம் வியப்பி னாலும்.

திருவமுத சுதவனத் திருநாமத் தொருவாத சிறப்பி னாலுந்
தெருளமுத மீட்டியருட் டெள்ளமுத மூட்டிவளர் சிவப்பே ருய
பொருளமுத சிவானந்த போகமடுத் தடுத்தவர்க்கோர் புறந்தின் வெற்பின்
வருபெரிய நாயகிசேர் மந்திர நா யகனருளு மாண்பி னாலும். (எஅ)

கத்துதிரைக் கடலாடைக் காசியினிற் கண்ணுதலோன் கலந்து வாழு
முத்தமமா தலமெவற்று முத்தமோத் தமதாமென் றுலகு போற்று
நித்தியமா தலமிதுவே நிசஞ்சொன்னேன் முகமனென நினையே லென்று
வத்தகைய திருநந்தி யடிகள்சனற் குமாரமுனிக் கருளி மேலும். (எகூ)

இவ்வருமை பெருமைமிக ழிருங்காதை யறிகுய்ய மேனோர் தம்பா
லெவ்வகைய வேதுவினு மியம்பேலன் பொழியாத விதய சீல
மெய்வருடாங் குவம்பழுத்த வித்தகசங் கமங்களுக்கே விளம்பு கென்று
தெவ்வடுவேற்பணிகொண்டசெவ்வேளிங்கெனக்கருளிச்செய்தான்மன்றே.

நாளித்துணர்வித் தகனெக்கு நவல்வானேன் விரித்திதென நூதற்க ணைந்தி
யினித்ததிரு மான்மியமீ திசைத்தனைகேட் டளவாத வின்புற் றேனைப்
பனித்தவள மதிவேணிப் பானருள்பெற் றுய்ந்தவர்சீர்ப் பண்பி னேடித்
தனித்தவன மாண்பினுக்கே தனித்தவன முளனின்னுஞ் சாற்றுகெந்தாய்.

என்றுசனற் குமாரமுனி யெழுந்திறைஞ்சி நின்றுனென் றிசைத்த சூத
வென்றிபுனை மாதவனை விரைக்கமலத் தாள்பணிந்து மேலு மெந்தா
யன்றருணாந் தீசனவற் கருளியவா றெமக்கின்னு மருளு கென்றே
நன்றுணர்ச வுனகாதி நற்றவர் போற்றியசூத னவில்வான் மன்றே. (அ௨.)

---

* வான்றவர் - வானவில்.

வேறு.

ஓது சவுனக ராதி முனிவர ரோகை நனிபெற மூதுணர்
சூத முனிமுன மோதி யருளின சூத வனதிப மான்மிய
மீது கனிமன மாத ரவின்மிக யாவர் வினவின ரோதினர்
மேத கவர்புவி வாழ்வு முழுவது மேவி யுறுவரொர் வீடரோ. (அகூ)

சூதவனநாமகாரணச் சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ருஎகூ.

---

# ஆதிசேடனுபதேசம் பெற்ற சருக்கம்.

தேமிகு மாமனு நாயகன் மேவிய சிவமாதல
மாமிர கானன மாகிய மோதின மகிநாயக
னேமுப தேசமு னேபெற லீதென ரசிதாசல
நாமிகு காவல ஞானசி காமணி நவில்வானரோ. (க)

வேறு.

இந்திரை இந்தி ராணி யீரிரு கோட்டு வால
சிந்துர கிளைத்தாங் கீயுஞ் செம்மணி காம தேனு
முந்துமைந் தருக்கள் வான முதமுதற் பொருளெல் லாம
மைந்தவா கரமாங் கீர சாகரம் வழுத்தற் பாற்றே. (உ)

தொக்கமு துண்ம திக்கார் மதிக்கடி தொழாமைக் காவி
நக்கமுன் ஞலங் காட்டி யகந்தடி பணிந்த பின்றைத்
தக்கபே ரமுத மீந்து தண்ணருள் புரிந்த கீரா
விக்கட விபமு கத்தெ மிறைதிரு வருட்செங் கோலே. (௩)

இத்திருப் பாற்க டற்க ணிடைமணித் தீவ மொன்று
புத்திதழ்த் தவள மாவும் புயப்பொருட் டெனத்து லங்கு
மெய்த்தகத் தீவி னிற்சு வேதமா புரம்பொ ருட்டின்
மத்தகத் தமர்வெள் ளோதி மத்தொழிற் காட்டு மாதோ. (௪)

வழுத்துறு மச்சு வேத மாபுரச் செம்பொற் கோயின்
முழுத்தவம் மாராள வேந்து முதுகம ரம்பொன் மேனி
பழுத்தனுப் பயிலுல் வேதப் பண்ணவ னென்ன மேவு
விழுத்தகு மனைய செம்பொன் விமன்மணிக் கோயி லுப்பண். (௫)

உருவளர் தவள மேனி யுரகவேந் துடல்வ ளைத்து
மருவுமெல் லணையவ் வேதன் வயங்குவெண் ணீறு பூத்த
திருமுக மதிய மென்னத் திகழுமா லிதன்பா லன்றே
னிருவிழி மணியின் சோதி யெழுந்தொருங் கிலங்கு மாபோல். (சு)

மாலிசை மாலின் மேனி மாலினீ தமரு மாலிக்
காலயில் கால கல்பூங் காலொளிப் பரியங் கத்தின்
மேலறி துயில்கொள் வேலை விண்ணுயர் மைநா கத்தின்
பாலொரு பால பானுப் பான்மையிற் படர்ந்து பல்கி. (எ)

மின்றெளி யுலகம் போர்ப்ப மிளிர்மணிச் செம்பொன் மோலி
சென்னிசேர்ந் திலங்க நீற்றுத் திருநுதல் பரிதி யோடு
துன்னுவெண் பிறையை மானத் தூமணி குண்ட லங்கள்
மன்னுமவ் வென்றா ழின்பால் வருமிரு குழவி மான. (அ)

இருவிழி யப்ப தங்க னெதிரரு ணறவெஞ் ஞான்றும்
பெருகுசெங் கமல மானப் பிறைமுன மலர்செவ் வாம்பல்
பொருவிய திருவா யென்றும் பொலிந்திரு மதகிற் பாய்ந்துங்
கருணைநீ ரணுவுங் குன்றாக் கவின்றிரு வதனங் காட்ட. (கூ)

மைம்மலைக் கிளைத்த நான்கு மாமணிச் சிகரமென்ன
விம்முதிண் டோளி லங்க வெங்கதிர் தன்கி ழத்தி
யம்மலை மணந்தாங் கோர்கை யாத்தவெம் பரிதி தோன்றச்
செம்மரை மராளத் தாங்கோர் செங்கையிற் சங்கி லங்க. (க0)

வரதநல் லபயம் வாம வலத்திரு வண்கை காட்ட
வரதந முதல மைந்த வங்கத கங்க ணாதி
யுரதந வைசயந்தி யுயர்மணி யார மாதி
சரதந வொளியெங் கெங்குந் தனித்தனி கான்றி மைப்ப. (கக)

கவினிறை மணிவேந் தாருங் கவுத்துவ மணிமா தீப
மவிர்தர வனவ னத்தண் ணணிநிழல் பரப்பு மார்பாந்
திவியவா தனத்தி னீல மணிமிசைச் செம்பொன் சேர்த்தாங்
குவமனே யுலகெ லாந்தேற் றொருபெருந் திருவி ளங்க. (கஉ)

மறுவெனப் படுவ யாவும் வர்ச்சித மெவர்க ளானு
முறுமிடத் துயர்வா லன்றோ வுலகெலா முணர்ச்சி மேன்மை
பெறுபெருங் கவிக ளெல்லாம் பேணுமா பெறுமி தென்னத்
துறுமொழின் மறுவொன் றம்ம தூயவம் மார்பி லங்க. (கங)

உலகெலா மரபி னோங்க வுற்பவிப் பிக்கு மூல
குலமகப் பசும்பொன் றேசு கூர்மல ருந்தி யோடு
தலமெலாம் போற்று தாமோ தாபதப் பொருளின் வாய்மை
மலர்வட தளிர்மே லாந்தன் மல்கெழி லுதரங் காட்ட. (௧௪)

மாற்றுயர் சுவண நாக மருங்கொளிர் தரச்செங் கேழ்ப்பன்
னூற்றிதழ்க் கமல நீரி னேற்றிதற் கொப்பான் பன்னாட்
சேற்றிரீஇப் பங்கத் தோற்றஞ் சிவணிய வுலகமெல்லாம்
போற்றிய வெழின்மென் பாதப் போதருட் டேன்ற தும்ப. (௧௫)

பரிபுர மாதி யம்பொற் பன்மணிப் பணிப ணிந்தார்க்
கருள்செயல் பலமுன் கூறி யழைத்தென வொலிப்ப நீலத்
திருவுரு நிறனு மேற்கொ டிருவெண்ணீற் றொளியுந் தன்னை
மருவியற் குணனுங் காப்பின் வளை வளை குணனுங் காட்ட. (௧௬)

கடிமல ராசா ரத்தின் கதிரொளி படைப்புந் தானே
கடிமலர் மகற்கொண் டாற்றல் காட்டிரா சதம்வி ளக்க
கடிமலத் தவர்பல் லோர்முன் கண்ணருள் விழைந்து போற்றக்
* கடிமல லிங்க ராசன் கைகுவித் தெதிர்நின் றேத்த. (௧௭)

தேனல ரம்பு சாதச் செம்மல ரயன்மா லாதி
வானவர் சென்னி தாழ்த்த மாதவர் சூழ்ந்து வாழ்த்த
வானவர் பன்னி மாராங் காங்குபல் லாண்டு கூறக்
கானவர் கைவ ளத்தின் கைவளத் திசைக ளோற. (௧௮)

இன்னிய முள்ள வெல்லா மெழுந்திசை யெடுப்ப விண்ணிற்
கன்னியர் மரபி னாடக் கதைவசி சார்ங்க மாதி
பன்னியற் படைக்க லம்பற் பலகுழீஇப் பணியி னிற்பக்
கொன்னியற் சேனைக் கோன்பொற் கோல்கொடு நெருக்கொ துக்க.

மாமறைத் துழனி மல்க மற்றுள கலைகள் பல்க
தேமலர்க் குழற்பூந் தேவி தேற்றெழி லீளா தேவி
மாமலர்ப் பூம்ப தங்கள் வருடியாங் கிருபா லோகை
யாமல ருததி மூழ்க வமர்ந்தரு டிருவோ லக்கம். (௨0)

---

* கடி - விரைவு. மல - வளப்பமுடைய.

வேறு.

தன்னுளங் கவர்ந்து கண்ணிறை காட்சித் தக்கபே ருவகைநேர் தரக்கண்
டென்னுடை நாதா விருஞ்செகந் நாதா விந்திரை வந்தித நாதா
மன்னரு ணிதியே வைகுண்ட பதியே மாசிலார் பெறுபெருங் கதியே
யின்னருட் டிதியே யியற்றுதண் மதியே யாவையு முணர்ந்தமா றுதியே. ()

என்றினி தனந்த னனந்தமாண் டெதிக லிசைத்தினி தெந்தையே யென்றும்
பொன்றுறு நித்தி யானந்த பரம போகமே புரிவதாய் விரிவதாய்ப் போத
நன்றிலாச் சனன சாகரங் கடத்து நலத்ததாய் வலத்தவே தாந்த
முன்றிகழ் சகலா கமங்கள்சம் மதமாய் மொழியுமெய் வழியினை முறையே.

அறிவிலாச் சிறியேற் கருள்கென விரப்ப வன்னது தன்னிரு செவியேற்
றிறைவனு மனைய முகுந்தநா யகன்போ னீசற் குணநிதே யிதுகேண்
முறையினின் விஞ்ஞைக் கிறையென வருளு முற்றுணர் பராபர முதலாய்
நிறைசமு சார வுததிதா ரகமாய் நித்தியா னந்தவின் மலமாய். (௨௩)

ஆதிமத் தியாந்த ரகிதமா யனாதி யாய்நிரு விகற்பமா யளவாச்
சோதியாய்ச் சமயா தீதமாய்ச் சிவதத் துவமுப சாந்தமுன் றுய
நீதியாய் வேத முடிவினிற் பிரம நேயமாய் நிறைதரா சிவத்தைத
யோதியா னுள்ள படியுணர்ந் துபாசித் துறுநிலை பெறுமவ ரெவரோ. (௨௪)

அவர்களே வினவு ரகசிய நெறிமுற் றறிவரீ தறிந்திலா ரெவர்மற்
றவரொரு சிறிது மன்பிலார் நரரு ளதமராங் கவர்களே யாவர்
தவாதிரு மனந்த வாதவா லனைய சதாசிவ மூர்த்திபூ சனையே
தவமினை வேட்கை தருமலால் வேறு சாதனை யிலையீது சரதம். (௨௫)

யாவரோ தீரத் துவம்பெறீ றியோரைத் திந்திய *புபுட்சுக்க ளாகா
தோவியே யாசை யொழிபயன் கருதா துத்தம பத்திபெற் றுய்வோ
ராவரே யரிய முமூட்சுக்க ளென்றுங் கருமறை பெருமுறை யறையும்
வாவுறும் விடய நுகர்ச்சிமுன் னுவ மாற்றுதற் கசத்தரே லவர்தாம். (௨௬)

விதிவழி வழாமன் மதிநதி வேணி விமலனை யமலமா விரைவாத்
துதிவழி பாட்டிற் பதிமன மாட்டித் துரிசறப் பூசித்த லதுவே
கதிவழி யாமா லிதுதுணிந் தென்றுங் கைவிடா தய்வுறக் காணூஉ
மதிவழி யுடலுள் ளளவிரு வினையின் வருபய னொருவற நுகர்ந்து. (௨௭)

* புபுட்சுக்கள் - புசிக்கும் இச்சையுடையார்.

நியதிசெய் பூசோ பாசரூ பெலத்தா னிமலமெய்ஞ் ஞானமுன் னிகழு
மயர்விலா வாய்மை மலர்சிவ ஞான வலியினுன் மருவுதே காந்தத்
தயர்விலா தென்று மழிவிலா தமரு மத்துவி தானந்த போக
நயனிறை மோக்க நண்ணுப திண்ண நன்குண ரங்கத நாத. (௨௮)

ஆதலாற் சமுசா ரோததி கடந்தே யருளினு னித்தியா னந்த
போதவீ டுறுதற் கேதுவச் சிவனைப் புலமொரீஇ நலமரீஇப் புனித
பாதமெய்ச் சிவஞா னம்பெறீஇ யுள்ள படியுணர்ந் திரண்டறப் பயிற்று
மோதநூ ஈனையேயன் றிவே றிலையான் முடிபிதென் றுணரகி முதல்வ. (௩௯)

செப்பியாங் கனைய தத்துவ முணர்ந்து சிவத்துவம் பெறற்கிடை யூறு
மொப்பரும் பசுத்து வம்முயி ரெவற்று மொழிவுறு வழிவிரிந் துளதா
லிப்பசுத் துவந்தா னெத்தவத் தானு மிரிந்திடா திரித்திடு மிவனே
யப்பர மோக்க விருப்பனிட் களங்க னகமிலா னெனுமறை யந்தம். (௩௰)

வேறு.

இத்தகைய பசுத்துவத்தை யிரிப்பதுதான் பாசுபத தீக்கை யேயா
முத்தமமா மிதுவிரசா வோமமுட னிகழ்வுறச்செ யுண்மைத் தாமாற்
பத்திமையால் விரதநெறி பன்னிருநா ணியமமுறப் பயிற்றல் வேண்டும்
வித்தகவம் மகதீக்கை விதியினைநா முள்ளபடி விளம்பக் கேணீ. (௩௧)

இன்னவிர சாமகத்துக் கிடுஞ்சமித்துக் கோமயமன் னிதுகொள் காலம்
பன்னுமுவா விருநான்கு பதினன்காந் தினநான்கு பரம மிந்த
மன்னுதினத் தீன்றணிமை வருபிணியி னுக்கன்னி மலடு மூப்பே
யுன்னுறுகன் றிறப்புமல முண்பதிவை யுறுகிரைநன் குணர்ந்துசார்ந்து. (௩௨)

அனையநறுங் கோமயத்தை யளிக்குங்காற் பின்மரைமெல் லடையிற் சாத
மனுநவில்பேற் றம்மயமேல் வழும்பகற்றிக் கோசலம்வா மத்தாற் பெய்து
பினைநவிலு மகோரத்தாற் பிசைந்துருட்டி யுலர்த்திமுனம் பேணிக் கொண்
டே, முனைவிலோ மஞ்சொடங்கன் முறையாகு மம்முறைமேன் மொழியக்
[கேட்டி. (௩௩)

அக்கினிகோத் திரமுளரி யாணிசுசி தாணிசிலை யழலிம் மூன்றிற்
புக்கதொரு வசுவெழுப்பிப் புருடத்தான் மயசுட்கம் பொலிய மூட்டிச்
சொக்கிரா கியமாகுஞ் சூத்திரத்திற் சொன்முறையித் தூவேள் விக்குத்
தக்கமனு நாலொன்பான் றத்துவா தியசுத்தி தயங்கக்கூறி. (௩௪)

சொல்லியவான் கிருதத்தாற் சொல்லியவா ருகுதிக ளெலங்க வாற்றி
வில்லியனுஞ் சயாதியோ மஞ்செயனு மீற்றின்முறை விளங்க வாற்றி
நல்லியன்முற் றமைந்துபிர திட்டையிலா வோரிலிங்க நாடிக் கொண்டாங்
கெல்லியனூல் விதிப்படியே பிரதிட்டைபுரிந்தருச்சித் தினிதுபோற்றி. (௩௫)

மேவுபசுத் துவநீக்க விருப்பொடுநன் னெறியொழுகும் வேதி யர்க்குத்
தாவருநால் வகையுண்டி தக்கிணை தாம் பூலாதி தகமு னல்கிச்
சேவுடையான் பாசுபத தீக்கைமுறை யக்கினிநாற் றிணியா மத்துந்
தேவியலவ் வருட்குறியைத் தியானமிடை யறுதன்பு திகழப் போற்றி. (௫௬)

வேண்டுமுப காணமெலாம் விருப்பமிக நனியீட்டி விளங்கப் பூசித்
தேண்டருமெம் பெருமானே யிந்நாசே கானேயெம் மிறையே மன்றிற்
றூண்டவருஞ் சிதபாதா தருகிரிசை மகிழ்நாதா சுபியே னிந்நாட்
பூண்டவிர் தம்முடித்துப் புணர்பசுத்து வம்முழுதும் போக்கி மேலும். (௫௭)

உள்ளபடி சிவத்துவப்பேற் றுண்மைதிகழ் சாவருளே யுதவு கெந்தாய்
கள்ளமனத் தேனெனினுங் கைவிடனின் னடிமையெனக் கரைந்திவ்வாறே
தெள்ளுமுளத் தீராது தினங்களும்பூ சனேயோமச் செயலோடாற்றி
நள்ளருளாற் பதின்மூன்று நாளுநய நித்தியமு நடாத்திப் பின்னர். (௫௮)

நேசனையாப் பூசனையா னிலவியவக் குலவிலிங்க நிமலன் றன்னை
மாசனைவ ருந்தெறவே மதித்தமைந்த சிவானுபவ மனஞ்சேர்த் தென்று
மீசனையே பசுத்துவநீக் கிடுதிறமை யொடுதிகழு மெழிலா சாற்கு
பாசனையாற் றக்கிணை தாம்பூலமொடு பரிந்தளித்துப் பணிந்துபோற்றி. (௫௯)

பின்பனைய குரவனைநாற் பெருமறையோர் மயினைப் பேதி யாமெய்
யன்புறுமா கேசுரரை யுபசுவைநால் வகையுண்டி யயில்வித் தன்போ
டின்புறுதக் கிணையாதி யினிதளித்தி யகிந்திரா நீ யிவ்வா றுக
முன்புரிய பாசுபத தீக்கையிடை யூறின்றி முடித்தி யாலே. (௬௦)

வேறு.

முறைமையினித் தீக்கையினை முடித்தியெனிற் பசுத்துவம்போய்
நிறைவிபசா லோமத்தா னிருமலகாத் திரனுதி
யறைதருமிச் செயன்முடிவி லாசமன மிருமுறைசெய்
திறைவிபசா லோமாந்தத் தெடுத்தொளிர்வெண் ணீறுதல். (௬௧)

அங்கிகோத் திரமெனபா சனவீதி கோத்திரமத்
துங்கவிவாக் கினியிவற்றின் றூயதிரு நீறுதல்
மங்கையில்லா தொன்றேனுந் திருந்தவமைத் தங்கியெனத்
தங்குபத முதலமைந்த தக்கமது வோமோமால். (௬௨)

வைத்தளிக்கை மேன்முடி மனனுறமும் முறைசெபித்து
வலத்தொடபி மந்திரித்தோ மாபோவென் மனுவாலு
நலந்தகைய * வாபோவா மனுவாலு நறுநீரைச்
செலுத்தநிதே வினைகினைந்து தெளித்தனைய திருநீற்றை. (௬௩)

---

* வகாரம்-உடம்படு-மெய்.

ஒப்பவொரு முப்பாக முறப்பகுத்தோர் பாகத்தைச்
செப்பருமீ சானத்தாற் சென்னியிற்றற் புருடத்தாற்
றப்பின்முகத் தகோரத்தாற் சாற்றிதய மகமதோ
டிப்பியவா மத்தாந்தி சாதத்தாற் றிரள்சானு. (அச)

இருகரங்க ளாமுழுப்பி னெழிலுறலே பனமாகப்
பெருகுறப்பூ சுபுபின்னர்ப் பிரித்துளமற் றொருபாகத்
திருவருள்காட் டிடுநீற்றைச் சென்னிமுதற் பாதம்வரை
யொருவறமெய்ப் பூசுபுபின் புடனிருகா லாசமித்தே. (அரு)

அனந்தரமற் றொருபாகத் தணிநீற்றைச் சென்னிமுத
லினந்தருமைந் திடத்தாத லெண்ணியண்டெண் ணுறன்காதல்
வனந்தருதத் துவவகையின் மருவாமு றிடனுதல்
மனந்தாமுன் மனுமுறையின் மலிதிரிபுண் டரமாக. (அசு)

தரித்திடுதன் மரபாமித் தகுநீறு தரித்தவரோ
யிரித்திடுவர் பசுத்துவமிவ் விரும்பாசு பததீக்கை
புரைத்தவிதி வழாதன்பி னுகுற்றினுமுள் ளுயிர்போல
வரத்தகுமாண் புளதொன்று வழங்குதுமற் றதுகேட்டி. (அஎ)

செபமூலம் யாகாதி செயன்மூல மருமுனிவோர்
தபமூல ஞானசா தனமூலஞ் சிதம்பரமா
நபமூல மறைக்குயிரா நன்மூலஞ் சின்மூல
முபமான மிலாதென்று முயர்பஞ்சாக் கரமூலம். (அஅ)

நவிலிஃதேழ் கோடிமனு ராசாதி ராசமனு
திவியமனுப் பாசுபத தீக்கையினும் பலனளித்தற்
கவிர்தருமுக் கியவிபமா மதிகார மிதன்பாலே
கவிதருமிவ் வருட்பஞ்சாக் கரமுறைநீ பெறல்வேண்டும். (அகூ)

பரமசிவப் பிரசாதம் பரிந்தருளிம் மனுவேந்து
வரமிகுமா றக்கரமா மருவுதொகை வகைமனுரு
மரனதிக னேயெனமுன் னுஞ்சுருதி ளெனின்மனுவுட்
டிரனதிக மிதுவென்று செப்புவதென் றெளிமனத்தோய். (௯0)

வேறு.

வேத முடிசொல் கைவலிய விமல மோக்க தாயகமிப்
போத மயமந் திரமேயாம் புனித முனிவர் கனிமனத்திற்
பேத மறவீற் றிருக்குமிதிற் பிறங்கோ ரெழுத்தின் பெருமையெனு
மோத லரிதே புன்னரிதே யும்ப ரெவர்க்கு மயற்கெனக்கும். (௯க)

சகல வேத கோடிகளுஞ் சாற்று சிரங்க ளெல்லாமுஞ்
சகல கலையு மெய்பொருளுந் தன்னு ளமைந்து தனிவிளங்க
வகல மளிக்கு மாதார மாகு மவற்று ளொஞ்ஞான்று
மகல வரிய வாருயிரா யவிரு மகாமந் திரமிதுவே. (௩௨)

சத்து சித்தா னந்தவுப சாந்த பரிபூ ரணவிமல
சுத்த முத்த நித்தபர சுத்தாத் துவித பரப்பிரம
வத்து தானென் றுபநிடஞ்சொல் வாத பரம சிவனென்று
முத்தி முதலாய் வீற்றிருக்கு மூல மகாமந் திரமிதுவே. (௩௩)

ஏனை மனுக்கள் குடிலையுஞ்சேர்த் தெண்ணப் படுவ தத்தமெழுத்
தான வளவை சிற்சிலதம் மந்த மருவா தளப்பனவா
மான மறுவீ தக்குடிலை மருவா தந்தம் வரையெண்ணு
மேன திருவைந் தெழுத்தெனவே விளக்குமியற்சீர் பெறுமனுவாம்.

இதனு விதுதா னகஞ்சேர்ந்தா றெழுத்தா யெண்ணப்பெறினுமீதை
முதனு லாதி கலையெல்லா மொழிவ திருவைந் தெழுத் தென்றே
சிதமா முனிவ ரிதுபேணிச் சிவாபி வியத்திப் பேறுற்றார்
புதர்பற் பலரு மிதுகொண்டே பொருவில் பதங்கள் பலபெற்றார்.

இன்ன மறுவி னமவென்னு மிரண்டக்காங்கள் பசுத்துவந்தீர்ந்
துன்னுமான் மாபாசிவத்தோடொன் றிவாழ்மெய்ப்பொருளுணர்த்து
மன்னு நமசி வாயவெனு மெழுத்திம் மனுமா மலபந்தத்
தின்ன லொழிந்துய் யுறவுயிர்கட் கீசன் றனே தருமனுவாம். (௩௬)

யாவ ரிதயத் திம்மனுவீற் றிருக்கு மவருக் குபநிடதத்
தாவில் பொருளா ளருந்தவத்தாற் றருதீர்த் தாதி யாகாதி
யோவி லறனுற் றமக்காக வேண்டும் பயன்வே றென்றிலையான்
மேவிம் மனுவோர் முறையேனு மெய்யன் புறவோ தாவிடிலோ. ()

கணிப்பி லபார துக்க பயங் கரசங் குலவா காமாய
கணிப்பில் சமுசா ரப்பெருஞ்சா காநீந் தறவே யுபாயமிலை
தணிப்பில் சகல வுபநிடபூ டணவிம் மனுவே சகலசுகந்
தணிப்பில் பரம சிவஞானே தயமுக் கியகா ரணமாகும். (௩௮)

தருவை வலிய சிற்சொருபந் தன்னை விளக்கு மணிவிளக்குத்
தருபல் குரூர பஞ்சபா தகதா வாங்கி யென்றுரைக்கத்
தருமிப் பிராண வஞ்சார்பஞ் சாக்க ரம்மே மோக்கம்விழை
தருநால் வருணர் சங்கருஞ் சாற்றும் வரோப காரமனு. (௩௯)

தூமம் திரமீதெப்போதுஞ் சுத்த மயமே யாதலினு
லோம முதல பூர்வாங்க முசித கால முதல்வேண்டா
தேமமலியக்கொடுத்தல்கொளவிசைத்தலெலைக்கும்பொருத்தமுள
தாமமிகுமா சுயம்பிரகா சத்தூ மகாமந் திரமிதுவே. (௩௰)

வேறு.

இம்மாமனு விற்சிவவென்று மிரண்டெழுத்தின்வெருகைவகைகிரியிற்றிகழு
மம்மாபொரு ளுண்மைய எப்பவார *யனுன்முத னுன்மறையாதிமெலாஞ்
சும்மாவெனவல்லதென்சொல்லுவதித்துவிதாக்காமீசருதுயபல [சொல்.()
னெம்மானவிலத்தகுமோவிடர்முற்றிரிந்தின்பொருங்கீமெனைவொரு

மானந்தரு மிம்மனு சற்குருவால் வழங்கப்பெற லன்றியெம் மாதலத்தின்
பானந்தர விக்கினு மெண்ணியவெப் பலனும்பெறு கிற்றில ராதலினுற்
சானந்தரு சற்குரு வாலுபதே சம்பெற்றுயர் சைவத லத்தினடைந்
தீனந்தவிரச்செபமாற்றினுடனெல்லாமெளிதிற்பெறலுண்மையதே. (௩௧)

எல்லாவுயிர் கட்குமு ளத்திலுந்தன் பெண்ணோர்கள்க ளங்குமுன்னேர்சிறிது
மில்லாதவர் காமமுன் னையதுரி சிரித்தோர்பய னிவ்மொழி பொய்ம்மொ
ழிமுன், புல்லாதவர் நூலுறைசிலர்களைம்புலனீத்தவர்போற்றுமுயீட்டர்கள்பா,
னல்லாதரவாற்புரிதீக்கையினுனைவீக்குமெய்ஞ்ஞான மத்தகைமேயார். ()

இவ்வாய்மைக ளாதிய மைந்தவரே யிதவாய்மைய சற்குரவோரிவர்பாற்
செவ்வேபெறு மந்திர மேவிளையுந் திறனெண்ணிய வாறுடனெல்குமெனி
தவ்வாய்மனு வோதிட னேதிடநல் லருண் மாதல னுகிடிமாங்கனைதா
மிவ்வாழ்கட னின்புவி வாழ்வுறவே யெழுதாரக மானதி ருக்கையிலே. (௩௩)

தனிமேருவி மாசல மந்தரங்கே தாரந்திரு வாரண வாசியரு
ளினிதார்பிர யாகைதி ருச்சயில மிசைபுட்கர மல்லிகை யர்ச்சனமே
முனிவோர்பணி நைமிசங் கோகனமே முதுகுன்றரு ணாசலத்தில்லையரு
ணனிசேர்திருக்காளத்திகாஞ்சிபுரநவில்பஞ்சாநதம்மிடைமாமருதூர். (௩௪)

புவிவாழ்சிவ லோகமெ னும்மதுரா புரிவேதவ னம்புகல் சேதுமுத
லவிர்மாமதி வேணிசு யம்பிலிங்க மமர்மாதல மாவன கூவிரமா
சிவபாசவி ருக்கமு தற்பலவாஞ் செப்பும்மிவை கைப்பொரு ளாக்குமுன
நவின்மாமனு வின்செப மெய்ப்பயனை நவின்றும்மிது நிற்குல கின்புறவே. ()

* அயன் நான் என்று பிரிக்குக.

எனநாரண னோதிய வாய்மையமு திருகட்செவி வாய்நுகர்ந் தேயமுத
னிகூடாகி நாயக னோதுநுமென் னுதாதிரு நாதவெ னக்குயிரி
னினியாரினி யாருளை யல்லைதயிங் கெளியேனுயு மாறிரங் காமருளாற்
றனியோதிய யாவுநின் பாற்பெறவே தமியேற்குள மார்வமிக் கூர்வதரோ.

அண்ணலெனை யென்றுகொண் டின்னருளே யளித்தோயகி லம்முமளித்த
ருளாய், கண்ணுவருள் கொன்றுய னிந்தடிமேற் கைகூப்பிய சென்னியன்
வீழ்ந்துபணிந், தெண்ணேர்பெற வேண்டலு நீண்டவனுங் கிரும்பைப்பதி
யெண்ணமு டித்துமென, வொண்ணுற்றி பெற்றெனை முற்றுவளை யுதரிப்
[புனன் மூழ்கின னாங்குடனே. (கூஅ)

பின்னேயமொடன்ன பணிந்திரனப்பெருமான்றிருச்சந்நிதிமுன்னுறுமோர்,
மன்னேர்திருபுண்ணியதீர்த்தமலர்வாவிப்புன லும்படிந்தாசமியாத், தன்னே
ர்திருநீறணிந்தெல்லைபெருத்தண்மாமணிமெல்லிலைகோலமுடன், கன்னே
ர்கவிகைத்திருமாலடிக்கீழ்க்காணிக்கையதாகமுன்வைத்தனனால். (கூகூ)

மேலுந்துதி விண்டுமு னின்றனனவ் வியாளேசனுக் கத்திரு மாதவனந்
நாலுந்துதி செய்விர சானவமார் நுவல்பாசுப தச்சிவ தீக்கைமறை
காலுந்துதிமந்திரமாதியெலாநயப்பப்புரிந் தத்திருநீறளித்தெக் [மனம். (எ0)
காலுந்துதி செய்திரு வைந்தெழுத்தைக் கருதிப்பொருள் வாய்மைகனிந்து

வேறு.

தகச்சிவ மாகத்தனைப் பாவித்திரு கண்ணுற்
பாகத்துற நோக்கித்தரு பார்வைத்திரு வழுதாற்
சேகற்றுப வாசத்தனி விரதச்செயல் கோளந்
நாகர்க்கிறை தேகத்தினை ஞானம்புரி வித்தே. (எக)

தன்னேர்முகங் கிழக்காகவங் கரக்கோலினை யிருத்தி
யன்னேன்சிர மிசையங்கைவைத் தருண்மாசிவரூப
மென்னுவரு திருவைந்தெழுத் துபதேசமு னியற்றி
மன்னேர்சிவ மயமாக்கினன் மகியேந்தகி வேந்தை. (எஉ)

உரையாதிக ளாலும்மன லுணராவொளிர் மனுவேந்
துரையாலொரு செவிவாயினு மொருவாத்திரு வமுதாய்
*வரையாமுன மெனமாதவம் வாய்த்தோமென மகிழா
வரையாதமெ யறிவானந்த மயவாரிதி படிந்தான். (எங)

* வரயாம் எனப்பிரிக்குக.

தானென்றொரு சிவமென்றிரு வேறின்றெழு தருமெ
யானந்தமம் மாநந்தம ரங்கைப்பெரு மான்றன்
பானன்றருள் காமத்தக பரிசாதிய பயனுன்
மானந்தா வெல்லாஞ்சிவ மயமாய்வயங் கினனும். (எச)

அகிநாயக னலர்நாயகி யணிநாயக னடியிற்
றகுமாதா மிகவீழ்ந்தடிக் கடிதாழ்ந்துபல் துதிசெய்
மிகவோதியவ் வரிதாட்பணி விடைபரிக்குளாம் விழைந்தா
னிகவாழ்வயன் முதலோர்பத மெல்லாந்தரும் பெனவே. (எரு)

மதியாநதி மதிவேணியன் பதவம்புய மலரோ
கதியாமனம் பதியாவொரு கணைமும்மற வாதப்
பதியாருட் குறியாஞ்சுயம் பிலிங்கேசபொற் பதமே
விதியோடருச் சனையேபுரி விழைவேமிக வமர்ந்தான். (எசு)

என்றேதிய நந்தீசனை யிருதாள்சனற் குமா
னன்றாதர விறைஞ்சாநலில் கதைமேலுற மங்கே
நின்றுனென வருள்சுதனை நேயம்மிகு முனிவோர்
பின்றுணர விறைகாதைபென் னெனவாங்கவன் பேசும். (எஎ)

வேறு.

திருவைப்புணர் மாதவ னற்புரிரு திறனுற்றெழு சேட னுளக்கவிசு
தாமுற்றுப தேசமு மாத்தகதை தனையற்பின்வி ருவினர் செப்பினர்தாம்
குருவைப்பெறு வார்கள்ப சுத்துவரிக் குலமெய்ச்சிவ ஞானமுறப்பெறுவார்
பருகுற்றிக வாழ்வுகண் முற்றுமொரு பாமுத்திபு மேவுவர் திச்சயமே. (எஅ)

ஆதிசேடனுபதேசம்பெற்ற சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் (கூஉ.ச)

# ஆதிசேடன் சிவலிங்கம்பெற்ற சருக்கம்.

நிலமுழு வதுமுடியின்கண் வாழ்தர நிறுவிய பணிபதியன்பு கூர்தர, மலர்மக
டழுவுறுகொண்கனாருள் வருமொழிகுருமொழிகொண்டதோதினாங், குலவு
று மனையன விண்பொலொளிர் குளிர்மா கதசிவ லிங்க மேவுறு, நலனிறை
செயன்முறை யின்ப மேதக நவிலுது மெனவருணந்திகூறுமால். (க)

வேறு.

அருந்திரு சனற்குமர வருந்தவகேண் முருந்தனடி யடைவின் பேற்றுற்
றிருந்தருபாக்கியன்விரசா தீக்கையினைந் தெழுந்திறுப தேசசீலன்
கருத்தொருமைச் சிவஞானக் கடற்படிந்தா னந்தமுதங் களித்துண் டன்பு
பெருத்தெழுகின் றனந்தனரி பிரசமலர்த் தாள்பணிந்து பேசுகின்றான். (உ)

குவலயமுற் றளித்தருளென் குருநாதா திருநாதா கோதெ லாய்ப்போய்ப்
பவலயமா கியபாசு பததீக்கை யிதமேற்கொள் பரிவி னன்போர்
திவலையள விலேனெனினுஞ் சிறியனமை யலதுகதி தேரு னொன்றன்
கவலையற வினிதளிக்க கடமையின்மே லருளாதின் கடமையன்றே. (௩)

ஆதலினா லெளியனெழுத் தைந்துபதே சப்பேற்றிற் கமையாவீசன்
காதலினா லனைவாதங் கலந்துறையுஞ் சிவலிங்கங் கைக்கொண் டென்றுஞ்
சாதலினைத் துடைத்தருள்பூ சனைபுரிதற் கேவேட்கை தழைத்தே னுன்னை
யீதலினா லுளங்குளிர்வித் தென்னையருள் பின்னையமர்ந் திலங்குமார்ப. (௪)

எனவகிவேந் திறைஞ்சுபுகன் றினிதிசைத்த வேத்துரைகேட் டிந்தி சேசன்
கனியடிய னெண்முடிக்குங் கருத்துவகை கனிபூப்பக் கருணை கூர்ந்தப்
பணபதிக் கருள்புரிந்திப் பரிசுணர்க்கு மனந்தகேள் பாரிற் சோணாட்
டினிவிளைத வருட்பெருக்கே யெனப்பொலியுங் காவிரியாற் றிறுக்க வாரி.

ஆசையினிவ் யோசனையுன் றலர்பாரி சாதவன மதற்குத் தென்மேற்
கோசனையொன் றெனப்பெறுமோ ருழியமுதாம் பிரகுலங்களுலவா தென்னுந்
தேசுவிரி தரப்பொலிந்து திகழ்சூத வனமெனும்பேர் சிறப்ப வாய்ந்தாங், கீச
னருண் முழுதடைந்தார்க் கினிதளிப்பித் தமைதா யிலங்கா நிற்கும். (௬)

வேறு.

கருப்பமந் தாரங் கன்னி கராம்பா டலஞ்செ ருந்தி
மருளகூ விளங்க டெக்கை மாதுளா நாரங் கஞ்சண்
பசுங்கிப நறவ ஞாழல் பன்னிநா கசிப லாச
மகிழ்வழை விருசம் வன்னி யாமமா விலிங்கை புன்னை. (௭)

சாலமா சினியி லந்தை தாத்திரி பாரி சாத
மாலமா துளைய சோக மாசுகர்ச் சூர மாத
மாலமஞ் சாடி நாவன் மதூகஞ்சே வோமை வெள்ளி
லேலமி லவங்கஞ் சாதி யிலாங்கலி பூக நாகம். (அ)

ஆதிய நிரைக ளந்த வாம்பிரா டவிச்செ றிந்து
சாதிதா டிமஞ்சம் பங்கி சண்பக மயிலை சீந்தின்
மாதவி மல்லி முல்லை மதூரமுன் வல்லி தத்த
மீதழீஇப் படர்ந்து பல்க விண்ணெலா மலர்ந்து மல்கும். (௯)

வேரிகை நிமிர மாந்தி மிழற்றிசைச் சுரும்ப ராதி
சாரிகை காள கண்டந் தத்தைசா தகஞ்ச கோரங்
காரிகை யோதி மஞ்சி காவளஞ் சிவல்க போதம்
* வாரிகை யிசைமுற் றத்த மாண்செயல் வழங்க மல்கும். (௧௦)

வாவிபல் வலந்த டாக மடுச்சர சேரி கேணி
யாவியு வளக மேல்லை யலந்தைமுன் னுய வென்றுங்
காவிபங் கயங்கல் லாரங் கைரவ மாதி நாநீர்ப்
பூவிரித் துளங்க வர்ந்து பொலிவினொங் கெங்கு மல்கும். (௧௧)

மிருகண்டு சூனு வாதி விழுத்தவ முனிகு ழாங்க
ளருள்கண்டத் துவித போகத் தமர்ந்துவா ழுடசந் தோறும்
பொருசுண்ட வேழஞ் சீயம் புண்டரீ காதி யாங்கே
வருதொண்டு பலவுஞ் செய்தே மாறெழிந் தமர்ந்து சூழ்வ. (௧௨)

இன்னன பலவ ளங்க ளெல்லையின் றென்றும் பல்கு
மன்னமா வனத்தி லெங்கு மமுதமுன் னடுத்த தாய்மை
யுன்னியோ வுலகெ லாமுய்ந் துறத்திரு வுளங்கொண் டோகின்
மன்னுபுண் ணியவி சிட்ட மலபரி பாகத் தாலோ. (௧௩)

தானருண் மறைக ளாலுஞ் சாற்றுமற் றனைய டாலு
ஞானமா முனிவ ராலு மெளனமுன் வா னவர்க ளாலு
மேனவின் மனம்வாக் காதி வேறெவற் றாலு மெட்டா
மானமெய்ச் சிவமே லிங்க வடிவமாய்ச் சுயம்பு வாகி. (௧௪)

அவ்வன நாப்பட் டோன்றி யாரமு தெனச்சு வேத
மெய்வ்வள ரொளியி னீடி விளங்குமவ் விலிங்க மூர்த்தி
திவ்விய சரண பூசை சிவாகம விதியாற் செய்தி
யிவ்வருட் செயனீ வேட்ட தின்னுறு புதுமைத் தன்றால். (௧௫)

* வாரி - இசைக்குழல்.

பதஞ்சலி யாகி முன்னம் பாமனுர் முன்ன மங்கை
முதஞ்சலி கூப்பச் சென்று முறைமுறை யிறைஞ்சிப் பூசை
நிதஞ்சலி யாம லாற்றி நிருத்தநேர் காணப் பெற்றுங்
கிதஞ்சலி லங்கொள் வேணி யிறையருள் செயப்பெற் றுயால். (௧௬)

வேறு.

இப்பகலு மப்படியே யாம்புகலிச் சூதவனத்
தொப்பரிய மெய்ப்பொருளை யுமாபதியை யெமாதருமை
வைப்பினை நூல் செப்புநெறி வழாயலருச் சனைபுரிதி
யப்பாம னெப்பொழுது மமாமுத வருட்குறியில். (௧௭)

பணியரசே சிவார்ச்சனையாம் பணிபுரியப் பணிவொடீ
யெணியனைய சூதவன மெய்துமுன மெய்தருபன்
மணிகனக நிதிவகைகள் வரம்பிலகொண் டருமறைக
ணிபுணர்த்து சிவாகமமுற் றுரிசறத்தேர்ந் துளந்தெளிந்த. (௧௮)

நிதருபோ தகாதி சிவமறையோர் வைதிகரை
மூதருசீர்க் காசியப முதலாய முழுதுணர்ந்த
நேதருபல் விமாநாதி நிருமிதசா தகசதுர
ரோதுமெலா கிமம்வல்லா ருடன்றேவர் கம்பியரை. (௧௯)

உடனழைத்துக் கொடுவிரைந்தவ் வுத்தமமா வனஞ்சேர்ந்தங்
கடைதினத்திற் கேத்திரபிண் டாதியுப வாசாதி
கடனமைத்து மடனகற்றிக் கதிபுருக்கு மான்மார்த்தத்
திடனிலேத்த சிவலிங்க சிவார்ச்சனைசெய் குதிவிதியால். (௨௦)

சகலதல சிவலிங்க வியட்டிபூ சனைப்பயன்முற்
றகலமுற வளித்திடுமான் மார்த்தபூ சனையதனு
விகலரிய மாகதமா விலிங்கமுனக் களிக்கின்றேம்
புகலருமன் பாலென்றும் பூசைவழா தியற்றுதியால். (௨௧)

என்றருளி முருத்தனா விறையிறைஞ்சி யெதிர்நிற்ப
மன்றன்மல ராதிகொடு மாபின்மா தவிலிங்கத்
தொன்றியபூ சனைபுரிந்தீற் றேமாங்கி லினைநிரப்பித்
தன்றிருமென் கரத்தாலச் சாலிங்கந் தனையளித்தான். (௨௨)

அதியாச னடிவணங்கி யங்கையிணை விரித்தேந்தித்
தருமலரா தியகொண்டா சானெதிரா ணையின்விதியான்
மிருகிரியா தியதெரிப்ப விழைதருபூ சனைமுடித்து
ஒருமுளத்தாற் குருபூசை நேரியற்றிப் பணிந்தெழுந்தான். (௨௩)

குரவெதிர்நின் றரவிறைவன் கூறுகின்ற னன்மார்க்க
சரவிலிங்க பூசனையோ சகலதல சிவலிங்க
பரமபூ சனைப்பயனைப் பாலிக்கு மென்றனையாம்
பிரவணநா யகன்பூசை பேணுகெனப் பணித்ததை யென். (உ-ச)

அடிகளடி யேனுளத்தி னையமொழித் தருளுகென
முடிவணங்கி யெதிர்நின்றுன் முகநோக்கி மொழிகின்று
னெடியவனங் கதவேந்த கேட்டி நிபந்தெரிப்பாங்
கடிவருமான் மார்க்கநெறிக் காசுமா பூசனைதான். (உ-ரு)

சுருதிசிவா கமமாதி யாதிசருவ சம்மதமே
கருதுமது கைக்கொண்டோர் கனிவுறுதா வரலிங்க
பரமசிவ வழிபாடெம் பரிவுமிகக் கொளல்வேண்டும்
வரமிகுதா வரலிங்க வகைபலவா மவை கேட்டி. (உ-சு)

வேறு.

மனுட தாபித லிங்கமே மானுட லிங்க
முனிவர் தானவர் திருதான் முளைத்ததா பிடமே
யெனைமு றைஞ்சுரா தாபிதந் தைவிக லிங்கங்
கனிக ணேசகு காதிதா பிதங்கண லிங்கம். (உ-எ)

உலகெ லாமுய வருளிற்று னுதித்ததே சுயம்பு
விலகு மிவ்விய லைவகை யொன்றுக்கொன் றேற்றங்
குலவு மாயிர மயுதமி லக்கமே கோடி
நிலவ னந்தமா மடங்குயர்ந் தரும்பய னிகழ்த்தும். (உ-அ)

வழுத்து மிவ்வகை யன்றிவே றொருவகை வயங்கும்
குழைத்த மண்கடு மண்டருச் சிலைகொள்சீ ருணமு
னிழைத்த ரத்தின மொண்மணி வாணமே யிரதம்
பழுத்த மெய்ச்சுயம் பெனவிரண் டைந்தொரு பகுப்பாம். (உ-கூ)

இன்ன பத்தினுண் முன்னைநான் கொன்றினொன் றேற்றந்
துன்னு மொவ்வொரு பதின்மடங் கனையதாச் சைலந்
தன்னி னூறுபங் குலோகமாங் கதினிரத் தினந்தான்
மன்னுமாயிர மதின்மணி யிலக்கமே வாணம். (ங-0)

அன்ன தற்கொரு கோடியே விரதமாங் கனைத்தே
யின்னா ருட்சுயம் பிலிங்கமாங் கதனிலு மேற்ற
மென்ன லாமலா லளவுகண் டினைப்பரி தெவர்க்கும்
மன்னு பூசையீற் றினில்விடு மிலிங்கமோர் வகைகேள். (ங-க)

மண்ணுறு தண்டலை மன்னமாற் றுமணல்கோ மயமே
வெண்ணெய் கண்மணி சந்தனங் கூர்ச்சம்பூ விளைத்தார்
நண்ணுறு சர்க்கரை மாவென நவில்பவா றிரண்டி
னெண்ணணி யாலெதொன் றிற் புரியினு மிலிங்கபூ சனையே. (௩௨)

போத ருத்திரா ராதிய புனிதராற் பூவில்
வேத னாதிய வளப்பிலா விபுதரா லென்னான்
மாத போதனர் தானவர் நிருதர்மற் றவரால்
கோத றப்புரி யிலிங்கங்கள் கோடிமா கோடி. (௩௩)

ஆய வெவ்வகை யிலிங்கத் துஞ் சுயம்புவிற் கதிகந்
தூய மெய்வகைப் பயனெலா மெளிதுடன் றுறுத்து
மேய விவ்வியன் மெய்ம்மையா லமுதமா விபினத்
தேயமுய்வுறத் திவ்விய வமுதலிங் கேசன். (௩௪)

அருளி னிற்கள வில்பலப் பிரதனே யாகத்
தெருள்சு யம்புவாய் வீற்றிருந் தருள்பெருஞ் சிறப்பா
லிருளி ரிக்குமச் சேகர வனம்புகு கென்று
மருடொ ரத்தகி வேந்தவம் மந்திர நாதன். (௩௫)

அவ்வ னத்தன வரதசா நித்திய னாகித்
திவ்வி யத்தனி யமுதலிங் கத்தினிற் றிகழ்வுற்
றெவ்வு கத்துநீங் குறா திருந் தருளுமிவ் விறைக்குச்
செவ்வி முற்றநீ முன்புரி திருப்பணித் திறங்கேள். (௩௬)

வேறு.

வாய்ப்புனித தருப்பணம்போற் கருப்பதல மருத்த மண்டபமா மண்டபஞ்சோ பனமண்ட பாதி, புயப்பனைவிற் பொருப்பெனவிண் பாப்புயர்பற்பலகோ புரவகையா வரணவகை பொன்னெயில்கண் முன்னா, தாப்புகனால் பற்பலதேர் சிற்பர்முடி வணக்கந் தருமயனு னிருபிதஞ்செய் வித்தியவேயசினை, காப்பவனத் தமரமுத மூலலிங்கத் தட்ட கனந்தருபந் தனம்புரிதிகாசநூறால் விதியால். (௩௭)

கணநாதர் குறப்பிடிதன் மணநாதர் கபால காநாதர் பாநாதன் கடைகாவனாதர், தணவாத நுசம்பீடஞ் சௌபாதி சண்டீ சாந்தபரி வாரசுரர் தமைநிருமித் தாங்காங், கணவாயின் முவரிப்பத் தாவனஞ்செய் தரிபூ ணையைமத வெள்ளியமூ ணையணிவ ரவ்வூர், மணவாயின் றணவாதம் புரப்பகிரீஇயிமய மலையருணின் மலையுலக மலையறவீன் றருள்வாள். (௩௮)

உம்மையினு மிம்மையினு மம்மையினு மெம்மை யுண்மையுற வண்மையுற வொண்மையுறத் திண்மை, செம்மைசிவத் தன்மையெயது நன்மையருள் வின்மைச் சிவைகௌரி பவைகுமரி பெரியநா யகியெம், மம்மைதிரு வுருவி தியி னிருமிதஞ்செய் தவட்கெ மையனமர் துய்யசின காவிரிபோற் செய்ய கொம்மைதிகழ் கருப்பதலை விமாகுறி பலவுங் குலைவிலே தனமெழுப்பிப் பதிட்டைமுறை குயிற்றி. (௧௯)

பரவுசிவா கமநெறியிற் சிவத்துவிச விசிட்ட பாவனைக் கொண்டேமுற் பகர்பதிட்டை யாதி, புரிபுசுப தினத்துலகு புகழுமகா சாந்தி புனிதவிதி யனுஞ்ஞைமுதற் கும்பாபி டேகம், வரைகிரியை மந்திரம்பா வனாதிவி யாதி மறந்துமொரு குறைமருவா வகைவயங்கப் புரிவித், தாவிறைநீ யும்மனைய மனுவிறைவற் பூசித் தந்தணருண் முதலாய வனைத்துபியற் றுதியால். (௨௰)

அனந்தரமக் கனந்தமா கந்தாற்குப் பன்னீ ராயிரவிட் டம்பொருளொவ் வொருவருடன் றோறு, மினந்தரவந் திடத்தருபல் வகையவினை நிலங்க ளிலங்குமா வனத்துடனீந் திதன்மேலு முவகை, மனந்தரமா மணியணிகள் சுவணாதி தாதி மலிதருபா சனவகைமற் றுள்ளவெலாம் வயங்கிவ், கனந்தநித் தியமுதன்மூன் றுனுற்றுசிவத் துவிசர் கனிதரநெஞ் சினிதனவிவ் கனகாதி மனைகள். (௨௧)

வளனிறைபல் விளைநிலங்கண் மற்றவெலாஞ் சாசு வதாறுபவ சாதனத்தான் மறுத்திடினு மருத்தி, கொளவினிது புகன்று தவி யாங்கவரெஞ் ஞான்றுங் குலவியவாழ்தரப்பதிட்டைகுயிற்றியொருவாதே, பனகொழிபுதீயுமவணமர்ந்த னையான்மார்த்தமார்த்தம கதவமுதசிவலிங்க மூர்த்தி, கனாதிகமு மமலி லுபகரணவகையெல்லாங்கவினியபூசனைகள்சிவாகமவிதியாற்புரிதி. (௨௨)

இவ்வியல்பிற் பூசனைநீ புரியமுத லிங்கத் தின்னினிமா தவப்பெருஞ்ச்சீ திருடிகணீர்க் கிறைமுற், றிவ்வியபூ சனையாற்றி யிட்டமெலாம் பெறுவர் சென்றினிநா மிவிகுலோற் பவாமம நாமத், தவ்விறையாய்த் தெவ்விறந்தெய் மெய்வலிபெற் றுய்வா னவ்வமுத லிங்கசிவார்ச் சனைபுரிந்தின் படைவோ மெவ்வமிலொன் பதுகோளு மெவ்வுலகும் பூசித் தின்பமுறு முயம்பெறுவ ரென்புகல்வதினிநாம். (௨௩)

ஆதலினற் பணிராச குணிசிகா மணிகேளத்தருமா வனத்தமுத லிங்கேச சரணங், காதலினு முறைத்தவிதி கருத்துறவெண்ணீறு கண்மணிமுற் சிவசின்ன காத்திரனு யார்த்தி, * யோதலினு வரைந்தருளு மனுராச ராசவுத் தமோத் தமசீவ ரத்தினமாய் வேதத், தீதலினுர் வம்பெருகைத் தெழுத்தை முறை யோதி யினிதுதினந் தினம்பூசித் தின்பினமர்ந் திருத்தி. (௨௪)

---

* ஓது அல் இன்னுவெனப் பிரிக்க.

இத்தகுதி யோபெரி சுத்தசன்மார்க் கத்தி னியைந்துமை கதலிங்க வான்மார்த்த மெனுமவ், வுத்தமபூ சனையும்வழா துகுற்றிவரு குதியே னுலவாத வினையொப்பு மலபாக மேனுஞ், சத்தினியா தத்துயர்சுத் தாத்துவிதா னந்த சாந்தபர சிவமாவை பாந்தள்குல வேந்த, நுத்தியமன் றிதுவாய்மை யெனமாத வாசான் சூதவனத் துய்த்தனன்கா கோதரேந் திரனை. (௩௫)

வேறு.

என்ன வோதிய நந்தி நாதனை யெண்ணி லாமுறை வந்தி யாவய
னுன்றுகான்முனை பின்ன னந்தன வொண்மை மாவனம்வந்து ளானவி
னன்னர் கேள்வியி னுங்கு மாதவ நண்ணி னுனெதிர் நந்திநாயகன், சொன்ன
வாறுவி ளம்பு வான்விழை தொன்மை மாதவர் முன்பு சூதனே. (௩௬)

அமரர் வானமு தன்று சீவர்க ளமிர்த மாய்முழு வின்ப வாழ்வினி
மைமே மேவமு தென்று மாதவ ரளியி னீடிய விந்த மான்மிய
மமர வோதின ரொன்று கேள்விய ரகில போகமு முண்டு மாமல
மமர ஞானமெய் கண்ட போதர்பி னழிவில் வீடுற வொன்றி வாழ்வரே. (௩௭)

ஆதிசேடன் சிவலிங்கம் பெற்ற சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௧௭௧.

# ஆதிசேடன் சூதவனஞ்சென்ற சருக்கம்.

மதியி லங்கு வேணிமுக்க ணீசனை யங்கி சூழல் கட்க மருவு செங்கை நீண்மி டற்றன் முதுவானவர், துதிவ ழங்க நாதன் முற்செ ழுருள் புரிந்து காதன் முற்று துணைசெய் நந்தி கேச னற்பி னகிலோன்மை, கதலி லிங்க மீது பெற்ற கதைபு கன்று மாலு மாத்த கவினி லங்கு சேக ரத்தன் மலர் கானன, மறைதவி ழைந்து நேயமிக்க மனனின் முந்து போய ழத்த வருமை யன்பி னேறு கிற்ப மென வோது மால். (௧)

வேறு.

வினவுதி சனற்கு மார வித்தக முனிவ ரேறே
வனசைகோன் புகன்ற வெல்லா மகிழ்மிக வினவு சேடன்
* பனிபுரு தவனி மாந்தர் பதஞ்சலி யுருவந் தாங்கி
நனிமகிழ்ந் தரிபொற் பாத நளினம்பன் முறையி றைஞ்சி. (௨)

* பனி-நடுக்கம்.

விடைபெறீஇச் சென்று வேத வித்தகர் சிவாக மாதி
தடையறத் துணிந்து நான்குஞ் சமைந்தபோ தகர்முன் றேருரு
னடைதரு மயனுள் ளிட்டோர் நவிலுமற் றுள்ளா வெல்லாம்
புடைவர விலகட் கெட்டாப் புனிதவண் மணிக்கு வால்கன். (ரு)

வகைபல வளக்க வொண்ணு மாகிதிப் பொருப்பு மற்று
மிகையெனக் கைக்கொண் டச்சு வேதமா புரத்தி னின்று
வகைமிகப் புறப்பட் டோங்கல் வகையெலாம் பணிபு மோங்கற்
சிகைகிளா நிலாடல் கோடித் திருக்கயிலை யயம் புக்கான். (சு)

கண்டமர் மொழியோர் பால கண்டனை யெண்டோள் கொண்ட
கண்டணிப் பால நீல கண்டனை முண்டத் திங்கு
கண்டசீ கண்ட நாம * கண்டனை மண்டு தொண்டர்
கண்டரு மங்க ளனைக் † கண்டனை கழலி றைஞ்சி. (எ)

அருள்வலி யெண்ணி யெண்ணி யாங்குற வேண்டு கோடற்
பொருண்மலி துதிபு கன்று போந்தலி முத்தஞ் சார்ந்து
தெருள்பொலி கங்கை தோய்ந்து சிவந்திகழ் விசுவ நாதன்
மருணலி யுகள பாத வாரிசந் தொழுது வாழ்ந்தான். (அ)

ஆங்குநின் றரிதி னீங்கி யருட்பருப் பதங்கி ராதர்
தேங்கமலாம்ப கங்கொ டிருப்பதி பொருப்பி லன்னை
கோங்குவண் டினில்வ டுத்த குளிர்பதி யிருவர் நாப்ப
ணோங்கன லோங்க லாய வொண்மணி முத்தாற் றேறி. (கூ)

புலிபதஞ் சலியா னித்தம் பொலியதஞ் சலியா நித்தங்
கலிசிலம் பொலியா நிற்பக் கனியருள் வலியா நிற்ப
மலிசிவ காமி யுள்ளம் வாம்பிலா னந்த வெள்ளம்
பொலிதர வமன்ற மன்றம் புரிந்தருள் கின்ற மன்றம். (௰)

ஆமுத்த மாங்கத் தேந்தி யருக்கனைத் தலத்தின் பேற்றுற்
கோமுத்தி வாய்ப்ப வந்நாட் கொடுத்தரு டிருத்த லெம்மா
னேமித்திண் படைக்கி டந்த நேத்திரார்ப் பணபு ரஞ்சேர்க்
காமித்த வாஞ்சை யன்பர் கைக்கொள்சீ வாஞ்சி யந்தான். (௧௧)

அரியுரத் துச்சு வாச நிச்சுவா சத்தி னுங்கே
புரிதரு மசபா நித்தம் புரிமுசு குந்த வேந்தட்
பரிவெனும் வலையி னீர்க்கப் படுஉப்படி மூலா தாரத்
துரிமையி னொருவா தும்ப ருத்தம னுறுத்தி வாரூர். (௧௨)

* கண்டன் - தலைவன் † கண்டு அல்லை கழல் எனப் பிரிக்க.

ஆதிபஃ றலங்க டேறு மடுத்தடுத் தாங்காங் கன்பி
ஞேதுகேத் திரபிண் டாதி யுருற்றிமா மணிமி டற்று
மாதுபா தியனே வாழ்த்தி வழிக்கொளீஇ மறைக ளன்று
நீதியி னருச்சித் தேத்தி நிலவுமா ரணியம் புக்கு. (கக)

வேதநா யகனைப் போற்றி விளம்புமவ் வனத்தின் மேல்பா
லோதிரு யோச னைத்தா யொப்பிலாத் தனது முன்னை
மாதவாங் குரமே சாகை வகைவிரித் துயர்ந்து விண்ணின்
மீமெழுந் தனைய சூத விபினமே நோக்கிச் செல்வான். (கஉ)

செல்வுழி யகிகு லேசன் றிருக்குநேர் திருக்கி லாத
நல்லிண சுபரி மித்த நற்சகு னங்கள் பல்வே
றெல்லையங் குறுவ கண்டா னுலப்பிலா வுவகை வெள்ளத்
தெல்லைகாண் கில்லான் றற்கு மெழுனயபோ டேகு கின்றான். (கங)

நவங்*கடத் துவன்செல் சூத நனுங்கடற் றினிலு மேதப்
பவங்கடந் துயுநா வாயென் பாக்கியன் மார்க்கண் டாதி
தவங்கடத் துவமோர்ந் தாற்று சற்சனர் முன்ன ராங்கே
சிவங்கடத் துருகி மித்தத் திறம்பல திகழ்ந்த மன்னே. (கச)

தனித்தனி நிமித்தங் கண்ட தருமகிழ் வனைத்தும் தம்மு
ளினித்தெழு மின்பந்தேங்க விருகணீ ரருவி தாங்கப்
பனித்துடல் பூரித் தோங்கப் பரவுபோ மஞ்சி லிர்த்த
லனித்தவ மார்க்கண் டாசா னுடசம்வந் தொருங்கு சூழ்ந்தார். (கரு)

வேறு.

அன்ன மாதவர் யாவரு மெம்முடை கைத்திலும் புறத்து
முன்னு நன்னிமித் தம்பல வேககா லத்திலிம் முனரித்
துன்னு நம்மவ ரொவ்வொரு வருக்குமிக் கின்புறத்தோன் றற்
கென்னை யோம்ப மென்னையோ சனைபுரிந் திருந்திடு மெல்லை. (கசு)

வான நாந்துபி யோவென வழங்குகெம் பீரவான் வாணி
யான தங்கெழுந் தரியருள் சேடனுஞ் சேடன்மெய் யன்பாற்
கான மின்னதில் வாழுநும் புண்ணிய கௌரவ கனத்தான்
மேனி மிர்க்கெழு சூதமூ லத்தொளி மிளிர்சுயம் பிலிங்கம். (கஎ)

ஆமிர்த ரூபமாய் மல்லிமுன் வல்லிகள் செறிந்துசூழ்ந் தடர்பு
நிமிர்த ருங்கிரு காந்தாத் திலங்குமந் நிமலமா லிலிங்கத்
துமைம னுளனைத் திருமணு ளன்றனி யருள்பெறீஇ புவந்திங்
கமைய நேர்தொழற் காதர மீதாப் போதரு மகிகோன். (கஅ)

* கடம்-வழி.

அன்ன சேடனிங் குறுதனு மருந்தவப் பயனென வறிமி
னின்ன காரண மேகிமித் தம்பல நிகழ்ந்தநும் மெதிரே
யென்ன வோதிய வுடலிலாத் திடமொழி யமுதமுண் டிலங்கு
நன்னர் மாதவர் வேறினி யாதுகொ லின்பென நயந்தார். (௧௯)

அனையர் சூழன்முன் னனந்தா மணந்தனு மணந்தநல் லினந்தன்
றனைய ளாவிய வெதிர்வர முதிர்வா முனிவரர் தாஞ்சென்
றினைய தென்பதி லின்பமெ யன்புற முன்புரீஇ யிம்பர்
வினையை யோவிய மேவிய காவிய நாவியல் வேந்த. (௨௰)

இந்த மாவனத் தெல்லையில் வரத்தினோ வினிதுவீற் றிருக்கு
மந்தி ரேசன தருட்பெருந் தரத்தினோ மருதமர்ந் தீண்டு
வந்தி யாம்புரி யருந்தவ வுரத்தினோ மற்றெனோ வமையு
மெந்த வாய்மையு மின்னநின் வரத்துயர் விசைப்பதை யெவனும். (௨௧)

என்ன வின்னன வின்னுரை முன்னுரைத் தெதிர்தழீஇ நமந்தா
ரன்னர் யாரையு முன்னமந் தடிக்கடி யருந்தவப் பெரியீர்
பொன்னை நாதனைப் பல்லுகம் வெரிந்மிசைப் பொறுத்தபுண் ணியமோ
பின்ன ராங்கவ னருள்பொழி கருவொழி குருமொழிப் பேறோ. (௨௨)

எத்த லங்களும் பத்தியான் மிக்கிறைஞ் சுத்தரு மிருஞ்சீ
ரித்த லத்தலை புகப்பெறீஇ யெளிதுட னித்தவப் பேற்றால்
வித்த கத்திரு * மும்மையா லருளுல காட்சி செய் விமல
வுத்த மத்தவ குலதரி சனத்தனிப் பேறுபெற் றுவந்தேன். (௨௩)

இனிப்பெ றற்கரும் பேறுமற் றுண்டுகொ லெனக்கென விசைத்தாங்
கினிப்பு றக்கலந் தழைத்துறு குலந்தழைத் தெழுமுனி வார்தாந்
தனிப்ப ரன்கரு ணாகரன் மிருகண்டு தனயனாச் சிரமந்
தனிற்பு கப்புகுந் தருந்தவ விருத்திக டமில்வினு யமர்கால். (௨௪)

நான மாதிகட் கெவருமிக் கன்புற நயப்பது நலமிக்
கான மார்க்கண்ட தீர்த்தமென் றவர்சொல வினவியவ் வகீசன்
ஞான மாதவ ரோடுறீஇ யங்குமா சங்கற்ப நவின்றவ்
வான நீர்குடைந் தவட்புரி நியதிகண் மரபினுல் வயக்கி. (௨௫)

வேறு.

கோதான முதலாய குலதானம் பலதானங் குளிர்வ தான
மேதாந முனிவோர்கள் வெறுக்கையுற வகைவேண்டி வெறுக்கையோடு
மீதானத் தருவாதி விருதாநந் தானமெனு வெள்க நல்கி
யாதானம் புரிந்தனல்வேட் டருந்தானந் தம்முனிவர்க் கார்வஞ் செய்தான்.

* மும்மை-விபூதி ருத்திராக்ஷம் சடை,

இவ்வாறு செவ்வாயுற் றியன்முனிவர் பயன்முனிவந் தேற்ப நல்கு
மவ்வாதி சேடன்மதித் தமுதாதி நாளளித்த வாசான் சொன்ன
மைவாழுங் களத்தமுத மயலிலிங்க தரிசனத்தின் வாஞ்சை கூர்ந்திங்
கெவ்வாயின் னமுதசுயம் பிலிங்கம்வீற் றிருந்தருளு மியம்பீ ரென்றான். ()

அகியரசு புகலுறுமவ் வாசைமொழி நேசமொழி வறவி ளைய
தருமுனிவ ரகநெகிழ்பு சாற்றுகின்றார் முன்காகோ தரகு லேச
முகமுருவங் காண்மோவ முதலிங்க தரிசனமிம் முளரி யிற்பல்
லுகமுறினு மெமக்கெவனு முற்றெமது கண்ணுக வுணர்த்தி லாயேல்.(உஅ)

இங்குநினைக் கொண்டினிய லிலிங்கதரி சனப்பெரும்பே றெய்த லாலே
எங்களிரு கண்ணுமெய் யேமுகம னன்றுகரி யினிவே றென்னே
தங்கியும்பன் னெனொளித் தலைச்சிறப்பு நினதருமைத் தவாங்கு ரம்மே
யொங்கியெழுந் தனவிலிங்கத் துயர்வேது முணர்ந்திடும்பே றுற்றிலேமால்,

என்றனைய முனிவருவந் தினிதிசைப்ப வவரோடு மெனைய ரோடு, மன்றி
னிய சூதவனத் தமுதமய சுயம்பிலிங்க வருமை ருந்தை, நன்றுதுரீஇ யெங்
கெங்கு நடந்தறுங்சான் மார்க்கண்ட நளினி தீரத், தென்றுதய திசையணித்
தா யிசைப்பரும்பல் வளந் செறிந்தோ ரிடந்தோன் றிற்றால். (௩௦)

ஆங்கதுகண் டெரும்பொழுதா ரமுதினினித் துளங்கனிவித் தருள்வந்தீர்த்தாங்
கோங்கியெழு மின்னிசைகேட் டெவ்விடமோ வெவ்விடமுண் டெம்ப ராவி
தாங்குகளத் தமலனமர் தானமவ னமுதவுருத் தவறு தென்றுந்
தேங்கமுதம் பொழிதிறனே*சீரிதுவென் றுளங்களிப்பச் செல்லா நின்றான்.

லாலாவவ் வொலியெழுத்தின் வடிவாக மாதேவா மணிகண் டாசங்
காவாவு மாகாந்தா கைலாசா சைலேசா கங்கை நேசா
பரவாத பூதேசா பாசுபதே சாசுவதா பரமே சாபூ
தபவாபூ டணசாம்ப சதாசிவமங் கிரநாதா தாணு சம்போ. (௩௨)

சந்திரசே காவாம தாண்டவமுற் றுண்டவபஞ் சாக்க ரேசா
சந்திரகாத் திரவிலோ சனத்திரய வினத்துயர்மா சரும வேகா
சந்திரளம் புயத்ரகோ சராசனபல் சுராதிபனே சருவே சாநெஞ்
சந்திரமா மண்பருளத் தனிக்கோவி றனக்கோவில் சாந்த வாழ்வே. (௩௩.)

என்பனவா தியநாமத் திலங்கொலியா யெழீஇச்சுகமா யினித்த லான்மெ
யன்புநிறை சுகவொலியி தாமெனவுட் காமுறவாங் கணுகுங்காலக் [கன்
னின்பவொலி பன்னிறத்த விருஞ்சிறைப்பைஞ் சுகவொலியா யினிது மல்
முன்புதெரீஇ யிங்கிமித்த முன்னியது முடிக்குமெனா†முடிந்து கொண்டான்.

* சீர் = ஒலி.

† முடிதல் = எண்ணுமெண்ணமென்றனையின் முடிதல்.

அனந்தரமர் தவர்சூழ வாங்கணுகி மாங்குயில்க ளழைக்குமோசை
கனந்தருசா ரிகைசுவா கதங்கிலவென் பனவாதி கழறு மோசை
நினைந்தருகி மயினடமுன் னிலைநினைப்பித் துலைமெழுகி னெகிழ்ச்சி காட்ட
வினந்தருவண் டிசையாதி யேத்துறுமங் கடனுங்க மெனமுன் கண்டான். ( )

சாதிமா லதிமயிலை தளவுமுத லளவில்கொடி தழைந்து மல்கி
மீதுபடர்ந் தலர்துறும்பல் விருக்கமுள மருக்கமுத விமல லிங்க
பாததரி சனநிமித்தம் பகிரண்ட நிரைகளினும் பயிலா நின்ற
வாதிதிருக் கயிலைநிரை யடைந்தவண்சூழ்ந் தனவெனுமா றமையக் கண்டான்.

சேகரபூ ருகநிகரஞ் செறிதளிரின் றிருவர்முனந் தேட நீடுஞ், சேகரவெற்
பொன்றலபஃ றிரள்கொலென நின்றொளிரச் செய்மைகண்டான்
சேகரவா திவர்பரமன் றிருவருளிற் பெருகருவித் தெளிநேங் கண்டான்
சேகரண மிறக்குனித்த செம்மலைகளென விதழிச் செறிவு கண்டான். (ருஎ)

இத்தலத்தோ ரணுவளவா கிலுமீகை மலையளவா மிரும்ப யன்கு
டத்தமகை யுறனிதரி சனமெனவே யிலாங்கலிக டமக்குச் சின்னீர்
துய்த்திடமுன் னல்கியவச் சுநாசியமர் சுதன்மைமுனந் துலங்கப் போந்து
பத்தியினல் விளநீர்கள் பற்பலதந் தலங்கரிக்கும் பரிசு கண்டான். (ருஅ)

உத்தமர்நூற்கவிசுலபத்துணர்வரிதாய்வெற்றென்றூனதாகி, மெய்த்தரு
சொற்றொடருடைத்தாய்விழுப்பொருளாழ்ந்தினிப்புறவுள்விளங்கல்போற்க
வித்தமிதற்கெதிர்மறையாவிளைநாவல்பலத்தோடுமெதிர்வகண்டான், மொய்
த்தெழுமுக்கனித்தொகைகண்மூவகைநூற்றிறத்திலகுமுறைமைகண்டான்

சம்பீர மிலிகுசமென் றன்பெயர்க்கேற் றிடக்கனிந்தைய மொர்சுஞ்
சம்பீர மிலிகுசமாத் தனிகாட்டுங் கனிகாட்டித் தான்மோ கிக்குஞ்
சம்பீர நிரைகளைச்சா மீகரப்பஃ றிரளைகளைத் தங்கைநீட்டிச்
சம்பீர வடியருக்கீ தாவெதிர்பார்த் துறுங்கொடைஞர் தாமாக்கண்டான். (சு0)

நீடுபல பொருள்களெலா நிறைந்திருந்துந் தாழ்ந்தடங்கு நிலைமை வாய்ந்து
பீடுபெறுமணித்தொகையாய்ப்பெருமுடிப்பாயருள்கொடைஞர் பெற்றிகாட்
டுந், தாடிமமும் பெயராலுந் தானிழிந்து முனபீசந் தனைமுன் காட்டி
யீடிலிடம் பனைப்போன்றங் கிலங்குறுமுந் திரிவிருக்கத்தியல்புங்கண்டான்.

இவ்வகையின் மற்றுமவ ணிலங்குபல நலங்களெலா மிதயானந்தச்
செவ்விமிகக் கண்டுகண்டு செலுஞ்சேட னெதிரவண்ணிசேடமேன்மைத்
திவ்வியதேத் துயர்விருக்க சேகரமாய்த் தோன்றிடவோர் சேகரந்தா
னவ்வியன்மா வணித்திகழி யருண்மலிசுட் விளம்பாரி சாதமாகி. (சுஉ)

சூழுபுவா னிவந்துறவத் துருமங்கண் மீப்படர்ந்து துவன்றி யெங்கும்
வாழியன்மா லதியாதி வல்லிகள்பே ரில்லிதெனு மாண்பிற் சூழ
வேழிசைய பிரமராங்க ளிருஞ்சாம கீதமினி திசைப்ப மல்குங்
கேழிசைய வொருசூழல் கெழுமுதல்கண் டுழுவலன்பின் கிழமைகூர்ந்தான்.

அளிகிளர வாங்குறுங்கா லச்சூழ லுட்சார்ந்தங் கரிது நீங்கி
யொளிகிளரு மடிமடைவின் டுறுகாலின் மறுகாலி னுயர்பால் வெள்ளங்
களிகிளரப் பிரவகிப்பக் கற்றினங்க ளுடன்பல்வலங் * கண்டு தாழ்ந்து
தளிகிளரப் புறம்போந்து தன்னெதிரே பன்னிரைகள் சார்வ கண்டான்.

பாற்கடலின் மேற்படப்பெய் பசுக்கடம வசுக்களுடன் பரவி முன்செல்
காற்கடவு ளருள்வெள்ளங் கைம்மேல்வந் துய்ம்மேன்மைக்கனம்பெற்றங்கு
ஞாற்கடனீத் திலகனந்த னுவலரிய சிவானந்த னுபுவி லாச
மேற்கடவச் சென்றங்கு விதப்பருமற் புதப்பரம விளைவு கண்டான். (௬௫)

தோற்றுறுமச் சூழலிற்சார்த் தாலகுலம் வாலதியாற் சோத னித்தொண்
டாற்றமுய விரலேகுடா வடிகிளைசூழ்ந் திறைஞ்சுபுயோ காதிதொண்டு
போற்றியதா மும்பணிந்து புரியோகத் தினிதமரப் புழைக்கை நீர்தா
யேற்றபணி கயஞ்செயக்கண் டரவம்பாங் குபசாந்தத் திறைஞ்சிச் சூழ.(௬௬)

இன்னனபல் விலங்கினமு மிருங்ககமுற் குலங்களுமவ் வெல்லை யாற்று
முன்னருமற் புதச்செயல்கண் டெவாது வானந்த வுததி மூழ்கி
யென்னையுடை யானமுத லிலிங்கேச னெழுந்தருளி யினிது வாழுந்
தன்னிகர்மா தலமிதுவோ தரும்பணிசெ யிவையெம்மா தவர்க ளேயோ.(௬௭)

என்றுவிரைந் தன்புறமு னேகியெதி ரடிக்கடிவீழ்ந் திறைஞ்சி யெம்மான்
முன்றிலரும் பணிநாளு முயல்கின்றீர் திருத்தொண்டீர் முன்னு ளொன்று
வின்றுறும தரிசனப்பேற் றினுக்கியன்மா தவமென்னே வெளிய னேனைக்
கொன்றைமுடி யானேன்று கோடலுறுஞ் சங்கமத்தின் குணமே யென்று.

அன்புரையப் பல்புகன்றங் கருளீர்ப்ப வுட்புகுந்தா னமுத மாண்பே
ரின்பமய சுயம்பிலிங்க வின்னருண்மங் கிராகத னெழிற்கோ லந்தன்
முன்பிலகு முறைகண்டான் முதமகோ ததிமூழ்கி முன்ன மாதி
தன்பழைய கரணமெலாந் தணந்தொழிய மணந்தசிவந் தானே யானான். ()

சீலகுண சேட்டிதமோர் சிறிதுமிலான் றிருமுனந்தான் செய்த †வோதல்
யாவதுமோர் வரிதாய்ப்பற் றிலாததொரு தம்பமென வெதிரிற் றாழ்ந்தா
னேவரிய சிவானந்த வுததியினுங் கரையிலவா தொன்றி வாழ்ந்தான்
றேவர்பிரா னருளெப்பத் திரையூடு கரையேறித் திருமு னின்றான். ()

---

* கண்டு-செய்து. வசு-பசுக்கன்று.

† ஓதல்-நீங்கல்.

அருண்மேனி யமுதவொளி யழகெறிப்ப வணித்த தாகண் டண்ணா லிந்தத்
திருமேனி திகழ்தரவிச் செகமுழுதும் புகழ்தரநீ திவிய லிங்க
வுருவாகி வுதித்தெழுந்திங் கொருவாம லுலகமெலா முலவா வின்பப்
பெருவாழ்வு பெறவமர்ந்த பேரருளிப் பேதையுணர் பெற்றித் தேயோ.

உரையாலு முளத்தாலு முணர்வாலு மொருநான்கி னுச்சி யாலும் [தே
வரையாகின் னருட்பெருக்கெவ் வகையாலு மனுத்துணையும் வழுத்தொணா
புரையோடு தரையோடு புன்மொழியே துன்றியவிப்புழுத்தநாயேன்,கரையா
வன் மனத்தெளியேன் கருதாவதோ விதிர்விதிர்க்குங் கடையேனுள்ளம்.()

அகிலேசா சுயம்புலிங்க வமுதேசா முழுதருளம் பாநே சாவிவ்
வகிலேசா யினுமளியு மதெனு தெளியுமளித் தருள்சு ரேசா
முகிலேசா முடித்தாசா மூதேசா பூதேசா முன்னு ளன்னை
நகிலேசாத் தியவடுக்கொ ணடனேசா படனேசா நாலூல்வாசா. (௫௩.)

என்றினைய துதிகள்பல வெடுத்திசைக்குந் தொடுத்திசைக்கு மிடையே யின்
பந், துன்றிருக ணீர்மாரி சொரிந்திடநாத் தழுதழுப்பச் சொற்கள் சோரு
முன்றிலடிக் கடியிறைஞ்சு மொழிகுழறும் பினுந்துதிக்கு மூகமாகு
மன்றகிவேந் தூற்றுளவா ராமையெவ ரளக்குநர்முற் றரிதேயம்மா. (௫௪)

இவன்செயலிங் கிதுவாக விளிதுடன்சா ரிருடிகுழாமெல்லாங் கண்டாங்
குவந்தனர்பன் முறை யிறைஞ்சி யுருகினரில் வமுதேச னுருவங் காணுஞ்
சிவந்தரவந் தருளியவிச் சேடனே விசேடகுல தெய்வ மென்பார்
பவந்தெறுநங் குருவென்பார் பரகதிக்கு வித்தென்பார் பரமனென்பார். ()

பன்னுளிங் கமர்ந்துளநாம் பரிந்துபுரி யருந்தவமெய்ப் பலனே வென்பா
ரன்னேவிப் பணியரசுக் காற்றுலுகைம் மாறெம்மா லாமோ வென்பார்
முன்னுளிங் குளதெனிலிம் முளரிமுழு துலாவியவெம் முற்ப டாதோ
வின்னுகர்கோனன்பே யிவ்விலிங்க வுருவாகி யெழுந்த தென்பார். (௫௬)

அன்னேயென் புகன்றவா றமுதசுயம் பிலிங்கமிசை தநாதி யோரு
முன்னுதற் கென்னதவ முற்றினமுற் படலெளிதோ முனிவாழ்க்கை
மின்னுத குரவனருள் வியனுபதே சப்பேற்றின் மெய்ம்மை தேர்ந்த
வின்னேன்வந் திலனேலிவ் விலிங்கமதி தாரகமத் தென்னு மென்பார். (௫௭)

இவ்வகைபற் பலபுகன்றுங் கின்புறுமெ யன்பினமு தேசபாத
திவ்வியசா ரோருகம்பன் முறையிறைஞ்சிச் சிவானந்தந் திளைத்து வாழ்ந்தா
ரவ்விருடி குழாம்பணிவேந் தமுதலிங்க தரிசனம்பெற் றடுத்த வந்நாட்
டைவருபூ சங்குருவா ரம்பருவ மாயவதி சயத்தை யோர்ந்தான். (௫௮)

வேறு.

முன்னுந் தில்லை முளரியின் மாநடந்
தன்னை நாந்தரி சிப்பத் தருந்தின
மின்ன மாவனத் தீசனைக் காட்டிற்கு
லென்னை யோவிதற் கியுங்கைம் மாறியாம். (சகூ)

யாது நல்கினு மின்னதற் கோரனு
வாத லொப்பரி தாதலி னித்தரு
மூதி னத்திம் முளரியி லீசனைப்
பாத சேவை பரிந்து புரிந்தவர். (ரு0)

ஆச ரத்தபி டேக மருச்சனை
மாத ருற்சவ மாதி வயக்கினர்
காதன் முற்றுமுன் பெற்றருள் காட்டமா
மோத வுத்தம மோக்கமு மேற்கொள்வார். (ருக)

என்ன மாண்பல வாசக மீறுரைத்
தன்ன வாரமு தேசனை யாசையிற்
பன்னு மாமலர் பைங்கனி யாதிகொண்
டென்னு பூசை முறையி னுஞற்றினன். (ருஉ)

என்று நந்தி யியம்ப வெதிர்தொழா
நின்ற வம்புய னும்பல்பி னேயரிக்
கொன்றி மேற்பன்ன கேச னுஞற்றிய
நன்றி யெய்ந்தை நவின்றருள் கென்றனன். (ருங)

சனற்கு மார னுவகை தழைப்பமேன்
மனக்கு லாவுநந் தீசன் வழங்கியாங்
கினக்கு ழாங்கொ ளிருடிகள் கேண்மினி
யெனக்கு ணூகா சூத னியம்புமால். (ருச)

வேறு.

இளைய காதையி சைத்துளா ரினிது கேள்விம டுத்துளார்
விளைவன் யாவும்வி டுத்துமேல் விளைபல் போகநு கர்ச்சியார்
புனக கோவின்மு டிக்கணீள் படியி னுயுண்மி குத்துவாழ்ந்
தனக பாதகி ழற்கணே யமல யோகினி லைப்பரே. (ருரு)

சூதவனஞ்சென்ற சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-எ௱ரு.

# ஆதிசேடன் றிருப்பணிச் சருக்கம்.

அன்பேறு சேடன மாவன மன்றேறு காதைதயி தோதினம்
பின்பாதி சேதிம மாதிய பின்றுத நீள்பணி பீடுயர்
கும்பாபி டேகமு ஞயசெய் கொன்பேசு வாமினி மேலெனை
நம்பாவ நாசசு போதக நந்தீச ஞதர வோதுறும்.

வேறு.

தாதை மைந்தனென் றேது தபோதிதே
* போத னந்தன னந்தாம் போற்றுமா
நாத னெந்தை நயந்தமர் கோயில்செய்
காத லுந்து கருத்தனி தாற்றுமால்.

பாங்கி னின்ற சூத பதியைநீ
யோங்கு சேதிம மோது முறுப்பெலாந்
தாங்கு வானவ ருருஞ் சமழ்ப்புற
வீங்கெ மீசற் கியற்றுகென் றேவினன்.

பின்னு மெந்தை பிரானடி யர்ச்சனை
யுன்னி யாற்றற் குழுவலன் புந்திய
வன்ன பூசைமா சாந்திகட் காம்பொரு
ளென்ன வுங்கொணர் மின்னென வேவினன்.

உழைய ராங்கவ் வுரைசிரங் கொண்டுசென்
றுழிவி லாவவ் வுபகா ரம்மெலாங்
குழுவின் மல்கக் கொணர்தரு முன்னவட்
செழிய புற்கொடி யாதிய சிந்தரோ.

பாலு மாய்மருந் தாய தெனும்படி
கோல முற்றுஞ் சுராதிகொள் கோக்களன்
பால ருந்த வருச்சித் தருத்துபு
சாலு மெய்ப்பயன் பற்பல சார்ந்தனன்.

பளிக்கு மேனிப் பரனமு தேசனுட்
களிக்கு மப்பிர தேசங்கண் ணுடிபோ
லொளிக்கு லாவிய வொப்பச் சமன்செயாத்
தெளிக்கும் போழ்தத் தினகான் றன்காம்.

* போதனந்தன்-சென்ற அனந்தன்.

சிறிது மெல்லெனத் தீண்டுறக் காண்டலு
மிறை யிலிங்க முடித்தனிருகரம்
பொறைசெய் வெண்குடை பொற்ப நிழற்றும் வாழ்
வுறவி னோந்தார கேசன்மு னுற்றனன். (௮)

அதற்கு முன்ன ரமரர் தபதியங்
கிதற்கு நேரிலை யெந்தவண் டத்துமென்
பதற்கி ணங்கொரு பைம்பொன் மணிக்குல
விதத்தொ ளிச்செய் விமான நிரீஇயினன். (௯)

யாரி யத்தொ ரிலங்குபொன் மேருவிப்
பூரி யுற்றது கொல்லெனும் பொற்பது
தேரி குத்தெழு திண்கயத் தெண்குல
நாரி கப்பொறை யாற்று நலத்தது. (௧௦)

அனந்தன் கூர்மன்முன் னுயவ ரண்ணியாங்
கினந்நி கழ்ந்துற வேண்டி யிடந்தொறுங்
கனந்த ரப்பொலிந் தோது கவின்மிக
மனந்த ருக்கி வகுத்துள மாண்பது. (௧௧)

பானு வான்செல் பரிசுநேர் பார்த்துமப்
பானு வொன்றிவட் பற்பல் பசுங்கதிர்ப்
பானு நின்றொளிர் பான்மையி தென்னையென்
பானு லும்பொற் கலசம் பரிப்பது. (௧௨)

வானி ராசியு மல்லவிம் மண்ணுலா
மானு மல்லவக் கோபுரத் தானல
வேனை யாண்டைய வென்னப்பல் லேற்றின
மேனி லைத்தெழில் செய்ய மிளிர்வது. (௧௩)

ஓந்தி லிங்கத்தி னென்றதி தாலமா
முந்தி லிங்க மெனலின் முடிநிறை
யிந்த ணிந்த தெனநித் திலத்தினத்
தந்து மொண்குடை சென்னி யொளிர்வது. (௧௪)

அன்ன தற்கிரு பான்முத் தவிர்மணி
யின்னி யற்றிரண் டேழையர் சாமர
முன்னர் வீசுபு நிற்றலம் மொய்திரை
மன்னு கங்கையின் னுறென வாய்ந்தது. (௧௫)

மாற்று யர்ந்தவட் டாபத மாமணி
யாற்றி கழ்ந்து சிவாகம யுத்தமாய்த்
தேற்றி யெங்குஞ் சிவனே பரமென
வீற்று வீற்றௌிர் விம்பங்கண் மேயது. (கரு)

நித்தி லத்தொடை சூழ நிரைஇ நவ
ரத்தி னத்தினு நாற்புறஞ் சித்திர
பத்தி மிக்கெழச் செம்பது மத்தணி
மத்தி வைத்த விதானமுள் வாய்ப்பது. (கஎ)

புத்தி சற்றுமில் புன்மைய னேதுத
ரத்த தாங்கொ னவிற்றரி தோர்ந்துண
ருத்த மப்புல வோர்க்கு முறுப்பொளிஞ்
சுத்த யோகருட் டோன்றவ் விமானமே. (கஅ)

இனைய மான விமான மிலங்கமேற்
புனைக ருப்பக் கிரகம் பொலியுமவ்
வனக னைம்முக னுதவி னுற்றிசை
யினிலுங் கண்ணடி யேநிரைத் தாலென. (ககூ)

நாற்பு றத்து நலந்திகழ் பித்திகை
யேற்பு றப்பளிங் காலுறுப் பியாவையு
மேற்ப டுத்தி வியன்மணிச் சாளரம்
யாப்பு றுத்தெழின் மல்க வியற்றினன். (உ0)

வேறு.

இவ்வகையி னமுதசுயம் பிலிங்கசதா சிவார்ச்சனைக்கவ் விறைவ னோங்கு
தெய்வமுகோற் பனமுனிக டிருக்குலத்தார் சிவசாதிச் செல்வ ராதி
சைவசிவ சமக்கார சர்வாதி காரமெனர் தணமே யல்லா
லவ்விடையுட் புகுதும்விதி யார்க்குமிலாக் கருவின்முடித் தமைத்த பின்னர்.

அானரியம் புயன்மகவா னுமிவர்நாற் சாதியரொன் றுரணஞ்சொன்
மாபினில்லை சியவயன்றன் வத்திரோற் பவமுனிவர் மாபிலங்க
வருமறையோர் புகுமருத்த மண்டபஞ்சத் திரியமனர் வணிகர் சற்சூத்
திரர்புகுமா மண்டபமுன் றிகழாறு காற்பீடஞ் சேரச் செய்தான். (உஉ)

அடுக்குமா ளிகைநிரைவின் னகடுபோழ்ந் துவனைதா னமைத்த வேணி
கடுக்குமா றெழீஇச்சூழ்ந்து கவினமுதற் பிரகாரங் கண்டான் மேன்மேற்
றொடுக்கும்வா னகருமிவட் டின்னுறப்பல் லேணிவைத்த தோற்ற மென்ன
மடுக்குறுமைந்தாவரண மதில்களின்மேன்மேலுயர்கோபுரங்கள் வைத்தான்.

ஆவரண மைந்தினுமாங் காங்குபரி வாரகுல வமரர் வாழ
மாவரண வுறையுள்பல மணிபொன்னாற் புரிஇப்பளிங்கு மணிச்சி லாதி
யாவிரிபன் னிலங்களுமொப் பமைத்தனைய குட்டிமஞ்சந் தரும்பொ னாற்றிச்
சேவினமுஞ் சிவகணமுந் திருமதில்க டொறுந்திகழச் செறிவித் தானால். ()

முரணிடப நந்தியடி முகவாயி லொருமருவ முதிய செம்பொ
னரதநமா தியதிகழ்மண் டபங்கள்புரீஇ முதல்வாயி லகநந் தீசா
பரதலமேற் பொன்னாலம் பரதலமே னிமிர்துசத்தம் பங்கி நீஇமா
திரமிருநான் கினுமனைய சேவேறு கொடித்தம்பத் திறந்தா பித்தான். (௨௫)

அனகன்விழாக் கொண்டருளு மணிவசந்த மண்டபஞ்சி வாக மாதி
புனிததமிழ் வேதசிவ புராணாதி திருமுறையைப் பூசித்தென்றுங்
கனிதருமன் பருண்முறுநீஇக் களங்கறமுற் றுணர்ஞானக் கஞ்வ் கோர்ப்பு
வனமுய்சிவப் பிரசங்கம் வயங்குறச்செய் வித்தியா மண்டபந்தான். (௨௬)

ஆயிரவிற் காணிறுவு மணிமணிமண் டபஞ்சதநம் பாதி மேய
மாயிருமண் டபம்யாக மண்டபமா மறைநிகீத மண்ட பாதி
தூயபல வங்கமெலாந் துறைதந்திலங்க வமுதலிங்க சுயம்பு நாதற்
கேயமகா சிவலோக மிதுவேயென் றெடுத்தோத வியற்றி னானால். (௨௭)

இம்முறையே மும்மையினு மெம்மையுநண் மெய்ம்மையுல கெல்லா மீன்ற
வம்மையமர் செம்பொன்மணி யாலயமு மாலயன்முன் னமரா ராதி
மும்மையுல கமும் வியப்ப மூதண்ட பகிரண்ட முழுதும் வாழ்த்தச்
செம்மையபல் லங்கமெலாஞ் சிறந்தோங்க நிறந்தேங்கச் செய்து மேலும். ()

தூய்மையதாய்த் திண்ணியதாய்த் தொழிற்கினிதா யிழுக்கிலதாய்த் தொன்
னூல்சொல்லும், வாய்மையதா யொண்மையதாய் வயங்கெழின்மாண் சிலையி
னிபமாமுகத்தோன், றூய்மையினார் பரன்மூவர்கௌமாரிசண்டாந்தபரிவாரச்,
சேய்மையமருமுருவத்திருவுருவோவெலாவியப்பச்செய்துமேலும். (௨௯)

அண்ணறனக் காவிடையா வருட்சத்தி பீடமுஞ்செய் தாங்குக் கண்டோர்
கண்ணடியோ மரகதமோ கருஞ்சிலையோ வன்றெனவே கழறி முற்று
மெண்ணரிதாயிறுவனாயுமீதலெவன்றேமறைகளிறையையோதும், வண்ண
மெனத்துணிந்துணைக்கும்வகையெவர்க்குமரிதாகுமாண்பிற்றந்தான். (௩௰)

திருவிழாக் கொண்டருள்சோ மாக்கந்தர் மதிமௌலி சிற்ச பேசர்
கருவிழா தெமையருளுங் கணேசர்வான் பிடிகுறமின் களிக்கு நேசர்
மருவிழா விதழிமுடி வாங்கினரத் திரதேவர் முதலோர் வண்ண
குருவி*ழா விருதராம் பூநதத்தா னிருமிச்சாங் கொளிர்வித் தானால். (௩௧)

* ளகரம் - எதுகைநோக்கி ழகரமாயிற்று; உழ்கியென்றாயதுபோல.

இருமணியி னிருமிதஞ்செ யிருவகையிம் மூர்த்திகளுக் கெல்லாஞ் செம்பொ
னருமணியின் வருமணிக ளளப்பிலசெய் தருமேசர்க் கைந்து சென்னிக்
குருமணிய சுடிகைதிகழ் கோளராப் படங்கவிக்குங் கோள காதி
திருமணிய வுபவீதத் திருவணிமு னெல்லாமுந் திருந்தச் செய்தான். (௯௨)

இப்பரிசெல் லாம்புரிந்தாங் கெதிர்நின்ற மயனுடல மிகுகப் புல்லி
யொப்பரிதாய் நீயிவண்செ யுதவியுரை யளவைகளி னுணர்த்தொ ணாதா
லெப்பெரியவருக்குமெனில்யான்கொலனு வெனுங்கைம்மா றியற்ற வல்லே
னப்பரம னருள்வீடு மதற்கிணையோ வன்றேமற் றறியே னம்மா. (௯௩)

என்றுபல புகன்றிணையொன் றின்றெனினு மரபிஃதங் கீக ரிப்பா
யென்றுபல பலபொருளி னிருங்குவைக ளரும்பணிமு னெல்லாந் தந்தாங்
கென்றுறழ்மா மணிப்பணிவேந் தின்புறுமெ யன்பினமு தேசன் பாதத்
தென்றுணையேகும்பாபிடேகமினிக்கொண்டருள்கென் றிறைஞ்சிப்போந்து

முனிவர்சிக மாகநூன் முற்றுணருஞ் சிவத்துவிச மூகக் கோர்மற்
றெனையபொாடுஞ் சூழ்ந்தனுவை யெழுவாய்மா கும்பாபி டேக மீரு
மனியசிவ மகாயாக மகாசாந்தி புரியோரை மாசொன் றின்றாய்ப்
புனிதமதாய்ப் பொன்மதிமுற் புணர்சுபநோக் கணவுநலம் பொலிவ தாகி.

திரிகோணங் கேந்திரமா தியநலன்பல் பயன்மலிந்து சிறப்பத் தீக்கோண்
மருவாது நனித்துநிறை மதிநாணிச் சயிந்தனைய மாசு ணேசன்
பெருகார்வத் தருமேசன் பேணுதளிப் பூர்வதிசை பிறங்கப் போந்தாங்
கொருவாதொன் றிலஞ்சிதன்பே ருறப்புரிந்து மயனுலவ் வுயர்த டாகம். ()

மேற்றிசைமார்க் கண்டமுனி வியன்றடமிவ் விரண்டினுக்கு மிளிர்சோ பானை
நாற்றிசைமா மதிலாதி நயப்புறுத்தி வியப்புறுமெய்ஞ் ஞானம் வாய்ந்து
போற்றிசையுஞ் சிவத்துவிசர் புந்திமகிழ்ந் தனவரதம் பொலிந்து வாழ
வேற்றிசைவான்றொடுகுடுமியெழின்மணிமாளிகைபலவாங்கியற்றுவித்தான்.

முற்பெறவச் சகருடும்ப முதியசிவ மறையவரை முழுத்த நன்று
ளிற்பரவு பற்பல்பொரு ளெல்லாமு நனிநிறைத்தவ் வில்லந் தோறும்
பொற்புறுமா பிரதிட்டை புரிந் தமைத்தாங் கேனையவும் புரிந்து செய்யு
மற்புமிகு மகிவேந்த னந்நாட்டு மகிவேந்தா மபயர் கோமான். (௯௮)

சாற்றுறுபே ரிராசசூ டாமணியென் பான்றனையித் தலத்தி னும்போந்
தாற்றுசெய லுளைத்தழைமி னந்தணர்கா ளெனவிடுத்தா னவராங் கேகித்
தேற்றினர்கேட் டன்புவகை திளைப்பவளப் பரியநிதித் திரளி னோடும்
போற்றுபரி வர்க்கமெலாம் புடைசூழ மாவனத்துட் பொருக்கென் னுற்றான்.

அந்தகையி னிராசகு டாமணிபோந் தகிவேந்த னடிதாழ்ந் திந்த
வுத்தமமா தலமிதுவோ வொப்புயர்வில் சிவபுரமென் றுவகை யுள்ளம்
பொத்தநடந் தனந்தனெனும் பொன்மணியா திகடிகழும் புனிதன் கோயி
லெத்தலமுஞ் சிவத்துவிச ரிருக்கைகளுந் தனித்தனிகண் டின்புற் றானால்.
என்னுரைக்கே னின்னருமை யெப்பெரிய புலவோர்க்கு மெடுத்துக் காட்டா
முன்னுரைக்கு மரிதேநீ யுவந்துபுரி திருப்பணியி னுயர்வென் றானின்
முன்னுரைக்கு மாறேழை முன்னுகினு முற்றுவதோ மூதக் கோவென்
றின்னுரைக்குஞ்சென்னிதனையெதிர்தழுவிப்பணியரசோரிருக்கையீந்தான்.

வேறு.

அந்தலத் தமர்ந்தர சனந்த னோடவ
ணைத்தரு செயலுங்கண் டிருப்ப வவ்விடை
மொய்த்தபல் பொருளொரா முன்கொண் டேகுவா
னுய்த்துள வேவல ருவைகொண் டேற்றனர். (௪௨)

அரிசனப் பெருங்குவா லாங்கொர் பாங்கரப்
புரியிடி யரிசிமாப் புலர்ந்த தாத்திரி
விரியிடி குங்குமம் வியன்மி டாக்களிற்
றெரியொரு பாங்கரிற் செறித்து வைத்தனர். (௪௩)

அலகில்பன் மிடாக்களெட் டைல மார்த்தனர்
பொலியும்*வற் சலகிரை வேண்டும் போதெலா
மிலகுதோ சனமுற யாத்திட் டாரவைக்
குலவில்பல் துணைநிறைந் தொளிர்பல் சாலையில். (௪௪)

அப்பொழு தப்பொழு தாங்கு வேண்டுபால்
பொற்புறு தயிர்மிடா நிரைகள் பூரித்தா
ரொப்பறு சுகந்தமெட் டெகுஞ் சூழ்பசுத்
திப்பிய நெய்க்குட மனேகஞ் சேர்த்தனர். (௪௫)

நெங்கெழு வின்சுவை நிமிருந் தைதவிர
முக்கனித் தொகுதியன் மூரி வெற்பின்வான்
மிக்கெழச் செறித்தன பேனா மேதகு
மெக்கனிக் குவாலுமங் கெய்த வைத்தனர். (௪௬)

மதுக்குடம் பற்பல மலிபல் லாயிர
முதுக்கழை ரசகண்ட முழுத்த சர்க்கரைப்
பொதிக்குல மனேகமுப் புடையி லாங்கலிக்
கதிர்க்குலை கோடிமேற் கவினச் சேர்த்தனர். (௪௭)

* வற்சலம் - இளங்கன்றுப்பசு.

திணியகாழ் நறுங்குற டெரிஞ்சு தேங்கமழ்
தணியபூந் தேய்வைப்பொற் றசும்ப னேகமாங்
கெணியவில் வாதியின் வடித்தி மோதக
மணிகட மளப்பில வாக்கி வைத்தனர். (௫௮)

பன்னிறப் பல்வகைப் பளிகில் சாலிக
ளென்னவு மனேகவெற் பெனக்கு வித்தனர்
தன்னிக ரின்னியற் றூய தண்டுலெ
மன்னவற் றெண்மடங் கதிக மீட்டினார். (௫௯)

வாடக வொவ்வொரு வகையு மாசுதீர்த்
தாடக மாடமூர்க் கந்தி லாதிய
பீடகத் தானியம் பிறங்கு பற்பல
*நீடக மெனநிரை நிறைந்த மைத்தனர். (௬௦)

வில்லுவம் பாடலம் பலாசம் வேணுமா
சொல்லுதும் பாஞ்சமி யித்தி தூர்வையம்
புல்லர சால்பலாப் போற்று சந்தன
மொல்லைவெள் ளெருக்குநா யுருவி மூவைந்தும். (௬௧)

திகழ்கருங் காலியே தேவ தாருவே
யகருவா மலகஞ்செஞ் சந்த ஞதிய
பகர்சமித் தெலாந்தனித் தனிபற் பல்கிரி
வகையெனத் துணித்தவண் மலிவித் தாரரோ. (௬௨)

மலிபசுந் தருப்பைகண் மாயிற் கொய்து கொய்
தலகில்பன் முடிகொணர்ந் தாங்குப் பைம்மணி
மலையென வுயர்த்தினர் வகைபற் பன்னவு
கலசமுன் னடுக்கினர் கணக்கி லாதன. (௬௩)

அறிவரும் பொன்னிறைல் வெள்ளி யாதியாற்
சிறியன பெரியபஃ றிறத்த பாசன
மிறைசிவ யாகபூ சாதிக் கேய்வன
யறிமய னிருமித்தாங் களிப்பச் சேர்த்தனர். (௬௪)

கூவிரம் வாரிசங் குமுதங் கொன்றையிந்
தீவரஞ் செங்கழு நீர்முற் சீரிய
பூவின மீனினம் புவன் கூர்மமுன்
ஞவன பொன்மணி யால மைத்தனர். (௬௫)

---

* அகம்-மலை.

சூதபத் திரங்கண்மும் மூன்றிற் சொல்லுப
வீதபத் திகண்முடி விளங்கு கூர்ச்சங்க
*ளாதபத் திறத்ததேங் காய்க ளாதிய
பூதபத் தியின்மணி பொன்னிற் சேர்த்தனர். (௫௬)

பொன்னினும் பட்டினும் பொருவி லாமணி
தன்னினுங் கவிகைவெண் சாம ராதிகண்
மின்னுமிழ் சுருட்டியா லவட்டம் வீசன
முன்னிவை யளப்பில முற்றி னார்களால். (௫௭)

விலைசெல்காற் பாசமெல் வாசம் வீற்றுவீற்
றலகில்பன் னிறத்தபட் டாடை காம்பாங்
குலவுமொவ் வோர்வகை கோடி கோடியாக்
கலைகளி னளவுறுங் கலைக ளார்த்தனர். (௫௮)

மதிப்பரும் வின்னவ மணிக்கு வால்பல
கதிர்த்தெழு வனகன கக்கு வால்பல
நிதித்தொகை பற்பல நிமிர்த ரக்கொணு
விதிர்ப்புற வகையு மிகக்கு வித்தனர். (௫௯)

வேறு.

கற்பமுறை யமைத்துவடித் தெடுத்துத் தூய கமழ்தருசீ தளவிலைப்பூங் கல
வை சேர்த்துப், பொற்புறவாய் தூத்துகிலி னிறுகச் சூழ்ந்த பூரிதவெண் டிரு
நீற்றுப் புனைபொற் கும்பம், பற்பலசேர்த் தனர்நானங் குங்கு மப்பூப் பாளி
தங்கோ ரோசனைவெண் பசுங்கர்ப் பூரம், விற்பெறுதண் புழுகுமுத லளப்பி
லாத விரைவருக்க நிரைநிரையா விளங்கச் சேர்த்தார். (௬௦)

விரைகமழு நறுந்தூபம் விரிதசாங்கம் விரவுறுபூம் பொடியேல விதந்தக்
கோலம், வரமிகுசா திக்காய்பத் திரிவங்கம் வான்மிளகு முதல்வாச
வருக்க மெல்லாம், பெருகநிறைத் தனர்யாகத் திரவியங்கள் பெட்புறவொவ்
வொன்றுகப் பேணி யாராய்ந், தரியவெலா மிகச்சுலப மாக வாங்க ணளப்
பரிதாம் படிநிறைய வமைத்துப் பின்னும். (௬௧)

அரம்பைநெடுங் குருத்தலரும் பருவம் வாய்ப்ப வரிந்தசுமை சுமையாக வனே
கஞ் சேர்த்தார், வரம்பிலகாய் வகைமூல வகைக ளாக வல்லிபழுக் காய்வகை
கண் மற்றுஞ் சேர்த்தார், விரும்புதளிர் வகைதுவர்ப்பு ருகத்த தொக்கின்
விதமிருத்தி கைவகைகளா லுகவி தங்க, ணிரம்புசிவ நீர்த்தவகைப் பொற்கு
டங்க ணிகழ்த்தநிரை முதல்யாவு நிறையச் சேர்த்தார். (௬௨)

* சூரியகிரணம் போலும் ஒளியைச் செய்யுந் தேங்காய்.

இவ்வகையே வலர்வேண்டும் பொருளெலாமவ் வெல்லையெலாஞ் செறிதரச்
சேர்த்திடுங்காற் சேட, னவ்வமுத லிங்கேசற் குளதிரம்ப வருண்மேனி
குளிர்தரமா வபிடேகாதி, இவ்வியலு சனைபுரிந்து மேற்செரு டங்குந் திருத்
தருமா கும்பாபி டேகச் செய்கை, யெவ்வமுறு இயலுறக்கொண் டருள்க
வென்று வேத்திறைஞ்சி வேண்டுமே விதனைச் செய்யும். (௯௩)

சிவத்துவிசர் முகமாக மயனைக் கொண்டு திருந்திரண்டாம் பிரகாரத் தீசா
னத்தி, னவத்தகுமா குண்டங்கள் வேதிகாதி நாலிருமங் கலத்தசாயுதங்க
ளூட்டி, நிவத்தகுநாற் றுவாரங்கூர் மாதளுதி நீடுறு மேல் விமானமே திக
ழ்வி தான, முவத்தகுபல் லுறுப்பெலா மணிபொனாற்கொண் டொளிர்
யாகசாலைகளாங் குளுற்று விப்பான். (௯௪)

ஒருகோட்டு முதிர்வேழ மலகில் கோட்டு மிருகோட்டு வான்பிடியோ டொளி
யாருந், திருகோட்டு மாறுமுகங் கண்டேட் கோட்டந் தீரவருண் மதவேழம்
வேதன் சென்னி, யருகோட்டு வண்கைவடு கேசன் மற்று மருக்கன்முதற்
சண்டேச னந்த மாக, வருகோட்டு பரிவாரர் விமான மாதி வகைக்கெல்லாந்
தனித்தனிமா மகப்பொற் சாலை. (௯௫)

அருண்மலரும் பிரகந்நா யகியெம் மன்னை யமுதேச னிருவருக்கு மருமை
வாய்ப்பத், திருமலரும் பிரதான யாகசாலை திகழ்தரச்செய் வித்தரம்பை
கழைதிண் பூக, மருமலரும் பஃறெருடை பொன் னரிய மாலை வளையொளிப்
பன் மணிமாலை மணிப்பொற் குச்ச, முருமலருந் தோரணமுன் னனைத்து
னெல்லா மொப்புயர்வி லாவகையாங் கொளிர்வித் தானால். (௯௬)

இன்னனபற் பலமுன்ன ரமைய வேண்டு மிருந்தொழில்க டிருந்தவயந்
தெல்லாஞ் செய்தாங், குன்னிமிக மாகமமுன் னோதிக் கைவந் துறுமறுப்பா
வனைசெயறந் திரமுன் னோர்ந்து, சொன்னமா பங்கனீ ஞுதி குற்றந் தோயாம
ல்கம்புறமுந் தூயோ ராகி, மன்னுசபத் தினிகசிவத் துவிசர் நான்கும் வாய்ந்
தவரை யாய்ந்து தெரீஇ மாபிற் போற்றி. (௯௭)

சிவமாகும் பெருவாழ்வு பெற்று வாழுஞ் சிவத்துவிச மகத்துவமான் செல்
வர் காளிப், பவமாகந் தவமாகும் பாபி டேக பரமமகா சாந்தி செயும் பணி
மேற் கொண்டே, னவமாவ தணுவுமுறு வண்ண மன்ன தாற்றியரும் பய
னனைக்கு மளிப்ப தும்பர, னவமாவ தன்றிதுமேற் கொண்டு நீரோ நடத்தி
முடித் தருள்கவென நமந்து பின்னர். (௯௮)

அத்தகைய சிவத்துவிசர் தமையெம் பெம்மா னமுதேசன் பெரியநா யகி
யைங் கையோன், சத்திதான் முதலானோர் வேள்விக் கெல்லாந் தனித்தனி
யே நவநவமாச் சாருங் குண்ட, மெத்தொகையத் தொகையமல போத
கேசரிருத்துவொடு சாதகரென் றெண்ணி யின்று, ரித்தகுருண் டத்தோ
மம் புரிக வென்று வெல்லையுற நியமித்தா னிரும்பை வேந்தன். (௯௯)

அங்கதன்மே லங்கதவேந் துரைக்கி சைந்தாங் கருத்திமிகு குருத்துவப்போ
திகா ரக்சீர்ப், புங்கவர்தாஞ் செய்விக்கு மிறைவ னும்பப் புயங்கபதி யிடையாச
வனுஞ்ஞை பூணுங், தாங்கவினைமுறைமையிற்செய்தந்நாண் முன்னுத் தொ
டங்குபுசென் மானதித் தொகைகண் முற்றும்,பங்குபதி னொன்றாகப் பாப்
பித் தூய்மை பணுஞ்செயலாந் தனபூசை பாங்கிற் செய்தார். (எ0)

பின்னுரிய பிராமணர்த மனுஞ்ஞை பெற்றார் பெருகுநிதி தக்கிணைமுன்
பேணி யீந்தா, ரன்னையரு ளமுதேசர் தமைமெ யன்பா லபிடேகா திகணி
கழ வருச்சித் தேத்தி, புன்னுதிரு வருள்வேண்டி யனுஞ்ஞை பெற்றாங்குறு
செயலைச் சாமிடைபூ ரென்று பின்றி, மன்னிமுடி வுறவேண்டி விக்கினே
சன் மலரடிக்கு மாபூசை வயங்க வாற்றி. (எக)

நேர்ந்துபராய்ப்போந்தமுதநா தனுர்சந்நிதியின் மகாசங்கற்பநிகழ்த்தி வாத்து,
சாந்திபிர வேசபலி கிராமசாந்தி சாற்றிரட்சோக் கனஞ்சீல தயைமீக்கூரத்,
தேர்ந்துளபூ சினிக்காய்முன் னுவ கொண்டு செய்திளம்புன் முதனிரைத்
தான் றிரட்கு லங்க, ளார்ந்ததிருக் கோயிலிட மெங்கு மக்கி யமர்தருகோ
திவாசமுறை யாற்றி னுரால். (எஉ)

அனந்தரம்பூ ருவபுண்ணி யாகவாச னஞ்செய்தரு மறையாக மாதியாய்ந்த,
கனந்தருவிப் பிரவுண்டிமாபிற் செய்தார் கவினுறவுத்தரபுண்ணி யாகங் கண்
டார், தனந்தருமா கிருகமகம் புரிந்தார் சந்தி தாவோமந்திசாவோமஞ் சாந்தி
யோமம், வனந்தருமா வருணிறைபு மூர்த்தி யோம மலிதர்வாங் காங்குலிதி
வயங்கச் செய்தார். (எங)

வேறு.

இருசேய்க ளொருதாயெம் மமுதேசன் விழைசண் டேசனிவ ருற்சவங்கொண்
டெழுந்தருண்மூர்த் திகளை, வருதேச திரிசூல வத்திரமா தேவை மலியுமபி
டேகாதி வயங்குறப்பு ரிந்தாங், கொருவாவெள் விடையாதி கவிலாசோ
கணிப்பித் தொளிர்வீதி விழைவுறச்செய் தடன்போந்து விலவத், தருமூலத்
தெழுந்தருள்வித் தாயமாபி லினைய தருமூல மிருத்திகைபொற் றட்டதனிற்
கவர்ந்தே. (எச)

மாற்றுயர்பீ டாம்பரமேல் வயங்கவிரித் தினைய மண்கவர்ந்த வன்னகை பாத்
திரத்தை மரபி, னேற்றிவர்பாங் கமர்ந்தருளு மமுதேசா தியரோ டெழுந்
தருள்வித் தாயைம்புக் கெழில்யாக சாலைப், பாற்றிகழச் சோமகட தாபன
முன் னிகழப் பாலிகைபூ சனைபுரிந்தப் பாவனமிர்த் திகையை, வீற்றுவீற்
றுளபாலி கையினிரீஇ யான்பால் விராயபல தானியங்கண் மீது தெளித்
தமைத்தார். (எரு)

அவிர்தருபில் வகைமிருச்சங் கிரகணத்தோ டங்கு ரார்ப்பணஞ்செய் தனையசிவத் துவிசரொலா மன்பா, விவர்தருபொன் ஞாணிரட்சா பந்தனங்கைக்கொண்டாங் கெமதிறைவ னமுதசுயம் பிலிங்கேச னிமய, நவிராம்வள ரனேசெய்மு னெவர்க்கு முயர் செம்பொன் ஞாண்காப்பு யாப்புமுறை புரிந்தபிடே காதி, திவியபிர சன்னபூ சனைபுரிந்தாங் கனைய தேவேசன் முதலானோர் திருத்தகுசங் கிதியில். (எசா)

தூயதுகி லான்வடித்து மணங்கள்பல தொகுத்த வாகீர்பூ ரித்துளபொற் குடங்கள்பிர தான, மேயவருத் தனியட்ட விந்நியே சாதி விதமுறத்தாபனம்புரிந்தாங் கமுதேச விபுவை, யேயதனிச் சுயம்பிலிங்க விம்பமன்றிக்கும்பத் தெந்தையே வந்தருள்கென் றிரந்திரந்த னின்று, னாயிதனி லாமந்தெளியே மட்டபந்த னந்தா னமைத்தபின்மீண் டெழுந்தருளி யமர்ந்தருள்க வண்ணல். (எஎ)

ஒருவாத தனியமுத லிங்கவுரு விதுநா மொருவுளிதெகன் றமர்ந்தருளேல்பொற்குடமீ துனது, திருமேனி மலர்சிகைபொற் றேங்காய்மா விலைசூழ்செறிநூலா தியவேனைத் திருவுழப்பாக் கிகழ்வ, வருணேசிற் குளிர்ந்தமணைநிறைந்துபூ ரிதமா யமர்திருத்தகத் திருத்தகுமட் டகத்தினினெனன் முமே, பெருமானே திருமானோர் வருமானோர் பாகப் பெம்மானே யம்மானேனத்தியகாத்தெம் பிரானே. (எஅ)

வேண்டுவார் வேண்டுவதே யருளுமது தொழிலென் வியவமெய்த் திருஞ்சுருதி விரிப்பதையுன் றனையே, யாண்டருளு மன்னுளேயோ வன்னுளேயோவெனவே யடுத்தடுத்தாங் கிப்புமொழி யளப்பில சொற் றழைக்கு, மாண்டருமந் திரங்களொடுத் தோதிநியா சாதி மாபினித்செய் தனையகுடத் தானாகித் தேனை, யேண்டருபொற் குடங்களினுங் கலசவர்து தனமா மேயந்தருளவம்முறையா வாகனமுன் னியற்றி. (எகூ)

அருளுருவா யமர்ந்தருளெம் பெருமானை யுருகு மன்புருவாய் நின்றிரந்துவேண்டியவிர் குடத்தின், வருதன்முனைந் தெரிதலெணப் பரிதவிறும் வயங்கி மற்றனைய பொற்றகம்பை யருச்சித்தாங் கேனை, யொருவிலிங்கடங் கருதம்பூசித் துடன்யாத்தி ராதி யுயர்தானம் புரிந்துதனித் தனியுட்டி. னீட, சிரமேலச் சிவத்துவிச ருயிர்மேலும் வகித்துச் செல்லடிமே லைடிநுவன் றமெல்லைநடக் கின்றார். (அ0)

முத்தாரா விருதமுழக் குடைகள்சா மரங்கண் மூரிவிடைக் கொடியாதிவரிசையெலா மொய்ப்ப, வித்தார மாகதர்வம் தியர்சூதர் வீர மேதகுமங்கலம்புகழ்கள் விதந்தெடுத்துப் பாடப், புத்தேளிர் கற்பகப்பூ மாரிவளி பொழியப் பூதேவ ரக்கதைதூ யாசிமொழி புகலச், சுத்தோத கம்பனிநீர் படிநறுந் தோயஞ் சுவணமணி சாலிபொரி பூமழைமுன் றூர்ப்ப. (அக)

வேதியர்கள் சிலரொதிரட் டாங்குமுற வீழ்ந்து வீழ்ந்திறைஞ்சிப் பின்காட்டா விதஞ்செலச்சிற் சிலவர், மாதருதேங் காய்சிதறப் பக்குவஞ்செய் முர்க்க வர்க்கமது வர்க்கநறும் பானகந்தா நீர்மோர், மேதகிள நீர்வருக்க வோதனம்பல் கனிகள் விழைபசுப்பால் பாயசந்தாம் பூமுக வாச, . மாதியன வளப்பிலன வடுத்தடுத்து நிவேதித் தாதிசைவ குலமறையோ ரணிமைவிடா தொழுக.

இருபாலு * மிருமறைக ளெடுத்திசைப்பார் போற்ற வெதிர்நின்று பழமறையோர் சுவத்திகளாங் கிசைப்ப, வொருவாம லெப்பாலுஞ் சிவாகமங்கண் முழங்க வுருத்திர மா நமகசம கங்களினி தோங்கப், பெருவாழ்வு தருபஞ்சாக் கரசடங்க பஞ்சப் பிரமசங்கி தாமனுக்கண் முதலாயபெருகத், திருவாருஞ் சிவநாம கீர்த்தனங்கள் பொலியத் திருந்திசையா முருத்திரவீ ரைதிரிசை மலிய. (அஎ)

மாமுனிவர் போற்றெடுப்பப் பன்னியர்கள் வாழ்த்த மனங்கசிந்து நெக்குருகுந் தக்கதிருத் தொண்டர், தாமருவி விழிபொழிந்து சார்ந்துவப வேலைச் சாற்றரிய பற்பலவுந் தழைத்துவர வெல்லா, மேமுறக்கண் டிதுவன்றே யான்செய்தவப் பேறென் றெய்யாத வானந்த மெய்வாழ்வு திளைத்தே, ஆமுனிவர் போற்றுபதஞ் சலியாமெ யனந்தன் றொடர்ந்துவர விராசகுடாமணியின் றொடா. (அஅ)

கண்டவர்கள் கிண்றவர்க ளென்றுயைப்ப மெல்லைக் காத்திரத்தி னசைவுமறி வரிதாகிக் கவின, மண்டுமலர் பரப்புதிருப் பாவாடை மேற்றம் மலரடிவைத் தொருங்கேகி மகாயாக சாலைத், தண்டருபச் சிமவாயி லபிமுகமாப் போந்தத் தசும்பினங்கள் வீற்றிருப்பத் தனித்தனியாங் கமைத்த, வெண்டருவே திகைகடயிற் சென்னியினின் றெடுத்தாங் கிருத்திவே தனைமுதல விளிது புரிஇ மகிழ்ந்தார். (அகூ)

பரிவார கலசமொடோர் மகச்சாலை தோறும் பண்புறவாங் காங்குளிறீஇப் பூசனையோ மாதி, மாயோடாற் றியதொடங்கி நிகழ்காலந் தோறும் மகச்சாலையிடைப்புண்ணி யாகவா சனமன், றருளிலயங் கவியபூ சனைமுன்கு செய்தம் பொற்றசும்புகளி னமர்ந்தருளம் மூர்த்திகளுக் கெல்லா, மருளாய வடிவேடகம் பாவனையிற் புரிவா ரணிமது ரெங்கிலிரு திகழுவெடுத் தமைப்பார்.

அன்னதனி வன்னியிலைப் பிரதான குண்டத் தாமுறைதா பனம்புரிந்தா ரதினின்று மெடுத்தே, பின்னுமவே லையகுண்டங் களிநூந்தா பித்தார் பிறங்குவரி சைக்கிரமப் படியோமச் செயல்கள், பன்னரிய விந்தார மாகமலி சமித்தின் பகுதிகள்சுத் தான்னத்தை யவிசுரோ டிருத, முன்னுயபல கோக்கட்டு சுத்தசித்தை முதக்க முதிர்சலைவாய் வதியாடைத் தழிமிரலி லைசம்.

* இருமறை - ஆரியவேதம், தமிழ்வேதம்.

திலமதுவா னெல்லெவைநீ வரகிறை சாலித் திரள்வகையக் கறைகசாமை
தினைமூங்கி லரிசி, யிலகுமவல் சத்துமா மூர்க்கமா மாட மிராசமா டஞ்சுணா
கங் கோதுமையா டகமுற், குலவுநா ளியவகைபல் கரும்புசருக் கரையின்
குளநீலோற் பலங்கழுநீர் குமுதாதி மூல, நலகருணை பல்வள்ளி சருடாதி
பூலா நறுங்கிழங்கு முதலான கிழங்கின்வகை யெல்லாம். (அஅ)

மாதுளோ ரங்கமரம் பாதியொன் றென் றிலும்பல் வகையநறுங் கனிகண்
முதிர் வருக்கைநறுங் கனிகள், குதநறுங் கனிகள்கொடி முந்திரிகற் கூரஞ்
சுவணலிகு சாதிவகை தூயரச கண்ட, மோதகநற் பாகநாற் புலவர்புனிதத்
தோர்ந்தோர்ந் துருற்றுவபல் வருக்கவகை யப்பிலனை வெல்லா, மோதகமா
டாபூபஞ் சூபபூ பணமே முதிர்சுவைநா ளுமோணஞ் சட்குவியோ *மூர்க்கம்.

பாயசமென் னுண்டைமனோ கரகொலையை திட்டுப் பாணிறைதங் திராபூபங்
கனுபூப முதலா, மேயவளப் பருப்பவகைய பண்ணியங்க ளெல்லாம் வெட்டி
வே ரிலாமிச்சம் வேர்பனிநீர் புழுகு, தூயகோ ரோசனைகுங் குமப்பூக்கத்
தூரி தாநறுங்கர்ப் பூராதி கத்தூரி மஞ்சள், பாயநறுங் குங்குலியஞ் சடா
மஞ்சி மட்டிப் பால்கோட்ட நெரியரிசிப் பான்முங்கீர்ப் பச்சை. (கூ)

ஏலநறுஞ் சாதிக்காய் பத்திரிதக் கோல மிலவங்கம் வான்மிளகு முதல்வாச
மெல்லாஞ், சாலநிறை தாம்பூல முகவாசஞ் சீந்தித் தண்கொடிவெற் றிலைக்
கொடிமுன் னுயநறுங் கொடிக, ணீலமலர் கல்லாரந் தூவாயபது மாதி நீர்ப்பூ
மந் தாரம்பா டலங்கன்னி காரங், கோலநறும் புன்னைகம் பாரிசா தம்பூங்
கொன்றைநிபஞ் செருந்திமகிழ் கூவிளஞ்சண் பகமே. (கூக)

பன்னிதா டிமஞ்சுவே தார்க்கங்கே தகைதண் பலாசகுரா வடம்புதுறு பலா
வலரி நறவம், வன்னிதாத் திரிவிருக வாசங்கஞ் செச்சை பாலிலிங்கை குருந்
துவிளா மாநாவன் மருது, பொன்னிறே விரைநிறைகை சந்துமுதற் கோட்
டுப் பூவகைமென் றளிர்வகைகள் புனிதவலம் புரியே, துன்றுநறுஞ் செவ்
வந்தி கொக்கிறகு பச்சை தும்பைமருக் கொழுந்துசிவ கரந்தைதகிர்த் துள
[பம். (கூஉ)

முதலாய நிலப்பூமா தவிமயிலை மல்லி முல்லைநறுஞ் சம்பங்கி சாதிமுதற்
கொடிப்பூ, விதமாதி பற்பலவுஞ்* சண்ணவதி யென்ன விளம்பனவின்
மேலுநனி மிக்கதிர வியமற், புதமாக மனுமுறையா குநிசெய்தீற் றினிற்
றும் பூல்முக வாசமுதிர் புதியநறுங் தேங்காய், பதமாரின் சுவைக்கனிக
ளுடலுமுத லாய பட்டினம்பொற் பூவிருச பலமுதற்பல் பொருள்கள். (கூங)

* மூர்க்கம் என்பது நிவேதனருகமாப்பக்குவஞ்செய்யப்பெற்றது.

* சண்ணவதி—தொண்ணூற்று.

இனியசுகோ திருதமுதற் சுருக்கினிறைத் ததன்மே விருஞ்சுருவ மூடியெ டுத் தெழுதுமனு வெடுத்தே, பனிவனிகண் முற்றுமே லெழுந்துவலஞ் சுழித்தூண் பாரித்த நிறையுணவின் பான்மையுணர்த் தேப்ப, நனிபுரித லெனவொலிப்ப வின்னியங்க ளொருங்கே நான்றெழமா பூரணா குதிசெய்து நயந்தாங், கனககட நிவர்சவமு தேசர்முத லோரை யவரவர்தங் கடங்களிற்பூ சனையாற்று கிற்பார். (கூா)

மணங்கமழுந் தூபநறு நெய்த்தீபங் கோட்டி மலிசுவைப்பால் வருக்கவோ த னமாதி யூட்டி, வணங்குவைபின் னருந்திட்டி மாதீப நீட்டி மலிநாஞன் குபசாரம் வயங்குவழி பாட்டின், குணங்களிமெ யன்பின்மனுக் கிரியாதி கூட்டிக் குலமறைசொ றிரிசுபன்னங் கொன்றைமுதற் சூட்டிக், கணங்கெ ழுநா மாவளிநா வெடுத்தினிதி ரெட்டிக் கர்ப்பூர மாதீபங் குடிலைவரை காட்டி.

அனந்தரமஞ் சலிசிரமே வினந்தபநேர் நின்றுங் காரியமுஞ் செந்தமிழு மாய பரனுவந்த, கனந்தருமா ரியவேத மின்சுவைமா துரிய கவின்றருசீ ரியவேத மிரண்டுமெடுத் தோதி, யினந்தருமா தெரிசனத்தின் பெரும்பேறு பெற்றுங் கெதிர்நிற்பா ரெவர்க்குமிரும் பூதிபிர சாத, தனந்தருவர் தினந்தொழுமின் வகையிருகா லுமுறையாற் சாற்றுபூ சனைபுரிந்து போற்றுவருண் மகிழ்வார். (கூகூ)

இத்தகையின் மகாயாக பூசனைநா டொறுஞ்செய் திடையிடைதா தனவிம்ப நயனோன்மீ லனமே, சுத்தசலா திவாசநகர்ப் * பதக்கணந்தா னியமேற் றோய் வாசஞ் சயனுரோ கணமாதி புரிவார், பொத்தசலம் புரியட்ட பந்தனபூ சனை மன் புரிஇவிம்ப குத்திரவீட் சணநேர்வா லுகமே, ரத்தினமா நியாசமே யந்திரதா பனமே நாலிருபந் தனமேலுஞ் சுவணபந்த னுதி. (கூஎ)

சுவர்ந்த மேபனமே தைலாப்பி யங்க நவிற்றுயுமத் தகசெபமே விம்பால யாதி, யவிர்தருசஞ் சோதனமே விம்பசுத்தி யாதி யனைபுரிவார் புவியுயமு னுவரித்தசுப தினத்தி, லுவமனிலா விம்பாட்சா பந்தனஞ்செய் துவப்பா ருலைபரிசா குதியா சார்ச்சனைசெய் தெழுவார், திவியமகா பூரணா குதிகள் பூசனையாத் திராதான மகாதான மாதிபுரிஇச் சிறப்பார். (கூஅ)

பின்புரிவத் துவிசசிவா சாரியர்க டாமே பிறங்குமமு தேசகட முதற்கடங்க ளெல்லா, மன்புரிறை தரவுட்டி னீடசிர மேற்கொண் டாலயஞ்சூழ் பதக் கணந்தம் மடியுரிஞ்ச வடிபேர்த், தின்புயலி தரப்புதுப்பூம் பாவாடை யிடை வைத் தியங்கியிலைத் கவிகைகவரி கடங்களின்மே லிலக, முன்புவருங்காளி கழ்ந்த வுபசாரத் தெண்கான் முதிர்கருபற் பலவகைய வுபசார மொய்ப்ப.

* பதக்கணம் = பிரதக்கணம்.

வேறு.

ஆர்வமிக வுடலசையா வழகுமிகத் திருக்கோயிற்
பூர்வதிசை தனிற்றிகழ்கோ புரவாயி னெறிப்புகுந்து
நேர்வருமக் கடங்கடமை நிகழ்த்துமுறை யாங்காங்குத்
தார்வளயவ் விம்பகுல சமீபமுறத் தாபித்தார். (௧௦௦)

அந்திகயார் சாதகும்பத் தவிர்கும்பங் களினமரு
மந்திரமா மயமூர்த்தி மானவிம்பங் களிற்பிரம
ரந்திரமார்க் கத்திதய ளினமுறீஇ வீற்றிருப்பத்
தந்திரமா மனுவினியா சம்புரீஇ யன்புருவாய். (௧௦௧)

இரந்திரந்தி யாசகமுந் திசைகாட்டி யினிதேத்தி
நிரந்தரசா நித்தியமா நிலையுறவந் நிறைகும்ப
* துரந்தமிரு காந்தனின்மேற் றூக்கியெடுத் தாக்கமொடு
வரந்தருமா கும்பாபி டேகமுறை வயக்கினார். (௧௦௨)

பதஞ்சலியா தாங்காங்குப் படர்ந்துபடர்ந் தலைகரிகும்
பதஞ்சலிடாம் பணிவேந்து பார்வைகளி கூர்வளைகயன்
பிதஞ்சலியா கிமிர்ந்துளதின் றிருமதகிற் பெருகியெழு
விதஞ்சலியா யாசகமா வெனக்குவித்து விரித்திருகை. (௧௦௩)

எதிர்தொழுதின் புறவபய விராசகு டாமணிவேங்
கதிமகிழ்வுற் றுடன்சார வருதேச னுமையாதி
புதிதொளிர்பல் விம்பாதி புத்தேளிர் தமக்கெல்லாங்
கதிதருகும் பாபிடே கம்முழுதும் புரிந்துவந்தார். (௧௦௪)

ஆங்குடனே நவவாச மணிந்தருச்சித் தமுதருத்திப்
பாங்குறுபா ளிதநீபம் பணிமாறப் பணியெவர்க்குந்
தேங்கொளிவெண் டிருநீறு திருப்பாதோ தகமளித்தா
ரோங்குறுமித் திருப்பணிமுற் றுஞற்றுவித்த வொருகோமன். (௧௦௫)

உடனேயச் சிவமறையோ ருவந்துமகா வபிடேகந்
தொடர்பாய பொருளயுத நியுதமெனுந் தொகைபெருகத்
திடனோடு செயவளித்துச் செய்வித்தாங் கவர்புரிய
மடனோடு மாபூசா வகைகண்டு வகைகூர்ந்தான். (௧௦௬)

* துரம்—பாரத்தை யென்னும் பொருட்டு

அப்பெரிய சிவத்துவிச னனைவரையு மவர் * வசதி
யிற்பிரிய முறநுகர்வித் திருந்தவியிற் றிருந்தவமைத்
தொப்பரிய பெருவாழ்வி னுவந்தளித்தீ ருமக்கெளியே
னெப்பெரிய வகையெல்லை யீந்தாலு மெதிராமோ. (௧௦௭)

நிகர்வரிய பேருதவி நீர்செய்தீர் நுமக்கேழை
பகர்வரிய தென்னினுநூல் பகர்முறையேற் றருள்கவெனும்
புகர்வரிய சந்தனதாம் பூணாதி மேலோரு
மிகவரிய கண்டிகைமா ணிழைசுவணும் பாவனைகள். (௧௦௮)

பற்பலமுற் றிரியாரம் பத்தளித்த தன்றியுமே
வற்பமல வாயிரமா யிரமாக வள்ளியள்ளிப்
பொற்புறுதக் கிணைகணவி புனிதமுற வினிதளித்தான்
பிற்பரவி யவர்நிறைந்த பெருந்திருக்கூட் டம்பணிந்தான். (௧௦௯)

முற்றினமே முதலாக முதகுசீ மருளுமேலோர்க்
தற்றவருக் கற்றறிவ னருள்பெருகு சிவதீக்கை
பெற்றான்பூ சனை † யினிமை பெறுவேத சிரவணமு
ணுற்றமகே சுரபூசை யுத்தமவிப் பிரவுண்டி. (௧௧௦)

முதலியபல் வகைநிதமு முறைமையிற்செய் வித்துவந்த
வதனிலுமும் மடிபெருக வந்நாட்செய் வித்தனையோர்க்
கிதமலிதக் கிணையாதி யினிதளித்தா னேனையபல்
விதமலிபற் பலர்க்குமவர் விழைவினுமே தகவளித்தான். (௧௧௧)

இவ்வகையே கும்பாபி டேகதினத் தெனையவெலா
மெவ்வமறப் புரிந்தன்றே யிபமுகன்சே யிறையிறைவி
யையவருஞ் சண்டேசனொ டவனியுயப் பவனிவருந்
திவ்வியநன் மகோற்சவம்பல் சீர்பெருகச் செய்வித்தான். (௧௧௨)

வழிநாளுங் கலியாண மகோற்சவஞ்செய் வித்தன்பின்
மொழிஞான சிவத்துவிச மோதசிவா சிரியர்குழாஞ்
செழுநீறு கண்டிகைமுற் சிவவேட மினிதிலங்க
விழிநேர்கண் டவருருக மிளிர்மணிப்பொற் சிவிகைகளில். (௧௧௩)

வீற்றிருந்து நகர்வலஞ்செய் மேதகைய வுற்சவமும்
போற்றுமுறை மையிற்புரிந்தப் போதசிவத் துவிசர்தின
மாற்றியன்மண் டலமியம வபிடேகார்ச் சனையாதிக்
கேற்றபொருள் பலநாளு மினிதளித்து நடத்துகிற்பான். (௧௧௪)

* வசதி=வாசஸ்தானம்.
† இனிமைபெறுவேதம்=தமிழ்வேதம்.

இவ்வியல்பி னொடொறுமவ் விறையமுத சுயம்பிலிங்க
மைவருமா மணிமிடற்றெம் மாதேவன் மாதேவிக்
கெவ்வரிய பொருள்களுங்கொண் டிருமூன்று காலநிகழ்
திவ்வியபூ சனையென்றுந் திகழ்வுறுமா றியமித்தான். (௧௧௫)

நித்தியநை மித்திககா மியமென்னா னிகழ்த்துமிய
லுத்தமபூ சனைவகைக ளொருவாறு தினம்வாரம்
பத்திநிறை பக்கமதி பரவுவரு டோற்சவமுன்
னெத்துணையுஞ் சிறப்பனடந் தியலுறுமா றியமித்தான். (௧௧௬)

எல்லாமு மெந்நாளு மிடைதளரா தியலுறுமா
வில்லாரு நிதிகோடி மேலுமமு தேசன்முதற்
பல்லாரு மணிகலன்பற் பலவகையு நிறைத்தெல்லாம்
வல்லான்மந் திரநாதன் மலிபொருளாம் படிவகுத்தான். (௧௧௭)

பின்னனைய வமுதேசன் பெரியநா யகிதனிக்குப்
பன்னிரண்டா யிரநிட்கம் பல்குபொரு ளோரோர்வருடந்
தன்னிலுமாங் குறுவிளைவாற் றப்பாது தாற்குரிய
நன்னிலமவ் விராசசூ டாமணியா னேர்ந்திருளல். (௧௧௮)

ஆவணத்தன் பாலளிப்பித் தானயுத நிரையோடும்
பாவணத்த சிவத்துவிசர் பல்லோர்க்கும் பரம்பரையா
மாவணத்த வனுபவத்தின் வருசருவ மானியமாய்
பூவணத்த நிலம்பலவப் புரவலனு லளிப்பித்தான். (௧௧௯)

இன்னனமற் றென்னெனநன் றினிதாய்ந்தத் திருக்கோயிற்
கென்னவுமேன் மேனிறைய வெல்லாமும் வகுத்தமைத்தான்
பின்னனைய சுகவனப் பிரதேச பாலகராத்
தன்னிகரெண் வடுகேசர் சாத்தாசண் டிகையிவரை. (௧௨௦)

விதிவழிமுன் றனித்தனியவ் வியனகரி னங்காங்கு
வதிதருவான் பதிட்டைவினை வயக்கியநான் முதலனையோர்
மதிதருபூ சனைவகையு மனுக்காத னிமாசிலவாழ்
முதிர்மணிப்பொற்கோயில்களின் முறைபுரிபூ சனைவகையும். (௧௨௧)

தன்னுலந் நகரிடைமுன் றுபனஞ்செய் சிவத்துவிசர்
மன்னுநின் றெந்நாளும் வழிவழியா மரபின்வழா
நின்னுமுற் றொழுகிந்தன்போ டின்போங்க வியற்றிவரு
கென்னுநின் றெதிர்வேண்டி யியைவித்தா னியமித்தான். (௧௨௨)

இப்படியிப் படியுய்வா னியாவுமியற் றியசேடன்
மைப்படிவ னளித்தருளான் மார்த்தமா கதவிலிங்கத்
தப்படியர்ச் சனைபுரிந்தெ மன்னையிடத் தமுதேசன்
றுப்படிக டினந்தோறுந் தொழுதுவந்தங் கின்புறுநாள். (கஉங.)

வேறு.

மாபிணி லையொன் பானுண் மண்டல வபிடே காதி
தாபிக முடிப்பித் தோகை தழைத்தன னுடனின் றெல்லா
நாபதி தரிசித் தின்ப வலையுட் படிந்து வாழ்ந்து
பாவியப் பன்ன கேசற் பணிந்தரி தகன் றூர் புக்கான். (கஉச)

மகியார சிராச சூடா மணியவ ணகன்ற பின்ன
ரகியா சனைய கான மகலரி தாகி யுள்ளம்
பகிர்மதி வேணி யண்ணல் பதமல ரருட்டே னுண்டு
சுகிதரு புமா மாகச் சூழவாங் கமர்ந்தா னென்னு. (கஉரு)

வேத்திர மலர்க்கை யெம்மான் விளம்பவே தியன்சே யெந்தாய்
நேத்திர சோத்தி ரன்பின் னிகழ்வருள் கெனவன் னேனைக்
கேத்திரத் தவன்பின் செய்கை கிளத்தியாங் குரைத்து மென்னச்
சாத்திர முனிவர்க் கன்பு தவாதவச் சூத னேனும். (கஉசா)

வேறு.

உரைத்தவர் வினவினர் திருப்பணி பணிபதி புரிந்திய சரிதமி தொருவாத
வரத்திரு மனைமக கிரிக்குவை திறைசுக மகத்திக நலன்முழு துறவாழ்பு
பரத்தினு நகருபு முழுச்சுக வகைபல பவத்தொடர் பறவரு பலபோக
விரத்திய ரனடி மலர்த்துணை கிழன்மரு வியத்துவி தகிலைபி னுமுவாரோ.

ஆதிசேடன் திருப்பணிச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் அசுங.

# ஆதிசேடன் சிவார்ச்சனைச் சருக்கம்.

அனந்தனி யற்றிய திருப்பணி யரன்கொடி றத்தினை யுரைத்தனம்
பினந்தனு ளற்பெழு தாத்தனி பிறங்குமருச்சனை நவிற்றிய
கனந்தருமிக்கதையினித் துறுகவின்பெறு பொற்புள தெனச்சொலு
மினந்தரு மக்சிவ கணத்திறை யெனந்திமனத்தளி மிகுத்தரோ. ()

வேறு.

அனந்தாஞ் சனற்கு மார வனந்தனுங் கமர்ந்து நாளுந்
தனந்தா காத்தி னேடார்ச் சனை திகழ் கால மெல்லா
முனந்தா விமலை கோயின் முறைபுகுந் திறைஞ்சிப் பின்னர்
வனந்தான் றளியுட் சென்று வழிபடு நியதி பூண்டான். (உ)

போற்றுமிப் படியான் மார்த்த பூசனை பார்த்த சேனை
யேற்றமோ டென்றும் பல்கு மிருந்தவந் திருந்த வங்கட்
டேற்றமிக் கெழுமு ளத்திற் றிகழுமெய் யன்பின் மல்க
வாற்றிவா ழனைய சேடற் காண்டெழுன் றகன்ற தாங்கே. (ங)

சினகா நியமத் தேகித் தெரிசனு னந்த மீக்கூ
ரினகா மணிசெய் சூடத் திரும்பைவேக் தொருநாண் முக்கட்
டினகா விமக ராங்கிச் சிவார்ச்சனை சிவாக மத்தாற்
றனகாத் தியற்று மார்வந் தழைத்துப காண மெல்லாம். (ச)

பெருகிய வமைப்பித் தாங்குப் பிறங்கிய நன்பேர் வாவிப்
பருகிய னீரி னுற்றிற் படிந்தணித் திருந்து கூலந்
திருகிய வொழிக்கு நீறு திருமணி கண்டி பூண்டு
ளுருகிய சைவ சந்தி யுறுமுறை யுளுற்றி யேகி. (ரு)

பெரியநா யகிதாள் போற்றிப் பேணிநின் றிறைஞ்சி வேண்டிப்
பிரியநா யகன்பொற் கோயில் பெரிதுவந் தடைந்தைங் கையோன்
றுரியனு யதீத னுகுந் தூயமா முகனைப் பூசித்
துரியனு யிரவி யாதி பூசனை யுளுற்றிப் போந்து. (சு)

வேறு.

திருவமு தேசன் றிருமுனம் வடாது திசைமுக னுகவாங் கமர்ந்தா
னொருவருந் திக்கு பந்தன மவகுண் டனமனு வொடெம்புரிந் துவற்றுன்
மருவுபூ சனைசெ யிடத்திட வொன்றும் வாரவகை காவலா வயங்கி
யிருகா நியாசஞ் செய்துமே விருநா விருபெருவிர லினின்றெழுந்தே. (எ)

வான்றனி மூலா தாரமட் டிரண்டு வடிவதா யுச்சிமட் டொன்றாய்த்
தோன்றுவ தாகி யுட்டுளைத் தாய சுழுமுனு நாடியின் கொடியே
போன்றொளிர்ந் திதயங் கண்டநா வடியே புருடேப் பிரமரந் திரமைந்
தேன்றிடத் திடைபிங் கலையெனு நாடியிரண்டொடும்பின்னியதாகி. (அ)

கருதுமவ் விருத யாதியைந் திடத்துங் கமலவைந் தரும்பதோ முகமா
யொருவரத் தன்பாற் கொண்டது வாகி யுட்புறம் பமுதநற் றுளை
தருவதாய்ப் பரம வியோமமா ரூப சத்தியாய்ப் பத்தியாய்த் தியானித்
தருண்மயிற் சிகாமந் திரத்தனிப் பீச மாயவூங் காரமா மனுவை. (கூ)

இருதய கமல நடுவினிற் றீப மெனச்சொலிக் கின்றதாப் பாவித்
தொருமையின் வளியைப் பூரகத் திடமூக்குட்புகவேற்றிக்கும்பகத்தாற்
பிரிவற நிறுத்தி யனையவூங் கார பீசத்தின் மனத்தைவைத் துடன்முன்
மருவுகா றுவாத சாந்தமேற் சுழுமு வழியுகைத் தும்படி மனுவை. (க0)

றுரிசற வைங்கா லடுக்கியுச் சரித்துச் சோடிகா முத்திரை யதனால்
விரிவுறீஇ யதோமு காம்புய முகுள மேனிமிர்ந் திலகுறப் புரீஇமுன்
மருவுகா லடங்கிப் பிங்கலை வழியின் வருமிரே சகம்புரிந் ததன்மேற்
பொருவளி பின்னும் பூரகம் புரிந்தப் பூரக வளியினுன் மனமாம். (கக)

தனிவனை சத்தி லமர்ந்திருப் பவனுய்த் * தாரகா காரம்போன் றவனு
யினிதுறு சாந்த பீசமா மயனு யிதயசம் புடிதசே தனனுய்
முனிபுரி யட்ட கத்தினின் முரீஇய முத்தனுய்ச் சூக்கும னுகிப்
புனிதவூங் கார முடியனுய்ப் பிந்து பூதனுய்த் தனிநிரா மயனுய். (கஉ)

நிலவுமான் மாவைப் பாவனை புரீஇமுன் னிழுத்துமவ் வளியைமே லேற்றி
யிலகுசங் கார முத்திரை யதனு லிதயதின் றனையசீ வனையக்
குலவுபல் பீச சகிதமந் திரத்தைக் கூறியாங் கெடுத்துமேற் கொடுபோய்ச்
செலுமுறை துவாத சாந்தவம் புயமேற் றிகழ்பர சிவனிடைச் சேர்த்தி. ()

அயனிடைச் சத்தம் பரிசமே ரசமா லைவனிடை ரூபகந் தங்கள்
வயவுருத் திரன்பாற் புத்தியாங் கார மகேசன்பான் மனமும்விந் துவுமே
யுரைசதா சிவன்பா லொடுக்கியித் தொகைசேர்ந் தொன்றிய சூக்கும தேகச்
செயலறு சுத்தி செய்துபின் றூல தேகசுத் தியுமுறை செய்வான். (கச)

பொன்னிற நிவிர்த்தி கலாமயங் கடினம் புகலுநாற் கோணமுன் னுவ
மன்னுறு மியல்பிற் பிருதிவி பூத மயத்ததாத் தன்னுட னனையோர்ந்
துன்னுபூ ரகக்கும் பகத்தினம் பீசத் துடனிவிர்த் திபின்கலா மனுவைத்
துன்னுமும் படந்தத் தைதம்முறை கூறித் தூயவளி துவாதசாந் தம்மேல்.

ஏறிய வைங்கா லேற்றிப்பின் வல்மூக் கிரேசகத் தாற்கழித் திதனு
டறிஸ்கந் தாதி பிருதிவிக் குரித்தா யிசைகுண மைந்தைநீத் தினைய
வீறுமண் ணனில மயமதா யொழிபு மேவின பாவனை புரீஇப்பின்
மாறில்வெண் ணிறமே பிரதிட்டா கலையின் மயநெகிழ் பான்மதி வடிவம்.

ஆதிய வியல்பி னப்புபூ தந்தா னுகத்தன் றேகத்தைப் பாவித்
தேதற முன்போ லிடையினுல் வளியை யிலங்குநாற் பீசத்தோ டியைய
வோதுறு பிரதிட் டாகலை மனுவை யும்படி றுகநான் முறைசொற்
றுதிவாழ் துவாத சாந்தமட் டேற்றி யதனைப்பின் பிங்கலை நாடி. (கஎ)

* தாரகைஆகாரம் எனப்பிரித்துப் பொருள் கொள்க.

வழியிரோ சகத்தாற் கழித்திர தாதி மலிகுண நான்குநீத் தனைய
பொழிதரு மப்பு பூதந்தீ மயமாப் புக்கொழிந் தெனைக்னேந் தநன்பி
ஞெழிவில்செந் நிறமே வித்தியா கலையி னுருவமுட் டினந்திரி கோணந்
தழுவிய லங்கி பூதம தாகத் தன்னுட றன்னைப்பா வித்தே. (க௮)

தேசமுப் பீச வித்தியா கலாமந் திரமும்ப டீற்றுறச் செபித்தே
யேசற முன்போல் வளியைமே லேற்றி யிரேசித்து ரூபமுன் னுயங்
நேசமுக் குணநீத் தவ்வனற் பூத நீர் மயத் தொழிந்தநா க்னேந்து
காசறப் பின்பு கருகிறஞ் சாந்தி கலாமயஞ் சவித்தல்சட் கோணம். (க௯)

முதலியல் வாயு மயமதாத் தனது மூர்த்தியை நினைந்துமுன் போலக்
கதுவிரு பீச சகிதமச் சாந்தி கலாமனு வும்படீ ரூக
விதமுற விருகாற் புகன்றுறு காலை யிடையிருேற் பூரக மியற்றி
முதுசுழு முனையா விருமுறை யேற்றி மூதகு துவாதசாந் தத்தில். (உ0)

பின்னிரோ சகஞ்செய் தப்பரி சாதி பேசிரு குணங்களு நீக்கி
புன்னுமல் வளியப் பிருதிவி மயமா யொழிந்தெனப் பாவித்தாங் கதன்மேற்
கன்னவில் படிகஞ் சாந்திய தீத கலாமய மிடந்தால் வட்ட
முன்னிய னபமாத் தன்னுட றன்னை முன்னிமேற் பீசமொன் முடனே. ()

சாந்திய தீத கலாமனு வும்ப டந்தமா வொருமுறை சாற்றித்
தோய்ந்திடு வளியை யிடையிற்பூ ரித்துச் சுழுனையா லோர்முறை யேற்றி
யேய்ந்தபிங் கலையா லிரேசித்தா காயத் திசைகுண சத்தமொன் றினையும்
காய்ந்துபின் னனைய காயமேற் பரமா காயமாம் விந்துவிற் கலந்து. (உ௨)

இத்தகு விந்து மயமதா யொழிந்த தெனநினைந் திவ்வகை நால
சுத்திசெய் தனைய பிராரத்த தேகத் தொடர்புறு துரிசெலாந்தொலைய
வத்திர மனுவை யும்படீ ரூக வறைந்துகால் வலப்பெரு விரலிற்
சித்திர பானு வெழுப்பியவ் வெல்லாந் தீந்துறத் தகித்ததா நினைத்து. (உ௩)

ஆயபின் சிவாய வௌசடென் றேதி யரியநற் றுவாதசாந் தத்தின்
மேயமாண் பாவிந் துவினெழு மமுத வெள்ளிய தாரைக ளாலச்
காயமுட் புறம்பு நனைந்ததா நினைந்து கருதிய விருதய நடுவி
லேயதண் டிலைபொற் கருணிகை முதல வியைதரு சசைமென் மலரை. ()

ஆதன மாக முக்கலைக் குடிலை யாலமைத் ததன்கரு ணிகையிற்
சேதன கிரியா ரூபசூக் குமமெய் திகழுநாற் கலைப்பிர ணவத்தான்
மேதக வந்த தாநினைந் தனைய மிளிர்தரு சூக்கும வுடலி
லோதுறு துவாதசாந்தத்திற் சிவமா யுடனமர்ந் தொளிருமான் மாவை. (உ௫)

அனையசீ வான்ம மனுவுரைத் தெடுத்தாங் கவிரொளி யுருவுடை யவனு
யினிதுதா பித்தே சத்திமந் திரத்தை யியம்பியாங் கதனினுற் கலக்குண்
டனகமாய்ப் புருவ நடுவினின் றெழுகு மமுதவெள் ளத்தபி டேக
நனிபுரிந் தங்க நியாசமே லியற்றி நாடுறு மிவ்வெலா மமைந்த. (உ௬)

விரவுமைம் பூத சுத்திமுற் றியபின் விசுத்ததே கத்தனாய் விழைந்து
பரவுமன் பொடுமர் நாபியந் தடத்திற் பதிகிழங் கிடைமுளைத் திருநான்
மருவுமங் குலத்தோர் நாளநீண் டிதய வரையுற வதனிலெட் டிதழோ
டொருதனிச் சுவேதாம் புயமிரு தயமே லொளிர்தர வுளைத் திடுமதன்மேல்.

இனியவங் குலநான் கிரண்டுயர் படிக லிலிங்கமொன் றிருப்பதா நினைந்து
புனிதபூ சோப காரணங்கண் மனந்தாற் பொலிவுற வமைத்துளக் கமலத்
தனிமல ரிடையே விசேடவர்க் கியமுன் றுபன முறையமைத் தனைய
பனிமலர்க் குரிய கந்தநா ளங்கள் பத்திர கருணிகா திகளில். (உ௮)

சாற்றுமா தார சத்திமுற் குடிலை சத்தியீ றுயவா தனமிட்
டேற்றவப் படிக லிங்கச்சுற் றிடையே யெழிற்சிவ மூர்த்தியை நிவேசித்
தாற்றுதண் டபங்கி முண்டபங் கியா சம்புரிந் தவ்விலிங் கத்திற்
றேற்றுறு நெடுமை மூர்த்தியின் வித்யா தேகத்தை நியசித்தாங் குடனே. ()

நேத்திர நியாசம் புரிந்துபி னந்த நிகரிலாப் படிகமா லிலிங்க
மூர்த்திதன் பிரம ரந்திர நெறியின் முதுபர சிவத்தைமேற் கொணர்ந்து
நார்த்தவா வாக ஞதியர்க் கியங்க ளவிற்றித யாதிய நியாசம்
பாத்தியா சமனர்க் கியமலர்த் தானம் பயிற்றிபின் மாலியங் கழித்தே. (௩௰)

நவமல ரணிந்து தைலமுன் னுவ நனிபிக மனுமுறை யாட்டித்
தவளவொற் றுடை சாத்திவெண் ணீறு சாந்தமுன் னணிந்தி யாங்கந்
திவியபோ காங்க பூசனை யாற்றித் திருவமு தாதிய நிவேதித்
தவிர்செப நிவேத னம்புரீஇ முக்கா லஞ்சலி நிறைமல ரளித்தே. (௩௧)

அதிபுரீஇ நாபி குண்டத்தி லோமந் தொடங்கியே னின்றெழு கமுதே
புதியகோ கிருத மாமுடித் தனைய புண்ணிய மண்ணால்கைக் கொடுத்தே
ததியுறு மட்ட புட்பமுஞ் சாத்திச் சத்தியோ சாதமுன் னைகப்
பதியருண் மூல மனுமலர் புனைந்து பராமுகார்க் கியங்கொடுத் ததன்மேல்.

முன்னுபோ காங்க தேவர்க்கு மளித்தம் முதியமந் திரர்களை யெழுப்பித்
தன்னிகர் சிவமூர்த் தியினிலுஞ் சிவாத னமனுங் குலங்களை யெழுப்பி
யுன்னுமவ் விலிங்க பீடத்தும் யோசித் தொண்சிவ மூலமந் திரத்தாற்
பின்னருச் சித்துத் திக்குபந் தனமும் பிறங்கவா குண்டனந் தானும். (௩௩)

தேனுமுத் திரையும் புரீஇப்பர சிவனைத் திகழ்புரு நவெமர்ந் தொளிருமெ
வானிமிர் தார காவடி வாக மன்னுற நினைந்தினிப் புறந்தூ
மீனமில் பூசை புரிதர வருள்கென் றிரந்தனு மதிபெறீஇ யுவந்திம்
மானமார் வகைய வந்தரி யாக மாண்புறப் புரிந்துபின் மாதோ. (ருங)

அத்திர மனுத்தா ளத்திர யத்தா லாங்குறு விக்கின மகற்றிப்
பத்துள திக்கு பந்தனம் புரிந்தப் பணியினு லொளிர்தழன் மதிலு
முத்தகு மகிழ்தர்ச் சனிவலச் சூழ்மும் முறைபுரீஇக் கவசத்தி னுமை
மைத்துறு தேனு முத்திரை சத்தி மனுப்புகன் றுஞற்றியம் மாண்பால். ()

தாவிலாச் சத்தி சமூகமேல் கீழிற் சார்ந்துசூழ் சாலமா நினைந்து
மாவருக் கியவட் டகையையத் திரமா மனுவினிற் கழீஇயபி டேக
பாவன செலபூ ரிதமணிக் கலசம் பயில்புரு நவெலா யுயர்த்தி
யோவிலவ் விந்துத் தானகின் றெழுக்கு மொள்ளமு தக்கல சத்தின். (ருரு)

உள்ளுறக் கொண்டு மெல்லென விழித்தவ் வுதகத்தை யிதயமந் திரத்தால்
வள்ளவட் டகையிற் பூரித்துச் சாந்த மலரறு கக்கதை வில்வ
நள்ளுறப் பெய்து சிவாசன மூர்த்தி நவிற்றுறு பிரமபஞ் சகமே
யொள்ளிய வித்யா தேகநேத் திரமே யொண்சிவ மூலநேத் திரமிவ். (ருஎ)

அங்கபஞ் சகமே மூலமீ ரெட்டா ருச்சித்துச் சங்கிதா மனுவாற்
கொங்குற வமியந் திரித்திரட் சாவ குண்டனை மந்திர கவச
முங்குறைத் தியற்றித் தேனுமுத் திரைதந் தறுசிவ மூலத்தவ் வுதக
தங்குதன் றலைமேற் புரோட்சித்தத் திரத்தாற் றகுதிர வியசமு கத்தும். ()

அதுபுரீஇக் கவசத் தப்பியுட் சணஞ்செய் தவற்றையாங் கிருதய மனுவாற்
றிதமுற வமிமந் திரித்தவ குண்ட தேனுமுத் திரைகொடுத் தவையு
முதமய மாக்கி யருக்கிய சலத்தோர் முழுமலர் தோய்த்துமஞ் சனஞ்சா
ரிதகடத் தமைத்துத் தேனுமுத் திரைதந் தின்னமு தாக்கியிவ் வகையே.

திருத்தகு தான சுத்திபின் விசேட சிவார்க்கிய தாபனைச் செய்கை
கருத்துற நிறைத்த திரவிய சுத்தி கண்டபி னமுதநா யகனை
யுருத்திரு மேனி நீண்டபூ சனைதா னெத்தசா தியனுஞற் றுதலே
யருத்திசால் விதியென் றச்சிவ சாதி யாகத்தா னுஞ்செயல் புரியும். (சுo)

நலனுறு தனதா சனத்தினிற் சிவாச னம்மனுப் புகன்றல ரிட்டு
மலர்தன திதயந் தனிற்சிவ மூர்த்தி மனுமலர் புரிந்தாசந் தனத்தின்
றிலகநெற் றியினேத் திரம்புகன் றணிந்து சிரத்தினின் மூலத்தாற்சேர்த்தி
யலர்சிவ சாதி யாகவே தனைக்கண் டதன்பின்மந் திரசுத்தி யாற்றும். (சுக)

கரமிரண் டிதயத் தஞ்சலி யாக்கிக் கவினுற மௌனியா யிருந்து
வரமிகு மூலா தாரமுற் புருவ மத்தியாம் விந்திடம் வரையும்
பிரமபஞ் சகமேற் பிரமரந் த்ராந்தம் பேசுறு சடங்கமென் றிருபாற்
றரமிகு சங்கி தாமனுப் பிராசா தம்மனு வோடுமுச் சரித்தே. (௬௨)

மந்திர சுத்தி யிம்முறை முடித்து மார்புற வஞ்சலி கரங்கண்
மந்திர நாதா தேவதே வேசா வள்ளலே யெள்ளலே யாதிம்
மந்திரத் தமர்ந்தோ யாசையா லேழை வழிபட வேற்றருள் கெனந
மந்திரந் தன்பி னகநெகிழ்ந் தருக மாபினின் வேண்டுகொண் டதன்மேல்.

அரியநற் சிவகா யத்திரி மனுவா லட்டபுட் பாதியர்ச் சித்தே
பரவுமைஞ் சிரத்து மருங்கியங் கொடுத்துப் பரிமள தூபதீ பாதி
புரிபுகின் மாலி யங்களேந் ததனைப் புனிதபாத் திரத்தினீ சானத்
துரியசண் டேசார்த் தம்மிரு தயஞ்சொற் றுவப்புற வைத்தனன் மாதோ.

பன்னுமத் திரமந் திரத்திலிங் கத்தைப் பாசுப தாத்திர மனுவா
லன்னபிண் டிகையை யலம்பியர்க் கியநீ ரத்திரத் தாட்டியட் டகப்பூப்
பின்னரும் புனைந்து தூபதீ பம்முன் பேணினின் மாலிய நீத்தோர்
றுன்னல ருடனே யிலிங்கமீ தணிந்து தூயநீ ராட்டிமூ லத்தால். (௬௫)

தரமிகு சுகந்த தைலமே யுவைநெற் றண்டுல சூரணந் தகைநீ
ரரிசனப் பொடிநீர் தாத்திரி மாநீ ரவிர்தரு பஞ்சகவ் வியமே
யிரதவைந் தமுதம் பலபஞ்சா முதமா னிலகுபா னிறைதயிர் புதுநெய்
விரவிள வெந்நீர் தேன்சருக் கரைநீர் வியன்கழைச் சாறுசம் பீரம். (௬௬)

பலவகைக் கந்தந் தாடிம மாதி பல்கனிச் சாறிள நீரின்
வலகில வாக விடையிடைத் தூய வரும்புன லொடுஞ்சுவா காந்த
குலமனு மூலத் தாலபி டேகங் குயிற்றிப்பி னம்மனுத் தூய
சலமிக வாட்டிப் பின்னரச் சங்கி தாமனு வொருமுறை யாட்டி. (௬௭)

பின்னரு மெண்பத் தொருபத மனுவாற் பிறங்கிய வாயிரந் துவாரந்
துன்னுபொற் கலத்தின் றுளைமுன் றுவ துலங்குசீ ருத்திர நமகம்
பன்னுறு சமக மாதிமா மனுவாற் பண்புற வாட்டிமேற் சுகந்த
மன்னுறு சந்த னோதக மிமநீர் மணமலர்ப் புனன்மணி யுதகம். (௬௮)

உவமனில் வில்வோ தகம்விசே டார்க்கி யோதக மேதக வாட்டித்
தவளவண் டிருவொற் றுடைதான் கவசத் தனிமனுப் புகன்றுமென் மெல்ல
வவிர்தரத் துடைத்தக் கணத்தினத் திரத்தா லாமல மணிந்துவெண் ணீறு
திவியசந் தனமக் கதையறு கரிய திருத்தகு வில்வம்புட் பாதி. (௬௯)

திருத்தகச் சிவமூ லத்தினு லணிந்து சிவாசன பூசனை முறையா
தாத்தினு தார சத்திமுற் குடிலா சத்தியீ ருகவொவ் வொன்றுங்
கருத்துற வவ்வம் மனுக்களால் யாவுங் கரிசற விரிவுறப் புரிபு
வாத்தபன் மலர்க ணிறைகாருஞ் சலியை மருவிய விருதயத் தமைத்து. ()

அறிவொளித் தண்டா கிருதியே யுருவா யச்சிவ மூர்த்தியை நினைந்தங்
நறைமலர் நிறையஞ் சலியெமைப் புருவ நவெனை மூர்த்திமந் திரத்தான்
முறைமையி னுயர்த்தி யஞ்சலி தனிலம் மூர்த்திவந் தெனநினைந் திறைஞ்சி
யிறையிரு தயத்தின் மெல்லென வமுத விலிங்கச்சூழ் வுறநிலை நிறுத்தே. ()

சிரமுக மிதய நாபிசா னுவெனத் திருத்தகு மைந்துறுப் பமையத்
திரமிகு பஞ்சப் பிரமத்தா னியாசஞ் செய்யுமத் தண்டயங் கிம்மேற்
பரவுமூர்த் தாய நமாந்தமாப் பிரம பஞ்சநி யாசமைஞ் சிரத்தும்
புரிதரு முண்ட பங்கியைம் முகத்தப் புகன்மனு வத்திர பங்கி. (௬௨.)

விதிபுரீஇப் புட்பாஞ் சலியிரு தயத்தின் விரவவைத் திதழியிந் தாதி [த்த
பொதிசடா முடியைந் திலங்கெழிற் பளிங்கு பொன்கரி தருணவெண் ணிற
வதனமைந் தைம்மூன் றம்பக மொருபான் மலர்க்கர மாதிய மருவுங்
கதிர்பளிக் குருவாண் டெண்ணிரு வயச்சு காசன மாதிய கவினும். (௬௩.)

வித்தியா தேகந் தனைநினைந் தனைய மெய்ம்மனு நமாந்தமா விளம்பி
யத்தகஞ் சலியை யுச்சிமட் டுயர்த்தி யதனுளாங் கத்தனு மின்றே
சொத்துவந் தெனவோர்ந் திலிங்கவா கார முன்னுரு தஞ்சலிப் புகுந்த
வித்தகு முருவே யெனந்திலிங் கத்தி னியையுற நியாசஞ்செய் தாங்கே. ()

வதனமைந் தினிலு நேத்திர நியாசம் வயுக்கிமேற் புட்பவஞ் சலியை
யிதயமே னிறுத்தி மூலமந் திரத்தை யிசைத்துமேற் றுவாதசாந் தத்தம்
முதுமனுப் பொருளே யாம்பர சிவனை மோதமெய்ப் போதகிட் களவ
நிதவியா பகனுந் தியானித்தஞ் சலியை நீட்டிமேற் றுவாதசாந் தத்தில். ()

ஊங்குநின் றனைய பரசிவ னிரவி யொளியனுய்ப் புருநடு வணையுற்
றுங்குமெய் மெலநின் றிறக்கிவந் திதயத் தமைத்தபுட் பாஞ்சலி யதனுட்
டேங்குபல் கோடி யிந்தொளி யினனுயத் திகழுமப் புருநடு நின்றும்
பூங்குமிழ் வலமூக் கிரேசக வழியாற் புறத்துறீஇப் புகுந்தா நினைந்தே.

அகளநின்மலகிவ்விலிங்கமூர்த்தியின்வந்தமர்ந்தருள்கென்றுவேண்டழைப்பு
திகழ்புவி முதலுன் மனைவரை வியாப்த சிவபரி பூரண வியல்பை [த்
நகவிரி யறிவி லழுத்துமா வாக வனம்மித யம்மனு நவின்றே
தருமுறை யாவா கனியிலச் சினையாற் சாற்றுமச் சதாசிவ மூர்த்தி. (௬௭)

பிரமாந் திரத்தா லுட்புகுந் திதயப் பிரசவம் புயத்துவீற் றிருப்பப்
புரிபுதா பனிமுத் திரையின்முன் னழைத்த புனிதனை யிருத்துத லாகி
மரபின்முன் னழுத்து மதுநிலை பெறுத்தல் வயக்குதா பனமுமப் பானை
வரமுறத் தனக்கு நேர்முக மாக்கு மாண்புதாய்ப் பான்வியா பகத்தில் (ருஅ)

தனதுபே ரறிவு மதில்வியா பகமுந் தங்கியொன் றொன்றை யாசரிக்கும்
புனிதமாய்ச் சந்தி தானமுத் திரையாற் புரிதரு சந்நிதா னமுமே
லனகவர்ச் சனைமுற் றளவுமே றகலா தமர்கென வேண்டுபு தகையும்
வினையதாய்த் தன்பால் வியாபக போதம் விலகுறுத் தகைவிளக் குவதாய்.

சாற்றுநிட் டூர முத்திரை யாற்செய் சந்திரோ தனமுமென் றிவையு
மேற்றிரு தயமா மனுப்புகன் றியற்றி யிமாசலை யுமாபதே யாவுந்
தேற்றுமா தேவ சுவாகதங் கிலவென் றிருந்துவிண் ணப்பமுன் புரிந்து
போற்றரு மைந்த நன்குவந் தனமென் பொன்மொழி புகன்றதா நினைந்து.

வேறு.

நமசு வாமிந் சர்வசெகந் நாதா நீதா போதாவிவ்
வமுத லிலிங்கத் தேழைபுரி யர்ச்சனுவ சானவரை
நிமல பிரீதி மிகவெளியே னேர்நின் றருளு கெனமீட்டும்
விமல னெதிர்விண் ணப்பமுறை விளங்கப் புரிந்துகளங்கமற. (சுக)

மொழியைஞ் சிரத்துஞ் சுவாகாந்த மூல மனுவா லருக்கியமும்
வழுவில் கால கன்னிலிங்க மருவஞ் சலிமுத் திரைதந்து
தழுவு மிதயா தியங்கியாஅ சங்க ளங்கம் மனுவாற்செய்
தொழிலி லேக்கி யம்மூலத் தணுற்றி யிரட்டை யத்திரத்தால். (சுஉ)

அவகுண் டனம்பின் கவசத்தா லாற்றித் தேனு முத்திரையுந்
திவளு மகாமுத் திரையுமுடன் சிவமூ லத்தாற் றந்தநம
சிவாய சுவாகாந் தம்மூலத் தாய மனுவாற் பதங்கண்முக
மவிர்சென் னியினு முறையாத்தி யாச மனுர்க்கி யம்புரிந்தே. (சுங)

விரைசெய் மலரக் கதைதூர்வை மிளிர்கூ டினமென் னிதையிருகை
தாமு னிறைத்தாங் கருள்புட்ப தானம் புரிந்து கண்டையிடக்
கானின் றொலிப்ப நறுந்தூபங் கதிர்செய்த் தீப மூலத்தால்
வரதன் முகங்க ளொசிகளை மார்பு பதநேர் தனிசுழற்றி. (சுச)

தொகுத்துப் பிரண வாகார தாலத் திதுவோ வெனமுக்கால்
வகுத்துக் கோட்டி மலவலியை மடித்து ஞானப் பிரகாச
மிகுத்து விளங்க வருளுகென வேண்டு குறியா முறைவிளக்கி
முகத்துஞ்சிரத்துமுன்போலமொழியாசமனுர்க்கியமளித்தே. (சுரு)

17

பாவ ஞபி டேகமுறை பயில மீட்டுங் கைலாதி
தாவில் சந்த ஞந்தமுறத் தக்க வரிசை யாலாட்டித்
தாவி சேடார்க் கியமனுமா தோய மாட்டித் தூயதிறத்
தேவில் விலகு மெல்லியவண் டிருவொற் றுடை கவசமனு. (௬௬)

புகன்று சாத்தி மூலத்தாற் புனித நீறு விளக்கலவைச்
சுகந்த படீர மக்கதைபைந் தூர்வை வில்வம் புட்பாதி
யுகந்து சாத்திப் பொன்னணைஞா னொளிருஞ் சுவண கௌபீனந்
திகந்தமிலகுவிசித்திரவத்திரம்பொற்பூணூன் மணிக்குழைகள். (௬௭)

ஆதி புனை இப்புட் பாஞ்சலிமுன் றளித்து மூலத் திண்டைமுதற்
கோதை புனைந்து புகைசுடர்முன் கோட்டி யாச மனுர்க்கியந்தந்
தோது மனோ தங்காட்டி யுயர்சங் கிதையா லியாங்கங்
காதல் வேண்டல் போகாங்கஞ் சவினப் பூசித் தருக்கியங்கள் (௬௮)

செறிய வனைய போகாங்க தேவர் பலர்க்குந் திகழுவளித்
திறையீ சான முதன்முகமைந் தினிலு முறைதே னுப்பதுமந்
திறன்முச் சூலந் திகழ்மகாஞ் சிருங்க மெனுமுத் திரைகாட்டி
முறையுஞ் சலிக டனித்தனியம் முகாங்க தேவர்க் கவர்மனுவால்.

இதயத் தமையப் புரிஇமூலத் தினிது புட்பாஞ் சலிசாத்தி
யெதிரின் மகாமுத் திரைகாட்டி யினைய சுபரா தியவொன்றாம்
விதியி னிமல சதாசிவன்பான் மேவு மேக பாவனைசெய்
ததன்மேற் றூப தீபமளித் தாச மனுர்க்கி யங்கொடுத்தே. (௭௰)

ஆங்கு நிவேத் த நிவேதனங்க ளனைத்தும் புரோக்கித் தத்திரத்தா
லோங்கு சமக்கா ராட்டகங்க ளுஞற்றி யிருத்திஞ் சயமனுவாற்
பாங்கி னபிமந் திரித்தாசு பாற்றி யமுத மயமாக்கித்
தேங்கு சபரி வாராய சிவாய நைவேத் தியஞ் * சுவாகா. (௭௧)

எனவவ் வெழுற்றின் பெயரிடைவைத் தியம்பி நிவேதித் திம்மனுவாற்
புனித பானீ யங்கொடுத்துப் புகலா சமன மாத்திரந்தந்
தனகன் கரங்கள் சந்தனத்தா னாலே கவசத் தாற்றுவட்டி
யினமெல் லிலைகாய் முகவாச மினிதீந் தருச்கி யம்மளித்தே. (௭௨)

பூசித் தொருகான் மூலத்தாற் புகையுஞ் சுடரும் பின்காட்டி
நேசித் தாச மனுர்க்கியமு நேர்ந்து மலர்க் கதை தூர்வை
தேசிற் சிறந்த வில்வாதி திகழ்கைந் நிறைத்தஞ் சலியாவு
பாசித் தகில தத்வாதி பதயே சிவாய நமவென்று. (௭௩)

---

* சுவாகா எனற்பாலது இசைநோக்கிக் குழுகின்றது.

புகன்று பவித்தி ரஞ்சாத்திப் பொருவின் மாதி பாதியெலாந்
திகழ்ந்து பரம சிவஞான தேசு நிறைக வெனக்கோட்டிச்
சுகந்த நீறு சாத்திமுறை தூய தருப்ப ணங்கவிகை
தொகுந்த கவரி சிவிறிமுதற் சோட சோப சாரமெலாம். (௭௪)

மரபிற் புரிந்து சிவத்துவமே வயங்க வேண்டத் தறிகுறியாப்
பரவு பளித மாதீபம் பகரும் விதியிற் பணிமாறப்
புரியா சமனுக் கியமளித்துப் புட்பாஞ் சலிதூய்ப் பினமாமுத்
திரைபஞ் சமுகி முத்திரைக டருந்த வளித்தா யிரநாமம். (௭௫)

சாற்றி யளியா னிறைவில்வார்ச் சனைசெய் துருத்தி ராக்கவடம்
போற்றி யெடுத்து வலக்காத்தாற் புட்ப மமைத்து வாமகரத்
தாற்று செபநூற் றெட்டுருச்செய் தருக்கி யோத கம்வலக்கை
யேற்றம் மலரு முடன்வாங்கி யினிதுற் பவமுத்திரையாலே. (௭௬)

அனைய செபமே கன்மமே யான்மா வேயென் றிம்மூன்றும்
புனிதன் வரத காத்தின்மனுப் புகன்று நிவேதித் துயுதத்த
வினைசெய் தனைய மலர்சாத்தி மீட்டுஞ் சங்கி தாமனுவை
நினைபோர்பதின்காற்செபித்தளித்தங்கிமலவிலிங்கத்தென்கீழ்பால்.

அனக சிவாச ஞதியமைத் தருச்சித் தேத்தித் தன்குருவைப்
பினர்மேற் றிசையிற் சிவயோக பீட மேல்வித் தியாபீடந்
தனையர்ச் சித்தே சிவாகமமேற் றயங்கப் பூசித் திவையாதி
வினைகண் மனுப்பா வனைமுதல விதியோர் சிறிதும் வழுவாமே. ()

அருமை பெருமை பாராட்டி யன்பு பெருகி நம்பெருமான்
கருணைப் பயோத தநிதியாய்க் கலந்தாங் கிருகண் ணருவியெழ
வுருக வுள்ள மிருகரங்க ளொளிர்பொன் னரியின்மேற் குவிந்தேறத்
திருமு னமுத சுயம்பிலிங்க தேவோத் தமன்பொற் றிருக்கோலம்.

கண்கள் குளிர மெய்குளிரக் கருத்துங் குளிரக் கண்டிமையா
தெண்கள் குளிர்சி ருத்திரமு னெல்லாங் குளிரு மிருந்துதிகள்
பண்கள் குளிர வெடுத்தோதிப் பணிந்து பணிந்து பலமுறையு
மண்கள் குளிர வாய்குளிர வழுத்தி மீட்டும் பெருகன்பால். (௮0)

வேறு.

திருமுனம் பணிந்தெ ழுந்து திருவருட் சலதி மூழ்கி
யொருவரி தாகி நின்ற னுடனமு தேச னந்த
வருவுருச் சுயம்பு லிங்கத் தருளுரு வாயெழுந்து
பொருவில்சுந் தரப்பொற் கோலம் புயங்கர்கோன் காண நின்றான்.

மலவிரு ளொிக்குந் தேசு மலிதிரு வேணிகண்டா
னிலவுறு மதனிற் றனே திகழ்பிர ணவசொ ரூபி
பலரிலை யென்று தேற்றும் பைங்கொன்றை மாலை கண்டான்.
குலவுபஞ் சாக்க ரத்தின் குறியுமத் தாரிற் கண்டான். (அஉ)

கங்கையு மதியுந் தானே கணக்கிலாச் சீவர்க் கெல்லாம்
வெங்கொடும் பிறவி வெப்பம் வீட்டிமெய்ஞ் ஞான நல்குந்
துங்கமிங் கெவருங் காணத் துலங்குமக் கவினோர் கண்டா
னங்கதம் பலவு மிங்தோ டளாவுநண் பருமை கண்டான். (அங)

பிறைமதி யொன்ற லாலெம் பிரானரை மதியு மென்று
நிறைமதி யமும்பூண் டாங்கு நிகழ்நுதன் முகமுங் கண்டான்
முறையின்மும் மலமுக் குற்ற முக்குண முப்பு மாதி
பறையநன் றருள றேற்று பாலபுண் டரநேர் கண்டான். (அச)

உலகெலா நிறைவி யட்டி யொளிக்கெலா மொளிதந் தென்று
நிலவுறு சுசிச்ச மட்டி நேத்திரத் திரயங் கண்டான்
குலமறை சிவாக மாதி குழாங்கள்வீற் றிருந்தெஞ் ஞான்றும்
விலகுறு தமர்ந்து வாழும் விமலமென் றிருவாய் கண்டான். (அரு)

பொதுமறை யரிமுன் னோர்க்கும் புகல்பாத் துவங்க ளோன்று
ரதிகாி யாமைக் கெம்மா னருளுப சாரமேயப்
புதர்பிறந் திறும்ப சுக்கள் புகல்பசு பதியே யீச
னிதுமுடி பென்று தேற்று மொழின்மணி கண்டங் கண்டான். (அசு)

மிடற்றெழு மோசை மூன்று விதமெனுங் குறிப்போ சீறும்
விடத்தினும் புரந்த தோர்மூன் றுலகெனுங் குறிப்போ வீயா
துடற்றுமும் மலவி ருட்டை யொழுத்திடுங் குறிப்போ வென்ன
விடத்துறு மிரேகை மூன்றவ் விருங்களத் திலங்கக் கண்டான். ()

அருளுதும் வருக வென்றுங் கவழத்தவி னொலியா திற்கு
மிருகமு நிசமென் றேந்து மிளிர்தழன் மழுவு முற்றோர்
வெருவுறு வபய மும்பின் வினைகவர்ந் தளிக்கு மாண்பு
மருவுறு மம்பு சாத மலர்க்கர சதுர்த்தங் கண்டான். (அஅ)

உலகெலா முறையிற் றன்பா லொடுங்குறத் தனையொ டுக்கி
நிலவுமேற் பொருளொன் றில்லா நித்தியன் றத்வா தீதன்
மலர்பர சிவனே யென்ன மறைமுடி யறையும் வாய்மை
யிலகநேர் காட்டும் வெண்ணீ றிலங்கெழின் மார்புகண்டான். (அகூ)

அண்டகோ டிகளெ லாமாங் கமர்புவ னேச ரெல்லா
மண்டுபல் பொருளெ லாந்தன் மகைசுவ ரியலே சம்மென்
றெண்டகு மறையெ லாஞ்சொ லீசனே யெவற்றும் வாஞ்சை
விண்டமர் திருத்த னென்ன விளங்குபல் *லணிகள் கண்டான் (௬௰)

புரத்தலின் செருமுத்தா லொன்றும் போதுமென் றுபரி டஞ்சொல்
கருத்தினை யேனக் கொம்பு கமடவோ டிலகு மீன்கண்
ணாத்தனி மடங்க லந்தோ னைகரு கபால மாதி
திருத்தகு முறுப்பிற் றுங்குந் திறமினி தணர்த்தக் கண்டான் (௬௧)

தானலா துலகமில்லை சகமலா தடிமை யின்றென்
றேனவில் சுருதி வாய்மை யிலங்குற வகில மெங்கு
மேனிமிர் தரவி யாபித் தவைவியாப் பியத்தின் மேவுந்
தேனிமிர் கமலத் தண்பூந் திருவடித் துணைகள் கண்டான், (௬௨)

தன்னில்வே றற்ற மார்ந்துந் தானுமு முருவிற் கேற்பப்
பின்னையா யொருங்கு சாரும் பெரியநா யகிமா தேவி
யன்னையா யகில மீன்ற வுமையாங் கமர்ந்து மேவு
மென்னையா ளமுத நாத னிடத்திருக் கோலங் கண்டான். (௬௩)

வலமிடம் பொலிந்து தோன்றி வளாருட் கோலங் கண்டான்
மலர்தரு மந்த காசம் வழங்கருள் வெள்ளங் கண்டா
னலகிலா னந்த வெள்ளத் தாழ்ந்தனன் கரைபின் காணான்
றலனில்வீழ் தண்ட மாகத் தாழ்ந்தனன் றனையுங் காணான், (௬௪)

பாவசு ஞானன் சீவப் பண்பொரு சிறிதுங் காணான்
வானரு டமுன் போந்த வள்ளறன் குறிப்பு முற்ற
வானளித் தனன்கொ லென்ன வுணர்ந்தெழுந் தாங்கெம் பெம்மான்
பிரசமென் மலர்த்தாள் போற்றிப் பேணியித் துதிகள் கூறும். (௬௫)

ஒருவனு யுலகெ மெல்லா மொழிவற நிறைந்தாய் போற்றி
யருமறை யுபரி டம்போற் றத்துவி தீயபோற்றி
வருபரா பரமெய்ஞ் ஞான வள்ளலே மாவ னத்தின்
மருவிவா ழாதி சேட வரதநா யகனே போற்றி. (௬௬)

நாயக மறைசொன் ஞான ஞாதுரு ஞேய ரூபி
யாயவற் றதீத தூய வகிலமும் விரிந்து நின்றுஞ்
சேயவ வணிய சர்வா சிரயவாம் பிரவ னத்தின்
வாயம மாதி சேட வரதநா யகனே போற்றி. (௬௭)

---

* அணிகள்-அஸ்திராதி.

மூதுணர் விப்பி ரேசர் முறைபுரி துரங்க மேத
மாதியால் வழிபட் டேத்து மண்ணலே யனைய வேள்வித்
தீதறு பலன்க ணல்கு தேவரே காவ னத்து
மாதவ வாதி சேட வரதநா யகனே போற்றி. (கூஅ)

விரிகலை யாவுமோர்ந்த வித்தக ரொன்றி யானத்
தொருவுபு கன்ம பந்த முழுவர்தா முத்தி யன்ன
துரியனீ யென்ன வோதத் துதித்திறைஞ் சதீத சூத
மருவனத் தாதி சேட வரதநா யகனே போற்றி. (கூகூ)

மிருகண்டு சூனு வொன்றி விதியினார்ச் சிப்ப வன்னோ
னருகண்டு மறலை வீட்டி யாசினித் தியமா வின்பந்
தருகண்ட காள வொண்சே தாரமா விபினத் தென்று
மருகண்ட வாதி சேட வரதநா யகனே போற்றி. (க௦௦)

வனசமா தவன்றன் னேக்கம் வனசமாப் பூசிக் கும்பா
வனசமா ராத னத்தான் மகிழ்வுறீஇத் திகிரி தந்தோய்
வனசமா னங்க டந்த வள்ளலே மாழை சூழும்
வனசமா வாதி சேட வரதநா யகனே போற்றி. (க௦க)

தொழில்களைந் துனையன் றின்றத் தொகைவகை விரியா னப்பின்
னெழிலில வசல னீயிவ் வுளவறி வரிதென் றுன்னோர்
மொழியுமெய்ஞ் ஞான னந்த மூர்த்தியாம் பிரவ னத்தின்
வழியரு ளாதி சேட வரதநா யகனே போற்றி. (க௦உ)

தன்னில்வே றுயர்ந்த தொன்றுஞ் சசாதிக துவித மாகத்
தன்னில்வே றொன்று மில்லாச் சர்வபூ தேச நேச
மன்னிய வமுத சூத வனத்தனை வரத வார
மன்னிய வாதி சேட வரதநா யகனே போற்றி. (க௦௩)

போதரு மெவர்க்கு மோர்காற் புரிநம மாத்தி ரத்திற்
காதர பவார்ண வத்தைக் கடப்பிக்குங் கருணை வள்ளால்
பேதமு சர்வ சித்திப் பிரதனே யிரதக் கானின்
மாதவ வாதி சேட வரதநா யகனே போற்றி. (க௦ச)

நித்திய நிர்வி கார நிராலம்ப நிராம யேச
சத்திய ஞான னந்த தற்பர சாதுர் வேத
துத்திய நிமல சர்வ சோபன சூத கான
மத்திய வாதி சேட வரதநா யகனே போற்றி. (க௦ரு)

அனந்தர வமுத நாத வட்டமங் களசொ ரூப
கனந்தர கந்த ராதீ காருணி யாம்பு தீச
சனந்தர சனக ஞான தாயக சூத கான
வனந்தா வாதி சேட வரதநா யகனே போற்றி. (கoசு)

சங்கர நீல கண்ட சந்திர சடில சார்ங்கங்
கங்கா மந்தி ரேச காரண பெரிய நங்கை
பங்கா சூத கான பரவா பவஞ்ச மீதார்
வங்கர வாதி சேட வரத நாயகனே போற்றி. (கoஎ)

வேறு.

என்றகிகோன் றுதித்திறைஞ்சி யெங்கைதனையா துணர்ந்திங்கேத்துகிற்பே
னென்றிமகத் தெனிலண்ட மனுவெனுமா நுனுகின்ற யணுவே யாதி
யென்றிடிலோ வஃதண்ட மெனத்தாலித் தெழுகின்ற யேக மென்னனில்
வென்றியுற வநேகனும் விரிகின்ற யென்றிளைக்கும் வேத நான்கும். (கoஅ)

காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்கா லென்றனைய கலக்கந் தீர்த்து
மாண்பார வச்சுருதி சாரமெடுத் திசைப்பதெவர் மறுக்க வல்லா
ரேண்பாவு சூதவனத் தெந்தாயென் றிணையடிக்கீ ழிறைஞ்சிக் கண்ணீர்
சேண்பாயப் பாவசனாய்த் திருமுனமங் தாங்கருளிற் றிளைத்தான் மன்னோ.

அகிராசன் செயனேக்கி யமுதேசன் மிகமகிழ்வுற் றனந்த கேட்டி
தகுபாச அறிகவொ தசமாமஞ் சரிகேட்டுத் தழைக்கு மார்வ
திருமோகை யுற்றனமிவ் விழுத்துதிசொற் றனர்கேட்டோர்விழைந்த யாவுந்
தொகமேவி யொருவீடுந் துன்னுகநீ வேட்டவரஞ் சொல்லு கென்றான். ()

அனைய திரு வாக்கமுத மனைந்தனிரு கட்செவிவா யார மாந்தி
யினையுடையா யிமகிரிசை யிடத்துடைய யா யமுதேச வேழையேனி
னினைவரிய திருக்கோல நேர்காணும் பெரும்பேறு நிரம்பப் பெற்றே
னினியிதனிற் பெறுபெரும்பே றென்பகர்வ தமுதசுயம் பிலிங்க நாத.(கக௧)

ஆனாலுஞ் சேடநா யகவருளால் வேண்டுவதொன் றளியே னெஞ்சாந்
தேனூத மினதுபத செம்பதுமத் திருவருளா னந்தத் தேனுண்
டேனனுஞ் சலியாம லிவணமரும் பெருவாழ்வீ கென்று தாழ்ந்தான்
பானூறு மொழிபாகப் பரமேச னகியீச பகர்தல் கேட்டி. (ககஉ)

அன்புடையா ரெவரினுமிக் கன்புடையா னுகின்ற யானு லுங்கே
ளின்புடையே நம்பதத்தி னிறையன்பு குறைவின்றி நீடிமல்க
முன்புசிதம் பரத்திருத்த முதமளித்தோ நினக்கிம்மா முளரி வைப்பி
லின்பமுத சுயம்பிலிங்கத் தெழுந்தருணந் தரிசனப்பே றினிது தந்தோம்.

அனகனினக் கென்றுநம தருஞ்சொருப சிவஞான வாக்க மோங்க
பனகபதி நீயீண்டுப் படர்ந்துமுத னமைக்கண்டு பணிந்து போற்றி
நினகநெகிழ் தைமதியி னிறைமதியிற் குருவார நிவ்வு நாளெம்
முனகமுரு கியவிரிவின் முறைபூசா திரவியங்கண் முழுது மீட்டி. (ககச)

வழிபடுவோ ரிசபோகம் வழுவாது முழுதார்ந்து மரபின் வாழ்ந்து
கழுவரிய தனிவீடு நண்ணுகநீ மேலுமினி ராச சூட
முழுமணிவேந் தனைக்கொண்டு முறைசைத்தி ரோற்சவமிம் மூதூர்க்கென்று
மெழில்வளர்பூ ரணைமுடிவா யியல்விப்பா யென்றுபினு மியம்பு மாகோ. ()

நமதருளா லுலகபூ டணமாக யோகசூத் திரந வின்று
சமைவுறநின் பெயரினிற்பா தஞ்சலமென் றதற்கியற்பேர் சாற்றி மேலுங்
கமைதருமா தேற்றுவியா கரணமகா பாடியமுங் கவினச் செய்தே
யமைவுறுமா சாகுவத மாயகிலப் பிரசித்தி யாக வைப்பாய். (ககசு)

நம்முரிய சொருபவிய னன்குணர்ந்தோ ரானேனே நவின்ற துண்மை
யெம்மிலவ னபேதனென வெண்ணுதியா னினக்கவனே யெம்மை நல்கு
மும்மலமோ சனகுருவா முன்னுபதே சாதியருண் முதிய ஞான
னம்முறையா லும்மவன்பாங் கமர்ந்துவழி படலேநிற் கமைதி யாகும். ()

ஆதலினு லவனையடைந் தனையகுரு பத்திவழா தமைந்து வாழ்தி
கோதறவீற் றினிமது குளிர்கமல பதநீழல் கூடு கிற்பாய்
போதுகென வருள்புரிந்தப் புனிதசுயம் பிலிங்கமுப் புகுந்து வெற்பின்
மாதொடுமந் திரநாதன் மறைந்துவீற் றிருந்தனனிவ் வையம் வாழ. (ககஅ)

பின்னருளா லகிபதிசெம் பியற்கூவி யமுதேசன் பெரிய வன்னைக்
கன்னமகோற் சவம்விதியி னாற்றுவித்தாங் ககல்பிரிவிற் காற்று னாகிப்
பன்னருளா ணையுமறுக்கும் பான்மையதோ வென்றிரண்டு பாங்கு முள்ள
மன்னவொரு வாறமுத வள்ளலைத்தாழ்ந் துள்ளமெலாம் வைத்திட்டாங்கே

வெற்றுடல்கொண் டேகுபுபால் வீரையிற்றன் குரவனடி வீழ்ந்து முற்றுஞ்
சொற்றனையன் பணியாற்றித் துன்னினனென் றருணந்தி சொலக்கேட்டின்ப
முற்றசனற் குமரமுனி யுழுவலன்பா லடிகளினி யுதக வேந்தன்
றுற்றவண்முன் பெற்றபயன் சொற்றருள்கென் றிறைஞ்சிடவத் தூய நந்தி.

வேறு.

மேலினி தருளின னென்று சூதன்முன் மேவிய முனிவர ரன்பு கூர்தர
மாலறு கதைபினு மங்க ணோதுறு மாசிரி சரிதமி துங்கு மாதரா
மேலுற வினவினர் நன்று கூறின ரேவரு மிககுக மென்ப யாவையும்
வாலிதி னுகருப் பின்பு மாபதி வார்கழ லடிநிழ லொன்றி வாழ்வரே. (கஉக)

ஆதிசேடன் சிவார்ச்சனைச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் கஅசு.

# வருணன் சாபமோசனச் சருக்கம்.

ஆபதி சென்றமு தேசனை யளியொடு முன்புரி பூசனை
மாபுரை தந்தன மேலினி வருணனை யன்றுடல் சாபமு
ற்றொருவிய நன்கதை கேளென வுணர்தர வன்பினொ டோதுறுங்
குருபர னென்றுல கோர்தொழு குலவரு ணந்திபி ரானரோ. (க)

விதிதரு மைந்தமுன் னாளிலே விரிகடற் காசொரு வேள்விசெய்
மதிகொடு பாதலத் தூற்றவன் மறையவ ரின்மையிற் சிற்சில
கதிபடர் தௌத்தியர் தமைவிளீஇக் காசினி மறையவர் தமையழைஇ
யதிவிரை வருகென வவனிபுக் கவர்மறை முழுதுண ரந்தணர். (உ)

தங்களை யுறுசெய றெரித்தாஞ் சார்கென வழைத்தன ரம்மறைப்
புங்கவர் நிட்டமப் பாதலம் புகுசெய லென்றெதிர் மறுத்தன
ரங்கது தூதுவர் பாதலத் தம்புதி கோன்முனி யம்பின
ரிங்கினி யென்செய லென்றற விறையுள முடைந்திட் டெண்ணுமால் (ங)

கருதிய வேள்வியைப் படியுநாங் கவினுற முடிப்பது கருமமென்
றொருவரு முபாயத்தின் வேதிய ருங்குறப் புரிதுமென் றுன்னுபு
வெருவரல் பின்னுற நோக்கிலான் வினைவரு முன்மதி வீயுமென்
றொருபழமொழிபழுதுறுதன்னுழியுணர்தரும்வகையுறூற்றுவான் (ச)

தன்னுழை வதியுமோர் விற்பனன் றருகலை பற்பல கற்றுள
மன்னுறு புலவனோ டவனியில் வந்தொரு மறிபதி வாயிலின்
முன்னமர் கெனப்புல வனைநிறீஇ முதுபொருள் குறித்திவண் வருகுவார்
துன்னுபு விப்பிரர் பற்பலர் தொகுமவர் தமையெதிர் கூவிநீ. (ரு)

இசைதரு சாத்திர வாதத்தி லென்னைவென் றிடினுமக் கீகுவ
னசைமிகு பொருள்பல வென்றவர் நயப்புற மொழிந்தவர் தமையெலா
மசைவற வென்றலை கடலிடை யாழ்வுறத் தள்ளுதி யென்றுரைஇ
வசைதீர்வு றுதலினப் புலவனை மற்றவ ணிறுத்தினன் னேகினன் (சா)

புனலிறை பாதலம் புக்கபின் புலவனு மினைப்பரு மச்செய
லினிதென வாங்குறு ககோளர்மு னிருடிக ளதிருளைப் போர்புரிந்
தினிவரு துயர்க்கட லிடைப்புண விறைவிழு திரனனி தெரிப்பவ
னெனவலை யெறிகட லிடைத்தள்ளி யேகின னத்துணை விடாதிறை. (எ)

அழலினை மடிதனின் முடிதலீ தலதிலை யெனநிறை யார்கலி
விழலுறு மவர்களை யறிவெலாம் விழலுற வொற்றுவ ரார்ப்பில
வழியவ னுறப்புரிந் துன்னிய மகமகங் கொதித்தெழு மாறென
வெழுவழ லாகுதி யாதிசெய் தெண்ணிய செயன்முடித் தனமென. (அ)

முறுகிரின் றெழுசெருக் கறிவினை மூடவம் மூடபுத் தியினிலவ்
வுறுவர்க டமையுரை யமர்பினு முனுற்றுபு நீரெமை வெல்லுகா
ளறுதியிங் கமர்தனுங் கடனென வவர்தகை யறிவிலி தகைஇயினு
னுறுவது தவிர்வதெவ் வருந்தவ வுறுவரு முறுவரன் றென்பதால். (கூ)

பின்பவ ணமர்தரு ககோளர்தம் பெருந்தவ மோருரு வாயினே
னின்பமிக் கருமறை யாதிய யாவையு முணர்ந்துமெய் தேர்ந்துளான்
றன்பெய ரட்டவக் கிரனெனுந் தாபத னுபதித் தாரண
மென்பஃ தேனையர்க் காற்றுவா னீன்றவற் குறுதுயர் பொறுக்குமோ. (க0)

தாதைபா தலத்தினை செயறெரீஇத் தரிப்பற வுளமிகு பதைப்பொடு
மோதுமக் கணமவ னுற்றெதி ரொருசொலி னச்சமர் வெற்றிகொண்
டேதறு தாதைமு னுகவங் கிருந்தவ ரிருந்தவர் யாவையு
மேதினி புகுந்துதங் கியதிகண் மேவிய வமர்கென விடுத்துமேல். (கக)

குடபதி கேண்மதி பாழ்மதி கோண்மதி யாதுகொண் டேமதி
மடமைய ரெனவதி பாதக மலிவினை புரிந்தனை யாதலி
னுடனறி விழந்தனை பித்தனு யுடலழி குருபமுற் றலைதரக்
கடவையென் றினைதரு சாபமுன் கழறின னேகினன் முதைபின. (கஉ)

வருணனவ் வழியறி வழிந்துடன் மலினமுற் றலைதிலை மனைமுனோர்
தெரிபழி மனத்தரிப் பாதகந் தீர்வதென் றென்றுனைந் திளைந்தன
வொருவிலிப் பழிதெற நீடுநா னுழலுமவ் வருணன்முற் புண்ணிய
முருவினுற்றெனவிருபாக்கனென்றொருபெருமுனியவ னுற்றுளான். (கங)

எதிர்தொழன் முதலுப சாரமின் றிருந்தன னறிவழி குடாதுகோ
னதுதெரிந் துடன்விரைந் தவன்மனை யமைச்சரம் முனிவர னடிபணீஇ
முதுதவ முனிவரர் சிகாமணே முழுதுநி னடியல தாணிலேங்
கதுமென நசிக்குமா மேதையோர் காட்சியெத் தீமையு மென்பரால். (கச)

அடிகளை முற்றவப் பெரும்பய னுகவிங் கடிதொழப் பெற்றனங்
கடிகவெம் பதிமதி மயலெனக் கழறுவ தென்னினி யேழையே
மொடிவற முழுதுணர்ந் தருளெனு மொண்கல னணிகல னெனக்கொடே
நெடிதருள் பெருந்தகைக் கெனப்பினு நேர்பணிந் தனரடிக் கடியரோ (கரு)

எழுமினும் மிறைபுரி பாதக மெவற்றினும் பெரிதது பிரமண
ருழியவ மானஞ்செய் துற்றதிவ் விறுபழி யகற்றரி தாயினும்
வழிபடு நம்பொருட் டிரக்கமும் வளர்ந்தெழு முளநனி யாதலி
னொழிதரு முபாயமிங் கோதுது முணருமி னெனப்பினு மோதுமால். (கசு)

றுமதிறை மனமழி சாபமு னுவன்றரு டாபத னியாவையு
மமைதர முழுதுணர் தூயனவ் வட்டவக் கிரப்பெய ரண்ணல்சொ
னிமிர்பெரு வலியின தாதலி னிறைபரி காரமுற் றுறினலா
தெமதியல் வலிகொடு மாற்றரி திப்பரி காரமு மிவனலால். (கஎ)

எனையர் புரிதரி னரிதரா திவன்மது பானவுன் மத்தனு
மினைநிந் திதசபா பிட்டனு யினனறி வுற்றல தியல்புரு
தானமி லினையதிப் பாதலத் துறுற்றுதன் முறைமையன் றம்புவி
மேனல மாதல மீதுறு விதிமுறை புரிவதென் றேறுதிமேல். (கஅ)

மனமலர் புனைதன கமலவன் மத்தகந் தனின்முறை வைத்தனன்
கரவிலவ் வத்தமத் தகசப்யோ கப்பெருந் தீக்கையி னுக்கமிக்
கொருவுணர் முழுதுறப் பழுதிலவ் வொருமுனி யிருதொழு திருவடி
சிரசுறை தவாவிழுந் திறைஞ்சுபு தீயவிப் பேயனை நீயலால். (க௯)

அருள்பவர் பிறரில ராணின தடியல திலையென நமந்துள
முருகிய மேதகு சீதள விதகமென் பதமிசை யாட்டியப்
பொருவில்பா தோதகஞ் சென்னிவாய்ப் புரோக்கணு சமனமு னியற்றுபு
மருமலர் மதுவருக் காதியான் மரபினி லருச்சனை யாற்றினன். (உ௰)

பூசனை புரிந்துட னஞ்சலி புரிந்தெதிர் தொழுவரு ளுனன
நேசமு னீடிய நோக்குபு நிறையருள் செலுத்தவப் புனலிறைக்
காசறு முத்தம மந்திர மாற்றினின் வகுத்திடு மாற்றன்முன்
மாசற நல்கிவெண் ணீறுமெய் வயங்குறுமுத் தூளன மாமனு. (உக)

திறன்மலத் திரையமொய் நசித்தொளிர் சிவத்துவப் பேற்றினை யளித்திட
லறிகுறி யெனுந்திரி புண்டர மணிமனு நியாசங்க ளிருடிகள்
குறியதி தேவதை சந்தமுன் கொளவுப தேசமுன் றந்துபின்
மறைநடு மத்தியின் மத்தியின் வயங்குயி ரக்கர பஞ்சகம். (உஉ)

பிரணவத் துடனுப தேசமும் பிறங்கிய புரிந்துதன் னேக்கினுற்
கரிசுமுற் றொழிந்தொளிர் முத்தனுமக் கவினுறு மலனுழி மேலுந்த
னருள்விரி தலினுயர் சிவாகமத் தவிர்முறை யிந்திர நீலமா
பரசிவ லிங்கமொன் றினையவன் பதிட்டைசெய் தருச்சனை புரிந்துபின். ()

மாபின் வேள்வியுஞ் செயினட்ட வக்கிர முனிவன்
றாமுன் னீளிடர் புரிந்துள சாபமோ சனமாம்
வாத மெய்ச்சிவ ஞானமா மகோததி மூழ்குந்
தாமு மாமவ னுறவொரு தலையெனச் சாற்றி. (௩௯)

அமல னும்விரு பாக்கமா முனிவா னகன்றான்
சமல நீக்குமத் தாபத முனிவான் றனதாட்
கமல மன்புறத் தாழ்ந்தருந் துதிபுரிந் திக் களிந்து
நமல நீப்பதித் தலமல திலையென நயந்தான். (௪௰)

துணிவு கொண்டெழும் வருணன்முன் சூழ்பரி வாரந்
தணிவில் பற்பல பொருட்குலை புபோகிநர் தம்மோ
டணிசி றந்ததன் பத்தினி சகிதனு மனைய
பணித லத்தினும் பிலத்துவா ரத்தின்மேற் படரும். (௪௧)

பிலத்தின் மேல்வரு மவன்முன மருமையிற் பேறு
நலத்தி னத்தரு பாவன மாவன நாமத்
தலத்தி னோர்தடத் தெழுந்தன னத்திருத் தடமுன்
புலத்தின் மேதகு கௌதம முனிதரு புவனம். (௪௨)

அனைய தவ்வழு தேசலிங் கத்தினை தவாசி
தனியொர் முப்பது விற்கிடை தூரத்திற் றன்பா
லனக சானவி யாகுமா தீர்த்தமுற் றடுத்தே
யினிது நித்திய வாசஞ்செய் துறத்தனி யிலங்கும். (௪௩)

தேவ தீர்த்தமென் பெயர்பிர சித்தமா மனைய
வாவி மேற்றன மனைபரி வாரமோ டெழுந்த
சீவ னுதிபன் மாபினத் திருத்தந்தோய்ந் தார்வ
மேவ நித்திய நியதிகண் முடித்தமே னிலவும். (௪௪)

மணியி லிங்கவான் மார்த்தபூ சனைமுறை வயக்கிக்
கணித மில்லுப கரணசங் குலத்தொடுங் காங்கை
பணிச னங்கள்பின் வரச்செலீஇப் பணியணி வேணித்
திணியி ருட்களத் தமுதிறை சினகரத் திருமுன். (௪௫)

தூல லிங்கமாங் கோபுர துவாரத்தி னிருபாங்
கேல வைங்கர னறிரு செங்கர னெனுமப்
பாலர் பைங்கழன் முறைபணீஇப் படர்ந்துகோ புரத்துட்
சால வந்ததி காரநந் தீசர்தாள் சார்ந்து. (௪௬)

படியு றப்பணிந் துட்புகுந் தருள்பெறப் பரிந்து
விடைய ளித்தருள் கெனப்பராய் வேண்டுகொண் டடுத்தாங்
கிடப நந்திதாள் பத்திர விலிங்கநே ரிறைஞ்சி
முடியி னஞ்சலித் தாறிரு முறைவலம் புரிந்து. (சஎ)

இரவி யாவினு மிக்குய ரிமாசலை யெமையாள்
பெரிய நாயகி திருமுனம் பெருகுமன் புய்ப்ப
வருண்மு ளீர்த்தெழ விருவிழி யருவிநீர் வெள்ளம்
சொரிய வுள்ளுறீஇ யள்ளொழிற் றிருவுருத் தோற்றம். (சஅ)

கண்கு ளிர்ப்பநேர் கண்டனன் றண்டெனக் கடிதே
மண்கு ளிர்ப்பவீழ்ந் துயிருணர் வொழிபர வசனு
யெண்கு ளிர்ப்பவா னந்தவா ரிதிமிதந் தேறிப்
பண்கு ளிர்ப்பநே ரெழுந்துநின் றின்னணம் பரவும். (சகூ)

அகில மீன்றரு ளன்னையே யறிவிலாச் சிறியேன்
றகையின் மைந்தர்க்கே நிர்க்கதி நினைந்துளந் தயைகூர்ந்
தகவு ருதளிப் பதிலனைக் கார்வமே லென்ப
புகலி லேழைநான் புகல்வதெ னென்றெதிர் போற்றும். (ரு0)

வேறு.

மலப்பகை யொன்றே சீவர் மாட்டொரு வாது டற்றுந்
தலைப்பகை யதனை மாற்று தலைத்தலை யரவ கிந்தா
மலைத்துமென் முளங்க முத்தம் மலவிருள் வடிவே தான்கொண்
டலைத்தென நெறித்தொப் பெல்லா மசற்றுகா ளகம் போற்றி.(ருக)

இருண்மல வெப்ப நீக்கி யின்னருட் டண்மை யாவிக்
கருள்வது தெரிக்கு மெண்ணு ளவிர்மதி யளிகம் போற்றி
தருமலக் காடு லர்த்தித் தகித்துமேன் ஞானப் பைங்கூழ்
பெருகிய வமுதம் பெய்து பேணுமுக் கண்கள் போற்றி. (ருஉ)

துக்கதுர்க் கந்த நீக்கிச் சுகமெனுஞ் சுகந்த மோந்தே
யொக்கவா ருயிர்முற் றுய்வா னுயிர்ப்பெழு நாசி போற்றி
தக்கசொல் லமுத நாதன் றடஞ்செவி வழியே யுள்ளம்
புக்குத ராண்டப் பைங்கூழ் போற்றெழிற் றிருவாய் போற்றி(ருங)

சமர்புரந் தகித்த மூரல் சமழ்ப்பவாங் கவற்கும் பேரின்
பமைவிலா ரமுதம் வாக்கு மணிமணி முறுவல் போற்றி
நிமலனே காந்த னாக நிகழ்த்துப தேச வாய்மை
யமுதுல குய்யமடுக்கு மஞ்செவித் துணைகள் போற்றி. (ருச)

தெண்ணிறை மதியான் ஞான தேசமுற் றளித்த தேற்றுந்
தண்ணிறை மதிமு கத்தின் சயம்பிர காசம்போற்றி
வண்ணவான் மடிமு லைப்பான் மானமெய்ம் முகநிறைந்து
கண்ணிரு மதகிற் பாயுங் கருணையா ரமுதம் போற்றி. (௫௫)

உருவக டோறும் வெவ்வே றுயிர்க்குயிர்க் குயிர்தா னேயாந்
தருணமங் கலப்பூண் டாங்கு தன்னிகர் கண்டம் போற்றி
யருள்பா வபர ஞான மாருயிர்க் களிப்பப் பூரித்
திருமணி நீல மூடி யிசைத்தபொற் றசும்பு போற்றி. (௫௬)

ஆயிர கோடி யண்டத் தாவிமுற் றெவ்வோர் சூலின்
மேவிய பெற்றுஞ் சற்றும் விகாரமி லுதரம் போற்றி
தாயசிற் றுதாத் தாவித் தொகைவினைப் பிணிக்கு மாற்ற
லோயிருள் புறத்தி னேடு மொழுக்கம்போன் றுரோமம் போற்றி.

இருதய கமலங் கீழ்கின் றெழும்புநீர் நிலைய வாவி
மருவு*மா வர்த்த மேயாம் வலம்புரி நாபி போற்றி
புரகரன் சேமத் தேரிற் பொலிகடி தடச்சீர் போற்றி
யிரதமே லாம்பை யாக வியைகவா னிணைகள் போற்றி. (௫௮)

பருமுழைக் குடைந்து கீழ்வீழ் பந்தினைத் தாந்து சேய்போ
லருணனி றுத்தி வைத்தாங் கவிர்முழந் தாள்கள் போற்றி
யிருவரால் வளைப்பு வெள்ளத் திலங்கனேர் கணைக்கால் போற்றி
பெருகெழில் முதிர்சம் பீரம் பிளவுசெய் பாடு போற்றி. (௫௯)

ஆமையொவ் வாமை மாமைக் கைந்தொடுந் தியும்மி னித்தும்
† போமெனப் பலகா ளேக்கும் புறவடி விரல்கள் போற்றி
தாமறை யுபநி டங்கள் சுமந்திடப் பெருத ரற்றத்
தேமிக்கன் புள்த்தி லங்குந் திருவடிக் கமலம் போற்றி. (௬௦)

உரைசெயி னகிலபோத முடனளித் தீடு நல்கும்
பெரியநா யகியென் றேதும் பெருந்திரு நாமம் போற்றி
கிரிசைநின் னருளி னல்லாற் கிட்டரு மமுத நாதன்
றிருமுனுற் றருண்ம தித்தல் சிறியனேற் குறவ தன்றோ. (௬௧)

---

* ஆவர்த்தம்-நீர்ச்சுழி., † போம் என்பதில் விளைவிசை ஒதாந் தொக்கது "செப்புதற்காமெனின்". என்பதிற்போல்.

சேயவரை யணிய ராகச் சேர்ப்பது தந்தை பாங்கத்
தாயருட் கடனே யேழை சாற்றியும் பிழையி ழைத்தேன்
றீயவெஞ் சாப நோயாற் றியங்கிய சிறிய நாயே
னுயவிப் பிழையு மாற்றி யருடியா லன்னை யன்னே. (௬௨)

என்றுமுன் றுதித்துப் பல்கா லிறைஞ்சியா ரருள்பெற் றேகி
மன்றலுன் றிகழி வேணி மந்திர நாதன் கோயில்
சென்றுநந் தீசபாத தெரிசன முறைசெய் துட்போய்
நின்றொளி ரமுத ரூப நிறையருட் குறிநேர் கண்டான். (௬௩)

கண்டனன் காண மொன்றுங் கண்டிலன் றன்னைக் காணான்
றண்டெனப் படிந்தா னந்த சாகரந் தனிதி ளைத்துக்
கொண்டெழு சிவானு பூதி கூர்பர வசனா யொன்றிப்
பண்டுணர் வங்கு ரிப்பப் பைப்பயக் கரையி வர்ந்தான். (௬௪)

அண்ணலின் னமுத மேனி யம்பகங் குளிர நோக்கி
யுண்ணெகிழ்ந் துருகச் செங்கை யுச்சிமேற் குவிய நேர்நின்
றெண்ணரும் பிறவி தோறு மெய்பெருந் தவம்பு ரிந்தேன்
கண்ணெதிர் காணப் பெற்றேன் கருணையா ரமுத ரூபம். (௬௫)

எனமுனந் துதிய னேக மிரைத்தடிக் கடியி றைஞ்சி
மனமுவந் தமுத லிங்க வரதனுக் காதி சேடன்
புனைதிருப் பணிக ளோடம் பொன்மணி யணிக ளாதி
நனிவிளை விலங்க ளாதி நல்குபு பெரும்பே றுற்ற. (௬௬)

அருட்டிறன் முற்றுங் கேட்டாங் ககமிரு வகையன் புந்தப்
பொருட்டிறன் முற்று மீட்டிப் புனிதமா சியாக மாதி
தெருட்டெரி ருருத்ரி ராதி செபமகா வபிடே காதி
மருட்கெடு நிவேத னாதி வயங்கவா கமநூன் மாண்பால் (௬௭)

போற்றுமா பூசை மாசிப் பூரணை யாய வந்நா
ளோற்றிவ ரமுத நாதற் கியற்றுபு வேண்டு கோட
லாற்றினன் பதிநூ லோதி யாய்ந்தமைத் தன்பின் வாய்மைத்
தேற்றுவிப் பிரர்க்குத் தானந் திறப்பட மகிழ்ந்த ளித்தான். (௬௮)

இன்னண மரபி னுளு மியற்றியத் தலமி வாச
மன்னுறக் காலந் தோறும் வந்தவந் தமுத நாதன்
றன்னடி பணிந்த மர்ந்து சாருநாட் பிதுர்த்தி னின்று
முன்னெழீஇப் போந்த வாவி முதுதட மதனி லேகி. (௬௯)

சாலைநான் மரபிற் கோவிச் சாற்றுறும் வேள்வி யொன்று
மாலற வியற்றி யார்வ மலிதிருப் பணிகள் பல்ல
காலொளி யணிகள் பல்ல கவினுறப் புரிந்த ளித்து
வாலிய வமுத நாதன் மாபூசை மேன்மேன் மல்க. (எ0)

புரிந்தெதி ராண்டு மாசிப் பூரணை நாளி லன்ன
வாந்தரு பூசை முற்றி மறையவர் வெறுப்ப நல்கிப்
பரிந்தெதிர் நோக்கி யந்தப் பார்ப்பனர் குழாத்தை யென்பா
லாந்தை செய் சாப நீக்கி யருண்மினோ வென்று தாழ்ந்தான். (எக)

வேறு.

ஆங்கது வினவிய பனவரெலா மார்கலி நாயக கேண்மதியா
லீங்கமு தேசசு தரிசனநிற் கெப்பொழு தெய்திய தப்பொழுதே
நீங்கருந் தீவினை யாவுமுட னீங்கிய மாமுனி சாபவினைத்
தோங்கழி பாக்கினி வேண்டுவதென் றுயவ றுயினை நீயெனவே. (எஉ)

ஓதின ரோதுமச் சொன்முடிமு னும்பரி னெம்பெரு மானருளா
லேதறு மேற்றிசை காவலகே ளெம்முன மெய்திய வப்பொழுதே
யேதமு னியற்றிய சாபமொன்றே யெப்பவத் தொப்பறு வெய்யிடருந்
தீதற முற்றெருங் கற்றனவாற் றிடமிது நின்மல னுயினைநீ. (எங)

இன்னினி யெண்ணிய காமியமுற் றெய்துபு வாழ்ந்திருந் தீற்றினினைஞ்
சின்மய ரூபமெய்ஞ் ஞானமுறீஇத் திகழ்பர மோக்கமுஞ் சேர்கவெனாத்
துன்னரு மின்னமு தொழுக்கெனவே தொடர்புற வெழுந்தன துமொழியப்
பன்னக நீரித னிருசெவியாற் பருகின னருகினன் பாடினனே. (எச)

ஆடின னோடின னீடியபே ரானந்த வாரிதி மூழ்கியெழுந்
தீடிரி பீடைகள் சாடியெளி யேனையு மென்றுகொ ளத்தகுமோ
பீடிரி தீவினை புத்தியுறப் பேணிநின் றாற்றிய பீழையினேற்
கேடவிழ் சுவன்னக வேணியமு தேசனிங் கருளிய தென்புகல்கேன். (எரு)

எந்தைசெ யாரரு ளென்றாமோ வெத்தகை யோர்க்கு மியம்பரிதென்
றந்திலவ் வம்புதி நாயகனவ் வமுதலிங் கேசன்மெல் லடிக்கமலந்
சிந்தையுஞ் சென்னியுந் திகழ்தரமுன் றிருத்தக வீழ்ந்தடிக் கடிபணிந்து
முந்துபவஃ றதிபுகன் றரிதுசெலீஇ முனமிரு கண்டரு டனையனவன். (எசு)

நிறுவிய வருட்குறி யவாசியினி னிலவுதன் பெயரினி லோரிலங்க
முறுவிதி வழியினிற் பதிட்டைபுரிந் துளமிகு மனியுறப் பூசனைசெய்
தறிவள மமுதலிங் கேசனடி யமைந்துறப் புறம்புகுந் தகமுழுதும்
பறிகொடுத் துழுமவன் சுவாசிரய பாதலம் போந்தமர்ந் திருந்தனனால். (எஎ)

ஆதலந் தனிற்சிவ சிந்தனையோ டனைத்தையுஞ் சிவமெனக் கண்டமையும்
பாசிவ ஞானமொ டமர்ந்தனனைப் பனிக்கட லாசைவிட் டொழிசாபம்
வருபயங் காவுரு வாயட்டா வக்கிர மாதவற் றொடர்ந்தன்று
லொருவரு மனையவெஞ் சாபத்தீ யுருவினை யெதிர்தெரிந் திதுவென்னே.()

எனநனி கருதிமெ யுணர்ந்தன்றே னெத்தகு பாதக வினையாவுந்
தனதெலை புகுமுனந் தொலைத்தின்பே தருவது சேகர வடவியென [தாங்
மனனுறத் துணிந்தொரு நொடியாங்கே வந்தறன் மூழ்கிவெண் ணீறணிந்
கினிதெழுத் தைந்தெணி யமுதேச னிணையடி முறைபணிந் தெடுத்தேத்தி.

அமுதலிங் கேசபச் சிமபாகத் தருட்குறி நிறுவியாற் றினிற்பூசித்
திரிபயங் காவுருக் கொடுமுன்சா ரிடர்முழு துடனற விளிதாங்கே
நிமலமந் திரமுதல் வனைநாளு நீடளி நீடளி யோடிறைஞ்சி [னா,
விமலமெய்த் தவமுதல் வளர்ந்தோங்க விழைந்தமர்ந் தனனெனு முனைமே

அயன்மக னந்திசே வடிதாழ்ந்தெம் மண்ணலின் வருணன்மார்க் கண்டேசற்
கியலுறு தென்றிசை யிலிங்கநீஇ யினனென வுரைத்தனை யம்முனிவ
னுயும்வழி யருடரு சிவலிங்க முற்றிவ ணிறுவிய வுதன்வாய்மை
மயமற வருளுதி யோவென்ன மறுவலு மறுவறு நந்தீசன். (அக)

கடிமல ரடியிணை முடிகொண்டு கனியளி யொடுதொழு தருள்கென்ற
படியருள் கதைபக ருறுமென்று பழமைசொன் முனிமுனி குலமுன்பு
கொடிதரு நிவணரு ளியவிந்த நுவல்கதை வினவினர் புகலன்பர்
வழிவொழி பிகநல முழுதுண்டு மருவுவ ரிணையறு பரவின்பே. (அஉ)

வருணன் சாபமோசனச் சருக்கமுற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்—ருகூகூ.

# மார்க்கண்டேயச்சருக்கம்.

சிந்து பூப சாபமோ சிந்த காதை யோதினங்
கந்த னொரு மாமிரு கண்டு குனு மாவன
மந்தி பேச சேவையு வந்த பேறு கேளென
நந்தி னாத சீரு ணந்தி நாத னேதுமால். (க)

### வேறு.

வருதிசனற் குமாரமே வளர்குரவ பரம்பரையின்
மருவுமழ வுருவகுரு மணியொன்று வந்துதிப்பப்
பெருகியமா தவம்வாய்ப்பப் பேணிவளர் பெருஞ்சிறப்பி
னொருவரிய திருவெண்கா டெரிகிலத் தொளிர்தருமால். (உ)

என்றுரைத்த பின்னுரைவா யெழுமுனெழுந் திணையடிதாழ்ந்
தொன்றுரைக்குஞ் சனற்குமா னும்பர்மணி முடியுரிஞ்சிக்
கன்றுறச்செய் மென்கமலக் கடிமலர்ப்பூங் கழலெந்தாய்
நன்றுரைத்த குருமணிதா னமதுபரம் பரைமணியேல். (௩)

அனையதிருத் தனையமணி யவனியிடைத் திருவெண்காட்
டினிலுதித்த காரணமென் னிளம்பருவ முதுகுரவப்
புனைமணியின் செயல்யாது புகன்றருளி மேலெடுத்த
தினிதருடி யண்ணலென் றிறைஞ்சுதலு நந்தீசன். (ச)

வினாவிறு கனிநன்று நீவேட்ட படிபகர்து
மினியசிவா கமமிருபா னெட்டினுளுஞ் சாரமதா
யனகருரு முனிக்கமல னருளியதென் பதுதெரிபேர்
புனைரௌர வாகமத்திற் புகல்படலம் பலவவற்றுள். (ரு)

பரவருஞ்சா ரார்த்சாரம் பாவவிமோ சனபடலம்
வரன்முறையப் படலமிசை வளர்சிவ ரத்தினமா
யருள்பதியு முத்தமராழ்ந் தாழ்ந்துடனேக் குறநோக்கக்
கருதருமெய்ப் பொருள்விரித்துக் காட்டுபெருஞ் சிறப்பமைந்து. (௬)

தொகையுறவோர் பன்னிரண்டு சுலோகத்தைந் திலங்குமது
புகலவருஞ் சிவஞான போதமெனுந் திருநாமந்
திகழ்தருமென் றுபதேசத் திறத்தினரும் பொருள்விரித்து
நிகழவரு ளினன்கல்லா னிழலமர்பூங் கழலொருவன். (எ)

ஆயதிரு வருண்முறைநிற் கார்வமுற யாமுன்னு
ணேயமிகு சமக்கார நிருவாண தீக்காதி
தாயவகை புரிந்தளிப்பத் தோமறுநீ யாமதனைச்
சேயமர்சத் தியஞான தெரிசனியென் பெருமுனிக்கு. (அ)

தந்தனையம் முறையனைய் தவமுனிவெம் பவமுனிபு
வந்தனைசெய் பரஞ்சோதி மாமுனிக்கீந் தனனிதனு
ளிந்தனையில் கல்லால நிழற்பரம குரவசிவ
சிந்தனைசெய் பரம்பரையென் றிறனமையப் பெற்றனம்யாம். (௯)

பாவருமிக் கைலாய பரம்பரையா வுலகினிடை
மருவிவளர் தரப்பெறுக மன்னுயிர்க ளின்னறரு
மிருண்மலநீத் தருணெறிசென் றின்புறுகென் றெம்பெருமான்
றிருவுளம்வைத் தமர்ந்தனனிச் செயலிவ்வா றிவணிகழ. (கo)

பண்ணிலவு தமிழ்வேதம் பரவுபெருஞ் சிறப்பினமர்
மண்ணுலகிற் றூங்கானை மாடமெனுந் திருக்கோயில்
கண்ணிலவு திருப்பெண்ணா கடமெனுஞ்சீர்த் திருப்பதியி
னுண்ணிலவு மொருவர்பரா யோத்தமபுண் ணியர்சிலர். (கக)

இவர்பெயரச் சுதரெனமுன் னிலகுகளப் பாளரிவர்
தவமகிமை யாமுமுறை தரலரிதில் லறத்திவர்வாழ்ந்
தவமறநன் மகப்பேற்றி னூர்வமுறீஇத் தமக்கென்று
மெவமகலுந் தீக்காதி யாவையுஞ்செய் குலகுரவன். (கஉ)

திருத்துறையூர் நகர்க்கதிபன் சிவத்துவிசர் குலத்தலைவ
னருத்திவளர் சிவாகமமே யருமறைமுன் னூலனைத்துங்
கருத்தொருமித் தோர்ந்துணர்ந்து காட்சிநிறை காரணத்தாற்
றிருத்துசக லாகமபண் டிதநாமச் சிறப்புடையோன். (கங)

ஆயவரு ணந்திசிவா சாரியனை யடுத்திறைஞ்சி
நேயமலி சங்கருத்தை நிகழ்த்தியவன் சொன்னெறியே
தூயசிவ தருமமெலாந் தொகப்புரிந்து மகப்பேறு
சேயதனை தணித்தாகத் திறத்தான்மீட் டெங்குரவன். (கச)

அடிபரவிப் புகன்றமைகேட் டருமறையிற் கோதிரித்து
வடிதமிழ்மா மலைமுறையை மற்றனைய சிவகுரவன்
கடிமலர்தூ யருச்சித்துக் களப்பாளர் தமைநோக்கி
நெடியதிருக் கயிறதனி னீவிர்ந்து சாத்துகென. (கரு)

அச்சுதக் களப்பாள ரம்முறையி னம்முறையி
ரச்சுகயத் தெடுத்திமைய நங்கையொரு பங்கனையுள்
வைச்சுரிய மூவரையும் வழுத்தியெளி யேற்கினிய
மெய்ச்சுதனல் குகவென்று வேண்டிவகிர்ந் திட்டனரால். (கசு)

அனையதிரு வடங்கன்முறை யதனிலவ ரிடுங்கயிறு
தனையடையா ளந்தெரிந்து தணத்தியவண் முன்பினெவ்வோர்
பனையிதழ்க ளெடுத்துடன்மூற் படியோலை யீற்றெழுந்து
பினையிதழின் முடிவுறுமப் பெருந்திருப்பாட் டெடுத்திசைப்பார். (கஎ)

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினே டுள்ளினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையென். (௧௮)

பெறலரிய காழியருட் பிள்ளை திருப் பாட்டுநிந்த
திறனினைபச் சிவகுரவ சிகாமணியுள் ளுவந்துவியந்
திறையருணின் பான்முழுது மியைந்தனகேள் களப்பாள
நறையொழுகு வெண்காடு நண்ணுதியிக் கணமென்ன. (௧௯)

அருளியவச் சுதர்களப்பா ளரும்வியந்தாங் கன்புகனி
பெருகியதம் பன்னியொடும் பேணு பலபொருளோடு
முருகுமனத் தொடும்புகுந்தொல் வோர்நினமு முக்குளந்தோய்ந்
திருளறுபூ சனைவெண்காட் டிறைக்குநனி சிறப்படைய. (௨௦)

வேறு.

இன்னண நியம விரதநன் னெறியின் நியலுற வாங்கொரு நாளிற்
றுன்னுமவ் வேளாண் குலமணி யாமச் சுதர்களப் பாளர்தங் கனவிற்
பன்னுவெண் காட்டெ மிறைபுகுந் தன்ப பரிந்துநீ யருந்தவம் புரிந்த
நன்னிலை யுவந்தா மின்னுளம் விழைந்த நலனெருங் களித்தலே முறையாம்.

ஆயினு நினக்கிப் பிறப்பினின் மகப்பே றரிதுநின் கருமத்தி னளவான்
மேயதின் னரிய தவம்பழு தாகா விதமொரு புதல்வ னேலக்
கேயுற வளித்து மமைகெனக் கேட்டவ் விருந்தவப் பெரியவர் கிரிசை
நாயக வினியச் செயக மகிழ நாப்பண்வைத் தமர்ந்தரு ணம்ப. (௨௧)

வளியனேற் கொளிய புத்திரப் பேறு நிலாமையா லென்னைகொலோ தங்
களிமக வருள்கி லாமையா லேழை கருத்தினிற் கவற்சியொன் றிலையாற்
றெளிவுற வசியம்பெரி தீண்டுச் செப்புவின் னப்பமொன் றெந்தா
யொளிர்செவிசாத் தியருள்கெனக் கொண்டியும்பர்கோன் றிருமுனமுரைப்பார்.

அகிலமீன் றளித்த வன்னையா ளமர்ந்த வையபல் கோடியா மாவி
நிகிலமு நின்சே யெனல்புதி தன்று ளிசமிதே யாகவு நிகர்வன்
னகிலமர் குருபி ஞயகச் சேயை நனிமிகு காதலா னயந்து
முகிலமரிமவெற் பன்னையு நீயு முனந்திரு நனந்தலை முதமே. (௨௨)

மருவவைத் தொருவா தமர்திரா லனைய மைந்தனே வந்தருண் மயபாற்
குருமணி யாகிக் காழிவாழ் மணிநின் குலமணி செய்மணி குழுத
வருமைவாய் மலர்ந்த வருட்டிரு வாக்கு மர்தம வொழிவதோ வந்தோ
கருமயார்ந் துழலிவ் வேழையா லெனுமக் கவற்சியே கணிப்பற வெழுந்து.

முழுதுமென்னுள த்தைவாட்டுமாவினியான்மொழிவதொன்றுண்டுகொலெ
ன்றுக், கழலிணைதொழலுமுலகினுக்கன்புகாட்டியநடித்தவெண்காட்டெ, மழ
விடைர்காத்தோனன்பதீவேட்டவரும்பொருள்வரும்பதமிதுவே, மழவின்மா
ண்மியநாம்வகுக்கொணுதுனக்குவாய்த்ததென்றருளுபுமறைந்தான். (உசு)

விழித்தெழுந் தனமச் சுதர்களப் பாளர் மிக்கெழு முவகையின் மிதந்தாங்
கொழித்திட லருமந் நியமநன் னெறியின் னொழுகுநா ளுலகெலா முய்ய
வழுத்துசுத் தாத்து வைதசித் தாந்த வாய்மைமாண் சைவமீ வாழ
விழுத்தகு தூய பாம்பரை யருளான் மேதினிமீதினி விளங்க. (உஎ)

திருவருள் பெருக வனையதம் பதிகள் செய்தவத் தெய்விகச் சிசுவா
யருளொளிப் பிழம்பா யவதரித் திடக்கண் டன்னையுந் தாதையு மளவாப்
பெருகுமா னந்த வாரிதோய்ந் தருமைப் பெருந்தவக் குருந்தினைப் பேணி
யானரு ணினைந்து நினைந்துள முருகி யார்வநீட் டினமொடுத் தனைத்தார். ()

இன்னவென் பருஞ்சீ ரருமைபா ராட்டு மிருஞ்செய லின்புறப்புரிவார்
தென்னில முயச்சார் திருவவ தாரச் சிறப்புயர் திருவிழா முதல
பன்னரும் பெருமைத் தினவிழா வனைய பதியினர் கிளைஞர்க ளேனோர்
தன்னிக ருவகை பெருகிய புரிந்து சாதகன்மாதிகள் சமைத்தார். (உஅ)

பல்லுக மொருவா தருந்தவம்பெரிதுபயிற்றினுங்கிடைப்பரும்பொருள்கைந்
நெல்லியங் கனியிற் கிடைத்ததென் றேழைகணீர்முழு கிருமுது குரவ
ரல்லினு நீங்கா வருந்துணை யெனக்கொண் டவிர்மணிப் பணிசிரை யணைத்து
நல்லுறப் பணிந்தா ருயிரினும் போற்று நலனெனவர் நவிற்றுவா ரம்ம. (ஙஂ)

வைதிக சைவ தாபன குருவாய் வந்தருள் புரிந்தெதிர் மறையுஞ்
செய்துற நிறுவி யமர்ந்தனை முன்னாட் டெய்விக சுத்தவத் துவித
சைவசித் தாந்தத் தனிக்குரு மணியாய்ச் சார்ந்தரு ளோபுரி குருமென்
றய்வருள் காழி வாழ்வுடையின் னருமீண் டுதித்ததென் றுவப்புறு முகைம். ()

வழுத்துமித் தூய சேயினைச் சுவேத வனப்பெரு மாளெனு நாமந்
தழைத்திட வழைத்தப் பதியினிற் சின்னாட் டங்கியச் சுவேதவ னேசற்
கிழைத்திடு விசேட பூசனை யாதி யியற்றியா ருள்விடை பெறுபு
மழத்திரு மகவு மனையொடு தம்மூர் வந்தமர்ந் தனர்களப் பாளர். (ஙஉ)

ஆங்கமர் வுழிநன் மாதுலர் தமக்கின் னருண்மக வின்மையி னனைய
தேங்குத லையஞ்சொன் மகவையே தமக்குஞ்சேயெனப்பெறுநசையீர்ப்பத்
தாங்குசோ தரிமைத் துணரிடை வேண்டித் தம்பதிவெண்ணெய்நல்லூரிற்
பாங்குறப் பெற்று சொடுந்தனிச் சேயைப் பரிந்தெடுத் தழைத்துடன் படர்
[ந்தார். (ஙங)

மாதுலர் தமது மனையலங் கார வகையெலாந் தகைபெற மலிவித்
தாதர முந்த நேர்புகுங் காலங் கமர்பெருங் கிளையெலா மடுத்தே
சாதிமங் கலங்கள் பெருகுற நீராஞ் சனம் வளைத் தெதிர்தழீஇத் தைய
வோதகம்புகுந்தவ்வரும்பொருண் மணியையொண் மணிமஞ்சமீதுய்த்தார்.()

ஆங்குளார் தமக்கே யருமையிற் கிடைத்த வருந்தவச் சேய்மணி யாகப்
பாங்குபா ராட்டி யன்னைதா தையைநும் பாக்கியம் பாக்கிய மென்பா
ரோங்குறு முபய குலமணி விளக்கில் வொண்சிசு மணியென வுவப்பார்
தேங்குமிக் கிளைமுன் போற்றிய வனைய சேய்மணி தூய்மணி திகழும்.(௩௫)

அம்மணி யாங்கட் பாலலீ லாதி யமர்ந்துசெ யருட்செய லாதி
யெம்மனோ ரெவர்க்கு மியம்பரி தாக வின்பமீ துறவளர்ந் திடநாட்
செம்மழ லையஞ்சொ *லெனுந்தரா தமருந் திறந்தெரீஇத் தாதைமுற் கிளைஞ
ரிம்மக மணியு மூங்கையாங் கொல்லோ வென்றுளத் தெண்ணமிக்கிருந்தார்.

இவ்வகை யிரண்டாண் டெய்திவா ழிளஞ்சே யேனைய மகாரொடு மேகி
யவ்வருள் பெருகும் வெண்ணெய்நல் லூரி னணிமறு கிடைவிளை யாடித்
திவ்விய மேனித் திருவொளி யெழுந்து திகழவீற் றிருந்திடுஞ் செவ்வி
யுய்வரு டருமிக் கயிலையின் றேகி யொண்மலை யாசல முனிபால். (௩௭)

அளவளா யினிய நண்புரை யாடி யமர்ந்துபி னிவண்வரக் கருதி
வளனுலாந் தெய்வ வெண்மணி விமான மருவிவிண் வழிச்சென் றுழொருவன்
பளகறு மவனின் னருள்பெறுசீடற் பணிந்தருள் பெறுபரஞ் சோதி
கிளர்தரு மவனிவ்விமானம்வீற் றிருந்து கெழுமுவா னெறிப்புகுங் காலை.()

வெண்ணெய்நல் லூரினவ்விளஞ் சேய்தான் வீற்றிருந் தொளிமறு கதனேர்
விண்ணிலம் மானஞ்செலவொழிந் துறவுண் மிளிர்பரஞ்சோதிமாமுனிவன்
றுண்ணென வியந்தெம் முளப்படியாண்டுந் தூரிசற விரைசெலுந் தெய்வக்
கண்ணகன் விமானந் தகையுறீஇ நிற்குங் காரண மென்னெனக் காண்பான்.

திசைகளொன் பானுந் தடைசெயா நிலைமை தேர்ந்துபி னதோமுக னாகி
நசைதரு புவியை நோக்கித்தன் விமான நன்னிழ றேய்வுறப் பெற்றுந்
திசைதரு மிளஞ்சே யொன்றொளிப் பிழம்பா யிலங்கல்கண் டினையசேய் வி
மான, மசைவறப் பிணித்த பெருவட நிழல்போ லவிர்வதே யல்லதொன்
[றில்லை. (௪௦)

---

* எனும்-இடைக்குறை.

என்றுளந் துணிந்தாங் கன்புமா றருளு மின்புமற் புதமுநின் றியக்கச்
சென்றொளிர் விமானத் தோடிமம் மறுகிற் றிரூர்வெருண் டோடவு மசையா
தொன்றொளி விரியத் தனியமர் சேய்பா லுற்றுநேர் நோக்கியவ் வொருசேய்
தன்றனிக் குருவாஞ் சத்திய ஞான தரிசனி யுருவெனத் தயங்கும். (சக)

பெருகுமற் புதநேர் கண்டினி தெடுத்தப் பிள்ளையி னொள்ளிய மேனி
மருவிய துகடன் றுனையாற் றுடைத்து மடியில்வைத் தணைத்துடன் மகிழ்ந்தே
பருளின்மூழ் குவித்தாங் கறன்முழு குவித்தின் பளிக்கும்வெண் ணீறுமெய்
பணித்து,திருவருட்சத்தியோ திருவாணதீக்கையா நோக்கமுற் றளித்தே. (சஉ)

தீக்கைசெய் யுழியா சிரியனச் சீடற் சிவமக வாக்கிருஞ் செயலுக்
கேற்கநன் னாம காணஞ்செய் முறையா லெப்பெய ரிடுதுமென் றெண்ணி
நோக்குதன் குரவன் சாயையே போலு நோன்மையாற் றந்தைபேர் மைந்தற்
காக்குதன் மாபான்மெய்கண்டானெனவேயனைய தன்குரவன்போமைத்தான்.

புனிதவத் துவித நிகழ்சிவ ஞான போதநூற் பொருண்முழு தமைய
வினிதுப தேசித் திதனைநீ மைந்த விருந்தமிழ் மொழிபெயர்த் திதற்கோர்
தனியுரை வார்த்தி கம்மெனும் பெயராற் சாற்றுகென் றருளிமே லனைய
தனியொளிர் சேயை யுடன்கொடு மேலு நசையெழ வாங்கணித் தேகி. (சச)

நிறைநிக பொருகோட் டைந்துகைப் பொல்லாப் பிள்ளையார் திருவடிக் கமல
மறைமல ரனைய பிள்ளையோ டிறைஞ்சி நயத்துதி பலபுகன் றெதிர்நின்
றிறைவனே யடியா ரெண்ணியாங் கருளு மெந்தையே யிந்துசே கரனே
மறைசிவா கமார்த்த சொருபனே யிந்த மைந்தனின் னடைக்கலமைய. (சரு)

நாமிக முதனு லேழ்சிவா கமமிக் கான்முனை நுருத்தமைந் திலங்க
மாமிக வருள்கொன் றத்தனிச் சேயை நேருற விருத்திநீண் டனைய
நாமிகன் முனிவ னீங்கின னங்கத் தோன்றலே யென்றிப முகத்தோ
னாமிக வாத சிவாகம முழுது மினிதரும் பொருள்விரித் திசைக்கும். (சசு)

இன்னண மாங்க ணிபமுகத் தொருவ னிருங்குரு சிகாமணி யாகித்
தன்னமர் தனியி னன்னமெய் கண்ட தனையன்முன் வினவிடையாதி
நன்னருற் றிடப்போ திந்திங் காலங் காயகன் றளிப்புற நளிலி
தன்னினீர்கொளுமோர் தையலக்கோயிற நளிமெழு மொலிமெசவிச்சார. (சஎ)

அந்தவரி நோக்கின் றுற்றுநோக் கினளாங் கனையசேய் தன்னையே கண்டா
ளித்தனிச் சேயை மூங்கையென் றந்தோ வினவெதன் றந்தைதாய் முத
லித்தக மொழிபற் பலபுகன் றீண்டு விளங்குமீ துணர்ந்திலர் போலு [லோர்
மித்தகையவர்க்காங்குணாந்துநா மென்றுங்கேகினள் *செய்மையிற்கண்டாள்.

---

* செய்மையிற்கண்டாள்-வினையாலணையும் பேர்.

ஏகியாங் கவர்மு னென்னைகொ ணீர்று மிளந்தனிச் சேய்மணி மூங்கை
யாகிய தெனத்துன் புறலொரு கோடி யருண்மொழி தருவதின் றறிந்தேன்
மீகெழு பொல்லாப் பிள்ளையார் கோயின் மேவிநீர் காண்மினென் றனள்வ
லோகைவா சகந்தஞ் செவிப்புகு முன்ன மோடிபு தாதையக் கோயில். (௪௯)

முன்னுறச் சேய்த்தாய் வரும்பொழு தாங்கு மொழியொழு மொலியெதிர் கேட்டார்
பின்னராங் கொருவ ரிலாமையுங் கண்டார் பெருந்தகைச் சிகாமணியும்
பன்னுசீர்ப்பொல்லா மணியுமே யுடனுய்ப் பரிந்துவீற் றிருத்தலுங் கண்டா
ரொன்னெனவணித்தாயேகினர்முன்ன ரெழுமொழியிலாமைபின்கண்டார்.

ஆங்கவர் வரவு மாகம முடிவு மமையமொத் தமைந்ததோ வயலார்
பாங்குறி ளேதப் படாதெனு மரபைப் பாதுகாத் திடுமுளத் தாலோ
தீங்கற முழுதுந் தெருள்கென வுளங்கொள் செய்தியான் முற்றிய திறனோ
வீங்குநாளடைவிற்றனித்துணர்த்துதுமென்றெண்ணியோயாதெனவுணை
[ரோம். (௫௧)

வேறு.

பொல்லா மணியுஞ் சேய்மணியும் புகலு மொழியொன் றின்றியமர்
வில்லார் தோற்றங் கண்டுவகை மேன்மேற் பெருக வீழ்ந்திறைஞ்சி
நல்லார் பரவு மிபமுகத்தெந் நாதா வேதா கமப்பொருளே
யெல்லாமுணர்ந்துமெந்தாயெம்மிளஞ்சேய்மவுனமிரித்தனையோ. (௫௨)

மாமன் மலைப்பாம் புருவொழித்த வாத சாத வள்ளாலோ
சேம நிதியே நின்றிருமுன் றிருவாய் முதலிற் றிறப்பதெனுந்
தேமன் விரத நெறியின்றுன் றிருமுன் றிருவாய் மலர்செய்ய
யூம னேவென் றுளங்கொண்டோ முண்மை யுணரு முணர்விலோம். (௫௩)

என்று துதித்தா ருட்சேயை யெடுத்தா ரணைத்தா ரின்புற்றார்
நன்று மியன்மேற் கொண்டுவந்தார் நனுகுங் கிளைஞர் நற்பதியோர்
துன்று மோகைப் பேரோதை துதையச் சூழத் தம்மனையிற்
சென்று மணியா தனத்தினைய சேய்வீற் றிருப்ப நேர்பணிந்தார். (௫௪)

ஈன்ற பொழுதிற் பெரிதுவந்தா ளிளஞ்சேய் சான்றோ னெனுமகிமை
தோன்ற நேர்கண் டின்புற்று ருக்கி யெடுத்தா ளேக்கமைந்தா
ளூன்று மன்பான் மார்பணைத்தா ளுச்சி மோந்தாண் முத்தமிட்டா
ளான்ற தாய்செ யருஞ்செயல்க ளறைத லெளிதோ வம்மம்ம. (௫௫)

நாளு நாளு மப்பதியோர் நவிற்றற் கருமிவ் வற்புதங்கேட்
டாளுங்குலதெய் வதமிதுவென் றடுக்கு மேனைப் பல்பதியோர்
கேளிர் முதலோர் வந்துவந்து கிடைத்துக் காண்டன் மாத்திரையே
மூளு மிடர்நீத் திட்டமெலா முன்னி யாங்குப் பெற்றுவப்பார். (௫௬)

மதிவே ணியனே பொருளென்னும் வாய்மை யுணர்ந்து மனந்துணிந்த
வதிதீ விரசத் தினிபாதத் தமைதி வாய்த்த வுத்தமர்கண்
முதிர்மா மனவா சகங்கடந்தார் முதலோ ரடுத்துச் சூழ்ந்திறைஞ்சத்
திதியா ரருளைக் களித்துரிய தீக்கை திகழ்பக் குவநோக்கி. (ருஎ)

அருள்செய் குரவன் மொழிப்படியே யருமைத் தமிழின் மொழிபெயர்த்த
பொருள்செய் புனித சிவஞான போதந் தனைவார்த் திகமுடனே
தெருள்செய் தருளி யவ்வடியார் செறிந்து சூழ நாப்பணமர்ந்
திருள்செய் மலநீத் தத்துவித வின்பே தருமச் சேய்மணிதான். (ருஅ)

இவ்வா றனைய மெய்கண்ட வின்ப மணிநா டொறும்பொல்லாக்
கைவா ரணமா முகத்தெந்தை கழல்போற் றமைந்து முதனியம
முய்வா ரடைப்பப் புரிந்தமர்ந்தாங் குறவீற் றிருக்குஞ் செயல்கேட்டார்
சைவா திபர்தங் குலகுரவர் சகலா கமபண் டிதர்பாங்கர். (ருகூ)

ஆக மாதி யருணூல்க ளமைய வோது மன்பர்சிலர்
சோக மாறி யமைந்துமனந் தூய்மை யுறுமா சிவஞான
தாக மாகி யதுபுணர்த்துந் தன்மை யவர்பா லின்மைதெரீஇ
யூக மாக வெண்ணெய்நல்லூ ருற்றார் காணப் பெற்றாரால். (சுய)

முன்ன ரமர்சத் திநிபாத முதியர் பெறும்பே றுற்றாங்கு
நன்ன ரருளம் மெய்கண்ட நாதன் கழறாழ்ந் துடன்சூழ்ந்தார்
பின்ன ரனைய திருத்துறையூர்ப் பெரிய ரவர்சார் புணர்ந்துடனே
யின்னர் தமைமீண் டழைத்துறுகென் றேயி னார்மா ணவர்சிலரை. (சுக)

அவரு மனைய ராயினர்பின் னருஞ்சிற் சிலரை யனுப்பினரச்
சிவமா மறையோ ரன்றவருஞ் சென்றாங் கவ்வா றுடனமர்ந்தா
ரிவர்மா ணாக்க ரெல்லாரு மிவ்வா றடுத்து வெண்ணெய்நல்லூர்த்
தவர்போற் றியன்மெய் கண்டமணி சரணே சரணாச் சார்ந்தமைந்தார். (சுஉ)

தம்மா ணாக்க ரெல்லாருந் தமைவிட் டேகத் தனித்தமரு
மம்மா தவரீ தென்கொலாமை யடுத்து நமந்த களப்பாள
னம்மா ரருளாற் பெறுசிறுவ னவிற்றுங் குசலை யினுமிரம்பா
னெம்மாண் பினனென் றடுத்தமர்ந்தா ரெம்பான் முழுதோர் மாணவகர். ()

நன்று நன்று கலிப்பெருமை நவிற்றற் கரிய தேயென்பா
ரொன்று முணர்ச்சி நுண்ணியர்சென் றுற்ற தாகித் திடற்பாற்றே
சென்று காண்டு மென்பார்நஞ் சீடன் சிறுவ னெதிர்புகுந்து
நின்று காண்ட னம்பெருமை நிலைமைக் கடுக்கு மோவென்பார். (சுச)

இவ்வா றனைய சிவமறையோ ரெல்லை கடந்து முறுகிவளர்ந்
தவ்வா ணவவல் லபஞ்சாயு மமய மணித்தா தலுக்கிசைய
வொவ்வா வுரைகள் பலபுகன்றுங் குறலே துணிந்தா ரொருதலையா
யெவ்வா யுறினுந் தாமுனஞ்செ லெழுச்சி யணிக ளுறச்சென்றார். (௬௫)

சிவிகை சிதைந்த புத்தகங்கள் செறியுஞ் சகட மச்சொடிந்த
கவிகை முதல முரிந்தபெருங் காற்றுற் சகுனம் பலதடுத்த
குவிகை யினரும் விட்டகன்றார் கூறு மிவற்று மாணவனோ
யவிகை தெளியப் பாதுகையோ டடுத்தா ரனுவுங் குமிழ்தெறித்த. (௬௬)

கருவி கழன்று சிவத்தோடு கலவுஞ் சுத்தாத் துவிதநிலை
மருவும் பெருமை தமக்கணித்தின் வாய்த்த வுணர்த்தாங் குடன்குழும்
பொருள்க ளொழியத் தனித்தேகும் புனிதர் வெண்ணெய்ப் பதிமேவித்
தருகல் லருளே யுருவாயத் தனிமா குரவ சிகாமணிவாழ். (௬௭)

திருமா ளிகைநே ரணித்தாகச் சென்று ரனைய மெய்கண்டா
னருளா னனநேர் புவிநோக்க வமர்ந்து நாப்பண் வீற்றிருப்ப
வொருவாப் பெரியர் திருமுறையேந் தொண்கை யினர்பற் பலர்சூழ்ந்து
பொருளா ரமுதுண் டதன்வசமாய்ப் போற்றுங் கொலுநே ருறக்கண்டார்.

யாமுட் புகினோர் கண்டிறைஞ்சா னிருக்கை யெழாதே யிருக்கைதருவான்
றோமற் றிடநம் வாய்மையினுற் றேன்று மிவனோர் சிற்றலடா
தாமற் புதங்காண் பதும்வேண்டு மதற்கீண் டிதுவே யுபாயமெனத்
தாமப் புறத்தோர் செயல்பிறிதாற் சரிப்பார் போலங் குலவினரால். (௬௯)

அப்போ தனைய மெய்கண்டா னமைந்து சூழு மப்பெரியர்க்
கொப்போ தருமா ணவச்சிமிழ்ப்பி னுண்மை யுணர்ந்து திறங்கேட்டா
ரிப்பேர் மலத்தி னியலென்னே யென்றுங் குரப்பி வினவினயச்
சொற்போ யுறலு மெய்கண்ட தூய மணியாங் கோர்சிறிது. (௭௦)

பொழுது தாழ்த்து நிமிர்ந்திதுவே போலு மெனநேர் பார்த்திடலுந்
தொழுது வீழ்ந்தார் சென்னிமலர்த் துணைத்தா ளுரிஞ்சக் கிடந்தாங்கே
யழுது பொருமி யெந்தாயே யறியாச் சிறியே முற்றுபிழை
முழுதும் பொறுத்தா ளென்றுபல மொழியாற் றுதித்து நேர்பணிந்தார். ()

நேயம் வறந்து திரிசுருங்கு நிலைமைச் சுடர்மிக் கெழுந்தொளிர்ந்தே
மாயு முடனுங் கதுபோல் வளரா ணவமே லெழுவினவி
யோய நிரீக்க ணங்கண்டாங் குடனே யடிவீழ்ந் தெழாமலமர்
தூய சிட சிகாமணியைத் தூக்கி யெடுத்தொண் டைக்கைமுறை. (௭௨)

திகழ மலர்ப்பூந் திருவடிகள் சென்னி சூட்டிச் சிவம்புணர்த்திப்
புகல வருஞ்சீர்ச் சிவஞான போதந் தெருட்டி மூன்புகுந்தாங்
ககல வருமா றெண்மருக்கு முதன்மை யளித்தல் வேழெழுவர்
நிகர்மா ணவகர் சூழ்ந்திறைஞ்ச நிலவு மனைய விளங்குழவி. (௭௩)

திருவார் துறையூ ரருணந்தி சிவனக் குரவ சிகாமணிபாற்
பொருவா வினவுஞ் சிவஞான போதத் தாழ்நுண் பொருளெல்லாந்
தெருள்வாய்ந் திலங்கச் சிவஞான சித்தி யாவென் றுத்தமர்போற்
றொருமாண் வழிநூல் வழியடியா ருடன்கொண் டெய்வான்விரித்துரைத்தார்.

இந்நூ லுடனூர் நன்னூலோன் றிருபா விருபஃ தெனும்புனித
மெய்ந்நூ றனதா குருமணிபான் மேவுந்துதியாச் சிவஞான
முன்னூற் போதத்திருவிழியா முறைசெய் தமைத்தக் குருமணிதா
னன்னூல் சமர்ப்பித் தாங்கொருவா தமர்ந்தார் துறையூ ரருமறையோர். ()

சாற்று மிவர்பான் மறைஞான சம்பந் தருமாங் கவர்பாங்கர்ப்
போற்றும் பெரிய ருமாபதியும் புணர்ந்து தீக்கை யுபதேசப்
பேற்றின் வாழ்ந்தா ரிந்நால்வர் பெயர்சந் தான குரவரென்ப
தேற்று மனைய வுமாபதிபாற் றிகழ்சந் ததிகள் பற்பலவாம். (௭௬)

குலவு மினைய சந்தான குரவர் நால்வர் பெரும்புலியி
னுலக மெவையும் வந்திறைஞ்சி யுய்ந்து வாழ்கென் றிருவருளா
னிலவு கோயில் கொண்டமர்ந்தா னியலீற் றிருக்கின் றுரென்று
மலரு மனைய மெய்கண்ட மணிவந் துதிப்ப மாதவஞ்செய். (௭௭)

பெருமை யுடைமை யான்முனைநாம் பேணி யுரைத்த மேலிளியத்
திருவெண் காட்டிற் கனிமையலி னிற் றிகழ்சீ புரமென் றொன்றதுசீர்
வருதண் டகநா டெனும்பெயரால் வயங்கு மனைய திருப்பதியின்
மிருகண் டருள்சேய் மார்க்கண்ட விமல முனிவந் தடுத்தாங்கே. (௭௮)

தன்றே காவ சானமிலே தணத்தி நீடா யுகந்தருவான்
மன்று டமலற் பூசித்து மன்று தெருதொ டொறும் புரிந்து
னின்று னவனுக் கிறையளித்த நெறியா யுகமுற் றியதுணர்ந்து
குன்று விறலின் மறலியவட் குறுகி முறுகி வளையளியான். (௭௯)

ஓவா தூறுற்று சிவார்ச்சனையி னொருமித் தமர்மார்க் கண்டனெதிர்
வாவா வென்னும் விளிமாற்றம் வழங்க வினையான் விளிமாற்ற
மேவாய்ப் புறச்செ யர்ச்சனையின் றெதிர்நோக் கிலன்மேற் பிதிர்நோக்கத்
தாவாக் கினிசெ னுடல்வெதுப்பத் தன்கைப் பாசம் பிணித்தீர்த்தான். ()

வேறு.

ஈர்த்த பாசமுன் னிடைவெளி நீத்திமா சலைகோன்
றீர்த்த மேனியிற் சிவாக்கியம் போன்மெனச் சேர்த்த
நார்த்த சிந்தையர்க் கெவரெனும் புரியிடர் நணுகா
கூர்த்த வின்பமே யாமெனக் கூறுநா றுணிந்தாம். (அக)

குழக ஞெண்கட லூரிறை பேரருட் குறியைத்
தழுவி யேத்தினன் றனையனுங் கனையனைத் தளரேல்
பழுது தொண்டருக் காற்றினர் கெடுவரென் பான்மை
வழுவில் கூற்றையிக் கூற்றினிற் காட்டுது மைந்த. (அஉ)

என்று வாய்மலர்ந் திறவினம் மறலிவீழ்ந் தினைவா
னன்று தைத்தன னும்பர்கோ னம்பிரான் றன்மே
லொன்று வெஞ்சின மடங்கலான் மடங்கறன் னுடலங்
கன்று வித்தவக் கருமையோர்ந் தருமைமார்க் கண்டன். (அங)

ஐய விப்பழு தெப்பொழு தகலுமென் றடிதாழ்ந்
துய்ய மெய்ப்பழு தொருங்கொழித் தடுத்தவர்க் குதவி
செய்ய முந்துறு சிந்துறழ் கருணையோய் திறம்பா
மெய்ய செய்யபொன் மேனிய வானியல் விமல. (அச)

எனத்து தித்தனு மன்பகே ளிப்புவி யிடையே
மனத்து தித்தபல் வரனெலா மளிக்குமா வனமொன்
றினத்து தித்தபன் முனிவர்சூ ழிடனதா மனைய
வனத்து தித்தவண் பச்சிம வாவியொன் றுளதால். (அரு)

வனை நீருடற் புறத்தழுக் கிரித்திடு மெல்லை
தானும் வேண்டுமோ முழுதுறி னக்கணந் தனிலுன்
மேனி நீன்மைபோ மேலெழின் மேலொளி மேவு
மான வாய்மையா லத்தடநீரினீ யாடி. (அசா)

ஆங்க ருட்சுயம் பமுதலிங் கேசனை யன்பு
தேங்க நேர்தொழு தமர்குநி திரவிவெம் மறலுன்
பாங்க ரெப்பொழு தினுமினி யுறுதசீர் படைத்தே
யோங்கி வாழ்சிரஞ் சீவியா யுறுதிமீ துறுதி. (அஎ)

அனைய தீர்த்தநின் ஞமமே யகிலமும் போற்றப்
புனையு மென்றுருக் கரந்தவா சகமிசைப் பொலிய
வினித வாய்மைதன் செவிபுகுந் துளங்குளிர்ந் தீர்ப்ப
வினைத பும்முனி பணிந்தருள் விடைபெறீஇ மீண்டான். (அஅ)

சூத கானனத் தெய்தினன் றண்ணெனா மேல்பாற்
சீத வாவிதோய்ந் தெழுமுன மலின்மெய் தீர்ந்து
பூத மேனிமிக் கொளியெழப் போந்தமு தேச
பாத வம்புய முடியுறப் பன்முறை பணிந்தான். (௮௯)

எழுந்து நின்றமு துருவநோக் கிருகணீ ரருவி
பொழிந்து பாய்தரப் புரையிலான் புரைந்துள முருகி
வழிந்து சென்றருட் டுணையடிக் கமலமென் மலரி
லழுந்து மன்பினாற் றிருமுனின் றருந்துதி புகலும். (௯0)

சோம ருத்திர வகிலமா நதிபதே சுருதி
நாம வுக்கிர வக்கிரோ சுரபர நாத
பீம சாருவ வனபதே பிரணவ ரூப
பூம ரும்பிர வனேசநின் பொன்னடி போற்றி. (௯௧)

பரசு பாணிய பசுபதே யிரணிய பாகு
வரசு பத்தகா மியபரி பூரண வரத
தரசு கற்பக விரத்தமா லோகபாங் தவபொற்
புரசு காம்பிர வனேசநின் பொன்னடி போற்றி. (௯௨)

வனச நேத்திர குசுமமா பூசித மாற்குத்
தனக ராம்புய சக்கர தாயக சடில
கனக சம்பியா கந்தர கந்தர காள
புனித வாம்பிர வனேசநின் பொன்னடி போற்றி. (௯௩)

அடிய ரெண்ணிய வெண்ணியாங் கருளமு தேச
வடிகொள் சூலசார் மிருகண்டு வம்பிச பால
முடிகொள் வானதி மதிபொதி முக்கண திருவெண்
பொடிகொ ளாம்பிர வனேசநின் பொன்னடி போற்றி. (௯௪)

உலக முற்றுமின் பளித்தினி தோம்பரு ளுரிமை
நலன்மு ளும்பல வரும்பொரு ணிறைசிவ நாமந்
தலைகொ ளாற்றல்வே றெவர்க்குமின் றொருதனக் கேயாய்ப்
பொலியு மாம்பிர வனேசநின் பொன்னடி போற்றி. (௯௫)

என்றிவ் வாதிபஃ றுதிபுகன் றடிக்கடி யிறைஞ்சு
நன்றி கூர்மிரு கண்டுசே யானன ளினத்
தொன்றி முக்கணும் பானுவாய் மலர்த்திட வுவகை
யூன்றி மந்திரேச் சுரனெதிர் தோன்றியீ தருளும். (௯௬)

கேட்டி யாலெமக் கினியமெய் யன்பநீ கிளத்தும்
பாட்டி ருந்துதி யாலெமக் கின்பமே பலித்த
வேட்ட தென்கொலோ பகருதி யென்றனன் விமலன்
றேட்ட மிக்கவன் பின்னரும் பணிந்திது செப்பும். (கூஎ)

பெரிய நாயகி மணாளநின் பிறங்கிரண் டெழுத்தா
மரிய வண்சிவ நாமமா மனுத்துய ரனைத்து
மிரிய நீக்கிமெய்ச் சிவத்துவப் பேறருள் வியற்கை
தெரிய வாய்கிக மாகமந் துணிபுரைத் திடுவர். (கூஅ)

எந்தை நின்பத மன்றியீண் டெப்பொரு ளெனினுஞ்
சிந்தை வேட்டிலேன் றிண்ணமே யேழையேஞ் சிறியோம்
புந்தி யான்மறை யபுத்தியாந் தேயதெம் புத்தி
வந்தி யாதப சாரமேற் புரியினும் வள்ளால். (கூகூ)

திருந்து முற்றுணர் வற்றிலாச் சிற்றறி வுடையார்
புரிந்த செய்வினை நோக்கலென் றுமெனப் பொறுமை
பரிந்து செய்தெமை மருதருள் புரிகெனப் பரவி
யருந்த வத்திரு முனிபுகன் றிறைஞ்சுறு மமலன். (கOO)

வேறு.

வருதியா லரிய தோன்றல் வந்திவண் முந்து நீதோய்
சாசுரின் பெயரி னூலைச் சகமும்போற் றியதின் றோங்க
மருவிமுழ் குறப்பெற் றோர்க்கு வல்வினை யனைத்து நீங்கி
யரியன புத்தி முத்தி யங்கையா மலக மாக. (கOக)

என்றினி தருளி மேலு மின்னுநீ வேண்டிற் றென்னை
நன்றுரை யெனவெம் பெம்மா னமர்ந்துமார்க் கண்டன் கூறுந்
துன்றியா ருயிர்க ளெல்லாந் தோய்ந்துய்வா னின்னொடு முன்னி
னின்றருள் வாமென் றென்று நிலையுதல் வேண்டு மென்றான். (கOஉ)

அடியரே முளத்தெ ழுந்தா னடியமுந் தன்பெருஞ் ஞான்று
மொடிவிலா திருதி யாவிக் குறத்தகு மிடருற் றுறு
நெடிதுற வளர வேண்டு நிமலநீ யருளு கென்றுப்
படியுறப் பணிந்து பின்னும் பரவினன் பானி யம்பும். (கOங)

மைந்தனிற் கனவொன் றேதா மாண்பினை பரோப கார
சிந்தையை யாகி வேண்டுந் திறத்தினி துவகை கூர்ந்தா
முந்தற மெவற்றி னுள்ளு முக்கிய மிதுவே யின்ன
துய்ந்தொளிர் சிவன் முத்த னிலக்கண முணர்ச்சி மிக்கோய். (கOச)

எவ்வகை யுயிர்க ளேனு மிறையுமோ ரிடருந் தம்மா
லவ்வுயிர்க் குறுமை யோம்பி யளிப்பது சீவன் முத்தர்
தெய்விக வியலென் றோதுந் திருந்துநூ லிதனின் மேலா
முய்வரு ளறன்வே றின்மை யுண்மையே வண்மை மைந்த. (க0௫)

சாற்றுமிப் பரோப கார தருமமே பெரிய தென்னப்
போற்றிதி காச மொன்று புகலுதுங் கேட்டி மைந்த
பேற்றினி லுயர்ந்த தேவப் பிரியனோர் விப்பி ரேசன்
றேற்றுமவ் வேதி யற்குந் திருமறு மருமத் தோற்கும். (க0௬)

முன்னிகழ் சம்வா தத்தின் முதுமறை யவனவ் விண்டு
தன்னெதி ருலகில் யாவன் சாற்றுகைம் மாறு நோக்கா
துன்னிய பரோப கார முஞற்றுவ னவன்பா லீச
னின்னரு ளுவகை கூரு மென்றனன் வினவு மாலோன். (க0எ)

நன்றுநன் றுலகில் யாவர் நயந்துதம் பொருட்ட லாம
லொன்றிய முயற்சி யேனோர்க் குஞற்றுந ருதுதா னிற்க
வென்றிவெள் விடையோ னற்றூல் விழைந்ததி ஞவ தென்னை
தன்றனக் கலாமு யற்சி தரினவ ரறிவி லாரே. (க0அ)

தேவர்கண் முனிவ ரேனோர் செய்யருந் தவம னேக
மாவன யாவுந் தத்த மனுபவக் கலதொன் றுண்டோ
நீவிழைந் துரைத்த தொல்லா நிலையதென் றுரைப்ப மாலத்
தாவரு மறையோன் கூறுஞ் சாற்றிய தற்பு தத்தே. (க0கூ)

அகிலநா யகனின் முன்னோ ரஞ்சியோ டோட வாட்டுந்
தகுவிட மயின்ற மாண்புந் தன்பொருட் டென்னை போலும்
மிகவிழைந் தறுநீ கீர வீரைபல் விடருற் றேய்ந்து
மிகவுரு தமுத மத்திட் டீந்தது மற்றே போலும். (ககO)

மலையமா தவனெம் பெம்மான் மணப்பெருந் திருவோ லக்கம்
புலனுறத் தெரிசித் தேத்தும் புனிதவாழ் வையும் விடுத்துத்
தலையற னிதுவே யென்னுச் சமநிலை புடவிக் கீந்த
நிலைமுதற் புரிய னேக நிகழ்ச்சியு மற்றே போலும். (ககக)

சாற்றுப மன்னி யப்பேர்த் தகவனும் பகவன் சார்ந்து
போற்றிய கண்ணற் கின்பப் பூங்கழன் முடியிற் சூட்டித்
தேற்றுபு சைவ தீக்கை திருத்திமெ யருத்தி வாய்மை
யாற்றினிற் புகுத்த தாதி யனைத்துமாங் கற்றே போலும். (ககஉ)

திருமுறை கண்ட சோழர் திறன்மனு நீதி கண்ட
வரசருட் சிபிவேந் தாதி யருட்பெருஞ் செல்வர் செய்த
பரிவெலா மற்றே போலும் பகர்ந்தது நன்று நன்று
சுரர்முனி வரர்மு னின்றோர் தூச்செய வுணர்ந்தி லாய்கொல். (ககங)

என்னுளந் தெரிய வோதிற் றென்றிது துணிந்தேன் பூவின்
மின்னுறை மருமத் தண்ணன் மேதகு பரோப காரந்
தன்னின்மேற் றரும மில்லை சாற்றிய துண்மை யாகு
மன்னது சுவார்த்த முற்று மளிக்குமே விசைப்ப தென்னும். (ககச)

என்றரிக் கனைய விப்பி ரேசனோர்த் தெதிர்ம றுத்தா
னன்றருண் மைந்த விங்ங னவிற்றிய பரோப கார
வென்றிமா தரும மேன்மை விளம்புவ தினியெ னென்றே
வன்றரு ளமுத நாத னருட்குறி யதிற்க ரந்தான் (ககரு)

திருவமு தேசன் முன்செய் திருவரு ளுன்னி யுன்னி
யுருகிய வுளத்த னாயவ் வுறுவர்கோன் மிருகண் டும்ப
லொருவிலான் சூத கானத் துறைந்தருண் மந்தி ரேசன்
மருமல ரடிமுப் போதும் வழுத்திவீற் றிருந்தான் மன்னோ. (ககசு)

வேறு.

வீற்றிருந் தமர்மிரு கண்டருள்சேய் மேலெழு மன்புள முந்தவெழுந்
தாற்றினி லமுதுறை மேற்றிசையோ ரருட்குறி யத்தளி புண்ணிறுவிப்
போற்றியர்ச் சனைதினம் புரிதருமுட் புரிவொடு மச்சிவ லிங்கத்தைச்
சாற்றுப மார்க்கண்ட லிங்கமெனச் சாற்றரி ததன்பெருந் தகைமையென. ()

செங்கையி னொளிர்தரு பொன்புரிவேத் திரப்படை யவனிவை யியம்புதலு
மங்கவை வினவிய சனற்குமா ரனடிகளு மடிதொழு மடியனெனைச்
சங்கையி னொழிவுற வருளுகெனுத் தாழ்ந்திது புகலுவன் பெரியன்னை
பங்கனை யாம்பிர வனேசனெனப் பகர்ந்தனை யெந்தைம னிதுகாறும். (ககஅ)

மந்திர நாயக னெனும்பெயரு மத்தியின் மத்தியின் வழங்கினையான்
முந்தபி தானத்தின் பரியாய மோவிது வேறெனி லிடுகுறியோ
சிந்தைசெய் காரணப் பெயரேயோ திகழ்கிப மேலதை விரித்தெளியேன்
புந்தியி னயிர்ப்பற வருளுகெனப் போற்றினன் முதைதன் புதல்வனரோ ()

வினவிய வேத்திரப் படைக்கான்முன் விளம்புவன் கேண்மதி சனற்குமா
மனுவிறை யெனும்பெய ரதிகுய்ய மாண்பொரு ணிறைதரு ரிபநாம
மெனவுண ருதியிது தெளிதருவா னியம்புது மோரிதி காசமென
முனமவ னருளிய வாகேண்மின் முனிவர்க ளெனமொழி தருஞ்சூதன். ()

வேறு

இத்தகு மாகதை சொற்றவர் கேள்விய ரிச்சையர் சாதக ரெவரேனு
மெத்திய னீணிதி யுத்தம சேய்பல மிக்குய ராயுக முதலாய
நத்திக வாழ்முழு துற்றமர் வார்சிவ நற்குரு வாரருள் பெறுவார்பின்
மித்தைய வாவொழி புய்த்துணர் வாரொரு மெய்ப்பர வீடெளி துறுவா
[ரால். (கஉக)

மார்க்கண்டேயச்சருக்கமுற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ருகஅஎ.

---

# இராமன் மந்திரோபதேசம் பெற்ற சருக்கம்.

—:o:—

சூர்த்த காலை வென்ற சூனு துலங்கு காதை யோதினுஞ்
சீர்த்த ராமன் மந்தி ராதி திறங்கொள் வாய்மை யோதுவா
மார்த்த பாத வன்பு கூர வமர்ந்து கேண்மி யாவெனு
நார்த்த பாத நந்தி நாத னயந்து கூறு மாலரோ. (க)

வேறு

சனற்கு மார கேண்மியா தனக்கு மாரன் மைந்தனு
மெனக்கொண் மாய னுமுனை மிழைத்த தீமை யீனரு
மனக்கொ ளாத பாதக மதித்து மாத வப்பிரு
குனக்கி தாரு மென்றெமை யுலப்பி லாத யோனியில். (உ)

சென்று சென்று லேகெனுச்செப்பு சாப முற்றுடைத்
தன்று நின்று வேண்டநீ யையி ரண்டு தோற்றமா
மென்ற வானை லங்கன மெய்மி னுவ தன்றினி
நன்றி னுள்ளுந் தீமையு நவையி னுள்ளு நன்மையும். (ங)

ஆவ செய்கை வகையினென் பதுபி ரத்தி யக்கமே
யாவு நம்மி னோர்ந்தனம் யாது தான வக்குலம்
வீவ தாற்று நன்மையுள் விளைந்த சாப மேற்கொடப்
பாவ நாமு ணச்செனுற் பவத்து ணன்மை வாய்ப்பதால். (ச)

நிருத ராதி துட்டர நீதி நீக்கி நீதியிற்
பொருவி லாத சிட்டரைப் புரக்கு நன்மை வாய்க்குமா
பிருகு சாப மீதருள் பிறந்தை நோக்கி யான்றவர்
திருகு கோப முங்கலஞ் செய்யு மென்ப தேர்ந்தனம். (ரு)

என்றி வாதி யொவ்வொன்று யாவு மோர்ந்து ணர்ந்தனிந்
தன்ற யோத்தி வாழ்தச ரதப்பெ யர்க்கொ ணாற்றலால்
வென்றி நாம வேந்தர்கோன் விழுத்த வப்பெ ரும்பயா
னென்றி னின்று வம்மெனு மற்றெ திர்ந்த ழைத்திட. (சு)

ஆத வன்கு லங்கண்முற் றுற்ற ரும்பெ ருந்தவம்
கோதொ ழிந்த கோசல நாட்டி ருங்கொ ழுந்தவம்
பூத லஞ்செய் மாதவம் பொலிந்தொ ருங்க ழைத்திடக்
காதல் கொண்ட விந்திரை காத லன்னெ ழுந்தனன். (எ)

உரைத்த வேந்தர் கோளரி யுச்சி மேற்கொ ளும்பரைத்
தரைத்த லத்து தித்தனன் றனய னுக்கொ டாமைதன்
வரைத்த டம்பு யத்தினன் மகிழ மங்கும் வென்றிநாம்
விரித்த லென்ன வன்பெயர் விளக்கு மாற்றல் முற்றுமே. (அ)

அரசி ருக்கு மங்கல ரனி லெத்து ணைத்திற
லரச ருக்கு மேனைய ரனை வருக்கும் போர்குறித்
தரமு தற்க ணைக்லையும் மருவொ ருக ளீர்த்திதன்
வரமி குத்த பேரினால் வயக்கு மேனு மைப்பதென். (கூ)

தன்னி கர்த்த தங்கர் தன்னின் மாறு தித்தபின்
றன்னின் மிக்க தென்னமுன் சகங்க ளுந்து தித்திடு
மென்னி லன்ன சேயினெண் ணிலாத சீர்த்தி யாதுமொன்
றென்னி லாவ தேகொல்லே றியால ராறு மாவகொல். (க0)

அண்ட ரியாவுந் தேவமும் மகா ரியாவு முற்றும்வாழ்
தொண்டர் யாரு மாதவர் சுத்த யோகர் சித்தருந்
தண்ட லிர்க்கை யாருமைந் தரும்ப ரித்தி லங்களிப்
பெண்ட ரச்செய் சீர்மையா லியாம நாம மெய்திறனன். (கக)

வேறு

தாம நாமமி ராம நாமமுன் சாய மாலைவருந் தப்பிரான்
காம னேவருட் கந்த னேவெனக் கவினு டைகலை வளாவே
மாம னுமென வுணர்வு றுவண மனுட னுமென வளர்ந்துபின்
பூயன் யாமக னும்வ சிட்டனைப் போற்றி யாதர வேற்றியே. (கஉ)

போத நூல்பல கேட்டல் சிந்தனை புந்தி தேறுத னிட்டையே
யாதி யாவையு நிரம்ப வாய்ந்துகா மாதி யானவை யொருங்குநீத்
தேத மில்பொறை கருணை சத்திய மின்சொ லாதிய யாவுமேய்ந்
தோதொ ணாதசீர்ச் சீத வாசமா மூறையி னுள்ளுல கெலாமுற. (௧௩)

அனுசர் மூவரோ டகன மர்ந்தரு ளன்னை தாதைசொ லவைமுடித்
தினிது மேவுழி முனிவ னுங்குவந் திளவ லோடழைத் திடப்புகுந்
துனல ருந்திறற் றூட காவத மூனுற்றி மேன்மிது லாபுரிப்
பொனைம ணந்துவந் தன்னை தாதையைப் போற்றி வீற்றிருந் தானரோ. (௧௪)

வீற்றி ருக்குநாள் வேறொர் நாணனி விரும்பு தாதைசொல் கரும்புதேன்
போற்றி தித்துடல் பூரித் தொண்செவிப் புகுது முன்னெழீஇப் போம்பிரி
வாற்றொ ணாதுரு கிளவல் சானகி யடிதொ டர்ந்திடக் கடிதுசென்
றேற்ற கானஞ் வாச மேமக் கென்று முள்ளதென் றேகினான். (௧௫)

கருத்த மாமர பிலங்க வந்தருள் காளை யேகிய கானன
மிருத்த நம்மதி தெய்வ மானிட மேனி கொண்டிவண் மேவமுன்
னொருத்த மாதவ மென்கொ லென்றளி துலங்கு நாண்மலர் முகங்கணீ
ருகுத்து நீடலை வணங்கி யொண்பதத் தொழிவு றுமலர் பொழிவன. (௧௬)

மானி னம்பல பின்பு சானகி வாஞ்சை தீர்கெனு மாறெழு
மானி னம்பல வுஞ்சோ பாலனென் றறிந்த போனனி யார்த்தெழுந்
தேனி னம்பல விறைபி தாவெனத் தெரிந்த போலிசை செய்தெழும்
வானி னம்பல மேனி கண்டின மாமெ னத்தொடர் வானெழும். (௧௭)

வேழ நங்குலங் காத்த தெய்வத மேய தென்றெதிர் வீழ்ந்தெழுங்
கேழ னம்முரு மேற்கொ ணாதனைக் கிட்டி னேமெனக் கிளர்ந்தெழும்
பாழி மாவரி நாம சீயவுற் பவரி தோவெனப் பதந்தொழும்
வாழ்கு டாவடி சாம்ப வன்பினர் வணங்கல் போற்பத மலர்தொழும். (௧௮)

குணங்க ணீன்குறு முனிமு னேயொரு குலாதி பன்புகுந் தின்னினி
யணங்கு முற்றொழித் தின்ப வீடரு ளோங்கெ ழுத்துப தேசநன்
மணங்கொளுஞ்செயல் வாய்க்கு மாண்பினை மனங்கொ ளற்கொர்ந் திமித்தமா
யிணங்கு தாரக சகித வைந்தெழுத் திதழி மாமலர் காட்டுமே. (௧௯)

நெடிய நீகுறு முனியைத் தாழ்ந்திடர் நீக்கு கென்றுட னேவல்போ
னெடிய பூருக நிரையி ராகவ னீள்க ழற்கணி லைறஞ்சுமால்
கடிய மௌவல்சே வடிப ணிந்துனை காதன் மாமன்கை வாளியாய்க்
கடியை யென்றுல கோது றும்பழி கடத்து கென்றலிற் கலவுமால். (௨௦)

இன்ன கானனத் தேகி ராகவ னிளவல் சானகி பின்வர
முன்ன ரேபல வளங்கள் கண்டுமென் மொழியு வப்புறக் காட்டுபு
மன்னு தண்டக வனம்பு குந்தவண் வாழு மாதவர் சூழல்வா
யின்ன மந்தவ ராசி பெற்றினி தேகி மாமல யேசன்வாழ். (௨௧)

உடச முன்வின விப்பு குந்தவ ணெண்ம லர்ப்பதந் தாழ்ந்தெழுந்
தடிக ளும்மடி யடிய னேன்றொழுற் கடியின் மாதவ மென்னெனாத்
தடம லர்க்கைகு வித்து நின்றதா சரதி யானன நோக்குபு
நெடிய பானுகு லேச மாசறு நின்வ ரத்துநல் வரத்தெனா. (௨௨)

முகமன் பற்பல கூறி யாசிகண் மொழிந்தி ருத்துபு முனரிவாழ்
தகவி னெம்மனோர்க் கேய தெத்தகு சரத சக்கர வர்த்திமா
மகனி னக்கிவண் வரவ தெத்தகை மாதர் மாதவங் கோதிலா
துகம்வ ழுத்தகின் றியலு மாறிட ரொழித்த ளிப்பதை யுன்னியோ. (௨௩)

வேறு.

மைந்த நின்னிள வடிவு நோக்கலை மல்கு பல்லுறு வகையு நோக்கலை
தந்தை தாயர்போற் றுதலை நோக்கலை சார்வ பௌமனீ தமியை போலவே
யிந்த மாவனம் வந்த காரணம் யாதி யம்பென வெழுந்தி ராமனு
மைந்த னொளொ லார்க்கு மோரர சருந்த வத்தினோ ரரசு நீயரோ. (௨௪)

அகில லோகமு மடிப ணிந்திடி னவர வர்க்குள குறைகண் முற்றொழித்
திகல லங்களும் பாக லங்களு மினையின் மோக்கவா யினும ளித்திடத்
தகுமொர் போர சாய நீயொரு தமிய னேனையு மாசனென்பதோ
நகையி தாகுமெம் மரச லக்கண நவின்ற துண்மையே ரசமி லாதவன். (௨௫)

என்னு மர்த்தமேல் யான்சொ லத்தகு மெந்தைநின்னர செந்தமாரினு
மன்னு நித்திய சுகவி யாபக வமர மாசிவ ஞான வானர
சென்னிலேழையேனிசைப்பதெங்ஙனமென் றமைந்து தன்னகர் நின்றேகிய
தின்ன தென்றுமுற் றிசைத்துமேலுமோரேழைவிண்ணப்பநின்றிருச்செவி.

சாத்தி யாருக தாறு வேதிகர் சதுர முற்றுளார் சாங்க வேந்த வென்
றேத்தி நின்றெறி ரோது மையவிங் கெத்து ணைத்தவந் தான மாதியி
னீத்தி டற்கரும் பவஞ்ச வாஞ்சையா நிறைக டற்கடந் திடுமு பாய மொன்
றோர்த்தி தீர்தர வருடி யாலென வடிப ணிந்தன னலரி மைந்தனே. (௨௭)

அதுவி னய்மல யாச லத்தெமை யாள கத்திய மாமு னீந்திரன்
கதிர்கு லாதிப வுத்த மக்குண கணங்கள் சேர்கரு ஆல கேண்மதி
யதிர்க டற்புவி யாரு பாயமுன் னுய காமுறு மாச ருள்ளக
மெதிரி லாமறை சிவாக மந்துணிந் தியம்பு மந்தண மினிது கேட்டனை. ()

முதுவ சிட்டனிற்குணர்த்துபோதகன்முதுக்குறைந்தெழுசனகன்மாதுலன்
மிதமில் கேள்வியொண் கதிரின் மைந்தனீ விதைத்ததொன்றுபின் விளை
வொன் றுருமோ, வதிவி ருப்பரின் கேள்வி யின்னமக் கைய துய்யவான்
மெய்ய செய்யவள், பதியு னக்கிது பகரும் பாக்கியம் பலித்த தின்றெமக்
கென்று பன்னுமால். (உகூ)

சாதி யாச்சிர மாதி யொன்றினுந் தவறி லுத்தம ஞான சீலராற்
காதல் கூர்சமு சார சாகரங் கடந்த ருட்களை யிவர்ந்து வாழ்வுறற்
கேத மின்னிக மாக மந்துணிந் தீச னேயெவ ரினுந்தி யேயனென்
றோது மாபதி யொருவ னேயுள முருகு பூசனைக் குரிய நாயகன். (௩0)

அகில முந்தன துடைமை யாகவைத் தாளு மீசனுக் கனைய பூசனைத்
தகுப ணிக்கண லாதி யாதினுஞ் சாரு மார்வமொன் றில்லை யாதலா
னெகுமு ளத்தொடு மகம்பு றத்தினு நிகம வாகம முறைவ ழாமலப்
பகவ பூசனை யாற்று வானெவன் பவஞ்ச வாரிதி பாற்று வானவன். (௩க)

அனைய பூசனைக் கின்றி யேயமை யாத முக்கிய மாகு மங்கமொன்
றனைய தென்றிடி லரிய மந்தண மினிய தோதுதுங் கேளி ராகவ
வினையை வெல்வது பவஞ்ச நீர்த்தட மேலெடுப்பது வேத வொண்சிரந்
தனைய டுத்தமெய்ப் பரசி வத்தின தனிச்சொ ரூபரிச் சயார்த்த பூரிதம். ()

பரம வாசக மாயொ ளிர்வது பஞ்ச பாதக நாசஞ் செய்வது
வரம காசிவ ஞான சாதன மந்தி ரேசமாய் வயங்கு நீரது
திரம சாத்தியந் தேவர் மாதவர் தேர்ந்து ளோர்க்குமே செப்பு தற்கது
வுரமன் மந்திய மறையின் மத்திய வுருத்தி ரத்தொளி விரித்த ரத்தினம்.()

ஆய ரத்தினந் தூய மெய்த்திரு வைந்தெ ழுத்தென வறிய வோதுமான்
மேய வன்னமா மந்தி ரேசனின் மிளிர்செ விக்கணே குளிர வுய்க்குதும்
வாய விம்மநு நீகொண் முன்னரோ மற்ற தற்கொரு முக்கி யாங்கமுந்
தோய வேண்டுமென் னதும னுச்சசு தாய வெண்டிரு நீறு தாரணம். (௩ச)

பூதி தாரண மின்றி யிம்மனுப் புகலி னிட்பல மென்னு மாமறை
யாத லால்விர சாங்கி யின்விளை வாய சித்திதா யகவெண் ணீற்றினை
யோது நான்முறை பரவப் பூசிமேலொளித ருந்திரி புண்ட ரங்களு
மேதி லாதணி கென்று கூறியாங் கிசைத்த வாவிர சாங்கி நீற்றினை. (௩ரு)

முறைவி ளைத்தெடுத் தள்ளி யீதலு முளரி கூம்பிநேர் மலர வாங்குபு
நிறையுத் தூளன புண்ட ரங்களு னெறிய ணிந்தெதிர் முறைப ணிந்தனன்
கறையி லாமனத் திறையி ராகவன் கலச யோனியக் காகுத் தன்றனைக்
குறைதெ றுஞ்சிவ தீக்கை யாற்றுபு குறித்த மந்திர வமுது குத்தனன். ()

தாய தன்செவி வாயு குத்தவச் சுவைய மந்திரா ரமுத மாந்தினன்
வாய பேரின்ப வாரி யிற்றனை மறந்த மர்ந்தொரு வாறெ ழுந்துட
னேய வாரியன் பாத தாமரை நேர்ப ணிந்தடிக் கடியெ ழுந்தநின்
றேய்வி லாக்கரு ணைம்பு தேயென நாட லுமாவியு முடலு முன்னதே. (௧௭)

செய்கை மாறிலாச் சிறிய னையினேன் செய்கை மாறுநின் றிருவ ருட்பெருஞ்
செய்கை கொள்கிலாச் சீரி தென்பது தேற்ற மாகநேர் தெரிய வந்ததென்
றுய்கை பெற்றனீ ராம னேதவவ் வுடச னுதனுங் குடச மாதவ
னுய்கை செய்சிவ நாம மாயிரத் துண்மை யாவையு முணா நல்கினன். (௧௮)

ஆச றச்சிவ தத்து வார்த்தங்க ளனைத்து முள்ளகத் தமையத் தேற்றிமே
லீச னேயொரு வன்றி யேயன்மற் றேனை யோர்களெவ் வெவருஞ் சீவரே
மாச றத்தியா தாக்க ளென்றுமா மறைசொல் சூத்திர வாக்கி யத்தனைத்
தேசு றத்தனி யோது மாசிவ கீதை நூலையுந் தெரிய நல்கினன். (௧௯)

இன்ன வாறகத் தியமு னீந்திர னிராம னுக்குநீ றளித்த மேன்மையாற்
றுன்னு றும்பசுத் துவத்தை மாற்றிமேற் றுலங்கு தாரக சகித வைந்தெழுத்
தென்னு மந்திர செபத்தி னுற்சிவத் துவவி ளக்கமே வுற வேற்றியப்
பன்னு மந்திரஞ் செபித்தி டும்முறை பாசி வார்ச்சனை விதியு ணர்த்திமேல்.

வேறு.

பொறுதி யாகநாம் புகன்று னக்குமுன்
பெறுதி யென்றமெய்ப் பேறு கொள்கவென்
றிறுதி நீக்குமைந் திருஞ்சா தாக்கியத்
துறுதி லிங்கமொன் றுளிர நல்கினன். (௨௧)

இரவி மைந்தகே ளிவ்வி லிங்கநீ
யுரிய வாயுள்கா லுருவு றுமலே
பாவி நாடொறும் பயில ருச்சனை
வாசி வாகம மாபி னுற்றுதி. (௨௨)

மேவு மிவ்வெலாம் வேந்த னிற்ககக்
காவ லாம்புறக் காவ லாகவிங்
கீவ கொள்கென வேதி கார்முக
மாவ நாழியாங் கவன்கை நல்கினன். (௨௩)

சருவ சத்திமா ருய சங்கா
னுருவ னேகிக ராய வுத்தமன்
றருச ராசனந் தாவி னுந்தகம்
பொருவி லாவநேர் புகலற் பாலதோ. (௨௪)

மூன்று நல்கிய முனிவர் சேகர
ஞன்ற கேள்விய ஞய ராமனைச்
சான்ற பஞ்சவ டித்த லத்தைநீ
யேன்று காண்கென வினிது கூறினன். (௪௫)

முனிவ ருத்தமன் மொழிந்த செஞ்சொலு
மனைய னங்கிரி யம்பு சாதமுந்
தனது சென்னியிற் றலைப்ப் ராகவ
னினிதி றைஞ்சின னேத்தி நின்றனன். (௪௬)

பிரிவை நோக்கிடும் பெரிது மேங்கிடும்
வரதன் வாசக மறுக்கொ ணாமையும்
பெரிது நோக்கிடும் பேதுற் றஞ்சுமத்
தரணி பன்றிறஞ் சாற்றெரு ணாதரோ. (௪௭)

அரிய நூல்களாய்ந் தகன்றெ ளிந்துமெய்க்
குரவ ரானிறை குணத்தி ராமனே
பெருமி டர்ப்படிற் பெரிய வர்ப்பிரி
வருமை யிற்றென வளக்க லாவதோ. (௪௮)

இருத லைப்படு மிதய ராமனுங்
கொருத லைத்துணிந் துழுவ லன்புளம்
பொருத லைப்பெரும் புணரி வாயினை
மருத லைப்புரீஇ வணங்கி யேகினன். (௪௯)

ஏகி ராகவ னிளவல் சீதையோ
டாகம் வேற்றுமை யறியொ ணாதுநீண்
மாக நீடுகான் வழிக டந்துபோ
யோகை மிக்கபஞ் சவடி யுற்றனன். (௫௦

வேறு

வரம டுத்தகோ தாவரி மாநதிக்
கரைய டுத்தவப் பஞ்சவ டிக்கணோ
புரையி ரித்த புனிதனி ராகவன்
விரவி யொத்துழி வீற்றிருந் தானரோ. (௫௧)

அங்க ணூடொறு மைந்தெழுத் தின்செபந்
திங்கள் வேணி யிலிங்க சிவார்ச்சனை
துங்க கீதை பாராயணந் தோமற
நங்கை சானகி நாத னவிற்றுப. (௫௨)

நாளு நீளுமெய் யன்பு நதியொடே
யாளு மீச னருட்கடற் புக்குளாய்த்
தாளின் ஞானந் தத்தனித் தண்சுதை
மீளி யுண்டு விளக்கமிக் கானரோ. (௫௩)

இன்ன வாறுசின் னுள்க ளிரிந்திட
மன்னி ராமனை வாஞ்சித் திராவணன்
பின்னை நேர்ந்து பிதற்றின ளன்னதாற்
றன்ன நாசி தனஞ்சிதை வுற்றனள். (௫௪)

அதனி னுற்கர தூடண ரார்த்தெழ
வதைபு ரிந்தந் நிருதர் வருதினி
சிதைய வென்றமை தேர்ந்தங் கிராவணன்
கதமி குந்துமா ரீசன்ச காயத்தால். (௫௫)

எரிநெருப்பை மடியிலிட் டாலென
வரிய கற்பிற் கரசி யனுவுந்தற்
பிரியொ ணாத பிரியை சனகியைக்
கரவி னுற்றுக் கவர்ந்தனன் காதகன். (௫௬)

அவனி மாதவ மாய பிராட்டியைக்
கவர்பு சென்றபின் காகுத்தன் றம்பியோ
டவச னுய்ச்சரித் தங்கதர் காட்டிடச்
சவரி யஞ்சனை தன்றனை யன்றனுள். (௫௭)

சுக்கி ரீபனைத் துன்னி யவன்பகைத்
தக்க வாலியைத் தான்செகுத் தாங்கவன்
ஒக்க லோடுறு வாழ்வங் குதவவம்
மிக்க பேருத விக்குள் ளுவந்தரோ. (௫௮)

ராக வன்செய் நலன்மற வாமலன்
போகை யுந்த வுடன்வட மேருமுன்
னுக நீளச லத்தமர் வானா
வாகி னிக்குல முற்றும் வருகென. (௫௯)

வாலி ளித்துத யாத்த மனவரை
விரவு கீட்டிசை மேற்றிசை யாகநம்
பரமன் வெள்ளிப் பருப்பதங் கூற்றினார்
வரையி னுத்தர யாமிய வம்பலா. (௬௦)

இடையி டங்களெங் கெங்குந் தருவிநங்
குடிபு ரந்தவிக் கொற்றவன் றேவியிப்
புடவி வாய்த்தபொன் பூங்கொம் பிருப்பிட
முடனறிந்தொல்லை மீள்கென வுய்த்தனன். (௬௧)

சென்ற வீரருட் டென்றிசை மாருதி
யன்றி லங்கை யரைக்கணத் தேகினோன்
பொன்றி மேனி யொடுங்கிநின் றுள்ளுயி
ரென்ற ராம னிதயத் திருப்பவும். (௬௨)

சோக முற்ற தென் றேகை யிராகவ
மேக மின்ப மழைவிளை விற்றரு
மோகை யாகென் றுணர்ந்தலி னேங்கும
சோக வின்னிளைச் சூழலி னீழலில். (௬௩)

வீற்றி ருந்து மிளிருஞ் சனகியைப்
போற்றி நேர்கண் டணுகிப் புகுந்ததான்
றேற்றி ராகவன் றூதெனத் தென்னெனத்
தேற்றி நல்கினன் றீதிரி மோதிரம். (௬௪)

வாங்கிச் சென்னிகண் மார்பின் மணந்துகைத்
தாங்கி நோக்குபு தாச ரதிதனை
யாங்க ணேந்தென வன்பிற் பெருகியே
தேங்கு மின்பக் கடலிற் றிளைத்தனள். (௬௫)

வருதி யையவெவ் மாதவ வாழ்வினை
தருமை மேனி யனுவும் விகற்பியா
துரிய தம்பி யுடனுறை வோடுற்றே
வருவ தேகொ ணித்தமர் வாழ்க்கை யோய். (௬௬)

என்ற கேள்விக் கிறைமுறை யேயிசைத்
தன்றி ராமற் களித்தசூ டாமணி
யொன்று கைக்கொண் டுடன்விடை கொண்டுதாழ்ந்
தென்று சேயமைச் செய்தினன் மீண்டரோ. (௬௭)

கண்டு வந்தனன் காகுத்த தாயினை
யொண்ட ளிர்க்கை யுதவுசூ டாமணி
யெண்ட ரும்மிஃ தென்றெதி ரிட்டவன்
கொண்ட நோன்புமுன் யாவையுங் கூறினன்; (௬௮)

வினவி ராகவன் மீக்கெழு மூக்கமோ
டனகி யாய சனகி யமர்விலை
துனை யி னேகித் துறுமிடர் மாற்றியாங்
கினிது மீட்டற் கெழுந்தனன் முன்னெழும். (சுகூ)

தம்பி பானு தனைய னனுமனே
பம்பு வானர வீர பதாதியோ
டும்பர் போற்றுற வொல்லையி னண்மிருறை
னம்பி ராமன் றெருகு நாலையே. (எ௦)

வேறு.

ஆங்கரு மறைகள் போற்று மடவியி னகில மீன்ற
தேங்குயாழ் பழித்த வின்சொற் றிருந்திழை பாகத் தெய்வமான்
பூங்கழ லிறைஞ்சும் வாஞ்சை புகுத்தவா னரப தாதி
பாங்குற தவணி ருத்திப் பானுசே யனுமன் றம்பி. (எக)

புடைவரக் குணக்கி னீள்கோ புரப்பெரு வாயின் முன்னாப்
படியுற நமந்து வேண்டிப் பாவிப்போய் வேத தீர்த்த
முடியுற வணங்கி மூழ்கி முறையின்வெண் ணீறு கண்டித்
தொடைபுனைந் தெழுத்தோ ரைந்துந் தூகளாறச் செபித்த லாதி. (எஉ)

நித்திய நியமம் யாவு நிகழ்த்துபு சிரார்த்த மாதி
சுத்தகேத் திரபிண் டாதி துரிசறப் புரிபுட் சென்றாங்
கத்தனை யமல வேதா ரணியனை யகில முறை
வித்தனை வீணு கான வித்தாட்ணி யுடனி றைஞ்சி. (எங)

அகநெகிழ்ந் துருக நின்றங் கருந்துதி பலமுன் கூறி
யிகலருமன் பின்மேலு மிறைஞ்சியாங் கரிது நீங்கித்
தகுமுழி யமர்ந்து வாயு தனயன்முன் குரங்கு ரக்கின்
றொகையினை யாழி மீதோர் தாக்குரம் பிலங்கைக் கேக. (எச)

ஆற்றுக வெனப்ப ணித்தா றனைதஞ் சென்னி மேற்கொண்
டேற்றெழு கவிக ளெல்லா மிரவிதோ யிரவி வானை
மேற்றழை விருக்க மாதி வேரொடும் பிடுங்கிப் போகட்
டேற்றவார் கலியிற் சேதோர் திணத்திற்ற சனைமேயுஞ் செய்தார். (எரு)

வரம்பறு வலிமு கத்த வலிமுக பலச மூகம்
வரம்பறு பாரை வானீண் மரம்பல சுரும்ப னேகம்
வரம்பறு மாழி மீதோ வாதுவீழ்த் தியலோ கத்தால்
வரம்புறு தடையாற் பொங்கி வருபிர ளயமோ வென்ன. (எசு)

'ரவகித் தியாண்டுஞ் சென்றெம் பிரானிகே தனத்தி னீள்கோ
ர துவா ரத்துஞ் சென்று புகுதவப் பொழுதி யாரு
ரகா முழக்க மேலோ ரார்கலி யென்ன வாய்விட்
—ரகரன் சினக ரத்து ளச்சமுன் னீர்ப்பப் புக்கார்.   (௭௭)

க்கவ ரண்டம் விண்டாற் போன்மெனக் கதறு மோதை
க்கணந் தூரத்திச் சென்றுங் கார்கலி கோயில் வாயிற்
றுக்குளார் கலிபே ரோதை சூரலங் கரத்தன் காணு
ச்கன னுரப்பி ஞன்மன் னரலைநீ வரலை யென்பான்.   (௭௮)

ந்திரா யகனுங் கார நாதமச் சேது வேறுய்ச்
ந்திய தகர்த்த தாழி சென்றடங் கிற்று முன்போ
ந்தில்வா னரக ணங்க ளச்சமிக் குலைந்த நோக்கி
ரநந்திரா கவன்பின் மேல்பா ஞன்கியோ சனைசென் றுங்கு.   (௭௯)

ன்னரு மன்னு கென்றோர் பேரணை யமைப்பித் தான்மற்
ன்னதும் பெருங்கான் மீன்க ளலைகளா னிலைகு லைந்த
ன்னினிப் புரிது மென்று வேக்கமிக் குளங்க லங்கி
'ன்னதென் றென்றுந் தோன்று திருந்தன னிராம னந்த.   (௮௦)

ம்புதி தடத்தின் பாங்கோ ரகரமீன் பூச லென்ன
ம்பரின் விளங்கும் யாண்டு மிடாற வியல்வான் மீன்க
ம்பெரு வாலிற் சேது தனையடித் துடைத்த நீரா †
ம்பியவ் விராமன் முன்பின் னவிற்றுமக் குரம்பி ரண்டும்.   (௮௧)

தைவுறப் பெற்றும் வாய்மை சிலமுற் குணங்க ளாதி
தமிகு புனித ராம னியற்றிய நீரா லன்ன
தைகுரம் பமைந்த வாழித் தடம்புன லிடமி ரண்டு
திதிகழ் கோடி தீர்த்த மெனும்பெயர் துலங்க மன்னும்.   (௮௨)

ன்னவில் கோடி தீர்த்த முதுமறை வனபு ராணங்
ன்னலன் விரித்துக் கூறத் தயங்கும்பின் னவிதீர்த் தத்தை
ன்னல மணமேற் கோடி தீர்த்தமென் றுலகம் வாழ்த்தி
ன்னலங் கொழிய மூழ்கி யின்னல மெல்லா மெய்தும்.   (௮௩)

---

* அர - குறிற்கீழாகாரங் குருகிற்று.

† நீரால், விளங்குமென்றியையும்.

அத்திரு மணமேற் கோடி யவிர்தட நகரோ ழொன்பான்
மெய்த்திரு மணிக டம்முண் மிளிர்குலச் சிறைமா ணிக்க
முத்திசெய் தன்பாற் றோன்று முழுத்தவப் பெருஞ்சீர்த் தென்று
ளுய்த்துணை ரறிவி லேழை யுரையினு ளடங்கற் பாற்றே. (அச)

மங்கைபர்க் காசி யாரு மகிழ்நெடு மாற னாரு
மெங்கள்சண் பையர்கோ வும்மே விசைத்தமா ணிக்கந் தன்னோ
டங்கத னவதா ரச்சீ ரருமையி னுரிமை நோக்கித்
தங்கிவீற் றிருந்தார் பன்னா ளென்றிடிற் சான்று வேறென். (அரு)

தன்னிகர் சிவலோ கத்திச் சகத்தையேற் றேணி யாகி
மன்னுமிம் மணமேற் கோடி வளநகர் பாண்டி நன்னாட்
டின்னள வேணி யாகி யிலங்குமீ தமைக வொன்றுந்
தன்னுளந் தோன்றா தங்கட் டங்கிய ராமன் கேட்ப. (அசு)

ஓரச ரீரி ராம வோரச மானா தீத
மாரச சூத கான மாரசங் கார ஞான
காரக *மந்தி ரேசன் காரக யகல நின்று
†தாரக மூல மேநந் தாரக மெனத்து ணிந்து. (அஎ)

நீதின நீதி நந்தா நெறிபுரி செபதி யான
மாதிபி ரீதி யோனா யமர்ந்தன னாத லாலச்
சூதகா னனம்பு குந்தச் சுயம்பமு தேச தேச
மீதெழ வருச்சித் தானுன் விழைவுமுற் றருளு மென்னா. (அஅ)

வானநின் றெழுந்த தந்த வாக்கிருந் திவ்வி யாமு
தானதொண் செவிவா யுண்டாங் களப்பருங் களிப்புண் மூழ்கி
வானர குழாமி லக்கு மணனருக் கனிலன் சேய்கள்
பானிழ லென்னச் சூழப் படருமா வனச மீபம். (அகூ)

அதரினே ரிடபங் கான்யாற் றக்கரை யானைக் காமுற்
றதனையவ் வாறு சீறி யடுப்பவா னாங்கு நின்று
மெதிர்கரை யேறித் தோழத் தேற்றொடும் புகுதக் கண்டவ்
வெதிரிலான் சீதை மீட்சிக் கீதுநன் னிமித்த மென்றான். (கூ0)

---

* மந்திரேசன்-எழுவாய். அது அடுத்த செய்யுளில் அமர்ந்தனனென்னு முற்றுவினை கொண்டு முடிந்தது.

† தாரகமூலம்-பிரணவசகிதசிவபஞ்சாக்கரம்.

பூங்கொம்பொர் கவிதன் பாங்கர்ப் பொன்னிறம் பழுத்த வின்றே
மாங்கனி கொடுசென் றுற்ற மந்தியை வாலி வீட்டி
யாங்கது கைக்கொண் டேகி யமர்பணை யமரக் கண்டா
னீங்கிது போனி மித்த மெமக்குவே றென்கொ லென்றான். (௧௧)

செறியுல கடவிக் கெல்லாஞ் சேகர மென்னு மேன்மை
யறிதரத் தெருட்டு சேக ராடவிச் கணிய னாகப்
பெறுபுமாங் குயிலெ லாமெம் பிரானரு ளுவந்தி ராம
வுறுதியிங் குறுதி யென்றாங் கழைத்தென வொலிப்பச் சென்றான். (௧௨)

பூவைபைங் கிள்ளை சாம்ப புராதன புனித னேமா
தேவசங் காசம் போசச் சிதாநந்த வமுத நாத
சேவக விமல சோம சேகர மந்தி ரேச
மாவன நிவாச தேச மாதவ பூத நாத. (௧௩)

கண்ணமர் நெற்றி யானே கந்தர கந்த ரேச
தண்ணம ரிதழி வேணித் தற்பர சைல ராசன்
பெண்ணா ரகில மீன்ற பெரியநா யகிச மேத
வண்ணறுஞ் சூத கான வாதவென் றிசைப்பக் கேட்டான். (௧௪)

இன்னன பலவா றங்க ணெண்ணில கண்டு கேட்டுப்
பன்னருங் களிப்பு மேன்மேற் பல்கிய போன் புந்த
முன்னரு ளீர்ப்பச் சென்றம் முளரியின் வருண தீர்த்தந்
தன்னினான் மாபி னாடிச் * சபலவெண் ணீறு சாத்தி. (௧௫)

கண்டிகை பலபூண் டைந்தக் கரமுறை செபித்து நீல
கண்டனீ ணிகேத னத்தங் கைத்தளப் பிலகொண் டேகிக்
கண்டருட் டூல லிங்கங் கைதொழு திறைஞ்சி யின்சொற்
கண்டமர் வலவை நேச கணேசனை யிளைய சேயை. (௧௬)

பணிந்துநந் தீசற் போற்றிப் பராயனு மதிபெற் றேகித்
தணிந்துசே காசு கங்கா தாவமு தேச நாம
மணிந்துல கருளா நிற்கு மருந்தனை திருந்து வேதந்
துணிந்துரைப் பரிய சோதி சுயம்பிலிங் கேசற் கண்டான். (௧௭)

---

* முன்னிரு நெடிலுங் குறுகிளவாக் கொண்டு சாபால வெனக்கோ டலு மொன்று.

காண்டலுங் கரண மெல்லாங் கைநெகிழ்ந் திரிய வன்பு
பூண்டவன் றனது போதம் போய்ச்சிவ போத பேத
மாண்டமெய்ஞ் ஞானா னந்த மயபர வசனாய் நீண்ட
சேண்டரு வடியற் றாங்குத் திருமுன நமந்த மர்ந்தான். (௯௮)

எழுந்தொரு வாறு முன்னின் றியம்புவாய் குழறக் கண்ணீர்
பொழிந்துட னனைப்ப விம்மிப் புரிவதொன் றோர்தல் கூடா
தழுந்துமா னந்த வெள்ளத் தரிதெழும் வழுக்கி வீழ்ந்
தொழுந்தகை யிராம னுங்கச் சுயம்புநே ருற்ற தூய்மை. (௯௯)

இன்னவா றென்ன யாரே யிசைக்குநர் நெடும்போ திங்ஙன்
பன்னருந் திறத்த மைந்த பானுகு லேச னெம்மான்
றன்னரு ளதனா லாற்று சபரியைத் தொண்டினார்வந்
துன்னவேண் டுவன வெல்லாந் தோமற வினிதி னீட்டி. (௧௦௦)

உழுவலன் போங்க மேன்மே லுயர்சிவா கமநூ லாற்றின்
வழுவறச் சுத்தி யாதி வயக்கிவெற் பளித்த தாயோ
டழலவிர் மேனி யெந்தை யமுதலிங் கேசன் றூய
கழலடி பூசித் துள்ளங் கரைந்தடிக் கடிந மந்து. (௧௦௧)

திருமுனின் றினிய வாய்மை திகழ்துதி புகன்று வேண்டு
மொருவனே யோவா மூவ ரும்பனே யெம்பி ரானே
யருவனே யுருவ னேநா யருவுரு வனேய நீதத்
திருவனே சூதகானச் செல்வனே போற்றி போற்றி. (௧௦௨)

உலகனே யுலகெ லாமா ளுடையனே விடைய னேயன்
பலகனே யலகி லானே யமலனே விமல வன்பர்க்
கிலகனே யிலகி லானே யேனைய ரெவர்க்கும் வானோர்
திலகனே சூத கானச் செல்வனே போற்றி போற்றி. (௧௦௩)

ஆரண முதல்வ போற்றி யாரணன் முடியாய் போற்றி
தாரண நீற்ற போற்றி தாரண பவஞ்ச போற்றி
பாரண கான போற்றி பாரண சூல போற்றி
தோரண வமல கான சேகரச் செல்வ போற்றி. (௧௦௪)

திருவுருப் படிக மோர்வத் திரமது செம்பொ னொன்று
கருமையொன் றருண மொன்று கருதுபா னிறமொன் றுநின்
னுருவமே துணிதல் கூடா துறிலுன சொரூபம் யாரோ
தெருளுவர் சூத கானச் செல்வனே போற்றி போற்றி. (௧௦௫)

அவனவ ளதுவொன் றன்றென் றருமறை யிசைப்ப துன்னை
யவனவ ளிரண்டு மொன்றி யவிருமோ ருருவாய் நிற்றி
யவனெனப் போற்று கோமற் றவளெனப் போற்று கோமன்
சிவசிவ யாதென் றேர்துஞ் சேசா வனத்தாய் போற்றி. (௧௦௬)

அரிபிர மேந்தி ராதி யகிலசீ வருமோ ரொன்றே
யுருவமுற் றுதித்துன் பாலே யொடுங்குவ ருவர்க்க நீதப்
பொருளென லிருமை யாநின் பொன்னுரு விடத்துங் கண்டுந்
தெருளிலா மூடர்க் கென்னோ தேற்றமா வனத்தாய் போற்றி. (௧௦௭)

அருநர காழு மூழா லளவில்கா முகனென் றந்தோ
வுருவுகண் டொரீஇர் மூடர்க் குரைப்பதெ னூடல் கூட
லொருவடி வினிலெங் கெய்து முணர்த்தினீ யன்றி யாவர்
தெருளுவர் சூத கானச் செல்வனே போற்றி போற்றி. (௧௦௮)

சீவர்க ளெவரு மின்பந் திளைத்திட விதஞ்செய் தேவ
பாவியேற் கின்று போந்த படரெலாம் படர வீட்டி
யாவிகாத் தருடி யைய வரணநின் சரண மேமா
தேவனே சூத கானச் செல்வனே போற்றி போற்றி. (௧௦௯)

வேறு.

என்று போற்றிநின் றடிக்கடி யிறைஞ்சின னிராம
னன்று மாதவ னனியுவந் தமுதலிங் கத்தி
னின்று மிந்தமர் வேணிய னீலமா மிடற்ற
னென்று நாற்கரன் சாம்பனேற் றிவர்ந்தரு ளொருவன். (௧௧௦)

உளத்தின் மிக்கெழு முவகைநே ருணர்த்துமொண் முறுவல்
வளத்தி னன்சிர மாலிகா பரணன்பால் வண்ணன்
கிளத்து மித்தகு முருவனைக் கிடைத்தனன் றனையுட்
டளத்தி ருத்திரா மனையரு ளேக்குபு சாற்றும். (௧௧௧)

வருதி ராகவ கேண்மியா மலயமா தவன்முன்
கருதி நிற்குணர்த் தியவரு ளெறியதே கவற்சி
தருதி றற்பவ சாகா தரணவாஞ் சையர்க்குச்
சுருதி சொல்லுபா யம்மிது குத்தமீர்த் தோடம். (௧௧௨)

இதயத் தூன்றுக வின்னதே யென்றுமீ திருக்கத்
ததையற் கூந்தலஞ் சானகி பிரிவினிச் சமய
முதயச் சூழனை முகின்மறைத் தாலென வுன்பாற்
றுதையப் பேரிடர் தொலைப்பதற் குபாயமுஞ் சோறும். (௧௧௩)

ஈண்டைக் கோசனை யெட்டினிற் றென்றிசை யிலங்குஞ்
சேண்டக் கார்தொழு தேவிபட் டணத்திரு நகா
மாண்டைக் கேகிநீ யலகில்சத் திகளுட னமருந்
தேண்டற் பாலனாம் விந்தையைச் சிந்தைசெய் தன்பால். (ககச)

ஆழி மீதனை யணை திறன் குறித்தனை யருச்சித்
தாழின் வேண்டுதி யேலணை யுளுற்றுதற் குரிய
பாழி யாற்றறந் தின்னருள் புரிவளப் படியே
வாழி ராமநீ யவ்வழிக் குரம்பினை வயக்கி. (ககரு)

ஆய பேரணை வழிச்செலீஇ யிலங்கையை யடைந்து
தீய ராவண வதம்புரீஇச் சீதையை மீட்டு
மேய விந்திர வரத்தினாற் போர்வயின் விளிந்த
பாய வானர கணமுயிர்த் தெழும்வகை பயிற்றி. (ககசு)

உரிய சீதையோ டிளவல்செங் கதிர்மக னூதை
பிரியன் வானரப் பெருந்தொகை பீடணன் முன்னோர்
விரிபு சூழ்வர விரைகமழ் புட்பக விமானத்
தரிதி வர்ந்துசென் றயோத்தியிற் பரதனோ டமர்ந்தே. (ககஎ)

நீதி வேத்தியல் புரிந்துவீற் றிருந்துயிர் நிரைகாத்
தேதி லாமகஞ் சிவப்பிர திட்டைக ளியற்றிக்
கோதி லிச்சிவார்ச் சனைதினம் வழுவறக் குயிற்றிப்
பேதி யாதவிப் பல்வகைப் பெருந்தவப் பேற்றால். (ககஅ)

ஈற்றி னம்பதத் திரண்டறு நித்திய வின்பப்
பேற்றின் வாழ்கென வாய்மலர்ந் தருளியெம் பிரான்முன்
றேற்றி யாங்கருட் குறியிடைக் காந்தனன் றெழுது
போற்றி ராகவ னளப்பருங் களிப்பெரும் புணரி. (கக௯)

தோய்ந்து மந்திர லிங்கபச் சிமத்தொரு தூய்மை
வாய்ந்த லிங்கமார்க் கண்டலிங் கத்தணி வடபா
லாய்ந்து தாபனம் புரிந்தருச் சித்துமீண் டனைபா
லேய்ந்த வாரமு தேசனைப் பினும்பணிந் தேத்தி. (கஉ0)

பொருமி யன்பின்மிக் கிருகணீர் பொழிந்துள முருகிப்
பிரிவி னைந்தொரு வகைபுற விடையருள் பெற்றாங்
கரிது போந்துகோ யிலின்புறத் தொருசிறை யடுத்தவ்
வரன தேவிபட் டணம்புக மதித்தவ ணிருந்தான். (கஉக)

வேறு.

ஈதிவ்வா றுசுக விதற்குமு னிளவ லிரவிசே யனுமன்சாம் புவனே
யாதிய ராங்காங் கருட்குறி நிறுவி யருச்சனை புரிந்துவந் தடுத்தா
ரோதவற் றிலக்கு மணனருச் சித்த வோாருட் குறியமு தேச
சேதனசுயம்புலிங்கத்தின்றென்மேற்றிசையினாற்குரோசத்திற்றிகழும். ()

நவிலுமக் குறிவாழ் நகரந்தம் பிக்கு நல்லவன் கோட்டையென் றமத்[யோர்
தவிர்தரு மதன்கிட் டிசையின்முக் குரோசத் தமுதலிங் கேசதென் றிசை
திவள்குரோ சத்தி னெல்லையிற் றிகழுந் திருத்தகு சுக்கிரீ வன்செ
யுவமைதீரிலிங்கமுவ்விட முத்துப்பேட்டையென்றுரைப்பதின் றெளிரும்.

திருந்துபூ சனைசெய் சுக்கிரீ வன்முன் றிருமுனின் றருந்துதி செயுங்காற்
பெருந்தகை யிலிங்கத் தொள்ளொளிப் பொலிவும் பேரழ கமைதியு நோக்கண்
டருந்துணை யெந்தா யருட்டிரு மேனி யழகனே யென்றகா ரணப்பேர்
பொருந்தியே யொளிகள் நிகரிலா தோங்கிப் பொலிதனோர்காணலாமின்னும்.

அத்திரு மேனி யழகனுக் கிசைந்த வழகியெம் மன்னையு மனைய
துத்திய நாமந் தான்வடி வழகி யென்றுல கிறைஞ்சிடத் துலங்கு
மத்திரு மேனி யழகனு மனையு மேத்துநர்க் கருணலங் களுமவ்
வுத்தம தலத்தின் சிறப்புமோ ரளப்பின் றுரைத்தவப் பெரும்பதிக்கீழ்பால்.

வருமொரு குரோசத் தெல்லையிற் சாம்பு வன்றொழுங் குறியிலங் கிடுமவ்
விருநகர் நாமஞ் சாம்புவ ஞேடை யெனப்பொலிந் திலங்குமிவ் வகையே
யொருவிலோ ரொருவ ரும்புரி யிலிங்க முலப்பில பலப்பல நகரின்
மருவிநின் றிலங்கு மேலினி ராமன் மதித்தவா புரிசெயல் வகுப்பாம். ()

இளவலோ டனுமன் சுக்கிரீ வன்மற் றேவரு மேவரத் தேவி
வளநகர்க் கேகி மந்திர நாதன் வழங்கருள் வழிகுரம் பியற்றிக்
கிளர்தரு மிலங்கை புக்கிரா வணன்முற் கெழுமுபன் னிருதரைப் பொருதக்
களனுற வீட்டி ராவணப் பிரம கத்திரா மேச்சுர மாகும். (கஉஎ)

மாதலத் திராம லிங்கதா பனத்தான் மாற்றுபு வீரகத் தியினை
வேதகா னனத்தைங் கரத்தொரு கோட்டு விமலபூ சனையினல் விலக்கிக்
காதமர் குடக்கா தவனிழ லானைக் காவிறை பூசையாற் கடிந்து
கோதற வயோத்தி புக்கமு தேசன் குளிர்திரு வருணனி குலாவ. (கஉஅ)

மலயமா தவன்றன் பதமலர் சிரமேன் மலரவீற் றிருந்தரு ணெறியே
யுலகெலாம் புரந்து சிவார்ச்சனை யாதி யுத்தம நெறிவழு வாது
நிலவிய வியற்றி வாழ்ந்தன னவற்கு நிமிலமந் திரவுப தேச
வலனளித் தமையாற் குதவ னேசன் மந்திரே சப்பெயர் வாய்ந்தான்.(கஉக)

அன்னமா வனமல் விராமன்சா னகியை யடுத்துமீட் பதற்குள வுபாய
மென்னென வுசாவி யெம்பிரா னருளா லெண்ணியாங்கெய்துதற் கிடமாய்
மன்னிய வதனாற் றிருவுசாத் தான வண்பெயர் பெற்றதான் மலரோன்
றன்னருந் தனய வென்றுவேத் திரக்கைச் சற்குரு நாதனே தினனால்.()

வேறு.

என்றரு ணந்தி வாய்மை யிருஞ்சனற் குமரன் கேட்டாங்
கொன்றிய வுளத்த னாகி யுத்தம குரவ ரேறே
நின்றனி முகாம்பு சாத நிறைசொற்றே னுகர்ந்து மேலு
நன்றறி வார்வங் கூர்வ நாடுமென் னெஞ்ச மன்றே. (கங.க)

இன்னுமிச் சூத கானத் திறைவனை யிறைஞ்சி யாவர்
துன்னுதம் மிட்ட சித்தி தோய்ந்தன ரெந்தை யாற்றும்
பன்னருள் விளக்கம் யாவை பகர்ந்தருள் பெரும வென்றான்
மன்னரு ணந்தி நாதன் வாய்மலர்ந் தருளு மாதோ. (கங.உ)

அருந்தவ முனிவ கேண்முன் னனந்த தாண்ட வத்திற்
புரிந்தெழு மனத்தன் காதி புதல்வன்பொன் மன்றி னின்று
பெருந்திரு நடஞ்செ யீசன் பிரசமென் மலர்த்தாள் பேணித்
திருந்தருந் தவம்பல் காலஞ் செய்துவேட் டமர்ந்தா னன்றே. (கங.ங)

அன்னவன் றவக்கி ரங்கி யருட்டில்லை யம்ப லத்திற்
பொன்னடம் புரியெம் மான்முன் போந்தருள் கூர்ந்து காதி
தன்னரும் புதல்வ நீசெய் தவம்பெரி துவந்தும் வேட்ட
தென்னுரை யென்னத் தாழ்ந்திட் டிருகைகூம் புறநின் றோதும். ()

யாவரு முணர்த றேற்று மிறைவனே யேழை நாயேன்
றாவரு நின்னா னந்த தாண்டவ தெரிச னத்தின்
மேவிய மனந்து ரப்ப விழைந்துனை யடைந்த னேன்மா
தேவநின் றிருவு ளத்தின் செயலென விறைஞ்சி நின்றான். (கங.ரு)

வருதிகோ சிகனே யிந்த வரம்பெறு சிதம்ப ரத்திற்
பெரிதுள முவந்து முன்னாட் பேணிரு முனிவர்க் கல்லாற்
புரிதரு நடமின் றுற்றென் புணரியந் தடத்து நல்லோர்
கருதுமோர் நறிய சூத கானன மிலகு மாங்கே. (கங.சு)

நீவிழை நடனங் காட்டி நினக்கருள் புரிது மென்றே
யேவிய நயந்து போற்றி யெம்பிரான் விடைபெற் றேகி
மாவனம் புகுந்து கோசி கன்மனங் கரைந்து வாழ்த்தி
யோவறு தடம்புக் காடி யோதிய பூதி யாடி. (கங.எ)

கண்மணி புனைந்து பஞ்சாக் கரங்கருத் துறச்செ பித்து
வண்மணிக் கோயில் புக்கு மந்திரேச் சுரன்வான் போற்று
மொண்மணி கண்டன் முன்சென் றுளநெகிழ்ந் துருக வேத்தித்
தண்மணிக் கழலி றைஞ்சித் தாண்டவம் விழைந்தி ருந்தான். (௧௫௮)

முன்னருள் புரிந்தாங் கன்ன முனிவற்கு நடன நாதன்
றன்னருட் பெருக்கி னாலத் தாண்டவந் தரிசிப் பித்தான்
பன்னரும் பரமா னந்தப் பரவையுட் படிந்து பல்வே
றின்னருட் டுதிகள் கூறி யடிக்கடி யிறைஞ்சி வாழ்ந்தான். (௧௫௯)

இறையவ யார்க்குங் கிட்டா விப்பெரு நடன நாயேன்
குறைதப வளித்தா யெந்தாய் கோதிலா வருட்பெ ருக்கி
னிறையெவர் சொல்ல வல்லார் நீசன்செய் கைமா றுண்டோ
மறையெலா மளப்பி லாத வள்ளலே யென்று தாழ்ந்தான். (௧௬௦)

அளவிலா னந்த மீக்கூர்ந் தனையனு டோறு மன்ன
பளகிலா போத ரூப பாதவ கானத் தாலங்
களரிலா வண்ணல் பாதங் கைதொழு தமர்ந்தான் பன்னாள்
வளனுலாம் புன்னை வேலி மறைவனத் தடைந்தான் பின்னாள். (௧௬௧)

கோசிக னடங்கண் டன்பு கொண்டுவாழ் காதை யீதான்
மாசறு தவத்தோய் பானு மதிமுத லொன்பான் கோள்கள்
பேசரில் வனத்தோர் காலெம் பிரானடி பணிந்து போற்றித்
தேசுறு தவஞ்செய் திட்ட சித்திபெற் றருளின் வாழ்ந்தார். (௧௬௨)

உத்தம முனிவ கேண்முன் றுரைத்துநீ யுற்றுக் கேண்மோ
முத்தொழின் மந்தி வாய்ந்த முதுதொழிற் றிறஞ்செய் தேவன்
றத்துவ மார்க்கம் யார்க்குஞ் சாற்றுமா குரவன் வாய்மை
யுய்த்துணர் மறைநான் காதி யுள்ளவா றுணர்ந்த மேலோன். (௧௬௩)

இப்பெருந் தலைவ னாயு மிந்திரை கேள்வ னாழி
யெப்பெரு வலிக டத்தற் கருமையா லாதி நாளிற்
றுப்புறு மசுரற் காற்றுச் சுரர்கட லமுதுண் டாற்றல்
சைப்பெறு மாபா லாழி கடைந்திடத் தொடங்குங் காலை. (௧௬௪)

விக்கின நீக்க லாக்கல் விளைத்திடும் பெரிய தேவை
யக்கணம் பூசித் தேத்த வயர்த்தமு தணவின் வாஞ்சை
மிக்கெழ வமரர் சூழ வேண்டும்பல் கருவி கூட்டித்
தக்கபா லாழி மாலோன் முன்கடைந் தியல வாங்கே. (௧௬௫)

இந்திரை யிந்தி ராணி யிலங்குவெள் ளிபமுன் னுவ
வந்துவந் தெழலு மீது மற்றெமக் கெமக்கென் றேறி
முந்துமுந் தொவ்வொன் றுக முற்றும்பெற் றுளங்க ளித்தார்
சிந்தனை விழைந்த வாறத் தெள்ளமு தெழக்காண் கில்லார். (கசசு)

மெய்விசைத் தீர்த்து வானோர் விசைதரக் கடைந்தா ரற்றுற்
பைவிரி யரவாற் றுதப் பரவையும் வறப்பத் தன்வாய்
மைவிரி யாலங் கால மற்றெமக் கெம்மென் றேர்முன்
கைவிரித் துதறி யஞ்சிக் கால்விசை கால்வி சைத்தே. (கசஎ)

முழுவிசை யிதுவே யென்ன முற்றெருருங் கோடி ஞாயப்
பொழுதிறை பாணித் தான்மா ஞணித்தான் பொருக்கென் றேடா
வழுவினவ் வால மீற்றின் வன்னியிற் சுடவெண் மேனி
பழுதுறீஇக் கரிய ளுகிப் படர்கதி வலியி னுய்ந்தான். (கசஅ)

வருவிடந் துரப்பச் சென்ற மாயன்முன் வானோ ரச்ச
மொருவிடா தோடி யோடி யுலகெலா முழன்று மந்தோ
வெருவிட மன்றி யாண்டும் வேற்றிட மின்றி நைந்து
பொருவிடை யமலன் முக்கட் புராரிபே ரருள்கை கூட. (கசகூ)

அடுத்தவ ரிடுக்கண் டீர்க்கு மமுதசஞ் சீவி யாயிப்
படிக்கணே வயங்குஞ் சூத பாதவ கானத் தெய்தி
நடுக்கமுற் றெழுந்து கீழைக் கோபுர வாயி னண்ணிப்
பொடிக்கொள்பொன் மேனி யெம்மான் கோயிலுட் புக்கோ லிட்டார்.

அண்ணலெம் மந்தி பேச னடியின்கீ ழலறி வீழ்ந்தா
ருண்ணெகிழ்ந் துருகு மாயோ னேதுமீ தும்பர் கோவே
துண்ணென விரிந்த நஞ்சந் துரப்பநொந் தலைந்தா கூழிற்
றண்ணரு ளீர்ப்பப் போந்துன் சந்நிதி யடைந்தே மெந்தாய். (கருக)

ஒருகணந் தாழ்க்கி னெம்மை யுடன்றுடன் றலைக்கு நஞ்சம்
வருகணை மீற்றி லாடு மயானயித் தான மாகிப்
பெருகண வசாத்தா னப்பேர் பிரியுமால் விரியு நஞ்ச
மருகண வுறும லெம்மை யளித்தியா லருளின் வள்ளால். (கருஉ)

வேறு.

என்று மாதவ னிணையடி மாதவ னிறைஞ்சி
நின்று வேண்டலு நின்மல னருரு ணிலையாற்
றென்றி சாமுக வாயிலின் வழிவெளிச் சென்று
பொன்று றுத்திறல் வைரவச் செம்மன்மேற் றிசைபோய். (கருங)

ஐங்கு ரோசத்தி னெல்லையி னவ்விட மமர
ரெங்கு ளாரென வினவலிற் கொதித்திரைந் தெழலுஞ்
செங்கை நீட்டுபு கவர்ந்தனன் றிருவுசாத் தானத்
தங்க ணுதனு யிடைப்புக வருட்காத் தளித்தான். (௧௫௪)

அனைய வவ்விட மங்கையி னங்கயின் றகில
நினைய நீலகண் டேசநா மங்கொடந் நிலையிற்
புனைய ருட்டிருக் கோயில்கொண் டருளியப் புராரி
யெனையு மாள்பான் வீற்றிருந் தருளுவா னென்றும். (௧௫௫)

இந்த மாதலத் தவ்விட மெந்தைகை யளித்த
மைந்த னும்வடு கேசனென் றன் மாதிர முகனு
மெந்த நாளுமத் தளியில்வீற் றிருந்தருள் புரியு
மந்த நற்றலத் துற்றருள் பெற்றுளா ரனேகர். (௧௫௬)

இன்ன நற்றலந் தாமரங் கோட்டையென் றிசைப்ப
வின்ன தியாவையுந் தருமய னகரின்மிக் கிலங்கு
மன்னு சீகண்ட நாதனுங் கருள்செயல் வாம
மன்னு தாயறம் வளர்த்தநா யகிபெயர் வயக்கும். (௧௫௭)

அறம்வ ளர்ப்பது நாமிரு நாழிநெல் லாலெத்
திறனி வர்க்கொடச் செயல்விரிக் குதுமெனத் தெளிந்தம்
முறைய ளித்தநெல் லாலுலகூட்டுமூ தருசீர்
நிறைவ ளத்தவே ளாளர்கூட் டம்மவ ணிலாவும். (௧௫௮)

என்னை யாளறம் வளர்த்தவ ளெண்ணிய செயலை
முன்னி யாங்குமுற் றினரிவர் முதத்தினெம் மணித்தாய்
மன்னி வாழ்கெனத் திருவுளங் கொண்டமாண் பாலோ
வன்னர் கூட்டமிக் கவிருமந் நகருமப் பாங்கும். (௧௫௯)

விடம யின்றரு ளண்ணறன் சூதமா விபினத்
திடைமி டைந்தமான் முதலினோர்க் கருள்புரிந் தினிநீர்
கடல்க டைந்திடிற் கணேசனைப் பூசித்தே கடைமி
னிடரொ ழிந்திடுஞ் சென்மினென் றிசைத்தன னெம்மான். (௧௬௦)

அன்ன வாறரு டலைக்கொடு மான்முத லமரர்
நன்ன ரேகின ரயன்றிருக் குமரமே னலங்கேண்
முன்ன ரோர்பகற் கௌதமன் மனுவிறை முளரி
யன்ன சேவடி பணிந்தக விகைதனை யடைந்தான். (௧௬௧)

குருகு லத்தினில் வருதிற லொருகுலக் கோமா
னுருகு மன்பினிம் மந்திரோச் சுரனடி யுன்னிப்
பெருகு பூசனைப் பேற்றின்வா னுருப்பசி பிரியா
தருகு வாழ்மனை யாப்பெறீஇ யின்பமுற் றமர்ந்தான். (௧௩௨)

சசிமு கத்துவான் சசிமுனு னகுடன்றற் சாப
நசைமி குத்தமை யுணர்ந்தொரீஇ வெரீஇயிவ ணன்னவிப்
பசைமி குத்துள மந்திரோச் சுரனடி பணிந்தே
வசைமி குத்தவந் நகுடற்கு விபத்தினை வழங்கி. (௧௩௩)

அண்ணன் மந்திரோச் சுரனருள் பெற்றினி தடைந்து
விண்ணி னாகண்ட லன்றனை வேட்டெடுத் துவப்ப
மண்ணி னாவுரின் புறப்பொலிந் துடன்றழீஇ யமர்ந்தா
னெண்ணி யிந்திரன் மந்திரோச் சுரனடி யிறைஞ்சி. (௧௩௪)

அருள்பெற் றாங்கெதிர் விருத்திரற் றடிந்தினி தமர்ந்தான்
றெருள்செ யாயுள்வேந் தியர்களச் சுவினிதே விருவர்
மருவி மந்திரோச் சுரனடி வழுத்திவா னவரோ
டொருவு றுகலிப் பாகமோ பெற்றினி துவந்தார். (௧௩௫)

வேறு.

இப்படி யளப்பி லாதா ரினையபடி சூத காரணத்
தப்படி முடியாற் போற்றி யடிக்கடி மனைவாழ் வுற்று
யெப்படி யுரைப்ப தெம்மா விருட்கடி மனத்தோ மென்றான்
றப்படி வேனி நந்தி தொழுதடி பாவிக் கேட்டான். (௧௩௬)

ஆயசீர்ச் சனற்கு மாமா ஞாதிர வனத்தெம் பெம்மான்
றாயமான் மியத்தின் மேன்மேற் றொடர்ந்தெழு மார்வந் தான்ட
மாயன்முன் மந்தி ரேசன் வுயரிமா முகற்பூசித்தே
தீயரி கடைசென் றேய நிறையருள் பெற்று னன்றே. (௧௩௭)

பின்னரம் முராரி செய்த பெற்றிபெ யுற்ற தென்சொ
லன்னது மருடி யாமோ வண்ணலெலன் றடியிற் றாழ்ந்தான்
மன்னரு ணந்தி யெந்தை மற்றவற் களவி ரித்துச்
சொன்னவா கேண்மி னென்னுஞ் சூதன்மா தவர்கட் கோதும். (௧௩௮)

வேறு.

அளியி னீடிய ராகவ னனூர்முகன் வீடியவாற்றுறு வருள்செய் காதையை யாதிய, வொளிமி மான்மிய மோதினை சூடன்வி னுயினர் தீர்பகை யொரு வொணுவிட மாதிய, பளகெ லாமெனி தோடிய படியில் சீரெழி லார்மனை பமை கார்முக லாதிக, வளனு லாவுபல் போகமு மருவி யோசிவ ஞானமெய் வழிசெல் வாரொரு வீடரோ. (௧௩௯)

இராமன் மந்திரோபதேசம்பெற்ற சருக்க முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௩௩௯.

# அமுத நிவேதனச் சருக்கம்.

தசரதன் மைந்த னானைமீளி தளர்வொழி புய்ந்து நீடுவாழ்வி
ணிசைதரு மந்தி ரோபதேச மினிதுறு நன்றி யோதினுமுன்
னசையமு தங்கொ ணாமுராரி நகமகள் கொண்க னார்முனியு
நிசசரி தஞ்சொல் வாமெனாவு ணிகழ்தர நந்தி நாதனோதும். (௧)

வேறு.

சூதவன நாத னமர் தூச்சரிதத் திடைமேன்மேற்
காதல்வளர் சனற்குமா கரிசனுமா தவகேண்முன்
மாதவனெம் பிரானளித்த மவியருடன் றலைநிறைவைத்
தாதரமிக் குறுதியினி யமுதுறுதி யெனச்சூழும். (௨)

சுராசுரர் குழாந்தொடரத் தும்பிமுக நம்பியிரு
வரகமல மலரடிகண் மறவாம லுறவாழ்த்திப்
பாவுபொருள் பலகொடுசு பரிசைவிதி வழியாற்றிச்
கரமலரஞ் சலிமுடிமேற் கவினுறநின் றனன்றுதிப்பான். (௩)

பிரணவமாந் தனிக்கூடம் பெயராத குஞ்சரமே
பிரணவமா மாளானம் பிரியாத புகர்முகமே
பிரணவமா மலர்வாவிப் பெரிதாடும் போதகமே
பிரணவமாஞ் சேவகத்திற் பிறங்குமணி வாரணமே. (௪)

ஓங்கார வோங்கலகத் துதித்துலவுங் கிரிசரமே
யோங்காரத் தீங்குடிலை யுள்ளாவிரு நதிசரமே
யோங்காரத் தேங்கான மொருவாத வனசரமே
யோங்காரப் பெருவீதி யுலாவருதந் தாவளமே. (௫)

தாரகமே முகமாகத் தயங்குபெரு மதங்கயமே
தாரகமே திருவுருவாத் தனிவிளக்கு மாதிரமே
தாரகமாம் பிடிகளிற்றிற் றனியெழுந்த கயமுனியே
தாரகத்தி னுள்ளுயிராய்த் தனைவரிய குணகரியே. (௬)

திருவருளா மதவெள்ளந் திரைகொழிக்குஞ் சாவரையே
கிரியையறி விச்சையெனுங் கிளர்மதமூன் றொழுக்கிபமே
யிரவுபக லற்றொளிரு மிடத்தமருங் கடக்களிறே
வரவொடுபோக் கிலாதெங்கு மருவிநிறை மதாவளமே. (௭)

பரவுமலப் பெருஞ்சேற்றைப் படர்ந்துழக்குங் கறையடியே
விரவுபவப் பெருங்காட்டை விரைந்தழிக்கும் புழைக்கரமே
வரவயிரா வணமுகைத்து வருங்களப நால்வாயே
யரவுதர பந்தனமா யார்த்தபெருஞ் சீர்த்தகமே. (௮)

ஐங்கரநால் வாய்முக்க ணருளிருதா ளொருமுனியே
சங்கரனீள் சடைக்காட்டிற் றனிவிளையாட் டியல்கயமே
கங்கையுத கம்புழைக்கைக் கவர்ந்திறைக்குங் கயந்தலையே
செங்கரவேற் கோளரியோ டுடனுதித்த சிந்துரமே. (௯)

மறைமுடிப்பா துகையினடி மலர்சாத்துந் தாடியடியே
மறையணிநூ புரமாக வனையணியா மேவடிமே
மறைபுகன்மூ லப்பொருளா வழுத்தியன்மா தங்கமே
மறையுமனு குதற்கருஞ்சீர் வளர்களப மேசுரமே. (௰)

கணராச குணராச கவிராச புவிவாச
பணராச சடிலமகி பதிராச நிதிராச
வணராச மலரிதழி வனைராச வனைவலவை
மணராச துணர்வாச மலரடிக ளிணை போற்றி. (௧௧)

அகிலமெலா முபக்கிரமத் தன்பினினை யேயிறைஞ்சத்
தகவுறுமச் செயன்முழுதுந் தனிமுடிப்பாய் வனிமுடிப்பாய்
இகழுறயாந் தொடங்குறுமிச் செயன்முடிப்பாய் பயமொழித்தெம்
பகவதிரு வருள்பொழியும் பதத்துணையே துணையென்று. (௧௨)

இன்னனபஃ றுதிபுகன்றவ் விறையருளா னிறையுவகை
துன்னியசென் றம்முகுந்தன் சூதவன நாதனடி
சென்னியுற மறவாத சிந்தையனுய்ப் பாலாழி
முன்னிலையிற் சுராசுரரான் மோதமுறக் கடைவித்தான். (௧௩)

ஆங்கெழுந்த தினியசுவை யாரமுத மதுகடத்தின்
பாங்குறப்பூ ரிதம்புரிந்து பாங்குறவைத் தனன்பின்னர்த்
தேங்குசுரா சுரரனைய திருமார்ப னடிதாழ்ந்திவ்
வோங்கமுத முறைபகிர்ந்திங் குதவுகென வேண்டினரால். (௧௪)

அதுவினவு மரியவரை யழைத்தசுரா சுரகுலங்காள்
விதுமுடியாம் பிரவனத்தெம் விமலனரு ளாலிந்த
முதுசுவையா ரமுதெமக்கு முற்றுறப்பெற் றனமவனுக்
கிதுமனிவே தனம்புரிந்தவ் விரும்பிரசா தங்கொளலே. (௧௫)

மாபாகும் பொழுதத்திருமின் வல்லையமு தளிப்பலென
வுரையாடி யமுதகட மொருங்குடன்கைக் கொண்டேகி
விரையார்தண் சூதவனம் விரையாவந் தனையசுவைச்
சுவையார்பொற் றசும்பொருபாற் றுரிசறவைத் தமுதேசன். (கசு)

கழன்மறவா மனத்தொடுமோர்க் கண்டதோ யந்தோய்ந்து
நிழன்மறையாக் கண்டிகைவெண் ணீறணிந்தைந் தெழுத்தோதிப்
பழமறைபோற் றருமமுத பரமசுயம் பிலிங்கேசற்
கெழுமுன்முறையா னயந்தேத்தித் தாநறுமா மலராதி. (கஎ)

அருச்சனைக்காம் பொருள்புனை மமைத்தடிபூ சித்தனைய
மருச்சுவைத்தண் ணமுதகட மலிதரநேர் வைத்தண்ணல்
கருச்சுழியி லுருதருட்செங் கைந்நீட்டி யெமையெடுக்குந்
திருச்சுடரே யமுதேசா சிறியேமின் றிருவருளால். (கஅ)

ஆழிகடைந் தெடுத்ததிரு வமுதினுஞ் சமுதாக்கொள்
வாழிதிருக் குமுதமலர் மதுவாக்கொண் டருளியெம
பாழிவினை யொழித்தினருள் பாலியெனப் பலமுறைதாழ்ந்
தேழிசையா மறையனந்த மெடுத்தேத்தி யெதிரிறைஞ்சி. (ககூ)

பூசனைமுற் றுறமுடித்தப் புனிதனிவே தனவமுத
மாசனையாச் சண்டேசர்க் குபாக நிவேதனஞ்செய்
தீசனைநல் வாசனையா ரிதழிமதி நதிவேணித்
தேசனைமீட் டும்பாவிச் சென்றனனவ் வமுதினொடும். (உ0)

அன்னதிரு வமுதநுகர்ந் தசனுமேலா வநுமேனித்
தன்னியோ முற்கலுமுன் றனையமுதத் தாளியானோ
மன்னரிர்தந் தருதானவ் வடிவினுணர்த் திடவதுவாய்
முன்னரே முளைத்தெழுந்த முறையேயோ நாமறியோம். (உக)

அத்தகைய மாவனத்தவ் வருளிலிங்க மமுதமய
சுத்தவடி வாகவே துலங்கியொளிர் தருமென்றும்
வித்தகமே லவ்வமுத மிளிர்கடங்கொண் டேகியமால்
கொத்தசுரா ருணிலமார் குலைக்கிடா மெனக்குறித்தே. (உஉ)

அவ்வசுரர் தமைவஞ்சித் தமரருக்கே யமுதமளித்
தொல்வரும்பாற் கடலடைந்தாங் குரகபதிக் கொளிர்குத
இவ்வியகான் விடந்துரத்தச் சென்றதுமந் திரநாதன்
செவ்விடமுண் டுயிரளித்த திருவருளு மதன்மேலும். (உங)

எண்ணியவா றமுதுகொளத் திடர்புகுதா வுபாயமினி
துண்ணிலவ வுரைத்தருளி யுதிக்கடைப்பித் தருளியதும்
தண்ணியவின் னமுதநிவே தனங்கொண்டு பிரசாத
மண்ணலரு டரப்பெற்றுங் கமாருண வளித்ததுவும். (௨௪)

ஆதியவச் சூதவனத் தமுதேச னருளனைத்து
மோதியமர்ந் தனன்கேட்ட வுமேச னேதியுளத்
தாதரமிக் குறைத்திடலின் றமுதேச னெனுமெப்
போதுகிடைத் திடுமினுமென் றப்பாமன் பதப்போதே. (௨௫)

மனத்திருத்தி வேண்டியவா மருதண்பர்க் கருடொழிலோய்
கனத்திருத்தி வைத்தமணி கண்டவெனக் கஞ்சவேந்
யெனத்திருத்தி யுறவருளி யெளியேனைக் குளிர்கூர்
வனத்திருத்தி நின்காட்சி வழங்கியநான் பெறுவேனே. (௨௬)

என்றுரைத்தங் கன்புநனி யெழுந்துசெல வினிதிருந்தா
னென்றுரைத்த நந்திகழ லிறைஞ்சியவம் முனிக்கதன்மே
னின்றுரைத்த வாழுமக்கு நாமுரைத்தல் வேண்டியதோ
நன்றுரைத்த வச்சூத நற்றவர்கோ னயந்துரைக்கும். (௨௭)

வேறு.

முகுந்த னுதவுதி வேதனு முதங்கொள் சுரிதமி கோதிரே
றுகந்து வினவிய சீரிதே குளங்கொள் செயல்கள்கை கூடுவார்
மிகுந்து வளரிக வாழ்வெலாம் விளைந்த படிநகர் வாரிமேல்
சுகந்த மலரடி நீழல்வாழ் துணங்கு சிவகதி சேர்வரே. (௨௮)

அமுதநிவேதனச்சருக்க முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்—௫௩௪.

௯.

# இந்திரன் றிருவிழாச் சருக்கம்.

சந்திர சேகர னாமு தங்கொள மாலருள் சீரிது
மந்திர நாதனு லாவரு மங்கல நீடுவி ழாமுறை
யிந்திர னேதக வேபுரி யின்பினி யோதுது நாமெவ
னந்திரன் பாதக மோசக நந்திபி ரானவில் வானரோ. (௧)

வேறு.

மைந்தகே ளனந்த னாங்கு வந்தமு தேசற் கந்நாண்
மைந்தம ரிராச சூடா மணியெனும் வளவற் கூய
மைந்தபல் வளந்து வன்ற மாபினி லுவகை மல்கி
* மைந்தறப் புரிம கோற்ச வத்திரு மாண்பு முற்றும். (௨)

வானநா டளிக்குஞ் சீர்த்தி மகபதி யுணர்ந்து சூத
கானநா டளிக்கு ணத்திற் களிந்தமு தேசன்காள
பாணனா டளிக்குட் போந்து பரவியத் திருவி ழாச்சீர்
மேனனா டளிக்கு லாவ விழுத்தக விதியாற் செய்தான். (௩)

அனந்தன்முன் னியற்று வித்தாங் கனந்தாம் வளரி யாற்றும்
வனந்தரு மனைய வாய்மை மகோற்சவத் திறஞ்சொல் வாமென்
றினந்தரு முனிவர் வானோ ரேனையர் தமையொ ருக்குங்
கனந்தரு வேத்தி ரக்கைக் கண்ணுதல் கழறு கிற்கும். (௪)

வினவுதி சனற்கு மாத வித்தக முனிவ ரேறே
யனகனும் பனக வேந்த னாற்றுமத் திருவி ழாச்சீர்
தனகமோர்ந் தெழுசு நாசி தண்ணரு ளமுத நாதன்
கனகவம் போரு கப்பூங் கழற்பதி கருத்த னாகி. (௫)

தழைத்தெழு மன்பு முன்போ தரச்சதா கதியைத் தன்முன்
னழைத்தனி லேச கேட்டி யாம்பிர காணத் தெம்முட்
குழைத்தரு ளுருவாய் மன்னுங் குலவமு தேசற் கிந்நாண்
மழைத்தரு சைத்தி ரோற்ச வம்புரி வாஞ்சை யுற்றும். (௬)

ஆதலி னமுத சூத வணிவனம் விரையச் சென்று
சாதலி னாங்கு முன்னர்க் கவினிறை செயல்க ளெல்லா
மோதலி னதிக மென்ன வுஞற்றுகென் றனன்கேட் டாங்குப்
போதலி னார்வ மிக்குப் பொருக்கென வெழுந்தான் மன்னோ. (௭)

ஆசுக மளிப்ப திந்த வருட்சிவ பணியே யன்றோ
வாசுக† மளித்து மாற்று மமுதலிங் கேச னம்பா
லாசுக வளிப்பா னாக வருட்டொடர் பிணித்தான் போன்மென்
றூசுக வேந்தன் மீநா யார்வமுந் தறச்செல் கின்றான். (௮)

---

* மைந்து - மயக்கம்.

† உகம் - உலகம்.

செல்வழி மயற்கடீது செப்பும்வான் றபதி கேட்டு
மல்வரு சைத்தி ரோற்ச வந்தனிச் சூத கானத்
தெல்வள ரமுத நாதற் கியற்றிய விழைந்து மாங்கட்
பல்வகை யணிகண் முன்போய்ப் பயிற்றுதி வல்லை யென்று. (௯)

இந்திர ஞானே யாமீ தென்பது மிசைத்தான் கேட்ட
தந்திர வழிசா ரெல்லாந் தணவறத் தெளிவான் றச்சன்
மந்திர நாதன் சூத வனத்துட னனுக ரோடும்
வந்திர வகற்றுந் தூய மார்க்கண்ட தோயந் தோய்ந்து. (௰)

தளிபுகுந் தமுத நாதன் சந்நிதி தாழ்ந்தி றைஞ்சி
யளிமிகுந் துந்தத் தான்முன் னூற்றுமக் கோயிலெல்லாங்
களிமிகுந் தெழில்வி ளக்குங் கான்முளை தன்னைக் கண்டாங்
கொளிபுகுந் திழுக்கக் கண்ணுற் றுலாப்பரு முவகை கூர்ந்தான். (௧௧)

இயலெழி லுலக மெல்லா மிலங்கிறு மிளஞ்சேய்க் கின்றோர்
செயலெழிற் புனைப்பர் காதற் றிறத்தினைச் செப்பி யோனை
வயலெழில் வேண்டா தென்பு மகிழுமத் திருக்கோ யிற்கு
வியலெழில் வகைக ளெல்லாம் விழுத்தக விழைந்து செய்வான். (௧௨)

நவின்முதற் கோபு ரம்முன் னந்திமண் டபத்து நீசி
யவிர்திசை யிடைவ சந்த மண்டபத் தகத்தி னூடக்
குளமென வலைத் தான்ற முன்னதன் றிதற்கண் டேறுதற்
றிவியமா மணிப்பொன் வேதி சிற்பநூ றிகழக் கண்டான். (௧௩)

நிலவொளி வயிரத் தம்ப நிரையுதி ரொளியவி மேனின்
மிலைகொளித் துகிர்க்கு டஞ்சா லிந்திர நீலப் போதி
குலவொளித் தான விட்டங் கோதில்செம் மணிமி டைக்கண்
கலவொளி நிலமேன் மூன்று கவினவோர் விமானங் கண்டான். (௧௪)

தூமணித் தூபி யுச்சித் தொழுமணி * நிரைத்தா னந்தத்
தேமணி விமானக் கேற்குந் திறமணி யுறுப்பெ லாமுங்
கோமணி நிரையின் யாத்துக் குலமணி கிரிசை யோடு
மாமணி கண்டன் மேவும் வனமணி பீடங் கண்டான். (௧௫)

அத்தகு வேதி கைக்காங் காயபொன் மணிச்சோ பானம்
வைத்தது சூழத் தாரீர் வந்துபோம் வழிய மைத்துச்
சுத்தநீ ராங்கி யாத்துத் தூநறு மலர்ப ரப்பிச்
சித்திர நிரைக ளெல்லாந் திறத்திற னுகக் கண்டான். (௧௬)

* மணி -- இடைக்குறை.

பிறங்குகண் ணடியோ வென்னப் பித்திகை யாதி யேனைத்
திறங்குல வணிக ளெல்லாந் திருத்தக வமைத்துள் ளாலம்
மறங்குசெவ் வியவ சந்த மண்டபப் புறம்பு சூழக்
கறங்குசீ ரிளம ரக்காக் கமழ்ந்துல களப்பக் கண்டான். (௧௭)

திருத்தகு மயிமு கச்சீர்த் தெனுதுவா யிலினை யெம்மா
னுருத்தக வெழுந்து பத்தி யுலாநடைக் காவ ணந்தான்
குருத்தகு விதான மாதி குலமணித் தொங்க லாதி
மருத்தகு மாலை யாதி மலிந்தொளி வயங்கக் கண்டான். (௧௮)

மரகதத் திலைக டண்டு மணிபொனாற் குலைய மைத்து
விரவுபூந் துகிரிற் றூக்கும் விழுமிய வாழை வெண்பொ
னரைத்துவர்ப் பழுக்காய் முத்தி னலர்முகை யாதிப் பூக
நிரைகள்பல் வகைய தன்ன னிரைநிரை யாகக் கண்டான். (௧௯)

நிலனெலாம் பளிங்கிற் சோதி நிலவெழச் சமன்செய் தன்ன
தலனெலா மதித லூடம்பசி ருரகா கணங்க ளென்ன
நலனெலா நிறைந்த தூய நகுமணி நிரைக ளாய
குலனெலாம் விளக்க மாகிக் கொழுஞ்சுடர் பரப்பக் கண்டான். (௨௰)

விரையெலாம் விராய சாந்த மெழுக்கெலா முகனுஞ் செய்தான்
விரையெலாம் விராய பன்னீர் மேலெலா மணப்பப் பெய்தான்
விரையெலாம் விராய தூபம் விசும்பெலாங் கமழச் செய்தான்
விரையெலாம் விராய சுண்ண விதமெலாம் விரியப் பெய்தான். (௨௧)

இடநிடந் தோறுஞ் செம்பொ னெழின்மணி குயின்று தூய
வடிபுனை விறைத்துச் செந்நெ லாவிலை மணிப்பொற் றேங்காய்
முடிதரு கருப்பை வாச மொய்ம்மலர் மாலை சேர்த்தி
நெடியொளிர் பூரகும்ப நிரைநிரை யாக வைத்தான். (௨௨)

இன்னன மேலு மேலு மெண்ணில வெண்ணி யெண்ணி
மன்னிய புரிசைவ சந்த மண்டப முதற்கோ டித்தாங்
கென்னையாண் மந்தி ரேச னிமாசலை யாவு ணின்ற
வன்னைவாழ் நிகேத னங்கட் களவிலா வணிகள் செய்தான். (௨௩)

தினமரு தமர்ந்து போற்றுந் திருத்தொண்டி னிலையர் தாமு
மினமரு தியாமுன் னெண்டாற் றிருந்தவி யிதுவன் றென்று
மனமரு தையுற் றெங்கை வடிவிரூற் றெறிவ வென்று
லனமரு விழைவி ருந்து மணிநிலை யளக்கற் பாற்றே. (௨௪)

உலகெலாந் தழைக்க வெம்மா னுலாவரத் தவஞ்செய் வீதி
நிலனெலாந் தருப்ப ணத்தி னிழலெழத் தூய்மை செய்தத்
தலனெலாம் வெண்ம ணற்றூந் தன்மையிற் றரள முண்லைக்
குலனெலாம் பரப்பி வேணிக் குடிஞைசெயன் றுவப்பச் செய்தான். (உ.ரு)

அம்மறு கிருபாற் கன்ன லாம்பைபூ கதவொ ழுக்க
மம்மறு கனைய கங்கை யாற்றிரு கரைகி லாவுஞ்
செம்மலர்க் கதலி யாதிச் செறிவென மியூவி ரீறு
செம்மணித் தொடைய லாதி திகழ்மக ரிகைகள் சேர்த்தான். (உ.சு)

இவ்வகை யேனை யாவு மெழில்வகை நிரம்ப முற்றி
யவ்வகை மயன்முற் றென்றுங் கனிலனுக் குணர்த்த வன்றே
றுய்வகை முன்ன ரேய வும்பர்கோற் குணர்த்த வொல்லைச்
செய்வகை யமரர் சூழத் தேவர்கோ னேங்குப் போந்தான். (உ.எ)

ஆரரு ளீர்ப்ப முன்னின் றன்புபின் றள்ள வுள்ளம்
பேரரு ளுலகெ லாஞ்செய் பெரியநா யகிபாகன் மேய
சீரரு ளமுத நாதன் சேவடி தாழ்ந்து பல்கா
னேரருள் வெள்ள மூழ்கி யின்புறப் பதிக னின்றான். (உ.அ)

காளகந் தாம மேச கனகநந் *தாம னேச
†காளகந் தார்க்கு மோச கவினகந் தாமா றுச
‡கான¶கந் தாசு தேச கனகந்தகந் தரச போச
||காளகந் தரச சூத கானகந் தயல் வாச. (உ.கூ)

வந்தனை தரணை முன்று மாமறு வுறுசெய் வார்க்கு
வந்தனை யிலுரி யக்க மலியமுன் பொலிய வாங்கு
வந்தனைத் தின்பமுற்றும் வழங்கமு தேச வாணி
வந்தனைத் துலகும் போற்று மாவனத் தரசே போற்றி. (ங.0)

*நாகவா சன வாத நசுமணிக் கடிகை யுச்சி
நாகவா சன பூசை நயந்தவ தருமே காச
நாகவா சன காதி நற்றவ குரவ வாசை
நாகவா சனம் போற்று நறியமா வனத்தாய்போற்றி. (ங.க)

---

* தாமம் - மலை. † காளகம் - கரியபாவம். ‡ காளம் - மேகம். ¶ கம் - சிரசு. || காளம் - சூலம்.

* நா - கவர் எனப்பிரிக்க.

தருமமால் விடையாய் போற்றி சைலயோர் புடையாய் போற்றி
யிருண்மனத் தடையாய் போற்றி யிதழியந் தொடையாய் போற்றி
சருமமுற் றிடையாய் போற்றி சதுர்மறை நடையாய் போற்றி
வருமயிற் படையாய்போற்றி மாவன முடையாய் போற்றி. (௩௨)

அரிவளர் மனத்தாய் போற்றி யடையலர்ச் சினத்தாய் போற்றி
கரிவளர் ரினத்தாய் போற்றி காளபோ சனத்தாய் போற்றி
துரிவளர் கனத்தாய் போற்றி தூயசோ பனத்தாய் போற்றி
நரிவளர் தனத்தாய் போற்றி நவிலுமா வனத்தாய் போற்றி. (௩௩)

வேறு.

என்றிவ் வாதி துதிக ளியம்பினோர்
நின்று செங்கை நீண்முடி மேலெழீஇச்
சென்று கூம்புறச் சிந்தை மலர்ந்துதா
ளொன்று மன்பி னுவந்திது வேண்டுமால். (௩௪)

ஐய வாரமு தேச வசலைபான்
மெய்ய மந்திர நாத விதூதிச்
செய்ய வேணிய சின்னஞ் சிறியனே
னுய்ய வேண்டிநின் சந்நிதி யுற்றனன். (௩௫)

உற்று வேனிலின் சைத்திர வுற்சவ
முற்று நான்முறை தொட்டு முடித்திட
வொற்றி வாழ்விருப் பெய்தினு னேழையேன்
*பெற்று நந்தநின் பேரருள் வேண்டுமால். (௩௬)

நமை தொன்றுறற் கெண்ணி னடுவிடர்
படைபு குந்திடும் பண்பினர்க் கும்பெனி
னமை தொன்றுபரி னுயினேற் கன்னவை
பழமுற் றெய்தல் பகர்தலும் வேண்டுமோ. (௩௭)

செய்த கோத வியாதுந் தெரிதராப்
பைதல் வாழ்க்கையுட் பட்டுழ லேழையா
னெய்த வில்லை யாதமொ ராயிர
மைத செய்தற நண்ணினு மண்ணலே. (௩௮)

திருவு ளம்பொழுத் தாள்கெனத் தேவர்கோன்
மருவு ளம்புயத் தாளின் வணங்கிமேல்
வெருவு ளங்கெறு நந்திமுன் வேண்டுபு
தருவு ளம்புரி யாணை தலைக்கொளா. (௩௯)

* பெற்று - கடைக்குறை.

தன்ன தேவர் குழாத்தினைத் தானமைஇத்
தன்ன மும்மணம் வேறொன்றிற் சார்ந்திடா
தின்ன வுற்சவத் தின்புற நீர்விழைந்
தின்ன ரின்ன வியற்றுகென் றேவினான். (சo)

ஆசை யாசையிற் போற்று மமரரை
நேச மிக்க நிமல நமாங்கா
ளோசி லாத விழாவிங் கியற்றுதல்
பேசி னுந்துணைப் பேறுகொண் டேயென. (சக)

முகம னேதி யவருண் முதிர்கிதித்
தகவற் கோனவன் றக்கிணை யாதிய
தொகுபொன் னொடொறுங் காலந் தொறுந்தொறு
மிகவ ளிக்கும் வினைநினக் கென்றனன். (சஉ)

எழு நாக்கொ ளெரியினை நோக்குபு
வாழி வேண்டிடந் தோறும் வகைப்பல
கேழின் மிக்க சுவையிற் கெழுமுணா
ஆழி னுக்குந் தொழிலுனக் கென்றனன். (சங)

அனில கேட்டி யனகன் சினகாம்
புனித வீதிக ளாதிய பூவெலா
மினிய கண்ணடி யென்ன விளக்குமவ்
வினைப ரிக்குதி யென்று விளம்பினான். (சச)

வருண வாதனச் சோதனி மாண்பணி
புரியி டந்தொறும் பூம்புன றாம்பணி
மருவ முக்கின் மெழுக்கு மலர்பணி
புரிய வுன்றனக் கென்றன னும்பர்கோன். (சரு)

நிருதி யீண்டு நிருத ரசுரர்கள்
பெரிய பூதர்முற் பேத வகையினோர்
புரியுந் தீவினை யாண்டும் புகாதுநின்
றரிதி னோம்பனிற் காமென் றறைந்தனன். (சசு)

நடுவ கேள்வரு நாற்புறத் தோர்களு
மிடையொ ருக்கை நடுவின் விலக்கிநின்
றிடரு றுநெறி செல்ல வியக்குகோ
னுடைய கைத்தொழி லிற்கென் றுரைத்தனன். (சஎ)

கோதி லுற்சவங் கொண்டருண் மண்டபத்
தாதி வீதி யெழுச்சியி லண்மிகின்
றேது கோற்றொழி லாற்று முரிமைகிற்
சேத ரும்பணி யீசகொள் கென்றனன். (சஅ)

ஏற்ற வேற்ற பணிக ளியம்புபு
சாற்று சோதிடர் யார்க்குந் தனிக்குரு
போற்று தன்குரு வாம்பொன் னவன்மலர்க்
காற்று ணைக்க ணமந்து கழறுவான். (சகூ)

ஐய மந்திர நாத னருள்விழாச்
செய்ய லாந்தின மோரை சிறப்புற
வுய்ய வோர்ந்துரைத் தாள்கென வோர்ந்தவம்
மெய்ய ஞானியன் றோதினன் மேதக. (ரு0)

நாளை யென்று தொடங்க நலந்தரு
நாளை யோதிய நற்றவர்ப் போற்றியந்
நாளை யேதன் னவையொழித் தின்பரு
* ணாளை யென்று நயந்தன னுகர்கோன். (ருக)

வேறு.

தந்திர நாதன் வேத தத்துவப் பொருளாய் நின்ற
மந்திர நாதன் செய்ய மகோற்சவத் திருநா ளிந்நாள்
வந்திர வகற்று காட்சி மனம்விழி குளிர்ப்பக் காண்கென்
றிந்திரன் முடங்க நீட்டி யெங்கணு மினிதுய்த் தானல். (ருஉ)

மடுத்திடு முடங்கல் கண்டார் பொய்யென மண்ணோர் விண்ணோர்
பத்தியி னிறைஞ்சி யேற்றுப் பனிமலர் தூய்ப்பூ சித்தா
ரித்திசை யன்றே சீர்த்த வெத்திசை களினு மென்று
வத்திகழ் தூத கான மடுத்துநாற் றிசையுஞ் சூழ்ந்தார். (ருங)

புல்லொடுஞ் சமிதை யோடு நூலொடும் போது வாரு
மில்லொடும் வேள்வித் தீக்கை யியையொடு மேகு வாருஞ்
செல்லொடு தோய்கா னின்று தவத்தொடுஞ் செல்லுவாருங்
கல்லொடு தோய்ந்த வாசக் கறியொடுங் கமனிப் பாரும். (ருச)

சமையம்வாய்ப் புறப்பெற் றெம்மான் றரும்பணி செய்கிற் பாரு
மமைமணிசே டாதி வாய்ப்புற் றகம்புறத் தருச்சிப் பாருங்
கமைமடைச் சிலம்பி ளேறை கண்டுகேட் டிருக்கொள் வாருந்
தமையுணர்க் தமைந்து சார்ந்து தாபிரன் டறவாழ் வாரும். (ருரு)

* ஐ-சாரியை

எற்புடை வேட்டன் முன்மூ விருதொழி லியற்று வாரு
நாற்படை சூழ வாழு நானிலப் புயற்றி ஞரு
மேற்படை துலாக்கோ லாக மிளிர்ந்தி விளைவி ஞருஞ்
சாற்படைத் தொழின்மீக் கூர்ந்து சகமுழு தாய்விப் பாரும். (௫௧)

களிறொடு பிடிக ளென்னக் களியொடு நடவு வாரு
மிளிர்மூகி லோடு நீங்கா மின்னென விரவு வாருங்
கிளியொடு மின்சொ லாடிக் கிளர்வொடு மேரு வாரு
மளியொடு புயத்த லங்க லலங்கவே யன்று வாரும். (௫௨)

ஆதிவ யாதி யானே யீனவரு மாங்காங் கண்டான்
மாமகிழ் பூப்ப வன்னோர் மாபுது மிலையுட் கொள்கை
தாமுணர்ந் தவா வர்க்காந் தாத்திரெட் டினையுந் தொண்டு
தேமுற வசித்தற் கொத்த வசதியி னிருப்பச் செய்தான். (௫௩)

இன்னன வேலை யாவை யெழில்விழா விற்கு வேண்டு
மன்னன வங்க ணக வமைத்தன ருக வாறோர்
மன்னனச் சிறப்பு நோக்கி வான்வரு பானு தானுந்
துன்னன விழவு காண்பான் ரேயமே னாலை புக்கான். (௫௪)

புள்ளின நாலை யென்னப் புரரிதன் றிருவி ழாவைத்
* தெள்ளின நமாங் காணுந் தெரிசனு யத்த மாக
† வள்ளினம் வருதல் வேண்டும் வம்பினங் குடம்பைக் கென்று
நள்ளின வழைத்தல் போன்று நான்றன செல்வ வானில். (௫௫)

உலகெலாம் பொதுவிற் கொள்வா னுளமு நிறைந்தா நின்ற
நிலைகண் டோர்புள் ளோனை விரிமற் றேர்புள் வந்தோ
நலிவுற வில்ல தோக நாயகன் கருணை யென்றே
பொலிவுற மின்ப தாண்பாம் விலை வழிப் புகட்டல் காட்டும். (௫௬)

ஆயதோர் காலை மாலை யளிர்மதி யமைர் கோமான்
மேயதோர் பணியு நம்பால் விதித்திலை ருக வாதச்
தூயதோர் விழாவி ளுஞ்செய் தூப்பணி நகரின் றென்மார்
சேயதோர் பணிசெய் கென்றுத் தெளிகடற் றுளித்தெழுந்தான். (௫௭)

எழுந்திடு மதியோன் செய்த தென்னென வுரைத்து மம்மா
தழுந்தம பணிசெய் வாரோர் தாம்வழி வந்த வேடு
மழுந்தம சேசுநதி யவைவர்க்கு மமுத மாய்ப்
பொழிந்தயர் வொழித்து மேலும் புரிபணிக் காற்றல் செய்தான். (௫௮)

---

* தெள்ளினம்-முற்றெச்சம். † வள்ளினம்-இதுவுமது.

புனிதன்முன் னுலை வாயிற் புரிந்தருள் புண்ணி யாக
வினையுறு சாந்தி போற்றன் விழுத்தகு கிரண சீதங்
கனியமு தனைய சூத காரணை முற்றும் பெய்தாங்
கினியமா புண்ணி யாக மியற்றினன் மதியோ னென்பார். (சுச)

சார்ந்ததன் வண்ண மாதல் சாற்றுயிர்க் கியல்ப தென்ப
சார்ந்ததன் வண்ண மாமுன் றழலெறி கொடுங்கா றிங்கட்
சார்ந்ததன் வண்ணஞ் செய்த சாற்றரு வுயிர்போற் றூனுஞ்
சார்ந்ததன் வண்ணத் தாலோ தகும்பிதென் றுவப்பிற் சால்வார். (சுரு)

வாட்டமிக் களிக்குங் காலம் பிரிவென்ப மகிழ்கூ டின்ப
ஊட்டமிக் களிக்குங் காலங் கலப்பென்ப வுண்மை தெய்வ
நாட்டமிக் களிக்கு மெல்லி நலியாற் பணிகள் செய்தோர்
கூட்டமிக் களிக்கு மல்லி தெனக்கலாய்க் குலவி னால். (சுசு)

நாளொன்றை யொருபால் வெப்ப நண்ணவோர் பாதி தட்ப
மாளொன்று வைத்த துய்வா னுவிகட் கென்ப கண்டாம்
வாளொன்று வெயிலி னெய்த்த வருத்தமுற் றவிர்வெண் டிங்கண்
மீளொன்று விலக்கிற் றென்று விழுந்தக வழுத்து வாரால். (சுஎ)

இந்துகண் டேற்ற செய்கை யின்னன வாக விப்பான்
முந்துகண் டுறக்கு டாது மூரிநீர் மூழ்கும் பானு
வந்துகண் டமைகோன் செல்வ மலிவிழா வின்பு துய்ப்பா
னைந்துகண் டெருகு ளுது நாலைமீ தெழுந்தான் மன்றே. (சுஅ)

வருபரி நிசி மேலை நோக்குங்கான் மதியோ னன்
றரிசன முறவி னைத்த நன்மையா நன்மையாலோ
வரியமேல் கடற்கு வீழ்ந்தோ னணியமிழ் கடலெழுந்து
அரிசறுத் தருளை மப்பர் தோற்றமுந் துணையப் பெற்றான். (சுகூ)

குறைவிருங் குத்த ராய ணத்தனு யதீசி செல்வோ
துயிற்று மருளாற் கீழை யார்கவி யெழீஇ விழாவி
னையயிக் கீர்த்த லைக் கிலையொழிக் தமுத நாதன்
கோயிலுள் கோர தாகக் குறித்தவா னிவந்து வந்தான். (எ௦)

வருடங்க டோறு மெக்கை மந்திர நாதன் செய்ய
வருடங்கு வைத்தி தோற்ற வந்ததி சித்தற் காங்கு
மருவுந்தன் மையிலா யோரார் மாதவன் றகன்ற தாலே
தெருடந்த விசவி தேமெசெல்வதென் றுரைப்பர் மாதோ. (எக)

நாயக னுளத்திற் கேற்ப நடத்தலே குலத்திற் போந்த
தாயகற் பினர்மாண் பென்னுந் தணிவினைக் காட்டி யாங்குத்
தோயமுற் றெழுந்து கொண்கன் கடிமுக மலர்ச்சி நோக்கி
மேயமுண் டகங்க டங்கண் மிளிர்முக மலர்ந்த மாதோ. (௰௨)

தாவில்சீர்க் குலமா தர்க்குத் தந்நிலை போலி நேருதல்
சாவினிற் சாத லேயாந் தலையளி யென்ப தேற்று
மேவிய விரவி நேரில் விதுமுக வொளிம ழுங்கக்
காவியங் குமுதப் போதங் கண்முகங் கூம்பிற் றம்மா. (௰௩)

செயலொழி வுறக்க மீண்டு செயல்விழிப் பன்றி வேறு
மயறரு முறக்க மில்லா வானவ ரோடு மேனை
முயல்வினை மாந்தர் யாரு முந்துறப் புரியுந் தத்த
மியல்பணி யுள்ள மூக்க வெழுந்தன ரியற்று கிற்பார். (௰௪)

தேவர்கோன் குரவன் சொன்ன சித்திரைத் திங்க ளிந்து
மேவளர் பக்கத் தைந்தின் மிருகசீ ரிடநா டன்னி
லோவறு செயமு கூர்த்த மொன்றரு தோருத யந்தான்
மேவுமப் பொழுதே யன்பு மீக்கிளர்ந் தெழுவெ ழுந்தான். (௰௫)

நித்திய மாதி மூன்று மிமலனு கமத்தி னுற்ற
வொத்திய நமக்கே நல்க வுறுமதி காமம் வாய்ந்தோர்
சத்திய சிவதீக் காதி சமங்கார முற்றும் பெற்றோர்
முத்திசெய் பரம னைந்து முகோற்பவர் வழிவந் துற்றோர். (௰௬)

வேறு.

ஆயசிவத் தவிசர் குழீஇ யமர்ந்திருக் கூட்ட முன்போய்
நேயமிகப் பணிந்தெழுந்து நேர்நின்றவ் வானவர்கோ
னாயகனே யான்மார்த்தம் பரார்த்தமெனு மிவற்றிருபாற்
றாயசிவார்ச் சனைபுரிந்தே யுலகெலாந் தொழுகின்றீர். (௰௭)

எந்தையுமு தேசனுக்கின் றடியற்றுவிழாத் தொடக்குறுக
வந்தம்வரை புரிசெயது மன்றியுற் சவமுதலு
வந்தசெயன் முழுதாதும் மான்செயலே யெனவோர்ந்து
மிந்தவிழா வியற்றுகென யான்வேண்டன் மிகையன்றே.* (௰௮)

அமரரெலாந் தொழுவானைத் தாவேசின் மொழியென்னே
நிமலன்மகோற் சவமிதனை நீவேண்டி நடத்துதலா
லெமதுசெய வியற்றுதொழி லேதுபெருஞ் சொல்லினதாற்
கமைதருகர்த் திருத்துவநின் கண்ணதெனா வுரைத்தோர். (௰௯)

* என்றுனென்பதுவாய்க் கிளையாற்கொள்க.

அனுமதிபெற் றகமதியா னைதரச வனுஞையெனும்
வினைவிளக்கி யோதியுணர் வேதியர்தம் மனுஞையும்பெற்
றெனையருளு மழுதேச னிமாசலபூ சனைசிறப்ப
வினிதுபுரிந் தெதிர்வேண்ட லெனுந்தேவா னுஞைபெற்றார். (அ0)

அக்கடவுண் மாமறையோ ரனையமகோற் சவமிடையோர்
விக்கினமு முறுதினிது வேண்டியவா முடித்தருள்வான்
மிக்கமறை முதற்பொருளாம் விநாயகனை விதிமுறையாற்
பொக்கமிலாப் பேரன்பாற் பூசித்தா ரருள்பெற்றார். (அக)

பின்னனைய விழாவினுக்காம் பெருநிதியந் தூய்தாக
வன்னதனைச் சனைபுண்ணி யாகவா சனமாதி
முன்னருளுந் தினர்வாத்து சாந்திவினை முறைபுரிந்தார்
தன்னிகர்மா மறைபரவுந் தனிவில்வ தருமூலம். (அ௨)

தனிமுத னாதனிரு தனையரொடு மிடத்தமர்ந்த
வனிதையொடும் பிதாவிருகால் வாங்கியவோர் காவொடும்
புனிதமயிற் றேவிரொடும் புடைமிர்பல் வரிசையொடு
மினிதினெழுந் தருளிவீற் றிருந்தருளப் புரிந்ததற்பின். (அ௩)

விதிமுறையிற் பூசனையும் விருக்கமு மைத்தியற்றித்
துதிசெய்திருத் திசையதன்பாற் றெரட்டெடுத்துப் பட்டடுத்த
கதிர்மணிசூழ் பொற்கலைத்திற் கைக்கொண்டு பக்கமுறப்
புதியமதி வேணியொடும் பொற்கோயில் புக்காரால். (அச)

இன்னமுறை யோதிருச்சங் கிரகணமாங் கியற்றியபின்
மன்னாதிருத் திசைமுக்கடு குந்தியவை யொல்வொர்வகைச்
சொன்னமுமேப் பாலிகையிற் றாயேற்றின் றவசமொடு
மன்னுவிழாத் தீர்த்தமென்மு வகைக்குறித்தா முளைதெளித்தார். (அரு)

இவ்வகைசெய் தந்தாரப் பணமிரட்சா பந்தனமீற்
றெவ்வமறப் புரிந்துவிடை யெழுதுபடம் பூசித்துத்
தவ்விழவ சாதிவா சனம்பேரி தாடனமுற்
றைகவருடம் வினைகளுமக் கிரமமொல் லியின்முடித்தார். (அசு)

வண்டிசைகா வலர்களுமாங் கிருந்தொண்டு புரிந்துறினும்
பண்டிசைநால் வழாதுதிசா பந்தனமும் முறைபயிற்றி
வண்டருமக் கிராமதே வார்ச்சனமு மாபியற்றித்
தொண்டர்மகிழ் தரவிமயத் தோகையொடு மழுதேசன். (அஎ)

தனக்கினிய விசேடபூ சனையாற்றி மகிழ்ந்தேத்தி
மனக்கினிய வருடருசோ மாக்கந்தர் தமைத்கொண்ட
ரினக்கினிய மண்டபத்தி னெழுந்தருள்வித் தெதிர்மாயின்
வனக்கினிய மால்விடைமுன் வைத்தபடந் தாழ்த்துயர்த்தார். (௮௮)

ஓதுமுறை மாதுவசா ரோகணமீ தருத்தியுடன்
மேதகவெண் கொடிகளினும் விடையுயர்த்தாங் குடன்யாக
வேதிதிகழ் சாலைபுகுஉ மேவுபரி வாரமுடன்
மேதகுயா கேசகடம் விதிமுறைபூ சனையாற்றி. (௮௯)

கோதான விலக்கினவ குண்டமுற முறையங்கி
யாதான முதலான வாற்றியா குதிகளொ
மீதானம் புரிந்தீண்டில் விதக்கங்கி விளைகிழ
மாதான மமர்ந்தருள்சோ மாக்கந்தர் திருமுனுமீடு. (௯0)

அளிபெருக கனிசிறப்பி னமர்தருபூ சனையாற்றிக்
களிபெருக வாங்கோளி கவினவிரண் டணிந்தவாற்றி
ஞொளிபெருக வெம்பெருமா னென்றிறுமை யொன்றியைந்து
தளிபெருக வலம்போந்து தகவின்மகச் சாலைதனில். (௯௧)

எழுந்தருளி வந்தனைய விருஞ்சாலை யமிமுகமாய்த்
தழுந்தகைய பச்சிமனோர் தான்பூர்வ முகத்தருளே
பொழிந்தருளி நின்றருளப் புரிந்துமகம் பூர்த்தியுற
மொழிந்தமுறை பூரணா குதியினிது முடித்ததன்மேல். (௯௨)

அன்னமகச் சாலைநடு வமர்ந்துயர்ந்த வேதிகையின்
மன்னமுத நாதனிடம் வளர்பெரிய நாயகிதஞ்
சொன்னகடத் திரும்பூசை தொடாவிரு பாங்களிலு
நன்னர்மகா தீபாதி நலம்பெருகு முறைபுரிந்தார். (௯௩)

சான்றசிவத் துவிசரிவர் தம்பகும்ப விம்பமொது
மூன்றினுமிம் முறைபூசை முடித்திடவத் திருக்காட்சி
யோன்றுலகுக் களித்தவனின் றெழுந்தருளி யெம்பெருமா
னன்றதிரு வீதியிலெம் மன்னவொடு முளைத்தருவான். (௯௪)

பானுமதி யெனுமிருவர் பல்லுருக்கொண் டெம்பெருமாற்
கானபணி புரிந்தாய்வா னடுத்திருபால் வாலேய்ப்ப
மேனிமிர்வுற் றவிர்செம்மை வெண்மையன விரிகவிகைக்
தானநிரை நிரையாகக் கவிந்துமிழ னனிபாப்ப. (௯௫)

ஒருபாறன் பாலாக வுமைகவர்ந்தா டவம்புரிந்தா
ளிருபாலும் பெறப்பணிமீண் டியற்றுவலென் றடுத்தனள்பல்
லுருவாகிக் கங்கைதனை தொண்டிரைவீ சுறுசெயல்போற்
றருவான மகளிர்பலர் சாமரைகள் புடையிரட்ட. (௯௬)

பின்புதமை மடிக்கிடத்திப் பெருந்தானைச் சிறுகால்செய்
தின்புதவு மம்மையப்பர்க் கீண்டிதுசெய் திடன்முறையென்
றன்புதரு தொண்டர்பல வருஞ்செயல்வீ சனக்கொண்டு
முன்புதனித் தனிவிசிறு முழுமணக்கான் முகட்டுப்ப. (௯௭)

தொடர்பிருபா லாலவட்டஞ் சுருட்டிகிரை யாதிசெல
மிடையுமெருக் கொதுக்குமுடி விடையொளிர்பொற் சோதுலை
விடியகல்வான் பறந்தோடு மியலிருபுள் ளிவைமுதல
கொடிகடமக் கோரமசாய்க் குலவுவிடைக் கொடிமுனுற. (௯௮)

யாமிதுகா றந்தோநம் மிருநடனத் திறனோரா
ஆமர்முன நடித்தலுந்தோ மோதுநட விகற்பமெலா
மேமுறவோர்த் திடுமெம்மா னிதுவன்றே பெரும்பேறென்
றுமகல்வா னரமகளி ராங்கனெதிர் நடித்துவர. (௯௯)

நாதமெமை மொடுங்குறிமுன் னெண்ணியவா பின்புபல
பேதமுற விறைவன்முனம் பெருகவிரிந் தெழுவவென
வேதவொலி தமிழ்வேத மிக்கவொலி தொக்கபல
கீதவொலி பல்லியத்தின் கிளவொலிகள் வளர்ந்துவர. (௪00)

இருபாலு மெசுர்வேத மெடுத்தோது மிசைபெருக
மருவாரின் றேனையமா மறையொலிபின் மல்கிவரத்
தருவாய்மைத் தமிழ்வேதஞ் சந்திதியின் மன்னிவர
வொருவாத சிவநாம கீர்த்தனத்தி ரோசையெழ. (௪0௧)

வீணைமுதற் றந்திரிகண் மேயபல கருவியிசை
காணமர்வேய்ங் குழலாதி துளைவகைய கருவியிசை
யேணமர்தோற் கருவியிசை யியைதருதா ளத்தினிசை
கோணரிதாய் மிடற்றெழுந்து குலவுமிசைக் குலம்பெருக. (௪0௨)

வந்தியர்மா கதர்சூதர் மலிதருமங் கலம்வீரம்
பந்தியமா புகழ்முறையே பண்புறநின் றெதிர்பாட
முந்தியசீர்ப் பாவாணர் முதிர்சுவைநாற் கவிசூட
விந்தியசீர்த் தவர்போற்று மிருந்துதிபற் பலகூட. (௪0௩)

குருக்கொண்ட மதிமௌலிக் குழகனருட் டுவெள்ள
முருக்கொண்டத் திறம்பொலிந்தெதவ் வுயிர்க்குமளித் துறக்கோயைத்
திருக்கொண்டர் திருமேனித் திருவெண்ணீற் றொளிபாவக்
கருத்தொன்று மாவோசை கண்மலர்நீர்த் திரைவிரவ. (௧0௪)

திருவருளி னடங்கிமனச் சிந்தைதெளிந் தன்புருகுந்
தாதிருமெய் யடியர்சிவ தசபுரா ணத்தவையின்
வருமரிய பெருமகிமை வகைகளியு வகைசிறப்பப்
பாவிவினை யுநர்களிப்பப் பரிவினொடுத் தோதினார். (௧0௫)

விண்மாரி யெனப்பொழியும் விழிமாரி யன்பர்தருங்
கண்மாரி சொரிவிரைப்பூங் கவின்மாரி சிவஞான
வண்மாரி தருதமிழ்மா மறைமாரி யுடன்பதினென்
பண்மாரி முதலாய பலமாரி நலம்பெருக. (௧0௬)

எமதுரிய மேகாச மெனவகித்துச் சிறப்பளித்தோ
னுமையருளு மெனவடுத்தாங் கியமனைத்து முன்போதக்
கமைதருமா மறைபரியாக் காதலித்தா னுதவினு
னமையருள்வா னெனப்பரிவ னடம்புரிந்தங் குடன்போத. (௧0௭)

சிவனெனுநா மந்தனக்கே யுரியனென மறைதெளிக்க
இனியதமிழ்ச் சுருதிபுகல் செழும்பொருளோர் தேற்றுதல்போற்
சுவணகட முதற்றேவ மங்கலமாந் தொகையெட்டு
மவிரிழையான் மடவார்க ளணித்தாக வெடுத்தேக. (௧0௮)

என்னவோ துதுமெல்லை முடையபிரான் றிருவெழுச்சிக்
கின்னணமற் றென்னவுமாய் கைதரமலர் மணிமறுகின்
முன்னவன்மா தேவனிறை முக்கணன்வந் தானென்று
சின்னமொலா மெடுத்தோதத் திருவுலாப் புறம்போந்தான். (௧0௯)

திருக்கோயின் முன்போந்து தேவரிறு மெடுத்தேந்துங்
கருப்பூரச் சுடர்முதலை கவினுறமும் முறைசூழத்
தருக்காதி சைவர்செய்பூ சனையேற்றுட் சென்றருளி
விருப்புரு மணியணைமேல் வீற்றிருந்தா னமுதேசன். (௧௧0)

இம்முறைநா ளோறேற விருஞ்சிறப்பு நனியேற
வம்மலிரு பொழுதுமெழுந் தருள்பவனி யெவர்க்கைப்பார்
நம்மையருள் ளினைபெரிய நாயகியோ டமுதேசன்
மும்மையுல குயவுரு முறையூர்தி வகைமொழிவாம். (௧௧௧)

### வேறு.

பின்னர் வழிநாட் காலையிலெம் பிராட்டி யோடு மாந்தோளி
தன்னரி விறைவ னுலாக்காட்சி தந்தந் நாளின் மாலையினிற்
பன்னவரிய சித்திரைப்பூம் பந்தர் நிழற்கீ ழுருதேசன்
மன்னு காழி மணியெழுச்சி மாண்பு நினைப்பித் துலாப்போந்தான். (௧௧௨)

மூன்று நாளிற் காலையுலா முன்னை முறைபோந் தன்றிரவிற்
றூன்றூழ்ந் தல்குற் குடைந்தபணி தன்னைச் சுமப்ப வுமைபோதக்
கோன்று னிவண்சார் பிரிவாற்றுக் குணத்தி னடைந்து தரித்ததெனச்
சான்றோர் பரவு கயிலாயத் தனிவா கனமெம் பிரானூர்ந்தான். (௧௧௩)

வருநான் கெனுநாட் காலையுலா மரபிற் போந்தவ் விரவினடை
தெருளோ திமமூர்ந் துமைபோதத் திகழ்சே வடிமுன் முடிசூட்டும்
பெருவாழ் விலுமீ தரிகமெனப் பேணு நந்தி மிசையவற்குப்
பொருவா முன்னூற் சிவஞான போத மளித்தோ னுலாப்போந்தான். (௧௧௪)

ஐந்தென் றிநாட் காலையுலா வடைவிற் போந்தந் நிசிகரத்து
கந்தன் சொல்லா முதருந்து கருணைக் கிதுகைம் மாறெனல்போல்
முந்தூங் கிளியூர் தாயுமையும் முதல்வன் கணேச னெனற்கிசைய
வந்தாம் பூதந் தனைவசந்த விழாக்கொண் டூர்ந்தா னும்பர்பிரான். (௧௧௫)

இருமூன் றெனுநாட் காலையுலா வெழிலார் தரப்போந் தந்நிசியம்
பெருமான் றனையூ டலின்வெல்லும் பெற்றி புறந்தந் தெரிப்பதென
வரியூர்ந் துமைபோ தவெம்மா னயிரா வணமூர்ந் தருகயிலைக்
கிரியூர் பட்ட வர்த்தனமாங் கிறைமை தெரித்தாங் குலாப்போந்தான். (௧௧௬)

அறமே வேழா நாட்காலை யருமை யுலாப்போந் தன்றிரவி
னறமே யுருவா யென்னும்வள மறமே புரிவா ளதுதெரித்தாங்
கறமே யுருவாம் விடையூர வண்ண லுருவிற் கலந்திடர்மூற்
றறமே வியதோர் தொடர்புணர்த்தாங் கருமால் விடையூர்ந் தருள்புரிந்தான்.

இருநான் கெனுநாட் காலையுலா விளங்கப் போந்தவ் வுயிர்க்கு முறை
யொருவா தாட்டி வளர்க்குமுயிர்த் தாய்தா னென்ப துணர்த்தாங்குத்
திருவார் காம தேனுவுமை செலுத்த மால்பின் னவதாரத்
தருவா யருள்வேட் டிவண்மேற்கொண் டேற்று னெனப்பாய் மாவூர்ந்தான்.

ஒன்பா னுறைநா ளுமையொருகோட் டும்பன் மயிற்சேய் சண்டேச
னென்பா ரொல்லோர் மாமணித்தே ரிவர்ந்து திருமா மணிமறுகி
னன்பா லுடன்போ தவெம்மா னமுத நாத னணிமணித்தே
ரின்பா லூர்ந்தாங் கருட்கோலத் தெழிலார் காட்சி யினிதளித்தான். (௧௧௯)

ஒருபா ஞளிற் சிறுகாலை யுடையா னுடையா ளுடன்காட்சி
தருவாழ் வருளி யுவந்துதவளித் தனிவெள் விடைமே லிருமலைமாந்
தெருண்மா தீர்த்தந் தனிற்போந்து தீர்த்தங் கொடுத்தா னுலகமெலாம்
பெருவாழ்வளித்தாங்கருள்வெள்ளப்பெருநீர்தோய்ந்தின்புறப் புரிந்தான். ()

பின்னர் யாக விசர்ச்சன நூல் பிறங்க வாற்றி யாகேச
சொன்ன கடநீ ரமுதேச சுயம்பு மூர்த்திக் கபிடேக
நன்ன ரியற்றி விசேடார்ச்ச னைமுன் புரிந்தவ் வமுதேசன்
முன்னர் விடைமான் கொடியிறக்கி முதரீக் கூர்ந்தார் சிவத்துவிசர். (கஉக)

ஈற்றிற் புரிசண் டேசவிழா விலங்கப் புரிந்தா ரெண்டிசையும்
போற்றுபால ரங்கு ரங்கள் புனைந்த விரட்சை விசர்ச்சனங்க
ளாற்றிற் புரிந்தா ரமுதேச னன்னை பெரிய நாயகிதன்
சாற்று கலியா ணோற்சவமுந் தயங்க மரபின் முறைபுரிந்தார். (கஉஉ)

வருநா டோறுந் தனிவசந்த மணிமண் டபத்தி லீற்றிருந்து
திருவார் விழாக்கொண் டருளியவச் சிறப்பி னனந்த மடங்கின்றுட்
பெருகா நிற்பப் புதுநீர்சூழ் பிறங்க யாத்து நறுமலர்பெய்
தொருவா நாப்பண் மணிபீடத் துமையோ டுமையா ளமுதேசன். (கஉங)

தனக்கு நபன கும்பாதி தாபித் தருச்சித் தாழமரபின்
மனக்கொண் டினிய வபிடேக வகைகள் பெருக நனிபுரிந்தோ
தனக்கு வாழ்வர்க் காதிசைவே த்னமா பூசைச் சிறப்பியற்றி
மனக்கு மகிழ்கூர் விடாயாற்று மாண்பின் விழாச்சீர் வயக்கினர். (கஉச)

உடனுங் கெழுந்துட் சூழன்முத லோரைந் தாவ ரணங்களினும்
புடைமா மறைதே வாரசிவ புராண நிருத்த வாத்தியங்க
ளிடனீ ளோதை யோடொன்று யிலங்கி முறையே தொடர்ந்துவர
நடநா யகன்சூழ் போந்திருக்கை நணிவீற் றிருக்கு நலம்புரிந்தார். (கஉரு)

சாற்று மிவ்வா றமுதேசன் சைத்தி ரோற்ச வஞ்சிறப்ப
வாற்றின் முடித்த சிவத்துவிச ரளிர்வெண் பூதி பிரசாதம்
போற்று வலாரிக் களித்தாசி புகன்றிவ் வரிய பெரும்பயனீ
யேற்று வாழ்கென் றுபசரித்தா ரிறைஞ்சியேற்றாங் குடல்பொடித்தான்.

பின்ன ரனைய சிவத்துவிசப் பெரியர்க் கரிய வணியாதி
மன்ன வணிந்து மாபூசை வயக்கிச் சிவிகை களி னிவர்ந்தாங்
கன்னர் வீதி வலம்போந்தாங் கமரா சிரியோற் சவமுறையே
நன்ன ரியற்றி யடியுறைக ளயப்ப நனிதந் துளமகிழ்ந்தான். (கஉஎ)

அடைந்து நெகிழ்ந்து நெகிழ்ந்துருகு மன்பு பெருக வருள்வெள்ளங்
குடைந்து பணிந்தாங் கமுதேசன் குளிர்தா மரைச்சே வடிநிழற்கீழ்
மிடைந்து தனிவீற் றிருக்குமனை மீட்க லாற்றான் புறவிடைபெற்
றடைந்து வினைநீங் கியமகவா னும்பரோடு மும்ப ருற்றான். (௧௨அ)

என்னை யுரைத்தாங் குதவனத் தெய்தி யுய்ந்தார் பெருந்தொகையோ
ரன்னை யினும்பே ரருளுடையா னமுத நாத னடைந்தவே
முன்னை வினைதீர்த் தருள்வகைகண் முற்று முகம்பற் பலகோடி
தன்னை நிலைசெய் துரைப்பினுமர் சேடன் றனக்குஞ் சாற்றரிதே. ()

மன்மெய்ஞ் ஞான சனற்குமா ரமைந்த விண்ணோம் விரிப்பதையென்
னுமலி னுயிர்க டிருவருள்பெற் றுயமெய்ந் நூல்சொல் சாதனம்பற்
பலவன் னவையா வருக்குமுறை பயிற்ற வருமையவைக்கெல்லாந்
திலக மியற்றற் கிலகுவிது சிவபு ராண சிரவணமே. (௧௩0)

சிவபு ராண சிரவணமே தெளிநூல் பலசொல் லறங்க ளெலாஞ்
சிவபு ராண சிரவணமே சேர்க்குஞ் செல்வத் திறங்களெலாஞ்
சிவபு ராண சிரவணமே சேர்க்கு மனைநன் மக்களெலாஞ்
சிவபு ராண சிரவணமே சேர்க்கும் பலவா மின்பமெலாம். (௧௩௧)

சிவபு ராண சிரவணமே சித்த சுத்தி முதலளிப்ப
சிவபு ராண சிரவணமே செறிமும் மலத்தைத் தெறுவதுவே
சிவபு ராண சிரவணமே சீவ குணநீத் தளிப்பதுவே
சிவபு ராண சிரவணமே திகழ்பே ரின்ப மருள்வதுவே. (௧௩௨)

ஆன முறையா லற்றிடையிக் கருமை திகழிச் சூதவன
மேன புராண முழுதேனு மேவு சருக்க மொன்றேனு
மான கவிகள் பலசிலவ மற்றொன் றேனு மியதிபெற
ஞான முறவோ துதல்கேட்ட னயக்கு மவரே பிறந்தவராம். (௧௩௩)

இன்ன சூத வனக்கதையை யெழுது மவரோ டுந்தவர்மேற்
பன்னு முதலி புரிந்தவர்சீர் பாவு மவர்பூ சித்திடுவார்
சொன்ன முறையிற் பதிட்டைபுரி தாயர் முதலோ ரமுதேசன்
றன்ன தருளா ளினைத்தவெலாஞ் சார்ந்து வாழ்வார் சாதமிதே. (௧௩௪)

என்றுங் கொடையா னந்திமுடித் திசைத்த முறையா லெழுவேட்கை
குன்று தெளிலுந் திருவிளையாக் கவியைக் கடந்து மேற்கூற
லொன்று காதெதன் றமைந்திருந்தா னொன்று முகன்சே யெனச்சூத
னன்று தரித்த முனிகுலத்துக் கறைந்தா னேனைக் கமைந்தாரால். ()

வேதம் வாழி முகில் வாழி விளைகூழ் வாழி யுயிர்க்கின்ப
சீதம் வாழி திருத்தொண்டச் செல்வர் வாழி பூதிமுதற்
சாதம் வாழி சித்தாந்த சைவம் வாழி யருண்முத
நாதன் வாழி யனைபெரிய நங்கை வாழி வாழியவே. (கஙரு)

இந்திரன்றிருவிழாச்சருக்கமுற்றிற்று.

சூதவனபுராணம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௩௫௨௦.

சிவமயம்.

# சூதவனபுராணவசனம்.

## பாயிரம்.

சுத்தசாட்குண்ணிய பரிபூரண பரமபதியாகிய சிவபெருமான், உலகர் யாவரும் வேதார்த்தங்களை ஒன்றொன்றாகஆராய்ந்து *நேதிகளைந்து அவற்றுள்ளே இது உபசாரம் இது உண்மையென்றுள்ளபடி தெளிந்து, அத்தெளிவினால் மலைவில்லாத பதிப்பொருள் ஒன்றே; அது இலைமறைகாய்போல் வேதத்துள்ளே விளங்குவதாம்; அப்பதி உமாபதியேயாம். இதுவே எவ்வாற்றானும் நிச்சயமென்று தேர்ந்துகொள்ளுதல் மிகவும் அரிதாதலால், அந்தவேதத்திறுட்பொருளை அவ்வுலகர்யாவரும் எளிதினுணர்ந்துய்க வென்னுந்திருவுளப்பெருங்கருணையினாலே வெளியிட்டருளிய புராணங்கள் பதினெட்டாகும்; அவற்றுள்ளே அக்கினிபுராணம் ஒன்று, சூரியபுராணம் ஒன்று, பிரமபுராணம் இரண்டு, விஷ்ணுபுராணம் நான்கு, சிவபுராணம் பத்தாகும். அச்சிவபுராணங்களுளொன்றாகிய பௌஷ்யோத்தரபுராணத்திலே க்ஷேத்திரகண்டத்திலே ஸ்ரீபிரகந்நாயகிசமேதஸ்ரீமந்திரேஸ்வரஸ்வாமி அநவரத சாந்நித்தியராய் வீற்றிருந்தருளுகின்ற திருவுசாத்தானமாகிய சூதவனஸ்தல மான்மியம் விளங்குகின்றது.

இதனை, சிவபிரானுமாதேவியார்க்குபதேசிக்கும்போது, அவர்மடிமீது வீற்றிருந்துகேட்டருளியஸ்ரீசுப்பிரமணியப்பெருமான் நந்திதேவர்க்குபதேசித்தருள, அவர் சனற்குமாரருக்கு, அவர் வியாசமுனிவருக்கு, அவர் எனக்குபதேசித்தருளினாரென்று சூதமுனிவர் சொல்லிய இச்சூதவனமான்மியமாகிய வடமொழியைத் தமிழ்நிலத்தாருணர்ந்துய்யும்பொருட்டுத், தமிழ்மொழிபெயர்த்துத்தருகவென்று அச்சூதவனத்தின் கீழ்பால் ஒருகுரோசத்திலுள்ள அலங்காட்டிலே, பூவைசியர்குலத்திலே, கொடை நடையாதியுத்தமகுணங்களானிறைந்த † இராமநாதச் செட்டியார் செய்த அருந்தவப்பயனையுதித்து,

* நேதி - ந - இதி எனப்பிரிபட்டு, "அல்ல என்று" எனப் பொருள்படும் வடமொழி. எனவே வேதப்பொருள்களை ஆராயுங்காற் பதியிலக்கணங்கள் அமையப்பெறுதனவற்றை இது பதிப்பொருளல்லவென்று நீக்கி என்பதாம். பதியிலக்கணங்கள் அநாதிபோதாதி அஷ்டமங்கள குணங்களாம்.

† இவரை ராமசாமிச்செட்டியாரென்றும் வழங்குப, நாதனெனினும் சாமியெனினும் பொருளொன்றே.

உத்தமோத்தம சத்துவகுணவிலாச சிவயோகாநுஷ்டான சிவாநுக்கிரக சம்பந்த சிவபூஜாதுரந்தரராய்ப்பிரசித்திபெற்று விளங்குகின்ற ஸ்ரீமான்-சிதம்பரச்செட்டியார் கேட்ப, அதனை மறுக்கமாட்டாமையால், அன்பும் அறிவுஞ் சிறிதுமில்லேனுயினும் மெய்யன்பர்கள் எண்ணியகாரியம் இனிது முடித்தருளுங் கிருபாவள்ளலாகிய சிவபிரான், அம்மெய்யன்பர் பொருட்டு இதனை இனிதுமுடித்தருளுவரென்று துணிந்து ஸ்ரீ சாம்பசிவகுருவாசாரசரணாரவிந்தங்களை வணங்கித் திருவருளைவேண்டி. அதனுல் அடங்கினின்று தமிழ்மொழி பெயர்த்து ஆயிரத்தைஞ்ஞூற்றிருபது திருவிருத்தங்களாகச் செய்யுளமைத்தேன்.

## அவையடக்கம்.

சொற்பொருளெல்லாம் சத்தி சிவரூபமேயென்பது சர்வாகமசித்தாந்தம். ஆதலால், இப்புராணச் சொற்பொருள்களைச் சத்துவகுண விசிஷ்டர்களாகிய சாதுக்கள் சத்தி சிவரூபமாகவேகருதி அவற்றுற்றிலையாத்திறமையைத் தெளிந்து சத்துவப்பயனைப் பெறுவார்கள். மற்றையோர் யாதொருகாரணத்தாலாயினும் அதை மறந்து குற்றம்நோக்குவாராயின் அதற்குச்சமாதானஞ்சொல்லுதல் பரதந்திர வழிப்பட்ட எமது கடமையன்று. அன்றியுஞ் சமஸ்தவாக்கியங்களும் சிவாஞ்ஞையாலன்றி நடவா என்று பெரியோர் சொல்லுதலால் இப்புராணச் செய்யுட்கள் யான் செய்ததாக நினைத்துக் குறையானவைகள் குற்றஞ்சொல்லார்கள். அப்படியன்றி என்வாக்கென்றேபிறர் கூறினும் அக்கூற்றுடையார் இக்கவிகளிற்குற்றம்பார்ப்பின் அது அவர்க்கேபழிப்பாகும். என்னை? நக்கீரனென்னும் இறைவருக்குற் குற்றங்களெல்லையற்றையும் நிறைத்துணைவக்கப்பெற்ற அநேகங்களுஞ்சியங்களை விலக்குதல்போலன். குற்றமே வடிவாகிய என்னிடத்து முற்றுங் குற்றமேயன்றி வேறு தோன்றுமாகலின்.

## புராண வரலாறு.

உலகெலாம்புகழ்கின்ற சத்துவகுண விசிஷ்ட புண்ணியபூமியாகிய நைமிசாரணியத்திலே முன்னொருகாலத்திலே, சௌனகர் முதலிய முனிவர்கள் சத்திரயாகஞ் செய்து வந்தார்கள். அப்போது சூதமுனிவர் ஸ்வேச்சையாக அங்குவந்தார். முனிவர் யாவரும் இருக்கைவிட்டெழுந்து, கரஞ்சிரமேற்குவிய எதிர்சென்று உபசரித்து அழைத்துவந்து ஆசனத்திருத்திப்பூசித்து நின்று முனிவர் பெருமானே? அடியேங்களுக்கு அநேகமுறை கருணைகூர்ந்து சிவபுராணமிர்தம் புகட்டினீர்கள். சிறிதுந் தெவிட்டிலது; முன்சிவசேஷத்திர மகிமைகள் உபதேசித்தருளுங்கால் குதவனமென்னொரு உத்தம சிவஸ்தலம் உள்ளது, அது எத்தலத்தினுஞ்சிறந்தது, அத்தலத்தில் வீற்றிருக்

தருளுஞ் சிவபிரான் அன்பர்களுக்கு அருளிய திவ்யசரித்திர மகிமைகள் அளவில்லாதனவாகுமென்று சொல்லியருளினீர்கள். அம்மகிமாவிஸ்தாரங் கேட்பதில் மிகுந்த ஆசையுடையேம், அநுக்கிரகித்தருளுக என்று வேண்டிக்கொண்டார்கள்.

சூதமுனிவர், மிக்க விருப்போடு ஸ்ரீபிரகந்நாயகி சமேதஸ்ரீமந்திரேஸ்வரஸ்வாமி பாதபங்கயங்களைச்சிரமேற்கொண்டு தியானித்திருந்தபின் முனிவர்களே ? உங்கள் கேள்வி உலகெலாம் உய்தற்கு ஒரு முக்கியகாரணமுமாகும். என்மனமும் அதனையே விரும்பியது. இச்சிவபுராணசிரவணமே யாவர்க்கும் சர்வாபீஷ்டங்களுங்கொடுப்பது. நீங்கள் கேட்ட இச்சூதவன மான்மியம் அபக்குவர்களுக்குச் சொல்லக்கூடாத அதிக ரகசியசரித்திரமாகும். இதனை ஸ்ரீ நந்திதேவர் சனற்குமார முனிவர்க்கு உபதேசித்தருளினரென்று அம்முறையே சொல்லத்தொடங்கினர்.

ஸ்ரீகைலாசத்திலே, செம்பொற்றிருக்கோயிலிலே, ஸ்ரீகண்ட பரமேஸ்வர சந்நிதானத்திலே, திருவருள்வெள்ளமென்றே யாவருந் துதிக்கின்ற அமுதமே நிறைந்துள்ள சிவதீர்த்தமொன்றுள்ளது. அதன் கரையிலே, ஆயிரக்கால் மண்டபமொன்றுண்டு. சுத்தவித்தியாமயமென்றே யாவராலுந் துதிக்கப்பெறும். அதனிடத்தில் உத்தமமுனிவர்கூட்டமும்வேதசிவாகமாதி சாஸ்திர முழக்கமும் எப்பொழுதும் நிறைந்து கொண்டேயிருக்கும். அம்மண்டபமத்தியிலே, வியாக்கியாசனத்திலே வீற்றிருந்தருளுகின்ற ஸ்ரீநந்திதேவரைச் சனற்குமாரமுனிவர் வணங்கிப் பூசித்துத் துதித்து அஞ்சலியஸ்தராய் நின்று, எம்பெருமானே ? தாங்கள் முன் உபதேசித்தருளியசூதவனமான்மியத்தை இன்னும் விஸ்தாரமாகக்கேட்பதில் விருப்பம் மேலிடுகின்றது; திருவருள் புரிகவென்று வேண்டிக்கொள்ளத், திருநந்திதேவர், அத்தலத்தையும் விநாயக சுப்பிரமணிய சாம்பசிவ பாதங்களையும் வணங்கித் துதித்து, நமது அருள்வழிப்புத்திர சிகாமணியாகிய சனற்குமாரனே ? அவ்வியாஜகிருபாமூர்த்தியாகியபரமசிவன் உலகெலாம் உய்யும்பொருட்டு அநவரதசாந்நித்தியமாய் வீற்றிருந் தருளுகின்ற சூதவனமாகிய உத்தம சிவஸ்தலமானது, அத்தியந்தநிர்மல ஸ்தானமாய்த் தென்சமுத்திரத்திலுள்ள ராமசேதுவின் ஈசானதிசைவிளங்கவீற்றிருப்பது. இந்த உத்தம சிவஸ்தலமே இப்பூமிக்கு திருவருட்டுணையாய் விளங்குவது. தன்னையடைந்தார்க்கு மகாபாதகாதி சமஸ்தபாவங்களும் நீக்கிச் சர்வாபீஷ்டங்களுங் கொடுத்து மோக்ஷத்தையுங்கைப்பொருளாக்குவது. இத்தலத்தின் பெருமை எத்துணைச் சிறந்தோராலும் எத்தனை கற்பகாலம் இருந்து சொல்லினுமுடியாது. அங்ஙனமாகவும் நீ அதனைக் கேட்பதிற் கொண்ட பேராசையை மறுக்க முடியாமையால் ஒரு சிறிது சொல்லத் துணிந்தேம். இத்தலமான்மியம் பதினொன்று பகுதியாய் உள்

ளன. அவையாவன, தலம், தீர்த்தம், மூர்த்தி விசேடமென்றும், ருத்ரவன நாமகாரணச்சருக்கம், ஆதிசேடனுபதேசம்பெற்றசருக்கம், ஆதிசேடன் சிவலிங்கம் பெற்ற சருக்கம், ஆதிசேடன் ருத்ரவனஞ்சென்ற சருக்கம், ஆதிசேடன்திருப்பணிச்சருக்கம், ஆதிசேடன் சிவார்ச்சனைச்சருக்கம், வருணன் பாபமோசனச் சருக்கம், மார்க்கண்டச் சருக்கம், இராமன் மந்திரோபதேசச் சருக்கம், அமுதநிவேதனச் சருக்கம், திருவிழாச்சருக்கமென்றுமாம். இவற்றை வரிசைக்கிரமமாக அறிந்தவாறு விரித்துரைக்கின்றேம்; கேட்பாயாக என்று திருநந்தி தேவர்சொல்லத் தொடங்கினார்.

---

## தலவிசேடம்.

சனற்குமாரனே! மகாமேருகிரியின் தென்றிசையிலே, சம்புத்தீவிலே, பரதகண்டத்திலுள்ள தமிழ் நாடாகிய குலமேட்டு முகமென விளங்குகின்ற சோழ நாட்டிலே, அம்முகத்திற்கண்போல இருத்ரவனம் பிரசித்திபெற்று விளங்கும். அது காவேரிக்குத் தெற்கே மூன்று யோசனை தூரமும் வேதாரணியத்துக்கு மேற்கே இரண்டு யோசனை தூரமும் தென்சமுத்திரத்திற்கு வடக்கே ஒன்றரைகுரோச தூரமாகியவெல்லையிலுள்ளது. அத்தலத்தின் அகலம் மூன்றுகுரோசமாகும். இருத்ரவனம் முற்காலத்தில் ஸ்ரீராமன் இராவணாதியபகைவரைவென்றதற்குப் பாவங்களைப்பெறுவேண்டித் தவம்புரிந்து ஸ்ரீ மந்திரேஸ்வரஸ்வாமி திருவருள் பெற்றுடைமையாலும், கல்வி ஞானம் முதலிய திருக்கண்பெறுதற்குக் காரணமாயிருத்தலாலும், இராவிடவேதப் பிரசித்தியமாகிய திருவாசகத்தானமென்னுந் திவ்ய நாமம் பெற்றது. இத்தலத்தை யார் அடைந்து அஷ்ட சித்திகள் அஷ்ட போகங்கள் சித்தத்துடனே பாமுத்தி முதலியவைகளை வேண்டினாலும் வேண்டியபடி பெறுவார்கள். சமஸ்த சிவஸ்தலங்களும் இத்தலமேயாகுமெனத் தவஸ்தலத்தலங்களிலும் வசித்த எல்லா முனிவரும் இங்கு வந்து திருவருள் பெற்றுஎப்போதும்வசித்தலால், இது பிருதிவிதத்துவமென்றுசொல்லத் தகும். விருப்பத்தோடு தன்னை அடைந்தவர்களுடைய பாவங்களாகிய மலைகளை முழுதுங்கெடுத்துப் பேரின்பமளிப்பதால் அப்புதத்துவமென்றுசொல்லப்படும். எவராகிலும் தன்னையடைந்தவர்களுடைய பிறவிக்காட்டைத் தகித்தலாற்றேயுதத்துவமென்று சொல்லப்படும். தன்னையடைந்தாருடையபாவமலைகளைப்பேர்த்தலால்வாயுதத்துவமென்றுசொல்லப்படும். தன்னையடைந்த அன்பர்களுக்கு ஞானாகாசத்தியானந்த மளித்தலால் ஞானாகாச தத்துவமென்றுசொல்லப்படும். இத்தலத்தைக் கண்டவர்கள் முன் காலப் பிராப்தமாகத் தங்கபாதகங்கள் எவ்வளவு செய்திருந்தாலும் அவ்வளவும் நீங்கப்பெறுவார்கள். இத்தலத்தில் வசி

த்திருந்து சிவதிருத்தொண்டு செய்பவர்கள் திருவருட்புவனராஜாங்கபதிகளாய்த்தேவரெல்லாந்தமக்குத்தொண்டுசெய்யவீற்றிருப்பார்கள். அமிர்தசூதவனமென்னுந்திருநாமத்தை ஒருமுறை ஜெபித்தவர்கள் மிர்தம் நீங்கப்பெறுதலால்அமிர்தராகின்றார்கள். திருவுசாத்தானமென்னும்நாமம் ஜெபிக்கிறவர்கள் கீர்த்திலெக்ஷ்மி அன்றெறி அஷ்ட லெக்ஷ்மி சிவஞான லெக்ஷ்மி முதலிய லெக்ஷ்மிகளெல்லாம் உசாவுகின்றதானமாகப் பெறுதலால் அவர்களும் திருவுசாத்தானமாவார்கள். இத்தலத்திற்செய்கின்ற செபதபயாகாதிதர்மங்கள் ஒன்று அநந்தமாகும். அந்நியதலங்களில் அநேககற்பகாலம் பஞ்சேந்திரிய நிக்கிரகத்தோடு செய்யப்படும் பரிசுத்த தவப்பிரயோசனம் இத்தலத்தின் எல்லையை அடைந்தமாத்திரத்திற் கிட்டுவதாகும். இப்படியானால் இத்தலத்தை யடைந்து சிவதீர்த்த ஸ்நானஞ் செய்து சூதவனேசரர் சந்நிதியிலந்து தரிசித்தல் தியானித்தலாதி செய்கின்றவர்களுக்கு இத்தலங் கொடுக்கின்றபலன் என் சொல்லவொட்டபடுமோ. கணிதநூல் வல்லார் நினைந்தெடுத்துக்கூறும் பெருந்தொகையுள் அப்பலனின் பெருந்தொகைச் *சிகையும் உட்படா. இனிப்பலவாறு விரித்துக் கூறுவதென்னை. இத்தலத்தில் இடையறாது வசித்துப் பெரியநாயகியையும் சூதவனேசரையும் தினமும் வழிபடு நியமமுடையோர் பெறும் பிரயோசனம் †கைம்முதிக நியாயத்தால் எண்பெருக்கித் தெரிந்துகொள்வதும் அசாத்தியமே. இதனை மெய்யன்போடுபடிப்பவர்களுங் கேட்பவர்களும் சமஸ்த தீமைகளு நீங்கித் திருவருள்பெற்றுவாழ்வார்கள்.

தலவிசேடமுற்றிற்று.

## தீர்த்த விசேடம்.

—(:o:)—

சனற்குமாரனே! மார்க்கண்டாதிமுனிவர்களாலே சகல புவனங்களிலுமுள்ள சிவதீர்த்தங்களெல்லாம் இத்தலத்திலுள்ளே வந்து கூபதடாகாதிரூபங்களாய் என்றும் வசிக்கின்றன. இவற்றின் நாமவரிசையே அளவில்லையாதலால் அவற்றுட் சில தீர்த்தமாத்திரம் விளக்குகின்றேனென்று திருநந்திதேவர் கூறுகின்றார்.

திருக்கோயிலினுள்ளே, அக்கினிதிசையிலே ஒரு சிவதீர்த்தம் உள்ளது. அது, நிர்மல தீர்த்தமென்றும் மணிகர்ணிகாதீர்த்தமென்றும் பெயர்பெறும்.

---

* ஈண்டுச் சிகையென்றது ஆயிரத்திருநூற் றைம்பத்து மூன்று என்பதில் மூன்று நான்கும் இலக்கம் போல் வருவனவற்றை யென்க.

† கைம்முதிகம்—இதற்கு இப்படியானால் இனிச்சொல்வதெப்படி யென்னுந்தாற்பரியத்தை விளக்குவது.

இது நீர் வடிவாயினும், தன்னிடத்துவந்து அன்புடன் விதிவழிமூழ்குவோ ருடைய பிறவிப் பெருங்காட்டைப் பஞ்சுபோல எரித்தழித்து விடுதலின் அக்கினி யென்று சொல்லத்தகும். யாவர்க்கும் இத்தீர்த்தத்திலே தினமும் நியதியாக ஸ்நானஞ் செய்யக் கிடைப்பதரிது. ஆயினும் வருஷத்துக்கு ஒரு முறை * சித்திராபருவத்திலே இத்தீர்த்தஸ்நானஞ் செய்தால் முந்நூற்று றுபத்தைந்துநாளிலும் ஸ்நானஞ் செய்த பலன்முழுதுஞ் சித்திக்கும். திருக் கோயிலுக்குப் புறத்தே கிழக்குத்திசையிலே அநுமதீர்த்த மென்னுமொரு தீர்த்த முள்ளது. அதில் அந்த அநுமான் மூழ்கி இஷ்டசித்திகள் முற்றும்பெற்றா ன். இதிலே மங்களவார ஸ்திரவாரஸ்நானம் முக்கியம். இத்தினங்களில் மூ ழ்குவோர் திடகாத்திர தைரிய வீரியாதி இஷ்டகாரியமெல்லாம் பெறுவார் கள். இதன்கீழ்த்திசையில் ஆதிசேடதீர்த்தமென்று ஒன்றுள்ளது. இதிலே மாசிமகநாளிலே அன்புமிக விதிப்படி மூழ்குவோர் அஷ்டபோக முதலிய இ ஷ்டசித்திகளெல்லாம் பெறுவார்கள். அன்றியும் வேதசிவாகமாதி சகல சா ஸ்திரபாரங்கதர்களாய் ஐஸ்வரியஞானத்தாற் சிவசாயுச்சியப் பெருவாழ்வும் பெறுவார்கள். திருக்கோயிலுக்குப் புறத்தே மேற்றிசையிலே மார்க்கண்டதீ ர்த்த மென்னுமொரு தீர்த்தமுள்ளது. இது சர்வபாதகங்களையும் நீக்கத்தக்கது. ச கலபுவனங்களாலும் துதிக்கத்தக்கது. இதிலே தைமாத குருவார புஷ்யநக்ஷத்தி ரத்திலே அன்போடு விதிப்படி மூழ்குவோருடையபாவத்தை யெள்ளுத்தினை யிற்சொல்லவும் அஞ்சுவான்; சர்வசீவர்களையுங் கவருகின்றயமனுமென்றால், அவர் பெறும் பலன் முழுதும் யார்தான்சொல்லவல்லவர்கள். திருக்கோயிற் புறத்தே தென்றிசையிலே கௌதம தீர்த்த மென்னுமொரு தீர்த்த முள்ளது. இது மூழ்குவோர்க்கு இஷ்டசித்திகளெல்லாம் உடனேகொடுப்பது. இன்னு ம் இவைபோன்ற அநேக சிவ தீர்த்தங்கள் இத்தலத்திலுள்ளன. இவைகளின் னுங் கொஞ்சந்தானுஞ் சொல்லமுடியாதாகில் மற்றவையெடுத்துச்சொல்லவல்லமை ப்படுமெப்படி. † ஸ்தாலீபுலாக நியாயத்தாலறிந்துகொள்க. இத்தீர்த்தங்களெல் லாம் மேற்சொல்லிய அவ்வத்தினங்களிலன்றி மற்றத்தினங்களில் மூழ்கினும் எண்ணியவெண்ணிய இஷ்டசித்திகளெல்லாங்கொடுக்கும். இதனை மெய்யன் போடுபடிப்பவர்கேட்பவர் இம்மையிற்றாம்பெற்றதுன்பமாகியவினைகளை நீங் கித் திருவருட்பேரின்ப வாழ்வுபெறுவார்கள்.

தீர்த்தவிசேடம் முற்றிற்று.

---

* இத்தினத்திலேயித்தீர்த்தத்திலேஸ்ரீமந்திரோசவமானவாசியமகோ ற்சவாந்தமாகிய தீர்த்தோற்சவங் கொண்டருளும் வழக்கம் இன்றுமுள்ளது.

† ஸ்தாலீபுலாகம்—ஒருபானைசோற்றுக்கு ஒரு அவிழ்பதம்பார்த்து, எ ல்லாம் அதுபோலென்றுதெளிவதுபோல விளக்குவதோர்நியாயம்.

## மூர்த்திவிசேடம்.

சனற்குமாரனே? இனி மூர்த்திமகிமைகேட்பாயாகவென்று திருநந்திதேவர் கூறுகின்றார். நிஷ்களமாகிய பரமசிவன் ஜனனமரணப்பட்டுப்பற்பல சரீரமெடுத்துழல்கின்ற சீவகோடிகள் எளிதிற்றிருவருள்பெற்றுய்கவென்று திருவுளங்கொண்டருளிய பெருங்கருணையினலே, ஒளிப்பிழம்பாய் அமிர்தமய சுயம்புலிங்க ரூபமாய் இச்சூதவனத்தில் ஓர் மாவிருக்ஷ நீழலிலேதோன்றி, வில்வம் கொன்றை மல்லிகை முல்லை முதலிய மரங்களுங் கொடிகளும் மலிந்தாலிச்சூழ்ந்து மிக நெருங்க மத்தியிலேவீற்றிருந்தருளும். இங்குவந்து இச்சுயம்பு மூர்த்தியை ஆதிசேடன் வருணன் மார்க்கண்டன் ஸ்ரீராமன் முதல் அநேகர் வழிபட்டுத் தங்கள்தங்கள் இஷ்டசித்திகளெல்லாம் பெற்றார்கள். இந்த அமிர்த சுயம்பு மூர்த்திக்கு மார்க்கண்டேசன், வருணேசன், அநந்தேசன், மந்திரேசன், அமிர்தசூதவனேசன், திருவுசாத்தானேசன், அமுதலிங்கேசன் முதலிய அநேகந்திருநாமங்களுண்டு. முற்றும் விதந்துகூறுதல் எவர்க்கும் அசாத்தியமே. இத்திருநாமங்கள் சப்தகோடி மகாமந்திரங்களினும் மேன்மையுள்ளன. இவற்றுள்ளே, மார்க்கண்டேச நாமஞ்செபித்தவர்கள் யமனையும் வெல்லும் பெருவலிபெற்று வாழ்வார்கள், வருணேச நாமஞ்செபித்தோர் சர்வரோகமுநீங்கிச் சுகமுற்றுவாழ்வார்கள். அநந்தேச நாமஞ் செபித்தோர் சகலகலாவல்லவர்களாய் உண்மைஞானம் பெற்றுவாழ்வார்கள். மந்திரேசநாமஞ் செபித்தோர் பூதவேதாள பிர்மராக்ஷதாதிகளால் வருங்கஷ்டங்கள் முழுதும் நீங்கப்பெறுவார்கள். சூதவனேச நாமஞ்செபித்தோர் திருவருள் விளைவாகிய குளிர்நிழலிலிருந்து வாழ்வார்கள். திருவுசாத்தானேச நாமஞ்செபித்தோர் முத்தி முதலான சகலசித்திகளுந் தம்மைச்சேர்ந்திருக்கப் பெறுவார்கள். அமிர்தலிங்கேசநாமஞ் செபித்தோர் பிரமம் நீங்கி நித்தியானந்த வாழ்வுபெறுவார்கள்.

இத்தகைத்திற் சமஷ்டிரூபமாய் விளங்கும் இச்சுயம்புலிங்கமொன்றே, எல்லாத்தலங்களிலும் வேறுவேறு சுயம்புலிங்கங்களான வியஷ்டிரூபங்களாய்விளங்குகின்றது. வழிபடுகின்றமெய்யன்பர்க்கு அமிர்தத்துவத்தைத்தெரிக்குஞ்செயலையன்றியும் வெண்ணிறத்தாலும் அமிர்தலிங்கமென்பதை விளக்குகின்றது. பலவாக்கூறுவதென், இந்த அமிர்தசுயம்புமூர்த்தியைப்போற்சிறந்த மூர்த்தி எவ்விடத்துமில்லையென்று அக்கினியைக்கையிலேந்திச் சத்தியஞ்செய்வோம். இச்சிவபிரானை உதயகாலத்திலே மெய்யன்போடுதரிசிக்கப்பெற்றோர் உண்மைநூல்களிற்கூறுகின்றசமஸ்ததர்மங்களுந் தம்மிடத்தில்விளங்கப்பெறுவார்கள். உச்சிக்காலத்திலேதரிசிக்கப்பெற்றோர்சமஸ்தசித்திகளும் நிறையப்பெறுவார்கள். சாயங்காலத்திலே தரிசிக்கப்பெற்றோர் சமஸ்த இன்பங்களும்பெறுவார்கள். அர்த்தயாமகாலத்திலேதரிசிக்கப்பெற்றோர் பிறந்

திறவாப்பெருவாழ்வாகியமுத்தியைப்பெறுவார்கள். ஸ்ரீ குருவாரம்பூச நக்ஷத்திரம்பௌர்ணமிகூடியதினத்திலேதரிசிக்கப்பெற்றோர் எவ்விதகுரு பாதகங்களும் நீங்கப்பெற்று அதிபரிசுத்தர்களாய் நினைத்தவெல்லாமெளிதிற் கைகூடப்பெற்று லோகப்பிரசித்தியாய்வாழ்வார்கள். சைத்திரோற்சவத்திற் பத்துநாளும்நியதியாக அன்போடுதரிசிக்கப்பெற்றோர்பூமிச்செல்வம்புத்திரச் செல்வம் பொருட்செல்வம்முதலியசெல்வச்சிறப்பெல்லாம் பெற்றுவாழ்ந்து தேகாந்தத்திலே சிவகதிச் செல்வராய்வாழ்ந்திருப்பார்கள். இச்சந்நிதானத்தைக் கப்போய்வணங்குவோமென் றெண்ணி வழிச்சென்றோரும், அங்கே மெய்யன் போடுதரிசிக்கப்பெற்றோர்பெறும்பயனைப் பெறுவார்கள். இச்சிவலிங்கமூர்த் தியைக் காணப்பெற்றவர்கள் ஜனன மரணதி வல்வினைத்துன்பங்களையுங் காணமாட்டார்கள். பணிந்தவர்கள் சர்வாண்டங்களுந்தம்மைப்பணியவீற்றி ருப்பார்கள். நினைத்தவர்கள் இப்பூமியில் இன்னும்பிறக்கத்தக்கதாகிய வினையறவொ ன்றார்கள்.

இம்மாத்திரஞ்செய்யும் இத்தொண்டர்க்கே இப்பலனெல்லாம் அருள்கி ன்றதென்றால், இனி இவ்வமுதலிங்கேசனை அன்புநீங்காத்தினந்தோறும்நி யதியாக வழிபடுவோர், திருவலகுப்பணி திருமெழுக்குப்பணி திருநந்தனவ னப்பணி திருமாலைப்பணி தூபப்பணி தீபப்பணி முதலியன செய்வோர், சொர்ணமுதலியவற்றாலாகிய குடங்கள் கலசங்கள் தூபக்கால் தீபக்கால் மணி முதலிய பூஜாபாத்திரங்கள் கொடுப்போர், நித்தியபூசைக்கு வேண்டியவான வ் திரவியங்களும் சிறிதும் பழுதில்லாமல் நன்காராய்ந்து காலந்தோறுங்கொ டுத்துவிதிவழுவாமற்செய்வித்து, அப்படியே நைமித்திகமாகியமகாதோற்ச வாதி திருவிழாக்கள் விதிப்படி தவறாமல் நடத்துவோர், திருக்கோயிலி லேபழுதுநீக்குதல் முதலியதிருப்பணிகள் மணிபொன்முதலியவற்றாற்செய்வோ ர், சொர்ணரத்னாபரணங்கள் செய்தளிப்போர், உத்தமமானபசுக்களை வளர்த் து நாடோறும் பால்கொடுப்போர் முதலிய திருத்தொண்டர்களுக்குறும்பயனை அளவிட்டுச்சொல்ல யாரால்வல்லவர்கள். அத்தியந்தவன்பலோடிவ்வாற்றானுள்ள அல்லவல்லிலிங்கமூர்த்திதனைச்செய்யுந்தரிசனையினியாதி திருத்தொண்டெல்லா ந்தரும் பலன்முழுதும் இவ்வமுதலிங்க தெரிசனம் ஒன்றேகொடுத் தருளும். இகலோகவாழ்க்கையும் பிரமலோகவாழ்க்கையும் பரலோகவாழ்க்கையும் ருத் திராதியர் வாழ்லோகவாழ்க்கையும் அமரலோகவாழ்க்கையும் அமிர்தலிங்கே சர்க்கு நாடோறும் அன்போடிவ்விதிப்படிசெய்யும் பூசனையேகொடுத்தருளும். இவ்வமுதலிங்கேசர் இங்கேசெய்தருளுகின்ற திருவருள்விலாசத்தியற்கையி ல் ஓரணுமாத்திரங்கூட அளவிடமுடியாதாகலின்முழுதுஞ்சொல்ல யாரால்வல்ல வர்கள். அன்பனே நாமுனக்குஇங்கேசொல்லியது அணுமாத்திரையிற்கோ டியிலொருபங்கேனுமில்லை. இதனை அன்போடுபடிப்பவர்கேட்பவர் யாவரும்

முன்செய்தீவினை முழுதும்நீங்கி இம்மையிலேபலபோகங்களும் அனுபவித்து தேகாந்தத்திலே திருவடி நிழலிற்கலந்துவாழ்வார்கள்.

மூர்த்திவிசேடச்சருக்க முற்றிற்று.

---

## ஞூதவனநாமகாரணச்சருக்கம்

சனற்குமாரனே? இனி இத்தலம் ஞூதவனமென்னும் பேர்பெற்ற காரணங் கேட்பாயாக என்று திருநந்திதேவர் கூறுகின்றார். முன்னொருகாலத்திலே காசிபமுனி பத்தினிகளாகிய கத்துரு வினதையென்னுமிருவரும் சற்றேறத்தாழ்த்தே இந்திரனுடைய குதிரையைக்கண்டு மூத்தாளாகிய கத்துரு இக்குதிரைவால் வெண்மையா கருமையா வென்று கேட்க, வினதை வெண்மையென்னக்கத்துருகருமையென்றாள். இப்படி இருவரும் மாறுபட்டுநம்முள்ளே தோற்றவள் வென்றவளுக்கு அடிமையாய்விடவேதேசபதமாகும்;இக்குதிரையை இன்னுமொருமுறைசமீபத்திற்பார்த்துநிச்சயிப்போமென்று பிரதிஞ்ஞைசெய்துகொண்டார்கள். பின்பு கத்துரு, தன்மக்களாகியஅனந்தன் முதலியசர்ப்பர்களைநோக்கி நீங்கள் இந்திரன்குதிரைவாலைக்கருமையாகச்செய்யுங்களென்றாள். அடாதகாரியமென்று அவர்கள்மறுத்ததுகண்டு கோபித்தாள். அவருள்ளேகார்க்கோடன் அவள்கருத்தின்படி அக்குதிரைவால் கருமையாகும்படிதான்இறுகச்சுற்றிக்கொண்டான். பின்புகத்துரு வினதையை அழைத்துக்கொண்டுபோய்க்காட்டினள். பார்த்து நான்உனக்கு அடிமைதானென்று கூறி அன்றுமுதல் அக்கத்துருவுக்குஅடிமைவேலை செய்துவருவாளாயினள்.

அப்போது கத்துரு நான் பாதலலோகம் போகவேண்டும், என்மக்களாகிய சர்ப்பர்களை உன்மகன் கருடன் சுமந்துவர நீ என்னைச்சுமந்து செல்வாயாக என்றுகூற, அப்படியே வினதையும் அவள் மகன் கருடனுஞ்சுமந்து செல்லப் பாதலத்திற்சென்ற அளவிலே, சர்ப்பர்கள் கருடனைப்பார்த்து இங்குள்ள பலதீவுகளும் பார்க்கவேண்டும்; எங்கள் அடிமைக்காரி மகனாகிய நீஎங்களைச் சுமந்துசெல்லென்றார்கள். கருடன் அதுகேட்டு உடனே தாயை நோக்கி இவர்கள் உன்னை அடிமையென்றகாரணமென்னென்று கேட்க, வினதை முன்னிகழ்ந்ததைக்கூற, உடனே கருடன் சர்ப்பர்களைநோக்கி என்தாய் உங்களுக்கு அடிமையாயிருத்தலை நீக்கிக்கொள்ளு நிமித்தம் உங்களுக்கு ஏதுசெய்யவேண்டுமென்றான். சர்ப்பர்கள் தேவாமிர்தம் தருவாயானால் விலக்கிவிடுகிறோமென்று சொல்ல உடனே கருடன் மார்க்கத்திலேசில ஆச்சரியகாரியங்கள் செய்துகொண்டு சுவர்க்கத்தையடைந்து யுத்தத்திலே இந்திராதிதேவர் யாவரையும்வென்று, சர்ப்பகோடிகள் அக்கினி விடம் இரும்பு

முதலியன ஒவ்வோர்மதில்போலச்சூழ்ந்துகொண்டிருப்ப, அவற்றின் நடுவில் அக்கினிமயமான சக்கரவட்டத்தினுள்ளே உடலை ஒடுக்கிக்கொண்டுசென்று தருப்பையினுற் சூழப்பெற்றுள்ள அமிர்தகடத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். அப்போது இந்திரன் தடுக்கவும் வலியின்றி விட்டுவிடவு மனமின்றி வருந்தி இணக்கத்தாற்பெற நினைந்து அக்கருடனைநோக்கி நயந்த மொழிகூறிப் பக்ஷிகளுக்கரசே! நீ இந்த அமிர்தத்தைச் சர்ப்பர்களுக்குக்கொடுக்க அவர்கள் அதையுண்டு எங்களை வருத்தினுல் எனக்கு என்ன லாபமுண்டு, தயவு செய்க என்று வேண்டிக்கொள்ளக், கருடன் பிரதிஞ்ஞைப்படி நான் இக்கடத்தைச் சர்ப்பர்களுக்கு எதிரே வைத்துவிட்டு ஒரு உபாயஞ்செய்கிறேன். அப்போது நீ கிரகித்துக்கொள் என்றுசொல்லி, இந்திரனும் பின்தொடர ஆகாயமார்க்கமாக வரும்போது செல்லும் வேகத்தாலும் சிறகின் காற்றினாலும் அவ்வமுதஞ்சிதறி இத்தலத்தினெல்லைமுழுவதும் பரம்பின. அவ்வமிர்தத்துளிகளினின்றும் அளவில்லாதமாமரங்கள் முளைத்தெழுந்தன. தான் நினைத்தபடியேகருடன்சென்றுசர்ப்பர்களுக்கெதிரே அமிர்தகடத்தை வைத்துத் தன் தாயின் அடிமைச்செயலை நீக்கிக்கொண்டு அவர்களை நோக்கி இந்த அமிர்தம் அதிபவித்திரமானதால் ஸ்நானஞ்செய்து சுசியோடுபுசியுங்களென்ன, அப்படியே அவர்கள் ஸ்நானஞ்செய்யத் தம் புறஞ்சென்றசமயம்இந்திரன் அமிர்தகடத்தை எடுத்துக்கொண்டுசென்றுவிட்டான்.

அமிர்தத்துளிகளிலேமாவிருக்ஷங்கள்முளைத்தெழுந்து ஆகாசத்தையளாவி விஸ்தாரமாக வெளியின்றிச்செறிந்து எங்கும் வியாபித்திருக்கின்ற மகிமை, இங்கு அநவரத சாந்நித்தியமாய் வீற்றிருக்கருளுகின்ற ஸ்ரீமந்நிரே ஸ்வாஸ்வாமி திருவருளாலேயென்றுணர்ந்த புண்ணியாத்மாக்களாகிய, காசிபர் மார்க்கண்டர் கௌதமர் பிருகு அகஸ்தியர் கர்க்கர் வியாசர் சுகர் அத்திரி குற்சகர் புலகர் யஞ்ஞுபாலர் பரத்துவாசர் சநற்குமாரர் சநகர் சநந்தநர் வருணர் சத்தி வாமதேவர் கௌசிகர் பராசரர் கபிலர் புலத்தியர் வசிட்டர் முதலாக அளவிலாதமுனிவர்கள், தாங்கள்வசித்திருந்த மேருமந்தராதி சமஸ்த சிவக்ஷேத்திரங்களையும்விட்டுநீங்கி இத்தலத்து வந்து அளவிலேமகிமைத்தற்குரிய சிறப்பெலா நிறைந்து சித்தசுத்தியாதிநன்மைமுற்றும் எளிதின் அளிக்கத்தக்க நிர்மலத்துவாதிவிசிட்டகுணங்களோடு விளங்குவதை உற்று நோக்கி, இது யாவரையும் வசிக்கத்தக்க உத்தமோத்தமஸ்தலமென்று செயலாலுந்தெரிந்து நிச்சயித்து, அம்முனிவரெல்லாரும் ஆங்காங்குப் பர்ணசாலையுண்டாக்கிக்கொண்டு ஒருகாலத்தும்இத்தலத்தை நீங்காதமனத்தோடு வசித்துஎங்குமுள்ள சிவதீர்த்தங்களெல்லாம் இத்தலத்தில் வந்துதங்குக என்று நினைத்தார்கள். அப்படியே சர்வலோகங்களிலுமுள்ள சமஸ்தசிவதீர்த்தங்களும்இத்தலத்தின் முக்குரோசவிஸ்தார எல்லைக்குள்ளே அநேகவாவிகூபா

தி நீர்நிலைகளாகவந்துநிறைந்து தம்மிடத்துவந்து தரிசித்தல்பரிசித்தல் மூழ்குதல் முதலியன செய்கின்றவர்களுடைய எத்தகைய பாதகங்களையும் உடனே நீக்கி அநேக பலன்களைக்கொடுத்துக்கொண்டிருக்கின்றன.

அமிர்தத்துளியினின்றும்முளைத்த மாவிருக்ஷங்கள் செறிந்திருத்தலால் இதற்கு அமிர்தருசவனமென்றும் ஒருபேரியைந்தது. உலகமெல்லாம் அமிர்தருசவனமென்னுந் திவ்யநாமச்சிறப்பையும் அதற்கிணங்க அமிர்தலிங்கேசர் அங்கு அடுத்தார்க்கு அருளுகின்றபலவகையான இகபோக விஸ்தாரஞான மோக்ஷப்பெருக்கத்தையும்நோக்கிசிவக்ஷேத்திரங்களெல்லாவற்றினும் உத்தமோத்தமதரமென்று போற்றுகின்ற திவ்யஸ்தலமிதுவேயாகும். இவ்வருமைபெருமை விளங்குகின்ற இத்தலமகிமை அதிரகசியமாயுள்ளது. மெய்யன்பு நீங்காத அதிதீவிர பரிபக்குவசீலர்களுக்கேயல்லாமல் அங்கியர்களுக்கு எவ்வித காரணத்தாலும் இத்தலமகிமா ரகசியத்தைச் சொல்லாதேயென்று குருநாதனாகிய சுப்பிரமணியப்பெருமானெனக்கு உபதேசித்தருளினார். மிகவும் நுணுகியுணர்கின்ற அதிபூதபுத்திமானாகிய உனக்கு நாம்சொல்லவும் வேண்டுமோ? இதனை அன்போடு படிப்பவர் கேட்பவர் யாவரும்இம்மையிலே புத்திரமித்திரகளத்திராதி சகலசம்பத்தும் பெற்றுவாழ்ந்துதேகாந்தத்திலே பிறந்திறவாப்பெருவாழ்வாகிய நித்தியானந்த பரமோக்ஷம்பெற்று வாழ்வார்கள்.

குருவன நாமகாரணச் சருக்க முற்றிற்று.

---

## ஆதிசேடனுபதேசம்பெற்றசருக்கம்.

—:0:—

சனற்குமாரனே? இனி ஆதிசேடனுபதேசம்பெற்ற சரித்திரங்கேட்பாயாகவென்று திருநந்திதேவர் கூறுகின்றார். திருப்பாற்கடலிலே மணித்தீவிலே சுவேதபுரத்திலுள்ள திருக்கோயிலிலே, தேவர்முனிவர்முதலியோர் வணங்கித் துதிசெய்துருகு ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவிசமேதராய் வீற்றிருந்தருளுகின்ற விஷ்ணுமூர்த்தி பாதங்களிலே ஆதிசேடன் வணங்கித்துதித்து நின்று எம்பெருமானே? பிறவிப்பெருங்கடலைக்கடந்து பிறந்திறவாப்பெருவாழ்வாகிய நித்தியானந்த பரமோக்ஷங்கொடுப்பதாயும் வேதவேதாந்த சாஸ்திரசம்மதமாயுமுள்ள உண்மைமார்க்கம் இன்னதென்று அடியேனுக்குபதேசித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். விஷ்ணுமூர்த்தி அருளுகின்றார். சற்குண சம்பந்நவிசேடனாகிய சேடனே? சர்வஞ்ஞத்துவாதி அஷ்டமங்கள திவ்யகுண பராபரமூலகாரண சச்சிதானந்த நிர்மல நிர்விகற்ப ஆதிமத்தியாந்தரகித அநாதிநித்திய சர்வவியாபக சமயாதீத சுயம்பிரகாச சிவதத்துவோபசாந்தாதி திவ்விய வாசகவாச்சியலக்ஷியமாய்ச்சமுசாரசாகரத்தைக்கட

த்துவதாய் வேதமுடியில்விளங்குவதாயுள்ள சதாசிவத்தை யுள்ளபடியுணர்ந்து உபாசித்து நிலைநிற்கும் உத்தமரெவரோ அவர்களே நீகேட்ட உண்மை மார்க்கம் உள்ளபடி அறிவார்கள். இது அறியாதாரெவரோ அவர்களே நருள்ளே அதமராவார். ஆதலாற் சதாசிவபூஜையே விருப்பத்தை முடிப்பது. இது சத்தியம். எவர்கள் ஆசையாகிய வலையினராய் விஷயங்களிற்செல்லாது இந்திரிய நிக்கிரகஞ்செய்துவிரதமேற்கொண்டொழுகுவார்களோ அவர்களே முமுட்சுக்களாவார். அசக்தர்களாலும் இயன்றளவு நிக்கிரகப்படுத்தியேனுஞ்சிவ பூஜாதிநியதிமேற்கொண்டொழுகலே முறையாகும். இப்படியேயேகாந்தம் வனைவினைப்போகாநுபவத்தோடு செய்துவரும் நியமபூஜாபலத்தாற் சிவ ஞானம்பெற்று அதனாற் சுத்தாத்துவித பரமுத்திபெற்றுவாழ்வார்கள். ஆதலாற் சமுசாரசாகரங்கடந்து நித்தியானந்த பரமுத்தியைப்பெறுதற்கு முக்கியகாரணம் இந்திரிய நிக்கிரகஞ்செய்து சுத்த சிவஞானவானாய் உண்மையுணர்ந்து செய்கின்ற சிவபூஜையன்றிவேறில்லை.

உண்மையுணர்ந்து சிவத்துவப்பேற்றையடைதற்கு இடையூறுகள் சர்வசீவர்களிடத்தும்பசுத்துவம்ஒழிவின்றிவிரிந்திருக்கின்றது. இப்பசுத்துவநீக்கஞ்செய்வது பாசுபததீக்ஷையாகும். இதுவிரஜா ஹோமத்தோடுசெய்வதாகும். இது பன்னிருநாள் விரதநியமத்தோடுசெய்யத்தக்கது. இந்த ஹோமத்துக்குப் பெரும்பாலும் சமித்துக்கோமயமேயாகும். இக்கோமயம் பசுக்களினின்றும் எடுத்துக்கொள்ளுங்காலம் அமாவாசை, பௌர்ணமி, அஷ்டமி, சதுர்த்தியென்னு நான்குதினமாகும். இத்தினங்களிலே, சமீபித்தகாலிற் கன்றீன்றபசு, நோயுள்ளபசு, [illegible]ளிப்பசு, மலட்டுப்பசு, கிழப்பசு, கன்றிறக்கப்பெற்றபசு, மலந்தின்னும்பசு ஆகிய இவையல்லாத பசுக்களிற் கோமயம் வெளிவருஞ்சமயம் நிலத்தில் விழுமுன்பு தாமரையிலையிலே சத்தியோஜாதமந்திரஞ்சொல்லி வாங்கி, அக்கோமயத்தின்மேலுள்ள வழும்பை நீக்கி அதிலே வாமதேவத்தாற்கோசலம்விட்டு அகோரத்தாற் பிசைந்துருட்டி உலர்த்திவைத்துக்கொண்டு, அதன்பின்புதான் அக்ஹோமந் தொடங்கவேண்டும். நித்தியாக்கினி அரணியிற்கடைந்தெடுத்த அக்கினி சூரியகாந்தக்கல்லிலெடுத்த அக்கினி இம்மூன்றிலொன்றெடுத்துத் தற்புருட மந்திரத்தால் முன் உலர்த்திவைத்த கோமயத்தை * கட்டத்திற் பற்றுவித்துப் போதுமான ருத்திராதி அறுவகைச்சுத்திகளுள்ளே அவரவர்க்குச் சொந்தமாயெடுத்துக்கொள்ளப்பட்டசுத்திவிதிப்படி தக்கமந்திரங்களால் (கக) தத்துவாதியசுத்திசெய்துபசுசெய்யாத் உரிய ஆகுதிகள்செய்து, புதிய சிவலிங்கமொன்றை அங்கே பிரதிட்டைசெய்து விதிப்படி பூஜித்துச், சற்பிராமணபோஜனஞ்செய்வித்து, அன்றியும் நாளுமாமங்களிலும் அவ்விலிங்கபூஜை விஸ்தாரமாகச்செ

* கட்டம்—உலர்ந்தது.

ய்து, பசுத்துவநீக்கமும் சிவத்துவப்பேறும் அருளும்படி ஒவ்வொருகாலமும் வேண்டித்துதித்து வணங்கி, இப்படியேபன்னிருநாளும் ஓமத்தோடு பூஜைசெய்து, பதின்மூன்றாநாள் நித்தியநியதிமுடித்துக்கொண்டு பூசித்த அச்சிவலிங்கத்தை ஆசாரியனிடத்தே உரியமுறையோடு தானஞ்செய்து, அவ்வாசாரியனோடு சற்பிராமணபோஜன மாகேசுரபூஜை தக்ஷிணையாதிகள் சிறப்பச்செய்து இப்பாசுபததீக்ஷையை இடையூறின்றி முடிப்பாயாகில் பசுத்துவநீங்கி நிர்மலனாவாய்.

இச்செயல்முடிவிலே, இருமுறை ஆசமனஞ்செய்து இந்தவிரஜா ஓமகுண்டத்துள்ள விபூதியாவது சிவாக்கினிகுண்டங்களிலுள்ள விபூதியாவது கையில்வைத்து வலக்கையால்மேல்மூடிக்கொண்டு "அக்கினி" என்பதுமுதலிற்கொண்ட மந்திரமுதல் எழுமந்திரங்களால் மூன்றுமுறை அபிமந்திரித்து "ஓம் மாபோவா, ஆபோவா" என்னுமந்திரங்களால் நீர்தெளித்து, அத்திருநீற்றை மூன்றுபாகமாக்கி ஒருபாகத்தை ஈசானத்தாற்சிரசிலும், தற்புருடத்தால் நெற்றியிலும், அகோரத்தால் இருதயத்திலும் வயிற்றிலும் தோள்களிலும், வாமத்தால்நாபியிலும்சத்தியோசாதத்தால் முழந்தாள்கள் கரங்களிலும் லேபனமாகப்பூசி, மற்றொருபாகத்தைச் சிரமுதலாக உடலெங்கும்பூசி இருமுறை ஆசமனஞ்செய்து, மற்றொருபாகத்தைச் சிரமுதல் ஐந்திடத்தாவது பதினாறு முப்பத்திரண்டு முப்பத்தாறிடத்தாவது திரிபுண்டரமாகத் தரிப்பது முறையாகும். இத்திருநீறு தரிப்பவரே பசுத்துவநீங்கப்பெறுவார்கள். இப்பாசுபததீக்ஷைமுற்றும் மெய்யன்போடு விதிப்படி செய்யினும் இதற்குள்ளுயிர்போல்வதொன்று பெறவேண்டுவது அவசியம்.

அதாவது உத்தமோத்தம சிவமூல பஞ்சாக்ஷர மகாமந்திரமே. இது சப்தகோடி மகா மந்திரங்களுள்ளுஞ் சிறந்த ராஜாதி ராஜமந்திரம். இதுவே பாசபந்த நிக்ஷேபலனைத் தருதற்கு முக்கிய காரணமாகும். நிர்மலமோக்ஷநாயகமாய் உத்தமசத்துக்களிருதயத்தில் விளங்குகின்ற இம் மகாமந்திரத்தில் ஒரு எழுத்தின் மகிமையேனுஞ் சொல்லவாவது நினைக்கவாவது என்னாலும் அயனுமாலும் எவராலுமியலாது. இம்மந்திரம்வேதசிவாகமபுராணேதிகாசாதி சகல சாஸ்திரங்களுக்கும் தன்னுள்ளே இடங்கொடுத்து வைத்துக்கொண்டு அவற்றைவிளக்கிக்காட்டுவது. இம்மந்திரம்சச்சிதானந்த சுத்தாத்துவித பரிபூரண பரமசிவம் தன்னிடத்தே அநவரதம் வீற்றிருந்தருளப்பெறுகின்றது. இது பிரணவஞ்சேர்க்க ஆறெழுத்தாகும். மற்றுந்தேவதாமந்திரங்களாகிய அஷ்டாக்ஷராதிகள் பிரணவமுஞ் சேர்த்தே தத்தம் அளவு எண்ணப்படுவன. சிலமந்திரங்கள் அந்தத்திலுள்ள நமாதிகள் சேராமலே தத்தம் அளவு எண்ணப்படுவன. பிரணவத்தோடு சேர்ந்து ஆறெழுத்தாயிருந்தும் வேதசிவாகமாதிநூல்களெல்லாம் திருவைந்தெழுத்தென்றே வழங்குவ.

அளவில்லாத சிவஞானமுனிவர்கள் இத்திருவைந்தெழுத்தைப் பேணியே சிவத்துவப்பேறு பெற்றார்கள். அளவிலாத் தேவர்கள் விரும்பிய பதவிகளைப் பெற்றார்கள். இம்மகாமந்திரம் சிவகோடிகள் மலபந்தம் நீங்கி உய்யுதற்காகவே பரமசிவனாற் கொடுக்கப்பெற்றது. இது யாருடைய மனத்தில் நீங்காதிருக்குமோ அவர்களுக்கு வேத புராணாதிகளால் அரியதவங்களினால் மூர்த்திதல தீர்த்தங்களால் யாகாதி கர்மங்களினால் ஆகவேண்டியதொன்றுமில்லை. மெய்யன்போடு இதனை ஓதாமல் வேறு எவ்வித சாதனோபாயங்கள் செய்யினும், அபாரதுக்கபூரணபயங்கராகாரமாயுள்ள சமுசாரசாகரத்தினைக் கடக்கமுடியாது. இது யாவர்க்கும் உள்ளபடி சிவசொரூபத்தை விளக்கிச்செய்யும் ரத்தினதீபம், இதுவே நான்முகாதியர் முதலிய பலரும்செபித்துய்யத்தக்க சர்வோபகார மந்திரமாகும். இது அநாத சத்தமயமாதலினால் ஓம முதலியபூர்வாங்கங்கள் உசிதமா முதலியயாதும் வேண்டாமலும் உபதேசிக்கக்கூடிய அதிபரிசுத்த சுயம்பிரகாச மகாமந்திரமாகும். இதிலே "சிவ" என்னும் இரண்டெழுத்தின் மகிமையின்சாரம் பிரமனாலும் விண்டுவாலும் எம்முனிவராலும் வேத வேதாந்தங்களாலும் ஒருசிறிதேனும் உள்ளபடி யுரைக்குரைத்தல்அசாத்தியமே. இது சற்குருவாலுபதேசிக்கப்பெறுமல்லாமல் செபித்தாலும் எண்ணியகாரியம் ஒரு சிறிதாயினுங் கைகூடப்பெறார்கள். சற்குருவைப் பெற்றுஉத்தமோத்தம சிவக்ஷேத்திரங்களிலிருந்துசெபித்தால் நினைத்தவையெல்லாம் மிகவிரைவாக உடனே கைகூடுவது சத்தியம். எல்லா உயிர்களுக்கும் மனத்தாலும் ஓர் துன்பநினையாதவராய் விஷயவாசனைகளாம் காமக்குரோதாதிகள் பொய் கூறல் முதலிய சமஸ்த தீமையுமில்லாதவராய்ச் ஜிதேந்திரியர்களாய்த், தம்மைவந்தடுக்கின்ற சீடர்களிடத்தே பரிந்தருளோடு செய்யுந் தீக்ஷையினாலே பழுது முழுது நீக்கி ஆத்மபக்குவத்தைக்கொடுக்கக்கூடிய மெய்ஞ்ஞானமுதலிய உத்தமசத்துவ குணங்களெல்லாநிறையப்பெற்றவர்களே இம்மகாமந்திரோபதேசஞ்செய்தற்குரிய ஆசாரியரானவர்கள். இதனையும் திருவருட்பரிபூரணவிலாசவுத்தமோத்தமசிவஸ்தலத்திற்பெற்றால் நினைத்தவைகள்மிகவிரைவில் உடனேகைகூடும். அத்தலங்களாவன, ஸ்ரீகைலாயம், மேரு, மந்தரம், இமகிரி, கேதாரம், காசி, பிரயாகை, ஸ்ரீசைலம், புஷ்கரம், மல்லிகார்ச்சுனம், கோகர்ணம், திருக்காளத்தி, விருத்தாசலம், காஞ்சிபுரம், அருணாசலம், சிதம்பரம், திருவையாறு, திருவிடைமருதூர், வேதாரணியம், சூதாரணியம், மதுராபுரிமுதலிய சுயம்புலிங்கங்கள் வீற்றிருக்குகின்ற சிவஸ்தலங்களும், நைமிசாதிஉத்தமாரணியங்களும் வில்வங்கொன்றைமுதலியசிவசாந்நித்திய விருக்ஷமூலங்களுமேயாகுமென்றுகூறிய விஷ்ணுமூர்த்திபாதங்களிலே, ஆதிசேடன் பலமுறைவணங்கி இப்போது அடியேற்குச்சொல்லிய எல்லாம்ஞானோபதேசியாகியதங்களிடமே பெற்றுக்கொள்ளும்விருப்பமிக்குடையேன் அருளுகவென்று பிரார்த்திக்க, விஷ்ணுமூர்த்தி அப்படியே செய்வோ

மென்று அருள, அச்சேடன் மிகமகிழ்ந்து சந்நிதியிலுள்ள புண்ணியதீர்த்த ஸ்நானம் விபூதிருத்திராக்ஷதாரணஞ் செய்துகொண்டு, தாம்பூலத்தோடுதனதுமாணிக்கரத்தினங்களைப்பாதகாணிக்கையாகவைத்துவணங்கித்துதித்து நின்றான். அவனுக்கு அக்குருமூர்த்தியாகிய விஷ்ணு பாசுபததீக்ஷாதிகள் விதிப்படிசெய்து அத்திருநீறு கொடுத்துத் தம்மைச் சிவமாகப்பாவித்துக்கொண்டு தமக்கு நேரே ஆதிசேடனைச் சிறிருக்கச்செய்து அஸ்தமஸ்தகசையோகாதி தீக்ஷாசமஸ்காரங்களெல்லாம் விதிப்படி செய்து திருவைந்தெழுத்தை யுபதேசித்துச் சிவமயமாக்கினார். உடனே ஆதிசேடன் தான்வேறு சிவன் வேறென்னும் பேதநீங்கி அவனே தானேயாகின்ற நித்தியானந்தப் பெருவாழ்வு பெற்று மேலுங்குருபாதங்களில் வணங்கி,முன்சொல்லியபடி சுயம்பு லிங்கபூசனையிலேமிக விருப்புற்றிருந்தான். இதனை அன்போடு படிப்பவர் கேட்பவர்கள் இகவாழ்வு முற்றும் பெற்றுவாழ்வதோடு சற்குருவின் றிருவருள் பெற்றுப் பசுத்துவ நீங்கிச் சிவத்துவப்பேறுடையர்களாய்த்தேகாந்தத்திலே பரமுத்தியும்பெறுவார்கள்.

ஆதிசேடனுபதேசச்சருக்க முற்றிற்று.

## ஆதிசேடன் சிவலிங்கம்பெற்ற சருக்கம்.

சனற்குமாரனே ? இனி ஆதிசேடன் சிவலிங்கம்பெற்ற சரித்திரங் கேட்பாயாக வென்று திருநந்திதேவர் கூறுகின்றார். விரஜா ஹோம பாசுபத தீக்ஷாசமஸ்கார ஸ்ரீபஞ்சாக்ஷரோபதேச சிவத்துவப் பேறுபெற்று ஆனந்தசாகரத்தமிழ்ந்திய ஆதிசேடன் விஷ்ணுபாதங்களிலே மேலும் வணங்கித்துதித்து எம்பெருமானே? அடியேற்கருளிய இத்திருவருட்பேற்றிற்கிசைய இனிச் சிவலிங்கமும் பெற்றுப் பூஜித்துவரும் பெரும்பேறு அளித்தருள்கவென்று பிரார்த்திக்க விஷ்ணுகூறுகின்றார். சேடனே பூமியிலே சோழநாட்டிலே சூதவனமென்னும் உத்தமோத்தம சிவஸ்தலத்திலே, சர்வசீவர்களும் உய்யும்பொருட்டு வீற்றிருந்தருளுகின்ற அமிர்தமய சுயம்புலிங்க மூர்த்தியைச் சிவாகம விதிப்படி பூஜிப்பாயாக. அத்தலத்துக்குநீ செல்லுங்கால் அளவில்லாத சொர்ணரத்தினாதி பலபொருட்பெருக்கோடு, வேதசிவாகமாதி முற்றுணர்ந்த ஆதிசைவர்களையும், சற்பிராமணர்களையும், காசியப முதலான சிற்பநூலுணர்ந்து அவ்விதிப்படிசிவாலயத்திருப்பணியாதிகள் தெளிவாக நாலுவித கைச்சாதுரிய பரிச்சினை சாமர்த்தியத்தோடு செய்யத்தக்க லௌகிகத்தும் வல்லவர்களாகிய சாதகர்களோடு தேவகம்மியனையும், மற்றும் பரிசனங்களையும் அழைத்துக்கொண்டு விரைவாக அச்சூதவனத்திற்சேர்ந்து, அத்தினத்திலே க்ஷேத்திரபிண்டாதிசெய்து உபவாசாதிநியதியோடு ஆன்மார்த்த சிவலிங்க பூஜைசெய்வாயாக. அது சமஸ்த தலங்களிலுமுள்ள சமஸ்த சிவலிங்க பூஜா பலனையுங்கொடுக்கும். ஆதலினால் இங்கே உனக்கு ஒரு மா

க்த சிவலிங்கந் தருகின்றோம்; இதனை எக்காலமும் நியதியாகப் பூசித்து வருவாயாக என்று அவ்விலிங்கத்தை ஞானாதி சமன்வய சம்பந்தமுறக் கொடுக்க, உடனே ஆதிசேடன் மீட்டும் வணங்கி இருகையும் விரித்தேந்தி விதிப்படி மந்திர தந்திர கிரியா விகற்ப மெல்லாம் அவ்வாசானே காட்டத் தெரிந்து, அம்முறையே அம்மரகதலிங்க பூஜனையைச் செய்து முடித்து, மேலும் ஆசானை வணங்கி எதிர் நின்று எம்பெருமானே? இக்கூறின ஆன்மார்த்த சாலிங்க பூஜனையே சகல சல சிவலிங்க பூஜாபலன் முழுதுந் தந்து விடுமென்ற தாங்கள், முன் சூதவனத்தில் அமுதசுயம்புலிங்க பூஜனை செய்யவென்றதென்ன? இச்சந்தேகம் நீங்கியருளுகவென்று வேண்ட, விஷ்ணு அவனை நோக்கி ஆதிசேடனே? நாம் இப்பொழுது கூறும் ஆன்மார்த்த பூஜாபலனை வேதசிவாகமாதிசாஸ்திரசம்மதமேயாம். அதுமேற்கொண்டோர் தாவரமாகிய பரார்த்த லிங்கவழிபாடுசெய்யவேண்டியதும் சிவ சாஸ்திரசம்மதமேயாதலால் அதனை முற்கூறினோம். அத்தாவர லிங்கங்கள் பற்பலவகையாகும். அவை யெல்லாவற்றினும் சுயம்புலிங்கம் மிகமேலாம். அவை யெல்லாவற்றினும் இச்சூதவனத்து அமுத சுயம்புலிங்கம் அதிகமாதலால் உன்னை அங்கே செல்லுக வென்றோம் அப்படியே நீ சென்று, திருக்கோயிற்றிருப்பணி கும்பாபிஷேகாதியெல்லாம் விதிப்படி செய்வித்தபின் அவ்வமுதலிங்கேசனைப் பூஜித்து, ஒவ்வொரு வருஷத்தோறும் பன்னிராயிரம் வாரங்கள் வரும்படிக்கு நடக்கத்தக்க விழா தினங்கள் சாதனஞ்செய்து கொடுத்துக், கன்னை யக்ஞாதிகள் பாத்திரங்கள் வேண்டியவெல்லாம் நிறைவித்து, நித்தியநைமித்திகாதிபூசனைகள் எப்போதும் நடக்கும்படி செய்து, அப்பரார்த்த பூசனைசெய்து வருகின்ற ஆதிசைவர்களாகிய குருக்கள்மார் ஒவ்வொருவருக்கும் தகுதியான மாளிகைகளும் அமைத்து, அவை யென்றென்றும் எவ்வகைப் பொருள்களும் நிறைத்துவைத்துச், சொர்ண யக்ஞோபவீதாதிகளோடும் அவர்களுக்குத் தத்தஞ்செய்து, மிகுதியான விழா தினங்களோடும் அவை யெக்காலமும் அவர்களுக்கே சாசுவதமானுபவமாகச் சாசனஞ்செய்து கொடுத்து, நீயும் ஆன்மார்த்த மரகதலிங்கபூசனையும் பரார்த்த அமுதசுயம்புலிங்க பூசனையுஞ் செய்து கொண்டு அத்தலத்திலிருப்பாயாக. இப்பரார்த்த ஆன்மார்த்த பூசனையால் இருவினையொப்புமலபரிபாகசத்திநிபாதங்களுக்குத்தக்க நித்தியானந்த போகப் பெருவாழ்வு பெறுவாய். இது சத்தியம். நீ பூசிக்கும் அவ்வமுதலிங்கத்தை இனிஅநேக ரிஷிகள் தேவர்கள் பூசித்து இஷ்டசித்திகளைப்பெறுவார்கள். நாமும் பின்வரும் சுவாயம்புவமந்வந்தரத்தில் அவ்விலிங்கபூசனையால் வேண்டியநன்மையெல்லாம் பெறுவோம். இனிப்பலவை விரிப்பதேதன். நீ சிறிதும் தாமதியாமல் அச்சூதவனஞ் செல்லுவாயாக என்று கூறினார். இதனை மெய்யன்போடு படிப்பவர் கேட்பவர்கள் இம்மையிலே சகலபோகங்களும் அனுபவித்து உண்மைஞானத்தாற் பரமுத்தியைப் பெறுவார்கள்.

ஆதிசேடன் சிவலிங்கம்பெற்ற சருக்க முற்றிற்று.

## ஆதிசேடன் சூதவனஞ்சென்ற சருக்கம்.

சனற்குமாரனே இனி ஆதிசேடன் சூதவனஞ்சென்ற சரித்திரங்கேட்பாயாகவென்று திருநந்திதேவர்கூறுகின்றார். விஷ்ணு முன்கூறியவெல்லாங் கேட்ட ஆதிசேடன் பெருமகிழ்வுற்று அன்புமீதூரச்சூதவனஞ்செல்லுங் கருத்தனாய் உலகர் தனது ரூபங்கண்டஞ்சாதபடி முன்போலப் பதஞ்சலிரூபங்கொண்டு விஷ்ணுபாதங்களில்வணங்கி விடைபெற்றுக்கொண்டு அவர்கூறியபடியே அளவில்லாத சொர்ணரத்தின திரவியாதிகளோடும் ஆதிசைவப்பிராமணர் வைதிகப்பிராமணர் தேவகம்மியனாதியரோடும் புறப்பட்டுத்திருக்கைலாயம் முதலிய சிவஸ்தலமெல்லாந்தெரிசித்துக்கொண்டு வேதாரணியத்தினின்றும் மேற்றிசைநோக்கிவருங்கால் அதிதூரத்தே ஆகாயத்தை அளாவிநிற்குஞ் சூதவனந்தோன்றக்கண்டு உடனேமிக்க ஆராமையோடு நிலத்தில்வீழ்ந்து வணங்கியெழுந்து அநேகசுபநிமித்த சகுனங்கண்டு பேரானந்தத்தோடு வருகின்றான். அப்படிவருங்காற் சூதவனத்துள்ளே மார்க்கண்டாதி சகல முனிவர்களுக்கும் அநேக நன்னிமித்தங்களுண்டாயின. அம்முனிவர்யாவரும் மார்க்கண்டமுனிவராச்சிரமத்தில் ஒருங்குகூடி இந்நிமித்தங்கள் ஏககாலத்தில் நம்மில்யாவருக்குந்தோன்றியகாரணம் என்னென்று யோசிக்கும்போது, முனிவர்களே ! விஷ்ணுவாலுபதேசிக்கப்பெற்ற அதிபரிசுத்தனாகிய ஆதிசேடன் அமிர்தசுயம்புலிங்க தெரிசனைந்தப் பெரும்பேற்றிற்கணியனாய் இவ்வனத்தாக்கணிமையில்வருகின்றான் ; அவன்வரவு உங்கள் அருந்தவப்பயனேயாகும்; அப்புண்ணியசீலன் வரப்பெறுதலால் அதனைக்காட்டும் உற்பாதமாக நன்னிமித்தங்கள் தோன்றினவென்று ஆகாயத்தினின்றெழுந்த அசரீரிவாக்கைக்கேட்டு, முனிவர்யாவரும் மிகமகிழ்வுடையாராய் எதிர்கொளச்செல்லுங்கால், அவர்களெதிரே ஆதிசேடனும் கூட்டத்தோடு அங்குவரக்கண்டு யாவரும் பேரானந்தப்பெருங்கடலிற்படிந்தவர்களாய் வணங்க, அதற்குமுன் சேடனும்வணங்கி அன்புமிக்க உபசாரங்கூறி அவர்களோடு மார்க்கண்டமுனிவராச்சிரமத்தில் வந்து தவவிருத்திகளை விசாரித்துக்கொண்டிருந்து, சிலமுனிவரோடுசென்று மார்க்கண்டதீர்த்தத்திலே விதிப்படி ஸ்நானாதிகியதிகள் முடித்துக்கொண்டு அமிர்தலிங்கதரிசனத்திற் பேராசைசெலுத்தச்செல்லுங்காற், காதுக்கினிமையான ஓரொலித்திரட்சிகேட்க, அத்திசைநோக்கி வரவர அவ்வொலி அக்ஷரவொலியாய்த், திவ்விய மந்திர சிவநாமகோஷமாய்க், கிளிமுதலிய பக்ஷிகளாற் செபிக்கப்படுவனவாய்த் தோன்றநோக்கிப் பெருமகிழ்வுற்றுச்சமீபித்து அநேக விருக்ஷங்கள் கொடிகள் பக்ஷிகளின் அருஞ்செயல் நோக்கிச்சென்று, மிக உந்நதமான ஒருமாவிருக்ஷத்தோடு கொன்றை வில்வமுதலிய மரங்கள் செறிந்து, மேலே மல்லிகைமுல்லையாதி கொடிகள் நெருக்கமாய்ப்படரப்பெற்று, ஒரு ஆலயம்போல அங்கொரு சூழல்தோன்றக்கண்டு, மி

கவிழைந்து வரும்போது, கன்றுகளோடு பலபசுக்கள் அச்சுரமியினுள்ளே போதலும் பணிதலும் வலம்வருதலுஞ் செய்யப் பலபுலிகள் திருவலகுப்பணி செய்யப் பலயானைகள் நீர்தெளிக்க மற்றும் மிருக பக்ஷிகள் நியமன போகதிகள் செய்யக்கண்டு, போசாச்சிரியமும், போனந்தமும், போன்புமுடையராய் எம்முனிவர்களோ இவ்வுருவங்கொண்டு இப்பணிகள் செய்கின்றாரென்று துணிந்து பணிந்து களிந்துருகுமனத்தராய், உபசாரம் பலகூறி உள்ளே புகுந்து அமிர்தலிங்கத்திருவுருவங் காணப்பெற்றான், உடனே தன்வசமிழந்து பரவசமாகிச் சிவானந்தசாகரத்தழுந்திப் பலமுறை விழுந்துவணங்கியெழுந்து, அச்சிவலிங்கத்திருமேனியழகும், திருவருட்பொலிவும், அமிர்தமயமேயாகியவிளக்கமும், வெள்ளொளிப்பிழம்பாய் விளங்குமேன்மையும், மற்றுமற்புதங்களும், உற்றுநோக்கி அன்பேஉருவமாய் அருளையேநோக்கிக்கண்ணீருங்கம்பலையும் உண்ணீர்மைமேற்கொள்ள நின்று அளவிலாத் துதிபுரிந்தான். அத்தினம் தைமாசம் குருவாரம் பௌர்ணிமைதிதி பூசநக்ஷத்திரமாயிருப்பது தெரிந்து இத்தினமல்லவா நமக்கு முன்னும் சிதம்பரத்திலே ஆனந்தநடனங்காட்டியதென்றுமிகமகிழ்வுற்று, இத்தலத்தில் இத்தினத்திலே இவ்வமுதலிங்கதெரிசனஞ்செய்து உற்சவாதிசெய்தோர் புத்திரமித்திரகளத்திராதி சகலசம்பத்துக்களுடனே இம்மையிலே அநேக திடகாத்திர தீர்க்காயுசுமான்களாய்வாழ்ந்திருந்து தேகாந்தத்திலே கயிலையின்பெல்லாமனுபவித்துப் பின்பரமுத்திபெற்றுவாழ்வார்கள் என்றுகூறி அதன்மேற் புஷ்பபலாதிகொண்டு அமிர்தலிங்கேசனைப் பூசனைசெய்துகொண்டிருந்தான். இதனை அன்புடன்படிப்பவர் கேட்பவர் தீவினைமுற்றும் நீங்கப்பெற்று இகபோகமெல்லாமெய்திப் பின் சிவாநுபூதிச்செல்வர்களாய்த் திருவடிநிழலிற்களித்துவாழ்வார்கள்.

ஆதிசேடன் சூதவனஞ்சென்ற சருக்க முற்றிற்று.

## ஆதிசேடன்றிருப்பணிச் சருக்கம்.

சனற்குமாரனே இனி ஆதிசேடன்றிருப்பணிசெய்தவிதத்தினைக்கேட்பாயாகவென்று திருநந்திதேவர் கூறுகின்றார். அமுதலிங்கபூசனை புரிந்துகொண்டிருந்த ஆதிசேடன்புறம்போந்து உடன்வந்த தேவகம்மியனைநோக்கி மயனே எம்பெருமானுக்குச் சுவர்ணரத்நிதங்களாலே சகல அங்கங்களும் பொருந்தத் திருக்கோயில் செய்வாயென்றும் மற்றை வேலையாளைநோக்கி நீங்கள் இன்றுமுதற் கும்பாபிஷேகத்துக்கு வேண்டுந்திரவியங்கள் முழுதுஞ் சவிஸ்தாரமாகச்சேர்ப்பீர்களாகவென்றும் ஆஞ்ஞாபித்தான். அவரவர்கள் அவ்வத்தொழிலிற்சென்றார்கள். பின் அவ்வாதிசேடன் செடிகொடிபுல்லாதிகளைச்சீத்தொழித்துப்பாலுமாயிற்றுமருந்துமாயிற்றென்பதுபோல அவைகளை அங்குள்ள பசுக்களுண்ணக்கொடுத்துநிலத்தை ஒப்பஞ்செய்துவருங்கா

ல் அமுதலிங்கத்திருமேனியிலே சற்றேசூரியகிரணம்படவருவது தெரிந்து உடனே மிகவிரைந்து அணிமையிற் குடைபிடித்து நின்று நிழல்செய்தான். அந்தக்ஷணமே தேவகம்மியன் அனந்தகோடிசூரியோதயம்போல் ஒருவிமானம் மேன்மையவிதிப்படி சுவர்ணரத்தினாதிகளாற் கெர்ப்பக்கிரகத்தை நிருமித்து, அர்த்தமண்டபம் மகாமண்டபம், அறுகாற்பீடிகை, திருமாளிகைப்பத்திசேர்ந்த அநேகரிஷபங்கள் சிவகணங்கள் மேல்விளங்குந்திருமதிலுயர்ந்த முதற்பிராகாரம், இரண்டுமூன்று நான்கு ஐந்துபிராகாரங்கள், அங்கங்கே கோபுரங்கள் பரிவாரதேவாலயங்கள், நந்திமண்டபம் துஜஸ்தம்பபலிபீடங்கள், நிருத்தமண்டபம், சோபனமண்டபம், திருவிழாக்கொண்டருளும் வசந்தமண்டபம், வேதசிவாகமாதி சாஸ்திரபுஸ்தகரூபத்திலே பரமசிவப்பிரதிஷ்டைசெய்து, அமிர்தலிங்கேசர்க்குப்போலவேகாலங்கடோறும் சிவத்துவிஜர்களாலே பூஜிக்கப்பெற்று நூல்பலகற்று முற்றுணர்ந்த உத்தமகுணவித்தகர்களாலே அச்சிவசாஸ்திரப்பிரசங்கஞ்செய்துவரப்பெறும்வித்தியாமண்டபம், ஆரியவேதம் அருந்தமிழ்ச்சீரியவேதமாகியஇரண்டுங் கசடறப்பயின்றோர் சிறிதும்வழுவின்றி உரியசுரமும்பண்ணும்பொருந்த அத்தியயனஞ்செய்துவரும் வேதமண்டபம், திராவிடவேதமண்டபம், யாகமண்டபம், ஆயிரக்கால் மண்டபமுதலிய சமஸ்த அங்கங்களுநிறைய அமுதலிங்கசிவாலயத்தைப்பூலோகசிவலோகமென்று கூறும்படிசெய்து, பெரியநாயகியம்மைகோயிலும் அப்படியே விஸ்தாரமாகச்செய்து, விநாயகசுப்பிரமணிய அம்பிகாசிலாவிக்கிரகங்கள், மற்றும்சௌராதிசண்டேசாந்த சிலாவிக்கிரகங்கள்முழுதும், சோமாஸ்கந்தர்முதலிய உற்சவவிக்கிரகங்கள் முழுதும், சொர்ணரத்தினபாத்திராகரணாதிகள்முழுதும், மற்றும்யாவும்நிருமிதஞ்செய்துமுடித்துவிட்டு, ஆதிசேடனெதிர்வந்துநின்றான். அத்தேவகம்மியனிடத்துமிகப்பிரீதிகொண்டு அநேகஉபசாரங்கூறி நீ செய்த அருஞ்செயல்களுக்கு உலகமுழுதுங்கூடாது; ஆயினும் முறைமைநோக்கி என்னுடைய உபகாரத்தைப்பெறுவாயென்று அளவிலாதசொர்ணரத்தினாதிவியவஸ்திராபரணாதிகள் கொடுத்துமகிழ்வித்துப், பின் அவ்வாதிசேடன் ஆதிசைவாதியோர் கூடியசபையிலேகும்பாபிஷேக சுபமுகூர்த்ததினநிச்சயஞ்செய்து, கீழ்த்திசையிலேதன் பேரால் ஒருதீர்த்தமுண்டாக்கி, அதற்கும்மார்க்கண்டதீர்த்தாதிகளுக்கும் தேவகம்மியனுற்படித்துறையாதிகள் செய்வித்து, மேலும் அவனைக்கொண்டே சிவத்துவிசர்களெல்லாருக்குந்திருக்கோயிலைச்சூழத் திருமாளிகைகள் செய்வித்துச், சமஸ்தபொருளுநிறைவித்துச், சுபதினத்திலே அவர்களை அம்மாளிகைதோறும்பிரதிஷ்டைசெய்தான். பின் சிலபிராமணர்களைநோக்கி இந்நாட்டரசனாகிய ராஜசூடாமணியென்னுஞ்சோழராஜாவுக்கு நாம் இங்குவந்துசெய்யும் நிகழ்ச்சி தெரிவித்தழைத்துவருகவென்றனுப்ப, அவர்கள் சென்றுதெரிவிப்ப, அவ்வரசன் அவர்களோடும், அள

விலா மகிழ்ச்சியோடும், அநேக திரவியங்களோடும், அதிவிசையோடும், சைனியங்கள்சூழ அத்தலத்தில்வந்து ஆதிசேடனைவணங்கி, அவனோடுஞ்சென்று, திருக்கோயிற்றிருப்பணியாதி யெல்லாமுங்கண்குளிரக்கண்டு கண்டுபேரானந்தப்பெருங்கடலிற்றிளைத்து, ஆச்சரியமுடையனாய் இதுவோசிவலோகமென்று ஆதிசேடனைப்பலமுறைதோத்திரஞ்செய்து உபசரிப்பதானான். அவ்வாசனோடு ஆதிசேடன் அளவளாவிக்கொண்டிருந்தான்.

முன் ஏவப்பெற்ற வேலையாளர்கள் கும்பாபிஷேகத்துக்குவேண்டிய திரவியங்கள் ஒவ்வொன்றும் அமைக்கின்றார்கள். சிலர்மஞ்சட்குவியல், அருகன்பொடி, அரிசிமாப்பொடி, நெல்லிமுள்ளிப்பொடி, குங்குமம், எண்ணெய்முதலியன பற்பல மிடாக்களினிறைத்துவைத்தார்கள். சிலர் அநேகம் இளங்கன்றுப்பசுக்களை வசதியானஇடத்தில் நிறைத்து உணவுகொடுத்துப்பாதுகாத்து அப்போதப்போதுவேண்டும் பால்தயிர்கொடுத்துவருவாராயினர். சிலர் பசுநெய்யைக்குடங்களில்நிறைத்துவைப்பார்கள். சிலர் வாழைபலாமாமுதலியகனிகளெல்லாம் மலைமலையாக்குவிப்பார்கள். சிலர்தேன் கரும்பு கற்கண்டு சர்க்கரை தேங்காய்முதலியன, சிலர் சந்தனம் பன்னீர்முதலியன, சிலர் பலவிதநெல்லுக்கள் அரிசி துவரை உழுந்து பயறு எள்ளுமுதலியன, சிலர் வில்வம் பாதிரி புரசு மூங்கில் மா அத்தி வன்னி இத்தி அருகு அரசு ஆல் பலா கருங்காலி வெள்ளெருக்கு நாயுருவி சந்தனம் தேவதாரு அகில் நெல்லி செஞ்சந்தனமுதலியசமித்துக்கள், சிலர் தர்ப்பை நவபாண்டம் நூல்முதலியன அளவில்லாமல் நிறைத்துவைத்தார்கள். சிலர் பொன்வெள்ளியாதிகளாற் பூஜாபாத்திராதிபலவகைப்பாத்திரங்களும், சொர்ணரத்தினங்களால்வில்வம்தாமரை கொன்றை குமுதம்நீலோற்பலம் செங்கழுநீர்முதலியனவும், கலசமாதிகளும், மாவிலைகூர்ச்சம் தேங்காய் பூணூல் பவித்திரம்காதணிகாப்புமுதலியனவுஞ்செய்வித்துச் சேர்த்துவைத்தார்கள். சிலர்பொன் மணி பட்டுவகைகளாற் குடைசுருட்டி ஆலவட்டமுதலியவரிசையெல்லாம், வஸ்திரவகையெல்லாம், ரத்தினவகையெல்லாம், திரவியவகையெல்லாம், நிறைத்துவைத்தார்கள். சிலர் விபூதியைக்கற்பமுறைப்படிசெய்துவடித்தெடுத்து வாசனை சேர்த்துப் புதுமிடாக்களில் நிறைத்து வெள்ளியவஸ்திரத்தால்மூடிக்கட்டிவைத்தார்கள். சிலர் கஸ்தூரி பச்சைக்கர்ப்பூரம் குங்குமப்பூ கோரோசனை புழுகு கற்பூரம் தசாங்கப்பொடி ஏலம்தக்கோலம் சாதிக்காய் பத்திரி லவங்கம் வால்மிளகுமுதலியவெல்லாம் நிறைத்துவைத்தார்கள். சிலர்வாழையிலை, பலவிதகாய்வகை, கிழங்குவகை, வெற்றிலைபாக்குவகை, தாவரங்களின்தளிர்வகை, அவற்றின்பட்டைவகை, மிர்த்திகைவகை, மணல்வகை, தீர்த்தவகையெல்லாஞ்சேர்த்தார்கள். இச்செயலிப்படிக்கழிந்துகொண்டிருக்க, ஆதிசேடன் ஸ்ரீபிரகந்நாயகிசமேத ஸ்ரீஅமிர்தலிங்கேசசந்நிதியில்வணங்கியெழு

ந்தஎம்பெருமானே இக்கும்பாபிஷேகங்கொண்டருளுகவென்றுபிரார்த்தித்துக்கொண்டு, இரண்டாம்பிரகாரத்திலீசான திசையிலேசிவத்துவிஜர்முன்னிலையில் மயனைக்கொண்டு ஸ்ரீபிரகந்நாயகி அமுதலிங்கேசர் சுப்பிரமணியாதி சமஸ்தமூர்த்திகளுக்குந்தனித்தனிநவகுண்டாதிகுண்டங்கள், வேதிகைகள், அஷ்டமங்கலங்கள், தசாயுதங்கள்; நாற்* றுவாரதோரணங்கள், கூர்மாசனாதிகள், வேதிகைக்குரியவிமானாதிகள், எல்லாமும்நிறைந்துவிளங்கும்படியாகசாலைசெய்வித்து, இவைபோல முன்புஆகவேண்டியவையெல்லாஞ்செய்துமுடித்தான்.

பின்பு வேதசிவாகமாதி சிவசாஸ்திர பாரங்கதர்களாய் மந்திர தந்திரகிரியாபாவனாதி பரிசயசீலர்களாய் அங்கஹீனாதிகுற்றமில்லாதவர்களாய் உள்ளும் புறம்பும் பரிசுத்தர்களாய்ச் சபத்தினிகர்களாய் சமய விசேடநிர்வாண சிவதீக்ஷாசமஸ்கார சம்பூரணர்களாயுள்ள ஆதிசைவர்களாகிய சிவத்துவிஜர்களை ஒருங்குகூட்டித்துதித்து உபசரித்து, இக்கும்பாபிஷேக மகாகாரியத்தை நீங்களே வகித்துநடத்தி அடியேனுக்கும் அப்பலனைத் தந்தருளுக என்று பிரார்த்தித்து, அவருள்ளே இன்னார் இன்னயாக நடத்துக. இன்னார் இன்னசாதகாதிசெய்க என்று நியமித்தான். அதுவே ராஜானுஞையாகக்கொண்டு சிவத்துவிஜர் யாரும் அக்கும்பாபிஷேகத்துக்குச் செல்லுமான பொருள்முழுதும் பதினொருபங்காக வைத்து அவற்றின் சுத்தியென்பதாகிய தனபூஜை செய்தார்கள். பின் பிராமணனுஞை பெற்றுத், தக்ஷிணையாதி பெருகக்கொடுத்துப், பெரியநாயகிக்கும் அமுதலிங்கேசர்க்கும் அபிஷேகநைவேத்தியாதி விசேஷபூஜைசெய்து, வேண்டிக்கோடலாகிய தேவானுஞைபெற்று எடுத்துக்கொண்ட மகாகாரிய அஷ்டபந்தனகும்பாபிஷேகம் நிர்விக்கினசமாப்தியாகும்படி விக்கினேசுரபூஜை செய்து பிரார்த்தித்துக்கொண்டு, அமுதலிங்கேசசந்நிதியிலே யாவரும் ஒருங்குசேர்ந்து மகாசங்கற்பஞ்செய்துகொண்டு, வாஸ்துசாந்தி பிரவேசபலி கிராமசாந்தி ரக்ஷோக்னம் கோஷ்வாசம் முறையேசெய்து, உடனே பூர்வபுண்ணியாகவாசனம், சற்பிராமணபோஜனம், உத்தரபுண்ணியாகவாசனம், கிருகவக்ஷும் சங்கிதாஹோமம், திசாஹோமம், சாந்திஹோமம், மூர்த்திஹோமஞ்செய்து, உற்சவமூர்த்திகளாகிய விநாயக சுப்பிரமணியர் சுவாமி அம்பா சண்டேசராகிய பஞ்சமூர்த்திகளுக்கும், அஸ்திரதேவருக்கும், அபிஷேகாதி விசேஷபூஜைசெய்து, அப்பஞ்சமூர்த்திகளும் அஸ்திரதேவரும் ரிஷபாதிவாகனங்களிலெழுந்தருளி வந்து வில்வமரத்தடியிலே வீற்றிருந்தருளச்செய்து, அம்மரத்தடியிலே பூதேவியை விதிப்படி பூஜித்து; அம்மிர்த்திகையைச் சொர்ணபாத்திரத்திலெடுத்து மேலே பட்டுவஸ்திரத்தால் மூடிக்கொண்டு, அப்பஞ்சமூர்த்திகளோடு மீண்டுபிரதக்ஷிணமாய் ஆலயத்தில் யாக

* துவாரதோரணம்—வாயிலிலுள்ள நிலைக்கோப்பு.

சாலையுள் வருதலாகியதிருத்தங்கிரகணமும், யாகசாலையிலேசோமகும்பந்தா
பித்து அம்மிர்த்திகையை விதிப்படி பாலிகாபாத்திரங்களிலிட்டுப் பசுப்பா
லொடுகலந்த நவதானியங்களை அவற்றிற்றெளித்தலாகிய அங்குரார்ப்பணமு
ஞ்செய்து, அச்சிவத்துவிஜர் யாவரும் தங்களுக்கும் பின் அமிர்தலிங்காஸ்திரம
ஸ்தமூர்த்திகளுக்கும் சொர்ணரக்ஷாபந்தனஞ்செய்து, அம்மூர்த்திகளுக்கெல்
லாம்சவிஸ்தாரமாகப்பிரசன்னபூசனைசெய்து அந்தந்தமூர்த்திகளின்றிருமுன்னிலே, ப
ரிமளசுத்தோதகபூரிதமான சொர்ணகும்பங்களைவர்த்தனி அஷ்டவித்தியேசு
ராதிகும்பங்களோடுதாபித்து, அமுதலிங்கேசர் அவ்விலிங்கத்தினின்றும் கும்
பத்தில் வந்தருளும்படி அன்பேவடிவாய் மனங்கசிந்துருகப்பலமுறை தாழ்ந்
து வேண்டி அதற்குரியநியாசாதிகிரியாகலாபமுழுதும் விதிப்படிக்கிரம ஆவா
கனஞ்செய்து, மற்றையகும்பங்களிலும் அந்தந்தமூர்த்திகள் அதனதனாய் வந்
தருளும்படி உரியவிதிப்படிஆவாகித்து அக்கும்பங்கள் ஒவ்வொன்றிலும் அவ்
வம்மூர்த்திகளை விதிப்படிபூஜித்து, யாத்திராதானசகலதானமுஞ்செய்து
சிவத்துவிஜர்கள் கும்பங்களொவ்வொன்றையும் மிகவும் அருமை பெருமை
தோன்ற இருகரங்களாலும் மெல்லெனச் சிறிதும் அசைவின்றிச் சாவதான
மாயெடுத்துப் பட்டுவஸ்திரஞ் சூழ்ந்துள்ள சிரமேல்வைத்துத் தம்முயிரினும்
மிகப்பேணுதலொடு இருகைகளாலும்பிடித்துக்கொண்டு, அடிமேலடிபொருந்
தப்பக்கத்தேநின்றுகாண்கின்றவர்கள் நடவாமனிற்கின்றதுபோன்றுதோன்றும்
படிமெல்லமெல்லஅசைவின்றிப்பூமியிலிளிர்த்தமணமிக்க புஷ்பங்கணிறைந்த பா
வாடைமீதுமேலேகுடைபிடித்தவருவாராயினர். இருபக்கங்களிலுஞ்சாமரைக
ளசையவிலாமிச்சாதிவிசிறிகள் வீசப்பெற, பின்பக்கொடிகுடைசுருட்டிஆல
வட்டமுதலிய வரிசைநெருங்க, வீரம்பாடுவோராகிய மாகதர்களும் மங்கலம்
பாடுவோராகிய வந்திகளும் கீர்த்திபாடுவோராகிய சூதர்களும் வரிசையாக
ப்பாடிவரத், தேவர்கள் மேனின்றுபுஷ்பமழைபொழியப், பிராமணர்களிற்சிலர்
ஆசிவசனங்கூறச், சிலர் அக்ஷதை சிலர்சுத்தோதகம் சிலர்பன்னீர் சிலர்சந்த
னக்குழம்பு சிலர்சொர்ணங்கள் சிலர்ரத்தினங்கள் சிலர்நெல்லுகள் சிலர்நெ
ற்பொரிகள் சிலர் பல்வகைச்சுகந்தபுஷ்பங்கள் பொழியச், சிலர் எதிரே அஷ்
டாங்கமாக நமஸ்கரித்துக்கொண்டு பின்காட்டாது எதிர்முகமாய்வரச், சிலர்
தேங்காய்சிதற, ஆதிசைவர் பலர் உரியனகூட்டிப்பக்குவஞ் செய்துள்ள *மூர்
க்கவர்க்கம் மதுவர்க்கம்பானகம் பாதிரிப்புஷ்பாதிவாசனைசேர்ந்த சுத்தோத
கம் நீர்மோர்இளநீர்பலவர்க்கான்னங்கள் பணிகள் பருப்பால் பல அப்பவர்க்
கங்கள் பாயசம்தாம்பூலமுகவாசாதி அநேகநைவேத்தியங்களை அடுத்தடுத்து
நிவேதித்துக்கொண்டு மிகச்சமீபத்தில்வர, இருபக்கத்தும் வேதகோஷம் தே
வாரதிருவாசகாதி தமிழ்வேதகோஷம் சுவஸ்திவாசனகோஷம் ஜெயகோ

* மூர்க்கம்—பயற்றம்பருப்பு.

நைம்நமகசமகாத்மகஸ்ரீருத்திரகோஷம்முதலியவைநிறைந்துமுழங்கப், பஞ்சா
க்ஷரமந்திரம் பஞ்சப்பிரமசடங்கசங்கிதாமந்திராதி மந்திரசெபங்கள் பெருக,
ருத்திரவீணைதிரைப்புக்கருவியெல்லாம், நாகசின்னதிதுளைக்கருவியெல்லாம்,
பேரியாதி தோற்கருவியெல்லாம், தாளமாதிகஞ்சக்கருவியெல்லாம், சிவநாம
கீர்த்தனதிபிடற்றுக்கருவியெல்லாமுழங்க; மகரிஷிகள்சூழ்ந்துநின்றுதுதிக்க,
அவர்பத்தினிகள் வாழ்த்தெடுப்ப, மணங்கசிந்துருகுந் திருத்தொண்டர்கள் ஆ
னந்தபாஷ்பம் பொழிந்துகொண்டு நெருங்கிவர இவை முதலின்னுமளவிலா
வைபவங்களோடு அக்கும்பங்கள் எழுந்தருளிவருமகிமையைக் கண்கள்குளிரக்
கண்டு அவ்வாதிசேடன் இதுவன்றோநான்செய்த பெருந்தவப்பேறென்று கூ
றி அனந்தானந்தக்கடலிற் றிளைத்துவர, இராஜசூடாமணிசோழனுந்தொடர்ந்
துவர, ஆலயப்பிரதக்ஷிணமாக யாகசாலையின் மேலைவாசல் வழியாகச்சென்று
ஆங்காங்குத் தானியவகை அடிப்பரப்பமைந்துள்ள அந்தந்தவேதிகைகளி
லே அந்தந்தக்கும்பங்களைச் சிரசினின்று மிக்கபயபக்தியோடு அசைவின்றிச்
சாவதானமாயிறக்கிவைத்து, உடனேநைவேத்தியகற்பூராதிசெய்து, ஒவ்வொ
ரு யாகசாலையினும் சப்தவிம்சதியாதி கலசஸ்தாபனமுஞ்செய்து, மேல்நித்தி
ய யாகபூஜை தொடங்கிச் செய்துவருவாரானார்கள்.

காலந்தோறும் புண்ணியாகபஞ்சகவ்விய பாவனாபிஷேகாதிகள்செய்து,
அரணிகடைந்தெடுத்த அக்கினியைப் பிரதானகுண்டங்களிற் ருபித்து, அதி
னின்றுமெடுத்துமற்றைக் குண்டங்களெல்லாவற்றினுந் தாபித்து, விதிப்படி
வரிசையாக ஓமஞ்செய்வாராயினர். அவ்வோமத்திரவியங்களாவன சமித்து,
அவிசு, பசுநெய், பால், தயிர், என்னு, தேன், வால்நெல், எனைநெல் நீவாரநெல்
முதலியநெல்வகை, சாமை, தினை, மூங்கிலரிசி, அவல், சத்துமா, பயறு உழு
ந்து மொச்சை கடலை கோதுமை துவரை முதலிய தானியவகை, கரும்பு, சர்
க்கரை, வெல்லம், நீலோற்பலக்கிழங்கு செங்கழுநீர் தாமரை குமுதமுதலிய
கிழங்கு கருணைக்கிழங்கு பலவள்ளிக்கிழங்கு பூலாங்கிழங்கு முதலிய கிழங்கு
வகை, பலவகைமாதுளை, பலவகை நாரத்தை, பலவகை எலுமிச்சை, பலவ
கை வாழை பலா மா கொடிமுந்திரி பேரீந்துமுதலியபழவகை, கற்கண்டு, அ
நேகவித அதிவிசித்திர வர்க்கான்னவகை, அநேகவித மோதகாதிபண்ணியவ
கை, வெட்டிவேர், விளாமிச்சம்வேர், பனிநீர், புழுகு, கோரோசனை, குங்கும
ப்பூ, கஸ்தூரி, பச்சைக்கற்பூரம், கஸ்தூரிமஞ்சள், குங்குலியம், சடாமாஞ்சி,
கோஷ்டம், மட்டிப்பால், செரியாசிப்பால், சமுத்திரப்பச்சை, ஏலம்சாதிக்கா
ய் பத்திரி தக்கோலம் லவங்கம் வால்மிளகு முதலிய முகவாசதாம்பூலவகை,
சீந்திற்கொடி வெற்றிலைக்கொடி முதலிய கொடிவகை, அநேக புஷ்பவகை
தளிர்வகை முதலிய அளவிலாத்திரவியவகைகளினால் ஆகுதிசெய்து, முடி
விற் பூரணாகுதியுஞ்செய்துமுடித்து, அதன்மேல் அந்தந்தப்பிரதான கும்பங்

களிலே அமுதலிங்கேசர் முதலிய மூர்த்திகளைத் தாபதிபதிவேதனை சோடசோபசார விஸ்தாரபூசனைசெய்து, சந்நிதியினின்று ஆரியமுஞ் செந்தமிழுமாகிய உபயவேதங்களுமெடுத்தோதி, ஆசீர்வாதஞ்சொல்லி யாவருக்கும்விபூதி பிரசாதங்கொடுத்தார்கள். அன்றுமுதலீண்டுகாலைத்திலும் ஆதிசேடன் யாகசாலையுள்ளிருந்து சிவத்துவிஜர்செய்யும் பஞ்சாக்ஷரமந்திர சம்ஹிதாமந்திராதிஜெபமும், யாகசாலை அபிமுகத்திலே சிவதீக்ஷாசமஸ்காரசீலர்களிருந்து செய்யும் தேவாரதிருவாசகாதி தமிழ்வேதபாராயணமும், அவர்களுக்குரிய மகேசுரபூஜையும், சற்பிராமணர்கள்சூழ இருந்துசெய்யும் இருக்கு யஜுர் சாமவேதபாராயணமும், அவர்களுக்குரிய பிராமணபோசனமும், சிவபுராணாதி பாராயணங்களும், அதிவிஸ்தாரமாகப்பொலியும்படி நடத்திவந்தான். அப்படியே காலந்தோறும் மெய்யன்போடு செய்துவரும் இடையிடையே அச்சிவத்துவிஜர்கள் நூதனவிம்பங்களுக்குரிய நயனோன்மீலனாதி, அஷ்டபந்தன சொர்னபந்தனாதி, விம்பசுத்தியாதி சகலகிரியைகளுஞ் செய்துமுடித்துக் கும்பாபிஷேக தினத்திலும் அதிகாலையிலே யாகம் கும்பபூஜையாதியெல்லாஞ்செய்து, யாத்திராதானாதியெல்லாஞ் செய்து கும்பங்களைச் சிவத்துவிஜர்கள் சிரமேல்வைத்துக்கொண்டு முன்னிலும் பதின்மடங்கு அதிகமான உபசாரங்களெல்லாம் பொலியப், பிரதக்ஷிணமாகத் திருக்கோயிலுள்ளே அபிமுகமாவந்து அந்தந்த விம்பங்களினெதிரே அந்தந்தக் கும்பங்களைச் சமீபத்தில் வைத்துக், கும்பங்களினின்றும் விம்பங்களின் பிரமரந்திரவழியாகச் சென்று இருதயகமலத்தில் அசுவாரூசாந்நித்தியமாக வீற்றிருந்தருளவேண்டுமென்று கசிந்துகசிந்து பிரார்த்திக்குந் தாற்பரியமுற்றமைந்த மந்திரபூர்வகநியாசாதிகள்செய்து, அமுதலிங்கேசாதிமூர்த்திகளிலே இருகைகளாலும் சாவதர்னமாகத் தூக்கியெடுத்துக் கும்பாபிஷேகஞ்செய்தார்கள். உடனே புதுவஸ்திரதாரணம் அர்ச்சனை நிவேதனை கற்பூரதீபாதிசெய்து விபூதிசிவபாரிதோதகமுதலியன ஆதிசேடன் இராசசூடாமணிசோழன் முதலியோர்க்குங்கொடுத்து மகிழ்வித்தார்கள். உடனே இத்தகைய மகாமங்கல மகாவைபவ மகாசாந்தி மகாகும்பாபிஷேக தெரிசனைந்தப் பெரும்பேறுபெற்ற ஆதிசேடன் அளவிடற்கரிய சிவானந்தப்பெருங்கடலின் மூழ்கி அதிவிஸ்தாரமாக மகாபிஷேகமுஞ் செய்வித்து அன்றுமுதல் என்றும் ஆறுகாலபூஜை பிரதிதினமும் நடந்துவரும்படி நியமித்தான்.

போசனானந்தரம் அச்சிவத்துவிஜர் யாவரையும் திருக்கோயிலில்தேறுபட்டத்தழைத்திருத்தி வணங்கி அளவிலாஉபசாரங்கூறிப், பீதாம்பரசொர்ணரத்னபாணதிரவியாதிகள் எண்ணமுடியாவண்ணங்கொடுத்து மேலும்வணங்க, மறுக்கமுடியாமையின் அங்கீகரித்து அனேக ஆசீர்வாதஞ் செய்தார்கள். ஆதிசேடன் அன்றிரவு ரிஷபத்துவய மூஷிகமயூராதிவாகனங்களிலே ஸ்ரீபிர

கந்நாயகி அமுதலிங்கேசவிநாயக ஸ்கந்த சண்டேச பஞ்சமூர்த்திகள் எழுந்தருளி மகாரதவீதியிலே பவனிவந்தருளும் மகோற்சவஞ் செய்வித்துப், பின் கலியாணோற்சவம் ஆசாரியோற்சவமுஞ்செய்வித்து மறுநாட்டொடங்கி விசேஷ அபிஷேகபூஜைகள் செய்வித்துவந்து நாற்பத்தைந்தாநாள் மிகவிசேஷமாக நடத்திப் பஞ்சமூர்த்தி மகோற்சவமுஞ்செய்து மண்டலாபிஷேகசமாப்திசெய்தான்.

மேலும் அவ்வாதிசேடன் திநோற்சவம் வாரோற்சவம் பக்ஷோற்சவம் மாசோற்சவம் வருஷோற்சவமுதலிய வுற்சவங்களெல்லாம் விளங்க, நித்திய நைமித்திக காமிய பூஜாவகைகளெல்லாம் நாளுக்குநாள் அபிவிருத்தியாய் நடந்துவரும்படி நியமித்து, இவையெல்லாமும் எக்காலத்திலாவது ஒருசிறிதாவது இடையிலே தளராதபடி. கோடாகோடிநிதிகளும், சொர்ணரத்நாபரணாதிவகைகளும், மந்திரேசர்போல் நிறைத்துவைத்து, மேலும் ராஜசூடாமணிசோழனுக்கு ஒவ்வொருவருஷத்துக்கும் பன்னீராயிரம் வராகன் வரும்படிவாய்த்தக்க தருநியானவிளைநிலங்களும், அம்மந்திரேசர்போற் சர்வமானியசாதனஞ் செய்துகொடுப்பித்துப், பதினாயிரம்பசுநிரைகளுந் தத்தஞ்செய்வித்துச் சிவத்துவிஜர் ஒவ்வொருவருக்கும் சர்வமானியசாதனத்தோடு அளவிலாத விளைநிலங்கள் கொடுப்பித்து, அவர் எக்காலமும் பாரம்பரையாக அக்கோயிற்பூசனை செய்துவரும்படி வேண்டிநியமித்தான். இவைபோல இத்திருக்கோயிற்கு வேண்டியது எதுவெது என்று ஆராய்ந்தறிந்து அவையெல்லாம் நிறைத்தமைத்தான். பின் இராஜசூடாமணிசோழன் தன் நகர்க்கு விடைபெற்றுச் சென்றான். ஆதிசேடன் மந்திரேசதெரிசனத்தினின்று நீங்கமுடியாதவனாய் அத்தலத்திலே வசிக்கின்றவனாயினான். இதனை அன்போடு படிப்பவரும்கேட்பவரும் இகலோகவாழ்க்கையெல்லாம் சுவர்க்காதி பரலோகவாழ்க்கையெல்லாம் பெற்றுவாழ்ந்து சுத்தாத்துவித பரமோக்ஷவாழ்க்கையும் பெறுவார்கள்.

ஆதிசேடன் திருப்பணிச்சருக்க முற்றிற்று.

---

## ஆதிசேடன் சிவார்ச்சனைச்சருக்கம்.

சனற்குமாரனே? ஆதிசேடன் சிவார்ச்சனைசெய்தமை கேட்பாயாகவென்று திருநந்திதேவர் கூறுகின்றார். பிரியலாற்றாதவனாய் இத்தலத்திலிருந்துவருகிற ஆதிசேடன் தினமும் ஆன்மார்த்த மரகதலிங்கபூசனை முடித்துக் காலைதோறும் ஸ்ரீபிரகந்நாயகி ஸ்ரீமந்திரேச தெரிசனாதிகளும் நியதியாகச் செய்துவருவானாயினான். வருஷமூன்று சென்றுவிட்டது. பின்பு ஒருநாள் அமுதநாயகனைத் தரிசித்துநிற்கும்போது அப்பெருமானைச் சிவாகமவிதிப்படி சவிஸ்தாரமாகப் பூசித்தற்கு அன்புமிக்குடையானாய் வேண்டியபூஜோபகரணங்களெல்லாம்நிறையச்செய்து, விநாயகபூஜைமுடித்துப் பிரார்த்தித்

துக்கொண்டு, சூரியாதி பரிவாரபூசனையுமுடித்து, அமுதலிங்க சந்நிதியிலே வடக்குமுகமாயிருந்து பிராணாயாமசகளீகரணஞ்செய்து, பாத்தியாசமனார்க்கி யங்களமைத்துப், பூதசுத்தியாதிகள் செய்து அக்கினியகமுடித்தும் புறத்தே யும் பூஜித்தற்குவேண்டிய அவைகளுஞ்செய்து, விதிப்படி ஆவாகனம்பண்ணி சகள சிவமூர்த்தி நிவேசனஞ்செய்து திருமேனியை ஆவாகனஞ்செய்து, வெண்ணெய் மாப்பொடி மஞ்சட்பொடி நெல்லிப்பொடி பஞ்சகவ்வியம் பஞ்சாமிர்தம் பலவகைப்பழரசமிர் தம் பால் தயிர் நெய் இளநீர் தேன் சர்க்கரை கருப்பஞ்சாறு பசுவின்கோ சலத்தை மாதுளை முதலிய பலவகைப்பழச்சாறு இவைகள் சந்தனக்குழம்பு கந்த ஸ்நாதாராதி விசேஷோதக ஸ்நபனங்களாதி அபிஷேகங் கள் இந்தவரிசைப்படியே செய்து, உடனே வீபூதிச்சந்தனம் அக்ஷதை புஷ்பங்கள் வில்வம் அணிந்து வஸ்திராபரண புஷ்பமாலாதி நிவேதனங்களுஞ்செய்து தூபதீபநிவேதனவர்க்க மகாதீபாதி ஷோடசோபசாரங்களுஞ்செய்து சகஸ்ர நாம வில்வார்ச்சனை செபநிவேதனஞ்செய்து பலமுறை வலம்வந்து தெண்டனிட்டு அஞ்சலியஸ்தனாய் நின்று திருக்கோயிலைக் கண்களாரக் கண்டு திரு ம்பாவண்ணம் தரிசித்து நின்று வாய்கொண்டளவும் அருமையான துதிகள்பாடி டிப்பன்னிருகவிகளாலே தோத்திரஞ்செய்து மேலும் பலமுறை வணங்கித் தமக் கிருவருள்வெள்ளத் தழிழ்ந்து பரவசராய் நின்றனர்.

உடனே அமுதலிங்கேசுரர் வெளிவந்தருளி அதிசோடனைக் கண்டுத்த இத் துவர்தசமஞ்சரிகேட்டு மிகமகிழ்ந்தோம். இதனை அன்போடுசொல்பவரும் கேட்டவரும் இம்மையிலே இஷ்டகாமியமும் பெற்று மறுமையில் சிவபதத்தின் பமுத்தியும்பெறக்கடவர்கள். அதிருக்க, நீ வேண்டியவரம் கேட்பாயாக வென்று ஆஞ்ஞாபித்தருளச், சோடன் அன்புபெருக வணங்கி எம்பெருமானே கிட்டுதற்கரிய இத்திவ்விய தரிசனம் கிடைத்த பின் அடியேனுக்கு வேண்டு வதும் பெறும்பேறும் உண்டோ? ஆயினும் அடியேனுக்கு ஒரு வரம் வே ண்டுவதுண்டு. அதாவது இவ்விடத்தில் எக் காலமும் அடியேன் வசித்திருக்கும் பெருவாழ்வு தந்தருள வேண்டுமென்ன, எம்பெருமான் சோடனே நீ வேண்டியவாறு இத்தலத்தில் இருப்பாய் போன்புபெருக. நாராயணனோடு மற்றுமுள்ள தேவர்களும் சிவஞானி. உனக்கு இவ்விடத்தில் வசித்து முத்திபெறுவாயாக. அவனை யடைந்து அவன் பணிசெய்து எம்மையும் வழிபடுவான். ஆத லால் அவனையடுத்திருந்து வாழுவாயாக. முடிவில் நித்தியானந்த முத்தியு ந்தருவோம். நீ இங்கே வந்து நம்மை முதலில் தரிசித்த தினமாகிய பூர்த்தினத்திலே தீர்த்தமாடியவர்களும் எம்மை வழிபட்டவர்களும் வழிபாடுசெய்கின்றவர்கள் இகபோகமுறுதும் அழியாத முத்தியும் பெறக்கடவர்கள். இனி இத்தலத்தில் என்றும் நடத்துவருமபடி யாதுபூசை

ணி சோழனைச் சைத்திரோற்சவ நடத்திவரச்செய்வாயாக. நீ மகாகவியாதலால் யோகவிளக்க சூத்திரரூபமாக ஒருநூல்செய்து உன்பெயர் விளங்க அதற்குப் பாதஞ்சலமென்று பெயரிட்டு வியாகரண மகாபாஷியமும் ஒன்று செய்து இருநூல்களும் சர்வலோகபூஷணங்களாய்ச் சாசுவதலோகப்பிரசித்தியாய் விளங்கவைப்பாயாகவென்று அனுக்கிரகித்தருளி மறைந்தருளினர். சேடன் மிக்க ஆராமையோடு மேலும் பலமுறைவணங்கிச் சிவாஞ்ஞையின்படி ராஜசூடாமணியென்னுஞ் சோழராஜாவையழைத்து விதிப்படி சைத்திரோற்சவஞ் செய்வித்துச் சிலநாள் அங்கிருந்து பிரிவாற்றாதுவருந்தி ஆஞ்ஞையை மறுத்தற்கஞ்சி ஒருவாறாக மனமுழுதையும் மந்திரேசர்பாதத்தில் வைத்துவிட்டுச்சென்று பாற்கடலிலே தன்குருவாகிய விஷ்ணுபாதங்களிற் பன்முறைவணங்கி நிகழ்ந்தவெல்லாஞ்சொல்லி அவன்பணிசெய்துகொண்டிருந்தான். இதனை அன்போடு படிப்பவரும் கேட்பவரும் இம்மையிலே சகலசம்பத்தும் நிறையவாழ்ந்து சிவசாயுச்சியப்பெருவாழ்வும் பெறுவார்கள்.

ஆதிசேடன் சிவார்ச்சனைச்சருக்க முற்றிற்று.

---

## வருணன் சாபமோசனச்சருக்கம்.

சனற்குமாரனே? வருணன் சாபமோசனசரித்திரங் கேட்பாயாகவென்று நந்திதேவர் கூறுகின்றார். முன்னொருகாலத்திலே வருணன் பாதலத்திருந்து ஒருயாகஞ்செய்யக் கருதி அதற்குரிய பிராமணர்களை அழைத்துவரும்படி சிலதூதர்களைப்பூமிக்கு அனுப்ப, அவர்சென்று யாகத்திற்குரிய சற்பிராமணர்களை அழைப்ப, அவர்கள் நாங்கள் பாதலம்வருதல் எங்கள் சிஷ்டாசாரவிரோதமாதலால் வரமாட்டோமென்று கூற, உடனே தூதர்கள் வந்து உள்ளபடிசொல்லக்கேட்டு வருணன், எப்படியும் இங்கே நாம் குறித்தயாகஞ்செய்யவேண்டியது அவசியம், உபாயத்தால் அவர்களைத் தருவிக்கவேண்டுமென்று பின்வருங்கேடு தெரியாமல் ஊழ்வலியால் ஒருவஞ்சகயோசனை செய்து, தன்னிடத்துள்ள வித்துவானொருவனை யழைத்துக்கொண்டு பூமிக்குவந்து ஒரு ராஜவாசலின் சமீபத்தில் அவனையிருத்தி, இவ்வரசனிடத்துப் பொருள்விரும்பி அநேகம்பிராமணர் வருவார்கள் அவர்களை மிகுபொருள்தருவேன் என்னைச் சாஸ்திரவாதத்தில் வெல்லுவீர்களாயின், என்றுசொல்லியழைத்துவெற்றிகொண்டுகடலிற்றள்ளிவிடுவாயென்று ஆஞ்ஞாபித்துச் சென்றான். அவ்வருணன் சொற்படி அவ்வித்துவான் ககோளர்முதலிய அநேகம் பிராமணோத்தமர்களைச் சாஸ்திரவாதத்தில் வென்று அப்படியே செய்தான். உடனே அவர்களை வருணன் தூதர்களாற் பிலத்துவாரவழியாகத் தருவித்து எண்ணிய யாகத்தை முடித்துச் சாஸ்திரவாதத்தில் எங்களைவெல்லும்வரை நீங்கள் இங்கேதானிருக்கவேண்டுமெனத் தடுத்து இருத்திவிட்டான்.

பின் ககோளமுனிவர் புத்திரராகிய அஷ்டாவக்கிரமுனிவர் தெரிந்து, மிருபதைப்பினராய்ப் பாதலஞ்சென்று, ஒரு சொல்லளவிலேயே வருணன் முதல் யாவரையும்வென்று, பிதாமுதலிய பிராமணர்கள் யாவரையும் பூமிக்கு அனுப்பிவிட்டு, வருணனை நோக்கி அடாபாதகா? இந்தகாத காரியஞ்செய்த நீ அறிவுமுற்றுமிழந்து பைத்தியகாரனுமன்றிக் குஷ்டரோகியுமாகக்கட வாயென்று சபித்தனர். உடனே வருணன் அறிவுகெட்டு முழுரோகியாய்வ ருந்துவதை, அவன்பத்தினி மந்திரிமுதலியோர்கண்டு சகிக்கலாற்றாது துக் கிப்பாராயினர். அப்போது அவன் பூருவபுண்ணிய மேலீட்டினால் விருபாக்ஷ முனிவர் அங்குவந்தனர். வாவெதிர்கண்டும் வணக்கமுதலிய யாதுமின்றிவரு ணனிருந்தான். பத்தினிமுதலானோர் அம்முனிவரை வணங்கிநின்று, முன் னிகழ்ச்சிமுற்றுந்தெரிவித்து, வந்ததுக்கமுழுதுந் தீர்த்தருள்கவென்று அவர் பாதங்களைப்பற்றிக்கொண்டு நமஸ்கரித்தபடியே நிலத்திற்கிடந்தார்கள். முனிவர் அதுகண்டு மிகஇரக்கங்கொண்டு அவர்களைநோக்கி உங்கள்பதியாகிய வருணன் செய்தபாதகமோ மிகப்பெரிது, அன்றியுஞ்சபித்த அஷ்டாவக்கிர முனிவர்வாக்கோ அதனினும்மிகப்பெரிது, ஆதலால் அவர்சாபத்தைத் தக்க பிராயச்சித்தமின்றி நமதுவலியால்நீக்கமுடியாது; பிராயச்சித்தமும்இவனே செய்யவேண்டும்; இவனோஅறிவுமுற்றுங் கெட்டிருக்கிறான்; அதுவும்பூமியி லே உத்தமோத்தம சிவக்ஷேத்திரத்திலே செய்தாற்றான் பிரயோசனமாகு மென்றுகூறித், தமது திருக்கரத்தை அவ்வருணன்சிரசில்வைத்தனர். உட னே அறிவுமுற்றும்பெற்று அம்முனிசிரேஷ்டர் பாதங்களில் விழுந்துபலமு றைவணங்கி, உபகரணமுழுதுங்கொண்டு பூஜித்துப்பாதோதகமுண்டுரோமபுள கம்புங்கொண்டு துதித்துநின்றான். முனிவர் திருவுளங்கனிந்து அவனுக்கு விபூதி யாதி சிவசின்னங்களை வகித்துக்கொள்ளுதற்குரிய ஆற்றலைக்கொடுத்து, விதி ப்படி விபூதிருத்திராக்ஷதாரணஞ்செய்வித்து, ஸ்ரீசிவமூலபஞ்சாக்ஷரோபதே சமுஞ் செய்வித்து நீரைத்தினமயமான சிவலிங்கமொன்று பிரதிஷ்டையாதி செய்துகொடுத்து, இதனைஉன் ஆயுள்வரையும்இடையறாதுவிதிப்படிபூசித்து வருவாயாகவென்று ஆக்ஞாபித்தனர். உடனேவருணன் அப்பெரும்பேறெல் லாந்தனக்குஎளிது கிடைத்ததைநோக்கி மேலும்மேலும் அன்புபெருக அம் முனிவர்சந்நிதியிலேயே, மந்திரதந்திரகிரியாபாவனைகள் முற்றும்சிவாகமவி திப்படிஅவர்காட்ட, அவ்வான்மார்த்தபூசனைசெய்து, குருபூஜையும் நேரிலே செய்து, ரத்தினதிபாதகாணிக்கைகொடுத்துவணங்கிநின்றான். முனிவர் அவ னைநோக்கிவருணனே நீ சாபநீக்கத்துக்குரிய பிராயச்சித்தம்பூமியிலே உத்த மசிவஸ்தலத்திலே செய்யவேண்டியது அவசியம், அத்தலம்சூதவனசிவக்ஷே த்திரமே, அது காவிரியின்தெற்கே வேதாரணியத்துக்குமேற்கிரண்டியோச னையிலுள்ளது. அத்தலத்திலே அநவரதகாங்கித்தியாயாய்வீற்றிருந்தருளுகின் ற அமுதலிங்கேசரை அன்போடுபூசித்து, அங்கே உன்பேரால்ஒருசிவலிங்கப்

பிரதிஷ்டைசெய்து, சிவயாகமுஞ்செய்வாயாக. இவ்வகையாவுஞ் செய்வாயாகில் அஷ்டாவக்கிரமுனிசாபம்நீங்கிவிடும் என்றுகூறி அவ்விரூபாக்ஷமுனிவர் அங்குநின்றுஞ் சென்றனர். உடனே வருணன்பாதலத்திலுள்ள ஒருபிலத்துவாரத்தின்வழியாகப் பத்தினிசகிதனும் அளவிலாத திரவியபரிவார புரோகிதவர்க்கத்தோடு மேலெழுந்துவந்தான். அவனெழுந்துதோன்றிய இடம் அமிர்தலிங்கசிவாலயத்தின் தெற்கிலுள்ள கௌதமதீர்த்தமே. அத்தடாகத்திலே மனைவிபரிவாரத்தியோடெழுந்த வருணன் நியதிகள்முடித்துச்சென்று கோபுரம்பணிந்து கோயிலுட்புகுந்து ஸ்ரீபெரியநாயகி ஸ்ரீஅமுதலிங்கேசர் திருவுருவங்காணப்பெற்று அன்புமீதூர அடிக்கடி பணிந்தெழுந்து பூஜோபகரணமுழுதுங்கொண்டு மாசிமாசம் பௌர்ணிமையாகிய அத்தினத்திலேசவிஸ்தாரமாகப் பூசித்துத் துதித்துத் தினந்தோறும் இந்தியதியோடு அங்குவசித்திருந்து கௌதமதீர்த்தக் கரையிலே சாலைகோலிவிதிப்படி வேள்வியுஞ்செய்து பலதிருப்பணியாதிகள் செய்து எதிராமாண்டு மாசிமாசம் பௌர்ணிமையிலே அமிர்தலிங்கேசபூசை முடித்து அங்குள்ள பெரியோரையும் பணிந்து சாபமோசனமாகும்படி அருளுக என்றுவேண்ட, அப்பெரியோர்வருணனே நீஎப்போது இங்குவந்து அமுதலிங்கங்காணப்பெற்றாயோ, அப்போதே உன்னைப் பிடித்த சாபமுதலிய சமஸ்ததீமையும் நீங்கி விட்டனவென்றார்கள். அந்தசமயத்திலே அசரீரிவாக்காலும் எம்பெருமான் அப்படியே அநுக்கிரகித்து வருணனே நீ நிர்மலனுமாய்விட்டாய் இனி நீ எண்ணியவெல்லாம் பெற்றுவாழ்ந்திருந்து ஏகாந்தியத்திலே நமதுபாமுத்தியும்பெறுக என்றுதிருவாய்மலர்ந்தருளக்கேட்டு, ஆனந்தமேலீட்டினால் ஆடிப்பாடி அளவிலாத்துதி புகன்று, அவ்வமுதலிங்கேசருக்கு மேற்கிலுள்ள மார்க்கண்டசாபிதலிங்கத்துக்குத்தெற்கில் அணிமையில் ஒருசிவலிங்கம் தன்பேராற் பிரதிஷ்டை செய்து பூசித்து அமுதலிங்கேசனைமீண்டும்பணிந்து நீங்காவிடைபெற்றுப் பாதலம் போய் இடையறாச் சிவசிந்தனையோடிருந்தான்.

அவ்வருணனைவிட்டுநீங்கிய சாபவினையானது, மிகப்பயங்கரமான ஒரு வடிவமாய் அஷ்டாவக்கிரமுனிவரை வந்து நெருங்க, உடனே அவர் உண்மைதெரிந்து, எக்கொடும்பாதகமும் தனது எல்லைபுகுந்தளவே நீக்குவது உத்தமோத்தம ருத்ரவனமல்லவாவென்றெண்ணி வந்து ஸ்நானஞ்செய்து திருவெண்ணீறணிந்து பஞ்சாக்ஷரம் முறையே செபித்து அமுதேசனையடுத்து வணங்கிப்பூசித்து, மேல்பக்கம் ஓர் சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்து பூசித்து முன் நெருங்கிவந்த பயங்கரரூபம் முன்னரேநீங்கப்பெற்று எம்பெருமானருட்பெருமை நினைந்து அங்கேயே அமர்ந்திருந்தார். இதனை யன்போடு படிப்பவர் கேட்பவர் இகபோகமுற்றும் பெற்று வாழ்ந்திருந்து முடிவிற்பாமுத்தியும் பெறுவார்கள்.

வருணன் சாபமோசனச்சருக்க முற்றிற்று.

## மார்க்கண்டேயச் சருக்கம்.

சனற்குமாரனே? மார்க்கண்ட சரித்திரம் கேட்பாயாகவென்று திருநந்திதேவர் கூறுகின்றார். பூமியிலே திருவெண்காடென்னும் ஒருசிவக்ஷேத்திரம் மிகமேலதாய் விளங்குகின்றது. அது நமது குருபரம்பரையில் ஒருபாலரூபகுருமணி வந்தவதரித்தற்குரிய அரும்பெருந்தவம் புரிந்துள்ளது என்று கூறும் அவ்வளவிலே சனற்குமாரமுனிவர் எழுந்துவணங்கி எம்பெருமானே நமது குருபரம்பரையிலே பாலகுருமணி யென்றதுயார்? அக்குருமணி அத்தலத்தில் அவதரித்தகாரணம் யாது? இச்சரித்திரத்தை முன்பு திருவாய்மலர்ந்தருளி அதன்மேல் எடுத்துக்கொண்ட சரித்திரம் திருவாய்மலர்ந்தருளும்படி பிரார்த்திக்கின்றேனென்றுவேண்ட, அதுகேட்ட திருநந்திதேவர் வாராய் சனற்குமாரனே? நமதுபரமாசாரிய மூர்த்தியாகியகல்லாலவிருக்ஷத்தின்கீழ் வீற்றிருந்தருளுகின்ற சிவபெருமான், சிவாகமங்கள் இருபத்தெட்டினுள்ளே, சிறந்த ரௌரவாகமத்திலே, அதன்சாரமான பாசவிமோசனபடலத்திலே சாராத்சாரமான பன்னிரண்டு சுலோகம் உள்ளன, அவை சிவஞானபோதமென்னுந் திவ்யநாமத்தால் விளங்குமென்றருளித், தீக்ஷாசமஸ்காரபரிபூர்த்தியோடு அவற்றின் அரும்பொருளெல்லாம் விளக்கி உபதேசித்தருளினார்; அப்படியே நாம்உனக்கு உபதேசித்தோம்; நீ சத்தியஞான தரிசனிக்குபதேசித்தாய்; அவன் பரஞ்சோதிக்குபதேசித்தான். இதனாலே நாம் திருக்கயிலாயபரம சிவகுருபரம்பரையினமாயினோம். இத்திருக்கயிலாய பரம்பரை பூவுலகிலும் பரம்பியோங்குக என்று எம்பிரான் திருவுளங்கொண்டருளினான் போலும்; இந்நிகழ்ச்சியிவ்வாறிருக்க.

பூமியிலே, நடுநாட்டிலே, திருப்பெண்ணாகடமென்னும் உத்தமசிவக்ஷேத்திரத்திலே, பெருஞ்சிறப்புவாய்ந்த பரம்பரைச்சைவவேளாளர்குலத்திலே சற்குணங்களெல்லாம் அமையப்பெற்றசிவநியமானுஷ்டானப் பெருஞ்செல்வராகியஅச்சுதர்களப்பாளரென்பவர், தமக்கு நெடுங்காலமாகப் புத்திரப்பேறின்மையால் அதனைவிரும்பித்தமதுகுலகுருவாகிய திருத்துறையூர் அருணந்திசிவாசாரியரை அடுத்திறைஞ்சி அவர்சொற்படியே அதற்குரியதவந்தானமுதலியபற்பலசெய்தும்சாத்தியப்படாமல், மீட்டும்ஆசாரியரை அடுத்து விண்ணப்பஞ்செய்ய, அவர்யோசித்துத் தமிழ்வேதமாகிய தேவாரத்திருமுறையை விதிப்படி போன்பினராய்ப்பூசித்து, இத்திருமுறையிலேகயிறுசாத்துக என்றுஆஞ்ஞாபிக்க, உடனே அச்சுதர்களப்பாளர் அன்புமீதூரப்பிரார்த்தனையோடு அத்திருமுறையிலேகயிறுசாத்தினார். உடனே அருணந்திசிவாசாரியர், அக்கயிறுசாத்திய இடத்தைவிரிந்து முன்னொன்றும் பின்னொன்றுமாக இரண்டு ஏடுகளையெடுத்து முன்னேட்டின் ஈற்றிற்றொடங்கிப் பின்னேட்டின்முதலில் முடிந்திருக்கும் திருப்பாசுரம் " பேயடையாபிரிவெய்தும்பிள்ளையினோ

கொள்ளாவினை, வாயினவேவரம்பெறுவரையுற வேண்டாவொன்றும், வேயன தோளுமைபங்கன் வெண்காட்டுமுக்குளநீர், தோய்வினையாரவர் தம்மைத் தோயாவாந்தீவினையே.'' என்றிருக்கக் கண்டு, மிகுந்தஆனந்தத்தோடு அச்சுதர்களப்பாளரை நோக்கிக் களப்பாளனே உனக்குச்சற்புத்திரபாக்கியம் நிச்சயமாகஉண்டு; நீ இப்பொழுதே திருவெண்காட்டை அடைவாயாகவென்று ஆஞ்ஞாபித்தார். அதுசிரமேற்கொண்டு களப்பாளர்தம்பத்தினியோடும் அளவிலாத்திரவியத்தோடும் அங்குச்சென்று விதிப்படி தினந்தோறும் சோமசூரியாக்கினி நாமமுக்குளங்களிலும் ஸ்நானஞ்செய்து சுவேதவனேசருக்கு விசேஷபூசை செய்வித்துச்செபதபாதிசிவகைங்கரியங்களும் மிகுதியாகச்செய்து அத்தலத்தைநீங்காதுவசித்துவந்தார்.

சுவேதவனேசர் ஒருநாள் அவர்கனவிற்றோன்றி, அன்பனே நீசெய்துவருகின்ற விசேஷ பூஜாதி சிவநியமகைங்கரியங்களுக்கு மிகமகிழ்ந்தோம், இவ்வருந்தவத்துக்கு நீ விரும்பியதை உடனேதருவதே முறையாகும், ஆயினும் கர்மவசத்தால் இப்பிறப்பில் உனக்குப் புத்திரனில்லையாதலால், நீ செய்தஅருந்தவம் பழுதாகாவண்ணம்இனிவரும்பிறப்பில்அதற்கென்று ஒருதவமுஞ்செய்யாமலே சற்புத்திரபாக்கியந்தருவோமென்று ஆஞ்ஞாபித்தருள, உடனே களப்பாளர் எம்பெருமானே? பல்லாயிரங்கோடி சீவருள்ளே ஏழையாகிய எனக்குப் புத்திரனில்லாமையால் உலகத்துக்கு ஒருணுவும் பழுதில்லை எண்ணியபடி அருளாமையால் ஒருசிறிதுங்கவலையுமில்லை; ஆனால்இச்சமயம் ஒருவிண்ணப்பங்கேட்டருளவேண்டிப் பிரார்த்திக்கின்றேன், அரிப்பிர்மேந்திராதி பிரீவிகாந்தமானசமஸ்தசீவர்களும் தங்கள்பிள்ளைகளே. அங்ஙனமாகவும் வள்ளிநாயகி தெய்வநாயகிக்குப்பதியாகிய குமாரநாயகப்பிள்ளையிடத்து மிக்கவாஞ்சைகொண்டு இடைவிட்டகலாமல் மத்தியில்வைத்துச் சீராட்டுகின்றீர்கள். அத்தகையகுமாரநாயகனேசீகாழியில்வந்தவதரித்தருளியஸ்ரீஞானசம்பந்தப்பெருவாழ்வின்றிருவாக்கும், ஒன்றுக்கும்பற்றாத புழுத்தநாயினுங்கடைப்பட்டஎளியேன்மூலமாகப்பொய்யாய் முடிவதோவென்னும் பெருங்கவலையேஎன்னுள்ளமுழுதுங்குடிகொண்டுவருத்துகின்றதென்று மிகமெலிந்துவணங்கினர். உடனே உலகர்க்கு அவரன்புகாட்ட இவ்விதம் நடித்தருளிய சுவேதவனேசர், அன்பனே? நீவிரும்பியபடி உனக்குச் சற்புத்திரபாக்கியம் இச்சமயமே கிடைக்கின்றது. அப்பிள்ளையின் மகிமைமுழுதும் நமதுசொல்லைவிளுமகப்படுவதன்றென்று திருவாய்மலர்ந்தருளி மறைந்தருளினர்.

உடனே விழித்தெழுந்த அச்சுதர்களப்பாளர் மிகுமகிழ்வினராய்த், தமக்குரிய நித்தியநியமநெறியின்றொழுகுவாராயினர். அந்நாளில் ஓர்நாள் உலகெலாமுய்யவும், சுத்தாத்வைதசித்தாந்தசைவமார்க்கம் தலையெடுத்தோங்கவும், அதற்குரிய இத்திருக்கைலாயபரம்பரை இனிப்பூமியிலே பரந்துவிளங்கவும், வேதசிவாகமசாரசிவஞானபோதாதி சைவசித்தாந்த சாத்திரங்கள்

எம்மொழியினுஞ்சிறந்த செம்மொழியாகிய தமிழ்மொழியில்வந்து தெளிவாய் வழங்கவும், அச்சுதர்களப்பாளரும் பத்தினியாரும்புரிந்த அருந்தவப்பயன் பெறவும், திருவருளே ஒரு ஒளிப்பிழம்பாய்த் தெய்வச்சிசுவடிவா யவதரித்திடக்கண்டு, இருவரும் அளவிலாப்பேரின்பசாகரத்தழுந்தி, எம்பிரான் வந்து சொப்பனத்தருளிய திருவருளைநினைந்துநினைந்துருகி, அவ்வருளே இவ்வுருவாய் வந்ததென்றுணர்ந்து, எடுத்தணைத்து உச்சிமோந்து உவகையிற்றிளைத்தார். அத்திருவெண்காட்டிலுள்ளார் யாவரும் தாங்களே அப்புத்திரப்பேறுபெற்றவர்களாகத் திருவவதாரத்திருவிழாக்கொண்டாடினார்கள். பல்லூழிகாலம் இடையறாது அருந்தவம்புரியினும் கிட்டாவொருபொருளே தமது கைப்பொருளாயதென்றுளமகிழ்ந்தவகையிற்றிளைத்த பிதாமாதாக்களிருவரும் சாதகர்மாதிகள்செய்து புத்திரனையபணிந்து தம்முயிரினுக்குயிராய்ப் பேணி வளர்த்துவருவாராயினர். அவர்கள் அச்சிசுரத்தினத்தைச் சீவாத்தினமாகக்கொண்டு நாளொருவண்ணம் பொழுதொருமேனியாக அடிக்கடி வேறுவேறு அலங்காரஞ்செய்து தம்முயிரினும்பெரிதாய்ப்பேணிவரும் அருமைபெருமைகள் எவராலும் இத்தன்மையவென்று கூறுவதரிதே. இப்பெருஞ்சிறப்புவாய்ந்த புத்திரரத்தினத்தைக்காணப்பெற்ற பெரியோர் யாரும் ஸ்ரீஞானசம்பந்தப்பெருவாழ்வே நிக்கிரகஞ்சிறிதுமின்றி அநுக்கிரகமாத்திரமேசெய்தற்கு இப்பாலருபங்கொண்டுவந்ததன்றி வேறில்லையென்றுணர்ந்து பலவாறுதுதித்தார்கள். அச்சுதர்களப்பாளர் இப்பாலருபகுருமணிக்குச் சுவேதவனேசர் திருவருளாற் கிடைத்தமையாற் சுவேதவனப்பெருமாள் என்று நாமகரணஞ்செய்து மேலும் சிலநாள் அங்கிருந்து நீங்காவிடைபெற்று மனைவியொடும் சேய்மணியோடும் பெண்ணாகடம்வந்தனர்.

அங்குவந்தபின் அச்சேய்மணியின் றாய்மாமனார் தமக்கு வேறுபிள்ளையில்லாமையால், தங்கைபிள்ளையாகிய சுவேதவனப்பெருமாளையே தமக்கும் பிள்ளையாக்கொண்டு பாராட்டுங்கருத்தினராய் வந்து, அத்தெய்வச்சிசுமணியோடு தங்கையையும் மைத்துனனையும் அழைத்துக்கொண்டு தமதூராகிய திருவெண்ணெய்நல்லூர்க்குச் செல்வாராயினர். அங்குள்ளார் அவ்வாறு தெரிந்து திருவருளின்பெருமைநினைந்து மாடமெல்லாம் வீதியெல்லாம் அலங்காரவகையெலாஞ்செய்து எதிர்கொண்டுபணிந்துபுகழ்ந்துகொண்டாட, அப்பாலகுருமணியைக்கொண்டுசென்ற றாய்மாமனார் சர்வாலங்காரமுநிறைந்த தமது மாளிகையுள்ளே சுமங்கலைகள் மணிநீராஞ்சனம்வளைப்பச் சென்று திவ்யரத்தினமஞ்சத்தின்மீது வீற்றிருந்தருளவைத்தார். அச்சிசுமணி அங்குச்செய்த பாலலீலாதிவைபவமும் மாமனார் முதலியோர் அன்புமேம்படப் பேணி வளர்த்த அருமைபெருமையும் இப்படியென்றெம்மனோரால் இசைப்பரிது. இப்படி வளர்த்துவருநாளில் வார்த்தைபேசக்கூடிய பருவங்கடந்தும் மழலை

மொழிகூடப்பேசாதிருத்தல்கண்டு, களப்பாளர்முதலியோர் மிக அருமையிற்கிடைத்த இவ்வொருபுத்திரத்தினமும் ஊமையாய்விடுமோவென்று எண்ணியிருந்தார்கள். இரண்டுவயது நிறைந்தது. ஒருநாள் அச்செய்மணிமற்றைச்சிறுவர்களோடு வீதியிற்சென்று மேனியொளிதிசையெலாம் விளங்கவிளையாடிக்கொண்டிருந்தது. என்றருமாறனே? அச்சமயம்பொதியமலையில் அகஸ்தியரைக்கண்டு இஷ்டவார்த்தைகள்பேசிக்கொண்டிருந்து வருதற்காக உள்ளிஷ்யப்பிரசிஷ்யனாகிய பரஞ்சோதிமுனிவன், வெண்மணிவிமானத்தேறித்திருக்கைலையினின்றும் ஆகாசமார்க்கமாகச்செல்வானாயினன். அப்படிச்செல்லுங்கால் அத்திருவெண்ணெய்நல்லூர்வீதியிலே திசையெலாம்விளங்கவிளையாடுகின்ற செய்மணியினொளிப்பிழம்புதன்மேற்பட்டவளவிலே, அவ்விமானம் அப்பாற்செல்லாது நின்றுவிட்டது. உடனே உள்ளிருந்த பரஞ்சோதிமுனிவன் நாம் நினைத்தபடி எவ்விடத்தும் தடையின்றிச்செல்லுகின்ற நத்தெய்வவிமானம், இவ்விடத்தே தடைப்படக்காரணம் என்னென்றுகருதி, எத்திசையெல்லாம்பார்த்துங்காரணந்தெரியாமற், பின்பு நேரேகீழ்நோக்கிப் பூமியைப் பார்க்குமளவில் அவ்விமானத்தினிழல் மேனியிற்பொருந்த அத்தெய்வச்சிசு வீற்றிருப்பதுகண்டு, இச்சிசு நமதுவிமானத்தைத்தடுப்பினித்திருக்கின்ற அன்புடைத்தான் மேனியின் ஒளித்திரட்சியாக விமானத்தைச்சூழ்கின்றதென்று வியந்துகொண்டாடி, விமானத்தோடுகீழேவந்தார். மற்றைச்சிறுவர்யாவரும் விமானத்தொளி கண்ணொளியைமழுக்க ஒன்றுமுணராது வெருண்டோடினர்கள். அவ்வொளிக்குள்ளொளிப்பிழம்பாய் இன்பப்பொலிவுகாட்டி வீற்றிருக்கின்ற அச்சிசுமணி சாயல்முதலிய எல்லாவற்றாலும் தன்குருவாகிய சத்தியஞான தரிசனிபோல் இருப்பக்கண்டு மிகமகிழ்ச்சிகொண்டு எடுத்தணைத்துச்சிமோந்துள்ளங்குளிர்ந்து ஸ்நானம் விபூதிதாரணம்முதலியனசெய்வித்துத், தன் ஆசான்போலிருப்பதால் அவன்பெயரோயாகமெய்கண்டானென்று நாமகரணஞ்செய்து, சத்தியோநிர்வாணதீக்ஷாவிதிமுறை சிவசமஸ்கார சிவத்துவாபிஷேகமும் பெரும்பேறெல்லாமளித்துச், சிவஞானபோதமுற்றும் சவிஸ்தாரமாக உபதேசித்து, அன்பனே? இதனை நீதமிழ்மொழிபெயர்த்து வார்த்திகமாகவுரையுஞ் செய்வாயாகவென்று ஆஞ்ஞாபித்துத், தனித்துவிட்டுச் செல்லுதற்காற்றாமையால், அணிமையிலே கோயில்கொண்டு சிறுருபியாய்ச் சுயம்புவாய் வீற்றிருந்தருளுகின்ற பொல்லாப்பிள்ளையார் சந்நிதியடைந்து, பணிந்துதுதித்து எம்பெருமானே? இச்சிறுவன் தங்கள் அடைக்கலமாகின்றான், இவனுக்குக்காமிகாதிவாதுளாந்தமான இருபத்தெட்டாகமங்களு முபதேசித்தருளுகவென்று பிரார்த்தித்து, இனிதொருபிறப்பிற்சொல்லாப்பிள்ளையாரைப் பொல்லாப்பிள்ளையார் பக்கத்திருத்திவிட்டு, அப்பரஞ்சோதிமுனிவன் தன்விமானத்தேறிச்சென்றனன். பின்பு பிள்ளையார்மெய்கண்டநாமவிமலமாமணியை அணிமையிலழைத்து ஆத

ரித்து அருள்வெள்ளத்தமிழ்த்தி ஆகமப்பொருண்முழுதும் வான்முறைவிரித்து உவமான உதாரண விஞவிடையாதிநிகழ உபதேசித்தருளுவாராயினர்.

அப்பொழுது அக்கோயிலின்புறத்துள்ள தடாகத்தில் நீர்கொள்ளவந்தாளொருத்தி, கோயிலினுள்ளே சத்தங்கேட்பதென்னென்று புறத்தே தூரத்தே எதிர்வந்துநின்று, பிள்ளைமாத்திரம் இருப்பதும் லோகாதீதமான அரும்பெருங்கேள்விகள்கேட்பதுந்தெரிந்து, இப்பிள்ளையை ஊமையென்று விசனித்த பிதாமாதாமுதலியோர் இவ்வற்புதந்தெரிந்திலர்போலுமென்று விரைந்துசென்று, உங்கள் பிள்ளை பிள்ளையார்கோயிலுள்ளே அளவிலா அற்புதவார்த்தை பேசுகின்றதேஎன்றாள். என்றசொல்முடியுமுன் களப்பாளர்முதலியோர் மிகவிரைந்து கோயில்வாயிலுக்கு நேரே புறத்தே வரும்போதே தங்கள்பிள்ளைவாய்நின்றுவரும் அத்தியற்புத அதிமதுரஞானமொழிகள்கேட்கப்பெற்று, அளவிலாமகிழ்வொடுகோயிலுட்சென்றார். உடனே குருசிஷ்யிருவர்பேச்சும் நீங்கிவிட்டது. ஆகமமுழுதுமுபதேசித்துமுடிந்ததோ, அதுகேட்டற்குரிய சிவசமஸ்காராதிகாரம்பெறுதார் பக்கத்துற்றுற்சொல்லப்படாதென்னும் விதிபற்றியோ, ஆகமாதிசமஸ்தசிவசாஸ்திரமும் இவனுளத்தித்தெளிவாய்விளங்குகஎன்று ஒருசொல்லால் ஆஞ்ஞாபித்துமுடிந்ததோ. வேறுயாதோ. இன்னதென்றுணரத்தக்கதன்று. தாம் உட்புகுந்தவளவிலே பேச்சொழிந்தமைகண்டகளப்பாளர், இது திருவருளேயென்றுதுணிந்து பொல்லாப்பிள்ளையார்திருவடிகளிலே பலமுறைவணங்கித்துதித்துநின்று எம்பெருமானே? திருச்சந்நிதியிலன்றி முதலில்வாய்திறப்பதில்லையென்று எண்ணி அவதரித்த நாட்டொடங்கி மௌனமாயிருந்த இக்குருமணியினருமைபெருமை சிறிதுமுணராத எமதறியாமையை நீக்கியருளியதிருவருளினியல்லை என்னென்றுசொல்வதென்று பலமுறைதுதித்துத் தமது புத்திரரத்தினத்தையெடுத்துமார்போடணைத்துச்சிமோந்துள்ளங்குளிர்ந்து தந்தோளில்வைத்துக்கொண்டு, பத்தினியார் சுற்றத்தார் அப்பதியிலுள்ளார்யாவரும் பேரானந்தப்பெருங்கடல்போலச்சூழ்ந்துவரச்சென்று, தம்மனையின்கண்ணே திவ்யரத்தினசயனத்தில் வீற்றிருந்தருளவைத்து அன்புமீதூரப் பலமுறைவணங்கினர். சூழ்ந்துவந்தாரெல்லாரும்வணங்கினர்கள். சான்றோனென்பது கேட்டறியவேண்டாது நேரிலறிந்து ஈன்றபொழுதிலும் பேருவகைவாரியிற்படிந்துநிற்கும் அன்னையார் இதுவன்றோ நங்குலமெல்லாம் பல்லூழிகாலம் புரிந்துபுரிந்த அருந்தவப்பயனென்றெடுத்தணைத்து இன்பமீதூர அன்புரிமைபாராட்டி ஆனந்தபரவசராயினர்.

இப்படிநிகழுநாளில் அப்பதியிலுள்ளார்பலரும் இவ்வற்புதங்கேள்வியுற்றுவரும் அயற்பதியார் சுற்றத்தார்பலரும் தினந்தோறும் அங்குவந்து மெய்கண்டமணியின் இளந்திருக்கோலத்திருவருட்பொலிவுகாணப்பெற்று, அந்தநிமிஷமே தத்தமக்குமுன்னுள்ள எவ்விதகஷ்டங்களுநீங்கி இஷ்டசித்திகள்

முழுதும்பெற்றுவாழ்வாராயினர். பரமசிவனே பொருளென்றுள்ளபடியுணர்ந்துள்ளந்துணிந்த தீவிரதாசத்திநிபாதத்துத்தமர்களாகிய மனவாசகங்கடந்தார்முதலியோர்கேள்வியுற்று வந்து தரிசிக்கப்பெற்று வீக்ஷணமாத்திரையே தற்போதமிழந்து சூழ்ந்து திருவடிபற்றி வணங்கிநிற்ப அம்மெய்கண்டமணி ஒப்புயர்விலர்த உத்தமோத்தம தீவிரதரபரிபாகம்நோக்கி உரியதீக்ஷாசமஸ்காரமுறையிலக்குவாயிலியக்கிப்பேறளித்து, ஆசானுஞைப்படி தமிழில்மொழிபெயர்த்தருளிய சிவஞானபோதத்தை வார்த்திகப்பொழிப்புரையோடு உபதேசித்துத் தினந்தோறும் அவ்வடியார்பணிந்துசூழ நடுநாயகமணியாய்வீற்றிருந்து சேவைப்பிரசித்தியாய்விளங்குகின்றது.

அப்போது திருத்துறையூர் அருணந்திசிவாசாரியரிடத்தே சிவாகமாதி சிவசாஸ்திரபாடங்கேட்டுச் சித்தசாந்தியடைந்து சிவஞானவேட்கையுடையராய், அது அவ்வாசாரியரால்கிடைக்கப்பெறுமல் வருந்துகின்றமாணுக்கர்சிலர் ஸ்ரீமெய்கண்டகுருமணியின்மகிமைகேட்டு அங்குவந்து தரிசிக்கப்பெற்று மனவாசகங்கடந்தார்முதலிய முன்னையோர்பெற்ற பெரும்பேறுமுற்றும் பெற்று அவரோடுகலந்து யாவரும் சிவமயமாய் அக்குருமணியைச்சூழ்ந்தார்கள். பின்பு அருணந்திசிவாசாரியர் தம்மாணுக்கர்சிலர் வெண்ணெய்நல்லூர் சென்றதும் மீண்டுவாராமையுந்தெரிந்து அழைத்துவரும்படி பின்னுஞ்சில மாணுக்கரையனுப்ப, அவர்களுஞ்சென்று தரிசிக்கப்பெற்று அவ்வாறுயினர். பின்னுஞ்சிலர் சிலராக மாணுக்கர்யாவரையுமனுப்பிவிட்டு அருணந்திசிவாசாரியர் தனித்தவராய் இஃதென்னை ஆச்சரியம் நமது அருளால் சிஷ்யனுகியசகலபாடமும்பெற்ற ஒருசிறுவன் இன்னும் குதலைமொழிதானும் நிரம்பப்பெற்றிலான், இவன் என்னசாஸ்திரபரிசீலனமுடையானென்று, நம்மிடத்தே சாஸ்திரமுழுது முணர்ந்தமாணுக்கர்யாவருஞ்சென்று மீண்டுவாராவழி பெற்றமைந்தனர், நன்று நன்று இதுகலியின் பெருமையேயென்று பெருமிதங்கொண்டு, பின்நம்மாணுக்கர் சிவசாஸ்திரமுற்றுமுணர்ந்திலர்களல்லவா. அச்சிறுவனிடத்தில் எதுந்தங்களுக்குவேண்டிய நன்மைப்பாடில்லாவிட்டால் அங்கிருப்பார்களா? நாம் நேரேபோய்த்தெரிந்துவருவோமென்பார், ஆனுல் நமது சிஷ்யன்புதல்வனுகிய இச்சிறுவனை நாம் வலியப்போய்நின்றுகாண்பது நம்பெருமைக்கு அடுத்ததல்லவேயென்பார், இவ்வாறு இருபாற்பட்டுவாதாடியமனம் திருவெண்ணெய்நல்லூர்க்குச்செல்லும்படி ஒருவாறு துணியப்பெற்று முன்னைநிகழ்ச்சிபோலப் பல்லக்குமுதலிய ராஜவரிசையோடுசெல்லத் தொடங்குங்கால் ஏறியிருந்தசிவிகை கொம்பு முறிந்தது. புஸ்தகசகடம் அச்சொடிந்தது. பெருங்காற்றுற்குடைசுருட்டியாதி சிதைந்தன. இவையெல்லாங்கண்டும் ஆகூழ்வைத்தாற்றிருவருள்செலுத்துதலால் தனித்துப்பாதுகைமேற்செல்வாராயினர். அவையுங்குமிழ்தெறித்தன. ஆத்மாகருவிமுற்றுங்கழன்று பரிசுத்தமாய்த்தனித்தே சிவத்தோடு இரண்டறக்கலந்தின்புறுமெ

ன்று சிவசாஸ்திரங்கூறும் அதிரிசியத்தைத் திரிசியமாகக்காட்டினாற்போல மேற்கூறியசிவிகையாதியெல்லாப்பொருளுநீங்கின. பின்பாதசாரியாகத்திருவெண்ணெய்நல்லூர்சென்று மெய்கண்டபாலகுருமணி வீற்றிருந்தருளுகின்ற திருமாளிகையின் புறத்தேவந்துலாவிக்கொண்டிருந்தார்.

அப்படியிருக்குங்கால் வயசுமுதிர்ந்தபெரியோர்பலர் சிவஞானபோதநூற்கங்கையினராய் அதன் அரும்பொருண்முழுதுங்கேள்வியாலுண்டு அதுமயமாய்ப்பிறநோக்கின்றிச்சூழ்ந்திருப்ப, அப்பொருள்விரித்தருளுமெய்கண்டகுருமணி நடுநாயகமாய்த்திருமுகம் புரிசையைநோக்க வீற்றிருப்பதுகண்டார். நாம் உட்புகுங்கால் இச்சிறுவன் நமக்கோராசனந்தந்துபசரியான், இருக்கைவிட்டெழுமாட்டான்; இருந்தபடியோரஞ்சலிதானுஞ்செய்யான், நமதுசெயலால் நம்சித்தியபுத்திரனையெய்த இச்சிறுவனெதிரே நாஞ்செல்லப்போய்நிற்பது நம்பெருமைக்கடுப்பதல்ல, ஆகும் இவனிடத்துள்ள நலந்தெரியவும்வேண்டுமென்று பலவாறுயோசித்து, ஒருவாறுதுணிந்து, அயலில் ஓர்காரியமிதித்தம் அவ்விடத்துலாவுவார்போலுலாவினார்; அச்சமயம் அம்மெய்கண்டகுருமணியால் ஆணவமலத்தியல்பெடுத்துணர்த்தப்படுகின்றதுதெரிந்தார்; இதுதான் நல்லசமயம் இச்சிறுவன் நமது ஒருசொல்லிலகப்பட்டுவிடுவானென்றுவந்தார்; அச்செருக்கொடுசென்றார், ஆணவமலமென்பதியாது அதனிலக்கணமென்னையென்று உரப்பியதொனியொடுங்கேட்டார், அச்சொல் திருச்செவியிற்புகுதலும் அம்மெய்கண்டபாலகுருமணி, முன்போலப்புரிசையைநோக்கியே சிறிதுநேரமிருந்து, பின்பு தன்பார்வை அவ்வருணந்திமேல்விழும்படிதிரும்பிப்பார்த்து இப்படியே இருக்குமென்று திருவாய்மலர்ந்தருளிற்று. முன்கருவிகள்முற்றுங்கழன்றும் சிறிதுசெறிந்திருந்த ஆணவமலமுந்நீங்கப்பெற்று உடனேதன்சென்னி திருவடியிற்பொருந்தவிழுந்தார், எழுந்தார், பலமுறைநமஸ்கரித்தார். எம்பெருமானே? எங்குருநாதா? எந்தாயே? எம்மிறைவா? திருவடிக்கபசாரமிழைத்தநீசனேயேன்யாது செய்கேன் புலையேன். எமைப்பெற்கொருபற்றுமில்லாமைகண்டு இங்ஙனமெளியேனையுய்யக்கொண்டருளவெழுந்து திருவருட்பொலிவுகாட்டிக்கொலுவீற்றிருக்கருளும் அருமையறியாதே, அநேக அடிகளெதிர்வந்தும் அபசாரமிழைத்து அருநரகிற்காளானேனே இனியென்செய்கேன், என்செய்கேன் அண்ணலே? "பொய்யாயினவேபெரியோர் சிறுநாய்கடம்பொய்யினையே" புழுத்தநாயினுங்கடைப்பட்ட அறிவிலாச்சிறியேன் அறியாதுபுரிந்த அபசாரம்பொறுத்தடிமைக்கொண்டருளுதியோ அண்ணலே அண்ணலேயென்றழுது நமஸ்கரித்தபடியே திருவடியைப் பற்றிக்கொண்டிருந்தார். என்மெய்குழைந்து திருமுகநோக்கிக்கொடு கின்றதீபம், அச்சமயம் சுடர்விட்டுப்பிரகாசித்துக்கெடுவதுபோல், ஆணவமலவலிமுற்றுங் கெடுகின்ற சமயம் தலைபெயப்போய மேற்கண்ட மேல் விகேட்டு, அக்குருமணியின்பார்வைமாத்திரத்தே அம்மலவலிமுற்றுங்கெ

டப்பெற்றுத், திருவடியைப் பற்றிக்கொண்டெழாது கிடந்து வருந்துகின்ற அச்சிஷ்யசிகாமணியைத், தமது அருமைத்திருக்கரத்தாற்றூக்கியெடுத்துத் திருவைநூட்டி, அஸ்தமஸ்தக சம்யோகாதி சத்தியோ நிர்வாணதீக்ஷாசமஸ்காரசிவத்துவாபிவியக்திப் பெரும்பேறுமுற்றுமளித்துச், சிவஞானபோதமுபதேசித்து, இதற்கு முன்வந்து பேறுபெற்றிடையறாது சூழ்ந்திருக்கும் நாற்பத்தெண்மருக்குமேனைய முதன்மாணுக்கராயிருக்கும் பெரும்பேறுந் தெய்வத்தருளப் பெற்றுவாழ்ந்தார். அடியாருடன்கலந்து தலைமைபெற்று இடையறாது குருநாதனுறுதிசிவாநுபூதிப் பெருஞ்செல்வராய் வாழுகின்ற அவ்வருணந்திசிவாசாரியர், தமதுகுருமணியிடத்திற் கேட்டுணர்ந்த சிவஞானபோதத்தில், ஆழ்ந்தமிழ்ந்துகிடக்கின்ற அரியநுண்பொருளெலாம் விளக்கச், சாஸ்திரரூபமாய்ச் சிவஞானசித்தியாரென்றொரு தெருணூலும், தோத்திரரூபமாய் இருபாவிருபஃதென்றொரு அருணூலும்பாடியருளி, அவ்விருநூல்களையும் தமதுகுருமணியின் ஸ்ரீபாதங்களிற் சமர்ப்பணஞ்செய்து, உடனுறையும் பெரும்பேற்றினைப்பெற்றுவாழ்வாராயினர். பின்பு இவரிடத்தே மறைஞானசம்பந்தசிவாசாரியரும் அவரிடத்தே உமாபதிசிவாசாரியரும் வந்தடைந்து இவர்பெற்ற பெரும்பேறுமுற்றும் பெற்றுவாழ்ந்தார்கள். நமது திருக்கைலாய பரம்பரைக் குருசந்ததிகளாய் வந்தபடியால் இந்நால்வரும் சந்தானகுரவரென்று லோகப்பிரசித்தியாய்வழங்கப்பெற்றார்கள். பின் உமாபதிசிவாசாரியர் வழிவந்தபரம்பரைக்குருசந்ததிகள் அநேகருண்டு; விரிப்பிற்பெருகும் அவைகள்.

இத்தகைப்பெருஞ்சிறப்பு வாய்ந்த மெய்கண்டகுருமணி வந்தவதரிக்கும் பெருந்தவமுடைய அத்திருவெண்காட்டிற் கணிமையிலுள்ள திருக்கடவூரிலே, மார்க்கண்டமுனிவர் தேகாந்தியம் சரீரித்தவென்று அதனைச்சிவாநுக்கிரகத்தால் மாற்றிக்கொள்ளக் கருதி, இடையறாது சிவலிங்கபூசனை செய்வாராயினர். வண்ணியபடியே அக்காலவெல்லையிலே தன்னைப்பிடிக்கநெருங்கிய யமனை, எம்பெருமான் அச்சிவலிங்கத்தினின்றும் வெளிவந்து உதைத்தருளித், தமக்கு நித்தியமாயுள்ள தாப்பெற்று, முன்புதன்மேல் நெருங்கிய யமனுடைய கோபாக்கினியிலேயே தன்மேனி சற்றே கருமையுற்றிருப்பது நோக்கி, எம்பெருமானே இதனையும் மாற்றியருளுகவென்று பிரார்த்திப்ப, அன்பனே காவிரிக்குத்தெற்கே மூன்றுயோசனையிலுள்ள குதவனத்திலே மேற்றிசையில் ஓர்தீர்த்தம் இருக்கிறது; அதிலேமூழ்கினால் உன்மேனியிலுள்ள கருமையும் போய்மேலும் திவ்யதேஜசும் உண்டாமாதலால், அத்தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து அத்தலத்திற்சுயம்புவாயுள்ள அமுதலிங்கதரிசனஞ்செய்துகொண்டு அங்கேயே வசிப்பாயாக, இனி யமன் எக்காலத்தும் உன் பக்கத்தணுகமாட்டான், அத்தீர்த்தம் உன்பேரால் லோகப்பிரசித்தியாய்விளங்குமென்று திருவாய்மலர்ந்து, அவ்விலிங்கத்துள்ளே மறைந்தருளினர்.

உடனேமார்க்கண்டமுனிவர்பணிந்துவிடைபெற்றுச்சென்று, சூதவனத்தில் அத்தீர்த்தத்தில் ஒருமுறைமுழுகிமேலெழுந்தவளவிலே, கருமைமுற்றும் நீங்கி மேனிமிகப்பிரகாசிக்கப்பெற்று,வந்துகோயிலுட்புகுந்து சந்நிதியடைந்து அமுதலிங்கதிவ்யரூபந்தரிசிக்கப்பெற்றுப்பெருமகிழ்வுற்று,அன்புபெருக முன்புநின்றுபலமுறைபணிந்து திவ்வியவாக்கியங்களாற்றோத்திரஞ்செய்துநிற்ப, எம்பிரானெழுந்தருளி அன்பனே? நீகூறும் அருந்துதிகேட்டுமகிழ்ந்தோம் நீவேண்டும்வரம்யாதென்றருள, மார்க்கண்டர் மேலும்பணிந்து எம்பெருமானே "சிவ" என்னும்இரண்டெழுத்தும்இஷ்டகாமியமுற்றுங்கொடுத்தருளுஞ் சீவரத்தினமாமென்று வேதசிவாகமங்கள்கூறும் உண்மையையுணரார்சிலர்; அடியேங்கள் நின்றிருவடியன்றி வேறெதையுஞ் சிறிதும் பொருளெனமதித்திலேம்; இதுநிச்சயம்; ஆயினும் ஒருகாற்புத்திபேதித்து அபசாரஞ்செய்திடினும், இவர்அறியாச்சிறியரென்றிரங்கிப் பொறுத்தருளவேண்டுமென்றுபிரார்த்தித்தார். அப்படியேஆகுக. அன்பனே?நீமுழ்கியமேலைத்தீர்த்தம்உன்பேரால் விளங்குவதாகுக,வந்துமுழ்குவோர் இஷ்டகாமியமுற்றும்பெறவுறுவதாக. இன்னமும்நீவேண்டியதைக்கேளென்றுஆஞ்ஞாபித்தருள, எம்பெருமானே திருவடியில்வைத்த அன்பு எக்காலத்தும்அடியேங்களுள்ளத்தைவிட்டு நீங்காதிருக்கவேண்டும்;அன்றியும் என்பெயர்த்தீர்த்தத்தில்மூழ்குஞ்சீவர்யாவரும் உய்யும்படி இப்பொழுதருளியவரம் எக்காலத்தும்நிலைபெற்றிருக்கவேண்டுமென்றுபிரார்த்திப்ப, அப்படியேஆகுகவென்றருளிமேலுங்கூறுகின்றார். அன்பிற்பெரிய அருந்தவச்சிறுவ? உனக்கெனதுண்மைதோன்றாது உலகுய்யவேண்டிப்பரோபகாரத்திலே கருத்துடையனாகின்ற உன்பெருந்தன்மைநோக்கி மிகமகிழ்ந்தோம், இப்பரோபகாரமே எல்லாவற்றிலுமுக்கியதருமம். எவ்வித உயிர்களுக்கும்மனவாக்குக்காயங்களாலொருசிறிதுந்துன்புறாமற்பாதுகாப்பது சீவன்முத்தர்லக்ஷணமென்று சிவாகமங்கூறுமாதலால் இப்பரோபகாரமே பெரிதென்பதுசொல்லவும்வேண்டுமோ, இவ்விஷயத்திற்கொருகதைசொல்லுவோம் கேள்; முன்னொருகாலத்திலே,தேவப்பிரியனென்னுமொருபிராமணனுக்கும் விஷ்ணுவுக்கும் நடந்தவாதத்திலே, தேவப்பிரியன் பரோபகாரமே முக்கியதருமம். அதுசெய்பவனிடத்தே பரமசிவன் பேருவகைசெய்வனென்றான்; விஷ்ணு நன்றுநன்று எந்தவுலகில் யாவர் தன்காரியமன்றிப் பிறர்காரியஞ்செய்வார்; இருக்கட்டும். பரமசிவன் அவரிடத்தில்மகிழ்ந்திருப்பனென்றுஆவதென்னே? தனக்கல்லாதகாரியம் அறிவிலார்செய்வாரன்றிப்பிறரில்லை. தேவர்முனிவர்முதலியயாவருஞ்செய்யும் அருந்தவமெல்லாம் அவரவர் நன்மைகுறித்தன்றி வேறுண்டோ? என்றுகூறத்தேவப்பிரியன் நல்லது தங்களை முதலியபெருந்தேவரெல்லாம் ஓட்டத்தாக்கியுடற்றிய விடத்தைப்பரமசிவனுண்டதும் அவர்பொருட்டேயென்பீர்களோ? தாங்களனைவரும் அவாவுற்றபின்பாற்கடல் கடைந்து தேவர்க்கமுதளித்ததும்தங்கள்பொருட்டென்பீர்களோ? அகஸ்தி

யர் இமயமலையிலே பரமசிவதிருக்கல்யாணமகோற்சவ திவ்யதெரிசனத்தையும்விட்டுப் பொதியமாமலையிற்போயிருந்து பூமியைச்சமன்செய்ததும் அவர் பொருட்டென்பீர்களோ? உபமன்னியபகவான் தங்கள் அன்பியாகிய கிருஷ்ணருக்குத்திருவடிசூட்டிச் சிவதீக்ஷாசமஸ்காராதிசெய்தருளியதும் அவர்பொருட்டென்பீர்களோ? திருமுறைகண்டசோழர் மனுநீதிகண்டசோழர் பெரியசக்கரவர்த்திமுதலிய அருட்பெருஞ்செல்வர் அருஞ்செயலெல்லாம் அவரவர் பொருட்டென்பீர்களோ? நன்றுநன்று. இன்னும்தேவர்முனிவர் முதலியோர் அடியேன் செய்த பரோபகாரச்செயலெல்லாந்தெரிந்திலீர்களோ? ஆனுல் இது என்னுள்ளக்குறிப்பறியக் கூறியதாகவே நினைக்கின்றேன்; அதுஎப்படியாயினுமாகுக.பரோபகாரமே எல்லாவற்றினுமுக்கிய தருமமென்பது எவ்வாற்றானும் நிச்சயமேயாகுமென்றான். அன்பனே? இனிப்பரோபகாரமேன்மையை விரிப்பானேன் என்றருளி எம்பிரான் அமுதலிங்கத்துள் மறைந்தருளினார். மார்க்கண்டமுனிவர் தமக்கு அமுதலிங்கேசர் வெளிவந்தருளிய அருமைபெருமையை நினைந்துருகி, அச்சுயம்புமூர்த்திக்கு மேற்றிசையிலேகோயிலுள்ளே தன்பேரால் ஒருசிவலிங்கப்பிரதிஷ்டைசெய்து வழிபட்டு அத்தலத்தை தவிட்டுநீங்காது வசித்துவருவாராயினுரென்றருளிய திருநந்திதேவரைச் சனற்குமாரர் வணங்கி எம்பெருமானே? அத்தியற்புதத்திருவருள்விலாசத்துத்தமசரித்திரம் தங்கள் திருவாக்கினுற் கேட்கப்பெற்றேன். பெரும்பாக்கியமுற்றேன். இத்தலையிலும் குதவனேசர் அமுதலிங்கேசர் என்றருளிய நாமகாரணங்தெரித்ததுபோலமந்திரேசசென்ற நாமகாரணமுந்தெரித்தருளுகவென்று பிரார்த்திப்ப, நந்திதேவர் அன்பனே? அப்படியே செய்வோம். இச்சரித்திரமுற்றும் அன்போடெடுப்பவர் கேட்பவர் இச்சிப்பவர் சாதகஞ்செய்வோர்யாவரும், அளவிலாப்பெருஞ்செல்வங்களும்நன்மணப்பேறும் சற்புத்திரபாக்கியங்களும் ஆயுள்விருத்திமுதலிய இகவாழ்வுமுழுதும்பெற்றுச் சற்குருவின் திருவருளுணர்ச்சியுற்று, முறையே சுத்தாத்துவைத சித்தாந்தசைவப்பெருநெறியபற்றித் திருவடிநீழலிலாண்டறக்கலந்துவாழும் பரமுத்திப்பேருவாழ்வும் பெறுவார்கள்.

மார்க்கண்டேயச்சருக்கமுற்றிற்று.

---

## இராமன் மந்திரோபதேசச் சருக்கம்

சனற்குமாரனே? நீ கேட்டபடி மந்திரேச நாமகாரணத்தை ராமசரித்திரத்தாற் றெரிவிக்கின்றோம் கேட்பாயாகவென்று திருநந்திதேவர் கூறுகின்றார். முன்னொருகாலத்திலே, தன்னொடு போர்செயலாற்றது புறங்கொடுத்தோடிய அசுரர்களைத் துரத்திக்கொண்டுசென்ற விஷ்ணு, அவ்வசுரர்கள் பிருகுமுனிவர் ஆச்சிரமத்திற்சென்று, அவர்பத்தினி அபயங்கொடுக்க அடைக்கலம்புகுந்து மறைந்திருப்பதுதெரிந்து சென்று, தடுத்த அப்பத்தினிகெர்

ப்பவதியென்றறிந்தும் பின்வரும் பெருங்கேட்டைச்சிறிதும் நினையாது சக்கராயுதத்தாற் கொன்று பின் அசுரர் யாவரையும் கொன்றுசென்றார். புறம்போயிருந்த பிருகுமுனிவர் அங்குவந்து உண்மைதெரிந்து இப்பெரும்பாதகஞ்செய்த விஷ்ணு அளவிலாப்பிறப்பெலாம் பிறந்துழலக்கடவனென்றுசபித்தார். அதுதெரிந்துவிஷ்ணு இடையறாது சிவலிங்கபூசனை செய்துகொண்டேயிருந்து சிவானுக்கிரகத்தால் அப்பிருகுமுனிவரேயிரங்கி அநேகமென்பதொழிந்து பத்துப்பிறப்பாயமைகவென்றருள்செய்யப்பெற்று இனி எம்முயற்சிசெய்யினும் நம்மால் இதனைக்கடக்கமுடியாது; ஆதலால் செயல்வகையால் நன்மையுள்ளே தீமையும் தீமையுள்ளே நன்மையும் விளையுமென்பது தெரியவந்தது. அதாவது நாம் சாதுசனரக்ஷணார்த்தம் பாவிகளாகிய அசுரரைக்கொல்லத்தொடங்கிய நன்மையுள்ளே பாபமாகிய தீவினைகிடைத்தது. அத்தீவினைப்போகம் அனுபவிக்கச்செல்லும்பிறப்பிலேதுஷ்டர்களாகியராவணாதிராக்ஷசசம்மார நன்மைவாய்ப்பதாகத்தெரிகிறது; பெரியர்கோபம் முடிவில் நன்மையுந்தருமென்பதைப், பிருகுசாபத்தாற்கிடைத்த இப்பிறவியே விளக்கியதென்றிவ்வாறு பலவும்யோசித்து, அயோத்திமாநகரிலே தசரதமகாராஜாசெய்துவந்த அளவில்லாததானதர்ம தவவிரதயாகாதி புண்ணியப்பிரயோசனமே யுருவாய்வந்ததென்னப் புத்திரனுமாய்வந்து ராமநாமந்தரிக்கப்பெற்று, வசிஷ்டரிடத்தே கற்பனவெல்லாங்கற்றுப், பரதலக்ஷ்மண சத்துருக்கரோடு பிதாமாதாக்கள் மகிழ்வுறவாழுநாளிலே, விசுவாமித்திரர் வேண்டுகோளின்படி லக்ஷ்மணனோடுசென்று தாடகாவதஞ்செய்து, மிதிலைசென்று சீதாகலியாணமுடித்து, மீண்டு அயோத்திவந்துஇன்புறவிருந்துபின்பு, பிதாவாக்கிய பரிபாலனைசெய்யக் காட்டிற்செல்லத்தொடங்குங்கால், பிரிவாற்றாது லக்ஷ்மணனும் சீதையும் உடன்வரச்சென்று, அகஸ்தியமுனிவரைவணங்கி எம்பெருமானே? இப்பிரபஞ்சதுக்கசமுசாரசாகரங்கடத்தற்குரிய உபாயம் இதுவென்றருளி, அடியேனை அவ்வழியில் நடத்தியருளவேண்டுமென்றுபிரார்த்திப்ப, அகஸ்தியர்அன்பனே? நீபோகமோக்ஷரக்ஷகனாகின்றாய்,உனக்குணர்த்தியருளுவோர் அறிவுமுதிர்ந்த வசிஷ்டனுமின்றான், உண்மையாலேநீ அறிவாற்சிறந்த சனகனுமின்றான், சகலசாஸ்திரபாரங்கதனான சூரியனுடையவமிசத்தில் வந்தநீ அறியாதவிஷயம் யாதிருக்கின்றது,உனக்குபதேசிப்பதில் நமக்குமிகுவிருப்பமுண்டென்றுகூறுகின்றார்.

ராகவ? சமுசாரசாகரங்கடந்து திருவருட்கரையேறிப் பேரின்பவாழ்வு பெறுதற்கு, வருணாச்சிரமாதிகளிலேநிறுத்தவருது உண்மைதெரியவுணரத்தறிதற்கும் ஞானசீலர்களாலே பூசிக்கத்தற்குரிய நாயகன், வேதசிவாகமாதிகளாலே நிச்சயித்துணர்ந்து சகலே அரிப்பிரமேந்திராதி யாவராலும் தியானிக்கப்படுவோனென்றெடுத்தோதப்படுகின்ற உமாபதிஒருவனேயாம்; அவனுக்குப்பூசனையைக்காட்டிலுஞ் சிறந்ததொண்டுவேறில்லை; அகத்தும்புறத்தும்

லோகசிவாலயமளிகிலழுவாது சிவபூசனைசெய்பவனெவனோ அவனே அப்பிரபஞ்சத்துக்கெல்லாம்மாசாரியனாகக் கடவத்தக்குரியவன். அப்பூசனைக்குஇன்றியமையாதமூலமந்திரங்களுமொன்று. அது அதிரகசியமாயுள்ளது; வினைமுழுதுநீக்குவது; பிரபஞ்சசாகரத்தினின்று மேம்படுப்பது; சிவசொரூபமாயுள்ளது; பஞ்சபாதகநாசஞ்செய்வது; ஞானசாதனமானது; சப்தகோடிமகாமந்திரங்களெல்லாவற்றிற்கும் நாயகமாயிருப்பது; மந்திரவேதமாகியஎசுர்வேதமத்தியிலுள்ள ஸ்ரீருத்திரமத்தியிலே விளக்கிணமாய்விளங்குவது; இத்தகையஸ்ரீபஞ்சாக்ஷரத்தைஉபதேசிக்கின்றேம். அதற்கு அதற்குரியமுக்கியாங்கமொன்றுண்டு. அது விபூதிதாரணமே. செபம்தவம்முதலியஎச்செயலும் பூதிதாரணமின்றிச்செய்யின், அச்செயல்முழுதுந்தானும்பிரயோசனமாகா. இதுசுருதிநிச்சயமென்றருளி, விரசாக்கினியிலே விதிப்படிவிளைத்த விபூதியை எடுத்துநீட்டினர். உடனே இராமன்நன்கு நீத்தெழுந்து இருகையும்விரித்துவாங்கி விதிப்படி உரியமந்திரோச்சாரணத்தோடு அங்கமனைத்திலும் திரிபுண்டரமாயணிந்துநிற்ப, மேற்கூறியபடியேஸ்ரீபஞ்சாக்ஷரோபதேசஞ்செய்தருளினர். உடனேபரவசனாயினன்; அகத்தியமுனிவரைப்பலமுறைபணிந்தெதிர்நின்றுதுதித்தனன். மேலும் அகஸ்தியர் அவ்விராமனுக்குச்சிவசகஸ்திரநாமகளியார்த்தவைபவங்கள்விளங்க உபதேசித்துச், சிவதத்துவார்த்தங்களெல்லாமும் மனத்திலமைந்துகிடப்பத்தெளிவித்து, சிவனொருவனே *தியேயன்; மற்றெவருந் ||தியாதாக்களென்று சுருதியுரைக்கின்றதைச்சார்த்தசிவபரத்துவமகிமையைத்தெளிவாகவிரித்தோதுகின்ற சிவகீதாசாரசந்திரோபதேசமுஞ்செய்து, ஒருசிவலிங்கத்தைப் பிரதிஷ்டையாகச்செய்து பூசித்து, இதனைநீஆயுள்வரைநியதியாப்பூசித்து வருவாயாகவென்று அவ்விராமன்கையிற்கொடுத்தருளினர். அதனையும்பெற்றுப் பெருமகிழ்வுற்றவ்விராமன்முறைபணிந்து துதித்துநீங்காவிடைபெற்றுச்சென்றனன்.

சென்ற ஸ்ரீராமன்கோதாவரிக்கரையடுத்தபஞ்சவடியிலே ஆன்மார்த்தசிவலிங்கபூசை விதிப்படியாற்றிச்செய்துகொண்டு சிலநாளிருந்து, இச்சித்துவந்தசூர்ப்பநகையைப்பங்கப்படுத்திக், கரதூஷணாதிகளைக்கொன்று, மாரீசன்சகாயத்தால்இராவணன்சீதாதேவியைக்கவர்ந்துசெல்ல, அதனாற்பிறந்தசோகமுற்றுச், சவரிவழிகாட்டச்சென்று அனுமனாற்சுக்கிரீவனைக்கண்டணுகி, வாலியைக்கொன்று, அனுமனால்சீதாதேவி இலங்கையிலிருப்பதுதெரிந்து, இலங்கைசெல்லக்கருதி இலக்குமணன் சுக்கிரீவன் அனுமன்வானரசைநியங்களோடு தெக்ஷணசமுத்திரதீரஞ்சென்று, வேதாரணியமடைந்து வேததீர்த்தஸ்நானமுதலியமுறைமுடித்து, வேதாரணியேசரைவணங்கிப்பிரார்த்தித்து வெளிவந்தோரிடத்திருந்து, அனுமனாதிவானரவீரர்களைநோக்கி, இலங்கைக்குப்போ

* தியேயன் — தியானிக்கப்படுவோன்.

|| தியாதாக்கள் — தியானிப்பவர்கள்.

கும்பட இக்கடலிலே ஒரு அணைசெய்யுங்களென்று ஆஞ்ஞாபித்தான். ஆஞ்ஞையின்படி அவர்கள் அணைசெய்யுங்கால் அண்டமுகட்டளவுயர்ந்த மரங்கள் மலைகளைப் பிடுங்கிக்கொண்டுவந்து போடுகிறவேகத்தால், அக்கடல் பிரளயவெள்ளம்போலப் பிரவகித்தது. அதுகண்டு யாவரும் நடுங்கிக் கோயிலுட்புக்கார்கள். பிரவாகமுங் கோபுரவாயிலாலுட்புகுதல் கண்டு, நந்திதேவர் ஒரு ஹுங்காரஞ்செய்தருள, உடனே அக்கடல் பிரவகித்தல் நீங்கி முன்போலிருந்தது. உடனே ஸ்ரீராமன் ஆரம்பித்த காரியம் இடையூறற்றதென்று விசாரித்து, அங்குநின்று மேற்றிசைநாலு யோசனை தூரஞ்சென்று, இவ்விடத்திலாவது சிலைகளின்றி நிலைபெறுகவென்றோர் அணைசெய்விக்க, அதுவும், கடையின்றியுமைய பெருமீன்களுக்குத் தடையாயிருந்தபடியால், அம்மீன்கள் வால்முதலியவுறுப்புக்களால் அடித்தும் மோதியுஞ் சிதைக்கப்பெற்றது. அதனும் அவ்விடம் மீன்புசலென்று விளங்குகின்றது. அவ்வணைகளிரண்டுஞ் சிதைந்துபோயினும், சற்குணவிசிஷ்டனாகிய ஸ்ரீராமனாற் செய்விக்கப்பெற்றமையால், அவ்விரண்டிடமுங் கோடிதீர்த்தமென்னும் பெயர்பெற்று விளங்குகின்றன. இவ்விரண்டில் முந்திய வேதாரணியகோடிதீர்த்தமகிமை அப்புராணத்தால் விளங்கப்பெறும். பிந்தியது மணமேற்கோடிதீர்த்தமென்று நாமப்பிரசித்தியோடு, யாவரும் மிகமேலதாய்மதித்துவந்துமூழ்கி இஷ்டகாமியங்களெல்லாம் பெற்றுவாழும்படி விளங்குகின்றது. இம்மணமேற்கோடியென்னுந் திவ்யஸ்தலம் பாண்டியநாட்டின் எல்லையாயுள்ளது. இம்மட்டோ? உண்மைநாயன்மார் அறுபத்துமூவருள்ளே குலச்சிறைநாயனார் திருவவதாரஞ்செய்யப்பெற்றது. அம்மகிமைமையினோக்கியே அங்கேயெழுந்தருளிய ஸ்ரீஞானசம்பந்தப்பெருமாளும், மங்கையர்க்கரசியார் நெடுமாறநாயனாரோடு நெடுநாள் வீற்றிருந்தருளப்பெற்றதென்றால், இதன் மகிமை யாவர்கூறவல்லார். அமைக. முன்போலவே அணைசெய்வித்த அணையுஞ் சிதைந்தமைகண்டு ஸ்ரீராமன் பெருங்கவலைகொண்டு, இனியாதுசெய்வோமென்று பலவாறு யோசித்து ஒன்றுந்தோன்றாதிருந்தனன்.

அப்போது ஆகாசத்திலே வாராய் இரகுகுலோத்துங்க ராமனே! நீ அகஸ்தியமுனிவனிடத்தே பெற்ற ஸ்ரீபஞ்சாக்ஷர ஜபபூஜாதிவிசேஷகாரியங்களிலே, சூதவனேசர் மிகப்பிரீதியுற்றிருப்பதால், நீ அத்தலத்தையடைவாயாயில் உன்காரியமெல்லாங் கைகூடுமென்றெழுந்த திவ்யவாசகங்கேட்டு, அளவிலாப்பெருமகிழ்வோடு கிட்டுதற்கரிய திருவருள் நமக்குவாய்த்திருந்ததென்றெழுமன்பு மீதூர அவ்வனஞ்சென்று வருணதீர்த்தத்திலே ஸ்நானாதி சிவகிரியைகள் முடித்துச்சென்று, கோயிலுட்புகுந்து சந்நிதியடைந்து அமுதலிங்கேச திவ்யரூபங்காணப்பெற்றான். பரவசமுற்றான். சிவானந்தசாகரத்தழுந்தி ஒருவாறெழுந்து பலமுறைபணிந்து பூஜோபகரணங்களையங்கொண்டு விதிப்படி பூஜித்தெழுந்து, அஞ்சலியஸ்தனாய்நின்று பிரியவாக்கியங்களாற் றுதித்

தான். எம்பெருமான் அமுதலிங்கத்தினின்றும் உருவங்கொண்டெழுந்தருளி அன்பனே ? நீ அகஸ்தியனிடத்திற்பெற்ற பஞ்சாக்ஷரமந்திரோபதேசசிவபூஜாதி சுத்தான்மார்க்கமே ஒப்புயர்வில்லாதது ; ஜனனசாகரங்கடத்தற்கின்றியமையாதது ; இதனைச்சிறிதும் நழுவவிடாது உன் உள்ளத்திலழுந்த ஊன்றிக்கொள்வாயாக ; சூரியனை மேகமறைத்தாற்போல இப்போது உன் அறிவைப் பத்திவியோகத்தால் வந்ததுக்கம்மறைத்துமயக்குகின்றது; அதுநீங்குமுபாயங்கூறுதுங்கேள். இதற்குத்தென்றிசை சட்டியோசனை தூரத்துள்ள தேவிபட்டணத்திற்சென்று, அங்கே அநேகஞ்சத்திகள் சூழவீற்றிருக்கின்ற துர்க்காதேவியைக், கடலிலே அணைநிலைக்கவேண்டிப்பூஜிப்பாயாகில், அதற்குரிய ஆற்றலெல்லாந்தருவாள். இடரின்றி அணைசெய்து அவ்வழியே இலங்கைசென்றிராவணவதஞ்செய்து, சீதையைமீட்டு இலக்குமணாதியரோடு அயோத்திசென்றுசெங்கோல் அரசுசெய்திருந்து அளவிலாச் சிவதர்மங்களோடு சன்மார்க்கசிவலிங்கபூஜாதிகளும் வழுவறச்செய்துவந்து, முடிவில் நம்பதம் பெறுவாயாகவென்றித்தியாதிமந்திரோபதேசஞ்செய்தருளி, அமுதலிங்கத்தில் மறைந்தருளினார்.

உடனே ஸ்ரீராமன் துக்கமெல்லாம் அப்பொழுதே நீங்கினவனாக ஆனந்தசாகரத்தழுந்தி, மேலும் பன்முறைபணிந்து மேல்பக்கஞ்சென்று மார்க்கண்டலிங்கத்தின் வடபக்கத்தொரு சிவலிங்கப்பிரதிட்டை செய்து பூஜித்து மீட்டும் அமுதலிங்கேசரைப்பணிந்து நீங்காவிடைபெற்றுப் புறத்தேவந்து தேவிபட்டணஞ்செல்லுங் கருத்தனாயிருந்தான். முன்னமே இலக்குமணன் சுக்கிரீவன் சாம்புவன் முதலியோர் அங்கங்கே ஒவ்வோர் சிவலிங்கபூசனைசெய்தருள்பெற்றுவந்து உடனிருந்தார்கள். அவர்களுள்ளே இலக்குமணன்பூஜித்தசிவஸ்தலம் தம்பிக்குநல்லான்கோட்டையென்று வழங்கப்பெறுகின்றது. சுக்கிரீவன் பூஜித்த சிவலிங்கப்பெருமான் திருமேனியழகரென்று அவனால் நாமங்கூறப்பெற்று, வடிவழகியம்மையோடு முத்துப்பேட்டையென்னும் திருமங்கலத்தில் விளங்குகின்றனர். சாம்புவன் பூஜித்தஸ்தலம் சாம்புவனோடையென்று வழங்கப்பெறுகின்றது. இப்படியே ஒவ்வொருவரும் பூஜித்தன பலவுள்ளன. இவைநிற்க. இலக்குமணாதியரோடு ஸ்ரீராமன்தேவிபட்டணஞ்சென்று துர்க்காபூஜையால் ஆற்றன்முற்றும்பெற்று, அணைசெய்துசென்று ராவணாதிவதஞ்செய்து சீதையைமீட்டுவந்து, ராவணப்பிர்மஹத்தி ராமேசுரத்தில் ராமலிங்கபூஜையால் நீங்கப்பெற்று, வீரஹத்தி வேதாரணியத்தில் விக்கினேசபூஜையால் நீங்கப்பெற்று, கும்பகர்ணஹத்தி திருவானைக்காவிலே ஜம்புகேசபூஜையால் விலகப்பெற்றுத், திருவருள்பெற்று அயோத்திசென்று, அகஸ்தியகுருபாதபூஜைசெய்துச், சிவார்ச்சனாதி சிவதர்மங்கள் விளங்க அரசுசெய்திருந்தான். அவ்விராமனுக்கு மந்திரோபதேசஞ்செய்தமையால்

மந்திரேசர் என்னும் நாமம்வழங்கப்பெற்றது. சீதையைமீட்பதற்குபாயம்யா தென்று எம்பிரானருளைவேண்டிஉசாவினபடியால், அச்சூதவனம் திருவுசா த்தானமென்னும் திவ்யநாமம்பெற்றதென்றருளிய திருநந்திதேவரை, மீட்டு ம் சனற்குமாரமுனிவர்வணங்கி எம்பெருமானே ? மேலுமிச்சூதவனமான்மி யமாகிய சரித்திரம்கேட்பதிலேயேஆசைமேலிடுகின்றதென்றுகேட்க, நந்திதே வர் கூறுகின்றார்.

அன்பனே ? முன் விசுவாமித்திரமுனிவன், சிதம்பரநடனதெரிசனவி ருப்புடையனாய் நெடுங்காலந்தவஞ்செய்துவரக், சிற்சபேசன் எதிர்வந்தருளி முனிவனே ? இத்தலத்திலேநமது ஆனந்ததாண்டவம் பதஞ்சலி வியாக்கிரபாதர் க்கன்றி வேறுகாட்டப்படுவதில்லையாதலால், நீ சூதவனஞ்சென்றுஅங்கு உன்வி ருப்பத்தைமுடிப்பாயென்றருள, உடனேவணங்கிவிடைபெற்றுக்கொண்டு சூதவனம்வந்து, சிவதீர்த்தஸ்நானஞ்செய்துதிகம்புடித்துக் கோயிலிற்புகுந்து, அ முதலிங்கேசதரிசனங்கிடைக்கப்பெற்றுப் பெருமகிழ்வுற்று, அச்சந்நிதியிலே நடனக்கோலத்துடனே தரிசனம்வேண்டித்தவஞ்செய்துகொண்டிருப்ப, அவனெ திரே நடேசப்பெருமான் ஆனந்ததாண்டவஞ்செய்தருளக்கண்டு, மெய்ம்மயி ர்சிலிர்த்து ஒருவாறெழுந்துபன்முறைபணிந்து அளவிலாத்துதிகள்செய் து, அப்படியேகாலந்தோறும் நடனதெரிசனஞ்செய்துகொண்டு அத்தலத்தி லேயே நெடுநாள்வசித்திருந்து பின்வேதாரணியஞ்சென்றான். சூரியன் முத லான ஒன்பது கிரகங்களும் ஒருகாலத்திலே இங்குவந்து தவஞ்செய்திருந்து தாங்கள் எண்ணியகாரியமெல்லாங்கைகூடப்பெற்று வாழ்ந்தார்கள்.

அன்பனே? வேறொன்றுசொல்லக்கேள் ; விஷ்ணு, நான்மறை நூல் சாஸ்திரமுற்றுணர்ந்தும் பற்பலர்க்குப்போதிக்குங்குருவாயிருந்தும் ஊழ்வ லியினாலே, விக்கினேசுரபூஜைசெய்யாமற் கடல்கடக்கவெண்ணி விஷமெ ழுந்தாரத்த, அப்பொழுது தேவர்கூட்டமுற்றுமோடவும், தன் தலைமேலா க்கிச் சிறிதுநேரம்நின்று வெப்பந்தாக்கப்பெற்று மேனிகருநிறம்படைத்து, அதிவேகமாய்முன்னோடிய தேவர்களுக்குமுன்னேறிப், பற்பலமுறையுமலை முலைந்து திருவருள்கைகூட இத்தலத்துவந்து கோயிலுட்புகுந்தேதாவளமிட் டலறிட, அமுதநாயகன் வைரவரை அனுப்ப, அவர்தெற்குக்கோபுரவாயிலா ல் வெளிவந்து மேற்றிசைநோக்கிப்போய், அவ்விஷத்தை ஐயன்குருவோரத்தார்க் கு அப்பால்வருவதுதெரிந்து, அவ்விஷமே அவ்விடத்துப்போய் அமர்ந்திருக்க மீட்டிக்கவர்ந்தனர். அப்பொழுதே மந்திரேசரும் அவ்விடத்துவந்தருள, அ தனை அவர் திருக்கரத்துக்கொடுத்தனர். உடனே அந்த விஷத்தைப்பானஞ் செய்தருளி அந்த இடத்திலும் அம்மந்திரேசர், நீலகண்டேசரென்னும் நாமத் தோடு நித்தியசாந்நித்தியமாய் வீற்றிருந்தருளுவாராயினர். விஷத்தைக்கவர்ந் துகொடுத்த அவ்வைரவரும் அத்தலத்திலேதென்முகமாகவீற்றிருந்தருளு

ன்றார். அத்தலத்தையடைந்து வழிபாடுசெய்து இஷ்டகாமியங்கள்பெற்றுவாழ்ந்தோர் அநேகர். அத்தலம் நாமரங்கோட்டையென்னும்பெயரால்வழங்கப்பெறுகின்றது. பின்னுந்தவனேசர் ஒன்றிட்டறிய தேவர்யாவர்க்கும்அருள்புரிந்து, அவருள் சேனாபதியாகிய நந்தனைநோக்கி இனிவிக்கினேசுரபூசனைபுரிந்து கடலைக்கடையுங்கள் அமுதங்கிடைக்குமென்றருள, அப்படியே செய்யும்படி விஷ்ணுமுதலியோர் மேலும்வணங்கி விடைபெற்றுச்சென்றனர்.

குருகுலத்தரசனொருவன் இத்தலம்புகுந்து மந்திரேசனைப்பூசித்துத் தேவமந்திரியாகிய சவர்வதிதனைக்கு மனைவியாகப்பெற்றின்புற்று வாழ்ந்தான். இந்திரனும் இத்தலத்தைக்குறுகிவந்து மந்திரேசபூசனைப்பேற்றால் துஷ்டனாகிய நகுஷனுக்கு ஆபத்தைவிளைத்துப், பிரிவுற்ற இந்திராணி தன்னை நீங்காது மருவப்பெற்றுவாழ்ந்தான். இந்திரன் மந்திரேசனநுக்கிரகத்தால் விருத்திரனாகிய பகைவனைக்கொல்லப்பெற்றுவாழ்ந்தான். அஸ்வினிதேவர்இருவர் மந்திரேசபூசனையால் மற்றைத்தேவர்களோடு தங்களுக்கு அவிப்பாகங்கிடைக்கப்பெற்றுவாழ்ந்தார்கள். இப்படியேஇத்தலம்புகுந்தருள்பெற்றோர் அளவிலாதோர்; முற்றுங்கூறுவது யார்க்கும் அசாத்தியமேயென்றருளிய நந்திதேவரை மேலும் சனற்குமாரர்வணங்கி, மந்திரேசாநுஷ்டானமேற்கொண்டென்றவிஷ்ணுமுதலியோர்செய்யாது கூறியருளுகவென்றுவேண்டினர். இச்சரித்திரமுழுதும் அன்போடுபடிப்பவர் கேட்போர், சத்துருக்கள்விஷங்கள்முதலிய வெவ்வேற்றுமாம்வருந்தெருந்துன்பமெல்லாம் ஒளிந்தெளிக்கப்பெற்று, நன்மனைமக்கட்பேறு முதலிய இகவாழ்வுமுற்றும்பெற்றுவாழ்ந்து ஏகாந்தத்திலே பரமுத்தியும் பெறுவார்கள்.

இராமன் மந்திரோபதேசசருக்கமுற்றிற்று.

# அமுதநிவேதனச்சருக்கம்.

சனற்குமாரமேனி! கேட்டனையாக, அவ்விஷ்ணு அமுதநிவேதனஞ்செய்த மகோற்சவமகவென்று திருநந்திதேவர்கூறுகின்றார். அமுதலிங்கேசர்திருவருள்பெற்றுச்சென்றவிஷ்ணு, வழிபடுவார்க்குச்சர்வவிக்கினங்களும் நீக்கிய குணமில்ல சர்வசக்திமானாகிய பிரணவாகாரபிரணவார்த்தசொரூப பரம்பொருளாயுள்ள ஸ்ரீவிக்கினராஜப்பெருமானை முன்புஅபராதக்ஷமைவேண்டின்று, சகலகட்டப்பொருமகனைங்களுக்கொண்டுவிதிப்படிபூசித்து,இனிமேலும் இடையின்றி அமுதங்கிடைக்கும்படி அநுக்கிரகிக்கவேண்டுமென்றுபிரார்த்தித்து, அவனிசைத்துதிகள்செய்து திருவருள்பெற்றுச்சென்று, முன்போலத்தேவர் அசுரரென்னும் இருதிறத்தாரும் பாற்கடலைக்கடைந்து, அமிர்தமெழப்பெற்றுச்சொர்ணகடங்களிலேநிறைத்து, அதனை யமக்குப்பகிர்ந்துதருகவென்று

சூழ்ந்த தேவாசுரர்களைநோக்கி, இவ்வமுதம் மந்திரேசர்திருவருளாற்கிடைத்தமையால்அப்பெருமானுக்கு நிவேதனஞ்செய்து நாம்அச்சிவப்பிரசாதங்கொள்ளலே முறையாகுமென்று சூதவனஞ்சென்று, மார்க்கண்டதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து விபூதிருத்திராக்ஷதாரணாதிநியமங்கள் முடித்து, அமிர்தகடங்களோடுகோயிலுட்புகுந்து அமுதலிங்கசந்நிதியடைந்துபலமுறைபணிந்து, சமஸ்தபூஜாத்திரவியங்கொண்டு அன்பொடுபூஜித்து, அமுதகடமெலாமெதிர்வைத்து எம்பெருமானே திருவருளாற்கிடைப்பித்தருளிய இவ்வமுதை அமுதுகொண்டருளுகவென்றுபிரார்த்தித்து, அளவிலாத்துதிகள்செய்து பூஜைமுடித்துச்சண்டேசுரபாகமும் நிவேதித்து, மேலும் அமுதலிங்கசந்நிதியடைந்துபணிந்து விடைபெற்றுச்சென்று, அசுரரைவஞ்சித்து அமுதமுழுதும் இந்திராதிதேவர்யாவர்க்குங்கொடுத்துவிட்டுப் பாற்கடலடைந்து ஆதிசேடனுக்குமுன் விஷ்ணுமூர்த்தி சூதவனஞ்சென்றதும், சூதவனேசர் அதனையுண்டருளியதும், பின்னுங்கடல்கடைந்து அமுதங்கொள்ளுதற்குபாயந்தெரிவித்தருளியதும், அப்படியேகடைந்துஅமுதமெழப்பெற்றதும், அதனைஅமுதலிங்கேசர்க்கு நிவேதித்துப்பிரசாதங்கொண்டு தேவர்க்களித்ததுமாகிய சூதவனேசர்திருவருட்பெருமையெல்லாவற்றையும் விரித்துரைத்தனன். கேட்ட ஆதிசேடன், தன்னுள்ளத்தமுந்திக்கிடந்த பேரன்புகொழுந்தோடிப்படர்ந்துமேலெழுந்துசென்று சூதவனேசர்திருவடிக்கொழுகொம்புபற்றிப்பிணைச்சூழ்ந்துகொள்ள, அன்புடையாடியெம்பெருமான் சூதவனேசன் திவ்யதரிசனம் எளியேனுக்கு இன்னும் என்றுகிட்டுமோவென்றுங்கருத்தேமேற்கொண்டு அமர்ந்திருந்தனன். இச்சரித்திரம் அன்பொடுபடிப்பவர்கேட்பவர் இகபோகமுற்றும்பெற்றுவாழ்ந்து பின்பரமுத்தியும் பெறுவார்கள்.

அமுதநிவேதனச்சருக்கமுற்றிற்று.

# இந்திரன்திருவிழாச்சருக்கம்.

சனற்குமாரனே! இந்திரன் இச்சூதவனம்வந்து திருவிழாச்செய்தமை கேட்பாயாகவென்று திருநந்திதேவர்கூறுகின்றார். முன் ஆதிசேடன் சூதவனத்திலே, ராஜசூடாமணியென்னும் சோழனாற்செய்வித்த வைகாசியோற்சவ விஸ்தாரவைபவமுற்றும் இந்திரன் கேள்வியுற்று, அதனைத்தான்செய்யக்கருதி வாயுதேவனைநோக்கி, நீ சூதவனஞ்சென்று நாஞ்செய்யக்கருதுகின்ற திருவிழாவுக்குரிய அலங்காராதிவகையெல்லாஞ் சிறிதுங்குறைவின்றிச்செய்வாயென்றேவினன். அப்படியே வாயுசெல்லும்போது தேவகம்மியனுக்கு ஆஞ்ஞாபிக்க, அவன் சூதவனஞ்சென்று மார்க்கண்டதீர்த்தஸ்நானாதிநியமமுடித்து, அமுதலிங்கதெரிசனம்பெற்றுப் பரவசமுற்றுப் பன்முறைபணிந்து துதித்துத், தானே முன்செய்த அக்கோயின்முழுதும் பார்த்துவந்து, பின்

பெண்களுக்கு இயற்கையழகு எவ்வளவிருந்தாலும், செயற்கையழகுசெய்வதிலும் பிரதானதாக்களுக்கு ஆசையிருப்பதுபோல, இயல்பாகவே அலங்காரவமையொன்று நிறைந்த அத்திருக்கோயிற்கு மேலும் அநேக அலங்காரங்கள் செய்துவருகின்றான்.

முதற்கோபுரவாயில் நந்திமண்டபத்தின்வடதிசை வசந்தமண்டபமத்தியிலே, சொர்ணரத்தினமயமான வேதிகையொன்றெடுத்து, அதன்மேல்வயிரரத்தினத்தாலியற்றி, மேற்பவளக்குட்டுசார்ந்த இந்திரநீலப்போதிகைசேர்த்து, மேல்முத்திழைத்தவிட்டங்கள்கோத்து, மேனிலம் முன்முக மாணிக்கக்கொடுங்கைகளமைத்து, மேற்சொர்ணரத்தினஸ்தூபிகளமைத்து, மேலும்படியவர்க்கமெல்லாஞ்செறித்துச், சிற்பநூற்பொருளெல்லாம்விளங்கஒருவிமானஞ்செய்து, மத்தியிலே திவ்யரத்தினசிங்காசனங்கற்பித்து, அவ்வேதிகை உயரத்துக்குச் சொர்ணரத்தினங்களாற் படிகளமைத்து ஐராவதமையொன்றமைந்துநிருமித்து, அவ்வறையேவேதிகைசூழ நீர்நிறைத்து, உரியநறுமலர்பரப்பி, இப்படியே இனிமேந்திரேசர் உற்சவங்கொண்டு வீற்றிருந்தருளும்போதுசெய்யத்தக்கதென்று யாவர்க்கும்விளங்கக்காட்டி, மதில்முதலியஇடமெல்லாம் விசித்திரவிளக்கமான சித்திரரூபங்கணியமைத்து, அவ்வசந்தமண்டபத்தைச்சூழ அதிவிசித்ரபரிமளசுகந்தங்கள் அஷ்டதிக்குகளினுங்கமழத்தக்க புஷ்பபலாதிகளிறையுமினமாச்சோலையுண்டாக்கி, அபிமுகமாகிய தெற்குவாயிலினேரே சொர்ணரத்தினமயமானமேற்கட்டிரத்தினமாலை பொன்னரிமாலை புஷ்பமாலைமுதலிய வெல்லாஞ்செறியநடைப்பந்தர்நீளச்செய்து, மரகதத்தால் இலைகளுந்தண்டும்முத்துப்பவளமணிகளாலும்பொன்னாலும் குலைகளுமெய்யாயமைத்தபூவமைத்துள்ள அநேகம்வாழைகளும், இப்படியேசொர்ணரத்தினங்களால் வகுத்துச்செய்துள்ள கமுகுகரும்புமுதலியவைகளும், அப்பந்தரிலே வரிசையாகவிருக்கிறது. தலங்களெல்லாம் பளிங்குக்கற்படுத்து மெருகுசெய்து [illegible] இடங்களிலும்திவ்யரத்தினங்களை தீபங்களாகவமைத்தான். மணமிகுந்தசந்தனத்தோடு [illegible] வாசனைதிரவியமெல்லாஞ்சேர்த்தமைத்து எங்கும் மெழுகுவித்து மேற்பன்னீர்தெளிப்பித்தான். இவ்வாசனை திசையெல்லாம் [illegible] நறும்புகைகமழச்செய்தான். [illegible] வாசனையொடுஞ்சேர்ந்த பொறபொடியாதிகளால் [illegible] எல்லாஞ்செய்வித்தான். சொர்ணமயமான [illegible] சொர்ணரத்தினமயமாகத்தேங்காய் மாவிலை தர்ப்பை மாலைமுதலியவை அலங்கரித்து அங்கங்கே பூரணகும்பங்களைவரிசையாகவமைத்தான். மேலும் [illegible] அலங்காரவகையெல்லாஞ்செய்தான்.

இப்படியே மந்திரேசர் பெரியகோயிலிரண்டிலும் அலங்கரித்துத்

திருவீதிமுழுதுந் திருத்தஞ்செய்து, வெண்மணல்பரப்பினதுபோல மிகச்சிறியமுத்துப்பொடிகள்பரப்பி, வாழை கமுகு கரும்பு தோரணம் பூம்பந்தர் புஷ்பமாலை பொன்னரிமாலை ரத்தினமாலைகள் கோலங்கள் பூரணகும்பங்கள் தூபதீபாதிகளால் அலங்காரவகைமுழுதுஞ்செய்துமுடித்துத்தேவகம்மியன் வாயுவுக்குத்தெரிவிப்ப, அவன்இந்திரனுக்குத்தெரிவிப்ப, உடனேஇந்திரன் அன்புமீதூர அருள்வழிச்சென்றுதேவகூட்டத்தோடு சூதவனம்வந்து, கோயிலுட்புகுந்து அமுதலிங்க திவ்யதெரிசனங்கிடைக்கப்பெற்று ஆனந்தசாகரத்தழுந்தி எழுந்துபலமுறைபணிந்து துதித்துஎம்பெருமானே? ஏழைநாயேன் தேவரீருக்குச் சைத்திரோற்சவஞ்செய்துய்வழிபெறவிரும்பித்திருச்சந்நிதியடைந்தேன். நன்மையொன்றடைதற்கிடையூறுபலவுண்டாமென்று நன்மைநிறைந்த பெரியாரும் அஞ்சுவராயின், ஒருநன்மையுமில்லாத ஏழையேற்குச்சொல்லவும்வேண்டுமோ? எவ்விடர்வரினும்அவ்வனைத்துநீக்கி இத்திருத்தொண்டு விதிப்படிமுற்றுப்பெறச்செய்தருளுக எந்தையே? செய்வதுதவிர்வதுசிறிதுந்தெரியாத அறிவிலியாதலால் எளியேன்ஒருவாறுஅறியாது அபசாரஞ்செய்திடினும்அனைத்தும்பொறுத்தருளி அநுக்கிரகித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டு, வெளிவந்து ஸ்ரீநந்திதேவரைவணங்கித்துதித்து, உற்சவநடத்துதற்குரிய ஆஞ்ஞைவேண்டிப்பெற்றுக்கொண்டு, புறம்போந்து தனக்குரிய ஓர்வசதியில் வந்திருந்தனன்.

வந்திருந்த இந்திரன் தேவர்களைஅழைத்து உபசாரங்கூறி, அவருள்ளே ஒவ்வொருவரைநோக்கிக்கூறுகின்றான். குபேரனே? நீசொர்னரத்தினதெக்ஷணைதிவகையெல்லாம் கொடுத்துவருக. அக்கினிதேவனே? நீஅன்னாதிசகலபதார்த்தங்களும் பாகஞ்செய்துவருக. வாயுதேவனே? நீதிருவீதிமுதலியஇடமெல்லாம் கண்ணாடிபோற்பிரகாசிக்கும்படிதிருவலகுப்பணிசெய்துவருக. வருணனே? நீஅவ்விடமெல்லாம்பரிசுத்தநீர்பனிநீர்தெளித்தல் சந்தனதியால்மெழுகுதல்முதலியசெய்துவருக. நிருதியே? நீபூதவேதாள பிசாசாதிகளால் ஒருசிறிதும் இடர்வாராமற்காவல்செய்துவருக. யமனே? நீ திருவீதிமுதலிய இடங்களிலே சனநெருக்கத்தைவிலக்கி இதஞ்செய்துவருக. ஈசானதேவனே? நீ எம்பெருமான்திருச்சந்நிதியிலே பொற்கோல் பிடித்துலாவி நெருக்கொதுக்குந்திருப்பணிமேற்கொள்ளுக; என்றிவைபோல மற்றையோர்க்கும் அவரவர்தகுதிக்குரிய திருப்பணிகள் பொறுப்பித்தான். பின்புதன்ஆசாரியனாகிய வியாழகுருவால் உற்சவாரம்பாதி சுபமுகூர்த்தநிச்சயித்து, எல்லா இடங்களுக்குந் திருமுகமனுப்பினான். அம்மகோற்சவத்திருமுகங்கிடைக்கப்பெற்ற தேவர்மானுடர்யாவரும், அதனைச்சிரமேற்கொண்டு கண்ணொற்றிப் பீடத்தில்வைத்துப்பூஜித்துப் போன்புசெலுத்தப் பெருமகிழ்ச்சியோடு சூதவனத்துக்குவருகின்றார்கள். வரவரஉபசரித்து அவரவர்மரபுமுதலியதகுதிக்குரிய

இடங்காட்டி அங்கங்கேவசிக்கச்செய்தான். மேலும் ஆகவேண்டியவெல்லாம் நன்காராய்ந்து அவைமுழுதும்நிரம்பச்செய்தான். சித்திரைமாசம்சுக்கிலபக்ஷம் பஞ்சமிதிதி மிருகசீரிடநக்ஷத்திரதினத்திலே, வியாழகுரு சொல்லிய சுபமுகூர்த்தமாகிய அருணோதயகாலஜெயமுகூர்த்தம் சமீபிப்பதுதெரிந்தான்; உடனே அவ்விந்திரன்சிவத்துவிஜர்யாவரையும் பணிந்து இம்மகோற்சவஞ்செய்ய நான்விரும்பினேனாயினும், முழுதும் உங்கள்செயலேயன்றிஎனக்கொருசுதந்திரமுமில்லை ஆதலால்இதனைவகித்து நடத்தியருளுகவென்றுநான்வேண்டுவதுமிகையன்றேவென்று உபசரித்தான்.

சிவத்துவிஜர்யாவரும், அதனையே ராஜானுஞையாக்கொண்டு இந்திரனுக்கு உபசாரங்கூறி, அதன்மேற் பிராமணானுஞை தேவானுஞை நிர்விக்கினசமாப்தியின்பொருட்டு விக்கினேசுரபூசனைசெய்து அருள்பெற்றுத், தனபூஜை புண்ணியாகவாசனந்திவாஸ்துசாந்தி மிருத்சங்கிரகணம் அங்குரார்ப்பணம் ரக்ஷாபந்தனம் ரிஷபசித்திரபடபூசனை துவசாதிவாசனம் பேரிதாடனம் திக்பந்தனம் கிராமதேவதார்ச்சனாதியெல்லாம் வரிசையாகச்செய்து பிரார்த்தித்துக்கொண்டு, சோமாஸ்கந்தரைத் துவசமண்டபத்துக்கு உரியவரிசைகளோடெழுந்தருளிவரச்செய்து, அவரெதிரே முன்பூஜித்திருக்கிற ரிஷபசித்திரபடத்தை விதிப்படி துசஸ்தம்பத்துச்சியிலேற்றுதலாகிய கொடியேற்றஞ்செய்தார்கள். அம்முறையே மற்ற அஷ்டத்துஜங்களிலும் ரிஷபசித்திரபடமேற்றுதலாகிய எட்டுக்கொடியேற்றமுஞ்செய்து, பின்யாகசாலைபுகுந்து அதன்மத்தியிலே சர்வாலங்காரமுமமைந்த திவ்யரத்தினமயவேதிகையிலே, பரிவாரசகிதயாகேசகடஸ்தாபனாதி நவகுண்டங்களிலும் அக்கினிஸ்தாபனாதிசெய்து, ஆகுதிநடந்துகொண்டிருக்கச் சோமாஸ்கந்தருக்கு விசேடபூசனைசெய்து அலங்கரிக்கப்பெற்ற ஆந்தோளியண்டில் அம்பிகையோடெழுந்தருளி விநாயகசுப்பிரமணியசண்டேசசகிதம் கோயில்வலமாகவந்து அவ்யாகசாலைஎதிரேநின்றருளச்செய்து, முந்தியேமற்றையகுண்டமெட்டும்அக்கினிகாரியசமாப்தியாகித்தன்னிலொடுங்கப்பெற்றபிரதானகுண்டத்திலேபூரணாகுதிசெய்து, மேற்குமுகமாக அவ்வேதிகைமீதுள்ள கும்பபூசனையும் கிழக்குமுகமாக நின்றருளுகின்ற சோமாஸ்கந்தவிம்பபூசனையும் ஏககாலத்திலே நேரே மகாதீபாதிசோடசோபசாரங்களோடு செய்தார்கள். இந்தப்பிரகாரம் இச்சிவத்துவிஜர்கள் ஸ்தம்ப விம்பகும்பமென்னுமூன்றிலும் விதிப்படிசெய்த பூசனைகொண்டருளி எம்பெருமான் ஸ்ரீசோமாஸ்கந்தர் அம்பிகா விநாயக சுப்பிரமண்யசண்டேசசகிதராய் அங்குநின்றும்திருவீதியிலேபவனிவந்தருளுவாராயினார்.

அநேக சூரியசந்திரர்கள்போலஅளவிலாதகுடைகள் நிழல்செய்துவரச், சாமரை விசிறி ஆலவட்டம் சுருட்டியாதி வரிசைகளிருபக்கத்துநெருங்கிவர

க், கருடக்கொடி அன்னக்கொடியாதிகொடிக்கூட்டங்கள் பணிந்துசூழ அவைக்கெல்லாம் அரசாகிய ரிஷபக்கொடிநடுநாயகமாய் முன்செல்லத், தேவஸ்திரீகள் பரதசாஸ்திரவிகற்பமெலாம் விளங்கத்திருமுன்னே நடனஞ்செய்துவர, இருபக்கத்தும் எசுர்வேதமும் பின்பக்கத்து மற்றவேதங்களும் முன்பக்கத்தே செந்தமிழ்வேதமாகிய தேவார திருவாசகாதி திருவருட்பாக்களும்முழங்கிவரப், பதினெட்டுவகைவாத்தியகோஷமும்பெருகிவர, வந்தியர் மாகதர் சூதரென்னும் மூவகையாரும் மங்களம் வீரம் கீர்த்தியென்னும் மூன்றுயர்முறையே எடுத்துப்பாடிவரத், திருத்தொண்டர் திருமேனித்திருவெண்ணீற்றொளிதிருவருள்வெள்ளந்திருவுருக்கொண்டுசெல்லுதல்போற் செறிந்துபரந்துவர, அத்திருத்தொண்டர் திருவாய்நின்றுமுப்பஹரஹர மஹாதேவ சங்கர உமாநாத நீலகண்டாதி சிவநாமகோஷம் நிறைந்துவரக், கற்பனைகற்றுமுள்ளந்தெளிந்து உண்மையுணர்ந்தஉத்தமசத்துவகுணவிசிஷ்டர்கள் சிவசாஸ்திர சிவபாத்துவப்பிரசங்காமிர்த மழைபொழிந்துவர, தேவஸ்திரீகள்சாமரம் பூரணகும்பம் கண்ணாடி அங்குசம் முரசம் தீபம் ரிஷபக்கொடி இரட்டைக்கயல்மீன்களாகிய அஷ்டமங்கலங்களேந்திவரப், பசுமாடுகள் உரியஅலங்காரத்தோடுமுன்செலக், குதிரைகளும் அப்படியே பற்பலநடனஞ்செய்துவரக், காளம் சின்னம் தாரைமுதலியன அமுதநாதன்வந்தான் சூதவனேசன்வந்தான் மந்திரேசன்வந்தான் என்பனமுதலிய திவ்வியநாமங்களையெடுத்தோதிவர, இவைபோலின்னும் அளவிலாவைபவங்களெல்லாம்பெருகிவர, எம்பெருமான் அமுதநாயகன் திருவீதிவலமாகத்திருக்கோயின்முன்வந்தருளித், தேவஸ்திரீகள் கற்பூரதீபங்கள்வரிசையாக்கொண்டு மூன்றுமுறைசுற்றிவந்துவணங்க, அதன்மேல் ஆதிசைவர்செய்தபூசனையேற்று உட்சென்று வசந்தமண்டபத்திலே திவ்யாசனத்திலே வீற்றிருந்தருளினார்.

இப்படியே அலங்காரசிறப்பெல்லாம் நாளுக்குநாள் மிகப்பெருக இம்மகோற்சவம்நடந்துவருங்கால் மறுநாட்காலையில்அம்பா சுவாமியிருவரும் அந்தோளியிலும், அன்றிரவுமுத்துப்பல்லக்கிலும், மூன்றாநாட்காலை முன்போலவும்அன்றிரவுஅம்பா ஆதிசேஷவாகனம் சுவாமிகயிலாசவாகனத்திலும், நாலாநாட்காலை முன்போலவும் அன்றிரவு அம்பாஅன்னவாகனம் சுவாமிசந்திரவாகனத்திலும், ஐந்தாநாட்காலைமுன்போலவும்அன்றிரவு அம்பாகிளிவாகனம் சுவாமிபூதவாகனத்திலும்,ஆறாநாட்காலைமுன்போலவும்,அன்றிரவுஅம்பா சிங்கவாகனம் சுவாமி இரண்டாயிரங்கொம்புள்ளஐராவணமாகியயானைவாகனத்திலும், ஏழாநாட்காலைமுன்போலவும், அன்றிரவு அம்பா தர்மருபரிஷபவாகனம் சுவாமி விஷ்ணுருபரிஷபவாகனத்திலும், எட்டாநாட்காலை முன்போலவும்,அன்றிரவுஅம்பாகாமதேனுவாகனம் சுவாமி குதிரைவாகனத்திலுமாகத்திருவிழாக்கொண்டுதிருவீதிப்பவனிவந்தருளி; ஒன்பதாநாட்காலைமுதல..

ர்த்தத்திலே விநாயகசுப்பிரமணியர் சண்டேசுரர்பெரியநாயகிநால்வரும் நான்கு சொர்ணரத்தினமயதிவ்யரதங்களிலாரோகணித்து வீற்றிருந்தருளியுடன்வர,அமுதலிங்கேசர்அத்தகைய மகோந்நதமகாலங்கார மகாவைபவமகாரதத்திலாரோகணித்து வீற்றிருந்தருளித் திருவீதிவலம்வந்து, யாவருக்கும் மகாரதோற்சவ சர்வாலங்கார தேஜோமயதிவ்யமங்களத் திருக்கோலக்காட்சி கொடுத்தருளினார். பத்தாநாள் அதிகாலையிலே அம்பிகை ரிஷபவாகனமேலுடன்வர விநாயகசுப்பிரமணியசண்டேசசகிதராய்த் திருக்கோயிலுள்ளே அக்கினிதிசையிலுள்ள திருமலதீர்த்தத்திலே ரிஷபாரூடராய்வந்து தீர்த்தங்கொடுத்தருளி யாவரும்திருவருட்பெருவெள்ளத்துள் மூழ்கி இன்புறச்செய்தருளினார்.

பின்பு சிவத்துவிஜர்கள் யாகவிஜர்ச்சனம்விதிப்படிசெய்து, அந்த யாகேசகும்பதிவ்யோதகத்தை அமுதலிங்கேசர்க்கபிடேகித்து, விசேடபூசனைசெய்து கொடியிறக்குதலாகிய துஜாவரோகணமும், சண்டேசஉற்சவமும், திக்பந்தன அங்குராரோபணவிஜர்ச்சனமும், திருக்கல்யாணமகோற்சவமுஞ்செய்து அதன்பின்னாள், அவ்வசந்தமண்டபமத்தியில்விமானஞ்சூழநிறைந்திருந்த நீர்முற்றும் போக்கிப், புதுநீர்நிறைத்துச் சுகந்தபுஷ்பங்கள் முன்னாட்களிலும் அதிகமாகநிறையப்பரப்பி, அலங்காரவகைகளும்முன்னில் அதிகமாகச்செய்து, ஸ்ரீ பெரியநாயகிமந்திரேசருக்கு விதிப்படி அளவிலாத்திரவியங்கொண்டு ஸ்நபனகும்பாதி அங்கங்களோடு, அபிஷேகாதி பூசனைவகையெலாம் சவிஸ்தாரமாகச்செய்வதாகிய விடாயாற்றுதிருவிழாவும் சிறப்பச்செய்து, எம்பெருமான் வாத்தியகோஷமாத்திரம் ஐந்தாம்பிராகாரத்திலும் கீர்த்தனமாத்திரம் நான்காம்பிராகாரத்திலும், சிவபுராணபாராயணமாத்திரம் மூன்றாம்பிராகாரத்திலும், வேதகோஷமாத்திரம் இரண்டாம்பிராகாரத்திலும், தேவாரதிருவாசகாதி செந்தமிழ்வேதகோஷமாத்திரம் முதற்பிராகாரத்திலும்முழங்க, உட்பிராகாரம்ஐந்திலும் வலம்வந்து, ஏதாஸ்தானத்தில் வீற்றிருந்தருளச்செய்து அன்புமீதூரப் பன்முறைபணிந்து இந்திரனுக்குவிபூதிப்பிரசாதிகொடுத்து ஆசீர்வதித்தார்கள்.

தன்கருத்தின்படி இச்சைத்திரோற்சவத்தைச்செய்துமுடித்துப் பெரும்பலனளித்த அச்சிவத்துவிஜர்களின் அருமைபெருமைகளும், அவர்செய்துவந்த மந்திரதந்திரகிரியாபாவனுதிகைச்சாதுரியவிக்கிரமபரிசீலன அபாரபக்திசிரத்தாவைபவங்களும், மற்றுமெல்லாம்நினைந்துநினைத்துப்பேரன்புடையனாய்ப்பலமுறைவணங்கி, அவர்கள் ஒவ்வொருவருக்கும்திவ்யவஸ்திரபூஷணாதி அலங்காரவகையெலாஞ்செய்வித்து, அவர்கள் ஒவ்வொருமுத்துப்பல்லக்கில் எழுந்தருளித் திருவீதிவலம்வருதலாகிய ஆசாரியோற்சவமுஞ்செய்து, சொர்ணரத்னபரணாதிதக்ஷிணாவகையெலாம் அளவிலாமற்கொடுத்துவணங்கி,

அமுதேசசந்நிதியடைந்து ஆனந்தபாஷ்பஞ்சொரிந்து பிரியாவிடையுங் கையுறைப் புறவிடைபெற்றுச் சுவர்க்கத்திற்சென்று அமுதநாதன் றிருவடிமறவாச்சிந் தையோடு அரசுபுரிந்திருந்தான்.

வாயாய்ச் சனற்குமாரமுனிவ? இச்சூதவனத்தையடைந்து திருவமுதன் பெற்றுய்ந்தோர் அளவிலாப்பெருந்தொகையோர். அவர்களைத் தியானித்தல் செய்வோமாக. அமுதலிங்கேசன் இத்தலத்தையடைந்தவர்கள் பிணிகள்முற்றுமகற்றி அவரவர் விருப்பத்தின்மேலும் கொடுத்தருளுகின்ற அருள்வகையெல்லாம், பலகோடிகற்பகாலம் ஆயுள்பெற்றிருந்து ஆயிரமுகமுள்ள ஆதிசேடன் சொல்லத்துணிந்தாலும் சிறிதும் முடியாது. அங்ஙனமாக அடியேனோ? இவைகளை விரிப்பதெப்படி? அமைக. உலகத்திலுள்ள சர்வஜனங்களுக்குந் திருவருள் பெற்றுய்தற்கு உண்மைநூல்களாகிய வேதசிவாகமங்களும் புராணங்களும் உள்ளன; அவையெல்லாமுணர்வதாலும் பேறுகொண்டனவே யென்பது அரிது. அவையெல்லாவற்றினும் மேலாயும் எய்தற்கு எளிதாயுமுள்ளது இச்சிவபுராணசிரவணமே. இதுவுண்மைநூலிற்கூறுஞ் சம்மதமேயாகும். இதுவே பலவகைச்செல்வங்களும் இம்மைமறுமைப் பயன்களும் இன்பங்களுந் தருவது. இதுவேசித்தசுத்தியாதிமுறைமைகளால் ஆன்மாக்கள் பெறத்தக்க சிவத்துவமாகிய பெரும்பேறும் அளிப்பது. சிவபுராணங்களுள்ளே மிகமேன்மையுடைய இச்சூதவனபுராணமுழுதுமேனும், ஒரு சருக்கமேனும், பலசுலோகங்களேனும், ஒன்றேனும் பத்திபண்ணிப் படிப்பவர்களும் கேட்பவர்களும், இதனை எழுதுவோர், எழுதுவித்துக்கொடுப்போர், பூசிப்போர், இதன்மகிமை எடுத்துப்போதிப்போர், துதிப்போர், விசாரிப்போர் யாவரும் இம்மையின்கண் முற்றும்பெற்றுய்வர் என்று சூதமுனிவர் கூறினதால், மேலும் ஆசைபெருகவும் அவ்வாறிருந்த சனற்குமாரமுனிவர் முதலிய சூதமுனிவர் கூறினர். அம்முனிவர்களும் அவ்வாறிருந்து மகிழ்ந்திருந்தார்கள்.

வேதம்வாழிமுனிவர்வாழிவிண்ணவர்வாழியுயிர்க்கிடம்
சீதம்வாழிதிருத்தொண்டர்செல்வர்வாழிபுகழமுதற்
சாதம்வாழிசித்தாந்தசைவம்வாழியருளமுத
நாதன்வாழியனையெரியநங்கைவாழிவாழியவே.

திருச்சிற்றம்பலம்.

இந்திரன்றிருவிழாச்சருக்க முற்றிற்று.

சூதவனபுராணவசன முற்றிற்று.

சிவமயம்.

# பிழை திருத்தம்.

| பக்கம் | பாட்டு | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|---|
| [illegible] | ,, | ௪ | தும் | சிறிதும் |
| ௬௫. | ௫ | ௩ | மொழிலென்து | மொழிதென் |
| ௬௫ | [illegible] | ௬ | மெய்குருான | மெய்ஞ்ஞான |
| [illegible] | [illegible] | ௩ | காமொழி | காமொழி |
| ,, | [illegible] | ௨ | பாற்றிலீன | பாற்றிலீன |
| [illegible] | [illegible] | ௨ | வருக்கை | வருக்கை |
| [illegible] | [illegible] | ௪ | கனிவுற | கனிவுற |
| [illegible] | [illegible] | ௫. | மடைடத்தைகுடர் | மடைத்தைகுடர் |
| [illegible] | [illegible] | ௫. | வேறேனே | வேறேனே |
| [illegible] | [illegible] | ௫. | உலகெலாம் | உலகெலாம் |
| [illegible] | [illegible] | [illegible] | வெழுதார்த் | வெழுந்தார். |
| [illegible] | [illegible] | ௫. | ரவியுளு | ரமுதுளு |
| ,, | [illegible] | ௬ | முனிவர் | முனிவிர் |
| [illegible] | [illegible] | ௪ | முனிவர்க்குசருத | முனிவர்க்குக்குருத |
| [illegible] | [illegible] | ௫. | மருண்மயமா | வருண்மயமா |
| [illegible] | [illegible] | ௫. | மண்மகார் | மணமகார் |
| [illegible] | [illegible] | ௫. | புரந்தானே | புரந்தானே |
| [illegible] | [illegible] | ௫. | திலங்கவரி | திலங்கவரி |
| ,, | [illegible] | ௩ | பொன்னினதி | பொன்னிநதி |
| [illegible] | [illegible] | ௨ | மெருழிர்மாழை | மெருளிர்மாழை |
| ,, | [illegible] | ௫. | முகவடிவுஞ் | முகமுடிவுஞ் |
| [illegible] | [illegible] | ௫. | தகீனருணமா | தகீனக்குணமா |
| ,, | [illegible] | ௩ | காசிவினித் | காசினியித் |
| [illegible] | ௪ | ௪ | மத்தொழில் | மத்தொழில். |
| ,, | [illegible] | ௫. | பழுத்தனைப் | பழுத்தாய் |
| ,, | ,, | ,, | மேவை | மேவும் |
| [illegible] | [illegible] | ௪ | வருமிரு | வருமிரு |
| [illegible] | [illegible] | ௰ | பாமபோகமே | போகம் |
| [illegible] | ௫.௫. | ௪ | முனணவிலோ | முனாவிலோ |
| [illegible] | [illegible] | ௨ | கூப்ப | கூம்ப |
| [illegible] | [illegible] | ௪ | மாார்த்த | பாார்த்த |
| [illegible] | ௪ | ௪ | திருக்கைகயி | திருக்கயி |

| பக்கம் | பாட்டு | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| கூகூ | ருஉ | உ | காவாவுமா | காவாவுமா |
| க௦ரு | கக | ச | வருக்கு | வகுக்கு |
| க௦அ | ரு௬ | க | திகபாக | திகாபாக |
| ககரு | எச | ரு | புரித்தால் | புரித்தாள் |
| ககசா | ,, | ருக | மூர்க்கம் | மூர்க்கம் |
| ககஎ | சாகூ | உ | செருழுது | செழுழுக்கு |
| கஉஅ | ருச | க | தொகளிரும | தொகளிரும் |
| ,, | ருஅ | ரு | வாகக | வாகக் |
| க௩எ | சாரு | ரு | மேலைத்தற முன் | மேற்றமுன் |
| கரு௬ | கசஉ | உ | பதமெரம்பதும | பதம்மெரம்பதும |
| கருசா | ககஎ | க | வாள் முனைய்மேதா | வாள்முனைய்க்மேதா |
| கசாஎ | அ | ரு | வளைந்தா | வளைந்தா |
| ,, | ச | உ | முன்னுமா | முன்னுமா |
| ,, | எ | ச | விடாமிகைப | முடாமிகைப |
| கருஅ | கஉ | ச | முகைதலின | முகைதலின் |
| கசாசா | சாஎ | க | மேவாவிலங்க | மேவாவிவிகள |
| கஅசா | உஉ | சா | சொன்மா | சொன்மா |
| கஎக | கஉஅ | ரு | திரிநில | திரிநல |
| கஅரு | ருஅ | க | அரியவர் | அரியவர் |